

இலங்கை வங்கி

ஆண்டறிக்கை 2017

இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

எங்களது தூர நோக்கு

நாட்டு மக்களால் விரும்பப்படும் வங்கியாக பலமான உலகளாவிய பிரசன்னத்துடன் வாடிக்கையாளரை மையப்படுத்திய புத்தாக்கமான நிதித் தீர்வுகளை வழங்குதல்.

எங்களது பணி நோக்கு

உலகளாவிய அணுகுதல்களுடன் அதி வினைத்திறனான, வாடிக்கையாளரை மையப்படுத்திய, அதிநவீன தொழில்நுட்பத்துடனான, நெகிழக்கூடிய, புத்தாக்கமான நிதியியல் சேவைகளை நாட்டு மக்களுக்கு வழங்குவதற்கு ஊழியர்களை வலுப்படுத்தி அதிகாரமளிப்பதும் நிறுவன நலனில் அக்கறையுடையோர்களுக்கான பெறுமதியை அதிகரித்தலும்.

நிறுவன பெறுமதிகள்

நாட்டு மக்களால் விரும்பப்படும் வங்கியாக பலமான உலகளாவிய பிரசன்னத்துடன் வாடிக்கையாளரை மையப்படுத்திய புத்தாக்கமான நிதித் தீர்வுகளை வழங்குகின்ற எமது தூர நோக்கை அடைந்து கொள்வதுடன், பின்வரும் ஐந்து பெறுமதிகளுக்கும் பொறுப்புக்கூற கடமைப்பட்டிருக்கின்றோம்:

- வாடிக்கையாளர்களை மையப்படுத்தியவர்களாக இருத்தல்
- எல்லா வகையான பல்வகைமைகளுக்கும் மதிப்பளித்தல்
- உச்ச அளவிலான ஒழுக்க நெறிகள், செயலாட்சி மற்றும் தொழில்வாண்மை நோக்கி செயற்படல்
- விரைவானதும் புதிது புனைதல் நோக்கிய கவனக் குவிப்பு
- எமது எல்லாச் செயற்பாடுகளுக்குமான பொறுப்புக் கூறுபவர்களாக இருத்தல்



இலங்கை வங்கி

BOC

தேசத்தின் வங்கியாளர்

இலங்கை வங்கி நீடுறுதியுடன் முன்னோக்கி

நாம் எமது புதிய பரம்பரையின் வாடிக்கையாளர்களை வரவேற்று அவர்களுக்கு சேவையாற்றுவதற்கு ஆயத்தமாகின்ற எங்களது பெறுமதிகள், அடிப்படைகள், கொள்கைகள், திட்டங்கள் ஆகிய சகலதும் துரிதமாக மாறுகின்ற எமது வங்கியியல் சூழலை பிரதிபலிக்கின்றது. துரிதமாக மீள்கட்டமைக்கப்படுகின்ற டிஜிற்றல் முறை ஊடாக வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களை புதிய விதத்தில் செயற்படுத்துவதற்கான அமைப்புகள் எங்களது பெறுமதிகளுடன் இணைந்துள்ளது. எதிர்காலத்தில் எங்களது நோக்கின் முக்கிய பங்காளர்களாக திகழ்வது பல்லாயிரம் ஆண்டுகள் தலைமுறையை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற (மிலேனியம்) வாடிக்கையாளர்களாயினும் நாம் எமது பரம்பரை வாடிக்கையாளர்களுக்கு காட்டுகின்ற முன்னுரிமையை தொடர்ந்து அவ்வாறே முன்னோக்கிப் பராமரிக்க வேண்டியுள்ளது.

இலங்கை வங்கி...மாற்றத்தின் முன்னோடி

உள்ளடக்கம்

04 சிறப்பம்சங்கள்

04—செயல்நிறைவேற்றுச் சிறப்பம்சங்கள்

05—நிதிசார் சிறப்பம்சங்கள்

06—நிதிசாரா சிறப்பம்சங்கள்

08 ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் சட்டகம்

11 நீடுறுதித்தன்மை

12—எம்மை நாமே கண்டுபிடித்தல்

12—தலைவரின் செய்தி

16—விலகிச்செல்லும் பொது முகாமையாளரின் மீளாய்வு

20—பொது முகாமையாளரின் மீளாய்வு

23—எமது சுற்றுச்சூழலும் எமது செயன்முறையும்

23—பொருளாதாரத் தோற்றப்பாடு

28—வியாபார மாதிரி

32—எமது இலக்கங்களை நீடுறுதித்தன்மைக்கு கடப்படச் செய்தல்

33 தேசத்தின் வங்கியாளர்

34—நிறுவன வழிகாட்டிகள்

34—பணிப்பாளர்கள் சபை

40—கூட்டாண்மை முகாமைத்துவம்

54—நிறைவேற்று முகாமைத்துவம்

62—கூட்டாண்மை செயலாட்சி

70—சபை உபகுழுவின் அறிக்கைகள்

70—கணக்காய்வுக் குழு அறிக்கை

74—ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழு அறிக்கை

76—மனித வளங்கள் மற்றும் ஊதியக்குழு அறிக்கை

77—நியமனம் மற்றும் கூட்டாண்மை செயலாட்சிக் குழு அறிக்கை

80—இடர் முகாமைத்துவம்

93 நாம் எவ்வாறு பெறுமதியினை உருவாக்குகின்றோம்

94—தீர்மானகரமான இலக்கங்கள்
நிதி மூலதனம்

100—பௌதீகக் கட்டமைப்பு மற்றும் அதற்கு அப்பால்
உற்பத்தியாக்கப்பட்ட மூலதனம்

104—கட்புலனாகாத மிக முக்கியமான விடயங்கள்
புலமை மூலதனம்

108—பரஸ்பர வெகுமதியளித்தல் தொடர்புமுறைகளை பேணிப் பாதுகாத்தல்
சமூக மற்றும் உறவு மூலதனம்

126—எமது பாரிய சொத்துக்களை வழிநடத்துதல்
மனித மூலதனம்

134—புவியை பாதுகாப்பதற்கு உதவுதல்
இயற்கை மூலதனம்



137 நிதியியல் அறிக்கைகள்

139 — இலங்கை வங்கியின் நிதியியல் நடவடிக்கைகள் மீதான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

144 — ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் பங்கு

146 — நிதியியல் அறிக்கையிடலின் உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று

148 — சுயாதீன உத்தரவாத அறிக்கை

149 — நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

150 — கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

151 — இலாப நட்டக் கூற்று

152 — முற்றடக்க வருமானக் கூற்று

153 — நிதியியல் நிலைமைக் கூற்று

154 — உரிமையாண்மையில் ஏற்படும் மாற்றங்களைக் காட்டும் கூற்று

158 — காசுப்பாய்ச்சல்கள் கூற்று

160 — நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

303 இணக்கப்பாட்டு இணைப்புக்கள்

304 — 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

324 — கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தினால் அமுல்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

326 — இலங்கை மத்திய வங்கியினால் அமுல்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

329 — மூலதனப் போதுமை

344 — மாற்றல் விலையிடல் தொடர்பான பணிப்பாளர் சான்றிதழ்

345 துணைநிலைத் தகவல்கள்

346 — மைல்கற்கள்

348 — நிறுவன நலனில் அக்கறையுடையவர்களின் ஈடுபாடு மற்றும் பொருண்மை

352 — GRI சுட்டி

356 — சுயாதீன உத்தரவாத அறிக்கை

358 — அமெரிக்க டொலரில் இலாபநட்டக் கூற்று

359 — அமெரிக்க டொலரில் முற்றடக்க வருமானக் கூற்று

360 — அமெரிக்க டொலரில் நிதியியல் நிலைமைக் கூற்று

361 — காலாண்டுச் செயல்நிறைவேற்றம்

364 — பங்குகள் மற்றும் தொகுதிக்கடன் தகவல்கள்

366 — பத்து வருட புள்ளிவிபரச் சுருக்கம் - வங்கி

368 — துணை நிறுவனங்களும் கூட்டு நிறுவனங்களும்

370 — செயற்பாட்டுத்தடம்

388 — தேசவாரியாக தொடர்பாளர் வங்கிகள்

393 — தேசவாரியாக பரிவர்த்தனைக் கம்பனிகள்

394 — நிதியியல்/வங்கியியல் கலைச் சொற்களின் அகராதி


397 — தொகுதி அலுவலகங்கள் மற்றும் கடல்கடந்த கிளைகள்

399 — நிறுவனத் தகவல்கள்


சிறப்பம்சங்கள்

செயல்நிறைவேற்றுச் சிறப்பம்சங்கள்


கடன்கள் மற்றும் முற்பணங்களினதும் அவற்றால் ஈட்டிய வட்டியினதும் வளர்ச்சி




வைப்புக்களினதும் அவற்றுக்குச் செலுத்திய வட்டியினதும் வளர்ச்சி




தேறிய வட்டி வருமானம் மற்றும் தேறிய வட்டி எல்லை




கடன் வழங்கல் கலவை




வாடிக்கையாளர் கணக்குகளின் பரம்பல்




வாடிக்கையாளர் தொடு புள்ளிகளின் வளர்ச்சி




சராசரிச் சொத்துக்கள் மீதான திரும்பல்




சராசரிச் உரிமை மீதான திரும்பல்




பண வைப்பு பொறிகள்




வரிக்கு முன்னரான இலாபம், அரசுக்கான பங்களிப்பு மற்றும் அரசுக்கு செலுத்திய பங்குலாபம்



ஊழியர் நலச்சேவைகளுக்கான செலவு, பயிற்சியளித்தல் செலவு மற்றும் ஊழியர் எண்ணிக்கை



வருமானச் செலவு வீதம்



நிதிசார் சிறப்பம்சங்கள்

31 டிசம்பரில் உள்ளவாறான	வங்கி			குழுமம்		
	2017	2016	மாற்ற %	2017	2016	மாற்ற %
செயற்பாட்டின் விளைவுகள் (ரூபா மில்லியன்)						
மொத்த வருமானம்	189,211	154,121	22.8	197,013	159,701	23.4
தேறிய வட்டி வருமானம்	58,356	53,957	8.2	61,490	56,606	8.6
நிதிச்சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி (VAT), நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (NBT) மற்றும் வரிகளுக்கு முன்னரான இலாபம்	37,592	37,454	0.4	38,195	36,431	4.8
வரிக்கு முன்னரான இலாபம்	30,343	31,189	(2.7)	30,816	30,117	2.3
வரிக்குப் பின்னரான இலாபம்	21,312	24,791	(14.0)	21,487	23,386	(8.1)
அரசுக்கான பெறுமதி	28,524	30,064	(5.1)	28,923	30,554	(5.3)
நிதியியல் நிலைமை (ரூபா மில்லியன்)						
மொத்தச் சொத்துக்கள்	1,951,804	1,669,291	16.9	1,999,410	1,716,557	16.5
மொத்தக் கடன்களும் முற்பணங்களும்	1,219,914	1,047,190	16.5	1,252,363	1,075,952	16.4
பெறுமதி குறைப்பு ஏற்பாடுகள் நீங்கலான கடன்களும் முற்பணங்களும்	1,163,161	1,000,083	16.3	1,194,294	1,027,768	16.2
வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய வைப்புக்கள்	1,546,832	1,256,589	23.1	1,566,376	1,273,631	23.0
மொத்தப் பொறுப்புக்கள்	1,840,649	1,576,442	16.8	1,877,084	1,613,202	16.4
மொத்த உரிமை மூலதனம்	111,155	92,850	19.7	122,326	103,355	18.4
பங்கொன்றுக்கான தரவு (ரூபா)						
பங்கொன்றுக்கான அடிப்படை உழைப்புக்கள்	1,856	2,479	(25.1)	1,870	2,350	(20.4)
பங்கொன்றுக்கான தேறிய சொத்துப் பெறுமதி	7,410	9,285	(20.2)	8,093	10,248	(21.0)
தொழிற்பாட்டு விகிதங்கள் (%)						
சராசரிச் சொத்துக்கள் மீதான திரும்பல்	1.7	1.9	(0.2)	1.7	1.8	(0.1)
சராசரி உரிமை மீதான திரும்பல்	20.9	28.4	(7.5)	19.0	23.8	(4.8)
வட்டி எல்லை	3.2	3.3	(0.1)	3.3	3.4	(0.1)
வருமானச் செலவு வீதம்	38.4	43.0	(4.6)	40.5	46.7	(6.2)
வைப்புக்களுக்கான கடன் விகிதம்	78.9	83.3	(4.4)	80.0	84.5	(4.5)
கடன் உரிமை விகிதம்	41.5	124.5	(83.0)	–	–	–
மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் விகிதமாக கடனிழப்பு ஏற்பாடு	4.7	4.5	0.2	4.6	4.5	0.1
சட்டரீதியான விகிதங்கள் (%)						
திரவச் சொத்து விகிதம் (உள்நாடு) (குறைந்த தேவைப்பாடு 20%)	27.2	21.6	5.6	–	–	–
திரவத்தன்மைக் காப்பு வகிதம் (ரூபா) (குறைந்த தேவைப்பாடு 80%)	141.5	174.1	(32.6)	–	–	–
திரவத்தன்மைக் காப்பு வகிதம் (எல்லா நாணயங்களும்) (குறைந்த தேவைப்பாடு 80%)	105.0	102.0	3.0	–	–	–
மூலதனப் போதுமை விகிதம் (%)						
பொதுப் பங்கு அடுக்கு 1 மூலதனம் (குறைந்த தேவைப்பாடு – பாசல் III – 6.25%)	10.8*	பொருத்தமற்றது	–	10.9*	பொருத்தமற்றது	–
அடுக்கு 1 மூலதனம் (குறைந்த தேவைப்பாடு - பாசல் II – 5%, பாசல் III – 7.75%)	10.8*	8.7	2.1	10.9*	8.8	2.1
மொத்த மூலதனம் (குறைந்த தேவைப்பாடு - பாசல் II – 10%, பாசல் III – 11.75%)	14.6*	12.3	2.3	14.5*	12.5	2.0

** பாசல் III தேவைப்படுத்தல்களுக்கமைய 2017 ஆம் ஆண்டுக்கான மூலதனப்போதுமை விகிதங்கள் கணிப்பிடப்பட்டுள்ளன.*

நிதிசாரா சிறப்பம்சங்கள்

உற்பத்தியாக்கப்பட்ட மூலதனம்

ரூபா **3.6** பில்லியன்
பௌதிக மற்றும் எண்ணிம உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான முதலீடு

578
கிளைகள்

48
சேவை வரையறுக்கப்பட்ட கிளைகள்

02
"நடமாடும் வாகனக் கிளைகள்"

15
SME நிலையங்கள்

14
பிராந்திய கடன் நிலையங்கள்

764
தன்னியக்க ரெலர்ப் பொறி

168
காசு வைப்பிலிடும் இயந்திரங்கள்

சமூக மற்றும் உறவு மூலதனம்

13
மில்லியனுக்கும் மேற்பட்ட பயன்தரு வாடிக்கையாளர்கள்

05
புதிய உற்பத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டன

ரூபா **287.3**
மில்லியன் நுண்நிதித்துறையினருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது

1,800
மறைமுக வேலை வாய்ப்புக்கள் நிறுவன செயற்றிட்ட நிதியிடல் மூலம் உருவாக்கப்பட்டுள்ளன

ரூபா **60.0**
பில்லியன் சிறிய நடுத்தர தொழில்முயற்சியாண்மைத் துறை அபிவிருத்திக்காக வழங்கப்பட்டுள்ளது

ரூபா **12.3**
பில்லியன் இலங்கை அரசாங்கத்துக்கான பங்குலாபமாக வழங்கப்பட்டுள்ளது

556
கொள்வனவுகள் ஆண்டுக்கால-ப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது

ரூபா **127.5**
மில்லியன் பெறுமதியான நிறுவன சமூகப் பொறுப்பு நிதி நீடுறுதித்தன்மை முன்னெடுப்புக்களுக்காக வழங்கப்பட்டுள்ளது

மனித மூலதனம்

7,587
எண்ணிக்கையான மொத்த நிரந்தர ஊழியர்கள்

43% ஆண்கள்
57% பெண்கள்

ரூபா **322.0**
மில்லியன் பயிற்சியளித்தலில் முதலீடு

11,884
மொத்த பயிற்சியளித்தல் மணித்தியாலங்கள்

534 புதிய
ஆட்சேர்ப்புக்கள்

1,831
பதவியுயர்வுகள்

புலமை மூலதனம்

ஒன்றுசேர்ந்த சேவை அனுபவம்

81,841

வருடங்கள்

நாட்டின் மிகவும் பெறுமதிமிக்க பண்டக்குறி

ரூபா **40.6**

பில்லியன் பண்டப் பெறுமதி

வலுவான ஆளுகை



7

தொடர்ச்சியான வருடங்கள் அதிசிறந்த 1000 வங்கிகளிடையே

இயற்கை மூலதனம்

பசுமை உட்கட்டுமான அபிவிருத்தி

20

சூரிய சக்தியளிக்கப்பட்ட கிளைகள்

பசுமைக் கட்டிட எண்ணக்கருவை அறிமுகப்படுத்தல் - இலங்கை பசுமைக் கட்டிட சம்மேளனத்தால் கெக்கிராவைக் கிளைக்கு 'தங்க விருது' வழங்கப்பட்டுள்ளது

178,297

A4 தாள்கள் கோவை முகாமைத்துவ முறைமைக் கடன் அறிமுகத்தினால் சேமிப்பு

81,595

A4 தாள்கள் BoardPAC இனால் சேமிப்பு

பசுமை வங்கியியலுக்கான எண்ணிம முறைப்படுத்தல்

135,540

(67% வளர்ச்சி) இலத்திரனியல் வங்கிக் கூற்றுக்கான பதிவு

41,567

ஸ்மாட் வைப்பு புத்தகங்களுக்கான பதிவுகள்

196,343

(93% வளர்ச்சி) ஸ்மாட்ஜென் கணக்குகள்

பசுமைக் கடன் வழங்கல்

ரூபா **640.6**

மில்லியன் மீண்டெழும் சக்திக்கான சில்லறைத்துறை நிதியிடல்

ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் சட்டகம்


ஒரு வர்த்தக நிறுவனம் அதன் இயக்கங்களின் போது வெவ்வேறு உள்ளீடுகளைப் பெற்று அவற்றினைத் தனக்கான மற்றும் தனது நிறுவன நலனில் அக்கறையுடையவர்களுக்கான பெறுமதியாக மாற்றுகின்றது. இந்தப் பெறுமதி உருவாக்கம் வெவ்வேறு காலச் சட்டகங்களில் நிகழலாம். அது குறுகிய, இடைக்கால மற்றும் நீண்டகால இடைவெளிகளில் இடம்பெறலாம். ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையானது வியாபார மாதிரி, உபாயமார்க்கங்கள், ஆளுகை, செயன்முறைகள், இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள் உள்ளிட்ட இந்தப் பெறுமதி உருவாக்கச் செயன்முறையினை சுருக்கமாக விபரிக்கின்றது.

அரசதுறை நிறுவனங்கள் அரச நிதிகளைப் பெறுகின்றன. இவையே எந்த ஒரு நாட்டிலும் பாரிய நிறுவனங்களாகக் காணப்படுகின்றன. அண்மைக்காலங்களில் உலகளாவிய ரீதியில் இவ்வாறான நிறுவனங்களினால் நிதிகள் பயன்படுத்தப்படுவது தொடர்பாக அதிகரித்த கரிசனைகள் காணப்படுவதுடன் நல்லாட்சி, வெளிப்படைத்தன்மை மற்றும் வகைப்பொறுப்பு தொடர்பாகவும் அதிகரித்த அளவிற்கு கோரிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. மேலும் இன்று வர்த்தக, அரசதுறை நிறுவனங்களில் கூட கவனக்குவிப்பானது நிதிச்செயலாற்றுகையின் மீது மாத்திரம் காணப்படாது இந்த நிறுவனங்கள் பொருளாதாரத்திலும் சமூகத்திலும் சுற்றுச்சூழலிலும் ஏற்படுத்துகின்ற பரந்த தாக்கம் பற்றியும் நிறுவன நலனில் அக்கறையுடையவர்கள் கரிசனை கொண்டுள்ளனர். இது ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் நீடுறுதியான அபிவிருத்தியினை மேம்படுத்துவதில் நிறுவனத்தின் வகிபாத்திரத்தினைக் கொண்டுவருகின்ற காரணத்தினால் அதனை மிகவும் முக்கியமானதாக ஆக்கியிருக்கின்றது.

அரசதுறை தொழில்முயற்சியாண்மைகளின் பிரதான பங்கீடுபாட்டாளர்களுள் அரசாங்கமும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளும் ஒழுங்குபடுத்தல் அதிகார அமைப்புக்களும் பெரியது முதல் சிறியது வரையிலான தனியார் தொழில் முயற்சிகளும் பொதுமக்களும் அடங்குகின்றன. தொழில்முயற்சியாண்மைகள் அரசிற்குச் சொந்தமானவையாக இருக்கின்ற காரணத்தினால் நிறுவன நலனில் அக்கறையுடையவர்களினதும் குறிப்பாக பொதுமக்களினதும் நம்பிக்கையினையும் விசுவாசத்தினையும் பேணுவது முக்கியமானதாகக் காணப்படுகின்றது. தனியார்துறையானது நிதிச்சேவைகளையும் பயன்பாடுகளையும் வழங்குகின்ற காரணத்தினால் அவை தமது செயலாற்றுகை தொடர்பாகப் பாரிய கரிசனையினைக் கொண்டுள்ளன.

இலங்கை வங்கி பாரிய நிதி நிறுவனமாக இருக்கின்ற காரணத்தினாலும் அது பாரிய இலாபத்தினை ஈட்டுகின்ற ஒரு நிறுவனமாக இருக்கின்ற காரணத்தினாலும் நாட்டின் பொருளாதாரத்திலே அது முக்கியமான வகிபாத்திரத்தினை வகிக்கின்றது. தனது பரந்த கிளைகளின் வலையமைப்பு மூலமாகவும் பரந்த வாடிக்கையாளர் தளத்தின் மூலமாகவும் வங்கி தனது பிரசன்னத்தினை சமுதாயத்தின் கீழ் மட்டங்களிலும் உணரச் செய்கின்றது. எனவே, அடிமட்டத்திற்கு அப்பால் நீட்சியடைகின்ற ஒரு தாக்கத்தினை இது கொண்டுள்ளது. எனவே பாரிய வாடிக்கையாளர் தளத்தினைக் கொண்டுள்ள ஒரு வங்கி என்கின்ற காரணத்தினால் இலங்கை வங்கி பொதுமக்களின் நலனினைப் பாதுகாக்கின்றது என்பதை அதன் நிறுவன நலனில் அக்கறையுடையவர்களுக்கு மீளுறுதிப்படுத்துவது முக்கியமானதாக அமைகின்றது.

வங்கியின் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கைகள் உள்ளடக்கும் தலைப்புக்கள் வரைபடத்தில் கீழே காட்டப்பட்டுள்ளன.



சர்வதேச ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் சட்டகத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறாகவும் கீழே வரைபடத்தில் காட்டப்பட்டவாறாகவும் உள்ள மூலதனங்கள் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் மூலதனங்களில் சில வெவ்வேறு தலைப்புக்களில் அறிக்கையில் விபரிக்கப்படலாம்.



இலங்கை வங்கியின் ஒருங்கிணைக்கப்பட்ட வருடாந்த அறிக்கை

நீடுறுதித்தன்மை

தேசத்தின் வங்கியாளர்

நாம் எவ்வாறு பெறுமதியினை உருவாக்குகின்றோம்

நிதி மூலதனம்

உற்பத்தியாக்கப்பட்ட மூலதனம்

புலமை மூலதனம்

சமூக மற்றும் உறவு மூலதனம்

மனித மூலதனம்

இயற்கை மூலதனம்

இந்த அறிக்கையினைத் தயாரிக்கையில் நாம் பின்வருவனவற்றிலிருந்து பொருத்தமான பொது உள்ளீடுகளைப் பெற்றுள்ளோம்: உலகலாளவிய அறிக்கையிடல் முன்னெடுப்பு, நீடுறுதித்தன்மை அறிக்கையிடல் வழிகாட்டல்கள், GRI தராதரங்கள் (ஜூலை 2018) [www.gloabalreporting.org], சர்வதேச ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் சட்டகம் 2013 [www.theiirc.org], இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட பெருநிறுவன அறிக்கையிடலுக்கான தயார்படுத்துனரின் வழிகாட்டி.

இந்த அறிக்கையிலே இலங்கை, இந்தியா, மாலைதீவு, சீசல்ஸ் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளில் உள்ள ஒட்டுமொத்தக் குழுமத்தினதும் அதன் கிளை அலுவலகங்களினதும் அதன் துணை நிறுவனங்களினதும் இயக்கங்களும் செயலாற்றுகைகளும் விபரமாக உள்ளடக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் பெருமளவு தகவல்கள் இலங்கை வங்கி தொடர்பானவையாகும். இதுவே குழுமத்தின் முதன்மை நிறுவனமாகும். குழுமத்தின் கொடுக்கல் வாங்கல்களின் பெரும் பகுதி இலங்கை வங்கிக்கு உரியதாக இருப்பதுடன் குழுமத்தின் அதிகமான இலாபமீட்டும் தன்மைக்கும் இலங்கை வங்கியே பங்களிப்பு வழங்குகின்றது.

குறுகிய காலத்தில், இடைக்காலத்தில் அல்லது நீண்ட காலத்தில் பெறுமதியினை உருவாக்கும் அதன் ஆற்றலில் வங்கி எந்தளவு தன்னிலையான தாக்கத்தினை ஏற்படுத்தலாம் என்பதன் அடிப்படையிலே எமது அறிக்கையிடல் முக்கியமான அம்சங்களில் கவனம் குவிக்கின்றது. இவ்வாறான முக்கியமான தன்மையினைத் தீர்மானிக்கும் செயன்முறை பக்கங்கள் 350 முதல் 351 வரை கலந்துரையாடப்பட்டுள்ளது.


வங்கியின் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையானது 2017 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2017 டிசம்பர் 31 வரையிலான 12 மாத காலப்பகுதியினை உள்ளடக்குவதுடன் எமது நிதி மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடலுக்கான எமது வழமையான வருடாந்த அறிக்கையிடலுடன் ஒத்திசைகின்றது. மிக அண்மைய முன்னைய அறிக்கையாக 2016 டிசம்பர் 31 ஆம் திகதி அறிக்கை காணப்படுகின்றது.

அளவு அல்லது உரித்தாண்மை தொடர்பாக அறிக்கையிடல் காலப்பகுதியின் போது முக்கியமான மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை.

சமூக மற்றும் சுற்றுச்சூழல் நீடுறுதித்தன்மை தொடர்பாக குழுமம் முழுவதினூடும் வங்கி ஒரு முன்னெச்சரிக்கைக் கோட்பாட்டினைப் பிரயோகிக்கின்றது. புதிய தொழில்முயற்சிகள் மற்றும் முன்னெடுப்புக்களில் ஈடுபடுவதற்கு முன்னர் போதிய இடர் முகாமைத்துவச் செயன்முறைகளின் மூலமாக ஏதாவது சாத்தியமான தாக்கங்கள் தொடர்பான மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. இது பக்கக்கள் 80 முதல் 92 வரையில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

முன்னைய அறிக்கைகளில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் மீளக் குறிப்பிடப்படவில்லை. எல்லைகளின் நோக்கெல்லை மற்றும் அம்சங்களில் முன்னைய அறிக்கையிடல் காலப்பகுதிகளிலிருந்து முக்கிய மாற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை.





நீடுறுதித்தன்மை

12 — எம்மை நாமே கண்டுபிடித்தல்

12 — தலைவரின் செய்தி

16 — விலகிச்செல்லும் பொது முகாமையாளரின் மீளாய்வு

20 — பொது முகாமையாளரின் மீளாய்வு

23 — எமது சுற்றுச்சூழலும் எமது செயன்முறையும்

23 — பொருளாதாரத் தோற்றப்பாடு

28 — வியாபார மாதிரி

32 — எமது இலக்கங்களை நீடுறுதித்தன்மைக்கு கடப்படச் செய்தல்

எம்மை நாமே கண்டுபிடித்தல்

தலைவரின் செய்தி



இன்று நாம் ஒரு மிடுக்கான உலகினுள் நகர்ந்து கொண்டிருக்கின்றோம். இதிலே வங்கிச்சேவையின் தோற்றம் நிலைமாறி வருவதுடன் எமது வாடிக்கையாளர் தளமும் பரிணாமமடைந்து வருகின்றது. நாம் புதிய தலைமுறையினருக்கு (மிலேனியம்) சேவை வழங்கி வருகின்ற அதேவேளை எமது மரபு ரீதியான வாடிக்கையாளர்களை மறந்துவிடவில்லை. நாம் புதிய ஒரு வருடத்தில் காலடி எடுத்து வைக்கும்போது புதிய சூழ்நிலைக்காக நாம் எம்மைப் பொருத்தமாக மீண்டும் அடையாளப்படுத்தி இருக்கின்றோம்.

2018 மற்றும் அதற்கு அப்பாலான தந்திரோபாயமும் கவனக்குவிப்பும்

2018 ஆம் ஆண்டின் உதயத்துடன் வங்கியானது அதன் 78 வருட பயணத்தில் மற்றுமொரு அடியினை எடுத்து வைத்துள்ளது. நாம் புதிய தொலைநோக்குடனும் பணிநோக்குடனும் பெறுமதிக் கூற்றுடனும் மீண்டும் ஒரு வியாபாரச் சின்னமாக எம்மை மாற்றியிருக்கின்றோம். இந்த மாற்றங்கள் பரிணமித்து வரும் உலகளாவிய, தேசிய மற்றும் தொழில்நுட்பச் சூழமைவிலே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை தொழில்நுட்ப மாற்றத்தின் முன்னணியில் இருக்கவேண்டிய தேவையினையும் அதீத போட்டித்தன்மைமிகு தொழிற்துறையில் புத்தாக்கமிக்கதாக இருக்கவேண்டிய தேவையினையும் அதிகரித்த அளவில் வாடிக்கையாளர்களில் கவனம் குவிக்க வேண்டியவர்களாக இருக்கவேண்டிய தேவையினையும் வலுவூட்டப்பட்ட ஊழியர்களைக் கொண்டிருப்பதற்கான தேவையினையும் கொண்டிருக்கின்றன. எதிர்காலத்திற்காக வங்கியினைச் செப்பனிட்டு வரையறை செய்தல் என்ற தொனிப்பொருளுடன் 2018 -2020 காலப்பகுதிக்கான புதிய கூட்டாண்மைத் திட்டம் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. ஒன்பது பிரதான கவனக்குவிப்புப் பரப்புக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இவற்றினைச் சுற்றியே திட்டம் அமுல்படுத்தப்படும்.

மாறிவரும் பரப்பில் எமது பல்வகைமைமிகு வாடிக்கையாளர் தளத்திற்கு சேவையாற்றுதல்

நாம் இன்று ஒரு மிடுக்கான உலகினுள் நகர்ந்து கொண்டிருக்கின்றோம். மேலும் வங்கிச்சேவைத் தொழிற்றுறையானது இந்த மாற்றத்தின் முன்னணியில் காணப்படுகின்றது. புதிய தொழில்நுட்பமானது பின்புல அலுவலகத்திற்கு வரையறுக்கப்பட்டதல்ல என்பதைக் கூறுகின்றதாக எமது தொழிற்துறையின் தன்மை காணப்படுகின்றது. இது நாம் மாற்றங்களுடன் சேர்ந்து செல்ல வேண்டியதைக் கட்டாயமாக்குவதுடன் எமது ஊழியர்கள் புதிய சூழலுடன் பரிச்சயமடைவதையும் கட்டாயமாக்குகின்றது. இவ்வாறான உயர் போட்டித்தன்மையுடன் துரிதமாக மாறிவருகின்ற வியாபாரச்சூழலில் முதல் ஸ்தானத்தில் திகழும் வங்கி என்கின்ற எமது ஸ்தானத்தினைத் தக்கவைத்துக் கொள்வதற்கு நாம் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தவேண்டும். 13 மில்லியன் வாடிக்கையாளர்களைக் கொண்ட எமது வாடிக்கையாளர் தளம் மற்றும் எமது பரந்த கிளை வலையமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இது மிகவும் முக்கியமானதாகும். மேலும் 1980களுக்குப் பின்னர் பிறந்த (மிலேனியத் தலைமுறையினர்) தலைமுறையினர் அதீத தொழில்நுட்ப ஆற்றல் கொண்டவர்களாக இருக்கின்றமையும் இதற்கான காரணம் ஆகும். இந்தக் கிராக்கியினைப் பூர்த்தி செய்வதில் நாம் ஒரு அனுகூலத்தினைக் கொண்டிருக்கின்றோம். எமது தொழிற்படையில் அரைவாசிக்கு மேற்பட்டோர் 35 வயதிற்குக் குறைவானவர்களாக இருப்பதுடன் அவர்கள் டிஜிட்டல்யுகத்தில் வளர்ந்து டிஜிட்டலுடன் பரிச்சயமானவர்களாக இருக்கின்றனர். எவ்வாறாயினும் நாணயத்தின் மறுபக்கம் என்ற ஒன்றும் இருக்கின்றது. எமது நீண்ட வரலாற்றின் காரணமாக எமது பல வாடிக்கையாளர்கள் இன்னும் பாரம்பரிய வங்கிச்சேவையுடன் பின்னிப்பிணைந்திருக்கின்ற உண்மையினை நாம் மறந்துவிட முடியாது. இந்த வாடிக்கையாளர்கள் வங்கியுடன் நேருக்கு நேரான சந்திப்புக்களை நடத்துவதையே இன்னும் விரும்புவதுடன் வங்கிச் சேமிப்புப் புத்தகம் என்கின்ற ஒன்றினைப் பௌதீக ரீதியாகக் கொண்டிருப்பதனையே அவர்கள் விரும்புகின்றனர். எனவே நாம் இரண்டு குழுக்களின் நலன்களினைச் சமநிலைப்படுத்துவதிலும் கவனமான அணுகுமுறையினைக் கைக்கொள்ள வேண்டியிருக்கின்றது.

தேசத்திற்குச் சேவையாற்று-வதற்கான எமது பொறுப்பு

இலங்கை வங்கி ஒரு வர்த்தகத் தொழில்-முயற்சி மாத்திரமல்லாது ஒரு சமூகத் தொழில்முயற்சியாகவும் காணப்படுகின்றது. எமது உற்பத்திகளையும் சேவைகளையும் உருவாக்குகையில் நாம் எமது வாடிக்கை-யாளர்களின் பல்வகைமை தொடர்பாக பிரக்ஞை கொண்டவர்களாக இருக்கவேண்டுமென்பதுடன் அவர்களது தேவைகளுக்கேற்ப நாம் எமது சேவை வழங்கலை வடிவமைக்க வேண்டும். எமது கூட்டாண்மை விழுமியங்களில் விரைவியக்கமும் புத்தாக்கத்தன்மையும் மையமான ஆக்கக்கூறுகளாகக் காணப்படுகின்றன. எனவே தொகைகள், கடன் வகைகள் மற்றும் இலக்குவைக்கப்பட்ட வாடிக்கையாளர்கள் என்ற வகையிலே நாம் அதீதமாகப் பல்வகை-மைமிக்க கடன் முதலீட்டுத் தொகுதியினைக் கொண்டுள்ளோம். சிறு தொழில்முயற்சியாளர்-களையும் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சித் துறையினையும் இலக்கு வைக்கின்ற "அத்வெல" என்கின்ற சலுகை மிகு வட்டியினைக் கொண்ட உற்பத்திகளையும் நாம் கொண்டுள்ளோம். இவ்வாறான கடன் வழங்கல் உற்பத்திகளின் மூலமாக அரசாங்கத்தின் குறிக்கோள்களுக்கு உதவி வழங்கி, வறுமையினை முடிவுறுத்துகின்ற பிரதான நீடுறுதிமிகு அபிவிருத்தி இலக்குக்கும் பங்களிப்பு வழங்கி வருகின்றோம்.

ஆளுகை

எமது நாட்டின் 13 மில்லியன் பிரஜைகளின் நிதியைப் பாதுகாக்கும் வங்கியென்கின்ற ரீதியில் எமது இயக்கங்களில் நாம் சாதுர்யம் மிக்கவர்களாகவும் நெறிமிக்கவர்களாகவும் வெளிப்படைத்தன்மை மிக்கவர்களாகவும் இருப்பதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளோம். எமது வாடிக்கையாளர்களது பொறுப்புக்களை மட்டுமல்லாது எமது சகல நிறுவன நலனில் அக்கறையுடையவர்களது பொறுப்புக்களையும் பூர்த்திசெய்வதை உறுதிப்படுத்துவதற்காக நாம் ஓர் இறுக்கமான ஆளுகைக் கட்டமைப்பினைக் கொண்டுள்ளோம். எமது ஆளுகைச் செயல்விதிகள் சிறந்த நடைமுறைகளினால் உந்திச் செலுத்தப்படுகின்றன. சகல நிறுவன நலனில் அக்கறையுடையவர்களுடனுமான இடையீடுகள் உள்ளடங்கலாக எமது சகல இயக்கங்களுக்கும் அவை ஆதாரமாக இருப்பதுடன் நாம் சகல சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இயைபுறுவதையும் அவை உறுதிப்படுத்துகின்றன. பாசல் III தேவைப்பாடுகள் அமுலுக்கு வந்ததுடன் இலங்கை வங்கி உள்நாட்டு ரீதியாக முறைமை வாய்ந்த ரீதியில் முக்கியமான வங்கி என்கின்ற அந்தஸ்தினைப் பெற்றிருக்கின்றது. (D-SIB).

எமது ஆளுகைக் கட்டமைப்பு சபை உபகுழுக்கள் உள்ளடங்கிய குழுக்களின் முறைமையினால் ஆதாரப்படுத்தப்பட்டுள்ளது. இது சபை மற்றும் முகாமைத்துவ உப குழுக்களுக்கு அறிக்கையிடுகின்றது. சபையும் முகாமைத்துவ உப குழுக்களும் பொது முகாமையாளருக்கோ அல்லது செயற்படும் தலைவர் ஒருவருக்கோ அறிக்கையிடுகின்றன. குழுக்களின் விடயங்களில் பின்வருவன உள்ளடங்குகின்றன. இயக்க இடர் முகாமைத்துவம், கடன், மனிதவளக் கொள்கை, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் வியாபாரத் தொடர்ச்சி முகாமைத்துவம். குழுக்கள் குறிப்பு விதிகளை தெளிவாக வரையறை செய்துள்ளன. குழுக்களுடன் கூட்டாகத் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்ற அதேவேளை அதிகாரமும் பொறுப்பும் இன்னும் தனிநபர்களிலேயே தங்கியுள்ளன. எமது ஐந்தொகையின் பலத்திற்கு எவ்வித தாக்கமுமின்றி 2017ஆம் ஆண்டிலே நாம் எமது அட்டவணையின் மீது 500 மில்லியன் யு.எஸ் டொலர் (USD) தொகுதிக் கடன்களை கொடுத்துத் தீர்த்துள்ளோம் என்கின்ற விடயத்தின் மூலம் நாம் எமது நிதிகளை மிகவும் புத்திசாதுர்யமான முறையிலே முகாமைத்துவம் செய்துவருவது எடுத்து விளக்கப்படுகின்றது. நாம் 2018 ஆம் ஆண்டிலே 500 மில்லியன் யு.எஸ் டொலர் பெறுமதியுடைய இரண்டாவது தொகுதியினைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான பாதையில் சென்று கொண்டிருக்கின்றோம்.

பயிற்சி

எமது மக்களே எமது முதன்மைச் சொத்துக்கள் என்பதைப் பற்றியும் அவர்கள் தம் வகிபாத்திரங்களில் சிறந்து விளங்குவதற்காக அவர்களுக்கு அறிவினையும் திறன்களையும் தேர்ச்சிகளையும் வழங்கவேண்டுமென்பதில் நாம் பிரக்ஞை கொண்டுள்ளோம். எமது பணியாளர்களுக்குத் தேவைப்படும் பயிற்சியினை வழங்க வேண்டியிருக்கையில் நாம் அதற்கு ஒருபோதும் தயங்குவதில்லை. எமது மனிதவளத் திணைக்கள நிகழ்ச்சித்திட்டங்கள் எமது கூட்டாண்மை தந்திரோபாயத்துடன் நெருக்கமாக இயைபுற்றுச் செல்கின்றன. நாம் ஒரு பயிற்சித் திட்டத்தினைக் கொண்டுள்ளோம்.

இது எமது கூட்டாண்மைத் திட்டம் மற்றும் பயிற்சி முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் இவை வருடாந்தம் திருத்தப்படுகின்றன. மேலதிக தேவைகள் அடையாளம் காணப்படும் போது பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் உருவாக்கப்பட்டு நடத்தப்படுகின்றன என்பதையும் நாம் உறுதிப்படுத்துகின்றோம். வங்கியிலுள்ள எமது பயிற்சி மையத்தில் நாம் பயிற்சியினை வழங்குகின்ற அதேவேளை இலங்கையில் உள்ள பல வெளி நிறுவனங்களிலும் வெளிநாடுகளிலும் நாம் பயற்சிகளை வழங்குகின்றோம்.

எமது வியாபாரத்தில் நீடுறுதியான காலடித்தடங்கள்

வங்கியானது நீடுறுதித்தன்மைக்குக் கடப்பாடு கொண்டுள்ளதுடன் நாம் எமக்காக மாத்திர-மல்லாது எமது தேசத்திற்காகவும் நீடுறுதி மிக்க வளர்ச்சியினை அடைவதற்கு நாடுகின்றோம். பொருளாதார ரீதியாக மாத்திரமன்றி ஒரு பூரணமான முறையில் சமுதாயத்தின் நலனோம்புகையினை நாம் மேம்படுத்துகின்றோம். வங்கியானது 17 நீடுறுதிமிகு இலக்குகளை ஏற்று அங்கீகரித்துள்ளது. இவை 2015 ஆம் ஆண்டு ஐக்கியநாடுகள் பொதுச்சபையிலே பிரகடனப்படுத்தப்பட்டதுடன் இந்த இலக்குகள் அனைத்துமே வங்கியின் கூட்டாண்மை தந்திரோபாயங்களினுள் பொதிந்துள்ளன. வங்கியானது அதன் தந்திரோபாயங்களுள் ஒன்றான பசுமை வங்கிச் சேவையினையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது. நிதிரீதியான ஓர் இடைநிலை நிறுவனம் என்கின்ற ரீதியிலே எமது வகிபாத்திரத்தின் மூலமாக நீடுறுதியான முதலீடுகளையும் எம்மால் மேம்படுத்த முடியும். கடதாசியினை அடிப்படையாகக் கொண்ட செயல்முறைகளிலிருந்து டிஜிட்டல் மயமாக்கலுக்கு நிலைமாறியதுடன் எம்மால் காபன் வெளியேற்றம் உள்ளடங்கலான கழிவுகளைக் குறைக்கக்கூடியதாக இருந்தது. எதிர்கால சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் போக்குகளில் கவனம் குவித்தவாறாக நாம் எமது உற்பத்திகளை உருவாக்கித் தகவமைத்து வருகின்ற காரணத்தினால் வங்கியின் தந்திரோபாயங்களினுள் தன்முனைப்பான முறையிலே நீடுறுதித்தன்மை உட்பொதிக்கப்பட்டுள்ளது.

புதிய ஒழுங்குபடுத்தல் மாற்றங்களும் சவால்மிகு மூலதனத் தேவைப்பாடுகளும்

ஒரு தசாப்தத்திற்கு முன்னர் இடம்பெற்ற நிதி நெருக்கடியின் தாக்கத்தினால் பாதிப்புக்கள் ஏற்பட்டதுடன் வங்கித் தொழிற்துறை முழுவதிலும் அது எதிரொலித்தது. குறிப்பாக ஒழுங்குபடுத்தல் மாற்றங்கள் என்னும் வடிவிலே அது எதிரொலித்தது. புதிய பாசல் III மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் (SLFRS) 9 தேவைப்பாடுகள் 2018 இலிருந்து அமுலுக்கு வருகின்றன. கடந்த பல வருடங்களாக இந்த மாற்றங்களுக்குத் தயார்படுத்துவதற்கான களப்பணிகளை நாம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதிகரித்த மூலதனத் தேவைப்பாடுகள் மிகவும் அதீதமான சவால்மிகு சூழ்நிலைகளை உருவாக்குகின்றது. இச்சூழ்நிலைகளைக் கையாள்வதற்கு வங்கி சகல சாத்தியமான தெரிவுகளையும் தேடவேண்டியிருப்பதுடன் இந்தச் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக அதன் நெகிழ்வுத்தன்மைகளையும் உருவாக்கியுள்ளது.

மெச்சுதல்கள்

என்னுடைய சக சபை உறுப்பினர்கள் எனக்கு வழங்கிய ஒத்துழைப்பிற்காகவும் வங்கிக்கு தந்திரோபாயமிக்க நெறிப்படுத்தலை வழங்குவதில் அவர்கள் காட்டுகின்ற தொழில்ரீதியான நேர்த்திக்காகவும் நான் எனது பாராட்டுதல்களை இங்கே பதிய வேண்டும். 2018 பெப்ரவரியில் ஓய்வு பெறுகின்ற வங்கியின் பொது முகாமையாளரான திரு. டி. எம். குணசேகர அவர்கள் காட்டிய கடப்பாட்டிற்கும் உதவிக்கும் நான் அவருக்கு நன்றி தெரிவிக்கவேண்டும். அவரது நீண்டகால வங்கிச்சேவையில் அவர் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியிருக்கின்றார். அவரின் எதிர்கால வளர்ச்சிக்காக நான் வாழ்த்துத் தெரிவிக்க விரும்புகின்றேன். புதிய பொது முகாமையாளரான திரு. செனரத் பண்டார அவர்களை நான் வரவேற்கின்ற அதேவேளை அவர் வங்கியிலே 28 வருட கீர்த்தி வாய்ந்த சேவையினை ஆற்றியே இந்தப் பதவியினை அடைந்துள்ளார். அவரது கடமைகளின் செயலாற்றுகைக்கு நான் வாழ்த்துத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

முகாமைத்துவ அணியினரும் அவர்களது கடமைகளை நிறைவேற்றுவதில் அயராத கடப்பாட்டினைக் காட்டியிருக்கின்றனர். இதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன். எமது பிரதான பங்கீடுபாட்டாளரான இலங்கை அரசாங்கம் எமக்கு உதவி வழங்கும் நன்மையினையும் நாம் கொண்டிருக்கின்றோம். கௌரவ நிதி அமைச்சருக்கும் கௌரவ அரச தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சருக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் பணியாளர்களுக்கும் அவர்கள் வழங்கிய நெறிப்படுத்தல்களுக்காகவும் வழிகாட்டலுக்காகவும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்.


மத்திய வங்கி ஆளுநர் மற்றும் பணியாளர்கள் வங்கியை வழிநடத்துவதற்காகக் காட்டிய நெறிப்படுத்தலுக்காக நான் நன்றி தெரிவிக்க விரும்புவதுடன் கணக்காய்வாளர் தலைமையதிபதியும் அவரது பணியாளர்களும் இந்த அறிக்கையிலே உள்ளடக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அவர்கள் வெளியிட்ட கருத்துக்களுக்காகவும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்.

எமது நிறுவனத்தின் உயிர்நாடியாகத் திகழ்வது எமது வாடிக்கையாளர்களே. எமது வாடிக்கையாளர்களின் அயராத விசுவாசம் இல்லாமல் நாம் இந்த நீண்ட பயணத்தினைக் கடந்து வந்திருக்க முடியாது. தொழிற்சங்கங்கள் எமக்கு வழங்கிய ஒத்துழைப்பினை நான் பெரிதும் மெச்சுவதுடன் அவர்களது உதவியுடன் நாம் தடையின்றி வங்கியினை இயக்கக்கூடியதாக இருக்கின்றது. எமது பணியாளர்களின் கடப்பாடும் சேவையுமே வங்கி மறுமலர்ச்சியடைந்து செழிப்படைவதற்குக் காரணமாக இருக்கின்றதென்பதை நான் மறக்கவில்லை. 78 வருடங்களுக்கு மேல் வங்கி அதன் பயணத்தினைத் தொடர்ந்து வந்திருக்கின்றது. இந்தப் பயணத்திலே பல மோசமான சூழ்நிலைகளுக்கு வங்கி முகங்கொடுத்து அதன் மீண்டெழும் தன்மையினை நிரூபித்திருக்கின்றது. நாம் கொண்டுள்ள வளங்கள் மற்றும் பலங்களுடன் எந்தச் சவாலையும் நாம் எதிர்கொண்டு நாட்டின் பொருளாதாரத்திலே பாரிய வகிபாத்திரத்தை வகிப்பதற்கு எம்மால் முன்செல்ல முடியும் என்ற விசுவாசத்தையும் எமது நாட்டு மக்களின் எதிர்காலத்திற்கு எம்மால் பாரிய பங்களிப்பை வழங்கமுடியுமென்ற விசுவாசத்தையும் நான் கொண்டுள்ளேன்.



ரொனால்ட் சீ பெரேரா - ஜனாதிபதி சட்டத்தரணி
தலைவர்

27 மார்ச் 2018
கொழும்பு


ABC

விலகிச்செல்லும் பொது முகாமையாளரின் மீளாய்வு



Brand Finance Sri Lanka வினால் நாங்கள் மீண்டும் ஒரு தடவை முதலாம் இடத்துக்குரிய வியாபாரச் சின்னமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதை நான் இங்கே பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகின்றேன். நாங்கள் இந்த விருதினைத் தொடர்ச்சியாக 9வது வருடம் பெற்றிருப்பது ஒப்பிட்டுப் பார்க்க முடியாத அடைவாகும். எமது வியாபாரச் சின்னமானது ரூபா 40 பில்லியனிற்கும் மேல் பெறுமதி கணிக்கப்பட்டுள்ளது.

எமது வியாபாரத் தோற்றப்பாடு

அரச நிறுவனமோ அல்லது தனியார் நிறுவனமோ, இலங்கை வங்கியே இலங்கையில் உயர் இலாபம் ஈட்டுகின்ற நிறுவனமாகக் காணப்படுகின்றது. இலாபம் ஈட்டுவதில் முன்னனியில் திகழும் வங்கியின் வரிக்கு முந்திய இலாபம் 2017 ஆம் ஆண்டிலே 30.3 பில்லியன் ரூபாவினைக் கடந்துள்ளது. வருடத்தின்போது வங்கி வரிக்கு முந்திய இலாபத்தில் 8% வளர்ச்சியினை 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கல் மூலம் அடைந்துள்ளது. வங்கியின் வைப்புத் தளமானது 23% வருடத்திலிருந்து வருடத்திற்கான வளர்ச்சியை அடைந்து 1.5 டிரில்லியன் ரூபாவினை எட்டியுள்ளது. இதன் காரணமாக இந்த நாட்டிலே மிகப் பாரிய சொத்துத் தளத்தினைக் கொண்டுள்ள தனித்தவொரு நிறுவனமாக இலங்கை வங்கி காணப்படுகின்றது. வருடத்தின் போது கடன்களும் முற்கொடுப்பனவுகளும் 16% ஆல் வளர்ச்சியடைந்து 1.2 டிரில்லியன் ரூபாவை எட்டியுள்ள காரணத்தினால் இந்த நிலைமை மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. வருடத்தின் போது சொத்துக்கள் 17% இனால் வளர்ச்சியடைந்துள்ளன. 2016 ஆம் ஆண்டிலே நாம் ஒரு மைல்கல்லினை அடைந்தோம் - நாம் சொத்துக்கள், வைப்புக்கள் மற்றும் கடன்களில் 3 டிரில்லியன்களை அடைந்துள்ளோம். இன்னுமொரு மைல்கல்லினை நாம் அடையும் நிலையில் இருக்கின்றோம். அது எமது சொத்துத் தளத்தினை 2 டிரில்லியனாக அதிகரிப்பதாகும். இதனை நாங்கள் 2018 ஆம் ஆண்டிலே அடைவதற்கு எண்ணியுள்ளோம்.

வங்கியின் வெளிநாட்டு வலையமைப்பானது 3 வெளிநாட்டுக் கிளைகளையும் ஐக்கிய இராச்சியத்திலே எமது துணை நிறுவனத்தையும் கொண்டுள்ளது. மேலும் உலகம் முழுவதிலும் நாம் 700 இற்கும் மேற்பட்ட இணைப்பு வங்கிகளைக் கொண்டுள்ளோம். இலங்கைக்கு உள்வருகின்ற சகல பண வைப்புக்களிலும் 46% இலங்கை வங்கி மூலமாகவே அனுப்பி வைக்கப்படுகின்றது. நாட்டின் சென்மதி நிலுவையினைத் தக்கவைப்பதற்கு பெரும் பங்களிப்பு வழங்குகின்ற எமது புலம்பெயர் தொழிலாளர்களுக்குச் சேவையாற்றுவதையிட்டு நாம் பெருமிதப்படுகின்றோம். பல வெளிநாட்டு அமைவிடங்களில் பண வைப்புக்களை இலங்கைக்கு அனுப்பி வைப்பதை வசதிப்படுத்-வதற்காக நாம் எமது பிரதிநிதிகளை நிலைப்படுத்தியுள்ளோம். இப்பிரதிநிதிகளின் எண்ணிக்கையினை 2018 ஆம் ஆண்டில் 100 ஆக அதிகரிக்க நாம் திட்டமிட்டுள்ளோம்.

சின்னமும் அடைவுகளும்

வங்கியின் வியாபாரச் சின்னத்தின் தூதுவராக நான் இருக்கின்ற காரணத்தினால் வியாபாரச் சின்னத்தின் பிம்பமும் வியாபாரச் சின்னத்தின் பெறுமதியும் எனது பதவிக்காலம் முழுவதும் நான் கரிசணை கொண்டுள்ள விடயங்களாக இருக்கின்றன. நாம் மீண்டும் Brand Finance Sri Lanka வினால் முதலாம் தர வியாபாரச் சின்னமாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதையிட்டு நான் பெருமிதப்படுகின்றேன். நாங்கள் இந்த விருதினைத் தொடர்ச்சியாக 9வது வருடம் பெற்றிருப்பது ஒப்பிட்டுப் பார்க்க முடியாத அடைவாகும். எமது வியாபாரச் சின்னமானது 40பில்லியன் ரூபாவிற்கும் மேல் பெறுமதி கணிக்கப்பட்டுள்ளது. சூழலில் ஏற்பட்ட எண்ணற்ற இடையூறுகள் மற்றும் சவால்களைத் தாண்டி எம்மால் இந்த நிலையினைத் தக்க வைக்கக்கூடியதாக இருக்கின்றமை எமது மீண்டெழும் தன்மைக்கான ஒரு கௌரவமாகும். மேலும் இலங்கையின் சிறந்த வியாபாரச் சின்னங்களுக்கிடையிலான போட்டியிலே இலங்கை வங்கி முதலாம் ஸ்தானத்திற்கான விருதினையும் பெற்றுள்ளது. இந்த விருதானது வியாபாரச் சின்னத்தின் நிதிச்செயலாற்றுகையை மாத்திரம் பிரதிபலிக்காது வாடிக்கையாளர்களினால் வியாபாரச் சின்னத்திற்கு வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்தையும் வங்கியின் நிதி நிலைமைக்கு அளிக்கப்பட்டுள்ள வியாபாரச் சின்னத்தின் பங்களிப்பையும் பிரதிபலிக்கின்றது. இந்தப் பாராட்டுக்களும் விருதுகளும் எது பொதுவாக அறியப்பட்டதோ அதையே உறுதிப்படுத்துகின்றன: இலங்கை வங்கியெனும் பெயர் ஒவ்வொரு இலங்கைப் பிரஜையும் நன்கறிந்த பெயராகும். மேலும் இலங்கை மக்கள் வாழ்வின் எப்பிரிவினைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் தமது அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு நாம் உதவிக் கரங்களை நீட்டியுள்ளோம்.

இதிலே தனித்து விளங்குவது என்னவென்றால், அடிப்படை நோக்கத்தில் மாத்திரம் கவனம் குவிக்காமலும் எமது சமூகப் பொறுப்புக்களைச் சமரசம் செய்யாமலும் இந்த அனைத்து அடைவுகளையும் நாம் அடைந்திருக்கிறோம் என்பதாகும். நாம் சிற்றினத் தொழில் முயற்சியாளர்கள், தொழில் முயற்சியாளர்கள், விவசாயிகள், கடற்தொழிலாளிகள், இளைஞர்கள், வீடுகளைப் நிர்மாணிப்போர் போன்ற பல்வேறு வாடிக்கையாளர் பிரிவுகளுக்கு அவர்களின் வர்த்தகத் திரும்பலின் பற்றாக்குறை பற்றி பொருட்படுத்தாது சேவையாற்றி வருகின்றோம். எவ்வாறாயினும் நாட்டின் அபிவிருத்தி மற்றும் மூன்று அடிப்படை நோக்கங்கள் ஆகியவற்றிற்கான எமது கடப்பாட்டின் காரணமாகவே நாம் இவ்வாறான வாடிக்கையாளர்களுக்கு நிதி வழங்குகின்றோம். வேறு எந்தவொரு வங்கியினையும் விட எமது தேறிய வட்டி எல்லையானது குறைவாகக் காணப்படுவதுடன் இது வைப்பாளர்களுக்கு நாம் உயர் வட்டியினை வழங்குவதையும் கடன்களுக்கும் முற்பணங்களுக்கும் குறைந்த வட்டியினை அறவிடுவதனையும் பிரதிபலிக்கின்றது. எமது தந்திரோபாயங்களில் நாம் பசுமை வங்கிச்சேவையினை, நீடுறுதித்தன்மைக்கான கருத்தியல்களை, 5Sகளை, காலநிலை மாற்றக் கரிசனைகளை ஒருங்கிணைத்துள்ளோம். நாம் ஈட்டியுள்ள எண்ணற்ற விருதுகள் எமது சமூகப் பிரக்ஞைக்கான ஒரு கௌரவமாகும்.

இயங்குசூழலும் ஒழுங்குவிதியும்

பாசல் III மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் (SLFRS) 9 ஆகியவற்றிற்கான மேலதிக கோரிக்கைகளுடன் நாம் எமது வர்த்தக மற்றும் சமூக வகிபாத்திரங்களை நிறைவேற்றுவதிலும் தொடர்ந்தும் போட்டித்தன்மை மிக்க வங்கியாக இருப்பதிலும் புதிய சவால்களுக்கு முகம்கொடுப்போம். எவ்வாறாயினும் நாம் கொண்டுள்ள பலங்களுடன் எம்மைச் சுற்றியுள்ள சூழலினை நாம் நோக்கி எம்மிடம் உள்ள வாய்ப்புக்களைச் சரியாகப் பயன்படுத்தினால் அச்சவால்களை எம்மால் வெற்றிகொள்ள முடியும் என்ற நம்பிக்கையினை நாம் கொண்டுள்ளோம்.

வங்கியின் உள்நாட்டு மற்றும் சர்வதேச இயங்குசூழலில் பல முனைகளில் வங்கியானது துரிதமாகப் பரிணமித்து வரும் மாற்றங் களுக்கு முகங்கொடுத்து வருகின்றது. இவற்றுள் பொருளாதார, சமூக, தொழில்நுட்ப, ஒழுங்குபடுத்தல் மற்றும் சுற்றுச்சூழல் மாற்றம் என்பன உள்ளடங்குகின்றன. இந்தப் போராட்டங்களுக்கு மத்தியிலே வங்கியினை வழிநடத்திச் செல்லும் அதேவேளை நாம் ஓர் அரச வங்கி என்கின்ற ரீதியிலும் நாட்டின் முன்னணி வங்கியென்கின்ற ரீதியிலும் எமது சமூகப் பொறுப்புக்களையும் நிறைவேற்ற வேண்டியிருக்கின்றது.

மத்திய வங்கியினதும் ஏனைய ஒழுங்குபடுத்தல் அதிகார அமைப்புக்களினதும் சகல சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு வங்கி பூரணமாக இயைபுறுகின்றது. பணம் தூய்தாக்கலுக்கு எதிரான, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முகாமைத்துவம் தொடர்பான மற்றும் வெளிநாட்டு நாணயப் பரிமாற்றங்கள் தொடர்பான பரப்புக்களில் சர்வதேச மாற்றங்களின் காரணமாக எம்மீது புதிய கோரிக்கைகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகின்றன. நாமும் சர்வதேச ரீதியாக இணைக்கப்பட்ட ஒரு வங்கியாக இருக்கின்ற காரணத்தினால் எமது சர்வதேசப் பங்காளர்களின் தேவைப்பாடுகளுக்கு இயையுறுவதற்கு எம்மீது மேலதிக அழுத்தங்கள் காணப்படுகின்றன.

இந்த வருடத்தில் பாரிய ஒழுங்குபடுத்தல் மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன அல்லது அறிமுகப்படுத்தப்படுவதற்குத் தயாராக இருந்தன. 2017 ஜூலை 01 ஆம் திகதி பாசல் III அமுலுக்கு வந்தது. 2019 ஆம் ஆண்டு இது பூரணமாக அமுல்படுத்தப் படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டிலே சர்வதேச நிதியியல் அறிக்கையிடல் நியமம் (IFRS) 9 அமுலுக்கு வருகின்றது. மூலதனத் தேவைப்பாடுகள் மற்றும் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளை விஸ்தரிப்பதன் மூலமாகவும் இறுக்கமான ஏற்பாடுகளின் மூலம் சொத்துக்களின் தரத்தினை மேம்படுத்துவதன் மூலமும் உலகம் முழுவதிலும் வங்கிச்சேவை முறைமைகளின் உறுதித்தன்மையினை அதிகரிப்பதை இந்த புதிய மாற்றங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன. கடந்த வருடத்தின் போது இவற்றின் தார்பரியங்களை மனதிற்கொண்டு நாம் எமது இயக்கங்களையும்

செயல்விதிகளையும் சீரமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. சொத்துக்களின் முகாமைத்துவம் தொடர்பாக பாரிய தாற்பரியங்கள் காணப்பட்டன.

சொத்துக்களின் முகாமைத்துவம்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள புதிய தேவைப்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்கு எமது மூலதனத்தினைக் கட்டியெழுப்புவதும் அதனை உச்சபட்ச மட்டத்திலே பயன்படுத்துவதும் மிக முக்கியமான கரிசனைக்குரிய விடயமாகும். இதனை அடைந்து கொள்வதற்கு நாம் எமது சொத்துக்களின் உரிய முகாமைத்துவத்தினைப் பேணவேண்டிய தேவை காணப்படுவதுடன் இதற்கென மூன்று பிரதான அம்சங்களும் காணப்படுகின்றன.

இதிலே முதலாவதாக எமது பௌதீக உட்கட்டமைப்புக் காணப்படுகின்றது. எமது கிளைகளுக்கு நாம் பௌதீக ரீதியான தரமுயர்த்தலினை வழங்கியுள்ள அதேவேளை டிஜிட்டல் முறையின் அதிநவீன தொழில்நுட்பத்திற்குப் பொருந்தும் வகையில் எமது தொழில்நுட்ப வன்பொருட்களைத் தரமுயர்த்துவது மிக இன்றியமையாததாக மாறி வருகின்றது. இதனை மேற்கொள்ளும் போது நாம் அடுத்த வருடத்திற்கான அல்லது அதற்கு அடுத்த வருடத்திற்கான தேவைகளைப் பற்றி மாத்திரம் வெறுமனே கருதாது 10 அல்லது 15 வருடங்கள் முன்னோக்கிச் சிந்திக்க வேண்டியிருக்கின்றது. வங்கிச்சேவையின் மாதிரியானது வெறுமனே கட்டிடங்களைத் தாண்டி டிஜிட்டல் வங்கிச்சேவையாக மாறி வருகின்றது.

டிஜிட்டல் மயமாக்கம் என்பது ஆபிரிக்காவின் சகாரா போன்ற பின்தங்கிய பிராந்தியங்களில் கூட மிகத் துரிதமாக முன்னேற்றம் அடைந்து வருகின்ற ஓர் உலகளாவிய போக்காகக் காணப்படுகின்றது. இலங்கையிலும் சில மூத்த தலைமுறைகள் டிஜிட்டல் தளத்திற்கு நகர்ந்து வருவதுடன் கொடுக்கல் வாங்கல்களை இணையத்தின் மூலமாகவும் மொபைல் வங்கிச்சேவையின் மூலமாகவும் மேற்கொண்டு வருகின்றனர். இந்த மாற்றங்களை மனதிற்கொண்டே எமது 2018-2020 கூட்டாண்மைத் திட்டம் வரையப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டிலே வங்கி புதிய தொழில்நுட்பத்தில் பிரதான முதலீடுகளை மேற்கொண்டது. அதிகளவிலான ATMகள், CDMகள் மற்றும் இணையம் மற்றும் மொபைல் வங்கிச்சேவைக்கான அதிகரித்த வசதிகள் மூலம் நாம் எமது வாடிக்கையாளர் சேவைகளைப் பரவலாக்கியுள்ளோம். இது எமது வன்பொருட்கள், மென்பொருட்கள் மற்றும் வலையமைப்புக்களைத் தரமுயர்த்துவதைத் தேவைப்படுத்தியது.

2017 ஆம் ஆண்டின் போது எமது வியாபாரச் செயன்முறை மீள் பொறியியலாக்கம் பல செயன்முறைகளைத் தன்னியக்கமயமாக்கி உள்ளது. புதிய காசோலைப் புத்தகங்கள், கடன் விண்ணப்பப் படிவங்கள், நிலையியற் கட்டளைகள் போன்ற சேவைகளை வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ள அவர்கள் வங்கிக்கு வரவேண்டிய தேவையினை இது அகற்றியிருக்கின்றது. இது எமது இயக்கங்களின் வினைத்திறன் மற்றும் செயற்திறனினையும் மேம்படுத்தியிருக்கின்றது. 2017 ஆம் ஆண்டிலே நாம் எமது புதிய மொபைல் செயலியான "B App" இனை ஆரம்பித்து வைத்தோம். அந்த வருடத்தின் போது இடம்பெற்ற மற்றுமொரு முக்கிய நிகழ்வாக ஸ்மாட் வங்கிக்கணக்குப் புத்தகத்தினைக் குறிப்பிட முடியும். இது இலவசமாகப் பதிவிறக்கம் செய்யப்படக்கூடிய செயலியாக இருப்பதுடன் நிகழ்நேரத்திலே கொடுக்கல் வாங்கல்கள், கணக்கு மீதி வரலாறு மற்றும் மாதாந்தக் கூற்று ஆகியவற்றுக்கான அணுகலினை வழங்குகின்றது. இது மூன்று மொபைல் சாதனங்களின் பதிவினை அனுமதிக்கின்றது. வருடத்தின் போது வங்கியானது மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் புதிய இடத்திலே அதன் அனர்த்த மீளல் மையத்தினை மீள ஆரம்பித்து வைத்தது (DRC). வாடிக்கையாளர் சேவைகளுக்குப் பாரதூரமான இடையூறு ஏற்படுத்தும் நிகழ்வுகளைக் கையாள்வதற்கு DRC இப்போது முன்னை விடவும் கூடுதல் தயார் நிலையில் காணப்படுகின்றது. ஓர் அனர்த்தச் சூழ்நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து மாற்றிடமொன்றிலே தகவல் தொழில்நுட்பச் சேவைகளை மீள உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை இது வழங்குகின்றது.

அடுத்ததாக கடன்கள், முற்கொடுப்பனவுகள் மற்றும் முதலீடுகள் போன்ற வட்டியினை ஈட்டுகின்ற சொத்துக்களாகும். ஒழுங்குபடுத்தல் மாற்றங்கள் மற்றும் புதிய கணக்கீட்டு முறைமைகள் ஆகியவற்றின் சூழமைவில் சொத்துத் தரமானது அதிக முக்கியத்துவத்தினைப் பெறுகின்றது. இவை எமது வியாபார மாதிரியில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கின்றன. நாம் எமது கடன் மதிப்பீட்டினையும் எமது முதலீட்டுத் தொகுதியினையும் எவ்வாறு நோக்குகின்றோம் என்பதனையும் இது மாற்றியுள்ளது. சொத்துக்களின் நம்பகத்தன்மையினை மாத்திரம் முன்பு எது அடிப்படையாகக் கொண்டிருந்ததோ அது இப்பொழுது காசுப் பாய்ச்சலை அடிப்படையாகக் கொண்ட ஒரு மாதிரியாக இருக்கவேண்டிய தேவை காணப்படுவதுடன் நாம் பதிவழிக்கின்ற உள்ளார்ந்த சொத்துக்களின் இடர்நேர்வுத் தன்மையுடன் சொத்துச் சேத ஒதுக்கங்களை ஒத்திசைவிக்க வேண்டியும் இருக்கின்றது. முதலீடுகளுக்காக மிக அண்மைய சந்தை விலைகளைக் கொண்டு சொத்துக்களைப் பெறுமதி கணிக்கும் கணக்கீடுகளை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது. சொத்துக்களின் தரம் பேணப்படுவதற்கு சொத்துக்களின் கொள்வனவு மற்றும் சொத்துக்களின் மீள் ஏற்பாடுகளுக்காக நாம் உரிய வழிகாட்டலினையும் உரிய பொறிமுறைகளையும் கொண்டிருக்க வேண்டியிருக்கின்றது. கடன் முகாமைத்துவம், கடன் மதிப்பீடு மற்றும் கடன் இடர் முகாமைத்துவம் போன்ற எமது வெவ்வேறு செயற்பாட்டு அலகுகள் அவற்றின் மீது சுமத்தப்பட்டுள்ள புதிய கோரிக்கைகளுக்காக அவற்றினைத் தயார்படுத்த வேண்டியிருந்தது. 2018 ஆம் ஆண்டிலிருந்து இலாபம் மற்றும் நட்டக்கணக்கு மற்றும் ஐந்தொகை ஆகியவை இப்புதிய தேவைப்பாடுகளின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கும்.

இறுதியாக, எமது மனிதவளங்களே எமது மிகவும் பெறுமதிமிக்க சொத்துக்களாக இருப்பதுடன் எமது தந்திரோபாய தேவைகளைக் கருத்திற்கொண்டு எமது மனிதவளங்கள் திட்டத்திற்கு நாம் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளோம். கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு மாதிரிகளின் விளைவாக அண்மைக்காலத்திலே ஓய்வுபெற்ற சிரேஷ்ட பணியாளர்களின் உயர் விகிதாசாரத்தினை நாம் கொண்டிருந்தோம் அல்லது ஓய்வுபெற நெருங்குகின்ற சிரேஷ்ட பணியாளர்களின் உயர் விகிதாசாரத்தினை நாம் கொண்டிருக்கின்றோம். புதிய ஆட்சேர்ப்புக்கள் பெரும் எண்ணிக்கையில் இடம்பெற்று வருவதுடன் பணியாளர்களின் சராசரி வயது 35 ஆகக் காணப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டிலே முகாமைத்துவப் பயிலுனர்களாக முன்னூறு சுறுசுறுப்பான இளம் தொழில்ரீதியான பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். 2018 ஆம் ஆண்டிலும் பெரும் எண்ணிக்கையானோர் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளனர். பல அனுபவமிக்க பணியாளர்களை நாம் இழந்து வருகின்ற அதே வேளை நாம் ஆட்சேர்ப்புச் செய்து வருகின்ற இளம் தலைமுறையினர் புதிய கொடுக்கல் வாங்கல் மாதிரிகளையும் செயன்முறைகளையும் கையாள்வதற்கான தொழில்நுட்ப ஆற்றலினைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். எனவே தற்போதைய தேவைப்பாடுகளுக்குப் பொருந்தும் வகையில் மனித மூலதனத் தளத்தினை நாம் கொண்டுள்ளோம்.

பொருளாதாரத்திலே பரிணாமம் அடைந்து வரும் மாற்றங்களுக்கு பதிற்செயற்பாடாற்றுதல்

உலகளாவிய தளத்திலே ஒழுங்குபடுத்தல் மற்றும் இயக்க ரீதியான மாற்றங்களினால் ஏற்படுத்தப்பட்ட சவால்களின் மத்தியிலே இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக முகமானது இயங்குதிறன் மிக்கதாக இருந்து வருகின்றது. இது வாய்ப்புக்களைத் திறந்துவிடும் அதேவேளை எமக்குச் சவால்களையும் ஏற்படுத்துகின்றது. காலநிலை மாற்றங்கள் காரணமாகவும் தொடர்ச்சியான உணவுப் பற்றாக்குறைகள் காரணமாகவும் உலகளாவிய ரீதியில் விவசாயம் என்பது தொடர்ச்சியாக அதிகரித்த அளவிலே முக்கியமான வகிபாத்திரத்தினை வகித்து வருகின்றது. இன்னும் ஒரு தசாப்த காலத்திலே இலங்கையிலே விவசாயம் மிகவும் கவர்ச்சிமிக்க பரப்பாக மாறும் என சகல அறிகுறிகளும் சுட்டிக்காட்டுகின்றன. உணவு பதப்படுத்துதல், வெட்டிய மலர்கள் மற்றும் அலங்கார மீன்கள் போன்ற பரப்புக்களிலே புதிய வாய்ப்புக்கள் கிடைக்கக்கூடியதாக

இருக்கின்றன. இவ்வாறான பரப்புக்களை சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சித் துறைகள் பயன்படுத்தலாம் என்கின்ற காரணத்தினால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலே சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சியாண்மைத் துறையின் முக்கியத்துவத்தினை இது அதிகரிக்கும். இன்றைய உலகமயமாக்கப்பட்ட வியாபாரச் சூழலிலே ஒருவர் உலகமயமானவராக மாறுவதற்கு அவர் பாரிய ஜாம்பவானாக இருக்க வேண்டிய தேவையில்லை. நாம் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சியாண்மைத் துறையினை உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகளுடன் இணைப்பதை வசதிப்படுத்தவும் முடியும்.

நாட்டின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியினைப் பொறுத்த அளவில் பொருளாதாரத் தோற்றப்பாடானது மேல் மாகாணத்தினை மையப்படுத்திய முன்னைய மாதிரியிலிருந்து தற்போது நகர்ந்து வருகின்றது. துரித அபிவிருத்திகள் வடக்கு மற்றும் கிழக்கிலும் ஏனைய மாகாணங்களிலும் இடம்பெற்று வருகின்றன. இந்தப் புதிய மாற்றங்களுக்கு அமைவாக நாம் எமது நிறுவனக் கட்டமைப்புக்களையும் மாற்றியுள்ளோம். மேலும் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சியாண்மைத் துறைக்குச் சேவையாற்றும் வகையில் அதிக கவனக்குவிப்பு வழங்கப்பட்டுள்ளது. சில்லறைப் பிரிவிலே உருவாகிவரும் சந்தை வாய்ப்புக்களுக்குச் சேவையாற்றுவதற்காக நாம் சில்லறைப்பிரிவிலே அதிக வளங்களை முதலீடு செய்து வருகின்றோம். இதன் அடிப்படையில் சில்லறை வங்கிச்சேவையானது அதன் வியாபாரத் துறைகளை விஸ்தரிப்பதற்கு அனுமதித்து அதிக வளங்களை உள்வாங்குவதற்காக இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கடன் வழங்கும் செயன்முறையினைத் துரிதப்படுத்துவதற்காக நாம் பதினான்கு பிராந்தியக் கடன் மையங்களையும் பதினைந்து சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சியாண்மை மையங்களையும் நிறுவியுள்ளதுடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் பிராந்தியக் கடன் மையமொன்றினை (RLC) அமைப்பதன் மூலம் இதனை அதிகரிப்பதற்கும் எண்ணியுள்ளோம்.

எதிர்காலச் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக நாம் எமது உள்நிலைச் செயன்முறைகளையும் முறைமைகளையும் மூலதனங் களையும் நன்கு கட்டமைத்துள்ளோம். மேலும் உள்நாட்டிலும் உலகளாவிய பரப்புக்களிலும் நிகழ்கின்ற மாற்றங்களினால் வழங்கப்படுகின்ற வாய்ப்புக்களைப் பற்றிப்பிடிப்பதற்கு இலங்கை வங்கி நன்கு தயார்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இலங்கை வங்கி எப்பொழுதுமே தேசத்தின் வங்கியாக இருக்கும்.

மெச்சுதல்கள்

தலைவர் மற்றும் பணிப்பாளர்கள் சபை வழங்கிய நெறிப்படுத்தலுக்கும் வழிகாட்டலுக்கும் நான் எனது மெச்சுதல்களை வழங்குவதற்கு விரும்புகின்றேன். கூட்டாண்மை முகாமைத்துவம் மற்றும் நிறைவேற்று முகாமைத்துவம் ஆகியவை வழங்கிய நெறிப்படுத்தலுக்கும் வழிகாட்டலுக்கும் மேலும் எமது பணியாளர்கள் அயராது வழங்கிய அர்ப்பணிப்புக்கும் இடையறாத முயற்சிகளுக்கும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன். தொழிற்சங்கங்கள் வழங்கிய ஒத்துழைப்புக்காகவும் முன்னாள் ஊழியர்களும் எமது வாடிக்கையாளர்களும் காட்டுகின்ற தொடர்ச்சியான விசுவாசத்திற்காகவும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன். அரச தொழில்முயற்சியாண்மை அமைச்சர் மற்றும் நிதியமைச்சர் ஆகியோருக்கும் அந்த இரண்டு அமைச்சுக்களின் பணியாளர்கள் வழங்கிய ஒத்துழைப்பிற்காக அவர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன். மத்திய வங்கி மற்றும் அவர்களது பணியாளர்கள் வழங்கிய ஒழுங்குபடுத்தல் மேற்பார்வையினை நான் பெரிதும் மெச்சுகின்றேன். மேலும் இந்த அறிக்கையினை உரிய காலத்தில் வெளியிடுவதை இயலுமாக்கிய கணக்காய்வாளர் தலைமையதிபதி மற்றும் அவரது பணியாளர்களின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்காகவும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்.

எமது பலங்கள் மற்றும் வளங்களுடன் வங்கியானது எழுகின்ற எந்தச் சவால்களையும் வெற்றி கொள்வதற்காகவும் வளர்வதற்கான எந்த வாய்ப்பினதும் அனுகூலத்தினைப் பெறுவதற்காகவும் தனக்காக மட்டுமல்லாது இலங்கையருக்காக மறுமலர்ச்சி காண்பதற்காகவும் 2018 ஆம் ஆண்டிலும் அதனைத் தாண்டியும் முன்செல்லும் என்கின்ற பூரண நம்பிக்கையினை நான் கொண்டுள்ளேன்.



டி. எம். குணசேகர
பொது முகாமையாளர்

21 பெப்பிரவரி 2018
கொழும்பு

பொது முகாமையாளரின் மீளாய்வு



2018/2020 காலப்பகுதிக்கான கூட்டாண்மை திட்டத்துடனான தனது பயணத்தில் வங்கியானது 2018 ஆம் ஆண்டில் ஒரு புதிய கட்டத்தினுள் காலடியெடுத்து வைக்கின்றது. இந்தத் திட்டத்தினை ஆரம்பித்து வைக்கும் அதேவேளை நாம் எமது தொலைநோக்கு குறிகோள் மற்றும் விழுமிய கூற்றினை மீளாய்வு செய்து மாற்றியமைத்துள்ளோம். எமது கூட்டாண்மைத் திட்டத்துடன் பரஸ்பரம் பொருந்தும் வகையில் 'எதிர்காலத்திற்காக வங்கியினைச் சீர்படுத்தி வரையறை செய்தல்' என்பதே எமது புதிய தொனிப்பொருள்.

'தேசத்தின் வங்கியாளர்'

இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் என்கின்ற வகிபாத்திரத்தினை நான் பெருமிதத்துடனும் பணிவுடனும் பொறுப்பேற்கின்றேன். 1939 ஆம் ஆண்டிலே தழைத்து வந்த உள்நாட்டு வியாபார சமுதாயத்திற்குச் சேவையாற்றுவதற்கான ஒரு வங்கியாக எளிமையாகத் தனது பயணத்தை ஆரம்பித்த வங்கி இன்று நீண்ட தூரம் பயணம் செய்திருக்கின்றது. இன்று இலங்கை வங்கி நாட்டிலேயே மிகப் பெரிய வங்கியாகவும் மிக அதிக இலாபமீட்டுகின்ற தனித்த நிறுவனமாகவும் காணப்படுவதுடன் நாமே தேசத்தின் வங்கியாளராகவும் இருக்கின்றோம். சொத்துக்கள் கடன்கள் மற்றும் வைப்புக்களில் இலங்கை வங்கி பாரிய இது 2016 ஆம் ஆண்டிலே இவையாவும் 1 டிரில்லியன் ரூபாவினை மிகைத்திருக்கின்றன. அத்துடன் நாங்கள் மிகவும் விரிவான் வலை அமைப்பினையுடைய கிளை, ATM மற்றும் CDM இயந்திரங்களையும் கொண்டுள்ளோம். இவ்வாறான உறுதியான வியாபாரச் சின்னத்துடன் நிறுவனத்தினை வளர்ந்தெடுத்து என்னிடம் கையளித்தமைக்காக எனக்கு முன் இப்பதவியினை வகித்த திரு. டி. எம். குணசேகரவிற்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன். எனது பதவிக்காலத்தின் போது வங்கி தனது முதலாம் ஸ்தானத்தினைத் தொடர்ந்தும் பேணுவதை உறுதிப்படுத்துவதற்கும் இதை விட உயர்ந்த சிகரங்களை வங்கி தொடுவதை இயலுமாக்குவதற்கும் நான் எண்ணியுள்ளேன்.

நாம் நிதித் தீர்வுகளில் புத்தாக்கம் மிக்கோராகவும் வாடிக்கையாளரை மையப்படுத்தியோராகவும் இருக்கின்ற அதேவேளை எமது உலகளாவிய பிரசன்னத்தினை வலுப்படுத்துவதற்காக எமது தேசிய நன்மதிப்பினைக் கட்டியெழுப்பும் புதிய தொலைநோக்குடன் நாம் 2018 ஆம் ஆண்டிலிருந்து எமது வியாபாரச் சின்னத்தினை மீள் புதுப்பித்திருக்கின்றோம். இந்தத் தொலைநோக்கினை அடைவதற்கான எமது உபாயமார்க்கமானது எமது வினைத்திறனினை அதிகரிப்பதாகவும் நிதிச்சந்தைகளையும் வாடிக்கையாளர் தேவைகளையும் ஆழமாகப் பகுப்பாய்வு செய்வதாகவும் பொருத்தமான தீர்வுகளை உருவாக்குவதாகவும் அதிநவீன உயர்தர தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதாகவும் எமது ஊழியர்களை மேம்படுத்துவதாகவும் இருக்கும்.

எமது கூட்டாண்மைத் திட்டம்

2018/2020 காலப்பகுதிக்கான கூட்டாண்மைத் திட்டத்துடனான தனது பயணத்தில் வங்கியானது 2018 ஆம் ஆண்டில் ஒரு புதிய கட்டத்தினுள் காலடியெடுத்து வைக்கின்றது. இந்தத் திட்டத்தினை வெளியிடுகின்ற அதேவேளை நாம் எமது தொலைநோக்கு, குறிகோள் மற்றும் விழுமியக் கூற்றினை மீளாய்வு செய்து மாற்றியமைந்துளோம். எமது கூட்டாண்மைத் திட்டத்துடன் பரஸ்பரம் பொருந்தும் வகையில் 'எதிர்காலத்திற்காக வங்கியினைச் சீர்ப்படுத்தி வரையறை செய்தல்' என்பதே எமது புதிய தொனிப்பொருள். திட்டமானது தொழில் ரீதியான மற்றும் மிக இறுக்கமான செயன்முறையின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. வியாபார மாதிரியினையும் செயற்பாடுகளையும் மீள் பரிசோதனை செய்த நாம் அவை எவ்வாறு நடைமுறை, பொருளாதார, சமூக மற்றும் வியாபாரச் சூழலில் நாம் எதிர்கொள்கின்ற சவால்கள் மற்றும் புதிய வாய்ப்புக்கள் எனும் சூழமைவில் சீர் செய்யப்பட வேண்டுமென்பதையும் கவனத்தில் எடுத்துள்ளோம்.

திட்டத்தின் தயாரிப்பானது மிகவும் திடமானதாக இருப்பதுடன் அது வெறுமனே மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டத்தை நோக்கிய ஒரு செயற்பாடல்லாததாகக் காணப்படுகின்றது. திணைக்களங்களிலிருந்தும் கிளைகளிலிருந்தும் மாகாண மட்டங்களிலிருந்தும் உள்ளீடுகள் கோரப்பட்டன. ஒட்டுமொத்த கூட்டாண்மை மற்றும் நிறைவேற்று முகாமைத்துவத்தின் பிரதிநிதித்துவத்துடன் செயலமர்வு ஒன்று கூட்டப்பட்டு அதிலே வரைபுத் திட்டம் கலந்துரையாடப்பட்டுத் திருத்தப்பட்டது. அதிகளவிலான வடிகட்டல்கள் மற்றும் சீரமைப்புகளைத் தொடர்ந்து புதிய திட்டம் மேற்கொள்ளப்பட்டது. திட்டமானது வெளியிடப்பட்ட போது எமது செயற்படு பணியாளர்கள் ஒரே குரலில் திட்டம் பற்றி விழிப்பூட்டப்பட்டனர். வெற்றிகரமான அமுல்படுத்தலிற்கு வங்கியின் ஊழியர்களின் விழிப்புணர்வும் கடப்பாடும் உதவியும் தேவையென்பதை நாம் திடமாக நம்புகின்றோம் கூட்டாண்மைத் திட்டத்திற்கு எதிரான எமது உண்மையான செயலாற்றுகை கிரமமாகவும் மிக இறுக்கமாகவும் மீளாய்வு செய்யப்படுகின்றது. மீளாய்வுகள் வாராந்தம், மாதாந்தம், மற்றும் காலாண்டு இடைவெளிகளில் வெவ்வேறு முகாமைத்துவ மட்டங்களில் நிறைவேற்றப்படுகின்றன.

வாடிக்கையாளருடனான நெருக்கம்

எமது வாடிக்கையாளர் சேவையினை மேம்படுத்துவதற்கான தேவையும் வாடிக்கையாளரை அதிகம் மையப்படுத்திய வங்கியாக மாறுவதற்கான தேவையுமே எமது சிந்தனையின் அடிப்படையாகக் காணப்படுகின்றன. இன்றைய வங்கிச்சேவைச் சூழலானது தொழிற்துறையிலே முப்பதிற்கும் மேற்பட்ட வங்கிகளுடன் அதீத போட்டித்தன்மை மிக்கதாகக் காணப்படுகின்றது. புதிய வியாபாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு மாத்திரமல்லாது ஏற்கனவே இருக்கின்ற வாடிக்கையாளர்களைத் தொடர்ந்து தக்கவைப்பதற்கும் வாடிக்கையாளர் உறவுகள் அதீத முக்கியத்துவம் வாய்ந்தவையாக மாறி வருகின்றன.

எனவே, வாடிக்கையாளர்களுக்கு வங்கி ஊழியர்கள் காலம் தவறாத மற்றும் இதமான சேவைகளை வழங்குவது இன்றியமையாததாக இருக்கின்றது. எனவே சகல பணியாள் உறுப்பினர்கள், செயன்முறைகள் மற்றும் முறைமைகள் மத்தியில் வாடிக்கையாளரை மையப்படுத்துகின்றமை இன்றியமையாததாகும். "வாடிக்கையாளரை மையப்படுத்தியோராக' இருத்தல்" என்பதை எமது பிரதான விழுமியங்களில் ஒன்றாக ஆக்கியதன் மூலமாக நாம் இதனை அங்கீகரித்துள்ளோம். எமது வாடிக்கையாளர் தளமானது மிகப் பரந்த வீச்சினை உள்ளடக்குகின்றது. இது பாரிய பெருநிறுவனங்கள், சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சியாளர்கள், நுண் தொழில்முயற்சியாளர்கள், அரசமட்ட நடுத்தர வர்க்கத்தினர், புலம்பெயர் தொழிலாளர்கள், விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் உள்ளிட்ட பல்வகைமைமிகு குழுக்களை இணைகின்றது. ஒவ்வொரு வாடிக்கையாளர் குழுவும் அதற்கே உரித்தான தனித்துவமான தேவைகளையும் அதற்கே உரித்தான சுவைகளையும் முன் விருப்புக்களையும் கொண்டுள்ளன. நிதி ரீதியான அறிவு மட்டத்திலும் இவர்கள் பெருமளவில் வித்தியாசப்படுகின்றனர். இது தொடர்பில் வங்கி கூருணர்வுடன் இருக்கவேண்டுமென்பதுடன் ஒவ்வொரு வாடிக்கையாளரையும் அவருக்குப் பொருத்தமான வகையில் நடாத்தி அவரின் தேவைக்கேற்ப சேவையாற்ற வேண்டும். பயிற்சிகளின் மூலமாகவும் விழிப்புணர்வினை மேம்படுத்துவதன் மூலமாகவும் பணியாளர் விருத்தியின் மூலமாகவும் வாடிக்கையாளரை மையப்படுத்துகின்றமை என்கின்ற விழுமியத்தினை நாம் எமது பணியாளர்கள் மத்தியில் பதிப்போம். தற்பொழுது நாங்கள் ஆளணி உதவியாளர்களின் தொகுதியினை ஆட்சேர்ப்புச் செய்யும் செயன் முறையில் இருக்கின்றோம். இவர்கள் வங்கிச் சேவைகளின் தொழில்நுட்ப அம்சங்களிலும் வாடிக்கையாளர் சேவையிலும் பயிற்சியினைப் பெறுவர்.

எமது வாடிக்கையாள் தளம் 13 மில்லியன் வாடிக்கையாளர்களைக் கொண்டதாக உள்ளது. நாம் உயர் பல்வகைமைமிகு வாடிக்கையாளர்களுக்குச் சேவையாற்றி வருகின்றோம். நாம் சேவை வழங்குகின்ற வாடிக்கையாளர்களின் ஒவ்வொரு பிரிவிற்கும் கவர்ச்சிமிக்கதும் வாடிக்கையாளரை மையப்படுத்தியதுமான சேவையினை எவ்வாறு வழங்குவதென்பதே எமக்கு இருக்கின்ற சவாலாகும். முன்னே செல்வதற்கான வழியாக எமது வாடிக்கையாளர்களை ATM, CDM, இணையம் அல்லது கையடக்கத் தொலைபேசி வங்கிச்சேவை போன்ற டிஜிட்டல் வழிகளை அதிகம் பயன்படுத்துவதற்கு ஊக்கப்படுத்துவது அமையும் என நாம் நினைக்கின்றோம். வங்கியானது திடமான மற்றும் முதற்தரமான தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினைக் கொண்டுள்ளது. நாம் வாடிக்கையாளர்களின் மத்தியில் விழிப்புணர்வினை மேம்படுத்துவதற்கு இதனைப் பயன்படுத்த வேண்டும். எமது 'B செயலி' என்கின்ற கையடக்கத் தொலைபேசி செயலியானது 2017 ஆம் ஆண்டிலே அறிமுகப்படுத்தப்பட்டு இப்பொழுது அதிகரித்த அளவிற்கு பிரபல்யமாகி வருவது இவ் விடயம் தொடர்பில் மனதிற்கு மகிழ்ச்சியளிப்பதாக இருக்கின்றது. இந்தச் செயலி மூலமாக நாம் எமது மெய்நிலை அணுகலினை எமது வாடிக்கையாளர்களுக்கு 24 X 365 எனும் வங்கிச்சேவையாக மேலும் விஸ்தரித்துள்ளோம்.

எமது டிஜிட்டல் சேவைகளை பாவனையாளருக்கு நட்புமிக்கதாக இயலுமான அளவுக்கு மாற்றுவதற்கு நாம் உழைத்து வருகின்றோம். கருமபீடங்களுக்கு வாடிக்கையாளர் செல்வதில் இருந்தும் அவர்களை தவிர்ப்பதற்கு நாம் டிஜிட்டல் சேவைகளின் பாதுகாப்பதற்கு பற்றி அவர்களுக்கு உத்தரவாதத்தினை உறுதிப்படுத்தவும் வேண்டும். வாடிக்கையாளர்கள் அதிகமாக டிஜிட்டல் மார்க்கங்களைப் பயன்படுத்தும்போது கிளைகளிலே நாம் அவர்களுக்கு மிகச் சிறந்த சேவைகளை வழங்க முடியும்.

கடன் வழங்கல் மற்றும் நிதி உள்ளடக்கம்

கடன் வழங்கல் தொடர்பான எமது அணுகுமுறை இரண்டு கண்ணோட்டங்களைக் கொண்டுள்ளது. ஒன்று வர்த்தக அணுகுமுறை. மற்றொன்று அபிவிருத்தி அணுகுமுறை. அரசிற்கு சொந்தமான வங்கியாக இருக்கின்ற காரணத்தினாலும் நாட்டின் மிகப் பெரிய வங்கியாக இருக்கின்ற காரணத்தினாலும் நாம் அபிவிருத்தி அணுகுமுறைக்கு முன்னுரிமை அளிக்கின்றோம். பிரமிட்டின் அடித்தட்டிலே வாழ்ந்து வரும் தேவையுடைய மக்களின் வருமான மட்டத்தினையும் சமூக அந்தஸ்தினையும், வாழ்க்கைத் தரங்களையும் மேம்படுத்துவதற்காக உதவி வழங்குவது எமது பொறுப்பாகும். சந்தையின் இந்தப் பிரிவினருக்கு சேவை வழங்குவதற்காக நாம் 50 இற்கும் மேற்பட்ட கடன் திட்டங்களைக் கொண்டிருப்பது எமது கடப்பாட்டினை நன்கு எடுத்து விளக்குகின்றது. குறிப்பிட்ட தேவைக்காக வரையறுக்கப்பட்ட திட்டங்களுடனான அர்ப்பணிப்பு மிகு புறநிதியிடல் கிடைக்காத போது நாம் எமது சொந்த நிதிகளைப் பயன்படுத்தித் திட்டங்களை உருவாக்கி இதுவரை அவற்றினை சலுகை நிபந்தனைகளிலும் வழங்குகின்றோம். தொழில் முயற்சியாண்மைக்கு ஊக்கமில்லாத மக்களின் வாழ்க்கைத்தரங்களை மேம்படுத்துவதற்காக வங்கியானது குறைந்த வருமான மட்டம் உடையோருக்கு உதவுவதற்கு நாடுகின்றது. இவ்வாறு இவர்களுக்கு உதவுவதற்காக நாம் நிதி உள்ளடக்கத்தினை மேம்படுத்துகின்றோம். இல்லாவிடின் இவர்கள் முறைசாரா கடன் வழங்குநர்களிடம் அகப்பட்டு விடுவார்கள்.

நாம் மிகப் பாரிய முக்கியத்துவத்தினை வழங்குகின்ற மற்றுமொரு துறையாக சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சியாண்மை காணப்படுகின்றது. இந்தத் துறையே பொருளாதாரத்தின் உண்மையான வளர்ச்சி இயந்திரமாகக் காணப்படுகின்றது. நாடு முழுவதும்

நடத்தப்படும் இந்தத் துறைக்கான எமது நிகழ்ச்சித் திட்டத்தில் நாம் வெவ்வேறு வர்த்தக சம்மேளனங்களையும் ஒருங்கிணைக்கின்றோம். இது தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள முக்கியமான புத்தாக்கம் எமது 'வியாபாரிக ஹமுவ' அமர்வுகளாகும். எமது சிரேஷ்ட அதிகாரிகள் பங்கு பற்றுகின்ற இந்த அமர்வுகள் பிராந்திய மட்டத்திலும் தொழிற்துறை மட்டத்திலும் நடாத்தப்படுகின்றன. வலையமைப்பு உருவாக்கமும் நாம் நீடுறுதியான பெறுமதியினை உருவாக்குகின்ற ஒரு வழியாகக் காணப்படுகின்றது. இந்த நிகழ்வுகளில் வங்கியின் ஊழியர்களும் தொழில் முயற்சியாளர்களும் ஒருவர் மற்றவரின் தேவைகளையும் கண்ணோட்டங்களையும் பிரச்சினைகளையும் புரிந்துகொண்டு இடையீடு மேற்கொள்வதற்கு வாய்ப்பினைப் பெறுகின்றனர்.

மீளாய்வின் கீழுள்ள வருடத்தின் போது நாம் எடுத்துள்ள மற்றுமோர் புத்ததாக்கமிகு நடவடிக்கையாக கிராமிய மக்களுக்கு முக்கியமாக நன்மை வழங்கக்கூடிய நகரும் கிளைகளைக் குறிப்பிட வேண்டும். இதன் மூலமாக வங்கியினை நாம் வாடிக்கையாளர்களின் வாசற்படிக்குக் கொண்டு செல்கின்றோம். வாடிக்கையாளர்கள் எமது கிளைக்கு விஜயம் செய்வதை நாம் தவிர்த்திருக்கின்றோம். இந்த நடமாடும் கிளை வசதியானது கணக்கினைத் திறத்தல், பண வைப்புக்கள், பணத்தினை மீளப் பெறுதல், கட்டணப் பட்டியல்களைச் செலுத்துதல், கடன் விண்ணப்பங்கள் போன்ற பெரும் எண்ணிக்கையிலான சேவைகளை வழங்குகின்றது. நகரும் கிளைகள் ஒன்லைன் தொடர்பினைக் கொண்டுள்ள காரணத்தினால் எந்தவொரு கொடுக்கல் வாங்கலும் நிகழ் நேரத்தில் இற்றைப்படுத்தப்படுகின்றது. இது தற்பொழுது வங்கியில் எவ்வித கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்ளாத பொதுமக்கள் மத்தியில் வங்கிச்சேவைக்கான வழக்கத்தினைப் பதிய வைக்கின்றது. பெரும் எண்ணிக்கையில் மக்கள் கூடுகின்ற நிகழ்வுகளில் நாம் எமது பிரசன்னத்தினைப் பேணுவதை உறுதிப்படுத்தி அனர்த்த சூழ்நிலைகளிலும் எமது பிரசன்னத்தினை உறுதிப்படுத்துகின்றோம்.

வர்த்தக ரீதியான கடன் வழங்கல்

எமது வர்த்தக ரீதியான கடன் வழங்கலில் நாம் எப்பொழுதுமே போட்டித்தன்மை மிகு வீதங்களை வழங்கி வருகின்றோம். இதற்காக, பாரிய வைப்புத் தளத்தினைக் கொண்டுள்ளமை மற்றும் தொழிற்துறையின் ஜாம்பவானாக இருக்கின்றமை எனும் எமது அனுகூலத்தினை நாம் பயன்படுத்தி வருகின்றோம். காசுப்பாய்ச்சல்களை அடிப்படையாகக் கொண்டு நாம் செயற்திட்டங்களைப் புரிந்து கொள்வதற்கும் செயற்திட்டங்களை மதிப்பிடுவதற்கும் முயற்சித்து வருகின்றோம். மேலும் எந்தவொரு அபாயநேர்வுக்கும் ஈடுகொடுப்பதற்காக நாம் பிணை உறுதிகளை பெற்றுக்கொள்வதிலும் சாதுர்யம் மிக்கவர்களாக இருக்கின்றோம். எமது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் நாம் எமது கடன் அதிகாரிகளின் திறன்களைக் கட்டியெழுப்புவதை வலியுறுத்தி வருகின்றோம். எமது பிராந்தியக் கடன் மையங்களின் மூலமாக நாம் எமது கடன் இயக்கங்களை ஒழுங்குபடுத்தி இருக்கின்றோம்.

2017 ஆம் ஆண்டிலே நாம் ஆரம்பித்த மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சித்திட்டமான இளம் பரம்பரையினரைச் சென்றடைதல் என்கின்ற நிகழ்ச்சித்திட்டம் இரண்டாம் நிலைப் பாடசாலை மாணவர்களுக்கு நிதிப்பொறுப்பின் செய்தியினை எடுத்துச் செல்வதற்காக ஆரம்பிக்கப்பட்டது. இந்த மாணவர்கள் பராயமடையாதோருக்கான சேமிப்புக்கணக்குகளை வைத்துள்ளனர். இதில் இவர்களின் பெற்றோர்களே இவர்களின் எதிர்காலத்திற்காக சேமித்திருக்கிறார்கள். இந்தப் பணத்தினை இவர்கள் 18 வயதினை அடையும் பொழுது மீளப் பெற்றுக்கொள்ள தகுதிபெறுவர் மாணவர்களின் தொழில்விருத்திக்குத் தேவைப்படுகின்ற நிதி ஒழுக்கம் மற்றும் மென்திறன்கள் பற்றி வங்கி முகாமையாளர்களினால் அவர்களிற்கு ஒரு மணித்தியால அமர்வு நடாத்தப்பட்டது. இது தொடர்பாகப் பதின் பருவத்தினருக்கு உறுதியான செய்திகளை வழங்குவதற்காக 100க்கும் மேற்பட்ட முகாமையாளர்கள் செயற்திறன்மிகு பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்றுவிக்கப்பட்டனர். 2017 ஆம் ஆண்டிலே இவ்வாறான 200க்கும் மேற்பட்ட பயிற்சிகள் நடாத்தப்பட்டதுடன் இவ்வாறானா நிகழ்ச்சித்திட்டங்கள் 2018 இலும் தொடரும். புறநிலை நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து செய்திகள் வருகின்ற பொழுது மாணவர்கள் அவற்றினைச் சிறந்த முறையில் உள்வாங்கக்கூடியவர்களாக இருக்கின்றனர் என்பது எமது அனுபவமாக இருக்கின்றது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நலன்கள் பன்முகம் வாய்ந்தவையாக இருக்கின்றன. நிகழ்ச்சித்திட்டம் கூட்டாண்மை சமூகப் பொறுப்பினை (CSR) கொண்டுள்ளது. இதனால் நாம் ஒரு மறுமலர்ச்சிமிகு எதிர்காலத்திற்காக இளம் பருவத்தினரை வளர்த்தெடுக்கின்றோம். எதிர்கால வாழ்நாள் சேமிப்பாளர்களின் புதிய குழுவினை உள்ளீர்ப்பதன் மூலமாக வங்கியின் நீடுறுதித்தன்மையினையும் இது அதிகரிக்கின்றது. செயற்திறன்மிகு தொடர்பாடலாளர்கள் என்கின்ற ரீதியில் எமது முகாமையாளர்களுக்கு அனுபவத்தினை வழங்குவதன் மூலமாக அவர்களின் தனிப்பட்ட விருத்திக்கும் இது பங்களிப்பு வழங்கியுள்ளது.

முன் செல்வதற்கான வழி

எதிர்காலத்தை முன்னோக்கியவாறு நாம் பரந்த கவனக்குவிப்பினைக் கொண்ட பல்வகைமைமிகு மற்றும் மாறி வருகின்ற தேவைகளுக்குச் சேவையாற்றுவதற்காக எமது வியாபார மாதிரியினை பரிணமிக்கச் செய்யவேண்டும். மிலேனியம் தலைமுறையினருக்குச் சேவையாற்றவேண்டிய தேவை எமக்கிருக்கின்ற அதேவேளை நீண்டகாலமாக வங்கியின் மீது விசுவாசமிக்க எமது பாரம்பரிய வாடிக்கையாளர்களை நாம் மறந்துவிடலாகாது. நாம் டிஜிட்டல் மற்றும் மெய்நிலை வங்கிச்சேவைத்துறையில் முன்னணியில் திகழ்ந்து வருகின்ற அதேவேளை பௌதீகக் கிளைகளுக்கும் தொடர்ந்தும் முக்கியத்துவத்தை வழங்கி வருகின்றோம். சிறிய மற்றும் நடுத்தரத் தொழிற்துறையிலும் வியாபார வாய்ப்புக்களிலும் சமூகப் பங்களிப்புகளை ஏற்படுத்துவதிலும் பாரிய சாத்தியங்கள் காணப்படுகின்றன. இவ் வாய்ப்புக்களை நாம் பயன்படுத்த வேண்டும். அதேவேளை சிறந்த வினைத்திறனுடன் கூட்டாண்மைத்துறைக்கும் சேவையாற்ற வேண்டும்.

வங்கி அதன் உற்பத்தி அபிவிருத்தியிலும் வாடிக்கையாளர் சேவையிலும் வாடிக்கையாளர்களை மையப்படுத்தியதாக இருக்கவேண்டும். இந்த இரண்டினதும் முடிவுப் பலாபலன்கள் வாடிக்கையாளர்களின் மகிழ்ச்சியினை நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டும். இதற்கு உதவி வழங்குவதற்கும் வேறு பல தேவைகளுக்கு உதவி வழங்குவதற்கும் எமது சகல உள்நிலைச் செயன்முறைகளும் வினைத்திறனும் செயற்திறனும் மிக்கவையாக இருக்கின்றன என்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும்.

எமக்குப் பாரிய பலமாக இருந்து வருகின்ற மிகச் சிறந்த அணியினை நாம் கொண்டிருக்கின்றோம். எவ்வாறாயினும் நாம் மாறிவரும் சூழ்நிலைகளுக்கும் உருவாகிவரும் சவால்களுக்கும் முகங்கொடுப்பதற்கு அவர்களுக்கு உதவுவதற்காக அவர்களின் திறன்களைக் கூர்மைப்படுத்த வேண்டும். அவர்கள் மேலும் ஊக்கப்படுத்தப்பட்டு பயிற்றுவிக்கப்படுவதன் மூலமாகவே அவர்கள் எமது வளர்ச்சி இயந்திரத்தின் முக்கியமான ஆக்கக்கூறாக மாறமுடியும். எமது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பொருத்தமான முறையில் உலகின் மிகச்சிறந்த தாரதரங்களுக்கு நிகராக வடிவமைக்கப்படல் வேண்டும். முன் செல்கின்ற எமது புதிய வழியில் நாம் வங்கியின் உபாயமார்க்கத் தேவைகளுக்குச் சேவையாற்றுவதற்காக வங்கியின் மனித உறவுகள் நடைமுறைகளை உந்திச்செலுத்தி இருக்கின்றோம்.

ஓர் அரச வங்கி என்கின்ற ரீதியில் நாம் வெறுமனே அடிமட்டத்திலே மாத்திரம் கவனம் குவிக்காமல் மூன்று அடிக் கோடுகளிலே கவனம் குவித்து வருகின்றோம். நாம் நீடுறுதியான அபிவிருத்தி இலக்குகளுக்கான அரசாங்கத்தின் கடப்பாட்டிற்கு உறுதியாக ஆதரவு வழங்கி வருகின்றோம். வங்கி பகமையான அதன் வங்கிச்சேவை மூலமாகவும் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (CSR) முன்னெடுப் புக்களின் மூலமாகவும் தனது பங்களிப்பினை வழங்கும். மேலும் எமது சாதாரண செயற்பாடுகளின் மூலமாகவும் பங்களிப்பு வழங்கப்படும்.

சவாலுக்குட்படுத்தப்பட முடியாத வியாபாரச் சின்னம் என்கின்ற பலத்துடன் சேர்த்து எனக்கு முன்னர் இப்பதவியினை வகித்தவர்களினால் புதிய மீள் சின்னமிடல் எனக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் நான் அதனைக் கொண்டு எந்தவிதமான சந்தேகமுமின்றி எனது மிகவும் அனுபவமிக்க மற்றும் பெறுமதிமிக்க இலங்கை வங்கி அணியுடன் சேர்ந்து 2018 - 2020 ஐ நோக்கிச் செல்வதற்குத் தயாராக இருக்கின்றேன் என்பதுடன் தேசத்தின் வங்கியாளரான உங்களது வங்கி என்றென்றும் முதல் ஸ்தானத்தினைக் கொண்டுள்ள வங்கியாக இருக்கும் என்பதையும் வருகின்ற நாட்களிலும் வருகின்ற வருடங்களிலும் மிகுந்த பெருமிதத்துடன் உங்களுக்குச் சிறப்பாகச் சேவையாற்றும் என்பதையும் எமது அனைத்து நிறுவன நலனில் ஈடுபாடுடையோருக்கு நான் வாக்குறுதியாக வழங்க விரும்புகின்றேன்.

மெச்சுதல்கள்

எனக்கு முன் இப்பதவியினை வகித்த திரு. டி. எம். குணசேகர வழங்கிய உதவிக்காகவும் வழிகாட்டலுக்காகவும் இப்பதவியினைச் சுமூகமாகக் கையளித்தமைக்காகவும் நான் அவருக்கு நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன். தலைவரும் பணிப்பாளர்கள் சபையும் எனக்கு வழங்கிய ஊக்கத்திற்கும் வழிகாட்டலுக்கும் நான் நன்றியுடையவனாக இருக்கின்றேன். வழிகாட்டல்களை வழங்கிய கௌரவ நிதி அமைச்சரையும் கௌரவ தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரையும் அவர்களது சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் பணியாளர்களையும் நான் மறந்துவிடவில்லை. தேவையான ஒழுங்குபடுத்தல் மேற்பார்வைகளை வழங்கியதன் ஊடாக இலங்கை மத்திய வங்கி, கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம் மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு ஆகியன அவற்றின் பங்களிப்பினை வழங்கியுள்ளன. இந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள நிதிக்கூற்றுக்கள் தொடர்பாகத் தனது அவதானிப்புகளை வழங்கியதன் மூலமாக இந்த அறிக்கையினை உரிய காலத்தில் வெளியிடுவதைச் சாத்தியமாக்கிய கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்.

மிக நீண்டகாலமாக எமக்கு விசுவாசமாக இருந்து வருகின்ற எமது வாடிக்கையாளர்களே எமது வளர்ச்சியினையும் மறுமலர்ச்சியினையும் இயலுமாக்கியுள்ளனர். தொழிற்சங்கங்களின் உதவியினையும் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொள்ளும் அதிர்ஷ்டத்தினை வங்கி பெற்றிருக்கின்றது. இத்தொழிற்சங்கங்கள் மூலமாகவே நாம் கட்டற்ற முறையில் இயங்குவது சாத்தியமாகி இருக்கின்றது. மட்டற்ற அர்ப்பணிப்பையும் கடந்த வருடங்களில் வரையறையற்ற ஒத்துழைப்பினையும் எனக்கு வழங்கிய முகாமைத்துவ அணிக்கும் பணியாளர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்.



சனரத் பண்டார
பொது முகாமையாளர்
27 மார்ச் 2018
கொழும்பு

எமது சுற்றுச்சூழலும் எமது செயன்முறையும்

பொருளாதாரத் தோற்றப்பாடு

உலகளாவிய பொருளாதாரம்


2016 ஆம் ஆண்டிலே மந்தமான செயலாற்றுகைக்கு முகங்கொடுத்த உலகப் பொருளாதாரம் 2017 ஆம் ஆண்டிலே ஓரளவு வளர்ச்சியினைக் கண்டது. இப்பொழுது வளர்ச்சியானது 3% இனை அடைந்துள்ளதாக மதிப்பிடப்படுகின்றது. இது முன்னைய எதிர்வுகூறல்களை விடச் சற்று உயர்வானதாகும். உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 75 வீதத்தினால் பிரதிநிதித்துவம் செய்யும் நாடுகள் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் அதிகரித்த வளர்ச்சியினைக் கண்டிருப்பது மகிழ்ச்சி தருவதாகும். 2008ற்குப் பின்னரான நெருக்கடியில் இருந்து உற்பத்தித் திறன் மீளல் அடைவதற்கான சாதகமான அறிகுறிகள் காணப்படுகின்றன. வளர்ச்சியானது பிரதானமாக ஜெர்மனி, ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா, போன்ற நாடுகளால் அடையப்பட்டிருக்கின்ற அதேவேளை பிரேசில், சீனா மற்றும் தென்னாபிரிக்கா போன்ற நாடுகளும் முன்பு எதிர்பார்த்ததை விடச் சிறப்பாகச் செயற்பட்டிருக்கின்றது. வருடத்தின் கடந்த சில மாதங்களின் போது உலகளாவிய வர்த்தகத்திலும் ஓர் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது. முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் பங்களிப்பு வழங்கும் காரணிகள் முதலீட்டினை அதிகரித்து வருவதுடன் சில ஆசிய நாடுகளில் உற்பத்தியின் விளைவுகள் முன்னேற்றமடைந்து வருகின்றன. தற்போது உற்பத்தி செய்யப்படுவதை விட அதிகமாக உற்பத்தி செய்வதற்கான ஆற்றல் குறைவடைந்து வருவதுடன் ஏற்கனவே இது அமெரிக்காவிலும் பல அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களிலும் நடைமுறையில் பூச்சியமாகக் காணப்படுகின்றது. தொழில்வாய்ப்பின்மை வீதமும் மிகவும் முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் நெருக்கடிக்கு முன்னைய மட்டங்களிற்குத் திரும்பியுள்ளது. இருந்தபோதிலும் மையமான பணவீக்கம் தொடர்ந்தும் தாழ்வாகக் காணப்படு-கின்றது. இது பண்டங்களின் விலைகளில் ஏற்பட்ட முன்னைய வீழ்ச்சியின் ஒரு தேக்க விளைவாகும்.

அமெரிக்கப் பொருளாதாரம் 2017ஆம் ஆண்டிலே ஒரு நடுநிலையான வளர்ச்சியான 2.3% இனைப் பதிவு செய்திருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சில நிச்சயமற்ற தன்மைகள் காணப்படுகின்ற போதிலும் பெருநிறுவன வரிகள் மற்றும் தனிப்பட்ட வரிகளில் ஏற்படுத்தப்பட்ட குறைப்புக்கள் பொருளாதாரத்திற்கு ஓர் உந்துசக்தியினை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. யூரோ பிராந்தியத்திற்கான வளர்ச்சியானது 2.4% ஆக இருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஜேர்மனி, இத்தாலி மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகள் உள்நாட்டு மற்றும் புறநிலைக் கேள்விகளினால் அழுத்தம் வழங்கப்பட்டு நன்கு செயற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஐக்கிய இராச்சியப் பொருளாதாரம் Brexit இன் நிச்சயமற்ற தன்மையினால் பாதிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டிலே 1.7% இனால் மாத்திரமே வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் இது மேலும் 2018 இலே 1.5% ஆகக் குறைவடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. சீனப் பொருளாதாரம் எவ்வாறாயினும் 6.8% எனும் அளவிலே நியாயமான அளவு நன்கு செயற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வளர்ச்சியானது அதிகரித்த உள்நாட்டுக் கேள்விகளினால் வலுவூட்டப்பட்டு உலகளாவிய வர்த்தகத்தினை மீண்டும் அடைந்து கொண்டுள்ளது. இந்தியாவும் நாணய மாற்ற முன்னெடுப்பு மற்றும் பண்டங்கள் மற்றும் சேவைகள் வரிகள் ஆகியவற்றினால் ஏற்படுத்தப்பட்ட தளர்ச்சியினைத் தாண்டி 6.7% வளர்ச்சியினை அடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பண்டங்கள் மற்றும் வரிகளின் அறிமுகமானது நீண்ட காலத்திலே நம்பிக்கை தருவதாக அமைந்துள்ளது.


கடந்த இரண்டு வருடங்களில் குறைந்த எண்ணெய் விலைகளினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட எண்ணெய் உற்பத்தி தேசங்கள் 2017 ஆம் ஆண்டின் முடிவின் போது விலைகளின் அறவீடுகள் மூலம் ஓரளவு நிவாரணத்தினைப் பெற்றுக்கொண்டன. இருந்த போதிலும் அவை தொடர்ந்தும் கணிசமான வருமானக் குறைபாடுகளினால் பாதிக்கப்பட்டு வருகின்றன. 2017 ஆம் ஆண்டு டிசம்பரிலே எண்ணெய் விலைகள் பெரலுக்கு 60 டொலர்களைத் தாண்டிய அதேவேளை கடந்த இரண்டு வருடங்களின் விலை உச்சத்தின் போது அவை கடந்த 10 வருடங்களினுள் காணப்பட்ட உயர்ந்த விலையினை விடக் கணிசமான அளவு குறைவாகவே காணப்பட்டன. அந்த உயர்ந்த விலை 2008 இலே 141 டொலராகக் காணப்பட்டது. முன்னோக்கிச் செல்லுகையில், எண்ணெய் ஏற்றுமதிகளில் மிக மோசமாகத் தங்கியுள்ள நாடுகளுக்குப் பொருளாதாரப் பல்வகைமைப்படுத்தல் தொடர்ந்தும் முன்னுரிமையாகக் காணப்படுகின்றது. மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்கா நாடுகள் 1.8% வளர்ச்சியினை அடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மறுபுறத்திலே எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகளின் நடைமுறைக் கணக்குகளுக்கு சார்பளவிலான குறைந்த எண்ணெய் விலைகள் தொடர்ந்தும் ஒரு வரப்பிரசாதமாகக் காணப்படுகின்றன. ஏனைய பண்டங்களின் செயலாற்றுகைகள் சமமற்றவையாகக் காணப்படுகின்றன. உணவு மற்றும் விலையுயர்ந்த உலோகங்களின் விலைகள் ஏறக்குறைய மாறாமல் காணப்படுகின்ற அதேவேளை உலோகங்கள் மற்றும் கனிப்பொருட்களின் விலைகள் 10% - 50% வரை அதிகரித்திருக்கின்றன. குறைந்த வருமானம் பெறும் நாடுகள் அவற்றின் பொருளாதாரத்தினைப் பல்வகைமைப்படுத்தல், நீடுறுதியான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி முன்னேறுதல் மற்றும் சில பண்டங்களின் விலைகளுக்கான மந்த கதியிலான தோற்றப்பாடு உள்ளடங்கலான பல சவால்களுக்கு முகங்கொடுக்கின்றன. மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்காவின் பல நாடுகள் அரசியல் ஸ்திரத்தன்மையின்மையினாலும் சிவில் யுத்தத்தினாலும் பயங்கரவாதத்தினாலும் பாதிக்கப்பட்டிருந்தன. தெற்காசிய நாடுகள் இயற்கை அனர்த்தங்களினாலும் அரசியல் தளம்பல்களினாலும் பலவீனமான வரி வருமானங்களினாலும் பாதிக்கப்பட்டன. ஆப்கானிஸ்தான் போன்ற சில நாடுகள் நிச்சயமற்ற பாதுகாப்புச் சூழ்நிலைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றன.

ஒட்டுமொத்தமாக அதிகரித்த உலகளாவிய வளர்ச்சி உந்தம் காணப்படுவதுடன் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கு 3.9% வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. வளர்ச்சிக்கான இடர் குறுகிய காலத்தில் நடுநிலையானதாகத் தென்படுகின்ற அதேவேளை அது இடைக்காலத்தில் கீழ்நோக்கிய போக்கினையே எத்தனிப்பாகக் காட்டுகின்றது.

உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதங்கள்



மசகு எண்ணெய் விலை ($/bbl) – சாதாரண விலை



இலங்கைப் பொருளாதாரம்

இலங்கைப் பொருளாதாரம் இந்த வருடம் குறிப்பாகப் பல தடங்கல்களுக்கு முகங்கொடுத்தது. குறிப்பாக வெள்ளம் மற்றும் வறட்சி உள்ளடங்கலான மோசமான காலநிலைகளுக்கு முகங்கொடுத்ததுடன் இது வருடத்தின் உண்மையான எதிர்வுகூறல்களின் கீழ்நோக்கிய மறுதலைகளையே விளைவாக ஏற்படுத்தியது. வருடத்திற்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.1% வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை விவசாயத்துறையும் காலநிலை மாற்றங்களினால் பாதிக்கப்பட்டது. அத்துடன் கைத்தொழிற்துறை மற்றும் சேவைகள் சார்பளவில் சிறப்பாகக் காணப்பட்டன. குறிப்பாக நிதிச்சேவைகள், தொலைத்தொடர்பு மற்றும் வர்த்தகம் ஆகியவற்றின் செயலாற்றுகைகள் சிறப்பானவையாகக் காணப்பட்டன.

வருடத்தின் போது நாட்டின் போட்டித்தன்மைமிகு நன்மைகளைப் பயன்படுத்தி முதலீடுகளைக் கவர்ந்திழுப்பதற்கும் ஏற்கனவே இருக்கின்ற முதலீட்டாளர்களை நேரடியாகப் பயன்படுத்தியும் அவர்களின் புறநிலை வலையமைப்புகளின் நன்மைகளைப் பயன்படுத்தியும் மேலதிக முதலீடுகளைக் கொண்டுவருவதற்கும் புதிய உபாயமார்க்கங்கள் அமுல்படுத்தப்பட்டன. வெளிநாட்டு நாணய ஒழுங்குவிதிகள் முதலீட்டுச் சூழலை மேம்படுத்துவதற்காக புதிய நாணயச் சட்டத்தின் மூலம் தாராளமயமாக்கப்பட்டன.


2017 ஆம் ஆண்டின் போது வருடத்தில் இருந்து வருடத்திற்கான இலங்கை ரூபாவின் பெறுமதியானது அமெரிக்க டொலருக்கு எதிராக 2% இனால் பெறுமானத்தேய்வு அடைந்தது. இறக்குமதிகள், கடன்சேவைக் கொடுப்பனவுகள் மற்றும் வெளிநாட்டவர்கள் அவர்களது முதலீடுகளை அரசாங்கப் பிணையங்களில் முதலீடு செய்தல் காரணமாக ஆரம்பத்தில் வெளிப்பாய்ச்சல்கள் அதிகரித்தன. எவ்வாறாயினும் பின்னர் நாணயத்தின் மீதான அழுத்தம், கொழும்பு பங்குச்சந்தை பரிவர்த்தனை நிலையத்திற்கு வந்த தேறிய உட்பாய்ச்சல்களின் காரணமாகக் குறைக்கப்பட்டதுடன் அரசாங்கப் பிணையங்கள் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளையும் புதுப்பித்தன. 2017 டிசம்பர் மாதத்திலே சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியின் நான்காவது தொகுதியினைப் பெற்றுக்கொண்ட காரணத்தினால் நாணயப் பெறுமானத்தேய்வு மேலும் இலகுவாக்கப்பட்டதுடன் அரசாங்கத்தின் சர்வதேச முறிகளின் விநியோகம் காரணமாகவும் இது இலகுவாக்கப்பட்டது. வருடத்தின் போது நாட்டின் கடன் தரமிடலானது சாதகமாகத் திருத்தப்பட்டது. Fitch தரமிடலானது அதன் தரமிடலை B+ பாதகநிலையிலிருந்து உறுதியான நிலையாக 2017 இல் தரமிட்ட அதேவேளை S&P தரமிடலானது B+ பாதகநிலையிலிருந்து உறுதியான நிலையாக 2017 நவம்பர் இல் தரமிட்டது.

எமது ஏற்றுமதி வருமானம் 2017 ஆம் ஆண்டிலே 11.4 பில்லியன் அமெரிக்க டொலரினைப் பெற்றுகொடுத்தது. இது 2016 ஆம் ஆண்டின் எண்ணிக்கையினை விட 10% அதிகரிப்பாகும். ஐரோப்பிய சங்கத்தினால் GSP+ மீண்டும் வழங்கப்பட்டமையும் ரூபாவின் பெறுமானத்தேய்வும் பங்களிப்பு வழங்கிய காரணிகளாகக் காணப்பட்டன. எவ்வாறாயினும் ஏற்றுமதிகளில் காணப்பட்ட அதிகரிப்புகள் மேலதிக இறக்குமதிகளினால் சமப்படுத்தப்பட்டன (9% அதிகரிப்பு). இதற்கான காரணம் சாதகமற்ற காலநிலையும் புலம்பெயர் தொழிலாளர்களின் பணஅனுப்புகையில் ஏற்பட்ட வீழ்ச்சியுமாகும். இவை இரண்டினதும் தாக்கமானது மிக மோசமான சென்மதி நிலுவை நிலைமைக்கு இட்டுச்சென்றது. தொழிலாளர்களின் பணஅனுப்புகைகள் மத்திய கிழக்கில் நிலவுகின்ற பொருளாதாரச் சூழ்நிலைகள் மற்றும் புவியரசியல் பதற்றங்களின் காரணமாகப் பாதகமாகப் பாதிக்கப்பட்டிருந்தன.


இறுக்கமான பணக்கொள்கை மற்றும் தாமதமடைந்த கடன் ஆகியவற்றினைத் தாண்டியும் பணவீக்கமானது வருடத்திலிருந்து வருடத்திற்கு 2017 இல் 7.3% ஆகக் காணப்பட்டது. இதற்கான பங்களிப்பு வழங்கிய காரணிகளாக மோசமான காலநிலைமைகள் அமைந்திருந்தன. இது உணவு விலைகளினை அதிகரித்து சர்வதேச பண்டங்களின் விலைகளையும் அதிகரித்து ரூபாவின் பெறுமதி இறக்கத்தினை ஏற்படுத்தி மறைமுகமான வரிகளின் மேல்நோக்கிய திருத்தங்களுக்கும் இட்டுச்சென்றது. எவ்வாறாயினும் நெகிழ்வுத்தன்மை மிக்க பணவீக்க இலக்குவைப்புச் சட்டகத்திற்கு இடைமாற்றத்தினை ஏற்படுத்தியமையானது எதிர்காலத்திலே பணவீக்கத்தினைச் சிறந்த முறையில் கட்டுப்படுத்துவதை வசதிப்படுத்தும் (FIT). FIT யின் கீழே மத்திய வங்கியானது பணவீக்க வீதத்தினை 4 - 6% பேணுவதை இலக்கு வைக்கும். நாட்டின் மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்கள் 2016 முடிவின்போது 6 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்து 2017 முடிவின் போது 7.9 பில்லியன் டொலராக அதிகரித்தன.

2017 ஆம் ஆண்டின் போது பொருளாதார வளர்ச்சி பொதுவாக மந்தகதியில் காணப்பட்ட போதிலும் அதே வருடத்தில் நிதித்துறை உறுதியான செயலாற்றுகையைக் காட்டியது. இது மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 9% ஆகக் காணப்பட்டது. வங்கிச்சேவைத் துறையின் வரிக்கு முந்திய இலாபமானது 2017 இல் 194.7 பில்லியன் ரூபாவினை அடைந்து 2016 ஆம் ஆண்டின் போது வருடத்திலிருந்து வருடத்திற்கான 18% வீத அதிகரிப்பினைக் காட்டியது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம்



அமெரிக்க டொலர் இலங்கை ரூபா நாணயமாற்று வீதங்கள் - மாதம் முடிவு (2017)



வங்கிச்சேவைத் துறை

2017 ஆம் ஆண்டின் போது பொருளாதார வளர்ச்சி பொதுவாக மந்தகதியில் காணப்பட்ட போதிலும் அதே வருடத்தில் நிதித்துறை உறுதியான செயலாற்றுகையைக் காட்டியது. இது மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 9% ஆகக் காணப்பட்டது. வங்கிச்சேவைத் துறையின் வரிக்கு முந்திய இலாபமானது 2016 இல் 194.7 பில்லியன் ரூபாவினை அடைந்து 2016 ஆம் ஆண்டின் போது வருடத்திலிருந்து வருடத்திற்கான 18% வீத அதிகரிப்பினைக் காட்டியது. 2016 ஆம் ஆண்டின் போது தேறிய வட்டி வருமானமானது 12% வீதத்தினால் அதிகரித்து 341.6 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் முடிவின் போது உள்ளவாறான மொத்தத் தேறிய சொத்துக்கள் 10.3 ரில்லியனாகக் காணப்பட்டதுடன் இது வருடத்திற்கு முன்பு இருந்ததை விட 14% வீதத்தினால் ஏற்பட்ட அதிகரிப்பாகும். ஏனைய துறைகளிலும் வங்கிச்சேவைத் துறையானது சொத்தின் தரம், மூலதன மற்றும் திரவத்தன்மை மட்டங்கள் நியதிச்சட்டத்தின் ஆகக் குறைவான மட்டங்களிற்கு மேல் பேணப்பட்டமை ஆகியவற்றுடன் மீண்டெழும் தன்மையினைக் காட்டின. நிதியிடலுக்கான அடிப்படை மூலமாக வைப்புக்கள் காணப்பட்டன. இவை 2017 ஆம் ஆண்டிலே 18% வீதத்தினால் வளர்ச்சியடைந்து 7.4 டிரில்லியன் ரூபாவாகக் காணப்பட்டன. வருடத்தின் போது கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் 16% இனால் வளர்ச்சியடைந்து 6.4 டிரில்லியன் ரூபாவினை எட்டின.


உயர் வட்டி வீதங்களைத் தாண்டி அதிகரிப்பானது சகல பொருளாதாரத் துறைகளினூடும் காணப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியினால் வருடத்தின் போது எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் நிதித்துறையின் வளர்ச்சியினை உந்திச்செலுத்துவதற்கு உதவின. இவற்றினுள் வெளிநாட்டு நாணயமாற்றச் சட்டங்கள் அமைந்திருந்தன. இது வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கலினைத் தாராளமயமாக்கியதுடன் வங்கித்துறை சாரா நிதி நிறுவனங்களினை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டகத்தினையும் வலுப்படுத்தியது. வருடத்தின் போது தொழிற்துறையானது பாசல் III புதிய ஒழுங்குவிதிகளின் அமுல்படுத்தலுக்காகத் தன்முனைப்பான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருந்தது. இது மூலதனம் மற்றும் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளை உறுதிப்படுத்துவதைத் தேவைப்படுத்தியது. இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 கணக்கீட்டுத் தராதரங்களின் அமுல்படுத்தலுக்காகத் தயார்படுத்தலில் ஈடுபட்டுள்ள தொழிற்துறை சேத ஒதுக்கங்களில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்.


இலங்கை மத்திய வங்கி வட்டி வீதங்களை உயர்வாகப் பேணுவதன் மூலம் நாணயக் கொள்கையிலே இறுக்கமான பிடியினைக் கொண்டிருந்தது. நியம வைப்பு வசதி விகிதம் (SDFR) மற்றும் நியம கடன் வழங்கல் வசதி (SLFR) ஆகியவை 2017 மார்ச் மாதத்திலிருந்து முறையே 7.25% மற்றும் 8.75% இற்கு 25 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரிக்கப்பட்டன.

நிதித்துறை நவீனமயமாக்கல் கருத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி நிறுவனத்தினால் நிதி வழங்கப்பட்ட மேலதிக மறுசீராக்கல்கள் நிதித்துறையிலே அமுல்படுத்தப்படும். ஐந்து வருடங்களுக்குப் பரவியுள்ள இந்தக் கருத்திட்டத்தின் கீழ் ஒழுங்குபடுத்தல் சட்டகங்கள் மற்றும் நிதி உட்கட்டமைப்புக்கள் நவீனமயப்படுத்தப்படும். இது சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சியாண்மைத் துறையும் சிறு தொழில் முயற்சியாளர்களும் தாக்குப்பிடிக்கக்கூடிய முறையில் நிதியினை அணுகுவதற்கான அதிகரித்த அணுகற் தன்மையினை வழங்கும்.


வங்கிச்சேவைத் துறை இலாபமீட்டும் தன்மை




வங்கிச்சேவைத் துறைக் கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவுகளின் வளர்ச்சி



வங்கிச்சேவைத் துறைச் சொத்துக்களின் வளர்ச்சி



வங்கிச்சேவைத் துறை வைப்புக்களின் வளர்ச்சி





பெறுமதி சேர்க்கப்பட்ட கூற்று

வங்கியின் பெறுமதி உருவாக்கம் மற்றும் பிரதான பங்கீடுபாட்டாளர் குழுமங்களுக்கிடையில் பெறுமதியினை ஒதுக்கீடு செய்தல் ஆகியவற்றின் பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது:

	2017 ரூபா மில்லியன்	2016 ரூபா மில்லியன்	மாற்ற %
பெறுமதி சேர்க்கை			
வங்கிச் சேவைகளை வழங்குவதனால் ஈட்டப்பட்ட வருமானம்	185,427	147,554	26
சேவைகளின் செலவு	(102,502)	(71,030)	44
வங்கிச் சேவைகளினால் சேர்க்கப்பட்ட பெறுமதி	82,925	76,524	8
வங்கிச் சேவை சாராத வருமானம்	3,784	6,568	(42)
கடன்கள் மற்றும் ஏனைய இழப்புக்களுக்கான சேதம்	(9,341)	(4,397)	112
பெறுமதி சேர்க்கை	**77,368**	**78,695**	**(2)**
பெறுமதி ஒதுக்கீடு			
ஊழியர்களுக்கு			
சம்பளங்கள், ஊதியங்கள் மற்றும் ஏனைய நலன்கள்	16,996	16,844	1
அரசாங்கத்திற்கு			
இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட பங்கிலாபங்கள்	12,346	17,346	(29)
வருமான வரி	8,929	6,452	38
நிதிச்சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி மற்றும் நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி	7,249	6,265	16
	28,524	30,063	(5)
சமுதாயத்திற்கு			
சமூகப்பொறுப்புக் கருத்திட்டங்கள	128	135	(5)
வெளியக நிதி வழங்குநர்களுக்கு			
ஏனைய கடன் பெறல்கள் மீதான வட்டி	15,714	18,239	(14)
விநியோகிக்கப்பட்ட கடன்களின் மீதான வட்டி	5,014	4,571	10
	20,728	22,810	(9)
விரிவாக்கம் மற்றும் வளர்ச்சிக்கு			
தேக்கி வைக்கப்பட்ட இலாபம்	8,966	7,445	20
பெறுமானத்தேய்வு மற்றும் காலத்தேய்மானம்	1,925	1,453	32
பிற்போடப்பட்ட வரிவிதிப்பு	101	(55)	(286)
	10,992	8,843	24
	77,368	**78,695**	**(2)**

பெறுமதி சேர்க்கை பரம்பல்





சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி

நிறுவனம் ஒன்றினது சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதியானது கணக்கீட்டு இலாபத்தினை விட அதன் நிதிச்செயலாற்றுகையினைப் பற்றிய சிறந்த குறிகாட்டியினை வழங்குகின்றது (EVA). EVA நிறுவனமொன்றினது ஈட்டல்களைப் நிறுவன நலனில் அக்கறையுடையவர்களுக்கான மிகக்குறைவாகத் தேவைப்படுத்தப்பட்டுள்ள திரும்பல்களுடன் அதேபோன்ற இடர்களைக் கொண்டுள்ள முதலீட்டுக்காக ஒப்பிடுகின்றது. வங்கியின் EVA 2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறாக 13,469 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இதுவே 2016 டிசம்பர் 31 இல் உள்ளவாறாக 15,761 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

	2017 ரூபா மில்லியன்	2016 ரூபா மில்லியன்	மாற்ற %
முதலீடு செய்யப்பட்ட மூலதனம்			
சராசரி பங்குடைமையாளர் நிதிகள்	102,002	87,167	17
சேர்க்க: கடன் நட்டங்களுக்கான திரட்டிய ஒதுக்கங்கள் மற்றும் சேதங்கள் மற்றும் ஏனைய இழப்புக்களுக்கான ஒதுக்கங்கள்	57,179	47,832	20
	159,181	**134,999**	**18**
முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் மீதான திரும்பல்			
வரி விதிப்பின் பின்னரான இலாபம்	21,312	24,791	(14)
சேர்க்க: கடன் நட்டங்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான ஒதுக்கங்கள்	9,341	4,397	112
கழிக்க: பதிவளிக்கப்பட்ட கடன்கள்	(1,181)	(31)	3,709
முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் மீதான மொத்தத் திரும்பல்	29,472	29,157	1
முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் அமையச்செலவு*	(16,003)	(13,396)	19
சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி	**13,469**	**15,761**	**(15)**

சராசரி நிறையளிக்கப்பட்ட 12 மாத திறைசேரி உண்டியல் வீதம் 2017 - 10.05% (2016 - 9.92%) இற்கு அமைவாக கணிக்கப்பட்டது.

வியாபார மாதிரி



நிதி மூலதனம்



உற்பத்தி மூலதனம்



புலமை மூலதனம்

உள்ளீடுகள்

வங்கியின் வியாபாரச் செயன்முறையின் உள்ளீடுகள் வெவ்வேறு வடிவங்களிலான மூலதனங்களாகும் அல்லது பெறுமதிகளின் தொகுதியாகும். இந்த மூலதனங்களில் நிதி மூலதனம், உற்பத்தி மூலதனம் மற்றும் புலமை மூலதனம் ஆகியவை வங்கிக்குச் சொந்தமான உள்நிலை மூலதனங்களாகும். ஏனைய மூலதனங்களான மனித மூலதனங்கள், சமூக மூலதனங்கள், உறவு மூலதனங்கள் மற்றும் இயற்கையான மூலதனங்கள் வங்கிக்குப் புறநிலை ஆனவை.

- பங்கு மூலதனம் **ரூபா 20 பில்லியன்**
- மொத்த உரிமை மூலதனம் **ரூபா 111.2 பில்லியன்**
- மொத்த வைப்புக்கள் **ரூபா 1.5 பில்லியன்**
- மொத்த கடன்பெறல் **ரூபா 265.2 ரில்லியன்**

- பௌதீக வழிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் **ரூபா 1.9 பில்லியன்**
- பாரிய புத்தாக்கங்கள் **இரண்டு கிளைகள்**
- வருடத்தின் போது நிலை மாற்றப்பட்ட கிளைகள் **97**
- தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு **ரூபா 1.7 பில்லியன்**

- வியாபாரச் சின்னத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு **ரூபா 1.2 பில்லியன்**
- உறுதியான ஆளுகைக் கலாசாரம்
- **81,000 வருடங்களுக்கு** மேற்பட்ட நிறுவனமயமாக்கப்பட்ட அறிவு

செயன்முறைகள்

கூட்டாண்மை செயலாட்சி மற்றும்

நிதித் தேவைகளைக்கொண்டுள்ள பல்வேறு தரப்புக்களுக்கிடையில் ஓர் இடைநிலை நிறுவனமாக வங்கி செயற்படுகின்றது - வைப்பாளர்கள், கடன் பெறுனர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள், பண அனுப்புகை மேற்கொள்ளும் புலம்பெயர்ந்தோர் மறறும் அவர்களின் பயனாளிகள் போன்றோர் அவர்களில் சிலர். குறுகிய கால வைப்புக்களை இடைக்கால மற்றும் நீண்ட காலக் கடன்களாக மாற்றுவதன் மூலம் முதிர்ச்சிகளை வங்கி நிலை மாற்றுகின்றது.

கடன் பெறுனர்கள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து பெற்ற வட்டிக்கும் வைப்பாளர்களுக்கும் கடன் வழங்குநர்களிற்கும் வழங்கப்பட்ட வட்டிக்குமிடையிலான வித்தியாசம் வருடத்திற்கான தொழிற்பாட்டு வருமானத்தின் 78% விழுக்காடாகக் காணப்பட்டது. (2016 இல் 75% ஆகும்) இதுவே தேறிய வட்டி வருமானமாகும். கட்டண அடிப்படையிளான சேவைகள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் மூலம் மிகுதி 22% பெறப்பட்டது.

வெளியீடுகள்

வியாபாரச் செயன்முறையின் காரணமாக பல்வேறு வடிவங்களில் உருவாக்கப்படுகின்ற பெறுமதியே வெளியீடுகள் ஆகும்.

- வரிக்கு பிந்திய இலாபம், **ரூபா 21.3 பில்லியன்**
- செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் **ரூபா 12.3 பில்லியன்**
- சராசரி உரிமையாளர்மையின் மீதான திரும்பல் (ROAE) மற்றும் சராசரி சொத்துக்களின் மீதான திரும்பல் (ROAA) **20.9% மற்றும் 1.7%**

- கிளைகளின் வலையமைப்பு **578**
- வரையறுக்கப்பட்ட சேவை வழங்கல் நிலையங்கள் **48**
- தன்னியக்க ரெலர் இயந்திரங்கள் **764**
- பணம் வைப்பிடும் இயந்திரங்கள் **168**
- பிராந்திய கடன் நிலையங்கள் **14**
- சிறிய நடுத்தர முயற்சியாண்மைகள் நிலையங்கள் **15**
- வாகனக் கிளைகள் **02**

- செயன்முறை மேம்பாடுகள்
- **பில்லியன் 40.6 ரூபா** வியாபாரச் சின்ன பெறுமதியினைக் கொண்ட இலங்கையின் முதல் தர வர்த்தக நாமம்

பலாபலன்கள்

பல்வேறுபட்ட மூலதனங்களுக்காகவும் முதன்மைச் செயற்திறன் குறிகாட்டிகளுடன் தொடர்புபடுத்தி கணிப்பிடப்பட்ட வெளியீடுகளின் பெறுபேறுகளே பலாபலன்களாகக் காணப்படுகின்றன.

- சொத்துக்கள், இலாபமீட்டும் தன்மை, வைப்புக்கள், கடன்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கையில் **1 ஆம் தர வங்கி**
- பங்கிலாபங்கள், வரிகள் மூலமாக அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட தொகை **ரூபா 28.5 பில்லியன்**
- வாடிக்கையாளர்களுக்கு வட்டியாக செலுத்தப் பட்டது வட்டி **ரூபா 92.2 பில்லியன்**
- தொகுதிக்கடன் வைத்திருப்போருக்கு வட்டியாகச்செலுத்தப்பட்டது **ரூபா 5.0 மில்லியன்**
- தேசிய உட்கட்டமைப்பு செயற்திட்டங்களில் நிதியிடுவதற்கு அரசாங்கத்திற்கு உதவுவதற்காக அரசாங்க பிணையங்களில் ரூபா 516.5 பில்லியன் முதலீடு செய்யப்பட்டது.

- நாட்டின் மிகப் பாரிய நிதிநிறுவனம்
- வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு வழிகளிலான இருப்பினை வழங்குகின்ற பல்வேறு வழிகளைக் கொண்ட வலையமைப்புகளுடனான சேவை வழங்கிகள் 1,589
- வாழ்வின் எல்லா தேவைகளுக்கும் பொருத்தக்கூடிய சமநிலையான கிளைகள் மற்றும் டிஜிட்டல் விநியோக வழிகளைக் கொண்டுள்ளது.

- முதல் வகுப்பு ஆளுகை நடவடிக்கைகளைக் கொண்ட வங்கி
- இயைபுறல் மற்றும் வெளிப்படைத் தன்மைக்கான கலாசாரம்
- நாட்டின் உறுதியான வியாபாரச் சின்னம்





மனித மூலதனம்

- 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்ட ஊழியர்களின் எண்ணிக்கை **1,336**
- புதிய ஆட்சேர்ப்புக்கள் **534**
- பதவி உயர்வுகளின் எண்ணிக்கை **1,831**
- பயிற்சியளித்தல் மணித்தியாலங்கள் **11,884**
- பயிற்சிகளின் செலவீனம் **ரூபா 322 மில்லியன்**

சமூக மற்றும் உறவு மூலதனம்

- "B app" செயலிக்கான அறிமுகம்
- ஒன்லைன் வங்கிச்சேவைத் தளத்தினை மீள ஆரம்பித்தல்
- "மிதுரு" நுண் கடன் திட்டத்திற்கு **ரூபா 237.2 மில்லியன்** வழங்கியமை

இயற்கை மூலதனம்

- நீடுறுதித்தன்மை அலகினை உருவாக்கியமை
- வருடத்தின் போது சூரியக் கலங்கள் பொருத்தப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை **14**
- வங்கிக்கான **சூழல் மற்றும் சமூக முகாமைத்துவ முறைமை** (ESMS) **கொள்கை உருவாக்கப்பட்டது**
- கிளை வலையமைப்புகளுக்கு பசுமை வங்கிச்சேவைக் கருத்தியலின் அறிமுகம்

எவ்வாறாயினும் வங்கியானது இம்மூலதனங்களை அதன் பெறுமான உருவாக்கச் செயன்முறையிலே பயன்படுத்துகின்றது. வியாபாரச் செயன்முறை நடைபெறும் பொழுது மூலதனங்கள் பயன்படுத்தப்பட்டு, நிலை மாற்றப்பட்டு, புதிய மூலதனங்கள் விளைவாக உருவாக்கப்படுகின்றன.

உள்ளீடுகள்

இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு

எவ்வாறாயினும் ஓர் அரச வங்கியாக இருக்கின்ற காரணத்தினாலும் வங்கியானது வெறுமனே வர்த்தகத் தொழில்முயற்சி அல்லாமல் இது ஒரு சமூகத் தொழில்முயற்சியாகவும் காணப்படுகின்றது. இதற்கமைய சமூகத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் வழங்கப்படும் மரபு ரீதியான பலாபலன்களைத் தாண்டி விரும்பப்படுகின்ற பெறுபேறுகளை உருவாக்க வேணண்டிய அதன் பொறுப்புக்களை பற்றிய பிரக்ஞையுடன் வங்கியானது உகந்த அளவில் தேறிய வட்டி வருமானத்தினைப் பேணி வருகின்றது.

செயன்முறைகள்

- ஊழியர்களுக்கான வெகுமதி **ரூபா 17 பில்லியன்**
- ஊழியர் ஒருவருக்கான இலாபம் **ரூபா 4 மில்லியன்**
- **7,587** ஊழியர்களைக் கொண்ட ஊக்கப்படுத்தப்பட்ட குழு

- தொடக்கப்பட்ட புதிய வைப்புக் கணக்குகளின் எண்ணிக்கை **548,630**
- வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் **ரூபா 1.2 ட்ரில்லியன்**. இவற்றுள் சிறிய நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்களிற்கு **ரூபா 60 பில்லியன்** வழங்கப்பட்டுள்ளது.
- **859** ஒன்றுக்கொன்று உறவினைக் கொண்ட வங்கிகள்
- **13 மில்லியன்** வாடிக்கையாளர்கள்

- கெக்கிராவ கிளைக்கு இலங்கை பசுமைக் கட்டிட சம்மேளனத்தினால் பசுமைக் கட்டிட தங்க விருது
- டிஜிட்டல் மயமாக்கல் செயன்முறைகளின் மூலம் சேமிக்கப்பட்ட காகிதங்கள் 259,892 A4 தாள்கள்
- புதுப்பிக்கத்தக்க சக்திக்கான சில்லறை கடன்கள் **ரூபா 640.6 மில்லியன்**
- சூரியசக்தி பிறப்பாக்கம் 515 kWh
- சுற்றுச்சூழல் தூய்தாக்கலுக்காக பரிசீலிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை **362** (சில்லறைத் துறைக்கு மட்டும்)

வெளியீடுகள்

- அதி சிறப்பானதொழில் விருத்தி வாய்ப்புக்கள்
- ஊழியர் புரள்வு வீதம் **0.3%**

- மிகப் பெரிய வாடிக்கையாளர் தளத்தைக் கொண்டுள்ள வங்கி
- நீடுறுதியான அபிவிருத்தி இலக்குகளுக்கான கடப்பாடு
- நிதித்துறை உறுதித்தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான பங்களிப்பு
- ஒருங்கிணைக்கப்பட்ட விநியோகித்தர் சங்கிலி
- விநியோகத்தர் வெற்றி மற்றும் வளர்ச்சி
- திருப்தியடைந்த மற்றும் வளர்ச்சிய-டைகின்ற வாடிக்கையாளர் தளம்
- பரந்த தொடர்பாளர் நிறுவனங்களுடனான தொடர்புகளைக் கொண்டுள்ள இலங்கையின் வங்கி

- சூரியசக்திக்கு மாற்றப்பட்டுள்ள கிளைகளின் எண்ணிக்கை **20**
- **2%** ஆல் எரிசக்தி குறைப்பனவு
- காகித பாவனை குறைப்பு

பலாபலன்கள்

வங்கிச்சேவை முறைமையானது எந்தவொரு தேசத்தினதும் பொருளாதாரத்தில் முக்கியமான-தொரு வகிபாத்திரத்தை வகிக்கின்றது. ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் பாதையினைத் திசைதிருப்பி சரியான வழியில் செலுத்துவதும் வியாபாரங்களின் சக்கரங்களைச் சுழல வைப்பதும் வங்கிகளே ஆகும். இலங்கை வங்கியின் பிரதான வியாபாரச் செயன்முறை ஏனைய வங்கிகளைப் போன்று ஒரு நிதிசார் இடை நிறுவனமாகச் செயற்படுவதேயாகும். சார்பளவிலே இடர் ஏற்படுவதை விரும்பாத தனிநபர்களினது அல்லது அமைப்புக்களினது சேமிப்புக்களிலிருந்து வங்கி பணத்தினைப் பெறுகின்றது. அதனை வங்கி பாதுகாப்பு மற்றும் திருப்திகரமான மீளச்செலுத்துகை எனும் வாக்குறுதியுடனேயே பெற்றுக் கொள்கின்றது. இவ்வாறான சேமிப்புக்கள் பின்னர் தனிநபர்களோ அல்லது அமைப்புக்களோ தாக்குப்பிடிக்கக்கூடியது என எண்ணுகின்ற வீதங்களில் அவர்களுக்குக் கடனாக வழங்கப்படுகின்றது. இதனால் வங்கிக்கு நியாயமான இலாபம் கிடைப்பதும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

அடிப்படைச் செயன்முறையானது ஏனைய முக்கியமான கரிசனைகளையும் கொண்டு வருகின்றது. வங்கிக்கு கடன் வழங்குபவர்கள் கடனினை வழங்குகின்ற காலக்கெடுவும் வங்கியிலிருந்து கடன் பெறுபவர்கள் கடனினைப் பெறுகின்ற காலக்கெடுவும் பொதுவாக வித்தியாசப்படுகின்றன. வகை மாதிரியாக கடன்களினைப் பெறுவது குறுகிய காலமாக இருக்கின்ற அதேவேளை கடனினை வழங்குவதானது நீண்ட காலத் தவணையினைக் கொண்டதாக இருக்கின்றது. வங்கியானது கொடுப்பனவுகளைச் செலுத்தவேண்டிய நேரம் வரும்போது அவற்றினைச் செலுத்துவதற்கு நிதிகள் இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு அதன் காசுப் பாய்ச்சல்களை மிகவும் சாதூர்யமான முறையில் பொருத்தவேண்டும். வங்கிச்சேவை வியாபாரமானது உள்ளார்ந்த இடர்களைக் கொண்டுள்ளது. அதாவது கடன் பெற்றவர்கள் கடனினை உரிய காலத்தில் செலுத்தத் தவறுவதால் ஏற்படுகின்ற இடர்கள் அல்லது வட்டிவீதங்கள் ஏற்றவிறக்கம் அடைகின்ற இடர்கள் என்பன அவையாகும். இவற்றிற்கு அப்பால் பேரண்டப் பொருளாதார நிகழ்வுகள் போன்ற ஒட்டுமொத்தத் தொழிற்துறையிலே அல்லது ஒட்டுமொத்தப் பொருளாதாரத்திலே பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய பரந்த ரீதியான இடர்களும் காணப்படுகின்றன. எனவே இடர்களையும் திரும்பல்களையும் கவனமாகச் சமநிலைப்படுத்துவது மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. வியாபாரத்தின் உள்ளார்ந்த இடர்களை ஆளுகை செய்கின்ற செயல்விதிகள் வங்கியின் ஆளுகைக் கட்டமைப்பினுள் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. வங்கியானது நன்கு வரையறை செய்யப்பட்ட இடர் எல்லைகளைக் கொண்டுள்ளது. இந்த எல்லையே வங்கி இடரினை எடுப்பதற்கு விரும்புகின்ற மட்டத்தினைக் குறிப்பிடுகின்றது. கடன் வழங்கல் மற்றும் முதலீட்டு உபாயமார்க்கங்கள் ஆகியவை இந்த இடர் எல்லைக்கு ஏற்பவே வடிவமைக்கப்படல் வேண்டும்.

வங்கியானது ஏனைய சில குறிப்பிட்ட சேவைகளையும் வழங்குகின்றது. இவை வெளிநாட்டு நாணய வர்த்தகம் போன்ற கட்டண அடிப்படையிலான செயற்பாடுகளாகும். இவை கடன் வழங்கல் நிதிகளைச் சம்பந்தப்படுத்துவதில்லை. நாட்டினுள் பண வைப்புச் செய்யப்படுகின்ற வெளிநாட்டு நாணயங்களின் 40% இற்கு மேற்பட்ட தொகையினை வங்கியே கையாளுகின்றது. இதன் மூலம் நாம் எம் புலம்பெயர் மக்களுக்கும் சேவையினை நிறைவேற்றுகின்றோம். எமது வியாபார முதலீட்டுத் தொகுதி பாரிய விழுக்காட்டிலான திறைசேரி முறிகளையும் கொண்டுள்ளது. இவை உயர்பாதுகாப்புமிக்க பிணையங்களாக இருக்கின்ற காரணத்தினால் இவை இடரற்ற முதலீடுகளாகக் காணப்படுவதுடன் மூலதனத் தேவைப்பாட்டிலும் இவை தாக்கத்தினை ஏற்படுத்துவதில்லை.

அரசுக்குச் சொந்தமான நிறுவனம் என்ற ரீதியிலே இலங்கை வங்கி சில குறிப்பிட்ட சமூகப் பொறுப்புக்-களையும் கொண்டுள்ளது. எனவே கணக்கீட்டு இலாபங்கள் என்கின்ற குறுகிய கவனக்குவிப்புடன் இலங்கை வங்கிக்கு இயங்க முடியாது. மாறாக வங்கியானது உச்சபட்ச திரும்பல்களைத் தேடுவதற்கான உபாயமார்க்கத்தினை கைக்கொள்ள வேண்டும் அத்துடன் வரத்தக அம்சத்தினையும் சமூகத் திரும்பலையும் சமநிலைப்படுத்த வேண்டும். இந்தச் சமநிலைப்படுத்தலுக்கான ஓர் அறிகுறியாக ஏனைய அனைத்து வங்கிகளையும் விட எமது தேறிய வட்டி எல்லையானது குறைவாகப் பேணப்படுவதற்கு நாம் செயற்படுவது அமைந்துள்ளது. வங்கியின் உபாயமார்க்கத்தின் இதயமாக நீடுறுதித்தன்மை காணப்படுகின்றது. பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் விழுமியங்களை உள்ளடக்கிய நீடுறுதியான அபிவிருத்தி இலக்குகள் எமது சகல உற்பத்திகள், சேவைகள், செயற்பாடுகள் மற்றும் செயன்முறைகளில் கரிசனைக்குரிய விடயங்களாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. எமது நேரடி இயக்கங்களில் மாத்திரம் நீடுறுதித்தன்மை மேம்படுத்தப்படாது எமது பெறுமதிச் சங்கிலியூடாகவும் இவை மேம்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு நீடுறுதியான அபிவிருத்தி இலக்கினையும் நாங்கள் கவனங்குவிக்கப்பட்ட முன்னெடுப்புடன் தனித்தனியாகக் கையாளுகின்றோம். இதுவரையில் சேவை வழங்கப்படாமலிருந்த சமூகத்தின் பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறு தொழில் முயற்சியாளர்கள் போன்ற பிரிவினரில் வங்கி விசேட கவனத்தினைச் செலுத்தி வருகின்றது.

இன்று தொழில்நுட்பம் மிகத்துரித வேகத்திலே பரிணாமமடைந்து வருவதுடன் இது மாறிவரும் வங்கிச் சேவை இயக்கங்களிலும் பிரதிபலிக்கின்றது. தொழிற்துறையிலே 30ற்கும் மேற்பட்ட வங்கிகள் இருக்கின்ற போது நாம் தொடர்ச்சியாக எமது வாடிக்கையாளர்களின் நாடித்துடிப்பினையறிந்து சந்தையிலே எமது நிலையினைத் தக்கவைப்ப-தற்காக புதிய உற்பத்திகளையும் சேவைகளையும் புத்தாக்கம் செய்யவேண்டும்.

வாடிக்கையாளர்கள் அதிகரித்த அளவிலே ATMகள், CDMகள், இணைய வங்கிச் சேவை மற்றும் மொபைல் வங்கிச்சேவை போன்ற புதிய வங்கிச் சேவை வழிகளுக்கு நகர்ந்து கொண்டிருக்கின்றனர். 1980களுக்குப் பிறகு பிறந்த தலைமுறையினர் மத்தியிலே இது குறிப்பாக உண்மையானதாக இருக்கும்போது இது நிச்சயமாக அவர்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டவொரு போக்கு அல்ல. இந்தப் போக்கானது வயதுக் குழுமங்களினூடும் சமூக வகுப்புக்களினூடும் அமைவிடங்களினூடும் ஊடறுத்துச் செல்கின்றது. வாழ்க்கையின் சகல மட்டங்களையும் சேர்ந்த வாடிக்கையாளர்கள் காசு வைப்பு இயந்திரங்களுக்குச் சிறந்த முறையில் சமமாக பதிற்செயற்பாடாற்றுவதை நாம் கண்டறிந்திருக்கின்றோம். எமது புதிய ஆவண முகாமைத்துவ முறைமையின் மூலமாக நாங்கள் கடன் விண்ணப்பங்கள் மற்றும் கணக்கினைத் திறத்தல் போன்ற பல கொடுக்கல் வாங்கல்களை தன்னியக்கமாக்கியிருக்கின்றோம். எவ்வாறாயினும் எமது வியாபார மாதிரியும் எமது வழங்கல்களும் 1980களுக்குப் பின் பிறந்த தலைமுறையினதும் எமது மரபுரீதியான வாடிக்கையாளர்களினதும் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்திசெய்வதை நாம் சமநிலைப்படுத்துவோம். இதிலே எமது மரபுரீதியான வாடிக்கையாளர்கள் இன்னும் பாரம்பரிய வங்கிச்சேவையினையே விரும்புகின்றனர்.

வெளிநாட்டு வங்கிகளால் சேவை வழங்கப்படாத தேசிய வியாபார சமுதாயத்திற்குச் சேவையாற்று-வதற்காக 1939 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு வங்கி என்கின்ற ரீதியில் ஆரம்பத்திலிருந்து நாம் பல்வகைமை மிகு வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதற்காகவே வளர்ச்சியடைந்-துள்ளோம். எமது வளர்ச்சியானது முன்பு அரசதுறைக்குப் பிரதானமாகச் சேவையாற்றுவதில் தங்கியிருந்த அதேவேளை இன்று பிரதான இலக்குச் சந்தைப் பிரிவினருள் பெருநிறுவனங்-களும் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சித் துறைகளும் மாறியுள்ளன. நாட்டின் பொருளாதார மாதிரியானது அரசாங்கம் மற்றும் பெரு நிறுவனத்தினால் உந்திச் செலுத்தப்படுகின்ற ஒன்று என்பதிலிருந்து சிறிய மற்றும் நடுத்தரத் தொழின்முயற்சியான்மை உந்திச் செலுத்துகின்ற மற்றும் வளர்ச்சியினை அடிப்படையாக கொண்ட மாதிரியாகப் பரிணமித்து வருகின்றது. எனவே எமது வியாபார மாதிரியின் நீண்ட கால நீடுறுதித்தன்மையினைக் கருத்திற்கொண்டு நாம் சிறிய மற்றும் நடுத்தரத் தொழின்முயற்சியான்மைத் துறைக்கு எமது அனுபவத்தினை விரிவுபடுத்தியுள்ளோம். நாம் நிதியுள்ளடக்கத்தினை ஊக்குவிக்கின்ற அதேவேளை இது எமது வியாபார மாதிரியில் சிறிய மற்றும் நடுத்தரத் தொழின்முயற்சியான்மைத் துறையின் மூலமாக உட்பொதிந்துள்ளது. துறையினுள் நாம் பல்வகைமைமிகு வாடிக்கையாளர் குழுக்களுக்குச் சேவையாற்றுவதற்காகப் பரந்த முதலீட்டுத் தொகுதியின் வளங்களையும் வழங்கி வருகின்றோம். ஓர் உதாரணத்தினைக் குறிப்பிடவேண்டுமாயின் விவசாயத் துறையினுள் நாம் நெல், பால் பண்ணைச் செய்கை போன்ற ஒவ்வொன்றிற்குமாக வேறான கடன் திட்டங்களைக் கொண்டுள்ளோம். அத்துடன் சோளம், மிளகாய் போன்ற ஏனைய பிரதான பயிர்களுக்காகவும் மூன்று பிரதான பெருந்தோட்டப் பயிர்களுக்காகவும் நாம் வெவ்வேறான கடன் திட்டங்களை கொண்டுள்ளோம். அரசாங்கம், பெரு நிறுவனம் மற்றும் சிறிய மற்றும் நடுத்தரத் தொழின்முயற்சியான்மைத் துறைகள் ஆகியவற்றின் மத்தியிலே எமது முதலீட்டுத் தொகுதியினைப் பரவலாக்குவது நாம் எம்மைப் பல்வகைமைப்படுத்துவதற்கு உதவுவதுடன் எமது இடர்களைச் சமநிலைப்படுத்தவும் உதவுகின்றது.

இலங்கை வங்கி நாட்டின் மிகப்பெரிய வங்கியாக மாத்திரமல்லாது நாமே அதியுயர் இலாபத்தினை ஈட்டுகின்ற ஒரு தனித்த நிறுவனமாகவும் திகழ்கின்றோம். 2017ம் ஆண்டிலே எமது வரிக்கு முந்திய இலாபமானது 30.3 பில்லியனாகக் காணப்பட்டது. பங்கிலாபங்கள் மூலமாகவும் வரிகள் மூலமாகவும் வங்கியானது அரசாங்கத்திற்கு 28.5 பில்லியன் ரூபா வருமானத்தினை பங்களிப்பாக வழங்கியது. நாம் 578 பௌதீக வலையமைப்புக்களைக் கொண்டுள்ளதுடன் 48 வரையறுக்கப்பட்ட சேவைப் பிரிவுகளையும் கொண்டுள்ளோம். நாம் எமது வலையமைப்புக்களை வெளிநாடுகளிலே லண்டனுக்கும் மாலைதீவிற்கும் சீசல்ஸிற்கும் சென்னைக்கும் விஸ்தரித்து இருக்கின்றோம். மேலும் மேலதிக விஸ்தரிப்பிற்கான வாய்ப்புக்களை நாம் தொடர்ந்தும் மதிப்பிட்டு வருகின்றோம்.

எமது வியாபார மாதிரியானது நீடுறுதித்தன்மை என்கின்ற விழுமியத்தின் மீது கட்டமைக்கப்-பட்டிருக்கின்ற காரணத்தினால் அது மிகவும் உறுதியானதாகக் காணப்படுகின்றது. வங்கி பொது மக்களிடமிருந்து கடனினைப் பெற்று அதனையே பொதுமக்களுக்கு சமூக ரீதியாகவும் சுற்றுச்சூழல் ரீதியாகவும் பொறுப்பு வாய்ந்த வகையில் மீண்டும் கடனாக வழங்கிக் கொண்டிருக்கின்றது. எமது இலாபங்கள் வரிகள் மூலமாக மீண்டும் சமுதாயத்திற்கே திருப்பியனுப்பப்படுகின்றன. மேலும் நாம் ஓர் அரச வங்கியாக இருக்கின்ற

காரணத்தினால் எமது பங்கிலாபங்களை எமது ஒரேயொரு பங்கீடுபாட்டாளரான அரசாங்கத்திற்கு செலுத்திக் கொண்டிருக்கின்றோம். எமது சகல செயற்பாடுகளின் மூலமாகவும் நாம் எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உந்து சக்தியாகத் திகழ்வதுடன் சமூகத்திலே மிகவும் வாய்ப்புக்கள் குறைந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கும் சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறுகியதாக்குவதற்கான வகிபாத்திரத்தினைச் சமூகத்தில் வகித்து சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் பங்களிப்பு வழங்கி வருகின்றோம். எமது அடைவுகள் மற்றும் வளங்களுடன் எமது வங்கி தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து குறுகிய காலத்திலும் நீண்ட காலத்திலும் தமக்காகவும் தனது அனைத்து நிறுவன நலனில் அக்கறையுடையவர்களுக்காகவும் பெறுமதியை உருவாக்கும் என்கின்ற நம்பிக்கை-யுடன் நாம் எதிர்காலத்தினை எதிர்நோக்கலாம்.

எமது கூட்டாண்மைத் திட்டம் 2018 - 2020

எமது வங்கி உபாயத்தை மையமாகக் கொண்டு செயற்படும் வங்கியாகும். கடந்த காலங்களில் எமது வளர்ச்சி போக்கில் உபாயமானது முக்கிய பங்களிப்பினை வழங்கியுள்ளது. எமது 2010ஆம் ஆண்டிற்கான "ஒன்று 10 பன்னிரண்டு" என்ற உபாயத்திட்டமானது 2012 ஆம் ஆண்டில் சொத்துக்கள் தொடர்பில் ஒரு ரில்லியன் ரூபாயை இலக்காக கொண்டும் அதேவேளை 10 பில்லியன் ரூபாயை இலாபமாக அடைவதை நோக்காக கொண்டும் வகுக்கப்பட்டது. குறிப்பிட்ட திகதியில் இவ் இலக்குகள் முறையாக அடையப்பட்டன. 2015 ஆம் ஆண்டில் மூன்று ரில்லியன் என்ற மற்றுமொரு முக்கியவிடயத்தை நாம் அடைந்தோம். வைப்புகள் மற்றும் கடன்கள் இவை ஒவ்வொன்று தொடர்பிலும் ஒவ்வொரு ரில்லியன் அடையப்பெற்றன.

வங்கித்துறையில் தற்பொழுது இடம்பெற்று வருகின்ற துரித வளர்ச்சியையும் மாற்றங்களையும் கருத்திற்கொண்டு அடுத்து வரும் 3 ஆண்டுகளுக்-கான எமது கூட்டாண்மைத் திட்டத்தை 2017 இல் நாம் வரைந்தோம். இதன் பொழுது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் துரிதமாக ஏற்பட்டு வருகின்ற முன் எப்போதும் இல்லாத அபிவிருத்திகள், வாடிக்கையாளர் மாற்றங்களுக்கு இட்டுச்செல்கின்ற மாறி வரும் இனப்பரம்பல், பழைமைக் கோட்பாடு சாராத போட்டிகள் போன்றன கருத்திற் கொள்ளப்பட்டன. உற்பத்திகள் மற்றும் சேவை வழங்கல், அடைவு, சேவை தராதரங்கள், உள்ளக செயன்முறைகள் ஆகியன தொடர்பில் ஏற்பட்டு வருகின்ற எமது பெறுமதி சார்ந்த விகிதங்கள் தொடர்பிலான அவசியமான மாற்றங்களையும் நாம் கருத்திற் கொண்டுள்ளோம். இவற்றை அடைவதற்கான காத்திரமான உபாயமுறைகளை இத்திட்டம் கொண்டுள்ளது.

எமது வியாபாரத்தின் மையமாக வாடிக்கையாளர்கள் திகழ்வதன் காரணமாக எமது சேவைகளின் தன்மை மற்றும் சேவைகளின் தராதரம் ஆகியவற்றை அடுத்த மட்டத்திற்கு இட்டுச்செல்லக்கூடிய அவசியமான விசேட கவனங்களை நாம் மேற்கொண்டுள்ளோம். ஒரே விதமான வாடிக்கை-யாளர்கள் அனுபவங்களை வழங்கும் முகமாக எமது வலையமைப்பில் உள்ள சகல தடம் மற்றும் கிளைகள் ஆகியவற்றின் சேவை தராதரங்களை ஒருங்கிணைக்கவுள்ளோம்.

ஒவ்வொரு வாடிக்கையாளரினதும் எதிர்ப்பார்ப்-புகளை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்வோம். வாடிக்கையாளர் தொடர்பிலான மற்றுமொரு முயற்சியாக எமது கடன் தன்மை மற்றும் கலாசாரம் ஆகியவற்றை மேம்படுத்துவது மற்றொரு விடயமாகும். எமது சொத்துக்களின் தன்மையை மேம்படுத்துகின்ற அதேவேளை இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் SLFRS 9 இன் அவசியமான தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு சில்லறை மற்றும் பெருநிறுவனம், சிறிய மற்றும் மத்திய தர தொழில் முயற்சிகள், நுண்நிதியிடல் போன்ற சகல விடயங்கள் தொடர்பிலும் எமது வாடிக்கையாளர்களுக்கு பெறுமதிகளை நாம் வழங்குவோம்.

எமது கூட்டாண்மை திட்டத்தின் கீழ் எமது புவியல் சார்ந்த எல்லைகளை விரிவு படுத்துவதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம். புதிய வியாபார மாதிரிகள், புத்தாக்கம் சார்ந்த செயன்முறைகள், சேவை விநியோக முறைகள் ஆகியவற்றுடன் 24 மணித்தியாளங்களும் சேவைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் நாம் மேற்கொள்ளவுள்ளோம்.

தற்காலத்தில் வங்கித் துறையை பொறுத்த வரையில் போட்டித்தன்மை தொடர்பில் தொழில்-நுட்பமானது பிரதான வகிபாகத்தை வகிக்கின்றது. இந்த புத்தாயிரத்தில் எமது வாடிக்கையாளர்கள் தளங்கள் அதிகரித்து வருகின்ற அதேவேளை அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டிய தேவை எமக்குள்ளது. இதன் நிமித்தம் தொழில்நுட்பத்தை மேம்படுத்த வேண்டிய அவசியப்பாடுகள் உள்ளன. இதன் மறுபக்கம் என்னவெனில் தொழில்நுட்பத்தை பிரயோகிக்கின்ற பொழுது இடர்களும் உள்ளன என்பதை கருத்திற்-கொள்ளல் வேண்டும். எமது சொத்துக்கள் மற்றும் எமது வாடிக்கையாளர்கள் ஆகியோர் முறையாக பாதுகாக்கப்படுகின்றார்கள் என்பதை உறுதி செய்து கொள்ளும் முகமாக கூருணர்வு மிக்க தகவல்கள் பாதுகாக்கப்படுகின்றன என்பதை உறுதி செய்துக்கொள்ளும் நோக்குடன் மேலதிக சென்முறைகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

வங்கியின் வினைத்திறன் மிக்க, பயனுறுதித் தன்மை மிக்க செயற்பாட்டுடன் உறுதி செய்து கொள்ளும் முகமாக சீரான முறையில் செயற்படக்கூடிய செயன்முறைகளும் ஏனைய முறைகளும் எமக்கு அவசியப்படுகின்றன. தவறுகள் அல்லது குறைபாடுகள் நிகழக்கூடிய விடயங்கள் தொடர்பில் நாம் முக்கிய கவனத்தை செலுத்த வேண்டியுள்ளது. இவை தொடர்பில் அவசியமான சீர்திருத்தங்களையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

தொழில்நுட்பத்தை பிரயோகிக்கின்ற அதேவேளை தொழில்நுட்பமானது மனித உறவுகளுடன் இணைந்து செல்ல வேண்டும் என்பதை நாம் கருத்திற் கொண்டுள்ளோம். அதன் பிரகாரம் எமது மனித வளங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பில் நாம் அதிக கவனங்களை செலுத்தி வருகின்றோம். துரிதமாக வளர்ந்து வருகின்ற இந்த வியாபாரத்துறையில் எமது ஊழியர்கள் காத்திரமான முறையில் பங்களிப்புக்களை நல்கக்கூடிய விதத்தில் அவர்களது திறன்கள், அறிவு, பண்பு போன்றன மேலும் மேம்படுத்தப்படும். இவர்களது மென் திறன்கள் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த திறன்கள் ஆகியவற்றையும் விருத்தி செய்ய வேண்டிய அவசியமுள்ளன.

வங்கியின் நிதி ரீதியான ஸ்திரத்தன்மை மற்றும் நற்பெயர் ஆகியவற்றை பாதுகாக்கின்ற அதேவேளை சிறந்த நல்லாட்சி மற்றும் ஒழுக்கம் சார்ந்த நடத்தைகள் ஆகியன முக்கியமானவையாகும். ஏற்கனவே இவை தொடர்பில் உயரிய தராதரங்களை நாம் கொண்டுள்ளோம். உலகின் மிக சிறந்த தராதரங்களை நாம் கொண்டுள்ளோம் என்பதை இலக்காக கொண்டு செயற்பட்டு வருகின்றோம். பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றாடல் சார்ந்த நோக்கங்களில் நேர்மையான சமநிலையை நாம் தொடர்ச்சியாக பேணுகின்றோம் என்பதை உறுதி செய்துகொள்ளும் முகமாக ஸ்திரத்தன்மை தொடர்பில் எமது கவனத்தை நாம் விரிவாக்கி புதிய சக்திகளை வழங்குவோம்.

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களின் இறுதிப் பெறுபேறானது எமது வர்த்தக நாமத்தை மேம்படுத்துவதாகத் திகழும். எமது வர்த்தக நாமமே எமது வாடிக்கையாளர்கள் மத்தியில் சிறந்த பிம்பத்தை, எமது மரபு வழித்தொழில், புத்தாயிரம் சார்ந்த விடயங்கள், பொது மக்கள் அபிப்பிராயங்கள் ஆகியன இவற்றுள் உள்ளடங்குகின்றன. எமது கூட்டாண்மை திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உபாய ரீதியான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நாம் எமது பயணத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வோம். எமது சொத்துக்கள் மற்றும் இலாபம் ஆகியவற்றை அதிகரிக்கின்ற அதேவேளை எமது வர்த்தக நாமத்தையும் கட்டியெழுப்புவோம். அதேவேளை எமது சகல நிறுவன நலனில் அக்கறையுடையவர்கள் தொடர்பிலான பெறுமதிகளை அதிகரிக்கும் முகமாகவும் செயற்படுவோம்.



எதிர்காலத்திற்கான வங்கியை வரையறுத்தலும் மீளமைத்தலும்

எமது இலக்கங்களை நீடுறுதித்தன்மைக்கு கடப்படச் செய்தல்

இலங்கை வங்கி நீடுறுதித்தன்மைக் கொள்கை

2016 ஆம் ஆண்டிலே ஐக்கியநாடுகள் பொதுச்சபையினால் தீர்மானிக்கப்பட்ட நீடுறுதியான அபிவிருத்தி இலக்குகளை இலங்கை வங்கி ஏற்று அங்கீகரித்துள்ளது. நீடுறுதியான அபிவிருத்தி இலக்குகள் 17 தனிப்பட்ட இலக்குகளைக் கொண்டுள்ளன. இவை பரந்தவீச்சிலான சமூக மற்றும் பொருளாதார விடயங்களைக் கொண்டுள்ளன. அவையாவன: வறுமை, உணவுப் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் ஆளுகை ஆகியவை ஆகும். நீறுதியான அபிவிருத்தி இலக்குகள் அவற்றின் வகிபாத்திரங்களை அரசாங்கத்திற்கு வரையறுக்கப்பட்டதாகப் பார்க்கவில்லை. ஆனால் வியாபாரங்களும் அதற்கு பங்களிப்பு வழங்கவேண்டுமென எதிர்பார்க்கின்றன. வங்கியானது அதன் சகல செயற்பாடுகளினுள்ளும் நீறுதியான அபிவிருத்தி இலக்குகளை ஒருங்கிணைத்துள்ளது. எவ்வாறு தனிப்பட்ட நீடுறுதியான அபிவிருத்தி இலக்குகள் கையாளப்படுகின்றன என்பது குறிப்பிட்ட மூலதனங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.


நிறுவன ரீதியாக நீடுறுதியான அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்துவதற்கான பொறுப்பிற்கு சபை நியமித்த நீடுறுதித் தன்மைக்குழு ஒரு வழிகாட்டலை வழங்குவதுடன் இதன் தலைவராக பொது முகாமையாளர் இருக்கின்றார். நீடுறுதித்தன்மை கருதுகோள்கள் வங்கியின் சகல பிரதான வியாபாரத் தீர்மானங்களிலும் செயன்முறைகளிலும் பொதிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பினைக் குழு கொண்டுள்ளது. இதன் அர்த்தமாவது சகல செயற்பாடுகளும் ஒரு குறுகிய அடிப்படைக் கவனக்குவிப்பினால் மேற்கொள்ளப்படாது அதன் பரந்த பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் தாக்கத்திற்கும் உரிய கருதுகோள் வழங்கப்படவேண்டுமென்பதையே சுட்டி நிற்கின்றது, இவ்வாறான கருதுகோள்கள் குறுகிய கால மற்றும் நீண்டகாலக் கண்ணோட்டங்களை உள்ளடக்க வேண்டும். நீடுறுதியான அபிவிருத்தி இலக்குகள் ஒரு நிறுவனம் உருவாக்குகின்ற பெறுமதியினை மூன்று அடிப்படைக் கவனக்குவிப்புக் கோடுகளினூடாகப் பார்ப்பதற்கான சட்டகத்தினை வழங்குகின்றது.

நாட்டிலே பெரிய வங்கி என்கின்ற வங்கியின் நிலையானது மேலும் ஒரு இடைநிலை நிதி நிறுவனம் என்கின்ற வங்கியின் நிலையானது ஒரு பாரிய பங்களிப்பினை வழங்குவதற்கான ஆற்றலினை வங்கிக்கு வழங்குகின்றது. வங்கியானது அதன் சொந்தச் செயற்பாடுகளின் மூலம் மாத்திரம் ஒரு வகிபாத்திரத்தினை வகிக்காமல் அதன் கடன் வழங்கல் நடைமுறைகள் மூலமாகவும் அதன் பெறுமதிச் சங்கிலிகள் மூலமாகவும் வகிபாத்திரத்தினை வகிக்க முடியும்.

எவ்வாறாயினும் நீடுறுதியான பெறுமதி உருவாக்கத்தின் மிக முக்கியமான அம்சம் வங்கியின் இயக்கங்கள், உற்பத்திகள், சேவைகள் மற்றும் வாடிக்கையாளர் தொடர்புகள் நிதித்துறையின் மீது கொண்டிருக்கின்ற தாக்கமாகும். நீண்ட காலத்திலே சாதகமான தாக்கத்தினை அடைவதற்கு வங்கி வாடிக்கை-யாளர்களுடனும் வியாபாரப் பங்காளர்களுடனும் ஒழுங்குபடுத்துனர் களுடனும் அரசாங்கத்துடனும் நெறி சார்ந்த முறையுடனும் வெளிப்படைத் தன்மையுடனும் நடந்து கொள்வது அவசியமான-தாகும். எனவே வங்கியானது நன்கு கட்டமைக்-கப்பட்ட முறைகள், முறைமைகள் மற்றும் செயல்விதிகளினால் ஆதாரப்படுத்தப்பட்ட உறுதியான நடைமுறைகளைக் கையாள்வது அவசியமானதாகும்.

எனவே வங்கியானது அதன் செயற்பாடுகளை வெறுமனே அதன் இலாபமீட்டும் தன்மையினைக் கருத்திற்கொண்டு நடத்தாமல் பரந்த பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் கண்ணோட்டத்துடன் சமூகத்தின் நலனோம்புகையினை விஸ்தரிக்கும் நோக்கத்துடனும் கைக்கொள்ள வேண்டும். நிதி உள்ளடக்கும் தன்மையினை மேம்படுத்துவதன் மூலம் வங்கி சிறப்புரிமைகள் கிட்டாத மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும். சுற்றுச்சூழலைப் பாதுகாத்து காலநிலை மாற்றத்திற்கு எதிராகப் போராடுகின்ற செயற்பாடுகளை வங்கி மேம்படுத்த முயற்சிக்க வேண்டும். புதிய உற்பத்திகளையும் சேவைகளையும் கடன் வழங்கல் நடைமுறை-களையும் வங்கி உருவாக்கும் போது அதனை வங்கி நீடுறுதியான இலக்குகளைக் கருத்திற் கொள்கின்ற பரந்த நெறி உதாரண மாற்றங்களினுள் மேற்கொள்ள வேண்டும். எனவே வங்கியானது அதன் நீடுறுதித்தன்மையினை உறுதிப்படுத்தி மேலும் அதன் பெறுமதி உருவாக்கத்தினை நீண்டகாலத்திலே தொடர்வதையும் உறுதிப்படுத்த முடியும்.

நீடுறுதித்தன்மைக் குழு





தேசத்தின் வங்கியாளர்

34 — நிறுவன வழிகாட்டிகள்
34 — பணிப்பாளர்கள் சபை
40 — கூட்டாண்மை முகாமைத்துவம்
54 — நிறைவேற்று முகாமைத்துவம்

62 — கூட்டாண்மை செயலாட்சி

70 — சபை உபகுழுவின் அறிக்கைகள்
70 — கணக்காய்வுக் குழு அறிக்கை
74 — ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழு அறிக்கை
76 — மனித வளங்கள் மற்றும் ஊதியக்குழு அறிக்கை
77 — நியமனம் மற்றும் கூட்டாண்மை செயலாட்சிக் குழு அறிக்கை

80 — இடர் முகாமைத்துவம்

நிறுவன வழிகாட்டிகள்

பணிப்பாளர்கள் சபை



அமர்ந்திருப்போர் (இடமிருந்து வலமாக) - திரு. ரொனால்ட் சி பெரேரா, ஜனாதிபதி சட்டத்தரணி - தலைவர், திரு. ரணெல் ரீ விஜேசிங்ஹ, திரு. சஜித் ஆர் ஆட்டிகல.

எழுந்து நிற்போர் (இடமிருந்து வலமாக) - திரு. எச் பி அஜித் குணவர்த்தன, திரு. மொஹான் விஜேசிங்ஹ, திரு. சமந்த ராஜபக்ஷ, திருமதி ஜானகி சேனநாயக்க சிறிவர்த்தன - இலங்கை வங்கி செயலாளர்/சபைச் செயலாளர்.

திரு. ரொனால்ட் சி பெரேரா ஜனாதிபதி சட்டத்தரணி
தலைவர்,
சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்

திறன்களும் அனுபவமும்
விசேடமாக சிவில் மற்றும் குற்றவியல் வழக்கு, இணக்கப்பாடு மற்றும் வணிக மற்றும் போக்குவரத்து ஒப்பந்தங்கள் மற்றும் உடன்பாடுகளை வரைதல் ஆகிய துறைகளில் இலங்கையின் முதனிலை நீதிமன்றங்கள் அதேபோன்று மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் ஆகியவற்றில் ஒரு பரந்துபட்ட சட்ட நடைமுறையுடன் கூடிய ஓர் அனுபவமிக்க வழக்கறிஞரே திரு. பெரேரா ஆவார். வணிகச் சட்டம், வங்கியியல் சட்டம், கைத்தொழில் சட்டம், விதிப்பாணைகள், அவதூறு, தேர்தல் மனுக்கள், சிவில் மேன்முறையீடுகள், மீளாய்வு விண்ணப்பங்கள், செயலாணை விண்ணப்பங்கள் மற்றும் அடிப்படை உரிமை வழக்குகள் ஆகியவற்றில் அவர் கைதேர்ந்தவர் ஆவார். மேலும், அவர் சில வணிக நடுவர் தீர்ப்புக்களிலும் பிரசன்னமாகியுள்ளார்.

திரு. பெரேரா அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட இளமாணியாளர் (எல்.எல்.பீ) ஆவதுடன் ஐக்கிய இராச்சியத்தின் (யு.கே.) நோத்தும்புரியா பல்கலைக்கழகத்திலிருந்து சர்வதேச வர்த்தகச் சட்டத்தில் முதுமாணிப் (எல்.எல்.எம்.) பட்டத்தினையும் கொண்டுள்ளார்.

சபைக்கு நியமித்தது
தலைவராக 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி.

சபை உப குழுக்களின் உறுப்புரிமை
நியமனம் மற்றும் கூட்டாண்மை ஆட்சிக் குழுவின் தலைவர் மற்றும் மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு உறுப்பினர்.

தற்போதய நியமனங்கள்
வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கி (யு.கே.) நிறுவனத்தின் தலைவரும் வரையறுக்கப்பட்ட ஹோட்டல்ஸ் கொழும்பு (1963) இன் பதில் தலைவருமாவார்.

முன்னைய முதன்மை வாய்ந்த நியமனங்கள்
அவர் இலங்கை வங்கியினதும், மோர்சன்ற் பாங்க் ஒப் சிறிலங்கா மற்றும் நிதி பி.எல்.சி நிறுவனத்தினதும், மிரேக்கா கெப்பிற்றல் லான்ட் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனத்தினதும் மற்றும் மிரேக்கா ஹோம்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினதும் பணிப்பாளர் ஒருவராகவிருந்தார்.

திரு சஜித் ஆர் ஆட்டிகல
சுயாதீனமற்ற நிறைவேற்றுத் தரம் சாராத பதவிவழிவந்த பணிப்பாளர்

திறன்களும் அனுபவமும்
திரு ஆட்டிகல அவர்கள் இலங்கை மத்திய வங்கியின் ஓர் உதவி ஆளுநர் ஆவதுடன் தற்போது திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஒருவராக சேவையாற்றுகின்றார். நாணய மற்றும் அரசிறைக் கொள்கைத் துறையில் 25 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தை அவர் கொண்டுள்ளார்.

அவர் ஐக்கிய இராச்சியத்தின் வோர்விக் பல்கலைக்கழகத்திலிருந்து கணிய அபிவிருத்திப் பொருளாதாரத்தில் முதுமாணி (MSc) பட்டம் ஒன்றையும் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து பௌதீக விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி (BSc) பட்டம் ஒன்றையும் கொண்டுள்ளார்.

சபைக்கு நியமித்தது
2016 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 27 ஆம் திகதி.

சபை உப குழுக்களின் உறுப்புரிமை
சபைக் கணக்காய்வுக் குழுவினதும் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவினதும் மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழுவினதும் உறுப்பினர்.

தற்போதய நியமனங்கள்
திரு ஆட்டிகல அவர்கள் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவராக இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவில் திறைசேரியைப் பிரதிநிதித்துவம் செய்கின்றார்.

முன்னைய முதன்மை வாய்ந்த நியமனங்கள்
திரு ஆட்டிகல அவர்கள் திறைசேரிப் பிரதிச் செயலாளராக நியமிக்கப்படுவதற்கு முன்னர், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தினதும் அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தினதும் பணிப்பாளர் அதிபதியாக சேவையாற்றிவந்திருப்பதுடன் அரசிறைத் திரட்டுச் செய்முறையில் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு கணிசமானளவு பங்களிப்பினை வழங்கியுள்ளார். அவர் வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தினை வகுத்தமைப்பதிலும் சீனாவுடனான கட்டற்ற வர்த்தக உடன்படிக்கைக்கான (FTA) தொழில்நுட்பக் குழுவை வழிநடத்தலிலும் பங்களிப்பை ஆற்றிவருகின்றார்.

அவர் தேசிய சேமிப்பு வங்கியின் ஒரு பணிப்பாளராகவும் பதில் தலைவராகவும் மற்றும் இலங்கை வங்கியினதும் பிராந்திய அபிவிருத்தி வங்கியினதும் சபையில் ஒரு பணிப்பாளராகவும் சேவையாற்றியிருந்ததுடன் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, விமான மற்றும் விமான சேவைகள் (இலங்கை) வரையறுக்கப்பட்ட நிறுவனம் போன்ற முதன்மையான அரசாங்க நிறுவனங்களில் சில சபைகளில் சபை உறுப்பினர் ஒருவராகவும் திறைசேரியைப் பிரதிநிதித்துவம் செய்திருந்தார்.

திரு. ரணெல் ீ. விஜேசிங்ஹ
சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்

திறன்களும் அனுபவமும்
35 வருடங்களுக்கு மேற்பட்ட பிற்தகைமை அனுபவத்துடன் தொழிற் செய்முறை ரீதியானதும், சுயாதீனமானதுமான சர்வதேச முகாமைத்துவ மதியுரைஞர் ஒருவரான திரு. ரணெல் விஜேசிங்ஹ அவர்கள் தனியார் மற்றும் பொதுத் துறைக்கு இடையிலும், கைத்தொழில் மற்றும் பொது நடைமுறைக்கு இடையிலும் மற்றும் கணக்கீடு, கணக்காய்வு மற்றும் மதியுரை வழங்கல் ஆகியவற்றுக்கிடையிலும் தனித்துவம் வாய்ந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அனுபவ சமநிலையினைக் கொண்டுள்ளார்.

கடந்த இரண்டரை தசாப்தங்களுக்கு மேலாக இலங்கை அரசாங்கத்திற்கான பல நியதிச்சட்ட, ஒழுங்குறுத்தல் மற்றும் ஆலோசனை வகிபாகங்களுக்-கூடாக அரச துறைக்கு பங்களிப்புச் செய்துள்ளார்.

உடன் முன்னரான தசாப்த காலப்பகுதியில், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பல்தரப்பு அபிவிருத்திப் பங்காளர்கள் சார்பில் சில நாடுகளில் வெளிநாட்டு அரசாங்கங்களுக்காக அரச துறையில் மதியுரைப் பணியை அவர் ஆற்றியுள்ளார். அரச நிதி முகாமைத்துவம் மற்றும் பெறுகையுடன் தொடர்புற்ற ஆட்சி மற்றும் நிறுவன ரீதியான இடர் மதிப்பீடுகளிலும், உட்கட்டமைப்புடன் தொடர்புபட்ட நிதி முகாமைத்துவ மதிப்பீடுகளிலும், கருத்திட்ட மதிப்பீடு, மற்றும் நிறுவன அபிவிருத்தி மற்றும் திறன் விருத்தி மதிப்பீடுகளிலும் குழுத் தலைவராக செயலாற்றியதை இப் பணி ஒப்படைப்புகள் உள்ளடக்கியுள்ளன.

தனியார் துறையில் அவரின் அனுபவமானது ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் குரூப் நிறுவனத்தின் வியாபார அபிவிருத்திப் பணிப்பாளராகவும்,இலங்கை பிறைஸ் வோட்டர் ஹவுஸ் கூப்பேர்ஸ் நிறுவனத்தில் பங்காளரும் மதியுரைத் தலைவருமாகவும் மற்றும் பெஹாமெஸ் இலுள்ள டெலொய்ற்று நிறுவனங்களில் ஒரு முகாமையாளராகவும் செயலாற்றியதை உள்ளடக்குகின்றது. வியாபார மதிப்பீடுகள் மற்றும் தந்திரோபாய மீள் நெறிப்படுத்தல்,கூட்டாண்மை மீட்சிச் செய்முறைகள், புதிய கருத்திட்ட மதிப்பீடு, தனியார் மயமாக்கல்லுடன் தொடர்புபட்ட மதிப்பீடுகள், விலைமதிப்பு, விலைமனு, கொள்ளல்கள் மற்றும் முதலீட்டு விற்பனை ஆகியவற்றில் அவர் பரந்துபட்ட அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

அவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் ஒரு சக உறுப்பினர் ஆவதுடன் ஐக்கிய அமெரிக்காவின் (யு.எஸ்.ஏ) பென்சில்வேனியாவிலுள்ள பிற்ஸ்பேர்க் பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டம் ஒன்றினைக் கொண்டுள்ளார். அப் பல்கலைக்கழகத்தின் பொது மற்றும் சர்வதேச அலுவல்கள் பட்டப்பின் கல்லூரியில் பல்தேசியக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசியல் இடர்ப் பகுப்பாய்வு பற்றியும் அவர் கற்றுக்கொண்டுள்ளார்.

சபைக்கு நியமித்தது
2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 09 ஆம் திகதி.

சபை உப குழுக்களின் உறுப்புரிமை
சபைக் கணக்காய்வுக் குழுவின் தலைவர்.

தற்போதைய நியமனங்கள்
கொலதெனியா ஹைட்ரோ பவர் (பிறைவேற்) லிமிட்டடின் பணிப்பாளராவார்.

முன்னைய முதன்மை வாய்ந்த நியமனங்கள்
மின்வலு மற்றும் வலுசக்தி அமைச்சின் கண்காணிப்பு மற்றும் மதியுரைக் குழுவின் தலைவர் முன்னாள் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரச் சட்டத்தின் கீழ் முன்னாள் நுகர்வோர் அலுவல்கள் சபையின் உறுப்பினர் கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை உறுப்பினர் இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆணையாளர் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் ஆளும் சபையின் உறுப்பினர் முகாமைத்துவ பட்டப்பின் கற்கைகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபையின் உறுப்பினர் சிலோன் வர்த்தக சம்மேளனத்தின் பிரதான குழு உறுப்பினர் இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளன சமூகத்தின் ஆலோசகர் மற்றும் சார்க் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் ஆலோசகர். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் கடந்தகாலத் தலைவர் மற்றும் ஆசிய மற்றும் பசுபிக் கணக்காளர்களின் 23 நாடுகள் கூட்டுக்குழுவின் கடந்தகாலத் தலைவர் ஆகவும் இருக்கின்றார். இலங்கை மற்றும் மாலைதீவில் 11 ஆதனங்களை உள்ளடக்கும் ஒரு ஹோட்டல் வரிசைத் தொகுதியை சொந்தமாகக் கொண்டு செயற்படுத்துகின்ற ஜோன்ஸ் கீல்ஸ் ஹோட்டல்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் சபைக் கணக்காய்வுக் குழுவின் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளராகவும் மற்றும் தலைவராகவும் 2005 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் வரையில் அவர் நீண்டகாலம் சேவையாற்றியவர் ஆவார்.

திரு. எச். பி. அஜித் குணவர்த்தன
சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்

திறன்களும் அனுபவமும்
உரிமைப்பங்குச் சந்தைகளிலும் நிதிய முகாமைத்து-வத்திலும் அனுபவத்தினைக் கொண்ட அரசாங்கத் திறைசேரி முறிச் சந்தை நிபுணராக திரு. குணவர்த்தன அவர்கள் உள்ளார். பல பட்டியற்படுத்தப்பட்ட கம்பனி சபைகளிலான அமர்வுகளில் கலந்துகொண்டு கூட்டாண்மை ஆட்சி அனுபவத்தையும் அவர் கொண்டுள்ளார். நிதித் துறையில் 25 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தினை அவர் கொண்டுள்ளார். வியாபார நிர்வாகம் மற்றும் பட்டய நிதிப் பகுப்பாய்வாளர் - பகுதி IIஇல் டிப்ளோமா ஒன்றினையும் அவர் கொண்டுள்ளார்.

சபைக்கு நியமித்தது
2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் திகதி.

சபை உப குழுக்களின் உறுப்புரிமை
சபையுடன் இணைந்த மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழுவினது தலைவரும், ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவினதும் பெயர் குறித்த நியமன மற்றும் கூட்டாண்மை ஆட்சிக் குழுவினதும் உறுப்பினரும்.

தற்போதைய நியமனங்கள்
லங்கா செக்குரிற்றீஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிப்பாளர்.

முன்னைய முதன்மை வாய்ந்த நியமனங்கள்
இலங்கை வியாபாரிகள் வங்கி மற்றும் நிதி பி.எல்.சி நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் வரையறுக்கப்பட்ட ஜனசக்தி பிணையங்கள் நிறுவனத்தின் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அலுவலர். ஷாற்ரியா ஹோல்டிங்ஸ் பிஎல்சி நிறுவனத்தினதும், பெஸ்ற் கெப்பிற்றல் ஹோல்டிங்ஸ் பிஎல்சி நிறுவனத்தினதும், கெல்சீ ஹோம்ஸ் பிஎல்சி நிறுவனத்தினதும் மற்றும் கொத்மலே ஹோல்டிங்ஸ் பிஎல்சி நிறுவனத்தினதும் பணிப்பாளர்.

திரு. சமந்த ராஜபக்ஷ
சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்

திறன்களும் அனுபவமும்
திரு.சமந்த ராஜபக்ஷ வியாபார தொழில்சார் தகைமையில் 30 வருட அனுபவம் கொண்டவர். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பல்வேறுபட்ட முதன்மை முகாமைத்துவ பதவிகளை வகித்துள்ளார்.

திரு. ராஜபக்ஷ அவர்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினதும் ஐக்கிய இராச்சியத்தின் (யுகே) பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தினதும் சக உறுப்பினர் ஆவார். அவர் ஐக்கிய இராச்சியத்தின் (யுகே) பட்டய சந்தைப்படுத்தல் நிறுவகத்தின் சக உறுப்பினர் ஒருவராகவும் உள்ளதுடன் சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின் கற்கைகள் நிறுவகத்திலிருந்து பெற்றுக்கொண்ட வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டமொன்றையும் கொண்டுள்ளார்.

திரு. ராஜபக்ஷ அவர்கள் சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின் கற்கைகள் நிறுவகத்திலிருந்து முகாமைத்துவத் துறையில் தொழில் மேன்மைக்கான பிளாட்டினம் கௌரவ விருதினைப் பெற்றுக்கொண்டவராவார்.

சபைக்கு நியமித்தது
2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம் திகதி.

சபை உப குழுக்களின் உறுப்புரிமை
சபையுடன் ஒருங்கிணைந்த மனித இடர் முகாமைத்துவக் குழுவின் தலைவர் சபைக் கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்.

தற்போதய நியமனங்கள்
திரு.ராஜபக்ஷ கிட்ர ஹோல்டிங்ஸ் இன் தலைவர்/பணிப்பாளராகவும், ஆசிரி குரூப் ஒப் ஹொஸ்பிடல்ஸ், ரகேன் குரூப் ஒப் ஹோட்டல்ஸ் மற்றும் கொழும்பு ஆர்ச்சரி ஸ்கூல் (பிரைவேற்) லிமிடெட் என்பவற்றிலும் பணிப்பாளராக உள்ளார்.

திரு.ராஜபக்ஷ அவர்கள் சிலோன் வர்த்தக சம்மேளனத்தின் நிறைவேற்று உறுப்பினராகவும், இலங்கை - ஐக்கிய அமெரிக்கா (யுஎஸ்ஏ) வியாபார பேரவையின் தலைவராகவும் மற்றும் தேசிய பயிலுநர், கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் பணிப்பாளர் ஒருவராகவும் உள்ளார்.

முன்னைய முதன்மை வாய்ந்த நியமனங்கள்
குழு முகாமைத்துவப் பணிப்பாளர் வரையறுக்-கப்பட்ட அசோசியேற் மோட்டார் வேய்ஸ் (தனியார்) நிறுவனம் மற்றும் பணிப்பாளர் AMW முதலீடு குத்தகை மற்றும் நிதி பிஎல்சி, அசோசியேற்றட் புரொப்பட்டி டெவலப்மென்ற் லிமிற்றெற், அசோசியேற்றற் ஓட்டோவேய்ஸ் பிரைவேற் லிமிற்றெற், அசோசியேற்றற் மோட்டார் (லங்கா) கம்பனி லிமிற்றெற், அசோசியேற்றற் குளோபல் டிரேடிங் (பிரைவேற்) விமிற்றெற், அசோசியேற்றற் றபர் இன்டர்ஸ்ரீஸ் லிமிற்றெற், அசோசியேற்றற் யுனிவர்சல் (பிரைவேற்) லிமிற்றெற், அல் புற்றியம் லொஜிஸ்ரிக்ஸ் (பிரைவேற்) லிமிற்றெற், பணிப்பாளர்/பொது முகாமையாளர், இன்போமற்றிக்ஸ் இன்டர்நஷனல் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனம் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அலுவலர், சிஎப் வென்சர் பன்ட் லிமிட்டெட் நிறுவனம் பணிப்பாளர், சென்ரல் பினான்ஸ் கோ. பிஎல்சி நிறுவனம் சிரேட்ட கருத்திட்ட முகாமையாளர், ஏரிரூரி இன்க். யுஎஸ்ஏ நிறுவனம் குழுமப் பணிப்பாளர், ஷாற்ரியா ஹோல்டிங்ஸ் பிஎல்சி நிறுவனம் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அலுவலர், சொப்ற்லொஜிக் கொமியுனிகேஷன்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனம் மற்றும் குழுமப் பணிப்பாளர், சொப்ற்லொஜிக் ஹோல்டிங்ஸ் பிஎல்சி நிறுவனம்.

திரு. மொஹான் விஜேசிங்ஹ
சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்

திறன்களும் அனுபவமும்
திரு.மொஹான் விஜேசிங்ஹ ஒரு வழக்கறிஞர் ஆவார். இவர் தனியார் மற்றும் பொதுத்துறைகளில் 25 வருடங்களுக்கு மேலாக பணியாற்றிய அனுபவத்தினை கொண்டுள்ளார்.

அவர் பிரஸ்செல்ஸ் நகரத்திலுள்ள வ்ரீஜ் (Vrije) பல்கலைக்கழகத்திலிருந்து சர்வதேச சட்ட ஒத்துழைப்பில் முதுமாணிப் பட்டமொன்றைப் பெற்றுக்கொண்டவர் ஆவார். அவர் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் உயர் நீதிமன்றத்தின் மன்றாடியார் ஒருவராகவும், அவுஸ்திரேலிய தலைநகர ஆட்புல (Australian Capital Territory) உயர் நீதிமன்றின் மன்றாடியார் மற்றும் வழக்குரைஞர் ஒருவராகவும் மற்றும் அவுஸ்திரேலிய மேல் நீதிமன்றின் வழக்குரைஞர் ஒருவராகவுங்கூட உள்ளார்.

சபைக்கு நியமித்தது
2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி.

தற்போதய நியமனங்கள்
திரு. மொஹான் விஜேசிங்ஹ அவர்கள் கொழும்பு இன்டர்நஷனல் கொன்ரைனர் ரேர்மினல்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தில் பொது முகாமையாளர் - சட்டம் ஆக உள்ளார் அத்துடன் சீன மேர்சன்ட்ஸ் போர்ட்ஸ் ஹோல்டிங்ஸ் கம்பனி லிமிட்டெட் நிறுவனத்தில் சிரேட்ட வெளிநாட்டு ஆலோசகராகவும் உள்ளார். லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் பணிப்பாளர், மக நெகும ரோட் கொன்ஸ்ரக்சன் இக்குயிப்மென்ற்கொம்பனி (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிப்பாளர், மக நெகும கொன்சல்ரன்சி அன்ட் புரொஜெக்ற் மனேஜ்மென்ற் சேவிஸ்சஸ் கொம்பனி (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் இன்டர்ஒசென் சேவிஸ்சஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் பணிப்பாளர் அத்துடன் இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தின் தேசிய நிகழ்ச்சிநிரல் குழுவின் ஓர் உறுப்பினராகவும் சேவையாற்றுகின்றார்.


முன்னைய முதன்மை வாய்ந்த நியமனங்கள்
பணிப்பாளர், மக்கள் வங்கி குழும ஆளணி முகாமையாளர், மஹராஜா குரூப் ஒப் கொம்பனீஸ் உதவிப் பணிப்பாளர், அவுஸ்திரேலிய ஒய்வுறுகால ஊதிய ஆணைக்குழு பணிப்பாளர் நாயகம், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர், தேசிய லொத்தர் சபை.

அம்மணி. ஜானகி சேனநாயக்க சிறிவர்த்தன
இலங்கை வங்கிச் செயலாளர்/சபைச் செயலாளர்

சுயவிவரக்குறிப்பானது 45 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர் மையப்படுத்தல்

மாற்றத்தை முழுநலன் சார்ந்து இயக்குவதற்கும் “எதிர்கால ஆயத்தநிலையை” அடைந்துகொள்வதற்குமான எமது செயல்முனைவிலுள்ள இன்றியமையாத நிறுவன நலனில் அக்கறையுள்ளவரே வாடிக்கையாளர் ஆவார். இதன் காரணமாகத்தான், ஒவ்வொரு தந்திரோபாயத்திலும் முயற்சியிலும் வாடிக்கையாளரை மையப்படுத்தியே வைத்திருக்கின்றோம். நாம் எப்போதுமே இதனை ஆற்றியுள்ளோம்... நாம் இப்போது இதனை ஆற்றுகின்றோம்...அத்துடன் எப்போதுமில்லாதவாறு, எதிர்காலத்தில் நாம் இதனை ஆற்றுவோம்!





கூட்டாண்மை முகாமைத்துவம்



அமர்ந்திருப்போர் (இடமிருந்து வலமாக) - அம்மணி. ஜானகி சேனநாயக்க சிறிவர்தன, திரு. செனரத் பண்டார, திரு. டீ.எம். குணசேகர, திரு. டப்ளியூ.பி. ரசல் பொன்சேகா, அம்மணி கயா ஜயசிங்க

எழுந்துநிற்போர் (இடமிருந்து வலமாக) - திரு. டீ.என்.எல். பெர்னான்டோ, திரு. ஆர்.எம்.டீ. விபுல ஜயபாகு, திரு. டீ.பீ.கே. குணசேகர, திரு. கே.ஈ.டீ. சுமனசிறி, கலாநிதி இந்துனில் லியனகே, திரு. எம்.எம். லஷ்மன் பெரேரா, திரு. பி.சீ. விக்ரமபத்திரண, திரு. எம்.ஜே.பி. சல்காது, திரு. சீ. அமரசிங்ஹ, திரு. பீ.எம். லியனகே, திரு. டப்ளியூ.ஏ.சீ. திசேரா, திரு. எஸ். ஹேவாவிதாரண, திரு. எம்.ரீ.எம். ஜலால்டீன், திரு. டீ.எம்.எல்.பீ. தசநாயக்க



திரு. டீ. எம். குணசேகர
(2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதியன்று ஓய்வுபெற்றார்)
பொது முகாமையாளர்

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்
2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம்

கம்பனிகள் குழுமத்தில் வகித்த தலைமைப் பொறுப்பு:
எம்எஸ்எஸ் (MSS), எச்எச் (HH)

கம்பனிகள் குழுமத்திலான பணிப்பாண்மைப் பொறுப்பு:
பீஓசி யுகே, ட்ரவல்ஸ், பீடிஎம்எல், சீபாங் அசெற், எச்சீஎல், கேஎச்பி, எம்பீஎஸ்எல், எம்பீஎஸ்எல் இன்சுரன்ஸ்.

திறன்களும் அனுபவமும்
திரு. குணசேகர அவர்கள் கூட்டாண்மை மற்றும் கரைகடந்த வங்கித் தொழில், விற்பனைகள் மற்றும் ஊடக வழி முகாமைத்துவம், சர்வதேச வங்கித் தொழில் நடவடிக்கைகள், கடன் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் ஆகியவற்றை உள்ளடக்கி 34 வருடங்களுக்கு மேற்பட்ட பல்வகைப்பட்ட வங்கித் தொழில் அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

அவர் இலங்கையின் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து அரச நிதி மற்றும் வரிவிதிப்பில் விசேட பட்டம் ஒன்றினைப் பெற்றுள்ள பட்டதாரி ஆவதுடன் யப்பானின் வெளிநாட்டுத் தொழில்நுட்ப புலமைப்பரிசிலுக்கான அமைப்பினால் (AOTS) நடாத்தப்பட்ட கூட்டாண்மை முகாமைத்துவம் பற்றிய நிகழ்ச்சித் திட்டத்தையும் (LKCM2) ஐக்கிய அமெரிக்காவின் (யுஎஸ்ஏ) பென்சில்வேனியாவின் வோற்றன் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட உயர் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தினையும் (AMP63) வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார். அவர் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் சக உறுப்பினரும் ஆவார்.

கூட்டாண்மை முகாமையில் வகித்த பதவிகள்
பிரதிப் பொது முகாமையாளர்
(சில்லறை வங்கித் தொழில்)

பிரதிப் பொது முகாமையாளர்
(விற்பனைகள் மற்றும் விநியோக வழி முகாமைத்துவம்)

பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அலுவலர்
2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து

ஆண்டுக் காலத்தில் வகித்த ஏனைய பதவிகள்
வரையறுக்கப்பட்ட லங்காகிளியர் (பிறைவெட்) நிறுவனம், வரையறுக்கப்பட்ட லங்கா நிதிச் சேவைகள் பணியகம் மற்றும் இலங்கை கடன் தகவல் பணியகம் ஆகியவற்றின் பணிப்பாளர் ஒருவராக அவர் உள்ளார். 2016/2017 ஆம் ஆண்டிற்காக வரையறுக்கப்பட்ட சிறீ லங்கா பாங்ஸ் அசோசியேசன் (கரன்ரீ) நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட பினான்சியல் ஒம்புட்ஸ்மன் சிறீலங்கா (கரன்ரீ) நிறுவனம் ஆகியவற்றின் சபைகளுக்கும் தலைமை தாங்கினார்.

இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் (IBSL) ஆளும் சபையின் உறுப்பினர் ஒருவராகவும், தொழில்சார் வங்கியாளர் சங்கத்தின் உறுப்பினர் ஒருவராகவும் 2016/2017 ஆம் ஆண்டிற்காக ஆசிய - பசுபிக் கிராமிய மற்றும் விவசாய கடன் சங்கத்தின் (APRACA) உப தலைவராகவும் அவர் இருந்துள்ளார்.

தொழில் மைல்கற்கள்
திரு. குணசேகர அவர்கள் 1983 ஆம் ஆண்டில் இவ் வங்கியுடன் தனது தொழிலினை ஆரம்பித்ததுடன் ஆண்டுகள் செல்லச் செல்ல பல துறைகளிலும் அதி கூடுதலாக கடன் முகாமைத்துவத்திலும் நிர்வாகத்திலும் கவனத்தினைக் குவித்து வெவ்வேறுபட்ட மட்டங்களிலும் பயிற்சியினையும் அனுபவத்தினையும் பெற்றுள்ளார். 1997 – 2000 ஆம் ஆண்டு வரை அவர் லண்டன் கிளையிலும் சேவையாற்றியுள்ளார்.

2016 ஆம் ஆண்டில் துபாயில் உலக நிலைபேற்று அவையினால் (World Sustainability Congress) வழங்கப்படும் '100 உலகளாவிய நிலைத்துநிற்கக்கூடிய தலைவர்கள் (CEO) விருதும்' ('100 Global Sustainable Leaders (CEO) Award') அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதியுயர் நிலைத்துநிற்கும் தலைமையாளர்களாக அதி சிறந்த தொழில்வல்லுனர்கள் மற்றும் நிறுவனங்களின் அடையாளமாக இவ் விருது உள்ளது.

திரு. செனரத் பண்டார
(2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதியன்று பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டார்)
பிரதிப் பொது முகாமையாளர் (விற்பனைகள் மற்றும் விநியோகவழி முகாமைத்துவம்)

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்
2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம்

கம்பனிகள் குழுமத்திலான பணிப்பாண்மைப் பொறுப்பு:
எம்பீஎஸ்எல், எம்பீஎஸ்எல் இன்சுரன்ஸ், எச்எச் (HH), கேஎச்பி இல் மாற்றீடான பணிப்பாளர்

திறன்களும் அனுபவமும்
திரு. பண்டார அவர்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச வங்கித்தொழில் அரங்கு இரண்டிலுமே பல்வகைப்பட்ட துறைகளில் 28 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்துடன் ஒரு தொழில்துறை வங்கியாளராக உள்ளார்.

அவர் பௌதீக விஞ்ஞானத்தில் இரண்டாம் வகுப்புடன்கூடிய (மேற் பிரிவு) தனது முதலாவது பட்டத்தினை இலங்கை களனிப் பல்கலைக்கழகத்திலிருந்தும் அதிவிசேட சித்தியுடன்கூடிய வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டத்தினை இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின் கற்கைகள் நிறுவகத்திலிருந்தும் (PIM) பெற்றுள்ளார். அவர் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் சக உறுப்பினரும் ஆவதுடன் 1998 ஆம் ஆண்டில் அதிசிறந்த மாணவருக்கான தங்கப் பதக்கத்தினை வென்று அதே நிறுவகத்திலிருந்து வங்கி முகாமைத்துவத்தில் நிறைவேற்றுப் பட்டப்பின் டிப்ளோமா ஒன்றைப் பெற்றுள்ளார்.ஐக்கிய அமெரிக்காவின் (யுஎஸ்ஏ) ஹாவார்ட் வியாபாரக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட உயர் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தினை அவர் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார்.

கூட்டாண்மை முகாமையில் வகித்த பதவிகள்
பிரதிப் பொது முகாமையாளர்
(உற்பத்திப் பொருள் மற்றும் அபிவிருத்தி வங்கியியல்) –
2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் வரை

பிரதிப் பொது முகாமையாளர்
(விற்பனைகள் மற்றும் விநியோக வழி முகாமைத்துவம்) -
2016 ஆம் ஆண்டு யூலை மாதத்திலிருந்து 2018 பெப்ரவரி மாதம் 21 வரை

ஆண்டுக் காலத்தில் வகித்த ஏனைய பதவிகள்
திரு. பண்டார அவர்கள் பிராந்திய அபிவிருத்தி வங்கிக்கான இலங்கை வங்கியின் (BOC) பெயர்குறித்து நியமிக்கப்படும் பணிப்பாளர்

ஒருவராக சேவையாற்றினார். அவர்இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் ஆளும் சபையின் உறுப்பினர் ஒருவராக சேவையாற்றுவதுடன் இலங்கையிலுள்ள முன்னணி தொழில்சார் வங்கியாளர் அமைப்பான இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கத்தின் கிட்டிய கடந்தகாலத் தலைவரும் ஆவார். எம்பீஎஸ்எல் காப்புறுதி நிறுவனத்தின் பணிப்பாளராகவும் சேவையாற்றி உள்ளார்.

தொழில் மைல்கற்கள்

திரு. பண்டார அவர்கள் 1990 ஆம் ஆண்டில் இவ் வங்கியில் ஒரு முகாமைத்துவப் பயிலுனராக இணைந்ததுடன் பிரதானமாக தகவல் முறைமைகள், முதலீடுகள், திறைசேரி முகாமைத்துவம், சர்வதேச வங்கி நடவடிக்கைகள் மற்றும் கூட்டாண்மை வங்கித் தொழில் ஆகிய துறைகளில் உள்நாடு மற்றும் சர்வதேசம் இரண்டிலுமே அனுபவத்தினைப் பெற்றுள்ளார். அவர் உதவிப் பொது முகாமையாளராக (வெளிநாட்டுக் கிளைகள்) இருந்த போது லண்டனில் இலங்கை வங்கி நடவடிக்கைகளை கிளையிலிருந்து துணை நிறுவனம் ஒன்றாக மாற்றும் செய்முறைக்கு வெற்றிகரமாகத் தலைமை வகித்தார்.பின்னர் அவர் 2011ஆம் ஆண்டில் பாங் ஒவ் சிலோன் (யு.கே.) லிமிட்டட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அலுவலராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் உதவிப் பொது முகாமையாளர் (சர்வதேசம்) ஆகவும் உதவிப் பொது முகாமையாளர் (கூட்டாண்மை உறவுகள்) ஆகவும் சேவையாற்றினார்.

அவர் இவ் வங்கியின் தொழில்நுட்பத்தினால் தூண்டப்பெறும் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் அதிகூடிய பாகமாக இருந்துள்ளதுடன் 2013/14 ஆம் ஆண்டில் மைய வங்கியியல் தரமுயர்வுக் கருத்திட்டத்திற்கும் 2014/15 ஆம் ஆண்டில் பொஸ்ரொன் கொன்சல்ற்றிங் குரூப் நிறுவனத்துடன் அமுல்படுத்தப்பட்ட வங்கி பரந்தளவு நிலைமாற்ற கருத்திட்டத்திற்கும் தலைமைத்துவத்தினை நல்கியிருந்தார். கடன் மற்றும் முதலீட்டு முகாமைத்துவத் துறையில் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தில் ஒரு வளவாளராக அவர் இருந்துள்ளார்.

இவ் வங்கியில் இணைவதற்கு முன்னர், அவர் இலங்கை களனிப் பல்கலைக்கழகத்தில் ஓர் உதவி விரிவுரையாளராக இருந்ததுடன் இலங்கை மகாவலி அதிகார சபையிலும் கிட்டத்தட்ட நான்கு வருடங்கள் அவர் சேவையாற்றியிருந்தார்.

திரு. டபிள்யூ. பி. ரசல் பொன்சேகா

பிரதம நிதி அலுவலர்/பிரதிப் பொது முகாமையாளர் (சர்வதேசம், திறைசேரி மற்றும் முதலீடு)

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்
2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம்

கம்பனிகள் குழுமத்திலான பணிப்பாண்மைப் பொறுப்பு:
எம்பீஎஸ்எல் மற்றும் எம்பீஎஸ்எல் இன்சுரன்ஸ் (கணக்காய்வுக் குழுத் தலைவர்)

திறன்களும் அனுபவமும்

திரு. பொன்சேகா அவர்கள் நிதி முகாமைத்துவம் மற்றும் தந்திரோபாய திட்டமிடலில் விசேடத்துவமிக்க அறிவுடன் வங்கியியல் நடவடிக்கைகளில் 28 வருடங்களுக்கு மேற்பட்டறிவினைக் கொண்டுள்ளார்.

அவர் இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிர்வாகத்தில் விஞ்ஞான இளமாணி (விசேட) பட்டத்தினைப் பெற்றுள்ள பட்டதாரி ஆவதுடன்இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின் கற்கைகள் நிறுவகத்திலிருந்து பெற்றுக்கொண்ட முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமான ஒன்றினையும் அவுஸ்திரேலியாவின் தெற்கு குயீன்ஸ்லான்ட் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டத்தினையும் கொண்டுள்ளார்.அவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் சக உறுப்பினரும் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் இணைந்த உறுப்பினரும் ஆவார்.

கூட்டாண்மை முகாமையில் வகித்த பதவிகள்

பிரதிப் பொது முகாமையாளர்
(நிதி மற்றும் திட்டமிடல்) -
2012 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து 2013 ஆம் ஆண்டு மே மாதம் வரை/2015 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்திலிருந்து 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை

பிரதிப் பொது முகாமையாளர்
(சில்லறை வங்கித் தொழில்)
2013 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து 2015 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் வரை

பதில் பிரதம நிதி அலுவலர்
2014 ஆம் ஆண்டு யூலை மாதத்திலிருந்து 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை

பிரதம நிதி அலுவலர்
2016 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து தற்போது வரை

பிரதிப் பொது முகாமையாளர்
(சர்வதேசம், திறைசேரி மற்றும் முதலீடு) - 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து

ஆண்டுக் காலத்தில் வகித்த ஏனைய பதவிகள்

திரு. பொன்சேகா அவர்கள் 2016 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்திலிருந்து லங்கா செக்குரிற்றீஸ் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிப்பாளர் ஒருவராகநியமிக்கப்பட்டுள்ளார். அவர் 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து லங்காகிளியர் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவன சபையில் மாற்றீடான பணிப்பாளர் ஒருவராகவும் சேவையாற்றுவதுடன் அதன் கணக்காய்வுக் குழுவின் தலைவராகவும் செயற்படுகின்றார். 2017ம் ஆண்டு டிசெம்பர் வரை ரீஎல்ஆர்எஸ் இன் தலைவராகவும், எம்பீஎஸ்எல் காப்புறுதி நிறுவனத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார்.

தொழில் மைல்கற்கள்

அவர் சில்லறை (தனியாள் வாடிக்கையாளர்) வங்கித் தொழிலுடன் தனது தொழிலினை ஆரம்பித்து 1990 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இவ் வங்கியில் இணைந்தார்,அதன் பின்னர் இவ் வங்கியின் நிதி முகாமைத்துவம் மற்றும் தந்திரோபாயத் திட்டமிடலில் நிபுணத்துவத்தைப் பெற்ற அதேவேளை வணிக வங்கித் தொழிலில் சகல அம்சங்களிலும் பரந்துபட்ட அனுபவத்தினை அடைந்துள்ளார்.திறைசேரி மற்றும் சர்வதேச வங்கியியல் செயற்பாடுகளில் முழுமையான அனுபவத்தினை அவர் பெற்றுக்கொண்ட இலங்கை வங்கி லண்டன் கிளையிலும் அவர் சேவையாற்றினார்.

திரு. டீ. பி. கே. குணசேகர
பிரதிப் பொது முகாமையாளர்
(கூட்டாண்மை மற்றும் கரைகடந்த வங்கித் தொழில்)

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்
2013 ஆம் ஆண்டு மே மாதம்

கம்பனிகள் குழுமத்திலான பணிப்பாண்மைப் பொறுப்பு:
எம்எஸ்எஸ் (MSS)

திறன்களும் அனுபவமும்
திரு. குணசேகர அவர்கள் இவ் வங்கியில் வெவ்வேறான வியாபார நடவடிக்கைகளில் 38 வருடங்களுக்கு மேற்பட்ட வங்கித் தொழில் அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

அவர் இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான இளமாணி (வியாபார நிர்வாகம்) பட்டதாரி ஆவதுடன் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்திலிருந்து பெற்றுக்கொண்ட வியாபார மற்றும் நிதி நிர்வாகத்தில் பட்டப்பின் டிப்ளோமா ஒன்றினையும் கொண்டுள்ளார். அவர் அவுஸ்திரேலியாவின் தென் குயீன்ஸ்லான்ட் பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்டுள்ளார். அவர் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் இணைந்த உறுப்பினர் ஒருவராகவும் உள்ளதுடன் இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின் கற்கைகள் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தைப் பூர்த்தி செய்துள்ளார்.

கூட்டாண்மை முகாமையில் வகித்த பதவிகள்
பிரதிப் பொது முகாமையாளர்
(சில்லறை வங்கித் தொழில்) - 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து மே மாதம் வரையில்

பிரதிப் பொது முகாமையாளர்
(கூட்டாண்மை மற்றும் கரைகடந்த வங்கித் தொழில்) 2013 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து தற்போது வரை.

தொழில் மைல்கற்கள்
திரு. குணசேகர அவர்கள் 1980 ஆம் ஆண்டில் இவ் வங்கியில் இணைந்து கிளை வலையமைப்பில் பரந்துபட்ட அனுபவத்தினைப் பெற்று சில்லறை (தனியாள் வாடிக்கையாளர்) வங்கித் தொழிலுடன் தனது தொழிலினை ஆரம்பித்ததுடன் அதன் பின்னர் மத்திய காசு மற்றும் கணக்குகள் திணைக்களங்களில் சேவையாற்றினார்.தலைமை அலுவலகத்தின் திறைசேரிப் பிரிவில் ஒரு திறைசேரி வணிகராக இணைந்து உள்நாட்டு ரீதியிலும் அதேபோலஇலங்கை வங்கி சென்னைக் கிளையில் வெளிநாட்டு ரீதியிலும் திறைசேரி மற்றும் பணச் சந்தை நடவடிக்கைகளில் பரந்துபட்ட அறிவினைப் பெற்றுள்ளார். இலங்கை வங்கி கையாள்கை பரப்பிலுள்ள அநேகமாக சகல பதவிகளையும் அவர் உள்ளடக்கியுள்ளார். 2008 – 2010 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் சென்னைக் கிளையில் பிரதி முகாமையாளராகவும்இலங்கை வங்கி திறைசேரி அலகிலும் முகாமையாளராக/சிரேஸ்ட திறைசேரி வணிகராகவும் அவர் சேவையாற்றியுள்ளார்.

சீபாங் செக்குறிற்றீஸ் லிமிட்டெட் நிறுவனத்தில் முதலாவது பிரதம வணிகராக அவர் இருந்ததுடன், இலங்கை வங்கி திறைசேரிப் பிரிவில் நடுத்தர அலுவலகத்தை அமைப்பதிலான முன்னோடி உறுப்பினர்களுள் ஒருவராகவும் இருந்தார். திரு. குணசேகர அவர்கள் கூட்டாண்மை முகாமைக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர் உதவிப் பொது முகாமையாளர் (வெளிநாட்டுக் கிளைகள்) மற்றும் உதவிப் பொது முகாமையாளர் (கூட்டாண்மை உறவுகள்) பதவிகளையும் வகித்தார்.

திரு. கே. ஈ. டீ. சுமனசிறி
பிரதிப் பொது முகாமையாளர்
(மனித வளம்)

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்
2013 ஆம் ஆண்டு மே மாதம்

கம்பனிகள் குழுமத்திலான பணிப்பாண்மைப் பொறுப்பு:
எச்எச் (HH)

திறன்களும் அனுபவமும்
திரு. சுமனசிறி அவர்கள் சில்லறை வங்கித் தொழில், நுண் நிதி,கூட்டாண்மை நிதி மற்றும் மனித வள அபிவிருத்தி ஆகியவற்றில் 28 வருட மேம்பட்டதும் பல்வகைப்பட்டதுமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

அவர் இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிர்வாகத்தில் விஞ்ஞான இளமாணி (கௌரவ.) பட்டத்தினைப் பெற்றதுடன் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் இணைந்த உறுப்புரிமையையும் கொண்டுள்ளார். அவர் இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின் கற்கைகள் நிறுவகத்தினால் (PIM) நடாத்தப்பட்ட 'தொழில் தலைவர்களுக்கான உயர் முகாமைத்துவம் மற்றும் பொதுக் கொள்கைக்கான விசேட முகாமைத்துவக் கற்கைநெறியினையும்' அத்துடன் 'முக்கியமான முகாமைத்துவ ஆளணிக்கான முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தையும்' வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளார்.

கூட்டாண்மை முகாமையில் வகித்த பதவிகள்
பிரதிப் பொது முகாமையாளர்
(அறவீடு) – 2013 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து 2014 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் வரை/2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை

பிரதிப் பொது முகாமையாளர்
(மனித வளங்கள்) – 2014 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்திலிருந்து 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை/2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திலிருந்து தற்போது வரை

ஆண்டுக் காலத்தில் வகித்த ஏனைய பதவிகள்
திரு. சுமனசிறி அவர்கள் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் ஆளும் சபையின் மாற்றீடான பணிப்பாளர் ஒருவராக சேவையாற்றுகின்றார்.

தொழில் மைல்கற்கள்
1990 ஆம் ஆண்டில் தனது வங்கியியல் தொழிலினை ஆரம்பித்து திரு. சுமனசிறி அவர்கள் சில முக்கியமான பதவிகளை வகித்த அதேவேளை கிளை வலையமைப்பிலும் சேவையாற்றினார். முகாமையாளர் (பயிற்சி) பதவியினை வகித்து இவ் வங்கியின் பயிற்சி நிறுவகத்தில் கல்வியாளராகவும் இருந்திருந்தார். அலுவலர் குழாத்தின் அறிவினை மேம்படுத்துவதில் அதிக சிரத்தை கொண்டிருந்ததுடன் அவர்களின் தொழில் அபிவிருத்தியில் மிகவும் முனைப்போடிருந்தார். கூட்டாண்மை முகாமைக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர், மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதில் முன்னணி வகிபாகத்தினை ஆற்றியும் வடக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செழிப்புக்கு அளவற்ற பங்களிப்புச் செய்தும் உதவிப் பொது முகாமையாளர் (வடக்கு மாகாணம்) பதவியினை வகித்தார்.

திரு. எஸ். ஹேவாவிதாரண
பிரதிப் பொது முகாமையாளர் (துணைநிலைச் சேவைகள்)

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்
2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம்

கம்பனிகள் குழுமத்திலான பணிப்பாண்மைப் பொறுப்பு:
எச்எச் (HH)

திறன்களும் அனுபவமும்
திரு. ஹேவாவிதாரண அவர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வியாபார நடவடிக்கைகளில் பரந்துபட்ட அறிவினைப் பெற்று பல்வகைப்பட்ட துறைகளில் 34 வருட சேவையினைக் கொண்டுள்ள தொழில்துறை வங்கியாளராவார்.

அவர் இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியலில் விசேட பட்டத்தினைப் பெற்றுள்ளதுடன் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் இணைந்த உறுப்புரிமையையும் கொண்டுள்ளார். அவர் இலங்கை றுகுணு பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிர்வாகத்தில் பட்டப்பின் டிப்ளோமா ஒன்றினையும் கொண்டுள்ளார்.

தொழில் மைல்கற்கள்
திரு. ஹேவாவிதாரண அவர்கள் 1983 ஆம் ஆண்டு இவ் வங்கியில் இணைந்து கொண்டு கிளை வலையமைப்பில் சேவையாற்றிய அதேவேளை சில முக்கிய பதவிகளையும் வகித்தார். கல்வியாளர் மற்றும் சிரேஸ்ட முகாமையாளர் (பயிற்சி) பதவிகளை வகித்து மஹரகமவிலுள்ள இவ் வங்கியின் மத்திய பயிற்சி நிறுவகத்தில் தனது பதவிக்காலத்தின் போது வெளிவாரியான வளவாளர்களிடமிருந்து உதவியினைப் பெற்று வங்கி அலுவலர் குழாத்திற்கான மென் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்துவதில் அளப்பரிய பங்காற்றியுள்ளார். அவர் இவ் வங்கியின் பிறீமியர் (முன்னணி) கிளையினைத் ஸ்தாபிப்பதில் முன்னெடுப்பினை மேற்கொண்டிருந்ததுடன் அக் கிளைக்கு முதலாவது பிரதம முகாமையாளராக குறிப்பிடத்தக்க வகிபாகத்தினை ஆற்றியிருந்தார்.

அவர் இலங்கை வங்கி சென்னைக் கிளையிலும் பிரதி முகாமையாளராக சேவையாற்றியுள்ளதுடன் சர்வதேச வங்கித்தொழில் மற்றும் கூட்டாண்மை வங்கித்தொழிலில் சிறந்த அனுபவத்தினையும் பெற்றுள்ளார். இந்திய ஒதுக்கு வங்கி அதிகாரிகளுடன் பல வெற்றிகரமான கலந்துரையாடல்களை மேற்கொண்ட பின்னர், இலங்கை வங்கி சென்னைக் கிளையின் மைய வங்கித் தொழில் முறைமையினை தலைமையக வங்கியின் மைய வங்கித்தொழில் முறையாக மாற்றுவதையும் அவர் தொடக்கி வைத்தார்.

கூட்டாண்மை முகாமைக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர் உதவிப் பொது முகாமையாளர் (ஊவா மாகாணம்) மற்றும் (மத்திய மாகாணம்) பதவிகளை அவர் வகித்தார்.

அம்மணி. ஜானகி சேனநாயக்க சிறிவர்த்தன
இலங்கை வங்கிச் செயலாளர்/சபைச் செயலாளர்

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்
2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம்

திறன்களும் அனுபவமும்
அம்மணி. சிறிவர்த்தன அவர்கள் கம்பனி செயலகப் பணியிலும் கூட்டாண்மை ஆட்சி நடைமுறைகளிலும் நிபுணத்துவம் பெற்று,இவ் வங்கியில் 22 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

அவர் தொழில் ரீதியில் ஒரு சட்டத்தரணி ஆவதுடன் சட்ட இளமாணிப் பட்டத்தினையும் கொண்டுள்ளார். அவர் இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட வியாபார நிர்வாகத்தில் அதிவிசேட சித்தியுடன்கூடிய முதுமாணிப் பட்டத்தினையும் கொண்டுள்ளார்.

ஆண்டுக் காலத்தில் வகித்த ஏனைய பதவிகள்
சீபாங் ஹொலிடே ஹோம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினதும் பீ.ஓ.சி. மனேஜ்மென்ற் அன்ட் சப்போர்ட் சேவிர்ஸஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினதும் கம்பனிச் செயலாளராக சேவையாற்றுகின்றார்.

தொழில் மைல்கற்கள்
அம்மணி. சிறிவர்த்தன அவர்கள் 1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இவ் வங்கியின் சபையின் உதவிச் செயலாளராக இவ் வங்கியில் இணைந்ததுடன் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சபைச் செயலாளராக/இலங்கை வங்கிச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

சபையின் சகல உபகுழுக்களினதும் செயலாளராகவும் அவர் சேவையாற்றுவதுடன் கூட்டாண்மை ஆட்சி விதிகள் மற்றும் நடைமுறைகளுடன் வங்கியின் ஒத்திசைவிற்கும் உதவுகின்றார்.

இலங்கை வங்கியில் இணைவதற்கு முன்னர், தனியார் சட்டத்தரணிகள் சங்கத்தில் சட்டத்தரணி ஒருவராக அவர் பணியாற்றியதுடன், அதன்பின்னர் சட்ட மற்றும் மனிதவள பணியினை ஒன்றுசேர்த்து IPOs, ஒன்றிணைப்புகள் போன்றவை உள்ளடங்கலான கம்பனி செயலகப் பணியினைக் கையாண்டு,கம்பனிகள் குழுமமொன்றில் அவர் பணியாற்றினார்.

அவர் இலங்கை களனிப் பல்கலைக்கழகத்தின் கைத்தொழில் முகாமைத்துவத் திணைக்களத்தில் வர்த்தக மற்றும் கைத்தொழில் சட்டத்தில் வருகைதரு விரிவுரையாளராகவிருந்தார்.

திரு. டி. என். எல். பெர்னான்டோ
பிரதம இடர் அலுவலர்

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்
2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம்

திறன்களும் அனுபவமும்
திரு. பெர்னான்டோ அவர்கள் அநேகமாக இவ் வங்கியின் சகல பிரிவுகளையும் தழுவி இவ் வங்கியில் கிட்டத்தட்ட 32 வருடகால அனுபவத்துடன்கூடிய தொழில்துறை வங்கியாளர் ஆவார்.

அவர் இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து கணிதப் பிரிவில் விஞ்ஞான இளமாணிப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டதுடன் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் இணைந்த உறுப்புரிமையையும் கொண்டுள்ளார்.

தொழில் மைல்கற்கள்
அவரின் ஆரம்பத் தொழிலில், மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் பல்வேறுபட்ட பதவிகளில் கிளைகளில் சேவையாற்றி வந்தார். பின்னர், அக் காலப்பகுதியில் சில புத்தாக்க உற்பத்திப் பொருட்களும் சேவைகளும் அறிமுகப்படுத்தப்பட்ட தலைமை அலுவலகத்தில் அறவீட்டு அலகு மற்றும் உற்பத்தி மற்றும் அபிவிருத்தி வங்கித்தொழில் அலகு ஆகியவற்றில் அவர் சேவையாற்றினார். 1995 ஆம் ஆண்டில் லண்டன் கிளையில் ஒரு வருடப் பயிற்சியினையும் அதன்பின்னர் வெளிநாட்டு அனுபவத்தினைஅவர் பெற்றுக்கொண்ட பாகிஸ்தானில் இலங்கை வங்கி கராச்சி கிளையில் மூன்று வருடங்கள் பணியாற்றினார்.

அவர் நான்கு வருடங்கள் இவ் வங்கியின் மிகப்பெரிய மாகாணமான மேல் மாகாணத்தின் தெற்குப் பிரிவுக்குப் பொறுப்பான உதவிப் பொது முகாமையாளர் பதவியையும் இவ் வங்கியின் பிரதம இடர் அலுவலராக பணி ஒப்படைப்பினைப் பொறுப்பேற்பதற்கு முன்னர், மூன்று வருடங்கள் பாங் ஒப் சிலோன் (யு.கே.) லிமிட்டெட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அலுவலர் பதவியையும் வகித்தார்.

பிரதம இடர் அலுவலராக, இவ் வங்கியின் இடர் நடத்தைப் பாங்கினை மாற்றுவதிலும்,இடர் முகாமைத்துவ நோக்கெல்லையினை விரிவாக்குவதிலும் மற்றும் பல்வேறுபட்ட மட்டங்களில் வங்கியின் இடர் ஏற்பு மதிப்பீடு பற்றிய அறிக்கையிடலை சீரமைப்பதிலும் அவர் முனைப்போடிருந்துள்ளார்.

திரு. எம். எம். லஷ்மன் பெரேரா
தகவல் தொழில்நுட்பத் தலைவர்

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்
2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம்

திறன்களும் அனுபவமும்
திரு பெரேரா அவர்கள் இவ் வங்கியில் 32 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்டுள்ளதுடன்,வெவ்வேறுபட்ட பதவிகளில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் (ICT) பரந்துபட்ட அனுபவத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

அவர் இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரி ஒருவராவதுடன்,இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞான முதுமாணிப் பட்டத்தினையும் வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டத்தினையும் கொண்டுள்ளார்.அவர் இலங்கை கணனிச் சங்க சக உறுப்பினராக உள்ளதுடன் அதேபோன்று பிரித்தானிய (பிரிட்டிஷ்) கணனிச் சங்க உறுப்பினராகவும் உள்ளார்.

ஆண்டுக் காலத்தில் வகித்த ஏனைய பதவிகள்
திரு பெரேரா அவர்கள் வங்கியின் சீஐஒ (CIO) மன்றத்தின் தலைவராகவும் FINCSIRT வழிப்படுத்தல் குழுவின் ஓர் உறுப்பினராகவும் சேவையாற்றுகின்றார்.

தொழில் மைல்கற்கள்
திரு பெரேரா அவர்கள் முறைமை நிரல் பகுப்பாய்வாளராக 1986 ஆம் ஆண்டில் இவ் வங்கியில் இணைந்ததுடன்,தனது சேவைகளை மைய வங்கித்தொழில் பிரயோக முறைமைகளுடன் ஆரம்பித்தார். பன்முக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருத்திட்டங்களில் அவரின் முனைப்பான ஈடுபாட்டிற்கூடாக அவரின் அனுபவம் மேம்படுத்தப்பட்டது.அவர் கூட்டாண்மை முகாமைக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர், தகவல் தொழில்நுட்ப (பிரயோக முறைமைகள்) உதவிப் பணிப்பாளர் பதவியினை வகித்தார்.

1996 ஆம் ஆண்டு தொடக்கம் 1997 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தென்னாபிரிக்க ஸ்ரான்டட் வங்கியிலும் அவர் சேவையாற்றினார்.

அம்மணி கயா ஜயசிங்ஹ
பிரதம சட்ட அலுவலர்

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்
2016 ஆம் ஆண்டு யூன் மாதம்

கம்பனிகள் குழுமத்திலான பணிப்பாண்மைப் பொறுப்பு:
ட்ரவெல்ஸ்

திறன்களும் அனுபவமும்
அம்மணி ஜயசிங்ஹ அவர்கள் அவர் சட்டத்துறையில் 34 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்டுள்ளதுடன் இலங்கை வங்கியில் 31 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்டுள்ளார். அவர் சர்வதேச வர்த்தகச் சட்டத்தில் பட்டப்பின் சட்டத்தரணி டிப்ளோமா ஒன்றுடன்கூடிய ஒரு சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஆவார். அவர் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திலும் இலங்கை கூட்டிணைந்த வழக்கறிஞர் சங்கத்திலும் ஓர் உறுப்பினராகவும் உள்ளார்.

அவர் கடன் ஆவணப்படுத்தல் மற்றும் வங்கியியல் சட்டம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க அனுபவத்தைக் கொண்டுள்ளார். சர்வதேச வர்த்தகத்தில் உயர் கடன் ஆவணப்படுத்தல் துறை மற்றும் உத்தரவாதப் பத்திரங்கள் மற்றும் தயார்நிலை நாணயக் கடிதங்கள் ஆகியவற்றின் சட்டம் மற்றும் நடைமுறைத் துறைகளில் யூரோ பணப் பயிற்சி ஆசிய பசுபிக் நிறுவனம் மூலம் நடாத்தப்பட்ட சர்வதேசப் பயிற்சியினையும் சிங்கப்பூர் மற்றும் ஹொங்கொங் ஆகிய நாடுகளில் அவர் பெற்றுக்கொண்டுள்ளார்.

தொழில் மைல்கற்கள்
அவர் 1986 ஆம் ஆண்டு யூலை மாதம் உதவிச் சட்ட அலுவலராக இவ் வங்கியில் இணைந்து சட்டத் திணைக்களத்தில் தனது தொழிலை ஆரம்பித்தார். சில மாகாணச் சட்ட அலகுகளில் சேவையாற்றுவதற்கான வாய்ப்பினை அவர் பெற்றுக்கொண்டதுடன் கடன் மற்றும் அறவீட்டுத் துறைகளிலும், வங்கியியல் சட்டத்தினதும் மற்றும் வணிகக் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புபட்ட ஏனைய சட்டங்களினதும் சகல அம்சங்களிலும் பரந்துபட்ட அனுபவத்தினைப் பெற்றுக்கொண்டார்.

இவ் வங்கியின் குழுக்கடன் வசதிகள், கப்பல் ஈடுவைத்தல் மற்றும் வர்த்தக நிதிச் செயற்பாடுகள் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட சட்டப் பணியில் பரந்துபட்ட அறிவை அவர் பெற்றுக்கொண்ட கூட்டாண்மைப் பிரிவுக்கு 2005 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை சிரேஷ்ட சட்ட அலுவலராக அளப்பரிய பங்களிப்பினை அவர் செய்தார். பிரதம சட்ட அலுவலராக நியமிக்கப்படுவதற்கு முன்பதாக 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை பிரதிப் பிரதம சட்ட அலுவலராக (கடன்) அவர் சேவையாற்றினார்.

அம்மணி ஜயசிங்ஹ அவர்கள் மத்திய வங்கியின் பயிற்சி நிறுவகத்தில் வர்த்தக மற்றும் வங்கியியல் சட்டம் தொடர்பில் வருகைதரு விரிவுரையாளர் ஒருவராகவும் சேவையாற்றுகின்றார்.

திரு. சி. அமரசிங்ஹ
பிரதிப் பொது முகாமையாளர் - (சில்லறை வங்கித்தொழில் - வீச்சு II)

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்
2016 ஆம் ஆண்டு யூலை மாதம்

கம்பனிகள் குழுமத்திலான பணிப்பாண்மைப் பொறுப்பு:
ட்ரவெல்ஸ் மற்றும் பிடிஎம்எல் இல் மாற்றீடான பணிப்பாளர்

திறன்களும் அனுபவமும்
திரு. அமரசிங்ஹ அவர்கள் கிளை வங்கித் தொழிலிலும் கூட்டாண்மை மற்றும் கரைகடந்த வங்கித் தொழிலிலும் பரந்துபட்ட அறிவினைக் கொண்டு இவ் வங்கியில் 28 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

அவர் இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து பொது நிர்வாகத்தில் விஞ்ஞான இளமாணி (விசேட) பட்டத்தினைப் பெற்றுள்ளதுடன்,அதே பல்கலைக்கழகத்திலிருந்து முகாமைத்துவத்தில் விஞ்ஞான முதுமாணிப் பட்டம் ஒன்றையும் பெற்றுக்கொண்டுள்ளார். அவர் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் இணைந்த உறுப்பினர் ஒருவராகவும் உள்ளார்.

ஆண்டுக் காலத்தில் வகித்த பதவிகள்
அவர் இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் (CRIB) இன் மாற்றீடான பணிப்பாளர் ஒருவராக சேவையாற்றுகின்றார்.

அவர் இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கத்தின் உப தலைவராகவும் சேவையாற்றிவருகின்றார்.

தொழில் மைல்கற்கள்
திரு. அமரசிங்ஹ அவர்கள் முகாமைத்துவப் பயிலுனராக 1990 ஆம் ஆண்டில் இவ் வங்கியில் இணைந்ததுடன்,சில்லறை (தனியாள் வாடிக்கையாளர்) வங்கித் தொழிலில் தனது தொழிலை ஆரம்பித்தார். பின்னர், அவர் கூட்டாண்மை மற்றும் கரைகடந்த வங்கித் தொழில் பிரிவில் இணைந்து,கூட்டாண்மை மற்றும் கரைகடந்த வங்கித் தொழில் நடவடிக்கைகளின் ஒவ்வோர் அம்சங்களிலும் பரந்துபட்ட அறிவையும் அனுபவத்தையும் பெற்றுக்கொண்ட அதேவேளை இப் பிரிவின் தொழிலை குறிப்பிடத்தக்க காலப்பகுதிக்கு மேம்படுத்துவதற்கு அளப்பரிய பங்களிப்புச் செய்தார்.

கூட்டாண்மை முகாமைக்கு அவர் நியமிக்கப்படுவதற்கு முன்னர், உதவிப் பொது முகாமையாளர் (கரைகடந்த வங்கித்தொழில்) மற்றும் உதவிப் பொது முகாமையாளர் (கூட்டாண்மை உறவுகள்) பதவிகளை வகித்தார்.

திரு. எம். ஜே. பி. சல்காது

பிரதிப் பொது முகாமையாளர் (உற்பத்திப் பொருள் மற்றும் வங்கித்தொழில் அபிவிருத்தி)

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்

2016 ஆம் ஆண்டு யூலை மாதம்

திறன்களும் அனுபவமும்

திரு. சல்காது அவர்கள் தனியாள் வாடிக்கையாளர் வங்கித்தொழில், மாகாண விற்பனை முகாமைத்துவம் மற்றும் உற்பத்திப் பொருள் மற்றும் வங்கித்தொழில் அபிவிருத்தி ஆகியவற்றில் நிபுணத்துவத்தைப் பெற்று இவ் வங்கியில் 28 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

அவர் இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வர்த்தக இளமாணி (விசேட) பட்டத்தினைப் பெற்றுக்கொண்டதுடன், இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் இணைந்த உறுப்புரிமையினையும் கொண்டுள்ளார். அவர் இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் சங்கத்தின் உறுப்பினர் ஒருவராக உள்ளதுடன், அதேபோன்று இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்திலிருந்தான பட்டயதாரர் சான்றிதழையும் கொண்டுள்ளார்.

ஆண்டுக் காலத்தில் வகித்த பதவிகள்

திரு. சல்காது அவர்கள் பிராந்திய அபிவிருத்தி வங்கியின் சபையில் பணிப்பாளர் ஒருவராகச் சேவையாற்றுகின்றார்.

தொழில் மைல்கற்கள்

திரு. சல்காது அவர்கள் முகாமைத்துவப் பயிலுனராக 1990 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இவ் வங்கியில் இணைந்து, தனியாள் வாடிக்கையாளர் வங்கித்தொழிலில் தனது தொழிலை ஆரம்பித்தார். பல்வேறுபட்ட பதவிநிலைகளில் முக்கியமான பல பதவிகளில் சேவையாற்றி, இவ் வங்கியின் உள்நாட்டு வங்கித்தொழில் மற்றும் கடனட்டை நடவடிக்கைகளில் பரந்துபட்ட அறிவினை திரு. சல்காது அவர்கள் பெற்றுள்ளார்.

திரு. சல்காது அவர்கள் கூட்டாண்மை முகாமைக்கு நியமிக்கப்படுவதற்கு முன்பதாக, உதவிப் பொது முகாமையாளர் (மாகாண விற்பனை முகாமைத்துவம்) பதவியினை வகித்ததுடன் தனது மேற்பார்வையின் கீழ் வந்த ISSP அமுலாக்க அலகு, விசேட கருத்திட்டம், இலங்கை வங்கி தொடர்பு மத்திய நிலையம், இலங்கை வங்கி முன்னணிக் கிளை (பீஓசி பிறீமியர்) மற்றும் இலங்கை வங்கி காப்புறுதித் திணைக்களம் ஆகியவற்றின் தொழிற்பாடுகளில் அளப்பரிய பங்களிப்புச் செய்தார். அவர் இவ் வங்கியின் 'வெனச' நிலைமாற்றுக் கருத்திட்டத்தின் செயலூக்கமிக்க உறுப்பினர் ஒருவராகவும் இருந்தார்.

திரு. ஆர். எம். டி. விபுல ஜயபாகு

பிரதிப் பொது முகாமையாளர் (நிதி மற்றும் திட்டமிடல்)

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்

2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம்

கம்பனிகள் குழுமத்தில் வகித்த தலைமைப் பொறுப்பு:

ரீஎல்ஆர்எஸ்

கம்பனிகள் குழுமத்திலான பணிப்பாண்மைப் பொறுப்பு:

எம்பீஎஸ்எல் மற்றும் எச்சீஎல் இல் மாற்றீடான பணிப்பாளர்

திறன்களும் அனுபவமும்

திரு. ஜயபாகு அவர்கள் இந்த வங்கியில் வேறுபட்ட வியாபார நடவடிக்கைகளில் 28 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

அவர் இலங்கை களனிப் பல்கலைக்கழகத்திலிருந்து வர்த்தக இளமாணிப் பட்டத்தை (விசேட பட்டம்) பெற்றுக்கொண்டதுடன் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்திலிருந்து வியாபார மற்றும் நிதி நிர்வாகத்தில் பட்டப்பின் டிப்ளோமா ஒன்றினையும் பெற்றுக்கொண்டுள்ளார். அவர் அவுஸ்திரேலியாவின் தெற்கு (சௌதேன்) குயீன்ஸ்லான்ட் பல்கலைக்கழகத்திலிருந்து நிதியில் வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டதுடன் இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின் கற்கைகள் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தையும் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார்.

தொழில் மைல்கற்கள்

திரு. ஜயபாகு அவர்கள் முகாமைத்துவப் பயிலுனராக 1990 ஆம் ஆண்டு இலங்கை வங்கியில் இணைந்து கிராமிய வங்கித் தொழிலிலும் அதன் பின்னர் தனியாள் வாடிக்கையாளர் வங்கியியலிலும் வங்கித் தொழிலை ஆரம்பித்து, தந்திரோபாயத் திட்டமிடலில் நிபுணத்துவம் பெற்றுள்ளதுடன் இவ் வங்கியின் சில கூட்டாண்மைத் திட்டங்களை விருத்தி செய்வதில் பங்களிப்புச் செய்துள்ளார்.

அவர் இவ் வங்கியின் வலைப்பின்னல் இணைப்பிலுள்ள (ஒன்லைன்) அதே நேர மைய வங்கித்தொழில் தீர்வுக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலான குழுத் தலைவர்களில் ஒருவராக இருந்ததுடன் குழு உறுப்பினர்களை வழிப்படுத்தியும் தனது அறிவு மற்றும் அனுபவத்தைப் பரிமாற்றம் செய்தும், இவ் வங்கியின் சர்வதேச நிதியியல் அறிக்கையிடல் நியமம் (IFRS) அமுலாக்க கருத்திட்டம், மைய வங்கித்தொழில் முறைமை மேம்படுத்தல் கருத்திட்டம் மற்றும் ஏனைய சில முறைமை அமுலாக்க கருத்திட்டங்கள் ஆகியவற்றில் முனைப்போடு ஈடுபட்டார்.

திரு. ஜயபாகு அவர்கள் கூட்டாண்மை முகாமைக்கு நியமிக்கப்படுவதற்கு முன்பதாக, 2012 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திலிருந்து 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை உதவிப் பொது முகாமையாளர் (பாதீடு, தந்திரோபாயத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமை (MIS) பதவியினை வகித்தார்.

திரு. ஜயபாகு அவர்கள் இலங்கை வங்கியில் இணைவதற்கு முன்பதாக, ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் பயிலுனர் அலுவலர் ஒருவராகவும் கூட்டிணைந்த மொத்தவிற்பனைத் தாபனத்தில் (CWE) உதவிக் கணக்காளர் ஒருவராகவும் சேவையாற்றியிருந்தார்.

திரு எம். ரீ. எம். ஜலால்டீன்
பிரதிப் பொது முகாமையாளர் (நிறுவன நிலைமாற்றம்)

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்
2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம்

திறன்களும் அனுபவமும்
திரு ஜலால்டீன் அவர்கள் இவ் வங்கியில் 28 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்டுள்ளதுடன் தற்போது வங்கித்தொழில் நடவடிக்கைகளில் பல்வேறுபட்ட துறைகளில் பட்டறிவைப் பெற்று பல்துறை விற்பனராக மாறியுள்ளார்.

திரு ஜலால்டீன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து கணிதத்தில் விஞ்ஞான இளமாணி (விசேட) பட்டத்தைப் பெற்ற பட்டதாரியாகவிருந்து, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்திலிருந்து வங்கியியல் மற்றும் நிதியில் பட்டப்பின் டிப்ளோமா ஒன்றினையும் இலங்கை வங்கியாளர் நிறுவகத்திலிருந்து இஸ்லாமிய வங்கியியலில் டிப்ளோமா ஒன்றினையும் கொண்டுள்ளார். அவர் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் இணைந்த உறுப்பினர் ஒருவராகவும் உள்ளார்.

வேறுபட்ட புவியியல் சார்ந்த அமைவிடங்களில் வேறுபட்ட பதவிகளில் பணியாற்றி, கிளை வங்கித்தொழில் மற்றும் மனித வள நடவடிக்கைகளில் பரந்துபட்ட அனுபவத்தை அவர் கொண்டுள்ளார். விசேடமாக, வங்கி நடவடிக்கைகளுக்கான தொழில்நுட்பச் செறிவுப் பிரயோகங்களுடன் தொடர்புபட்ட கருத்திட்டங்களை கையாள்கையில் பரந்துபட்ட திறன்களுடன்கூடிய தொழில்நுட்ப வங்கியாளர் ஒருவராக அவர் உள்ளார்.

தொழில் மைல்கற்கள்
திரு ஜலால்டீன் அவர்கள் முகாமைத்துவப் பயிலுனர்களில் ஒருவராக 1990 ஆம் ஆண்டு இலங்கை வங்கியில் இணைந்து, படிப்படியாக தொழில் ஏணியில் உயர்வு பெற்றுள்ளதுடன் 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து இரு வருடங்களுக்கு சென்னைக் கிளையில் பிரதி முகாமையாளராக இருந்து, இரண்டாம் நிலைக் கட்டளைத் தலைவராக சேவையாற்றியுள்ளார்.

அவர் இவ் வங்கியின் இணக்கப்பாட்டு அலுவலராக நியமிக்கப்பட்டார் அத்துடன், 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து உதவிப் பொது முகாமையாளர் (மனித வள நடவடிக்கைகள்) பதவியினை ஒன்றரை வருடங்களுக்கு வகித்ததுடன்,இவ் வங்கியின் மைய வங்கித்தொழில் முறைமையின் பதிப்புரு தரமுயர்வை சமாந்தரமாகக் கையாண்டுள்ளார். நிறுவன நிலைமாற்றத்தின் கீழான கருத்திட்ட-மொன்றாக ஆரம்பிக்கப்பட்ட பெறுபேறு மாற்ற முன்னெடுப்புக்களுக்கான கருத்திட்ட முகாமையாளராகவும் 2014 ஆம் ஆண்டு யூலை மாதத்திலிருந்து இரு வருடங்களுக்கு மேல் அவர் சேவையாற்றி வந்துள்ளார்.பிரதிப் பொது முகாமையாளர் தரத்துக்கான தனது பதவியுயர்வுடன் நிறுவன நிலைமாற்றத்திற்கான தனது தலைமைத்துவத்தை அவர் தொடர்ந்து ஆற்றுகின்றார்.

திரு. டீ. எம். எல். பீ. தசநாயக்க
பிரதிப் பொது முகாமையாளர் - (சில்லறை வங்கித்தொழில் - வீச்சு I)

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்
2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம்

கம்பனிகள் குழுமத்திலான பணிப்பாண்மைப் பொறுப்பு:
எம்பீஎஸ்எல் இல் மாற்றீடான பணிப்பாளர்

திறன்களும் அனுபவமும்
திரு. தசநாயக்க அவர்கள் விசேடமாக சில்லறை வங்கித்தொழில், கூட்டாண்மை நிதியீட்டம் மற்றும் சர்வதேச நடவடிக்கைகள் ஆகிய துறைகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பட்டறிவினைப் பெற்று, இவ் வங்கியில் 35 வருடங்களுக்கு மேற்பட்ட பரந்துபட்ட அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

அவர் இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழ-கத்திலிருந்து கலைமாணி (பொருளியல் விசேட) பட்டத்தினைப் பெற்ற ஒரு பட்டதாரி ஆவார். அவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்திலிருந்து வியாபாரம் மற்றும் நிதி நிர்வாகத்தில் பட்டப்பின் டிப்ளோமா ஒன்றினையும் இந்தியாவின் மகாத்மா காந்தி பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டம் ஒன்றையும் பெற்றுக்கொண்டுள்ளார். அவர் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் இணைந்த உறுப்பினர் ஒருவராகவும் உள்ளார்.

கூட்டாண்மை முகாமையில் வகித்த பதவிகள்
நாட்டுக்குரிய முகாமையாளர் (மாலைதீவு கிளை)
2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திலிருந்து 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை

பிரதிப் பொது முகாமையாளர்
(சில்லறை வங்கித்தொழில் - வீச்சு I)
2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து தற்போது வரை

தொழில் மைல்கற்கள்
திரு. தசநாயக்க அவர்கள் 1982 ஆம் ஆண்டு தனது வங்கித்தொழிலை ஆரம்பித்து, ஒன்பது வருடங்கள் வெளிநாட்டுக் கிளைகளில் முதன்மையான பதவிகளை வகித்து, கூட்டாண்மை வங்கித்தொழில் மற்றும் சர்வதேச நடவடிக்கைகள் ஆகியவற்றில் நிபுணத்துவத்தைப் பெற்று, வங்கித்தொழிலில் ஒட்டுமொத்தமான அனுபவத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார். அவர் தொடர்புகொள் அலுவலராகவும், தொடர்புகொள் முகாமையாளராகவும், அதன்பின்னர் கூட்டாண்மை வங்கிப் பிரிவில் உதவிப் பொது முகாமையாளராகவும் (கூட்டாண்மைக் கடன்) சேவையாற்றியுள்ளார். 2000 ஆம் ஆண்டிலிருந்து 2003 ஆம் ஆண்டு வரை, அவர் லண்டனில் இலங்கை வங்கியின் துணை நிறுவனம் ஒன்றான பாங் ஒப் சிலோன் (யு.கே.) லிமிட்டெட் நிறுவனத்தில் வியாபார நிதி நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாளராக சேவையாற்றினார்.

2016 ஆம் ஆண்டில் கூட்டாண்மை முகாமைக்கு நியமிக்கப்படுவதற்கு முன்பதாக அவர் மாலைதீவு கிளையின் நாட்டுக்குரிய முகாமையாளராகவும் தனது கடமைகளை ஆற்றினார்.

திரு. டபிள்யு. ஏ. சி. திசேரா
பிரதிப் பொது முகாமையாளர் (அறவீடு)

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்
2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம்

கம்பனிகள் குழுமத்திலான பணிப்பாண்மைப் பொறுப்பு:
எம்எஸ்எஸ்

திறன்களும் அனுபவமும்
திரு. திசேர அவர்கள் இவ் வங்கியில் 39 வருடங்களுக்கு மேற்பட்ட பரந்துபட்ட சேவையினைக் கொண்டு, அபிவிருத்தி வங்கித்தொழில் மற்றும் நுண்நிதியில் பரந்துபட்ட அனுபவத்தைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன் விவசாயம், கடற்றொழில் மற்றும் கால்நடை ஆகிய துறைகளில் கடன் வழங்கலில் தனது நிபுணத்துவ அறிவினை மேம்படுத்தி வருகின்றார்.

இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் இணைந்த உறுப்பினர் ஒருவராக இருந்துகொண்டு, அதே நிறுவகத்திலிருந்து வங்கி முகாமைத்துவத்தில் பட்டப்பின் நிறைவேற்று டிப்ளோமாவையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

ஆண்டுக் காலத்தில் வகித்த ஏனைய பதவிகள்
அவர் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபை மற்றும் அதேபோன்று தேசிய கடற்றொழில் சம்மேளனம் ஆகியவற்றின் சபைகளில் பணிப்பாளர் ஒருவராக சேவையாற்றியுள்ளார்.

தொழில் மைல்கற்கள்
திரு. திசேரா அவர்கள் 1978 ஆம் ஆண்டு வங்கித் தொழிலை ஆரம்பித்து, விசேடமாக கருத்திட்டக் கடன் வழங்கலில், அபிவிருத்தி வங்கித்தொழில் நடவடிக்கைகளில் முனைப்போடு ஈடுபட்டுள்ளார். இவர் இலங்கை வங்கியில் பணியாற்றிக்கொண்டிருந்த போதிலும் களுத்துறையில் ஆரம்பிக்கப்பட்ட 1 ஆவது பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கியில் இலங்கை மத்திய வங்கியினால் பணிக்கு அமர்த்தப்பட்டு தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகளுக்கு அங்கு இரண்டாம்நிலைச் சேவையாற்றினார்.

கிளை வலையமைப்பு பூராகவும் இவ் வங்கியின் மத்திய பயிற்சி நிறுவகத்திலும் தனது நிபுணத்துவ அறிவு மற்றும் அனுபவத்தினை வெளிப்படுத்தி, 'ஆற்றல் விருத்தி/திறன்கள் அபிவிருத்தி' மற்றும் 'முயற்சியாண்மை அபிவிருத்தி' போன்ற நுண்நிதிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதிலும் திரு. திசேரா அவர்கள் முனைப்போடிருந்துள்ளார். கூட்டாண்மை முகாமைக்கு நியமிக்கப்படுவதற்கு முன்பதாக, ஐந்து வருடங்கள் இவ் வங்கியின் உதவிப் பொது முகாமையாளராக (அபிவிருத்தி வங்கித்தொழில்) அவர் சேவையாற்றினார்.

சிறந்த கடன் அறவீட்டு மட்டமொன்றை இவ் வங்கியினால் வெற்றிகரமாகப் பேணக்கூடியதாகவிருந்துள்ள, NPA அறவீட்டு செய்முறையை மேம்படுத்தும் நோக்குடன் கிளை வலையமைப்பு பூராகவும் 'செயல்முகங்கொடுப்பு அறவீட்டு கலாசாரம்' ஒன்றை அபிவிருத்தி செய்வதில் அவர் முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளார்.

கலாநிதி. இந்துனில் லியனகே
பிரதம சந்தைப்படுத்தல் அலுவலர்

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்
2012 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம்

திறன்களும் அனுபவமும்
1989 ஆம் ஆண்டிலிருந்து சந்தைப்படுத்தல் துறையில் பல நிறுவனங்களுக்காக சேவையாற்றிய கலாநிதி. லியனகே அவர்கள் இலங்கையில் நிதிச் சேவைகள் தொழில், விரைவு நகர்வு நுகர்வுப் பொருட்கள் (FMCG), இலத்திரனியல் மற்றும் விவசாயத் துறைகள் ஆகியவற்றில் 28 வருடங்களுக்கு மேலான அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

கலாநிதி. லியனகே அவர்கள் சந்தைப்படுத்தல், முகாமைத்துவம் மற்றும் நிதி எனப் பெயரிடப்படும் மூன்று வேறுபட்ட துறைகளில் தொழில் ரீதியிலும் கல்வி ரீதியிலும் தகைமை பெற்றுள்ளார். அவர் இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டப்பின்படிப்புக் கற்கைகள் பீடத்திலிருந்து (FGS) பெற்றுக்கொண்ட கலாநிதிப் பட்டம் (PhD) ஒன்றினையும், இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட முகாமைத்துவத்தில் விஞ்ஞான முதுமாணிப் பட்டம் (MSc) ஒன்றினையும் அத்துடன் ஐக்கிய இராச்சியத்தின் (யுகே) பட்டய சந்தைப்படுத்தல் நிறுவகத்திலிருந்து பெற்றுக்கொண்ட சந்தைப்படுத்தலில் பட்டப்பின் டிப்ளோமா ஒன்றினையும் கொண்டுள்ளதுடன் அவுஸ்திரேலியாவின் சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தின் (ICMA- அவுஸ்திரேலியா) சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் (CMA) ஒருவராகவும் உள்ளார்.

கலாநிதி. லியனகே அவர்கள் இலங்கையில் முதலாவது பட்டய சந்தைப்படுத்தலாளர் பிரிவுடன் இணைக்கப்பட்டு 1997 ஆம் ஆண்டிலிருந்து பட்டய சந்தைப்படுத்தலாளர் ஒருவராக உள்ளதுடன் பட்டய சந்தைப்படுத்தல் நிறுவகத்தின் சக உறுப்பினர் (FCIM) ஒருவராகவும் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தின் சக உறுப்பினர் (FSLIM) ஒருவராகவும் உள்ளார். அவர் 1995 ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய இராச்சியத்தின் (யுகே) பட்டய சந்தைப்படுத்தல் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக உள்ளார். 2009 ஆம் ஆண்டு சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் (NUS) நடாத்தப்பட்ட தந்திரோபாய முகாமைத்துவ நிறைவேற்று நிகழ்ச்சித் திட்டம் உள்ளடங்கலாக பல சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் அவர் பங்குபற்றியுள்ளார்.

தொழில் மைல்கற்கள்
கலாநிதி. லியனகே அவர்கள் இலங்கை வங்கியில் இணைவதற்கு முன்னர் இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி இல் சந்தைப்படுத்தல் தலைவராகவுள்ள உதவித் துணைத் தலைவராக சேவையாற்றியுள்ளார். அவர் உற்பத்திப்பொருள்/வர்த்தகப் பொருள் முகாமையாளர் மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளர் பதவியில் பல்தேசிய மற்றும் உள்நாட்டு நிறுவனங்களில் சிரேஸ்ட பதவிகளையும் முன்னர் வகித்துள்ளார். அவரின் சந்தைப்படுத்தல் தொழில் முழுவதிலும் இந் நாட்டில் சில அடிப்படையான சர்வதேச மற்றும் உள்ளூர் வர்த்தகப் பொருள் சின்னங்கள்/உற்பத்திப் பொருட்களை அவர் உருவாக்கியுள்ளார்.

இலங்கை தொழில் சமூக அமைப்பின் (OPA) மூலம் வழங்கப்படும் சந்தைப்படுத்தலுக்கான மதிப்பு வாய்ந்த தேசிய அபெக்ஸ் (APEX) விருது 2016 (பினாக்கிள் (Pinnacle) விருது 2016) கலாநிதி. லியனகே அவர்களுக்கு வழங்கப்பட்டது. அவர்இந்தியாவின் மும்பை நகரத்தில் உலக சந்தைப்படுத்தல் ஒன்றுகூடல் 2015 இல் "கூடுதல் செல்வாக்குமிக்க சந்தைப்படுத்தல் தலைவர்கள் பட்டியல்" இல் கௌரவிக்கப்பட்டார் அத்துடன் மலேசியாவில் இடம்பெற்ற உலக சந்தைப்படுத்தல் மாநாடு கோல்டன் குளோப் ரைகர் எவோர்ட்ஸ் 2013 இல் "50 மோஸ்ட் ரலென்ரட் சிஎம்ஒஸ் (CMOs) எவோர்ட்" வழங்கியும் கௌரவிக்கப்பட்டார் அத்துடன் ஐக்கிய அமெரிக்காவின் (யுஎஸ்ஏ) ஹாவாய் இலுள்ள யப்பான் அமெரிக்க முகாமைத்துவ விஞ்ஞான நிறுவகத்தில் (JAIMS) "உலக முகாமையாளர்களுக்கான கலாசாரங்களுக்கிடையிலான கல்வி" நிகழ்ச்சித் திட்டத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட முதலாவது இலங்கையரும் ஆவார். 1996 ஆம் ஆண்டில் அவரின் கல்வி மேன்மை மற்றும் சர்வதேச புரிந்துணர்வு மற்றும் நன்மதிப்புக்கான சாத்தியமான பங்களிப்பு ஆகியவற்றின் அடையாளமாக இந் நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவுசெய்வதற்கு யப்பான் புஜிசு (Fujitsu) தாபனத்தினால் முழுமையான புலமைப்பரிசில் ஒன்று அவருக்கு வழங்கப்பட்டது.

திரு. பி. எம். லியனகே
பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்
2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம்

திறன்களும் அனுபவமும்
திரு லியனகே அவர்கள் 18 வருட பின் தகைமை அனுபவத்துடன் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் சக உறுப்பினர் ஒருவராக உள்ளதுடன், இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவ (விசேட) விஞ்ஞான இளமாணிப் பட்டத்தினைக் கொண்டுள்ளார். அவர் ஐக்கிய அமெரிக்காவின் (USA) ISACA இன் சான்றுப்படுத்தப்பட்ட தகவல் முறைமை கணக்காய்வாளர் (CISA) நிறுவகத்தின் உறுப்பினரும் ஆவார்.

தொழில் மைல்கற்கள்
இலங்கை வங்கியில் பிரதம உள்ளகக் கணக்காய்வாளராக இணைவதற்கு முன்னர், கொமர்ஷியல் கிரெடிட் மற்றும் நிதி பிஎல்சி நிறுவனத்திலும் பான் ஏஷியா வங்கியிலும் அதே பதவியில் அவர் சேவையாற்றியுள்ளார். திரு லியனகே அவர்கள் 2006-2008 வரையான காலப்பகுதியில் உதவிப் பொது முகாமையாளர் தரத்தில் உள்ளகக் கணக்காய்வாளராகவும் இலங்கை வங்கியில் சேவையாற்றியுள்ளார்.

திரு லியனகே அவர்களின் அனுபவமானது நிதி மற்றும் நிர்வாக முகாமையாளர் பதவியில் வரையறுக்கப்பட்ட லங்காகிளியர் (பிறைவேட்) நிறுவனத்தினையும் (தேசிய காசோலைத் தீர்ப்பனவு இல்லம்) தகைமைபெற்ற உதவியாளராக ஏன்ஸ்ற் அன்ட் யங் நிறுவனத்தினையும் உள்ளடக்குகின்றது.

திரு. பி. சி. விக்ரமபத்திரன
தொழில்நுட்ப நிலைமாற்றத் தலைவர்

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்
2016 ஆம் ஆண்டு யூலை மாதம்

திறன்களும் அனுபவமும்
திரு. விக்ரமபத்திரன அவர்கள் தகவல் தொழில்-நுட்ப (IT) தலைமைத்துவம், முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப/டிஜிட்டல் நிலைமாற்றம் ஆகியவற்றில் 31 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்துடன்கூடிய தகவல் தொழில்நுட்ப நிபுணராக உள்ளார். வங்கியியல் மற்றும் நிதி உள்ளடங்கலாக பல பல்வகைப்பட்ட வியாபாரத் துறை நிறுவனங்களில் 27 வருடங்களுக்கு மேலாக சில தகவல் தொழில்நுட்ப (IT) பணிப்பாளர் சார்ந்த மற்றும் கூட்டாண்மை முகாமைத்துவ மட்ட பதவிகளை அவர் வகித்துள்ளார்.

இந்தியாவின் சிக்கிம் மணிபால் பல்கலைக்கழகத்-திலிருந்து தகவல் முறைமைகளில் முதுமாணிப் பட்டமொன்றையும் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் (UK) கீலி பல்கலைக்கழகத்திலிருந்து தகவல் தொழில்நுட்பத்திலும் (IT) மற்றும் இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின் கற்கைகள் நிறுவகத்திலிருந்து கூட்டாண்மை முகாமைத்து-வத்திலும் பட்டப்பின் தகைமைகளையும் அவர் கொண்டுள்ளார். சுவீடனின் சுவீடிஷ் முகாமைத்துவ நிறுவகத்திலிருந்து (IFL) பிரயோக சர்வதேச டிப்ளோமா ஒன்றையும் அவர் கொண்டுள்ளார்.

ஆண்டுக் காலத்தில் வகித்த ஏனைய பதவிகள்
திரு. விக்ரமபத்திரன அவர்கள் ஆசிய பசுபிக் சர்வதேச ICT விருதுகளில் (APICTA) இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிறைவேற்றுசபை உறுப்பினர் ஒருவராகவும், இலங்கை தகவல் தொழில்நுட்ப கைத்தொழில் சம்மேளனத்தின் (FITISL) சபைப் பணிப்பாளர் ஒருவராகவும் மற்றும் இன்போரெல் (INFOTEL) லங்கா சொசெய்ரி நிறுவனத்தின் நிறைவேற்றுச் சபை உறுப்பினர் ஒருவராகவும் இருந்தார்.

தொழில் மைல்கற்கள்
திரு. விக்ரமபத்திரன அவர்கள் இலங்கை வங்கியில் இணைவதற்கு முன்பதாக, அமானா வங்கி பிஎல்சி நிறுவனத்தில் ஐந்து வருடங்களுக்கு மேல் பிரதம தகவல் அலுவலர் பதவியினை வகித்தார். அவர் முன்னர் அமானா இன்வெஸ்ற்மென்ற்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப தலைவர் பதவியை வகித்தார். ஐக்கிய நாடுகளின் சர்வதேச முகவராண்மை ஒன்றின் தேசிய தகவல் தொழில்நுட்ப (IT) மதியுரைஞராக அவர் சேவையாற்றியுள்ளார். அக்காலப்பகுதியில், அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களைக் கையாள்வதில் சிறந்த அனுபவத்தினை அவர் பெற்றுக்கொண்டார். சிறீலங்கன் IT சொப்வெயார் அன்ட் சொலூசன்ஸ் கம்பனி ஒன்றின் முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் (CEO) அவர் இருந்துள்ளார். அதற்கு முன்னர், பாரிய கொழும்பினை அடிப்படையாகக் கொண்ட புளூ-சிப் குரூப் ஒப் கொம்பனீஸ் (blue-chip group of companies) ஒன்றின் குழு தகவல் தொழில்நுட்ப (Group IT) பணிப்பாளர் பதவியை அவர் வகித்ததுடன், அதேபோன்று அங்கு சில துணை நிறுவனங்களின் சபைகளில் பணிப்பாளர் ஒருவராகவும் சேவையாற்றினார்.

திரு. விக்ரமபத்திரன அவர்கள் இவ் வங்கியின் சிஐஓ (CIO) மன்றத்தின் ஸ்தாபக உறுப்பினர் ஒருவராக இருந்ததுடன் 2013/14 ஆம் மற்றும் 2014/15 ஆம் ஆண்டுகளில் இதன் செயலாளரா-கவும் சேவையாற்றினார். 2005/2006 ஆம் ஆண்டில் இலங்கை மென்பொருள் கைத்தொழிலுக்கான சங்கத்தின் (SLASI) தலைவராக இருந்தார்.


பீஎல்சி யூகே *- இலங்கை வங்கி (யூகே) லிமிடெட்,* ***பிடிஎல்*** *- புரொபற்றி டிவெலப்மென்ற் பிஎல்சி,* ***எச்சிஎல்*** *- ஹோட்டல்ஸ் கொழும்பு (1963) லிமிடெட்,* ***எம்எஸ்எஸ்*** *- பீஎல்சி மனேஜ்மென்ற் அன்ட் சப்போர்ட் சேர்விசஸ் (பிரைவேற்) லிமிடெட்,* ***பிடிஎம்எல்*** *- பீஎல்சி புரொபற்றி டிவெலப்மென்ற் அன்ட் மனேஜ்மென்ற் (பிரைவேற்) லிமிடெட்,* ***ட்ரவல்ஸ்*** *- பீஎல்சி ட்ரவல்ஸ் (பிரைவேற்) லிமிடெட்,* ***எம்பிஎஸ்எல்*** *- மேர்ச்சன்ற் பாங் ஒப் சிறிலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சி,* ***எம்பிஎஸ்எல் இன்சூரன்ஸ்*** *- எம்பிஎஸ்எல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடெற்,* ***கேஎச்பி*** *- கொலதெனிய ஹைட்ரோபவர் (பிரைவேற்) லிமிடெட்,* ***எச்எச்*** *- சீபேங் ஹொலிடே ஹோம்ஸ் (பிரைவேற்) லிமிடெட்,* ***சீபேங் அசெற்*** *- சீபேங் அசெற் மனேஜ்மென்ற் லிமிடெட்,* ***ரிஎல்ஆர்எஸ்*** *- ட்ரான்ஸ்நஷனல் லங்கா ரெக்கோர்ட்ஸ் சொலூஷன்ஸ் (பிரைவேற்) லிமிடெட்*





புத்தாக்கம்

அநேகமாக கற்பனை செய்ய முடியாத வழிகளில் வங்கித்தொழில் மாற்றமுற்று வருகின்றது. இத் தொழில் தளம்பலைக் கட்டுக்குள் வைத்துக்கொண்டு அதில் “உச்சத்தை எட்டுவதற்கு” வங்கியானது “ஆக்கத்திறன் வாய்ந்த விதத்தில்” சிந்தித்துச் செயலாற்ற வேண்டியுள்ளது. இதன் காரணமாகத்தான் “புத்தாக்கம்” என்னும் பதமானது எமது சொற்களஞ்சியத்தில் மிக அடிக்கடி இடம்பெற்று வருகின்றது!



நிறைவேற்று முகாமைத்துவம்



டப்ளியூ. ஐ. ஹெட்டிஹேவா
உதவிப் பொது முகாமையாளர்
தென் மாகாணம்



எஸ். எம். டப்ளியூ. சமரகோன்
உதவிப் பொது முகாமையாளர்
சர்வதேசம்



ஜீ. ஏ. ஜயஷாந்த
உதவிப் பொது முகாமையாளர்
மேல் மாகாணம் தெற்கு



ஜே. ஏ. ஏ. ஜயசிங்ஹ
உதவிப் பொது முகாமையாளர்
மனிதவள செயற்பாடுகள்



டப்ளியூ. என். பி. சுரவிமல
உதவிப் பொது முகாமையாளர்
கரை கடந்த வங்கியியல்



ஈ. எம். ஐயரட்ன
உதவிப் பொது முகாமையாளர்
மாகாண விற்பனைகள் முகாமைத்துவம்



ரீ. ஏ. டீ. குலரட்ன
உதவிப் பொது முகாமையாளர்
நிறுவனத் தொடர்புகள்



டீ. ஆர். எல். பெரேரா
உதவிப் பொது முகாமையாளர்
கிளைக் கடன் - வலயம் II



ஆர். பி. டீ. கே. ரட்னசிங்ஹ
உதவிப் பொது முகாமையாளர்
நிறுவனக் கடன்



ஏ. டீ. எஸ். பின்னதுவகே
உதவிப் பொது முகாமையாளர்
இணக்கப்பாடு



கே. ரீ. ஏ. ஈ. டீ. சில்வா
உதவிப் பொது முகாமையாளர்
இலத்திரனியல் வங்கியியல் நிலையம்



டீ. எஸ். முத்துகுடாராச்சி
வதிவிட முகாமையாளர்
சென்னை



பீ. நந்தகுமார்
உதவிப் பொது முகாமையாளர்
துணைச் சேவைகள்



வை. ஏ. ஜயதிலக்க
உதவிப் பொது முகாமையாளர்
உற்பத்தி அபிவிருத்தி மற்றும் வியாபாரச் செயன்முறைகள் மீளமைத்தல் செயற்திட்டம்



ஏ. ஆர். எவ். ஜோன் புள்ளே
பிரதான நிறைவேற்று அதிகாரி
இலங்கை வங்கி (யூகே) லிமிட்டட்



வீ. எஸ். விக்கிரமாராச்சி
உதவிப் பொது முகாமையாளர்
திறைசேரி



ஜி. ஆர். டீ. சில்வா
உதவிப் பொது முகாமையாளர்
திறைசேரி பின்நிலை அலுவலகம்



ஜே. சீ. ஏ. குருந்துகும்புர
உதவிப் பணிப்பாளர் - தகவல் தொழில்நுட்பம்
(செயற்பாடுகள்/தொழில்நுட்ப உதவி)



எச். எம். சீ. எம். மல்தெனி
உதவிப் பணிப்பாளர் - தகவல் தொழில்நுட்பம்
(பிரயோக முறைமை)



டீ எம் கே எஸ் திசநாயக்க
உதவிப் பொது முகாமையாளர்
கிழக்கு மாகாணம்



எம் எச் எஸ் மாலா
உதவிப் பொது முகாமையாளர்
அபிவிருத்தி வங்கியியல்



ஏ எம் ஆர் டீ சுபசிங்ஹ
உதவிப் பொது முகாமையாளர்
புறக்கோட்டை கிளை



பி பி எம் விஜேசேகர
உதவிப் பொது முகாமையாளர்
நிர்வாகச் சேவைகள்



எச் எம் எம் பீ ஹேரத்
உதவிப் பொது முகாமையாளர்
சப்ரகமுவ மாகாணம்



டப்ளியூ பீ பி ரத்நாயக்க
உதவிப் பொது முகாமையாளர்
மேல் மாகாணம் வடக்கு



ஆர் பி எஸ் ராஜபக்ஷ
உதவிப் பொது முகாமையாளர்
மத்திய மாகாணம்



எம் டீ ஏ கருணாரட்ன
உதவிப் பணிப்பாளர் - தொழில்நுட்பம்
(விநியோக வழிமுறை)



எம் ஜே பிரபாகரன்
உதவிப் பொது முகாமையாளர்
வட மாகாணம்



எச் பி கே சில்வா
உதவிப் பொது முகாமையாளர்
சந்தைப்படுத்தல்



பீ கே குருசிங்ஹ
வதிவிட முகாமையாளர்
மாலைதீவு



ஏ டீ எஸ் இந்திராணி
உதவிப் பொது முகாமையாளர்
வியாபாரச் சேவைகள்



எம் பி ருவான்குமார
உதவிப் பொது முகாமையாளர்
முதலீட்டு வங்கியியல்



டப்ளியூ ரஞ்சித்
உதவிப் பொது முகாமையாளர்
வட மத்திய மாகாணம்



ஏ ஜீ சிறிநிமால்
உதவிப் பொது முகாமையாளர்
ஊவா மாகாணம்



எல் ஜே திசாநாயக்க
வதிவிட முகாமையாளர்
சீசெல்ஸ்



ஜெ ஞானசம்பந்தன்
உதவிப் பொது முகாமையாளர் -
பாதீடு, தந்திரோபாய திட்டமிடல் மற்றும்
முகாமைத்துவ தகவல் முறைமை



பி என் கோமஸ்
உதவிப் பொது முகாமையாளர்
நிறுவன மீள்பெறுகை



எல் ஏ ஆர் செனவிரட்ன
உதவிப் பொது முகாமையாளர்
கடன், மாகாணம் மற்றும் கிளைக் கணக்காய்வு



டீ எம் செனவிரட்ன பண்டா
உதவிப் பொது முகாமையாளர்
ஒய்வூதிய நலத்திட்டங்கள்



எஸ் ரீ கே ஹேவகே
பிரதி பிரதம சட்ட அதிகாரி
மீள்பெறுகை



எம் டீ சீ நிலந்த
உதவிப் பொது முகாமையாளர்
இடர் முகாமைத்துவம்



கே ஜீ சீ தீபால்
உதவிப் பொது முகாமையாளர்
தகவல் முறைமை கணக்காய்வு



ஐ எம் எல் கருணாதிலக்க
உதவிப் பொது முகாமையாளர்
வட மேல் மாகாணம்



ரீ பெரேரா
உதவிப் பொது முகாமையாளர்
கிளைக் கடன் - வலயம் I



ஆர் எம் எம் வீரசேகர
உதவிப் பொது முகாமையாளர்
தலைநகரக் கிளை



ஆர் எம் கே எஸ் எம் ரட்னாயக்க
பிரதி பிரதம சட்ட அதிகாரி - கடன்



என் பி ஜீ சந்திரிக்கா
பிரதி பிரதம சட்ட அதிகாரி
சர்வதேசம் மற்றும் முதலீடு





ஸ்திரத்தன்மை

இலங்கை வங்கியின் அதி உறுதித்தன்மைக்கான முக்கிய காரணி, அது உள்நாட்டு பொருளாதாரக் கட்டமைப்பில் வேரூன்றியுள்ளமையே ஆகும். மேலும், இவ்வேர்களிலிருந்தே எமது உறுதியான நிதிக் கட்டமைப்பு முக்கியமான திறமைகளை தருவித்து விருத்தி செய்வதுடன் நாட்டிற்கு உண்மையான ஒரு பலமாக இருப்பதையிட்டு எம்மைப் பெருமையடைச் செய்கின்றது.

கூட்டாண்மை செயலாட்சி

அறிமுகம்

கூட்டாண்மை செயலாட்சி என்பது செயலாட்சி கட்டமைப்பு, கொள்கைகள், செயல்முறைகள், வடிவமைப்பு மற்றும் மக்கள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு உள்ளக முறையாகும். இது சிறப்பான உள்ளக வியாபாரத் தேர்ச்சி, நேர்மை, நடுநிலைத்தன்மை ஆகியவற்றின் மூலமாக தனது பங்காளர்கள் மற்றும் ஏனைய நிறுவன நலனில் அக்கறையுடையவர்களின் நலன்களை பாதுகாத்து அவர்களை நெறிப்படுத்துவதன் மூலமும், முகாமைத்துவ செயற்பாடுகளை நெறிப்படுத்துவதன் மூலமும் பேணி வழங்குகிறது. சிறப்பான கூட்டாண்மை செயலாட்சி முறையை உள்ளடக்கியுள்ள ஒரு நிறுவனமாக இலங்கைவங்கி காணப்படுகிறது. செயலாட்சி சார்ந்த ஏதாவது பிரச்சினைகளை தவிர்க்கும் முகமாக வினைத்திறன் மிக்க முறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பு ஒரு நிறுவனம் என்ற முறையில் அதன் பணிப்பாளர்கள் சபையின் கடப்பாடாகக் காணப்படுகிறது. வினைத்திறன்மிக்க பொறுப்புக்கூறல் கட்டமைப்பு தனது பொறுப்புக்களை நிறைவேற்றுகின்ற சபையின் வினைத்திறனானது நிறுவனத்தின் போட்டித்தன்மையை தீர்மானிக்கக்கூடியதாக காணப்படுகிறது. வங்கியின் தனித்துவமான தன்மைகள், அதனது கூட்டாண்மை செயலாட்சியை மிகவும் சிக்கல் மிக்கதாக மாற்றுகின்றது. இது மிகவும் உயர்வான முறையில் ஒழுங்கமைக்கப்பெற்ற ஒரு தொழிற்துறையாகும். வங்கித்துறையானது சமூகத்தில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களை கருத்திற்கொண்டு பரந்த பொருளாதாரத்திலும் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியதாக திகழ்கின்றது.

வங்கியினுள் கூட்டாண்மை செயலாட்சி வரைவுச்சட்டகம்

அரச நிறுவனம் என்ற முறையில் தனது சகல நிறுவன நலனில் அக்கறையுடையவர்களது நலன்களை பாதுகாக்கும் முகமாகவும் வங்கித்துறையில் தற்போது இலங்கை வங்கி பேணி வருகின்ற நிலையை தொடர்ந்து பேணும் முகமாகவும் தனது சகல நடவடிக்கைகளிலும் சிறப்பான கூட்டாண்மை செயலாட்சியின் உயர்வான தராதரங்கள் மற்றும் வியாபார நேர்மை, தொழில்வாண்மை ஆகியவற்றை இலங்கை வங்கியானது அர்ப்பணிப்புடன் பேணி வருகின்றது. இதனது கலாசார நடவடிக்கைகளில் உள்ளடக்கப்பட்டதாக காத்திரமான கூட்டாண்மை செயலாட்சிக் கட்டமைப்பு காணப்படுகின்றது. மேலும் சிறப்பான செயலாட்சி நடைமுறைகளை உள்ளடக்கிய பெறுமானங்களும் இங்கு காணப்படுகின்றன. சிறப்பான வெளிப்படைத் தன்மையை இவை இலகுபடுத்துவதுடன் பொறுப்புக்கூறல்களையும் மேம்படுத்தி வருகின்றது. அத்தோடு வங்கித்துறையினுள் காணப்படுகின்ற கூட்டாண்மை செயலாட்சிக் கட்டமைப்பானது அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் நடைமுறைசார்ந்த அண்மைய அபிவிருத்தி ஆகியவற்றிற்கு இணையாகச் செயற்படுகின்றது என்பதையும் வங்கியின் முதிர்ச்சித்தன்மை மற்றும் அதனது சகல நிறுவன நலனில் அக்கறையுடையவர்களதும் மாறி வருகின்ற தேவைகள் ஆகியவற்றிற்கு ஏற்புடையதாக செயற்படுகின்றது.

வங்கியின் கூட்டாண்மை முகாமைத்துவம் ஆனது இத்தகைய கலாசாரத்தைப் பேணி பாதுகாப்பதற்கான பொறுப்பினை ஏற்றுள்ளது. அதே வேளை செயலாட்சிச் சார்ந்த ஒட்டுமொத்த பொறுப்புக்கள் மற்றும் ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றிற்கு ஏற்ப உபாயங்கள் மற்றும் கொள்கைகள் ஆகியவற்றை உருவாக்கி அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்புகள் மற்றும் கூட்டாண்மை சார்ந்த செயற்பாடுகள் தொடர்பான பிரதான அதிகாரம் ஆகியன பணிப்பாளர்கள் சபையிடம் காணப்படுகின்றன.

வங்கியின் பிரதான தீர்மானங்களை மேற்கொள்ளும் அமைப்பு என்ற முறையில் பணிப்பாளர்கள் சபையானது வங்கியின் கலாசாரம், உள்ளக கட்டுப்பாடுகள், கணக்காய்வு இடர் முகாமைத்துவம், இணக்கப்பாடுகள், நிதி ரீதியான மோசடிகளைத் தடுத்தல், வாடிக்கையாளர்களை பாதுகாத்தல், வங்கித்துறையில் தற்போது காணப்படுகின்ற அபிவிருத்திகளை வழிப்படுத்தும் முகமாக நிலைமாற்று மாற்றங்களை வலுப்படுத்தல் கூட்டாண்மை செயலாட்சி தொடர்பான தொழிற்துறையில் அண்மையில் ஏற்பட்ட மாற்றங்களையும் சர்வதேச ரீதியிலான சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றை வழிப்படுத்தும் வகிபாகத்தினை வங்கியின் பணிப்பாளர்கள் சபை மேற்கொண்டு வருகின்றது. பணிப்பாளர்கள் சபையின் நடவடிக்கைகளுக்கு உதவும் முகமாக முறையான ஒழுக்கநெறிக் கோவையொன்று தாபிக்கப்பட்டுள்ளது. நேரத்திற்கு உகந்த முறையில் வினைத்திறன் மிக்க தீர்மானங்களை மேற்கொள்ளும் முகமாக வினைத்திறன் மிக்க முகாமைத்துவ தகவல் முறைமையொன்றும் விருத்தி செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச தராதரங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள் தொடர்பான கூட்டாண்மை ஒழுக்கநெறிக் கோவைகள் ஆகியவற்றிற்கு ஏற்ப சபையின் உப குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன. அதிகார வரம்பெல்லை மற்றும் அறிக்கையிடும் தன்மை ஆகியன தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. செயல்முறைச் சார்ந்த விடயங்களை குறிப்பிடல் மற்றும் அறிக்கையிடும் செயல்முறைகள் இணக்கப்பாட்டு தேவைப்பாடுகளுக்கேற்ப காணப்படுகின்றன. அத்துடன் வெளிநிலை சார்ந்த அறிக்கையிடல்கள் பிரதானமாக பரிசீலிக்கப்படுகின்றன என்பதை உறுதிசெய்து கொள்வதற்கு சபை மும்முரமாக செயற்படுகின்றது.

வங்கியின் தற்போதைய பணிப்பாளர்கள் சபையானது தெரிவுசெய்யப்பட்ட துறையில் நிபுணத்துவமிக்க, தொழில் வாண்மைமிக்க அனுபவங்களை கொண்டவர்களாக காணப்படுகின்றனர். இவர்களுள் பெரும்பாலானவர்கள் சுயாதீனமான முறையில் தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய விதத்தில் சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாக காணப்படுகின்றனர். இவர்கள் தமது தேர்ச்சி சார்ந்த துறைகளில் பரந்த கண்ணோட்டம் கொண்டவர்களாக காணப்படுகின்றனர். இவை சபையின் கலந்தாராய்வுகள் மற்றும் வங்கியின் தீர்மானம் மேற்கொள்ளல் செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகள் சார்ந்த தீர்மானங்களை மேற்கொள்ளலை வலுப்படுத்துகின்றது. வளர்ந்து வரும் வங்கியின் தேவைகள் மற்றும் செயலாட்சி சார்ந்த தேவைப்பாடுகள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு எதிர்வரும் வருடங்களில் வங்கியின் பணிப்பாளர்கள் சபையினது அளவினை விரிவாக்குவதற்கு வங்கி எதிர்பார்க்கின்றது.

இரட்டை ரில்லியன் மைல்கல்லை அடைதல்

2016 ஆம் ஆண்டில் இலங்கை வங்கியானது சொத்துக்கள், கடன்கள் மற்றும் வைப்புகள் தொடர்பில் பிரதான மைல்கல்லை அடைந்தது. இவை ஒவ்வொன்றும் ஒரு ரில்லியனை விட அதிகமாக காணப்பட்டன. பலத்த முயற்சிகளுக்கு மத்தியில் அடையப்பெற்ற ஒரு சிறப்பான அடைவு இதுவாகும். வங்கி அடுத்து அடைவதற்கு எதிர்பார்க்கின்ற பிரதான மைல்கல் ஆனது சொத்துக்களில் இரண்டு ரில்லியனை விட அதிகமானதாகும். இதனை 2018 ஆம் ஆண்டில் அடைவதற்கு எதிர்பார்க்கின்றது.


இவ்விலக்கை அடைவதற்கு வங்கியின் ஸ்திரத்தன்மையும் நிறுவன நலனில் அக்கறையுடையவர்கள் வங்கியின் மீது தொடர்ச்சியாக நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதையும் உறுதிசெய்து கொள்வது அவசியமாகும். இவ் இணக்கப்பாட்டு மட்டத்தை அடைவதற்கு பணியாளர்களது ஒழுக்கம் சார்ந்த நடத்தைகளை தொடர்ச்சியாக உறுதிசெய்து கொள்வது அவசியமாகும். இவ் இலக்கை மையமாக கொண்டு வங்கி செயற்படுகின்ற அதே வேளை பாசல் III, SLFRS – 9 ஆகியவற்றினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஒழுங்கமைப்புசார் விருத்திகள் மற்றும் கணக்கீட்டு தராதரங்கள் ஆகியவற்றிற்கு ஏற்ப தனது இலக்குகளை உறுதிசெய்துக்கொள்வது அவசியமாகும். ஈடுகட்டல்களை உள்ளடக்கியுள்ள வங்கியின் பல நோக்கங்களை விவேகமான முறையில் சமநிலைப் படுத்துவதானது செயலாட்சியின் பிரதான நோக்கமாகும்.

ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு

காத்திரமான கூட்டாண்மை செயலாட்சி கட்டமைப்பு மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றை ஏற்படுத்துவது தொடர்பிலான வங்கியின் அர்ப்பணிப்பானது வெறுமனே ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகளுக்கு ஏற்ப முழுமையாக நடந்துக்கொள்வதில் மாத்திரம் தங்கியிருக்கின்ற ஒரு விடயம் அல்ல. அதாவது பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை உறுதிசெய்து கொள்ளும் முகமாக இதனது செயன்முறைகள் மற்றும் முறைமைகள் ஆகியவற்றை தொடர்ச்சியாக மீள்பார்வைக்கு உட்படுத்துவது அவசியமாகும். அதேவேளை தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் ஏற்பட்டு வருகின்ற அண்மைய அபிவிருத்திகளுக்கு ஏற்ப கூட்டாண்மை செயலாட்சியை இற்றைப்படுத்துதல் வேண்டும். அதேவேளை காத்திரமான கூட்டாண்மை செயலாட்சியை வினைத்திறன் மிக்க முகாமைத்துவக் கருவியாக ஏற்றுக்கொள்வதிலும் இவை தங்கியுள்ளன.

உரிமம் பெற்ற வர்த்தக வங்கி என்ற ரீதியில் இலங்கை வங்கியானது அடிப்படை வங்கிச் சேவை ஒழுங்குபடுத்துனரான இலங்கை மத்திய வங்கியின் மதிநுட்பமிகு மேற்பார்வைக்கு உட்படுகின்றது. இதன் பிரகாரம் இலங்கை வங்கிக்கு ஏற்புடையதான ஒழுங்குபடுத்தல் சட்டகமானது பிரதானமாக 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச்சேவைச் சட்டம், அதற்கான திருத்தங்கள், ஒழுங்குவிதிகள், வங்கிச்சேவைச் சட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட திருத்தங்கள், குறிப்பாக கூட்டாண்மை செயலாட்சி தொடர்பிலான 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கப் பணிப்புரைகள் ஆகியவற்றினைக் கொண்டுள்ளது. 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள் ஆகியனவும் ஒழுங்குபடுத்தல் சட்டகத்தின் அங்கமாகக் காணப்படுகின்றன. அத்தோடு 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் இலங்கை பிணையங்கள் பரிமாற்று ஆணைக்குழு ஆகியவற்றினால் கூட்டாக வெளியிடப்பட்ட கூட்டாண்மை செயலாட்சி கோவை 2013 க்கும் வங்கி தன்னார்வத்துடன் இயைபுறுகின்றது. கூட்டாண்மை செயலாட்சி தொடர்பான தொடர்ச்சியான பட்டியலிடல் தேவைப்பாடுகளின் 7.10 வரையிலான பிரிவுகளில் குறிப்பிடப்பட்டவாறாக இணக்கப்பாட்டு வெளிக்கூறல்களிலிருந்து வங்கிக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு சொந்தமான வங்கி என்ற முறையில் இலங்கை வங்கியானது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் செயலாட்சியின் கீழ் வருகின்றது. வங்கியின் நிதிநிலை தொடர்பான கூற்றுகள் மற்றும் அதன் துணை கம்பனிகளின் நிதிநிலை தொடர்பான கூற்றுகள் மற்றும் உள்ளக கட்டுபாடுகள் தொடர்பான பணிப்பாளர்களது கூற்றுகள் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கான கூட்டாண்மை செயலாட்சி தொடர்பான 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கிச் சட்ட நெறிமுறைகளுக்கு ஏற்ப காணப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஆளுகைக்கு உட்பட்ட விடயமாகும்.



கூட்டாண்மை செயலாட்சி தொடர்பான 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கிச்சட்ட பணிப்புரைகளுடன் இணங்குதல்

மேற்படி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் திட்டவட்டமான வெளிப்படுத்தல்கள் இவ்வறிக்கையின் 304 பக்கம் முதல் 323 பக்கம் வரை தரப்பட்டுள்ளன. கூட்டாண்மை செயலாட்சி தொடர்பான அறிக்கையின் இன்றியமையாத பாகமாக அவை காணப்படுகின்றன.

கூட்டாண்மை செயலாட்சி



சபையின் பொறுப்புகள்

வங்கியின் பெருநிறுவன பெறுமானங்கள், ஒழுக்கநெறிகள், உபாயங்கள், இடர் முகாமைத்துவம் தொடர்பான வழிகாட்டிகள், நிறுவன நலனில் அக்கறையுடையவர்களுடன் தொடர்பாடல்களை மேற்கொள்வது தொடர்பான வழிகாட்டல்கள், உள்ளக கட்டுப்பாடுகள், முகாமைத்துவ தகவல் முறைகள், பிரதான முகாமைத்து நபர்களை நியமித்தல் மற்றும் அவர்களது பொறுப்புகள் ஆகியன தொடர்பான பிரதான அதிகாரங்கள் சபைக்கு வழங்கப்பட்டுள்ளன.



சம்பந்தப்பட்ட தரப்பினர் தொடர்பிலான கொடுக்கல் வாங்கல்கள்

சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள், அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான மட்டுப்பாடுகள் மற்றும் அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தேவைபாடுடைய பிரகடனங்கள் ஆகியவற்றை ஆளுகை செய்கின்ற தெளிவான கொள்கைகள் சபையிடம் காணப்படுகின்றது



சபையினால் நியமிக்கப்பட்ட குழுக்கள்

சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயலாற்று நியதிகளின் பிரகாரம் இலங்கை வங்கியானது நான்கு சபை உப குழுக்களை தாபித்துள்ளது. இக் குழுக்களின் அறிக்கைகள் இவ்வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.



சபையினால் அதிகாரபூர்வமாக வழங்கப்பட்ட முகாமைத்துவ செயற்பாடுகள்

வங்கியின் சிறப்பான நலன்களுக்கு ஏற்ப காணப்படுகின்ற மற்றும் ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகளுக்கு இணங்கி நடந்துக்கொள்கின்ற விடயங்கள் ஆகியவற்றை உறுதிசெய்துகொள்ளும் முகமாக அதிகாரபூர்வமாக வழங்கப்பட்ட அதிகாரத்தின் அளவு மற்றும் அறிக்கையிடல் செயன்முறைகள் ஆகியவற்றை காலத்திற்கு காலம் சபை மீளாய்வு செய்கின்றது.



சபையின் ஆக்க அமைவு

அரச வங்கிகள் விடயபரப்பிற்கு பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற 6 நிறைவேற்று அதிகாரம் சாராத பணிப்பாளர்களை உள்ளடக்கியதாக சபை காணப்படுகின்றது: இவர்களுள் ஐவர் சுயாதீன பணிப்பாளர்களாவர்.



வெளிப்படுத்தல்கள்

சபை மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய கூட்டிணைந்த ஊதியம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.



தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி

தத்துவம் மற்றும் அதிகாரம் தொடர்பானவற்றின் சமநிலையை பேணும் முகமாக தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி ஆகியோரின் செயற்பாடுகள் தனித்தனியாக பிரித்து வைக்கப்பட்டுள்ளன. (பிரதான முகாமையாளர் எனவும் அழைக்கப்படுகின்றார்) சபையின் சமவாயத்தில் இவர்களுக்கான வகிபாகங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன.



பணிப்பாளர்களது தகுதியுடைமை மற்றும் பொருத்தப்பாடு ஆகியவற்றை மதிப்பிடுவதற்கான நெறிமுறைகள்

பல்வேறு வகையான பின்புலங்களை உடையவர்களாக சபை உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். இது இவர்களுக்கு பல்வேறு விதமான திறன்களையும் அனுபவங்களையும் வழங்குகின்றது. நோக்கங்கள் மற்றும் சுயாதீன தீர்மானங்களுக்கு இட்டுச்செல்லக்கூடிய கலந்துரையாடலுக்கு பங்களிப்பு செய்யக்கூடிய நன் நிலமையில் வைக்கப்படுகின்றனர். வங்கி மற்றும் அதனது சபை ஆகியவற்றின் அலுவல்களில் போதியளவு நேரத்தை செலவிடக்கூடியவர்களான இவர்கள் காணப்படுவதுடன் கலந்துரையாடப்படவிருக்கின்ற விடயம் தொடர்பில் முன்கூட்டியே போதியகால அவகாசத்துடன் இவர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிர்வாகம் மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் நாணயமாற்று ஆணைக்குழு ஆகியவற்றினால் கூட்டாக வழங்கப்பட்ட கூட்டாண்மை செயலாட்சி தொடர்பான சிறந்த நடைமுறை ஒழுக்க நெறிகளுக்கு இணங்குதல்.

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகமும் இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணையகமும் இணைந்து வெளியிட்ட கூட்டாண்மை ஆளுகை 2018 இன் சிறந்த செயற்பாட்டுக் கோவையுடன் இணங்குதல்.



சபை

வங்கித்தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் உச்ச அமைப்பாக அதன் சபை காணப்படுகின்றது. ஒட்டுமொத்த உபாயமுறைகள் மற்றும் ஆளுகை ஆகியவற்றிற்கு பொறுப்பாக இது திகழ்கிறது.

சபையானது தலைவரின் தலைமையின் கீழ் செயற்படுகின்றது. 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் அதனை தொடர்ந்து திருத்தங்கள் ஆகியவற்றின் சபையின் ஆக்க அமைவு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. சபையின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகள் அத்தோடு சபைக்கென ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் பற்றிய அட்டவணை உள்ளடங்களான விடயங்கள் சபையின் சமவாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தினுள் இது மீளாய்வு செய்யப்படுகின்றது. சபையின் பிரதான பொறுப்புகள் உபாயரீதியான நெறிப்படுத்தல்களை உருவாக்குதல், நிதிரீதியான அறிக்கையிடல், ஒழுங்கமைப்புச்சார் இணக்கங்களை உறுதிப்படுத்துதல், கூட்டாண்மை செயலாட்சி, வங்கியை பாதுகாத்தல் மற்றும் வங்கியின் அலுவல்கள் மற்றும் வியாபாரம் ஆகியவற்றை மேற்பார்வை செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

சபைக் கூட்டங்கள் முறையாக நடைபெறுகின்றன என்பதை உறுதிசெய்துக் கொள்ளுதல், நடைமுறைசார் சீர்த்திருத்தங்கள், சட்டரீதியான தேவைப்பாடுகளுக்கு ஏற்ப நடந்துகொள்ளுவதற்கு உதவுதல் ஆகியவற்றை உறுதி செய்து கொள்ளுவதன் மூலம் கூட்டாண்மை செயலாட்சியின் உரிய தராதரங்கள் பேணப்படுவதை உறுதிசெய்து கொள்வதில் முக்கிய வகிபாகத்தை இலங்கை வங்கியின் செயலாளர்/சபையின் செயலாளர் ஆகியோர் வகிக்கின்றனர்.



தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி (பொது முகாமையாளர்)

தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி (இவர் பொது முகாமையாளர் எனவும் அழைக்கப்படுகின்றார்) ஆகியோரது வகிபாகங்கள், தத்துவம் மற்றும் அதிகாரம் ஆகியவற்றை சமநிலையாக பேணுவதற்கு ஏற்ற வகையில் தனித்தனியாக பிரிக்கப்பட்டுள்ளன.

சபையின் சமவாயத்தில் இவர்களுக்கான வகிபாகங்கள் தெளிவாக வரையரை செய்யப்பட்டுள்ளன. தலைவர் சுயாதீனமிக்க நிறைவேற்று அதிகாரம் சாராத பணிப்பாளர் ஆவார் அதேவேளை பிரதான நிறைவேற்று அதிகாரி (CEO) சபையின் உறுப்பினர் அல்ல. வங்கியின் ஆளுகைத் திட்டம் மற்றும் ஏனைய நிதிசார்ந்த மற்றும் நிதிசாராத சபையின் இலக்குகளில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் உபாயங்களை நடைமுறைப்படுத்துவது இவர்களது செயற்பணி ஆகும். இவை குறுகியகால, மத்தியகால, நீண்டகால இலக்குகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றன. வருடத்தின் ஆரம்பத்தில் பொதுவாக இவை தாபிக்கப்படுவதுண்டு.



தலைவரின் வகிபாகம்

இவரது தலைமைத்துவமானது சபைக்கு தலைமைத்துவத்தை வழங்குவதுடன் சபை வினைத்திறன்மிக்க முறையில் செயற்படுவதினை இலகுபடுத்துகின்றது.

சபையின் சகல உறுப்பினர்களும் வினைத்திறன்மிக்க முறையில் பங்குபற்றுவதை இலகுபடுத்துவது இவரது பொறுப்புகளுள் ஒன்றாகும். பிரதான முகாமைத்துவ ஆளணியினருடன் பகிரங்க தொடர்பாடலை இவர் பேணுவதுடன் உபாயரீதியான மற்றும் செயற்பாடுகள் சார்ந்த விடயங்களில் தனது பங்களிப்புகளை நல்குகின்றார். சபை கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பான போதியளவு தகவல்கள் சகல பணிப்பாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன என்பதையும் சம்பந்தப்பட்ட தகவல்களை வழங்கும்படி சகல முகாமைத்துவ பணியாட்களை நெறிப்படுத்துவதன் மூலமும் பொருத்தமான மட்டத்திலான தகவல்கள் உரிய காலத்தில் அனைவருக்கும் கிடைக்கின்றன என்பதை உறுதிசெய்து கொள்வதன் மூலமும் இவர் இதனை மேற்கொள்கின்றார்.



நிதிசார் புத்திக்கூர்மை


நிதிசார் விடயங்களில் வழிகாட்டிகளை வழங்குவதற்கான நிதிசார்ந்த புத்திகூர்மை மற்றும் அறிவு ஆகியன சபையிடம் காணப்படுகின்றது. சில பணிப்பாளர்கள் நிதிசார்துறை அல்லது கணக்கீடு/சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகள்/பணிப்பாளர்களாக கடந்தகாலத்தில் பணியாற்றியுள்ளனர் அல்லது பணியாற்றி வருகின்றனர். இவர்களிடம் தொழில்வாண்மை மிக்க தகைமைகள் காணப்படுகின்றன.



சபை சமநிலை

அரச வங்கிகளுக்கு பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட 6 நிறைவேற்று அதிகாரம் சாராத பணிப்பாளர்களை கொண்டதாக சபை காணப்படுகின்றது. இவர்களுள் ஐவர் சுயாதீன பணிப்பாளர்கள்.

நிதி அமைச்சின் பிரதிநிதி ஒருவர் பதவிவழி பணிப்பாளராக பணியாற்றுகின்றார். 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கிச்சட்ட பணிப்புரைகள் மற்றும் அது தொடர்பான திருத்தங்கள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு பணிப்பாளர்களது சுயாதீனம் அங்கீகரிக்கப்படுகின்றது. பணிப்பாளர்கள் தமது பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு பல்வேறுபட்ட திறன்களையும் அனுபவங்களையும் கொண்டு விளங்குகின்றனர்.



தகவல்களை வழங்குதல்

சபை கூட்டங்களில் கலந்துரையாடப்படவிருக்கின்ற விடயங்கள் தொடர்பிலான துல்லியமான தகவல்களை சகல பணிப்பாளர்களும் பெற்றுக்கொள்கின்றனர் என்பதை தலைவர் உறுதிசெய்துக் கொள்கின்றார்.

சம்பந்தப்பட்ட தகவல்களை முழுமையாகவும் உரிய நேரத்தில் முன்கூட்டியே வழங்கும்படி சகல முகாமைத்துவ ஆளணியினருக்குமான பணிப்புரைகளை தலைவர் வழங்குகின்றார். சபையின் நினைவுக் குறிப்புகள் சபைக்கூட்டம் நடைபெறுவதற்கு 7 நாட்களுக்க முன்னர் பாதுகாப்பான மின் ஊடகம் மூலமாக விநியோகிக்கப்படுகின்றது. இவற்றுள் தன்மை மற்றும் அளவு சார்ந்த தகவல்கள் உள்ளடக்கப்படுகின்றன. (சபையின் ஏதாவது அக்கறைகளை பதிவு செய்து கொள்ளும் முகமாக சபைக்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன அல்லது ஏதாவது விடயம் தொடர்பான தனிப்பட்ட பணிப்பாளர்களது அக்கறைகளும் இவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன. மற்றும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் மற்றும் செயன்முறைகள் பற்றி சபை உறுப்பினர்கள் நன்கு அறிந்துள்ளனர் என்பதை உறுதிசெய்து கொள்ளும் முகமாகவே இவை மேற்கொள்ளப்படுகின்றன) சகல சபை கூட்டங்களிலும் பொதுவாக பணிப்பாளர்கள் பங்குபற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்-படுகின்றது. ஏதாவது சட்டரீதியான காரணங்களின் நிமித்தம் அவர்களினால் பங்குபற்ற முடியாத நிலைமை ஏற்படுகின்ற பொழுது கூட்ட அறிக்கைகளை விநியோகிப்பதன் மூலமும், ஏனைய வழிமுறைகள் மூலமும் அவர்களுக்கு இத்தகைய விடயங்கள் தொடர்பில் அறிவிக்கப்படுகின்றது.



சபைக்கான நியமனங்கள்

இலங்கை வங்கியானது அரசுக்கு சொந்தமான வங்கி என்ற முறையில் அதனது சகல பணிப்பாளர்களும் அரச வங்கிகளுக்கு பொறுப்பான அமைச்சர்களினால் நியமிக்கப்படுகின்றனர்.

2017 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சபை தொடர்பான மாற்றங்கள் பணிப்பாளர்கள் அறிக்கையின் 139 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சபை உறுப்பினர்கள் தொடர்பான சகல விதமான விபரங்களும் 35 ஆம் பக்கம் முதல் 37 ஆம் பக்கம் வரை தரப்பட்டுள்ளன. 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கிச் சட்ட பணிப்புரைகள் மற்றும் அதன் திருத்தங்கள் தொடர்பான ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பணிப்பாளர்கள் சேவையாற்றக் கூடிய ஆகக்கூடிய காலம் 9 வருடங்களாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.



சபை செயலாற்றுகை தொடர்பான மதிப்பீடு

சபை தொடர்பான பொறுப்புகள் திருப்திகரமாக நிறைவேற்றுப்படுகின்றன என்பதை உறுதிசெய்து கொள்ளும் முகமாக வருடாந்தம் தனது சுய செயலாற்றுகை தொடர்பான மதிப்பீடு ஒன்றினை சபை மேற்கொண்டு வருகின்றது.

இது தொடர்பான செயன்முறையானது ஒவ்வொரு பணிப்பாளரும் செயலாற்றுகை மதிப்பீட்டு படிவம் ஒன்றினை பூரணப்படுத்துதல் வேண்டும். இங்கு வழங்கப்பட்ட பதில்கள் தொகுக்கப்பட்டு சபையிடம் சமர்ப்பிக்கப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. சபையின் உப குழுக்களும் செயலாற்றுகை மதிப்பீட்டு படிவங்களை பூரணப்படுத்தி சபையிடம் வழங்கியது.



பணிப்பாளர்கள் தொடர்பான தகவல்களின் வெளிப்படுத்துகைகள்

முழுமையாக வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுவது என்ற வங்கியின் கொள்கைக்கு ஏற்ப பணிப்பாளர்கள் தொடர்பான பின்வரும் தகவல்கள் பின்வரும் பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

பெயர், தகைமை, நிபுணத்துவம் பொருள்சார் வியாபார அக்கறைகள் மற்றும் சுருக்க விளக்கக்குறிப்புகள் ஆகியன 35 ஆம் பக்கம் முதல் 37 ஆம் பக்கம் வரையில் மற்றும் 144 ஆம் பக்கம் முதல் 145 ஆம் பக்கம் வரையில் காணப்படுகின்றன.

சம்பந்தப்பட்ட தரப்பு கொடுக்கல் வாங்கல்கள் 274 ஆம் பக்கம் முதல் 275 ஆம் பக்கம் வரை காணப்படுகின்றது.

சபை உபகுழுக்கள் தொடர்பான உறுப்புரிமைகள் 35 ஆம் பக்கம் முதல் 37 ஆம் பக்கம் வரை காணப்படுகின்றது.

சபை மற்றும் சபை உபகுழு கூட்டங்களில் சமூகமளித்தமை தொடர்பான விபரங்கள் 69 ஆம் பக்கத்தில் காணப்படுகின்றது.



பிரதான நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் தொடர்பான மதிப்பீடு

வங்கியின் கூட்டாண்மை திட்டம் மற்றும் சபையினால் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் ஏதாவது நிதி மற்றும் நிதிசாரா இலக்குகளை அடைவதற்கு ஏற்ற உபாயமுறைகளை நிறைவேற்றுவதற்கான செயற்பணி பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு (CEO) வழங்கப்பட்டுள்ளது.

வருட ஆரம்பத்தில் தீர்மானிக்கப்படுகின்ற குறுகியகால, மத்தியகால, நீண்டகால நோக்கங்களை உள்ளடக்கியதாக இது காணப்படுகின்றது. அத்தோடு பிரதான நிறைவேற்று அதிகாரியிடம் (CEO) எதிர்ப்பார்க்கப்படுகின்ற விடயங்கள் தொடர்பிலான சிறப்பான புரிதல் அவரிடம் இருத்தல் அவசியமாகும். அறிக்கையிடுகின்ற காலப்பகுதியினுள் 2018 ஆம் ஆண்டிற்கான வங்கியின் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் தொடர்பில் பொது முகாமையாளர் மதிப்பீடு செய்யப்பட்டார். இந்த மதிப்பீடு வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டுகின்றது.



ஊதியச் செயல்விதிகள்


பணிப்பாளர்களுக்கான ஊதியம் ஆனது சம்பந்தப்பட்ட அமைச்சின் மூலமாக இலங்கை அரசாங்கத்தினால் விநியோகிக்கப்பட்ட சுற்று நிருபங்கள் மற்றும் கடிதங்கள், இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் மற்றும் பணிப்பாளர்களது ஊதிய கொள்கையில் கூட்டிணைக்கப்பட்டவைகள் ஆகியவற்றின் அடிப்படையின் பிரகாரம் தீர்மானிக்கப்படுகின்றது. மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதிற்கான ஊதியக் கொள்கையை வங்கி மீளாய்வு செய்துள்ளது.

தனது ஊதியத்தை தீர்மானிக்கும் பணியில் எந்த பணிப்பாளரும் ஈடுபடுவதில்லை. பொது முகாமையாளர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளுகையினர் தொடர்பான ஊதியத்தை, ஊதியம் தொடர்பான விதப்புரைகளை சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு மேற்கொள்கின்றது. மூன்று வருடங்களுக்கு ஒருமுறை இது மீளாய்வு செய்யப்படுகின்றது. பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கான ஊதியக் கொள்கையை சபை அங்கீகரிக்கின்றது. இத்தகைய விதப்புரைகளை அடிப்படையாகக் கொண்டு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரிடம் விதப்புரைகளை சபை மேற்கொள்கின்றது. 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அதில் காணப்படுகின்ற ஏற்பாடுகள் ஆகியவற்றின் பிரகாரம் இறுதி ஒப்புதலை அமைச்சர் அவர்கள் வழங்குகின்றார்.



பங்காளர்களுடனான தொடர்பாடல்

வங்கித் தொடர்பான முழுமையான பங்காளராக இலங்கை அரசாங்கம் காணப்படுகின்றது. அரச தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் வங்கிகள் வருகின்றன. எனவே இந்த வருடாந்த அறிக்கை இவ்வமைச்சின் மூலமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.



பிரதான மற்றும் பொருண்மைக் கொடுக்கல் வாங்கல்கள்

கூட்டாண்மைத் திட்டமானது வங்கியின் செயற்பாடுகள் தொடர்பிலான முக்கிய விடயமாக காணப்படுவதன் காரணமாக இத்திட்டத்தின் வரைவுசட்டகத்திற்கு ஏற்ற விதத்தில் வாய்ப்புகள், இடர்கள், போக்குகள், குறைபாடுகள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு எதிர்கால உபாயங்கள் திட்டமிடப்படுகின்றன.

குறுகியகால, மத்தியகால, நீண்டகால இலக்குகள் கூட்டாண்மை திட்டத்தினுள் குறிப்பிடப்பட்டுள்ளன. வங்கியை தாக்கிய பிரதான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் தாக்கக்கூடிய பிரதான கொடுக்கல் வாங்கல்கள் ஆகியன வெளியிடப்பட்டுள்ளன. அவையாவன,

தலைவரின் செய்தி:- 13 ஆம் பக்கம் முதல் 14 ஆம் பக்கம் வரை.
பொது முகாமையாளரின் மீளாய்வு:- 21 ஆம் பக்கம் முதல் 22 ஆம் பக்கம் வரை.
ஒய்வு பெறும் பொது முகாமையாளரின் மீளாய்வு:- 17 ஆம் பக்கம் முதல் 19 ஆம் பக்கம் வரை.
நாம் எவ்வாறு பெறுமதியினை உருவாக்குகின்றோம்:- 94 ஆம் பக்கம் முதல் 136 ஆம் பக்கம் வரை.



நிதியியல் அறிக்கையிடல்

வெளிப்படைத்தன்மை, தெளிவு, துல்லியத்தன்மை, பூரணத்துவம், பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் முகமாக இவ்வறிக்கையிலுள்ள சகல தகவல்களும் தொகுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்டு அவை தொடர்பான மதிப்பீடுகள் இயலுமானவரை மேற்கொள்ளப்பட்டன.

வங்கியின் நிதிநிலைமை தொடர்பான சமநிலையான மற்றும் புரிந்துக்கொள்ளக்கூடிய சமர்ப்பணங்கள் மற்றும் வங்கித்துறை தொடர்பில் காணப்படுகின்ற நன்நெறிக்கோவை மற்றும் பல்வேறு வகையான ஒழுங்குவிதிகள் ஆகியவற்றிற்கு ஏற்ப இந்த வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்றது. இலங்கை கணக்கீட்டு தராதரங்கள், பூகோள அறிக்கையிடல் முன்னெடுப்பினால் வெளியிடப்பட்ட நீடுறுதிதன்மைமிக்க அறிக்கையிடல் தொடர்பான G4 தராதரங்கள் மற்றும் சர்வதேச ஒருங்கிணைக்கப்பட் அறிக்கையிடல் சபையினால் வெளியிடப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் வரைவுச்சட்டகம் ஆகியவற்றிற்கு ஏற்ப இலங்கை வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.



கணக்காய்வு குழு மற்றும் உள்ளக கட்டுப்பாடு

வங்கியின் சொத்துக்களை பாதுகாக்கும் முகமாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை உருவாக்கி அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பு சபையிடம் காணப்படுகின்றது. அதேவேளை இவ்விடயம் தொடர்பிலான உதவிகளை சபையின் கணக்காய்வுக் குழு வழங்குகின்றது.

சபையின் கணக்காய்வு குழுவின் நோக்கெல்லையானது நிதிரீதியான அறிக்கையிடல் தொடர்பான பொறுப்புகள், உள்ளக கட்டுப்பாடுகள், உள்ளக கணக்காய்வு மற்றும் வெளிநிலை கணக்காய்வு ஆகியவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. சபையின் கணக்காய்வுக் குழு தொடர்பான செயலாற்றுகை நியதிகள் இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட கூட்டாண்மை செயலாட்சி தொடர்பான சிறப்பான நடைமுறைகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டுள்ளன. இந்த குழுவானது நிதிரீதியான கட்டுப்பாடுகள் தொடர்பான பயனுறுதித்தன்மை, வங்கியின் சொத்துக்கள் தொடர்பான நேர்மை, வங்கியின் நிதிரீதியான அறிக்கைகள் தொடர்பான துல்லியத்தன்மை ஆகியவற்றை இக்குழு உறுதிச்செய்துக் கொள்கின்றது. உள்ளக கட்டுப்பாட்டு முறை தொடர்பான மீளாய்வுகள் உள்ளக கணக்காய்வு திணைக்களத்தினால் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படுகின்றன. சபையின் கணக்காய்வு குழுவிற்கு முறையாக அறிக்கையிடப்படுகின்றன.



வியாபார நன்னடத்தை மற்றும் ஒழுக்கநெறிக் கோட்பாடு

வங்கியிடம் இரண்டு ஒழுக்கநெறிக் கோட்பாடுகள் காணப்படுகின்றன. ஒன்று பணிப்பாளர்களுக்கும் மற்றையது ஊழியர்களுக்கும் ஏற்புடையதாகும்.

இந்த ஒழுக்நெறிக் கோவைகளை மீளாய்வு செய்வதற்கு சபையின் நியமனம் மற்றும் கூட்டாண்மை செயலாட்சிக்குழு பொறுப்பாக இருக்கின்றது. வங்கியில் லஞ்சத்தையும் ஊழலையும் தவிர்க்கின்ற நேர்மைமிக்க உறுதியான கலாசாரம் காணப்படுகின்றது. சாத்தியப்பாட்டுள்ள மீறல்களை உடனடியாக இனங்கண்டு அவைத்தொடர்பில் செயற்படுவதற்கு பல்வேறு விதமான பொறிமுறைகள் நடைமுறையில் உள்ளன. சகல அதிகாரிகளும் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பிரகடனத்தை வருடாந்தம் மனித வளங்கள் திணைக்களத்திடம் சமர்பிக்கும்படி கோரப்படுவர். அதேவேளை சகல பணிப்பாளர்களும் இத்தகைய விடயங்களை அமைச்சிடம் சமர்ப்பித்தல் வேண்டும். ஏதாவது முறைகேடுகளை தடுத்து பாதுகாக்கும் முகமாக வெளிப்படைத் தன்மைமிக்க கொள்வனவு நடைமுறைகள் காணப்படுகின்றன. முறைப்பாடுகளைப் பெற்று அவற்றை வைத்திருந்து அவை தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நடைமுறைகள் காணப்படுகின்ற அதேவேளை இவற்றை உள்ளடக்கி இடித்துரைத்தல் கொள்கையும் காணப்படுகின்றன.



கூட்டாண்மை செயலாட்சி வெளிப்படுத்தல்கள்

சிறந்த கூட்டாண்மை செயலாட்சி தொடர்பில் தாபிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றிற்கு எந்தளவுக்கு வங்கி இணங்கி நடக்கின்றது என்பதை வெளிப்படுத்த வேண்டிய தேவை பணிப்பாளர்களை சார்ந்ததாகும்.

இவ்வறிக்கையின் கூட்டாண்மை செயலாட்சி பிரிவில் 62 ஆம் பக்கம் முதல் 69 ஆம் பக்கம் வரை இவை தொடர்பில் விவரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை பட்டையக் கணக்காளர்கள் நிறுவனம் மற்றும் இலங்கை பிணையங்கள் பரிமாற்று ஆணைக்குழு ஆகியவற்றினால் வழங்கப்பட்ட “கூட்டாண்மை செயலாட்சி தொடர்பான சிறந்த நடைமுறைகள் கோட்பாடு 2013ற்கு” ஏற்ப நடைமுறைகள் தொடர்பான விடயங்கள் 65 ஆம் பக்கம் முதல் 68 ஆம் பக்கம் வரை தரப்பட்டுள்ளன.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கிச்சட்ட பணிப்புரைகள் மற்றும் கூட்டாண்மை செயலாட்சி கோட்பாடுகள் ஆகியவற்றிற்கான இணக்கம் தொடர்பான விடயங்கள் 304 ஆம் பக்கம் முதல் 323 ஆம் பக்கம் வரை தரப்பட்டுள்ளன.



நீடுறுதித்தன்மைமிக்க அறிக்கையிடல்

நீடுறுதித்தன்மைமிக்க அறிக்கையிடல் கொள்கைகளுக்கு ஏற்பவும் வங்கி நடந்துக்கொள்கின்றது. இந்த அறிக்கையிலும் இவை பின்பற்றப்பட்டுள்ளன.

ஆக்கபூர்வமான விடயங்களை மதிப்பிடும் முகமாக நீடுறுதித்தன்மைமிக்க அணுகுமுறை ஆனது முழுமையை நோக்கிய அணுகுமுறையை பின்பற்றுகின்றது. தனது நிறுவன நலனில் அக்கறையுடையவர்களுக்காக குறுகியகால, மத்தியகால, நீண்டகால அடிப்படையில் வங்கி உருவாக்குகின்ற பொருளாதார சமூக மற்றும் சுற்றாடல் சார் பெறுமதிகள் இங்கு பரிசீலிக்கப்படுகின்றன. நீடுறுதித்தன்மைமிக்க அறிக்கையிடல் செயன்முறையானது அங்கீகரித்தல், அளவிடல், வெளியிடல் மற்றும் நீடுறுதித்தன்மைமிக்க அபிவிருத்தி இலக்கை நோக்கிய நிறுவனம் சார்ந்த செயலாற்றுகைக்காக உள்ளக மற்றும் வெளிநிலை நிறுவன நலனில் அக்கறையுடையவர்களுக்கு வெளியிடல் மற்றும் பொறுப்புக் கூறக்கூடியதாக இருத்தல்.

சபை உபகுழுக்கள்

சபைக்கு அதன் கடமைகளில் உதவும் பொருட்டு நான்கு சபை உபகுழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன. செயலாட்சி விதிக்கோவைகள் மற்றும் சிறந்த நடைமுறை என்பவற்றின் இணக்கப்பாட்டுடன் இது செய்யப்பட்டுள்ளது. சில முக்கியமான துறைகளுக்கு போதுமானளவு கவனம் செலுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தும் அத்தகையவொரு விதத்தில், எழுதப்பட்ட விடய ஆய்வெல்லையில், உப குழுக்களின் கடமைகளும் பொறுப்புக்களும் தெளிவாக விதித்துரைக்கப்பட்டுள்ளன. விடய ஆய்வெல்லையினைப் பாதிக்கும் சூழலிலான ஏதேனும் மாற்றங்கள் கவனத்திற் கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு விடய ஆய்வெல்லையானது வருடாந்த மீளாய்வுக்கு உட்படுகின்றது.

இதன் மூலம் இவ் வங்கி நடவடிக்கைகளின் தொடர்ச்சியான பயனுறுதி வாய்ந்த கட்டுப்பாடும் கண்காணிப்பும், அதன் நீண்டகால நிலைத்துநிற்கும் தன்மைக்குப் பங்களிப்புச் செய்து, உறுதிப்படுத்தப்படுகின்றது.

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 70 தொடக்கம் 73 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

பெயர்குறித்த நியமன மற்றும் கூட்டாண்மை செயலாட்சிக் குழுவின் (NCGC) அறிக்கை 77 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் (IRMC) அறிக்கை 74 ஆம் 75 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

மனித வளங்களும் ஊதியமும் குழுவின் (HRRC) அறிக்கை 76 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

கிரமமான கூட்டங்கள்

பணிப்பாளர் சபையானது வழமையாக ஒவ்வொரு இரு வாரங்களுக்கொரு முறையும் கூடுவதுடன், அதற்கு மேலதிகமாக தேவை ஏற்படும் போது விசேட கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன. இவ் ஆண்டின் போது, விசேட கூட்டங்கள் உள்ளடங்கலாக 28 சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. ஒவ்வொரு சபைப் பணிப்பாளரினாலும் வருகை குறிப்பிட்டு, சபை மற்றும் சபை உபகுழுக்களின் கூட்டங்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

2017 ஆம் ஆண்டுக்கான சார்பில் சபை மற்றும் உப குழுக் கூட்டங்களில் பணிப்பாளர்களின் வருகை

2017 ஆம் ஆண்டுக்கான சபை மற்றும் உப குழுக் கூட்டங்கள்

பணிப்பாளரின் பெயர்	சபை	கணக்காய்வுக் குழு	HRRC	IRMC	NCGC
திரு. றொனால்ட் சீ. பெரேரா ஜனாதிபதி சட்டத்தரணி - தலைவர்	28	பொருத்தமற்றது	3	பொருத்தமற்றது	3
திரு. சஜித் ஆர். ஆட்டிகல - பதவி வழிப் பணிப்பாளர்	24	6	1	–	–
திரு. ரணெல் ரி. விஜேசிங்க - பணிப்பாளர்	27	10	பொருத்தமற்றது	பொருத்தமற்றது	பொருத்தமற்றது
திரு. சரித்த என். விஜேவர்தன - பணிப்பாளர் (2017.07.21 இல் பதவி விலகினார்)	15	6	1	4	பொருத்தமற்றது
திரு. சஞ்ஜய பத்மபெரும - பணிப்பாளர் (2017.06.30 இல் பதவி விலகினார்)	10	2	பொருத்தமற்றது	3	1
திரு. எச். பீ. அஜித் குணவர்தன - பணிப்பாளர்	27	பொருத்தமற்றது	3	5	3
திரு. மனோ சேகரம் - பணிப்பாளர் (2017.07.06 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டார்) (2017.09.08 இல் பதவி விலகினார்)	3	பொருத்தமற்றது	பொருத்தமற்றது	பொருத்தமற்றது	பொருத்தமற்றது
திரு சமந்த ராஜபக்ஷ - பணிப்பாளர் (2017.07.25 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டார்)	13	3	பொருத்தமற்றது	1	பொருத்தமற்றது
திரு மொஹான் விஜேசிங்க - பணிப்பாளர் (2017.11.24 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டார்)	1	பொருத்தமற்றது	பொருத்தமற்றது	பொருத்தமற்றது	பொருத்தமற்றது
நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை	**28**	**11**	**3**	**5**	**3**

சபை உபகுழுவின் அறிக்கைகள்

கணக்காய்வுக் குழு அறிக்கை

தலைவரின் கூற்று

கணக்காய்வுக் குழு சாசனம்

கணக்காய்வுக் குழுவின் விடய ஆய்வெல்லை-யானது, சபையினால் அங்கீகரிக்கப்பட்டு பின்பற்றப்படும் கணக்காய்வுக் குழு சாசனத்தின் மூலம் நிர்வகிக்கப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டில் இறுதியாக மீளாய்வு செய்யப்பட்ட கணக்காய்வுக் குழு சாசனத்தின் கிரமமான மீளாய்வுகளில் இலங்கை வங்கியின் திட்டவட்டமான மற்றும் வங்கித்துறையுடன் தொடர்புபட்ட அபிவிருத்திகள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன. "இலங்கையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆளுகை" தொடர்பில் 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்ட வழிகாட்டலின் தேவைப்பாடுகள் மற்றும் அதற்கு இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட விளைவாந்தன்மையுடைய திருத்தங்கள் என்பவற்றுக்கு ஏற்ப நிறுவனத்தின் பணிகளின் விடயப்பரப்பு மற்றும் பரப்பு என்பவற்றையும் குழு உறுதிப்படுத்துகின்றது.

பிரதான கவனக் குவிப்பு

இவ் வங்கியின் நிதி அறிக்கையிடல் செய்முறையின் சுயாதீனமானதும் பாரபட்சமற்றதுமான மீளாய்வொன்றினை ஏற்படுத்துவதன் மூலம் சபைக்கு அதன் கடமைகளை நிறைவேற்றுவதற்கு உதவி செய்வதில் கணக்காய்வுக் குழுவானது பிரதானமாக கவனத்தினைக் குவிக்கின்றது.

அறிக்கையிடல் ஊடகம்

சகல அடிப்படைப் பிரச்சினைகளும், கரிசனைகளும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும், அடையப்பெற்ற அல்லது அடையாமல் நிலுவையிலுள்ள பயன்விளைவுகளும் மற்றும் ஆரம்பிக்கப்பட்ட பின்தொடர் நடவடிக்கைகளும் தெளிவுபடுத்தப்பட்டு, கலந்துரையாடப்பட்டு அத்துடன் அவற்றுக்காக சபை அனுமதி பெற்றுக்கொள்ளப்படும், சபைக் கூட்டங்களில் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் செயல்முறைகள் முன்வைக்கப்படுகின்றன.

குழுவின் உள்ளடக்கம்

மீளாய்வின் கீழ் இவ் ஆண்டின் போது கணக்காய்வுக் குழுவானது பின்வரும் நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்களை உள்ளடக்கியது:

திரு. ரணெல் ரி விஜேசிங்க
தலைவர்,
சுயாதீன நிறைவேற்றுனரல்லாத பணிப்பாளர்

திரு. சஜித் ஆர் ஆட்டிகல
அங்கத்தவர்
நிறைவேற்றுனரல்லாத - பதவி வழி பணிப்பாளர்

திரு. சமந்த ராஜபக்ஷ
அங்கத்தவர்
சுயாதீன நிறைவேற்றுனரல்லாத பணிப்பாளர்
(2017.08.11 ஆம் திகதியிலிருந்து)

திரு. சஞ்ஜய பத்மபெரும
அங்கத்தவர்,
சுயாதீன நிறைவேற்றுனரல்லாத பணிப்பாளர்
(2015.11.05 முதல் 2017.06.30 வரை)

திரு. சரித்த என் விஜேவர்தன
அங்கத்தவர்,
சுயாதீன நிறைவேற்றுனரல்லாத பணிப்பாளர்
(2015.11.05 முதல் 2017.07.21 வரை)

இக் குழுவின் உறுப்பினர்களாக இருப்பதற்குத் தேவையான நிதிசார் மதிநுட்பம், அனுபவம், ஆற்றல்கள், பின்னணி மற்றும் சுயாதீனமாக இருப்பதற்குரிய தரநிலைகள் என்பவற்றை இக் குழுவின் உறுப்பினர்கள் கொண்டுள்ளனர். இக் குழு உறுப்பினர்களின் விரிவான சுயவிபரக் குறிப்புக்கள் 35 தொடக்கம் 37 வரையான பக்கங்களில் காட்டப்பட்டுள்ளன.

கணக்காய்வுக் குழுவின் செயலாளர்

ஒரு சட்டத்தரணியாகவும் பிரதிப் பொது முகாமையாளராகவும் உள்ள இலங்கை வங்கிச் செயலாளர்/சபைச் செயலாளர் இக் குழுவின் செயலாளராக செயலாற்றுகின்றார்.

குழுக் கூட்டங்களும் வெளியகக் கணக்காய்வாளர்களுடனான தொடர்பும்

மீளாய்வின் கீழ் இவ் ஆண்டின் போது இக் குழு பதினொரு தடவைகள் கூடியது. இக் குழு அதன் பொறுப்புக்களை பயனுறுதி வாய்ந்ததாக நிறைவேற்றுவதற்கு கூட்டங்கள் இடம்பெற்ற தடவைகளும் காலப்பகுதியும் ஏதுவாகவிருந்தன. இக் குழு உறுப்பினர்களின் வருகை 69 ஆம் பக்கத்திலுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

இக் குழுவின் கூட்ட நடப்பெண் இரண்டு ஆகும்.

வருடம் பூராகவும், முழு நேர அடிப்படையில் இவ் வங்கியில் பணியாற்றிய கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதியுடன் இக் குழு தொடர்ச்சியான தொடர்பினைக் கொண்டிருந்தது. KPMG நிறுவனம், பட்டயக் கணக்காளர்களினால் நடாத்தப்பட்ட வெளியகக் கணக்காய்வுடனான முகாமைத்துவ ஒத்துழைப்பிற்கு மேலும் உதவும் பொருட்டும், வெளியகக் கணக்காய்வின் சுயாதீன தன்மையினை மேம்படுத்தும் பொருட்டும், இக் குழுவின் தலைவரானவர், இக் குழுவின் கிரமமான கூட்டங்களுக்கு மேலதிகமாக, தேவை ஏற்பட்ட பட்சத்தில் கணக்காய்வுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பங்காளர்களுடன் தொடர்பு கொண்டார். அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் கரிசனைமிக்க துறைகள் பற்றிய சிறந்த புரிந்துணர்வுக்கு இது உதவியதுடன் கூட்டங்களின் போதான பயனுறுதி வாய்ந்த கலந்தாய்வுகளுக்கும் முறையான வழிகாட்டலுக்கும் வழிவகுத்தது. கணக்காய்வின் நோக்கெல்லைக்கு மட்டுப்பாடுகள் எதுவும் காணப்பட்டனவா என்பதை நிர்ணயிக்கும் பொருட்டு, பொது முகாமையாளரினதும் ஏனைய முகாமை உறுப்பினர்களினதும் பிரசன்னமின்றி ஆண்டிறுதிக் கணக்காய்வினை முற்றாக்குவதற்கு முன்னர் வெளியகக் கணக்காய்வாளர்களை இக் குழு சந்தித்ததுடன் மட்டுப்பாடு எதுவுமில்லை என்னும் உறுதிப்பாட்டை பெற்றுக்கொண்டது.

கூட்டங்களில் பங்குபற்றுகை

பின்வரும் முகாமை ஆளணியினர் ஒவ்வொரு கணக்காய்வுக் குழுக் கூட்டத்திற்கும் சமுகமளித்தனர்:

- பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்
- பிரதம இடர் அலுவலர்
- இணக்கப்பாட்டு அலுவலர்
- உதவி பொது முகாமையாளர் (மாகாணம்/கிளை மற்றும் கடன் கணக்காய்வு)
- உதவி பொது முகாமையாளர் (புலனாய்வுகள்)
- உதவி பொது முகாமையாளர் (தகவல் முறைமைகள் கணக்காய்வு)
- உதவி பொது முகாமையாளர் (இடர் முகாமை)
- உள்ளகக் கணக்காய்வாளர்
- தகவல் தொழில்நுட்ப இடர் அலுவலர்
- கணக்காண்வு தலைமை அதிபதியின் பிரதிநிதித்துவங்கள் (வங்கியின் வெளிவாரியான கணக்காய்வாளர்) மற்றும் KPMG, பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் பங்காளர்கள் மற்றும் முகாமையாளர்கள்.
- மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தின் போது, 2016 டிசம்பர் 31ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நியமிக்கப்பட்டிருந்த Ernst & Young, பட்டயக் கணக்காளர்களின் பங்காளர்களும் மற்றும் முகாமையாளர்களும் கணக்காய்வை பின்தொடர்வதற்கு கணக்காய்வுக் குழுவின் ஒரு சில கூட்டங்களில் பங்குபற்றினர்.

அழைப்பின் பேரில் மாத்திரம் சமுகமளித்த முகாமை உறுப்பினர்கள் பின்வருமாறு::

- பொது முகாமையாளர்
- பிரதான நிதி அதிகாரி
- பிரதிப் பொது முகாமையாளர் (நிதி மற்றும் திட்டமிடல்)

கொடுகடன், உற்பத்தி மற்றும் அபிவிருத்தி வங்கித்தொழில், திறைசேரி முகாமைத்துவம், வெளிநாடுகளில் அமைந்துள்ள துணை நிறுவனங்கள் மற்றும் கிளைகள் மீதான மேற்பார்வை, சில்லறை (வாடிக்கையாளர்) வங்கித்தொழில், அடைமான மீட்புரிமையை இல்லாதொழித்தல் மற்றும் மீள்அறவிடல்,

சட்டப் பிரச்சினைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப இடர்சார் பிரச்சினைகள் போன்ற துறைகளில் தெளிவினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஆண்டின் போது பல்வேறுபட்ட தடவைகள் கணக்காய்வுக் குழுவின் கூட்டங்களுக்கு பிரிவுகளின் தலைவர்கள் அழைக்கப்பட்டார்கள். இவ் விதமாக ஏற்பட்ட நேரடிக் கலந்துரையாடலானது முறைமைகள், நடைமுறைகள், கட்டுப்பாடுகள் வலுவாக்கப்பட்ட, கொள்கைக் கைந்நூல்கள் மேம்படுத்தப்பட்ட அல்லது விரிவாக்கப்பட்ட அத்துடன் அதில் இணக்கப்பாடு வசதியளிக்கப்பட்ட ஒரு தொடரான துறைகளில் உடன்பாட்டை அடைந்துகொள்வதற்கு ஏதுவாக அமைந்தது. இக் கலந்துரையாடல்களில் பங்குபற்றிய அடிப்படை முகாமை ஆளணியினர் பின்வருமாறு:

- பிரதிப் பொது முகாமையாளர் (உற்பத்தி மற்றும் வங்கியியல் அபிவிருத்தி)
- பிரதி பொது முகாமையாளர் (தொகுதி மற்றும் வெளிநாட்டு வங்கியியல்)
- பிரதிப் பொது முகாமையாளர் (விற்பனை மற்றும் நெறிப்படுத்தல் முகாமைத்துவம்)
- பிரதிப் பொது முகாமையாளர் (மீள் பெறுகை)
- பிரதிப் பொது முகாமையாளர் (சர்வதேசம், திறைசேரி மற்றும் முதலீடு)
- பிரதிப் பொது முகாமையாளர் (சில்லறை வங்கியியல்)
- பிரதிப் பொது முகாமையாளர் (துணைச் சேவைகள்)
- பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள்)
- பிரதான சட்ட அலுவலர்
- தகவல் தொழிநுட்ப துறை தலைவர்
- தொழிநுட்ப நிலைமாற்றல் துறை தலைவர்
- மேலும், பொது முகாமையாளர், பிரதான நிதி அதிகாரி, பிரதான உள்ளகக் கணக்ககாய்வாளர், பிரதான இடர் அலுவலர், பிரதான சட்ட அலுவலர் மற்றும் ஏனைய சிரேஷ்ட முகாமையாளர்கள் போன்றோர்களுடன் தலைவர் தனிப்பட்ட மற்றும் குழுக் கூட்டங்களை நடாத்தியுள்ளார்.

2017 ஆம் ஆண்டில் ஆற்றப்பட்ட செயற்பாடுகள்

நிதி அறிக்கையிடல்

- மாதாந்த, காலாண்டு ரீதியிலான மற்றும் வருடாந்த கணக்காய்வு செய்யப்படாத/கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களானவை, மேற்பார்வை மற்றும் ஒழுங்குறுத்துகை அதிகாரபீடங்களினால் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கும் ஏற்புடைய கணக்கீட்டு நியமங்களுக்கும் இணங்க தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு அவற்றை மீளாய்வு செய்தமை.
- காலாண்டு ரீதியிலான நிதிக் கூற்றுக்களை வெளிவிடுவதற்கு முன்னர், இவ் வங்கியின் ஒட்டுமொத்த செயற்றிறன் பற்றியும் வரவுசெலவுத்திட்டங்கள், வருடாந்த தந்திரோபாயத் திட்டங்கள், வங்கித் தொழில்துறை மற்றும் போட்டிச் சூழல் என்பவற்றுடன் தொடர்புற்ற வியாபார அலகுகளின் செயற்றிறன் பற்றியும் பகுப்பாய்வு மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- நிதிக் கூற்றுக்களின் மேம்பட்ட நம்பகத்தன்மைக்கு வழிவகுத்தும் அதேபோன்று நடைபெற்றுவரும் அத்துடன் எதிர்கால தந்திரோபாயத் திட்டங்களுக்கான உள்ளீடுகளை வழங்கியும், மீளாய்வுகளின் உறுதியினை மேற்போந்தவை வலுப்படுத்தியுள்ளன.
- தனிப்பட்டரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த கடன்கள் மற்றும் ஏனைய கடன்கள் மீது கூட்டான மதிப்புக் குன்றுதல் படிகளின் போதிய தன்மை தொடர்புபடுகின்ற கடன் இழப்பு ஏற்பாடுகள் மீது குறிப்பிடத்தக்க தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் முடிவுகள் என்பவற்றை மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

ஒழுங்குறுத்துகை இணக்கப்பாடு

- மாற்றமுறும் ஒழுங்குறுத்துகைச் சூழலை உள்நாட்டு ரீதியிலும் குறிப்பாக இவ் வங்கி தொழிற்படும் நாடுகளில் சர்வதேச ரீதியிலும் தொடர்ச்சியாக கண்காணித்தமை மற்றும் அதற்கு செயல் முகங்கொடுத்தமை.
- கட்டாய வங்கித்தொழில் மற்றும் ஏனைய நியதிச்சட்டத் தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாட்டை மீளாய்வு செய்தமை.
- ஒழுங்குறுத்துகையாளர்களால் மேற்கொள்ளப்-பட்ட நியதிச்சட்ட பரீட்சிப்பு முடிவுகள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தமை.
- உள்ளக மூலதன போதுமானதன்மையையும் மூலதன அதிகரிப்புத் திட்டத்தையும் மீளாய்வு செய்தமை மற்றும் அவற்றை அமுலாக்கம் செய்தமை.
- பாசல் III (Basel III) மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் தரநியமம் 9 என்பவற்றின் அமுலாக்கம் நோக்கிய முன்னேற்றத்திற்கான முன்னெடுப்புக்களையும் வகுக்கப்பட்ட செயற்பாட்டு திட்டங்களையும் மீளாய்வு செய்தமை மற்றும் அவற்றுக்கு தொடர்ந்து ஆதரவு செய்தமை.
- கருப்புப் பண எதிர்ப்பு, பயங்காரவாதத்துக்கு நிதி வழங்குதலை எதிர்த்தல் மற்றும் வாடிக்கையாளருக்குரிய விடாமுயற்சச் செயன்முறைகள் என்வற்றின் இணக்கம் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டது.
- பிரதான மாறிகளுக்கு எதிராக அழுத்த சோதனை அளவீடுகள் மீளர்வு செய்யப்பட்டன.
- அரசாங்க/தனியார் துறை, பொருளாதார துறைகள், உப துறைகள் மற்றும் கடன் பெற்றவர்கள் அனுபவத்தை மீளாய்வு செய்தமை மற்றும் பொருத்தமான இடர்க் குறைப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளின் அமுலாக்கம் தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுத்தமை.

உள்ளகக் கட்டுப்பாடுகள்

- கிரமமான மாதாந்த அடிப்படையிலும் திட்டவட்டமான நிகழ்வுகள் அல்லது விடயங்கள் அவசியப்படும் போதும், அடிப்படைக் காரணம் கண்டறிதல் பகுப்பாய்வினை தொடர்ந்து நடாத்தியமையும் முறைமைகள், நடைமுறைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கான மேம்பாடுகளைச் செய்தமையும்.
- தொடர்ந்து செல்லும் அடிப்படையில், இவ் வங்கியினால் பின்பற்றப்பட்ட கொடுகடன்/ கருத்திட்ட மதிப்பீட்டு செய்முறைகளை மீளாய்வு செய்தமையும் வலுப்படுத்தியமையும்.
- வெளிக்காட்டல் அல்லது பாதிக்கப்படக்கூடிய தன்மை பற்றிய அடிப்படைத் துறைகள் குறித்தும் அவற்றுக்கான இடர்க் குறைப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் தொடர்பிலும் பிரதம உள்ளக கணக்காய்வாளருக்கும் பிரதம இடர் அலுவலருக்கும் திட்டவட்டமான பணிகளை குறித்தொதுக்கியமை.
- கரிசனை கொண்ட வாடிக்கையாளர்கள் மூலமான கடன் சேவையின் மேற்பார்வையினையும் கண்காணிப்பினையும் தொடர்ச்சியாக வலுப்படுத்தியமை மற்றும் சாத்தியமான கடன் இழப்புக்களை தடுக்கும் பொருட்டு/தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை வகுத்தமை.
- மேற்போந்த மேற்பார்வைத் தொழிற்பாட்டின் முன்னேற்றத்திற்காக கடன் பெற்றவர்கள் எச்சரிக்கைகளுடனும் நிபந்தனைகளுடனும் இணக்கமுறுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு உரிய முகாமை ஆளணியினரை உள்ளடக்கிய குழுவொன்றை உருவாக்கியமை.

- கொடுகடன் மதிப்பீட்டுக்கான திட்டவட்டமான குறிப்புதவியுடன் தனது சுயாதீன வகிபாகத்தை வலுப்படுத்தும் நோக்குடன் பிரதம இடர் அலுவலரின் வகிபாகத்தை மீளாய்வு செய்தமை.
- கொடுகடன் மதிப்பீட்டிலும் கண்காணிப்பிலும் ஈடுபட்டுள்ள அலுவலர் குழாத்திற்கான திறன் மேம்பாட்டு மற்றும் ஆற்றல் விருத்தி நடவடிக்கைகளை வடிவமைத்து நடைமுறைப்படுத்தும் பொருட்டு மனித வள திணைக்களத்திற்கு தொடர்ச்சியாக வழிகாட்டல் வழங்கியமையும் உதவியமையும் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான பின்னூட்டலைப் பெற்றுக்கொண்டமையும்.
- அறவீட்டுத் திணைக்களத்தின் நடைமுறைகளையும் தந்திரோபாயங்களையும் தொடர்ச்சியாக மீளாய்வு செய்தமையும் வலுப்படுத்தியமையும்.
- மாதாந்த அடிப்படையில் நிலுவையிலுள்ள வழக்குகளை மீளாய்வு செய்தமை.
- தேவையான இணக்கப்பாட்டை உறுதிப்படுத்தும் பொருட்டு நடைமுறையிலுள்ள பெறுகை நடைமுறையினை மீளாய்வு செய்தமை.

உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்றும் அது தொடர்பிலான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையும் 146 தொடக்கம் 147 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன. அதற்கிணங்க, வங்கியின் சொத்துக்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன என்றும் நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டுள்ள நிதி நிலமையும் பெறுபேறுகளும் ஏதேனும் பொருண்மையான தவறான கூற்றுக்களைக் கொண்டிராதுள்ளன என்றும், நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு அவசியமான சோதனைகளும் நிலுவைகளும் தயாராக உள்ளன என்பது இக் குழுவின் கருத்தாகும்.

உள்ளகக் கணக்காய்வு

- உள்ளக கணக்காய்வுப் பணியின் கூயாதீனம், குறிக்கோள் மற்றும் செயலாற்றுகை மற்றும் மூன்று பிரதான பிரிவுகளையும் குறிப்பீடு செய்கின்ற திணைக்களத்தின் வளங்களின் போதிய தன்மை என்பவற்றையும் மீளாய்வு செய்யப்பட்ன.
  - மாகாண/கிளை மற்றும் கொடுகடன் கணக்காய்வு
  - தகவல் தொழிநுட்ப கணக்காய்வு
  - புலானாய்வுகள்
- வெளிநாட்டுக் கிளைகளின் உள்ளகக் கணக்காய்வுக் கொள்கையினையும் இக் கொள்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளையும் மீளாய்வு செய்தமை.
- 2017 ஆம் ஆண்டின் உள்ளகக் கணக்காய்வுத் திட்ட அமுலாக்கத்தின் பயனுறுதி தன்மையை மீளாய்வு செய்தமை.
- உரியகால திருத்த நடவடிக்கையை எடுக்கும் நோக்குடன், குறிப்பிடத்தக்க உள்ளகக் கணக்காய்வு முடிவுகளையும் அவற்றுக்கான முகாமையின் செயல் முகங்கொடுப்புக்களையும் மீளாய்வு செய்தமை.
- மோசடிகளையும் முறைகேடுகளையும் தடுப்பதில், கண்டுபிடிப்பதில் மற்றும் புலனாய்வு செய்வதில் ஆற்றல்களை மேம்படுத்தும் பொருட்டு தாபிக்கப்படவுள்ள சட்ட கணக்காய்வு அலகு தொடர்பிலான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்றை மேற்கொண்டமை.
- பிரதம உள்ளகக் கணக்காய்வாளரின் செயற்றிறனை மதிப்பீடு செய்தமை மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் சிரேட்ட கணக்காய்வு அலுவலர் குழாத்தின் மதிப்பீட்டை மீளாய்வு செய்தமை.
- உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் நிபுணத்துவப் பயிற்சிக்கான பயிற்சி மற்றும் அபிவிருத்தி தேவைகளையும் தேவைப்பாடுகளையும் மற்றும் புலனாய்வு அலுவலர் குழாத்தின் மீதான விசேட கவனத்துடன் ஆற்றல் விருத்திக்கான தேவையையும் மீளாய்வு செய்தமை.
- 2018 ஆம் வருடத்துக்கான உள்ளகக் கணக்காய்வின் ஏற்பனவை பரிந்துரை செய்யப்பட்டது.

வெளியகக் கணக்காய்வு

இந் நாட்டின் அரசியலமைப்பிற்கு ஏற்ப கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டில் கணக்காய்விற்கு உதவும் பொருட்டு பட்டயக் கணக்காய்வாளர்களான KPMG நிறுவனத்தை கணக்காய்வாளர் நாயகம் நியமித்தார்.

இக் குழுவானது பின்வருவனவற்றை ஆற்றியது

- 2016 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட முன்னைய கணக்காய்வாளர்களான பட்டயக் கணக்காளர்களாகவுள்ள Ernst & Young நிறுவனத்தினால் இனங்காணப்பட்ட கணக்காய்வுப் பிரச்சினைகள் தொடர்பில் மீளாய்வு செய்தது மற்றும் தொடர் நடவடிக்கை எடுத்தது.
- 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான இவ் வங்கியின் கணக்குகள் தொடர்பில் இலங்கைப் பாராளுமன்றத்திற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை, முகாமைத்துவக் கடிதம் மற்றும் அவற்றுக்கான முகாமைத்துவத்தின் செயல் முகங்கொடுப்புகள் என்பவற்றை மீளாய்வு செய்தமையும் இவ் வங்கியினால் எடுக்கப்பட்ட திருத்த நடவடிக்கைகள் தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுத்தமையும்.
- கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்திலிருந்தான அடிப்படை அறிக்கைகளை மீளாய்வு செய்தமையும் கலந்துரையாடியமையும் மற்றும் அவசியமெனக் கருதியவிடத்து நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
- இவ் ஆண்டின் போது, பட்டயக் கணக்காளர்களான KPMG நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வெளியகக் கணக்காய்வு செய்முறையின் பயனுறுதி வாய்ந்த தன்மை பற்றி மீளாய்வு செய்தமை மற்றும் பின்வருவன பற்றி குழுக் கூட்டங்களிலும் இக் குழுவின் தலைவரினால் கூட்டப்படும் விசேட கூட்டங்களிலும் எடுத்துரைத்தமை
  - 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான இவ் வங்கியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் திரட்டிய நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்காக பட்டயக் கணக்காளர்களான KPMG நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டின் கணக்காய்வுத் திட்டம்.
  - கணக்காய்வு அணியின் தொழில்நுட்ப திறன்களும் தொழிற்துறை அனுபவமும்.
  - இவ் வங்கியின் முகாமைக்கும் வெளியகக் கணக்காய்வு அணிக்கும் இடையிலான இணைப்பு மற்றும் தொடர்பின் பயனுறுதி வாய்ந்த தன்மை.
  - தேவையான தகவல்களின் உரியகால சமர்ப்பிப்பு.
  - முகாமையிடமிருந்து, அதன் தொழிற்பாட்டு துறைகளுக்குரிய கணக்காய்வுச் செய்முறைகளின் பயனுறுதி வாய்ந்த தன்மை தொடர்பான பின்னூட்டம்.
  - 2017 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளர்களினால் இனங்காணப்பட்ட இடைக்கால மற்றும் இறுதிக் கணக்காய்வுப் பிரச்சினைகள்.

இலங்கை வங்கியின் துணை நிறுவனங்களினதும் கூட்டு நிறுவனங்களினதும் மேற்பார்வையும் கணக்காய்வும்

- துணை நிறுவனங்களின் மீதான கணக்காணிப்பையும் மேற்பார்வையையும் மேற்பார்வை செய்யும் “துணை நிறுவன முகாமை சாசனத்தை” மீளாய்வு செய்தமை மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட நடைமுறைகளை வலுப்படுத்தியமை.
- இவ் வங்கியின் துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் மீதான பொறுப்பு வகைகூறலையும் மேற்பார்வையையும் வலுப்படுத்தியமை.
- துணை நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வு தொடர்பான கொள்கைக்கு ஏற்ப துணை நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளை மீளாய்வு செய்தமை.

இணையப் பாதுகாப்பு

- தகவல் தொழில்நுட்பத்திற்குப் பொறுப்பான முகாமை ஆளணியினருடன், இவ் வங்கி இணையப் பாதுகாப்பு இடர்களை முகாமை செய்யும் விதம் தொடர்பில், கிரமமான கலந்துரையாடலில் ஈடுபட்டமை.

விசேட முன்னெடுப்புகள்

- பாசல் III இன் அமுலாக்கத்திலிருந்து எழுகின்ற சாத்தியமான சவால்களுக்கான தீர்வுகளை ஏற்படுத்தும் பொருட்டு, ஒழுங்குறுத்துநர்களினதும், இலங்கை மத்திய வங்கியினதும் இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவினதும் அதிகாரிகள் அழைக்கப்பட்ட, பட்டயக் கணக்காளர்களாகவுள்ள Ernst & Young நிறுவனத்தின் பங்குபற்றலுடன்கூடிய கலந்துரையாடல் அமர்வுகளை முன்னெடுத்தமை.
- முன்கூட்டிய மோசடிகளை தவிர்ப்பதன் முக்கியத்துவம் தொடர்பில் வங்கியின் நடவடிகைப் பிரிவில் உள்ள ஊழியர்களை பயிற்றுவிப்பதற்கு பிரதான உள்ளக கணக்காய்வாளரின் அலுவலகத்துக்கு வழிகாட்டப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாடுமுழுவதிலும் இரு 3,000 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

ஆளுகை

குழுவானது தொடர்ந்தியங்குகின்ற அடிப்படையில், கீழ்வரும் குறிப்புகளுடன் சிறந்த கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகளை அமுல்படுத்திய முறையை மீளாய்வு செய்தது:

- "இலங்கையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆளுகை" மீது 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்ட வழிகாட்டல் மற்றும் அதற்கான விளைவாந்தன்மையுடைய திருத்தங்கள்.
- கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடுதல் சட்ட விதிகள்
- இலங்கை பிணைப்பொறுப்புக்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கை பட்டயக் கணக்ககாளர்கள் நிறுவனம் என்பவற்றால் கூட்டாக வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகை 2013 தொடர்பிலான சிறப்பான நடைமுறைகளின் ஒழுக்கக் கோவை (சிறப்பான நடைமுறை ஒழுக்கக் கோவை)
- நிறுவனத்தின் கொள்கை இற்றைப்படுத்தப்-பட்டிருப்பதை உறுதி செய்வதற்காக பணிப்பாளர்கள் அக்கறை முரண்பாட்டுக் கொள்கை மீளாய்வு செய்யப்பட்டது.

நிறுவனம் சார்ந்த விடயங்களுக்கு மற்றும் வங்கியியல் துறை சார்ந்த ஆளுகைத் தேவைப்பாடுகள், மூலோபாய வழிகாட்டல் மற்றும் தொடர்புடைய சவால்கள் என்பவற்றுக்கு மிகவும் பயன் விளைவுடன் பதிலளிப்பதற்காக கட்டளைகள் சட்டத்தைத் திருத்துவதற்காக இலங்கை அரசுக்கு பரிந்துரைகளை விருத்தி செய்வதற்காக இலங்கை வங்கி கட்டளைகள் சட்டத்தின் மீளாய்வு முன்னெடுக்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த கூட்டாண்மை ஆளுகை அறிக்கை பக்கங்கள் 62 முதல் 69 வரை தரப்பட்டுள்ளது.

முறைப்பாடுகளுக்கான நடவடிக்கைமுறை - குறைபாடுகளை மேல் மட்டத்துக்கு வெளிப்படுத்தல் (Whistle-Blowing Policy)

முறைப்பாடுகளை பெற்றுக்கொள்தல், தக்கவைத்தல் மற்றும் உபசரித்தல் என்பவற்றுக்கான நடவடிக்கை முறைகள் தொடர்பில் நீண்டகாலமாக ஏற்படுத்தப்பட்ட "குறைபாடுகளை மேல் மட்டத்துக்கு வெளிப்படுத்தல்" கொள்கை வங்கிக்கு இருக்கின்றது. அத்தகைய முறைப்பாடுகளானவை கணக்கீடு தொடர்பாக வினா தொடுக்கப்படக்கூடிய விடயங்கள், உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள், ஊழல் மற்றும்/அல்லது தரகுகளை ஏற்றுக் கொள்தல், பதிவுகளைத் தவறாகப் பயன்படுத்துதல், உள்ளாள் கொடுக்கல் வாங்கல்கள், பணப் பதுக்கல், களவு மற்றும் மோசடி, சட்டத்துக்கு முரணான அல்லது வங்கியின் சொத்துக்களை தவறுதலாகப் பயன்படுத்துதல், தவறான பிரதிநிதித்துவங்கள் அல்லது பொய்யான கூற்றுக்கள் மற்றும் வங்கியின் நிதியியல் ஆரோக்கியம் அல்லது கீர்த்திக்கு தீங்கிழைக்கக் கூடிய உரிய கூட்டாண்மை ஆளுகை மற்றும் வாரிசுரிமைக் கொள்கைகள் என்பவற்றுக்கு ஒழுக்கத்துக்குப் புறம்பாக, சட்டத்துக்கு முரணாக கரிசனை கொள்ளப்படக் கூடிய எவையேனும் ஏனைய நடவடிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கி ஆனால் அவற்றுக் மாத்திரம் வரையறுக்கப்படாத விடயங்களையும் உள்ளடக்கி இருக்கும்.

பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் அதற்கு மேல் தரங்களில் உள்ள ஊழியர்களுக்கு எதிரான முறைப்பாடுகளை சபை கணக்காய்வுக் குழுவின் தலைவருக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அதே நேரம் முறைப்பாட்டு மேற்பார்வையாளராக பிரதான உள்ளக கணக்காய்வளர் செயற்படுகின்றார்.

எவையேனும் சட்ட ரீதியான கரிசனைகளை உடனடியாக எழுப்பவதற்கு ஊழியர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர் என்பதோடு அவர்களின் பெயர் அறியப்படாத முறையில் பேணப்படும் அல்லது வேண்டுகோளின்படி அவர்களது அடையாளங்கள் வெளிப்படுத்தப்பட மாட்டாது. வாடிக்கையாளர்கள் மற்றும் பொது மக்கள் அங்கத்தவர்கள் பெயர் குறிப்பிடாமல் மற்றும் இரகசியமாகவும் முறைப்பாடுகளை முறைப்பாட்டு கண்காணிப்பாளருக்கு மேற்கொள்வதற்கு தகவுடையவர்களாவர் என்பதோடு முறைப்பாட்டுக் கண்காணிப்பாளர் முறைப்பாடுகளை விசாரணை செய்து கம்பனியின் கொள்கையில் குறிப்பிடப்பட்ட காலத்துக்குள் கணக்காய்வுக் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

குழு மதிப்பீடு

குழுவின் விளைபயனின் வருடாந்த மதிப்பீடொன்று வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டு அதன் பெறுபேறுகள் சபைக்கு அறிவிக்கப்படும். அதற்கு மேலதிகமாக கணக்காய்வுக் குழுவானது சபை மதிப்பீட்டுச் செயன்முறை ஊடாக சபை மட்டத்தில் மதிப்பிடப்படுகின்றது.



ரணெல் ரி விஜேசிங்க
பணிப்பாளர்

கணக்காய்வுக் குழு
2018 மார்ச் 27

ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழு அறிக்கை

தலைவரின் கூற்று

குழுவின் வகிபாகம்

இடர் முகாமைத்துவம் தொடர்பான சகல அம்சங்களிலும் சபையானது தனது மேற்பார்வை சார்ந்த பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு உதவிகளை நல்குவது இக்குழுவின் பிரதான வகிபாகமும் பொறுப்பும் ஆகும். இது தொடர்பில் குழுவானது கடன், சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாடு மற்றும் உபாயரீதியான இடர்கள் ஆகியவற்றை பொருத்தமான இடர் குறி காட்டிகள் மற்றும் முகாமைத்துவ தகவல்கள் ஆகியவற்றின் மூலம் மீள்பார்வைக்கு உட்படுத்தி அவை தொடர்பில் கவனம் செலுத்துகின்றது.

மேற்படி விடயங்களுக்கு மேலதிகமாக குழுவானது மீள்பார்வைக்கு உட்படுத்தல் மற்றும்/அல்லது பின்வருவனவற்றை விதப்புரை செய்வதற்கு பொறுப்பாக இருக்கின்றது. இத்தகைய விடயங்கள் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுவின் சாசனத்தில் இனம் காணப்பட்டுள்ளன.

- இடர் முகாமைத்துவம் மற்றும் இணக்கம் ஆகியவற்றுடன் தொடர்புடைய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் முகாமைத்துவ குழு சாசனங்கள்.
- பிரதான இடர் சார்ந்த அதிகாரியினால் விதப்புரை செய்யப்பட்டதன் பிரகாரம் கடன், சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாடு மற்றும் ஏனைய இடர்கள் ஆகியவற்றை ஸ்தாபிக்கின்ற இடர்களின் வரையறை மற்றும் கொள்கைகள்.
- குழுவினால் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் அளவு சார்ந்த மற்றும் தன்மை சார்ந்த இடர் வரையறைக்குள் முகாமைத்துவம் செய்யும் முகமாக திட்டவட்டமான இடர்கள் தொடர்பில் செயற்படும் முகமாக கடன் குழு மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் முகாமைத்துவ குழு போன்ற சகல முகாமைத்துவ மட்ட குழுக்களின் வினைத்திறன் மற்றும் ஆற்றல்கள்.
- அத்தகைய இடர்களை இனங்கண்டு, அளவிட்டு, மேற்பார்வை செய்து மற்றும் கட்டுப்படுத்தும் முகமாக வங்கியின் இடர் தோற்றப்பாட்டு மற்றும் தற்போதைய சந்தை, ஒழுங்கமைப்பு இடர்கள் தொடர்பிலான இடர் முகாமைத்துவ அறிக்கைகள்.
- வங்கியின் கொள்கைகள், ஒழுங்கமைப்பு மற்றும் மேற்பார்வை சார்ந்த தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் குழுவினால் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் இத்தகைய இடர்கள் வங்கியின் அறிவு சார்ந்த மட்டத்திற்கு அப்பால் திகழுகின்ற பொழுது குறிப்பிட்ட இடர்கள் தொடர்பான தாக்கத்தினை தணிக்கும் முகமாக அவசியமான சீர்த்திருத்த செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- திட்டவட்டமான இடர்களை இனங்காண்பதற்கு தவறிய அதிகாரிகளுக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் வங்கியின் மேற்பார்வை பணிப்பாளரினால் அல்லது வேறுவிதமாக பணிக்கப்பட்டதன் பிரகாரம் உடனடியாக சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- கடன், சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாடு மற்றும் இணக்கப்பாட்டு இடர்கள் சார்ந்த இடர்களை இனங்காணல், அளவிடல், மேற்பார்வை செய்தல், அவற்றை தணித்தல் தொடர்பான பயனுறுதித்தன்மை மற்றும் போதிய தன்மைகள்.

ஆக்க அமைவு மற்றும் கூட்ட நடப்பெண்

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதிக்கான குழு உறுப்பினர்கள் பின்வருமாறு,

- **திரு. சரித்த என். விஜேவர்தன**
  தலைவர், சுயாதீன நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளர் - 2017 ஜூலை 21 வரை குழுவில் சேவையாற்றினார்.
- **திரு. சஞ்சய பத்தமபெரும**
  உறுப்பினர், சுயாதீன நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளர் - 2017 ஜூன் 30 வரை குழுவில் சேவையாற்றினார்.
- **திரு. எச் பி அஜித் குணவர்தன**
  உறுப்பினர், சுயாதீன நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளர்.
- **திரு. சமந்த ராஜபக்ச**
  தலைவர், சுயாதீன நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளர் - 2017 செப்டம்பர் 28 இலிருந்து குழுவில் சேவையாற்றுகிறார்.
- **திரு.சஜித் ஆர் ஆட்டிகல**
  உறுப்பினர், சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரம் அற்ற பதவிவழி பணிப்பாளர் - 2017 செப்டம்பர் 28 இலிருந்து குழுவில் சேவையாற்றுகிறார்.

குழுவின் நிரந்தர முகாமைத்துவ பிரதிநிதிகள்.

- பொது முகாமையாளர்
- பிரதான இடர் அதிகாரி

குழுவின் உறுப்பினர்களான பணிப்பாளர்கள் தொடர்பான சுருக்க விபரங்கள் (இவ்வருடாந்த ஆண்டறிக்கையின்) 35 முதல் 37 வரையிலான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

குழுவின் கூட்ட நடப்பெண் 2 உறுப்பினர்கள் ஆகும்.

இலங்கை வங்கியின் செயலாளர்/சபையின் செயலாளர் குழுவின் செயலாளராக பணியாற்றுகின்றார். பிரதான நிதி அதிகாரி மற்றும் பிரதான உள்ளக கணக்காய்வாளர் ஆகியோர் கூட்டங்களில் பங்குபற்றுவதற்காக அழைக்கப்படுகின்றனர். ஏனைய (சம்பந்தப்பட்ட தொகுதி ஊழியர்கள்) குழுவின் தேவைக்கு ஏற்ப கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு அழைக்கப்படுகின்றனர்.

கூட்டங்கள் மற்றும் செயற்பாடுகள்

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியினுள் குழு 5 கூட்டங்களை நடத்தியது. இவ் ஒவ்வொரு கூட்டத்திலும் பங்குபற்றிய குழு உறுப்பினர்கள் தொடர்பான விபரங்கள் இவ்வருடாந்த அறிக்கையின் 69 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் தமது கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பில் குழு உறுப்பினர்களினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஆகியன சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளன.

- இடர் தோற்றப்பாட்டின் அடிப்படையில் பின்வரும் கொள்கைகள் மீளாய்வு செய்யப்பட்டன மற்றும்/அல்லது விதந்துரைக்கப்பட்டது. இதன் அடிப்படையிலேயே வங்கியின் இடர் தோற்றப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.
  - அ) கடன் இடர் தொடர்பான முகாமைத்துவ கொள்கை.
  - ஆ) சந்தைப்படுத்தல் இடர் தொடர்பான முகாமைத்துவ கொள்கை.
  - இ) தொழிற்பாட்டு இடர் தொடர்பான முகாமைத்துவக் கொள்கை.
  - ஈ) அழுத்தப்பரீட்சை கொள்கை.
  - உ) பணத்தூயதாக்கலுக்கு எதிரான/இணக்கப்-பாட்டுக் கொள்கை
  - ஊ) திரவத்தன்மை இடர் முகாமைத்துவக் கொள்கை.
  - எ) வெளிநாட்டு நாணயமாற்று இடர் முகாமைத்துவ கொள்கை.
  - ஏ) கடன் மீளாய்வு பொறிமுறைக் கொள்கை.
  - ஐ) கடன் விளக்க முகாமைத்துவக் கொள்கை.
  - ஒ) பண தூயதாக்கலைத் தடுப்பது மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் ஆகியவற்றை தடுக்கும் முகமாக இடர் மைய அணுகுமுறை.
  - ஓ) வியாபார ரீதியான பண தூயதாக்கலைத் தடுப்பது மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் ஆகியவற்றை தடுப்பது தொடர்பான கொள்கை.
  - ஔ) பண தூயதாக்கலைத் தடுப்பது தொடர்பான கொள்கை மற்றும் சீஷெல்ஸ் கிளை தொடர்பில் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை தடுத்தல்.
  - க) சென்னை கிளைக்கான தொழிற்பாட்டு இடர் கொள்கை.
  - கா) சென்னை கிளைக்கான பண தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலைத் தடுத்தல்.
  - கி) மோசடி தொடர்பான இடர் முகாமைத்துவ கொள்கை 2017.
  - கீ) சீஷெல்ஸ் கிளைக்கான இணக்கப்பாட்டுக் கொள்கை
  - கு) வியாபார தொடர் முகாமைத்துவ கொள்கை (BCMP) (BCMP தொடர்பான சர்வதேச வழிகாட்டிகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டிகள் மற்றும் IS கொள்கை மற்றும் சர்வதேச தராதரங்கள் இலக்கம் ISO 22301 ஆகியவற்றிற்கு ஏற்ப)

  ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு சாசனத்தின் குறிப்பு விதிமுறைகள் மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்டு மேம்படுத்தப்பட்டது.
- வங்கியின் சுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ பிரிவானது இடர்களை மாதாந்த அடிப்படையில் மதிப்பீடு செய்து அதன் சுருக்க அறிக்கைகள் குழுவிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன. குழுக் கூட்ட அறிக்கைகள் மற்றும் விசேட விதப்புரைகள் ஆகியவற்றின் மூலம் அவற்றினை குழு மீள்பார்வைக்கு உட்படுத்தி அதனது விதப்புரைகளை சபையிடம் சமர்ப்பிக்கின்றது.
- 2017 ஆம் ஆண்டிற்கான இடர் அளவு மற்றும் வரையறை அமைத்தல் ஆகியன ஸ்தாபிக்கப்பட்டன.

- வரையறைக்கு அப்பால் சென்று அளவு மற்றும் தன்மை சார்ந்த இடர்களை மேற்பார்வை செய்து அவை தொடர்பில் அவசியமான விதப்புரைகளை வழங்கல்.
- ஒன்றிணைக்கப்பட்டஇடர் முகாமைத்துவ மென்பொருள் (கடன் முகாமைத்துவம், தொழிற்பாடு மற்றும் சந்தைப்படுத்தல் சார்ந்த இடர்கள் முகாமைத்துவம் தொடர்பான இடர் முகாமைத்துவ முறை), சொத்துக்கள் மற்றும் முகாமைத்துவ முறை, தொழில் முயற்சி சார்ந்த மோசடி முகாமைத்துவ மென்பொருள் மற்றும் பணத்தூயதாக்கலுக்கு எதிரான மென்பொருள் தீர்வுகள் ஆகியன நடைமுறைப்படுத்தப்படுகின்ற அல்லது அவை தொடர்பான தொடர் நடவடிக்கைகள்.
- 2017 ஆம் ஆண்டிற்கென மீளாய்வு செய்யப்பட்ட உள்ளக மூலதன போதிய தன்மை மதிப்பீடு செயன் முறைகளை ஏற்றுக்கொள்ளும்படி விதந்துரைக்கப்பட்டது.
- சென்னை கிளைக்கென மீளாய்வு செய்யப்பட்ட உள்ளக மூலதன போதியத்தன்மை மதிப்பீட்டு செயன்முறையை ஏற்றுக்கொள்வதற்கென விதப்புரைகள் வழங்கப்பட்டன.
- இணக்கப்பாட்டு அதிகாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட பூரணத்துவமிக்க இணக்கப்பாட்டு அறிக்கைகள் மீள் பார்வைக்கு உட்படுத்தப்பட்டன.
- துணை கம்பனிகள் இடர் சார்ந்த செயற்பாடுகளை சிறப்பாக முகாமைத்துவம் செய்யும் முகமாக இடர் முகாமைத்துவ துரித சபை மேம்படுத்தப்பட்டது. அத்தோடு துணை கம்பனிகளுக்கு தமது இடர் சார்ந்த விடயங்களில் உதவும் முகமாக இடர் முகாமைத்துவ பிரிவிலிருந்து குழுவொன்று உருவாக்கப்பட்டது.
- துணை கம்பனிகளது இடர் முகாமைத்துவ துரித சபைகள் மேற்பார்வை செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டதுடன் துணை கம்பனிகள் முகங்கொடுத்த பல்வேறு விதமான இடர்களை வெல்வதற்கு அவசியமான விதப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன.
- கிளை வலையமைப்புகள், முக்கிய வியாபாரங்கள் மற்றும் உதவிப் பிரிவுகள் ஆகியவற்றின் பிரதான இடர் குறிகாட்டிகள் மேற்பார்வை செய்யப்பட்டன.
- 2017/18 ஆம் ஆண்டுகளுக்கான மீளாய்வு செய்யப்பட்ட வியாபார தொடர்ச்சி திட்டத்தினை ஏற்றுக்கொள்வதற்கு விதப்புரை செய்யப்பட்டது.
- அழுத்த பரீட்சை விளைவுகள் பற்றி காலாண்டு அடிப்படையில் மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்டன.
- தகவல் தொடர்பாடல் சார்ந்த இடர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணையம் சார்ந்த பாதுகாப்புகள் ஆகியவற்றுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன் இணையம் சார்ந்த தாக்குதல்களிலிருந்து வங்கியை பாதுகாக்கும் முகமாக பல்வேறு விதமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு பின்னூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன. (அவையாவன வங்கியின் தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு தொடர்பான வலையமைப்பு உட்கட்டமைப்பு வசதிகள், தொழில் முயற்சி பாதுகாப்பு முறை போன்றன)
- புதிய உதவி தகவல் தொழிநுட்ப இடர் முகாமைத்துவ அதிகாரி ஒருவரை நியமிப்-பதற்கான விதப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன. இது தற்சமயம் நடைமுறைப் படுத்தப்பட்டதுடன் தகவல் தொழிநுட்பத்துடன் தொடர்புடைய இடர்களை முகாமைத்துவம் செய்யும் முகமாக பிரதான தகவல் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- புதிய தரவு மையம் தொடர்பான செயன்முறைகள் இறுதிப்படுத்தப்படுவதைப் பற்றிய மேற்பார்வைகள் இடம்பெற்று வருகின்றன.
- பிரேரிக்கப்பட்ட சகல வசதிகளுடன் கூடிய இடர் மீண்டெழல் தளம் தொடர்பான நடவடிக்கைகள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றது.
- பாதிப்புறு தன்மை தொடர்பான மதிப்பீட்டு அறிக்கைகளில் கண்டறியப்பட்ட விடயங்களின் முன்னேற்றம் பற்றிய மேற்பார்வைகள் இடம்பெற்று வருவதுடன் இடையீட்டு சோதனையின் பொழுது இனங்காணப்பட்ட விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- இணக்கப்பாடு/பணத் தூய்தாக்கலுக்கு எதிரான செயற்பாடுகள் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலுக்கு எதிராக போராடுதல் ஆகியன தொடர்பான இலங்கை வங்கியின் துணைக் கம்பனிகளது நிலைமைகள் பற்றி மீளாய்வு செய்யப்பட்டது.
- வங்கியின் பங்குலாபம் தொடர்பான கொள்கைகள் இறுதிப்படுத்தப்பட்டன.
- முக்கிய வங்கி முறை தொடர்பான சகல தொகுதிகளும் முறையாகப் பயன்படுத்தப்பட்டன என்பதை உறுதிசெய்துகொள்ளும் முகமாக தற்சமயம் மேற்பார்வைகள் இடம்பெற்று வருகின்றன.
- மாலைதீவு கிளை தொடர்பான பணத்தூ யமையாக்கலை தடுத்தல் பற்றிய மீளாய்வு செய்யப்பட்ட கொள்கையை பின்பற்றுதல் மற்றும் பயங்காரவாதத்திற்கு நிதியிடல் தொடர்பான போராட்டம் தொடர்பான மீளாய்வு செய்யப்பட்ட கொள்கைகளை பின்பற்றுதல் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. மாலைதீவு நிதி அதிகார அமைப்பினால் வழங்கப்பட்ட விதப்புரைகளுக்கு அர்த்தம் தெரிவிக்கும் ஓர் நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்பட்டது.
- இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பணிப்புரை-களுக்கு ஏற்ப நடப்பதை உறுதிசெய்து கொள்ளும் முகமாக அனுமதி அளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கான பாசல் III வழிகாட்டிகளுக்கு ஏற்ப ஆகக்குறைந்த மூலதன போதுமைத்தன்மை விகிதம் பேணப்படுவது மேற்பார்வை செய்யப்பட்டது.
- பழைய கணினி பிரயோகங்களுக்கு பதிலாக புதிய மென்பொருள் மற்றும் வன்பொருள் பிரயோகங்கள் வங்கியில் பின்பற்றப்பட்டன. பழைய முறை இவற்றின் மூலம் பிரதியீடு செய்யப்பட்டது.
- சென்னை, சீஷெல்ஸ், மாலைதீவு ஆகிய கிளைகளுக்கென இடர் முகாமைத்துவ வரைவுச்சட்டகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

கூட்ட அறிக்கைகள் மூலம் தனது விதப்புரைகளை குழு சபைக்கு அறிவித்தது. குழுக் கூட்டம் தொடர்பான சகல விடயங்களும் கூட்ட அறிக்கைகள் மூலம் சமர்ப்பிக்கப்பட்டு சபை கூட்டங்களில் அவை ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் நிலுவையில் உள்ள விடயங்கள் தொடர்பில் பின்னூ ட்டல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

முடிவுரை

2017 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கைகளை மதிப்பீடு செய்த ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுவின் உறுப்பினர்கள் இதனது செயலாற்றுகைகள் திருப்த்திகரமாக உள்ளன என்ற முடிவுக்கு வந்தனர். அத்தோடு வங்கியின் இடர் வெளிப்பாடு சார்ந்த விடயங்கள் வினைத்திறன் மிக்க முறையில் முகாமைத்துவம் செய்யப்பட்டன என்ற முடிவுக்கும் வந்தனர்.

வங்கியினால் எதிர்கொள்ளப்பட்ட பல்வேறு விதமான இடர்கள் தொடர்பில் தொடர்ச்சியான மீளாய்வுகளை குழு மேற்கொண்டது. அத்தோடு காத்திரமான முறையில் இடர் ஆளுகை வரைவுச்சட்டகம், இடர் வரைவுச்சட்டகத்தை மேம்படுத்திய அதே வேளை இடர் அளவு உள்ளடக்கிய தீர்மானம், நிதிரீதியான இடர்களை அளவிடும் முகமாக இற்றைப்படுத்தப்பட்ட முறைகள் சார்ந்த பிரயோகம், உள்ளக நிபுணத்துவம் சார்ந்த விடயங்களை விருத்தி செய்தல், இடர்கள் தொடர்பான அறிக்கையிடல்கள் இடர் வெளிப்பாடு தொடர்பில் துல்லியமாக கருத்து தெரிவிக்கின்றன என்பதையும் மற்றும் அழுத்தப்பரீட்சையின் பெறுபேறுகள் அல்லது சூழ்நிலை ஆய்வு, தரவுப் பகுப்பாய்வு மற்றும் சந்தை சகபாடி வங்கிகளின் ஆய்வு என்பவற்றையும் உறுதிப்படுத்துதல்.

இடர்கள் தொழிநுட்ப மேம்பாடுகளை கருத்திற் கொண்டு இடர் போராட்ட உபாய முறைகள், முறையாக மேலும் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதை வங்கி அங்கீகரிப்பதுடன் அவை தொடர்பில் காத்திரமான முறையில் அவதானத்துடன் செயற்படுகின்ற அதேவேளை இவை தொடர்பில் தொடர்ச்சியாக விழிப்புணர்வுடன் குழு திகழ்கிறது. அதேவேளையில் பேரண்டப் பொருளாதார அதிர்ச்சிகள் மற்றும் வங்கி தொடர்பான மோசடிகள் மற்றும் இணைய ரீதியான குற்றங்கள் ஆகியன பாரிய சவால்களாக காணப்படுவதன் காரணமாக இவைதொடர்பிலும் காத்திரமாகச் செயற்பட வேண்டியுள்ளது.

தலைவரான திரு. சரித்த என். விஜேவர்தன மற்றும் குழுவின் உறுப்பினரான திரு. சஞ்சய பத்ம பெரும ஆகியோர் குழுவிற்கு வழங்கிய பெறுமதிமிக்க பங்களிப்புகளுக்காக இவர்களுக்கு குழு தனது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுவின் சார்பாக,



சமந்த ராஜபக்ஷ
தலைவர்
ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு

27 மார்ச் 2018
கொழும்பு

மனித வளங்கள் மற்றும் ஊதியக்குழு அறிக்கை

தலைவரின் கூற்று

குழுவின் வகிபாகம்

இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட இலங்கையில் அனுமதியளிக்கப்பட்ட வங்கிகளுக்-கான கூட்டாண்மை ஆளுகை தொடர்பான 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கிச்சட்ட பணிப்புரைகளை அடிப்படையாக கொண்ட குழுவின் பிரதான பொறுப்புகள் பின்வருமாறு,

- வங்கியின் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் தொடர்பான வங்கியின் ஊதியக் கொள்கைகளை தீர்மானித்தல். (சம்பளங்கள், படிகள், ஏனைய நிதி ரீதியான கொடுப்பனவுகள்)
- பொது முகாமையாளர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் தொடர்பிலான நோக்குகள் மற்றும் இலக்குகளை நிர்ணயித்தல்.
- நிர்ணயம் செய்யப்பட்ட இலக்குகள் மற்றும் நோக்கங்கள் தொடர்பில் பொது முகாமையாளர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளனியினர் செயலாற்றுகைகளை காலத்திற்கு காலம் மதிப்பீடு செய்தல் மற்றும் ஊதியங்களை மீளாய்வு செய்வது தொடர்பான அடிப்படைகளை தீர்மானித்தல், செயலாற்றுகை மைய ஊக்குவிப்புகள் அடிப்படையில் நலன்களையும் ஏனைய கொடுப்பனவுகளையும் தீர்மானித்தல்.
- சபையினால் இதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஊழியர்கள் தொடர்பான விடயங்களை மீள்பார்வைக்கு உட்படுத்துதல்.
- வங்கியின் மனித வளங்கள் கொள்கை மற்றும் அமைப்பு ரீதியான கட்டமைப்பு ஆகியவற்றை தீர்மானித்தல்.

ஆக்க அமைவு மற்றும் கூட்ட நடப்பெண்

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியினுள் குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு,

- **திரு. எச். பி. அஜித் குணவர்தன**
தலைவர், சுயாதீன நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்.
- **திரு. ரொனால்ட் சி. பெரேரா,**
ஜனாதிபதி சட்டத்தரணி உறுப்பினர், சுயாதீன நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்.
- **திரு. சஜித் ஆர். ஆட்டிகல**
உறுப்பினர், நிறைவேற்றதிகாரமற்ற பதவிவழி பணிப்பாளர்.
- **திரு. சரித்த என். விஜேவர்தன உறுப்பினர்,**
சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் (2015 நவம்பர் 5 இலிருந்து 2017 ஜூலை 21 வரை)

இக்குழுவின் கூட்ட நடப்பெண் இரண்டு உறுப்பினர்கள் ஆகும். பொது முகாமையாளர் தொடர்பில் பேசப்படுகின்ற விடயங்கள் தவிர்ந்த ஏனைய சகல சந்தர்ப்பங்களிலும் பொது முகாமையாளர் கூட்டங்களில் பங்குபற்றுவார். குழுவிற்கு அவசியம் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள்) மற்றும் ஏனைய ஊழியர் தொகுதி உறுப்பினர்கள் கூட்டங்களுக்கு அழைக்கப்படுவார்கள். இலங்கை வங்கியின் செயலாளர்/சபையின் செயலாளர் குழுவின் செயலாளராக பணியாற்றுவார்.

கூட்டங்கள் மற்றும் செயற்பாடுகள்

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் 3 கூட்டங்களை குழு நடத்தியது. கூட்டங்களில் பங்குபற்றிய உறுப்பினர்களின் விபரங்கள் 69 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது. குழுவின் கூட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கபடுவதுடன் சபை கூட்டங்களின் பொழுது அவை ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இக்குழுக் கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகள் நடைமுறைப்படுத்துவதன் நிமித்தம் சபையின் அங்கீகாரத்தைப் பெறுகின்றன. முக்கியமான விடயங்கள் தொடர்பில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மேற்குறிப்பிடப்பட்ட வங்கிச் சட்டங்களின் பிரகாரம் பணிப்பாளர்கள் தொடர்பான ஊதியக் கொள்கையை இக்குழு தீர்மானித்தல் வேண்டும். இருப்பினும் இலங்கை வங்கியை பொறுத்த வரையில் பணிப்பாளர்கள் தொடர்பான ஊதியங்கள் ஆனது இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபங்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் ஆகியவற்றின் பிரகாரம் தீர்மானிக்கப்படுகின்றது. இலங்கை அரசாங்கமே வங்கியின் முழுமையான பங்குதாரர் என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பில் 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள், இலங்கை வங்கியை தாபித்த பாராளுமன்ற சட்டங்கள் ஆகியன கருத்திற் கொள்ளப்படுகின்றன. மேற்படி விடயங்களை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட ஊதியக் கொள்கை இலங்கை வங்கியிடம் காணப்படுகின்றது. அரசாங்கத்தினால் புதிய கொள்கைகள் அல்லது நடைமுறைகள் ஒழுங்கு விதிகள் வழங்கப்படுகின்ற பொழுது அவற்றை அடிப்படையாக கொண்டு இவை மீள்பார்வைக்கு உட்படுத்தப்படுகின்றன. மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியினுள் இக்கொள்கைகள் மீள்பார்வை செய்யப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டன. பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம் தொடர்பான விபரங்கள் வருடாந்த அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளன.

பொது முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர்கள் ஆகியோருக்கான குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் ஆகியன நடைமுறைப்படுத்தி வரும் கூட்டாண்மைத் திட்டம் மற்றும் செயற்திட்டம் ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. பிரதி பொது முகாமையாளர்கள் மூலமாக கூட்டாண்மைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு பொறுப்பாக பொது முகாமையாளர் இருக்கின்றார். கூட்டாண்மை திட்டத்தின் பிரகாரம் தாயாரிக்கப்பட்ட செயற்றிட்டத்தை அடிப்படையாக கொண்டு சம்பந்தப்பட்ட பிரதிப் பொது முகாமையாளர்களினால் இலக்குகள் உதவிப் பொது முகாமையாளருக்கு வழங்கப்படுகின்றன.

மூன்று வருடங்களுக்கு ஒரு முறை ஊழியர்கள் தொடர்பான ஊதியங்கள் மீளாய்வு செய்யப்படு-கின்றன. இலங்கை வங்கி கட்டளைச்சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எந்த அமைச்சின் ஆளுகையின் கீழ் இலங்கை வங்கி காணப்படுகின்றதோ அவ்வமைச்சின் ஒப்புதலுடனேயே இவை மேற்கொள்ளப்-படுகின்றன.

அடுத்த சம்பள மீளாய்வு 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். இது 2018 முதல் 2020 வரையிலான ஆண்டுகளை உள்ளடக்கியதாக திகழும்.

2017 ஆம் ஆண்டிற்கான குழுவின் பிரதான நடவடிக்கைகள் பின்வருமாறு,

- வங்கியின் தலைவர் மற்றும் பணிப்பாளர் தொடர்பான ஊதியக்கொள்கை மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்டு விதப்புரை செய்யப்பட்டது.
- பல்துறை கடமை உதவியாளர்கள் முதல் பிரதான முகாமையாளர் தராதரங்கள் வரையான பதவி உயர்வுக்கான பதவி உயர்வுக் கொள்கைத் திட்டங்கள் விதப்புரை செய்யப்பட்டது.
- வங்கியின் பயிற்சி சார்ந்த தேவைகள் மீள்பார்வை செய்யப்பட்டதுடன் அவசியமான விதப்புரைகளும் மேற்கொள்ளப்பட்டன.
- பிரதிப் பொது முகாமையாளர் தொடர்பான செயலாற்றுகைகளை குழு மதிப்பீடு செய்தது. உதவி பொது முகாமையாளர்கள் தொடர்பான செயலாற்றுகை மதிப்பீடுகள் அவர்களது மேல் அதிகாரிகளான பிரதி பொது முகாமையாளர்கள் மூலமாக மதிப்பீடு செய்யப்பட்டது.
- மனித வளங்கள் மற்றும் ஊதியக்குழு சாசனம் தொடர்பானவைகள் மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்டு திருத்தம் செய்யப்பட்டது.
- வங்கியின் வெளியேறல் நேர்முகக் கொள்கை மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்டது.
- வங்கியின் மனித வளங்கள் கொள்கை மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்டது.
- திறைசேரி பிரிவில் பணியாற்றுகின்ற முகவர்கள் தொடர்பான கையாளுகை கொடுப்பனவுகள் மீள்பார்வை செய்யப்பட்டன.
- நடைமுறைப்படுத்தாமல் தேங்கியிருக்கின்ற தீர்மானங்கள் தொடர்பான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- குழுவின் சாசனத்திற்கு ஏற்ப 2017 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகைகளை குழு மதிப்பீடு செய்தது. இது தனது கடமைகளை அவசியமான அளவு மேற்கொண்டுள்ளது என திருப்தி அடைந்தது.

முடிவுரை

தனது ஆளுகையின் கீழ் வருகின்ற விடயங்கள் தொடர்பில் பணிப்பாளர்கள் சபைக்கு அவசியமான உதவிகளை தொடர்ச்சியாக குழு வழங்கும். மனித மூலதனம் மற்றும் ஊதிய விடயங்கள் தொடர்பானவற்றில் கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் அவசியமான தீர்மானங்களை மேற்கொள்-ளுதல், பொதுவான தீர்மானம் மேற்கொள்ளல் ஆகியன தொடர்பில் அவசியமான திறன்களை பிரயோகித்தல் தொடர்பில் உரிய கவனத்தை விசேடமாக இது செலுத்தி வருகின்றது

மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு சார்பாக



எச்.பி. அஜித் குணவர்தன
தலைவர்
மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு
27 மார்ச் 2018
கொழும்பு

நியமனம் மற்றும் கூட்டாண்மை செயலாட்சிக் குழு அறிக்கை

தலைவரின் கூற்று

குழுவின் வகிபாகம்

நியமனம் மற்றும் கூட்டாண்மை செயலாட்சிக் குழுவானது பிரதானமாக பின்வருவனவற்றிற்கு பொறுப்பாக இருக்கும்.

- பொது முகாமையாளர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் ஆகியோரை தெரிவு செய்தல் அல்லது நியமித்தல் தொடர்பான செயன்முறைகளை நடைமுறைப்படுத்தல்.
- பொது முகாமையாளர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் போன்ற பதவிகளுக்கு நியமனங்களை வழங்குதல் அல்லது பதவி உயர்வுகளை வழங்குதல் தொடர்பான பிரதான தகைமைகள் பண்புகள் ஆகியவற்றை பரிசீலித்தல் மற்றும் தகைமை, அனுபவம் தொடர்பானவற்றை பரிசீலித்தல் தொடர்பான நெறிமுறைகளைத் தீர்மானித்தல்.
- இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட அனுமதி பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கூட்டாண்மை செயலாட்சி தொடர்பான 2007 ஆம் ஆண்டில் 11 ஆம் இலக்க வங்கிச்சட்ட நெறிமுறைகள் இலக்கம் 3 (3) இன் பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் பொது முகாமையாளர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் ஆகிய பதவிகளுக்கு பொருத்தமான நபர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள் என்பதை உறுதிசெய்து கொள்ளல்.
- காலத்திற்கு காலம் ஏற்படுகின்ற தேவைகளை கருத்திற்கொண்டு மேலதிக/புதிய நிபுணர்கள் தொடர்பான பரிசீலணைகளை மேற்கொண்டு விதப்புரைகளை வழங்குதல் அத்தோடு பிரதான முகாமைத்துவ ஆளணியினர் தொடர்பான அடுத்தக்கட்ட ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.
- சபையின் வருடாந்த மதிப்பீடுகள் தொடர்பான முறைகள் மற்றும் நிறைவேற்றுதல் ஆகியவற்றை தீர்மானித்தல், ஒவ்வொரு சபை குழுவின் பயனுறுதித்தன்மை, தொடர்பான பரிசீலணைகளை மேற்கொண்டு வருடாந்த செயலாற்றுகை மதிப்பீட்டு செயன்முறைக்கு உதவுதல்.
- வங்கியின் ஒழுக்க நெறிக் கோவையை மீளாய்வு செய்தல்.
- கூட்டாண்மைச் செயலாட்சிக் கொள்கைகளுடனான இணக்கப்பாட்டு மட்டத்தை தீர்மானித்தல்.

குழுவின் ஆக்க அமைவு

மீளாய்வுக்கு உட்பட்ட வருட காலத்தின் போதான குழு உறுப்பினர்கள் தொடர்பான விபரம் பின்வருமாறு,

- **திரு. ரொனால்ட் சி பெரேரா**
  ஜனாதிபதி சட்டதரணி தலைவர், சுயாதீன நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளர்.
- **திரு. சஞ்சய பத்ம பெரும**
  உறுப்பினர், சுயாதீன நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளர் - 2017 ஜூன் 30 வரை குழுவில் சேவையாற்றினார்.
- **திரு. எச்.பி. அஜித் குணவர்தன**
  உறுப்பினர், சுயாதீன நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளர்.
- **திரு. சஜித் ஆர். ஆட்டிகல**
  உறுப்பினர், சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரம் அற்ற பதவி வழி பணிப்பாளர் 2017 செப்டம்பர் 28 இலிருந்து குழுவில் சேவையாற்றி வருகின்றார்.

குழுவின் உறுப்பினர்களாக உள்ள பணிப்பாளர்கள் தொடர்பான சுருக்கமான விபரங்கள் இந்த வருடாந்த அறிக்கையில் 35 முதல் 37 வரையிலான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

அழைப்பின் பிரகாரம் பொது முகாமையாளர் கூட்டங்களில் பங்குபற்றுகின்றார். ஊழியர் தொகுதியின் ஏனைய உறுப்பினர்கள் குழுவின் அவசியத்திற்கு ஏற்ப கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு அழைக்கப்படுகின்றார்கள். இலங்கை வங்கியின் செயலாளர் சபையின் செயலாளர் குழுவின் செயலாளராக பணியாற்றுகின்றார்.

கூட்டங்கள்

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியினுள் மூன்று கூட்டங்களை குழு கூடியது. இவ் ஒவ்வொரு கூட்டத்திலும் பங்குபற்றிய குழு உறுப்பினர்கள் தொடர்பான விபரங்கள் இவ்ஆண்டறிக்கையின் 69 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

சபைக்கு அறிக்கையிடல்

குழு கூட்டங்கள் தொடர்பான கூட்ட அறிக்கைகள் முறையாக சமர்ப்பிக்கப்பட்டு சபை கூட்டங்களில் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்புதல் சபையிடமிருந்து பெறப்படுகின்றது. நிலுவையாகவுள்ள விடயங்கள் தொடர்பில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சபைக்கான நியமனங்கள்

மேற்குறிப்பிடப்பட்ட 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கிச்சட்ட பணிப்புரைகளின் பிரகாரம் புதிய பணிப்பாளர்களை தெரிவு செய்தல் அல்லது நியமித்தல் தொடர்பிலான நடைமுறைகளை குழு அமுல்படுத்த வேண்டும். இருப்பினும் இலங்கை வங்கியை பொறுத்த வரையில் இது முழுமையாக அரசாங்கத்திற்கு சொந்தமான வங்கி என்ற வகையில் 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றின் பிரகாரம் எந்த அமைச்சரின் கீழ் இலங்கை வங்கி காணப்படுகின்றதோ அந்த அமைச்சரினால் இலங்கை வங்கிக்கான பணிப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். ஆகவே பணிப்பாளர்களது நியமனங்கள் தொடர்பில் இந்த குழு எந்தவிதமான வகிபாகத்தையும் மேற்கொள்வதில்லை.

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

- பின்வருவன தொடர்பில் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு விதப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன.
  - சபைக்குரிய சாசனம்.
  - பணிப்பாளர்களுக்கான ஒழுக்கநெறிக் கோவை.
  - ஊழியர்களுக்கான ஒழுக்கநெறிக் கோவை.
  - வங்கியின் தொடர்பாடல் கொள்கை.
- கூட்டாண்மை முகாமைத்துவம் மற்றும் நிறைவேற்று முகாமைத்துவங்களுக்கான திட்டங்கள்.
- பிரதான முகாமைத்துவ ஆளணியினர்களின் பதவி நிலையை ஏற்றுக்கொள்வது தொடர்பான மீளாய்வு செய்யப்பட்டு விதப்புரைகள் செய்யப்பட்டன.
- பிரதான முகாமைத்துவ ஆளணியினர் பதவிக்கான நியமனங்கள் அல்லது பதவி உயர்வுகள் வழங்கப்படுகின்ற பொழுது பொருத்தமான, சரியான நபர்களே அத்தகைய பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்றார்கள் என்பதை உறுதி செய்து கொள்ளல்.
- பணிப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட சுய மதிப்பீடு செயன்முறையை மீளாய்வு செய்தல்.
- குழுவின் செயலாற்றுகைகள் மதிப்பீடு செய்யப்பட்டன.

முடிவுரை

இலங்கை வங்கியில் சிறப்பான கூட்டாண்மைச் செயலாட்சிச் செயற்பாடுகளைப் பேணுவதற்கும் அதனை மேம்படுத்துவதற்குமான சகல முயற்சிகளையும் குழு மேற்கொள்கிறது.

குழுவின் உறுப்பினர் என்ற முறையில் திரு. சஞ்சய பத்ம பெரும அவர்கள் வழங்கிய பெறுமதிமிக்க பங்களிப்புக்காக குழு அவருக்கு தனது வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.

நியமனம் மற்றும் கூட்டாண்மை செயலாட்சிக் குழு சார்பாக,



ரொனால்ட் சி பெரேரா
ஜனாதிபதி சட்டதரணி
தலைவர்
நியமனம் மற்றும் கூட்டாண்மை செயலாட்சிக் குழு

27 மார்ச் 2018
கொழும்பு






டிஜிற்றலாக்கம்

புதிய தொழில்நுட்ப தளமானது வங்கியியல் உள்ளடங்கலாக பெரும்பாலும் நாம் செய்யும் ஒவ்வொரு விடயத்திற்கான வழிமுறைகளில் புரட்சியை ஏழிமுறைளில் புரட்சியை ஏற்படுத்துகின்றது. வங்கியானது அத்தகைய தொழில்நுப்பம் மற்றும் உன்மையான வாழ்ககை வழி முறை ஆகியவற்றை உடனடியாக உள்வாங்கியுள்ளதுபன் எதிர்காலத்திற்கான உயரிய வழிக்கான திறவுகோலாக வங்கி மேலும் இவற்றைக் கையாளும்.


இடர் முகாமைத்துவம்

பிரதான இடர் குறியீடுகள்


மூலதனப் போதுமை வீதங்கள்



தேறிய வட்டி வருமானம்




செயற்பாட்டு இடர் ஏற்பு எதிர் உண்மை நட்டம்



வங்கியின் இயக்கங்களின் தன்மையின் காரணமாக இடர் என்பது ஒரு வங்கியின் உள்ளார்ந்த விடயமாகும். எனவே வங்கியின் பாதுகாப்பையும் உறுதிப்பாட்டினையும் முகாமைத்துவம் செய்வதற்கு இடரினை புத்திசாதுர்யமாக முகாமைத்துவம் செய்வது இன்றியமையாததாகும். செயற்திறன்மிக்கதாக அமைவதற்கு, இதனைத் தெளிவாக வடிவமைக்கப்பட்ட முறைமைகள் மற்றும் செயல்விதிகளுடன் சேர்ந்த வரையறுக்கப்பட்ட சட்டகத்தினுள் மேற்கொள்ளவேண்டும். இலங்கை வங்கியின் இடர் முகாமைத்துவச் சட்டகமானது புத்திசாதுர்யமான மூலதன ஒதுக்கத்தின் ஆதாரத்துடன் இவ்வாறான இடர்களை அடையாளங்கண்டு முகாமைத்துவம் செய்வதற்காக தன்முனைப்பாகக் கவனம் செலுத்துகின்றது. மிகவும் இறுக்கமான இடர் ஆளுகைக் கட்டமைப்பும் இடருக்கு உட்படுவதற்கான எல்லைகளும் முகாமைத்துவத்தினால் விதிக்கப்பட்டு அவை பணிப்பாளர் சபைகளினால் அங்கீகரிக்கப்படுகின்றன. இவை முகாமைத்துவக் குழுக்கள் மற்றும் சபை உபகுழுக்கள் ஆகியவை சம்பந்தப்படுகின்ற ஒரு முறைமையின் மூலமாக அமுல்படுத்தப்படுகின்றன. தந்திரோயாயங்களில் வங்கியின் தூரநோக்கு, பணிநோக்கு, தந்திரோயாயங்கள் மற்றும் இலக்குகள் ஆகியவை வங்கியின் தூண்களாக இருப்பதுடன் இவையே வங்கியின் இடர் தத்துவத்தினைத் தீர்மானிக்கின்றன. வங்கி இடருக்கு உட்படுவதற்கான அதன் நாட்டமானது, அதாவது வங்கி இடருக்கு முகங்கொடுப்பதற்கு ஆர்வம் கொண்டுள்ள மட்டமானது வரையறை செய்யப்பட்டுள்ளது. கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுக் கொள்கைகளுடனான இறுக்கமான, எண்ணிக்கை சார்ந்த சட்டகமானது இடர்களை தன்முனைப்புடன் அடையாளம் கண்டு முகாமைத்துவம் செய்வதற்காக அமுலிலுள்ளது. எமது இடர் முகாமைத்துவக் கொள்கைகளும் செயல்விதிகளும் தெளிவாக வங்கி முழுவதினூடும் எடுத்தியம்பப்படுகின்றன. இடர் முகாமைத்துவக் கொள்கைகளும் செயல்விதிகளும் வெற்றிகரமாக அமுல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு இது அவசியமானதாகும். சகல உள்நிலைப் பங்கீடுபாட்டாளர்களும் இடர்களையும் திரும்பல்களையும் சமனிலைப்படுத்துவதற்கான தேவை பற்றி விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர். இந்த இடர்- திரும்பல் ஆகியவை ஒன்றினையொன்று ஈடுசெய்கின்ற நிலையானது வரையறுக்கப்பட்ட இடர் எல்லைகளினுள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும்.

ஆளுகைக் கட்டமைப்பு



வங்கியின் இடர் முகாமைத்துவச் செயற்பாட்டினை வலுப்படுத்துவதற்காக நிறுவனரீதியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிரதம இடர் அதிகாரி சுயாதீனமான, ஒருங்கிணைக்கப்பட்ட முகாமைத்துவப் பிரிவுக்கு (IIRMD) தலைமை தாங்குகின்றார். இது ஓர் உபகுழுவான ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் (IRMC) மேற்பார்வையின் கீழ் வருகின்றது. எனவே வருமானம் உருவாக்கும் தந்திரோபாய வியாபார அலகுகளில் (SBUs) இருந்து IIRMD சுயாதீனமானதாகும். இது அதன் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக நிறுவன ரீதியாக நன்கு நிலைபெற்றுள்ளது என்பதை உத்தரவாதப்படுத்துகின்றது.

வங்கியின் இடர் தோற்றப்பாடு

ஐந்தொகையின் பிரதான ஆக்கக்கூறாக கடன்வழங்குதல் இருக்கின்ற காரணத்தினால் கடன் இடருக்கு உயர்வான மூலதனக் கட்டணம் ஒதுக்கப்பட்டுள்ளது. மூலதன ஒதுக்கத்தின் அடிப்படையில் கடன் இடர் மற்றும் செயற்பாட்டு இடர் ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில் சந்தை இடர் புறக்கணிக்கத்தக்கதாகும். கடந்த மூன்று வருடங்களாக இலங்கை வங்கியின் இடர்களின் தோற்றப்பாடு கீழே வழங்கப்பட்டுள்ளது.

இடர்க் கலாசாரம்

இன்று வங்கிச்சேவைத் துறையிலே வங்கி முழுவதிலும் ஒரு பூரணமான இடர்க் கலாசாரத்தினைக் கொண்டிருப்பது அவசியமான ஒன்றாக மாறியுள்ளது. பணியாளர்களின் மத்தியில் இடர்க் கலாசாரத்தினைப் பதியச்செய்வதற்கு சபையினதும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினதும் வழிகாட்டல் மிகவும் இன்றியமையாததாகும். இதிலே இடர்- திரும்பல் சமப்படுத்தல்கள் பற்றிய விழிப்புணர்வும் இடர் மற்றும் மூலதனத்தின் சகல அம்சங்களினையும் முகாமைத்துவம் செய்தல் பற்றிய விழிப்புணர்வும் உள்ளடங்குகின்றன. இடர்கள் வரையறுக்கப்பட்ட இடர் எல்லைகளினுள் ஊகிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட இடர் சட்டகத்தினுள் அங்கீகரிக்கப்படுகின்றன. இவை கணக்கினுள் மீளத் திரும்புகின்றன. இடர்கள் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டு முகாமைத்துவம் செய்யப்படவேண்டும். ஏனெனில் இவற்றின் சிக்கற்தன்மை துரிதமாக மாற்றமடையலாம். உதாரணமாக சந்தை அல்லது தொழில்துறை நிலைமைகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் காரணமாக.

ஆழமாக வேரூன்றியுள்ள இடர்க் கலாசாரத்தினை வங்கியில் பதிப்பிப்பதற்காக IIRMD புதிதாக ஆட்சேர்ப்புச் செய்பவர்களுக்கு அறிவூட்டுவதற்காக நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன் பரிணமித்து வரும் இடர் முகாமைத்துவப் பரப்பிலே ஏற்கனவே பணியாற்றுகின்ற பணியாளர்களின் அறிவினைத் தொடர்ச்சியாக இற்றைப்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. இடரின் முகாமைத்துவத்திலே சகல ஊழியர்களும் பங்கேற்பினைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் அயராது உழைக்கின்றோம். மேலும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் இடர்க் கரிசனைகளை அதிகரிப்பதற்கும் அவர்கள் ஊக்கப்படுத்தப்படுகின்றனர்.

பாதுகாப்பின் மூன்று வரிசைகள்

வங்கியானது நன்கு கட்டமைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ மாதிரியினைக் கொண்டுள்ளது. இது மூன்று பாதுகாப்பு வரிசைகளினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இவை ஒவ்வொன்றும் ஒன்றிலிருந்து மற்றொன்று சுயாதீனமானதாகும். பாதுகாப்பின் ஒவ்வொரு வரிசையும் வெவ்வேறு நிறுவன அலகுகளினால் நிறைவேற்றப்படுகின்றன. பாதுகாப்பின் முதலாவது வரிசை வியாபாரப் பிரிவுகள் மற்றும் உதவிப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இப்பிரிவுகளின் செயற்பாடுகளினாலேயே இடர்கள் எழுகின்றன. பாதுகாப்பின் இரண்டாம் வரிசையாக IIRMD காணப்படுகின்றது. இது சட்டகங்கள், கொள்கைகள், செயல்விதிகள் ஆகியவற்றினை உருவாக்கி இடர் எல்லையினை நிறுவுகின்றது. பருவகால அழுத்தப் பரிசோதனையும் தொடர்ச்சியான கண்காணிப்பும் பாதுகாப்பின் இரண்டாம் வரிசையின் இன்றியமையாத பாகங்களாகும். மூன்றாம் வரிசையில் கணக்காய்வும் இயையுறல் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன. இவை சுயாதீனமான மேற்பார்வையினை வழங்குகின்றன.

	2017 ரூ. மில்லியன்	2016 ரூ. மில்லியன்	2015 ரூ. மில்லியன்
பெறக்கூடிய மூலதனம்	125,460	104,858	92,245
கடன் இடர்	89,818	73,482	59,816
சந்தை இடர்	922	1,987	2,529
செயற்பாட்டு இடர்	10,270	9,504	8,242
மொத்த மூலதனப் பயன்பாடு	101,010	90,437	70,588
மேலதிக ஒழுங்குபடுத்தல் பாதுகாப்பு ஒதுக்கம்	9,671	9,559	–
விஸ்தரிப்புக்காக கிடைக்கக்கூடியதான சுதந்திர மூலதனம்	14,778	5,015	21,657
கடன் இடர்/மொத்தம் RWA	89%	86%	85%
சந்தை இடர்/மொத்தம் RWA	1%	2%	4%
செயற்பாட்டு இடர்/மொத்தம் RWA	10%	11%	12%
RWA/மொத்த சொத்துக்கள்	44%	51%	45%

2017 ஜூலை 1 இல் உள்ளவாறாக பாசல் III வழிகாட்டல்களினால் தேவைப்படுத்தப்படுகின்ற ஒழுங்குபடுத்தல் பாதுகாப்பு ஒதுக்கம் (2016 ஆம் ஆண்டிலே 10.625% மற்றும் 11.75% ற்கும் இடையிலான வித்தியாசம் காணப்பட்டது. மேலும் 2017 இல் வித்தியாசம் 11.75% ற்கும் 12.875% ற்கும் இடையில் காணப்பட்டது.

1ஆம் வரிசை
வியாபார அலகுகள்

- **நாளாந்த இடர் முகாமைத்துவத்தில் சம்பந்தப்பட்டுள்ளவை**
- **இடர் சேவையினைப் பின்பற்றுதல்**
- **உள்நிலைக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் பதிற்செயற்பாடுகளை பிரயோகித்தல்**

2 ஆம் வரிசை
இடர்

- **இடர் முகாமைத்துவத்தினை மேற்பார்வை செய்வதும் சவால் விடுத்தலும்**
- **வழிகாட்டலையும் நெறிப்படுத்தலையும் வழங்குதல்**
- **இடர் முகாமைத்துவச் சட்டகத்தினை உருவாக்குதல்**

3 ஆம் வரிசை
கணக்காய்வு

- **1ஆம் மற்றும் 2ஆம் வரிசைகளை மீளாய்வு செய்தல்**
- **செயன்முறைக்கு சுயாதீனமான கண்ணோட்டத்தினையும் சவால்களையும் வழங்குதல்**
- **குறிக்கோள் மற்றும் வழங்குகை உத்தரவாதம்**

இடர் முகாமைத்துவச் செயன்முறை

பாதகமான நிகழ்வுகள் நிகழ்வதற்கான நிகழ்தகவு மேலும் அவ்வாறான பாதகமான நிகழ்வுகளுக்கு ஏற்படக்கூடிய சாத்தியமான செலவுகள் ஆகியவை நன்கு நிலைநாட்டப்பட்ட இடர் முகாமைத்துவச் செயன்முறை அமுலில் இருப்பதனைத் தேவைப்படுத்துகின்றன. எமது இடர் முகாமைத்துவச் செயன்முறையானது இடர்களை அடையாளங்கண்டு, அவற்றினை அளந்து, கண்காணித்து, மட்டுப்படுத்தி அறிக்கையிடுகின்ற செயற்பாடுகளைக் கொண்டுள்ளது. வியாபாரத்தின் முக்கியமான இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கு உள்நிலையான கட்டுப்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இடர் தந்திரோபாயமானது தந்திரோபாய வியாபாரத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மேலும் இது சபை அங்கீகரித்த இடர் எல்லையினையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. அத்துடன் மூலதனத் திட்டமானது இடர், மூலதனம் மற்றும் வங்கியின் செயலாற்றுகை இலக்குகள் ஆகியவற்றினை வருடாந்தம் ஒன்று சேர்க்கின்றது. இடர், இலாபமீட்டும் தன்மை, மூலதனம் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றமை ஆகியவற்றுக்கு இடையில் ஒரு சமநிலையினைப் பேணுவது அவசியமானதாகும். இடர் முகாமைத்துவச் செயன்முறையானது கடன் இடர், சந்தை இடர், செயற்பாட்டு இடர், நன்மதிப்பு இடர் மற்றும் தந்திரோபாய இடர் போன்ற பல்வேறு வகையான இடர்களின் வகைகளைத் தனிப்பட்ட ரீதியாகவும், ஒட்டுமொத்தமாகவும் தீர்க்கவேண்டும். இடர்களின் எண்ணிக்கையினை அறிதலும் அதன் காரணமாக ஏற்படுகின்ற மூலதனத் தேவைப்பாடுகளும் IIRMD யினால் உருவாக்கப்படுகின்ற எண்ணிக்கை சார்ந்த மாதிரிகள் மற்றும் கருவிகளினால் மேற்கொள்ளப்படுகின்றன. வங்கிக்கெனத் தனித்துவமானதும் பேரண்ட ரீதியாகத் தனித்துவமானதுமான சாதகமற்ற நிலைமைகளின் கீழ் வங்கியின் மீண்டெழும் தன்மையினை மதிப்பிடுவதற்கு வங்கி கிரமமான அழுத்தப் பரிசோதனைகளை மேற்கொள்கின்றது.


இடர்ப் பரிசோதனைகள் கடன் இடர், சந்தை இடர், செயற்பாட்டு ரீதியான இடர் மற்றும் திரவத்தன்மை போன்ற சகல முக்கியமான இடர்களிலும் கவனம் குவிக்கின்றன. முகாமைத்துவமும் சபையும் சாத்தியமான அச்சுறுத்தல்கள் பற்றி விழிப்படைவதற்காக இவ்வாறான பரிசோதனைகளின் பெறுபேறுகள் அவற்றிற்கு தெரியப்படுத்தப்படுகின்றன.

வங்கி முகங்கொடுப்பதற்கு விருப்பம் கொண்டுள்ள இடர்களின் அளவுகள் வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இடர் எல்லைக் கூற்றிலே விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இது பதிலாக இடர் எல்லைச் சட்டகத்தினால் ஆளுகை செய்யப்படுகின்றது. மேலும் இது வங்கியின் இடர்க்கலாச்சாரத்தின் பரந்த வெளிப்பாடாகும். அத்துடன் வங்கியின் இலக்குகள் மற்றும் தந்திரோபாய மார்க்கங்களுடன் இயையுற்ற சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினாலும் இது அங்கீகரிக்கப்படுகின்றது. தரம் சார்ந்ததாக அல்லது எண்ணிக்கை சார்ந்ததாக இருக்கக்கூடிய நெகிழ்வு நிலைகளும் எல்லைகளும் வெவ்வேறு இடர்களின் வகைக்காக ஒரு கட்டுப்பாட்டுப் பொறிமுறையாகச் செயற்படுகின்றன. கொள்கைகள், செயல்விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் ஆகியவை முகாமைத்துவச் செயன்முறையை இயக்குகின்றன. இடரின் நெகிழ்வு எல்லைகள் தந்திரோபாயமட்டம் (நிறுவன ரீதியானது) மற்றும் வியாபார மட்டம் (பிரிவு அல்லது உற்பத்தி) என மேலும் பிரிக்கப்படுகின்றன. உயர்மட்ட இடர் எல்லைகள் மிகவும் சிறிய மட்டங்களுக்குப் பிரிக்கப்படுவதுடன் நிறுவன ரீதியான கட்டமைப்புச் சட்டகங்களினூடாக இவை இயக்கப்படுகின்றன.

ஒழுங்குபடுத்தல் மீறல்கள், வங்கியின் நன்மதிப்புக்கு ஏற்படும் சேதங்கள், பாரிய வியாபார இடையூறுகள் மற்றும் வங்கியின் இருப்புகள் தொடர்பான நிகழ்வுகள் பற்றிய கரிசனைகள் போன்ற இன்றியமையாத அம்சங்கள் பூச்சிய இடர் எல்லையினைக் கொண்டுள்ளதாக கருதப்படுகின்றன. இடர் எல்லைகளிலிருந்து எழும் நெகிழ்வு எல்லைகள் தனிப்பட்ட இடர்க் காரணிகள் மற்றும் முதலீட்டு விதிகளுக்குப் பூரண இடர்க் கூருணர்வினைக் கொண்டுள்ளன என்பதை உறுதிப்படுத்த நாம் எமது முதன்மை அளவீடாக மூலதனத்தினைக் கொண்டுள்ளோம்.

உள்நிலை மூலதனப் போதுமானநிலை மதிப்பீட்டுச் செயன்முறை (ICAAP)

உள்நிலை மூலதனப் போதுநிலை மதிப்பீட்டின் நோக்கமானது எந்த அளவிற்கு வங்கியானது அதன் இடர்களைத் தணித்துவருகின்றது மேலும் வங்கியின் தந்திரோபாயவியாபாரத் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு எந்த அளவு மூலதனம் தேவையாக இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்த, வங்கி முகங்கொடுக்கின்ற இடர்களை அடையாளங்கண்டு மதிப்பிடுவதாகும். ICAAP யானது வங்கியின் முகாமைத்துவம் மற்றும் தீர்மானம் வகுத்தல் கலாசாரத்தில் ஓர் இன்றியமையாத அம்சமாகும். அடையாளங்காணப்பட்ட இடர்களை மூலதனத் தேவைப்பாடுகளாக மாற்றுவதன் மூலம் இடர்கள் எண்ணிக்கையாக்கப்படல் வேண்டும். ICAAP யின் நோக்கத்திற்காக வங்கி மற்றும் குழுமம் மீதான கடன் இடர்நேர்வு, சந்தை இடர், செயற்பாட்டு இடர், திரவத்தன்மை இடர், வங்கிச்சேவை புத்தகத்தின் மீதான வட்டிவீத இடர், நன்மதிப்பு இடர், இயையுறல் இடர், கடன்செறிவு இடர் மற்றும் தந்திரோபாய இடர்ஆகியவற்றினை வங்கி அடையாளம் கண்டுள்ளது.



ICAAP யானது தந்திரோபாயகரமாக முன்னோக்கிச் செல்கின்ற செயன்முறையாகும். இது பின்வருவனவற்றினை உள்ளடக்கு கின்றது:

- வியாபாரத் திட்டங்கள் மற்றும் நியதிச்சட்டத் தேவைப்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் மூலதனத் தேவைகளை மதிப்பிட்டு எதிர்வுகூறுதல். இந்த வருடம், குறிப்பாக, அதிகரித்த மூலதனம் மற்றும் திரவத்தன்மைத் தேவைப்பாடுகள் ஆகியவற்றின் மூலம் பாசல் III தார்ப்பரியங்கள் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன.
- இடர் தந்திரோபாயத்தினையும் இடர் எல்லையினையும் வியாபாரக் குறிக்கோள்களுடன் ஒன்றுசேர்க்கின்ற தந்திரோபாய திட்டமிடல் செயன்முறை. வியாபார தந்திரோபாயங்களை ஆதாயப்படுத்துவதற்கு குறிப்பிட்ட அழுத்தப் பரிசோதனைகளை உள்ளடக்குகின்ற சமநிலையான மூலதன மற்றும் அழுத்தப் பரிசோதனைச் சட்டகம்.
- கிடைக்கக்கூடிய மூலதனம் மற்றும் வருநிலை நிகழ்வுத்திட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தலைமை அலுவலக மதிப்பீடு.

அழுத்தப் பரிசோதனை

அழுத்தப் பரிசோதனை என்பது சாதகமான பேரண்டப் பொருளாதாரச் சூழ்நிலைகளின் கீழ் அல்லது ஏனைய விதிவிலக்கான ஆனால் நிகழக்கூடிய சாத்தியமுள்ள நிகழ்வுகளின் கீழ் நிதிப் பின்விளைவுகளை உருப்போலி செய்கின்ற நிகழ்வாகும். இவ்வாறான சூழ்நிலைகளை வங்கியினால் தாக்குப்பிடிக்கக்கூடிய ஆற்றலினை நாம் இதன் மூலம் அளக்க முடியும். அழுத்தப் பரிசோதனையானது இடரினை முகாமைத்துவம் செய்து கட்டுப்படுத்துவதில் சம்பந்தப்பட்டுள்ள அனைவரினதும் மத்தியில் இடர் பற்றிய விழிப்புணர்வினை மேம்படுத்துகின்றது. மேலும் இது மூலதனம் மற்றும் திரவத்தன்மைத் திட்டமிடலை மேம்படுத்தி வியாபாரத் தீர்மானம் வகுத்தலினை வசதிப்படுத்துகின்றது.

அழுத்தப் பரிசோதனை செயன்முறை

வங்கியினுள் செயற்திறன்மிகு அழுத்தப் பரிசோதனைக்கான அடிப்படைப் பொறுப்பினை வங்கி கொண்டுள்ளது. அழுத்தப் பரிசோதனையின் பெறுபேறுகள் சிரேஷ்ட முகாமைத்துவம், IRMC மற்றும் பணிப்பாளர் சபை ஆகியவற்றுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. இப்பரிசோதனை இடர் எல்லைகளை நிர்ணயிப்பதை வசதிப்படுத்துவதுடன் பல்வேறு இடர்களுக்காக மூலதனத்தினை ஒதுக்குவதையும் இடருக்கு உட்படுவதை முகாமைத்துவம் செய்வதையும் மோசமான சூழ்நிலைகளுக்காக வருநிகழ்வுத்திட்டங்களை உருவாக்குவதையும் வசதிப்படுத்துகின்றது. வங்கியின் அழுத்தப் பரிசோதனையானது பணிப்பாளர் சபை அங்கீகரித்த இற்றைப்படுத்தப்பட்ட அழுத்தப் பரிசோதனைக் கொள்கைக்கு அமைய நடத்தப்படுகின்றது. அதிகரித்த அளவிற்கு தளம்பல் மிக்கதாக மாறி வருகின்ற பேரண்டப் பொருளாதாரச் சூழலின் காரணமாக பரிசோதனையானது மிகவும் இறுக்கமானதாக மாற்றப்பட்டுள்ளதுடன் குழும ரீதியான அழுத்தப் பரிசோதனையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதீத பாதிப்புறு நிலையினைக் கொண்ட முதலீட்டுப்பட்டியல்கள் நாளாந்த அடிப்படையில் அழுத்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவற்றின் பெறுபேறுகள் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்குத் தெரிவிக்கப்படுகின்றன.

அழுத்தப் பரிசோதனை நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துதல்

செயற்பாடு	விபரிப்பு
இடர் மதிப்பீடு	வங்கியின் மிக முக்கியமான இடர்களை அடையாளங்காணும் பொறுப்பினை ICAAP வழிகாட்டல் குழு கொண்டுள்ளது
அழுத்தப் பரிசோதனைத் திட்டம்	அழுத்தப் பரிசோதனைகள் கிரமமான அடிப்படையிலும் எழுமாறான அடிப்படையிலும் மேற்கொள்ளப்படுகின்றன. கிரமமான அழுத்தப் பரிசோதனையானது சபை அங்கீகரித்த அழுத்தப் பரிசோதனைக்கு அமைவாக மேற்கொள்ளப்படுவதுடன் எழுமாறான பரிசோதனையானது சூழ்நிலைக்கு ஏற்பத் தேவையேற்படும் போது மேற்கொள்ளப்படுகின்றது.
வடிவமைப்புக் கூருணர்வு பரிசோதனைகள், சம்பவநிலைச் சட்டகம் மற்றும் பேரண்டப் பொருளாதாரக் காரணிகள்	ஆய்வு, நிதி, வியாபாரத் திணைக்களங்களின் கலந்தாலோசிப்புடன் ICAA வழிகாட்டல் குழு தனிப்பட்ட இடர்கள், ஒருங்கிணைக்கப்பட்ட நிகழ்வுநிலைகள் மற்றும் பேரண்டப் பொருளாதார நிகழ்வுநிலைகள் ஆகியவற்றுக்காக அழுத்தப் பரிசோதனையினை நிகழ்த்துவதற்கு கூருணர்வுப் பரிசோதனைகளை உருவாக்குகின்றது.
இடர்க் காரணிகளை அடையாளம் காணுதல்	அடையாளங்காணப்பட்ட கணிசமான இடர்களை அடிப்படையாகக் கொண்டு இறுதியான தாக்கத்திற்கு இட்டுச் செல்லக்கூடிய காரணிகள் அடையாளம் காணப்படுகின்றன.
பெறுபேறுகளை அளத்தல்	இடர்க்காரணிகளின் தாக்கமானது பின்வருவனவற்றின் மீது அடையாளம் காணப்படுகின்றது. • மூலதனம் • திரவத்தன்மை • இலாபமீட்டும் தன்மை
அழுத்தப் பரிசோதனை நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல்	மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளைப் பூர்த்திசெய்ததும் அடையாளங்காணப்பட்ட பல்வேறு கணிசமான இடர்களுக்கான பொருத்தமான பலாபலன்களைப் பெற்றுக் கொள்வதற்காக ICAAP வழிகாட்டல் குழுவினால் நிகழ்வுநிலை/கூருணர்வுப் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.
பெறுபேறுகளின் மொத்தம்	அழுத்தப் பரிசோதனை நிகழ்ச்சித்திட்டங்களின் பெறுபேறுகள் ஒன்றுசேர்த்தலுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட நிகழ்வுநிலை/கூருணர்வுப் பரிசோதனை-களின் அடிப்படையில் இடர்நிலை வகைகளின் ஊடே ஒன்று சேர்க்கப்படும்.
பெறுபேறுகளின் மீளாய்வும் அறிக்கையிடலும்	அழுத்தப் பரிசோதனையின் பெறுபேறுகள் மீளாய்விற்காகவும் அங்கீகாரத்திற்காகவும் IRMC யிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவ செயற்திட்டம் இறுதிப்படுத்தப்படும்.
முகாமைத்துவத் தீர்மானம் வகித்தலில் பிரயோகித்தல்	அழுத்தப் பரிசோதனைப் பெறுபேறுகள் பின்வரும் முகாமைத்துவ மட்டத் தீர்மானம் வகுத்தல் காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. • இடர் எல்லைத் திட்டமிடல் • மூலதனத் திட்டமிடல் • திரவத்தன்மை முகாமைத்துவம்

கடன் இடர் முகாமைத்துவம்

கடன் கொடுக்கல் வாங்கலுடன் சம்பந்தப்பட்டுள்ள கடன்பெற்ற தரப்பு ஏற்றுக்கொண்ட விதிகளுக்கு அமைவாகத் தனது கடப்பாடுகளைப் பூர்த்திசெய்யத் தவறுகின்ற சாத்தியமே கடன் இடராகும். இது கொடுப்பனவினைச் செலுத்துவதில் ஏற்படும் தாமதமாகவோ அல்லது ஒட்டுமொத்தமாகவே கடனினைச் செலுத்தாமல் இருப்பதாகவோ அமையலாம். கடன் கொடுத்தல் செயற்பாடுகளாலும் முதலீட்டுச் செயற்பாடுகளாலும் ஏற்படும் கடன் இடர் வங்கியின் இடர்கணிக்கப்பட்ட சொத்துக்களில் 80% இனைக் கொண்டுள்ளது. கடன் இடரானது கொடுக்கல் வாங்கல் மட்டத்திலேயும் முதலீட்டுத் தொகுதி மட்டத்திலேயும் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. இது கடன் பெற்ற தரப்புக்கள், வியாபாரத் துறைகள் அல்லது புவியியற் பிராந்தியங்கள் ஆகியவை கடனினைச் செலுத்தத் தவறுகின்றமையால் ஏற்படும் இடர் மற்றும் செறிவு இடர் ஆகியவற்றினை உள்ளடக்குகின்றது. வங்கியானது மிகவும் பாரிய மற்றும் பல்வகைமைமிக்க வாடிக்கையாளர் தளத்தினைக் கொண்டுள்ளது. இந்த வாடிக்கையாளர்களுள் தனிநபர்கள், சிற்றினத் தொழில்முயற்சியாண்மைகள், சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சியாண்மைகள், பாரிய பெருநிறுவனங்கள், இலங்கை அரசு மற்றும் வெளிநாட்டு அரசுகள் ஆகியவை உள்ளடங்குகின்றன. வங்கியானது ஒவ்வொரு வாடிக்கையாளர் குழுமத்தினுள்ளும் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லைகளினுள் கடன் இடரினை முகாமைத்துவம் செய்யவேண்டும். புலனுணரப்பட்ட இடரின் அடிப்படையில் திரும்பலினைத் தீர்மானிப்பதன் மூலமாக கடன் வழங்கல் தீர்மானங்களுக்கு கடன் கூருணர்வினை கொண்டுவருவதற்கான முன்னெடுப்புக்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

கடன் இடர் ஆளுகை

கடன் இடர் ஆளுகையானது பொறுப்பினையும் அணுகுமுறையினையும் நிர்ணயிக்கின்றது. இவற்றின் மூலமாக பணிப்பாளர் சபையும் சிரேஷ்ட முகாமைத்துவமும் அவற்றின் வியாபாரங்களையும் சம்பந்தப்பட்ட கடன் இடர் முகாமைத்துவப் பிரச்சினைகளையும் ஆளுகை செய்கின்றன. ஒரு செயற்திறன்மிகு ஆளுகைச் சட்டகமானது கடன் உருவாக்கம் மற்றும் நிருவாகத்தினை முகாமைத்துவம் செய்கின்ற ஆளணியினரிடமிருந்து கடன் இடர் முகாமைத்துவத்தின் சுயாதீனத்தினை உறுதிப்படுத்துகின்றது.

செயற்திறன்மிக்க, பணிப்பாளர் சபை அங்கீகரித்த இடர்ஆளுகைச் சட்டகத்தின் மூலமாக வங்கியானது போதிய இடர் மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் கடன் இடரினை அறிக்கையிடுதல் ஆகியவற்றினை உறுதிப்படுத்த நாடுகின்றது.

கடன் இடர்முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான பிரதான முகாமைத்துவ மட்டக் குழுவாகக் கடன் குழு காணப்படுகின்றது. இதற்கு வங்கியின் பொது முகாமையாளர் தலைமை தாங்குகின்றார்.

குழுவின் பொறுப்புக்கள் பின்வருவனவாகும்.

- கடன் இடர் எல்லைகளை உருவாக்கி மீளாய்வு செய்து அமுல்படுத்துதல் மற்றும் கடன் இடர் எல்லைகளினுள் உண்மையான இடர்கள் தெரிந்து எடுக்கப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துதலும் இடர்ச் செறிவுகளை கண்காணித்தலும்.
- வங்கியின் இடர்க் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களில் ஒழுங்குபடுத்தல் இயைபுறலினை உறுதிப்படுத்துதல்
- குழுக்களுக்காக அதிகாரமளிக்கப்பட்ட எல்லைகள் வரை கடனினை அங்கீகரித்து சபையின் அங்கீகாரம் தேவைப்படும் போது பொருத்தமான பரிந்துரைகளைச் சபைக்கு வழங்குதல்
- கடன் எல்லைகளின் கிரமமான கண்காணிப்பு

கடன் இடர் முகாமைத்துவக் கொள்கைகள் தனிப்பட்ட கடன் பெறுனர் மற்றும் முதலீட்டுத் தொகுதி மட்டம் ஆகிய இரண்டு மட்டங்களிலும் கடனினை முகாமைத்துவம் செய்வதற்கான வழிகாட்டல்களை வழங்குகின்றன. வங்கியின் செயற்பாடுகளின் சிக்கற்தன்மை மற்றும் அதன் முதலீட்டுத் தொகுதிகள் மற்றும் வாடிக்கையாளர் தொகுதியின் பல்வகைமை ஆகியவற்றின் காரணமாக ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு இயையுறுவதையும் மதிநுட்பமான நடைமுறைகள் கையாளப்படுவதையும் உறுதிப்படுத்துவது அவசியமானதாகும்.

இடர் தரமிடல் கொள்கை, முதலீட்டுத் தொகுதி முகாமைத்துவக் கொள்கை போன்ற முகாமைத்துவம் தொடர்பான கொள்கைகள் மாறிவரும் சூழமைவில் மீளாய்வு செய்யப்பட்டன.

கடன் இடர் முகாமைத்துவத்தின் செயற்பாடுகள் வியாபார அலகுகளில் இருந்தான அதன் சுயாதீனத்தினை உறுதிப்படுத்தும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளன.

கடன் மதிப்பீட்டுத் தராதரங்கள், செயன்முறைகள் மற்றும் கோட்பாடுகள் ஆகியவை பெருநிறுவனப் பிரிவுகள் மற்றும் சில்லறைப் பிரிவுகள் ஆகியவற்றில் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்படுகின்றன.

அடையாளம் காணுதல், மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு

கடனினை உருவாக்குகின்ற செயன்முறையானது ஆரம்பப் பரிசீலிப்பு மற்றும் கடன் மதிப்பீடு ஆகியவற்றினை உள்ளடக்குகின்றது. இது உரியகாலத்தில் நிறைவேற்றப்படக்கூடிய வகையில் கடன் பெறுனரின் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் ஆற்றலில் கவனம் குவிக்கின்றது.

வங்கியானது கடன் அங்கீகாரங்களுக்காகத் தெளிவான வழிகாட்டல்களை உள்ளடக்கியுள்ளது. இதன் பிரகாரம் புதிய கடன், விஸ்தரிப்பு மற்றும் ஏற்கனவே உள்ள கடன் வசதிகளுக்கான ஏதாவது முக்கியமான மாற்றங்கள் ஆகியவை பொருத்தமான, அதிகாரம் பிரித்து வழங்கப்பட்ட அதிகார மட்டத்தின் அங்கீகாரத்திற்கு உட்படுவது தேவைப்படுத்தப்படுகின்றது.

ஒரு குறிப்பிடப்பட்ட ஆகக்குறைவான எல்லைகளுக்கு அப்பால் வழங்கப்படுகின்ற கடன்களை மீளாய்வு செய்வதற்கு அமுலில் உள்ள செயல்விதிகள் CRO வினால் நடத்தப்படுகின்ற சுயாதீனமான பரிசீலனையினை தேவைப்படுத்துகின்றன.

செயற்திறன்மிகு கடன் தரமிடலானது இடரினை மிகத் துல்லியமாக அளப்பதுடன் அதனைத் தீர்மானம் வகுத்தல் செயன்முறையிலும் பயன்படுத்த முடியும். தரமிடல் மாதிரிகள் ஒரு முதலீட்டுத் தொகுதியிலே எவ்வாறு கடன் இடர் முகாமைத்துவம் செய்யப்பட்டு, அளக்கப்பட்டு, கண்காணிக்கப்படுகின்றது என்பதற்கான பிரதானமான உள்ளீடாகும்.

வாடிக்கையாளர்கள் காணப்படுகின்ற வெவ்வேறு தொழில்துறைகளை உள்ளடக்கி பெருநிறுவனத்துறை மற்றும் இடைநிலை பெறுநிறுவனத்துறை ஆகியவற்றின் ஊடே வங்கியானது பரந்த வீச்சிலான கடன் இடர் தரமிடல் மாதிரிகளை பயன்படுத்துகின்றது. சில்லறைக் கடன்களை வழங்குவதற்கு உட்படலானது சில்லறைப் புள்ளியீட்டல் அட்டைகளின் மூலமாக முகாமைத்துவம் செய்யப்படுகின்றது.

கடன் இழப்புக்களைக் குறைப்பதற்கும் அறவீடுகளை அதிகரிப்பதற்கும் பொறிமுறைகள் அமுலில் உள்ளன. பாரிய கடன் வழங்குதலினை அங்கீகரித்தன் பின்னரான மீளாய்வானது குறிப்பிட்ட கால இடைவெளிகளில் IIRMD யில் உள்ள கடன் தர மதிப்பீட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. IIMRD கடன்தொகுதியின் ஆரோக்கியத்தினைத் தொடர்ந்து இடம்பெறுகின்ற அடிப்படையில் கண்டறிந்து கடன் பெற்றவர் கடனினைச் செலுத்தத் தவறுகின்றமைக்கான சாத்தியம் தொடர்பான முன்னெச்சரிக்கைச் சமிக்ஞைகளை வழங்குகின்றது. முதலீட்டுத் தொகுதியின் செறிவுக்கு எதிரான பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் செயலாற்றுகையினை உறுதிப்படுத்துவதற்கும் கிரமமான அடிப்படையில் கடன் இடர்முகாமைத்துவ அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கடன் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன.



பிணையுறுதி முகாமைத்துவம்



பிணையுறுதி என்பது கடனினைப் பெறுபவர் அக்கடனினை மீளச்செலுத்தத் தவறும் சாத்தியத்திற்கெதிரான பாதுகாப்பாக அவர் சார்பில் வழங்கப்படுகின்ற பாதுகாப்பாகும். இது ஒரு சொத்தாகவோ அல்லது உத்தரவாதம் போன்ற மூன்றாம் தரப்பினால் வழங்கப்படும் கடப்பாடாகவோ அமையலாம். பிணையுறுதியானது இடர்களைத் தணிக்கின்ற அதேவேளை உயர்தரத்திலான கடன்வழங்கல் தராதரங்களைப் பேணுவதற்கான தேவையினை அகற்றுவதில்லை.

அடையக்கூடிய மற்றும் அளக்கக்கூடிய பிணையுறுதிச் சொத்துக்களுக்காக, கிரமமாக மதிப்பிடப்படுகின்ற சட்டரீதியாகச் செயற்திறன்மிக்கதும் அமுல்படுத்தக்கூடியதுமான ஆவணப்படுத்தலினை வங்கி அமுலில் கொண்டிருக்கவேண்டும்.

செறிவு இடர்


எந்தத் தெரிவடைப்படைகளின் கீழும் கடன் பெறுனர்கள் செறிவடைதல் எப்பொழுதுமே அதிகரித்த இடரினைக் கொண்டுள்ளது. இது அதன் தன்மையிலே தொழிற்துறை ரீதியானதாகவோ உற்பத்தி ரீதியானதாகவோ புவியியல் ரீதியானதாகவோ துறைசார்ந்ததாகவோ பிணையுறுதி சார்ந்ததாகவோ இருக்கலாம். செறிவு இடரினைக் குறைப்பதற்காக வங்கியானது கடன் இடரினை முதலீட்டுத் தொகுதி அடிப்படையில் அளப்பதுடன் எல்லைகள் வெவ்வேறு மட்டங்களில் இடப்படுகின்றன – தனிப்பட்ட, கடன்படுனர் குழு மற்றும் கைத்தொழில் துறை. வங்கி அதன் கடன் முதலீட்டுத் தொகுதியில் இருந்து போதிய வருமானத்தினை உருவாக்குகின்றதென்பதை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை செறிவினைக் குறைப்பதற்கும் அதீத ரீதியாகப் பரந்துள்ள வங்கியின் வாடிக்கையாளர்கள் உதவுகின்றனர். செறிவு இடரின் அளவினை அளப்பதற்கு வங்கி பகுப்பாய்வுக் கருவிகளைப் பயன்படுத்துவதுடன் கணிசமான செறிவுகள் கடன் குழுவிற்கும் IRMC க்கும் சபைக்கும் மீளாய்விற்காக அறிக்கையிடப்படுகின்றன.

கடன் இடர்க் குறிகாட்டிகள்

இடர்க் காரணி	இடர்க் குறிகாட்டி	குறிப்புக்கள்
கடன் செலுத்தத் தவறுகின்ற இடர் கடன்பெறுனர் அல்லது எதிர்த்தரப்பு அதன் கடப்பாட்டினைப் பூர்த்தி செய்ய இயலாமல் இருக்கும் இடர்	**NPA விகிதாசாரம்**  	எதிர்நோக்கிய சவால்களைத் தாண்டி வங்கியினால் முன்னைய வருடத்தினைப் போன்று NPA விகிதாசாரத்தினைப் பேணக் கூடியதாயிருந்தது.
செறிவு இடர் கடன் முதலீட்டுத் தொகுதியில் தனிநபர்களுக்கு, தொழிற்றுறைகளுக்கு அல்லது புவியியல் பிராந்தியங்களிற்கு கடன்களினை சமமற்ற விதத்தில் விநியோகிக்கின்ற காரணத்தினால் செறிவு இடர் ஏற்படுகின்றது.	**தொழிற்துறை ரீதியாக செறிவு - 2017**  A – விவசாயம், மீன்பிடி 4.7% B – வங்கி, நிதி, காப்புறுதி, வியாபாரச் சேவைகள் 3.5% C – ஹோட்டல், பிரயாணம் மற்றும் சேவைகள் 2.8% D – வீடமைத்தல், நிர்மாணம், உள்ளக அமைப்பு 13.6% E – உற்பத்தி 3.7% F – வியாபாரம் 10.9% G – இறையாண்மை, நேரடி அரசு 37.4% H – போக்குவரத்து மற்றும் தளபாடச் சேவைகள் 4.6% I – ஏனைய வர்த்தக சேவைகள் 1.6% J – நுகர்வு மற்றும் ஏனையவை 17.2%	துறை சார்ந்த கடன் வழங்கல்கள் இடர் எல்லைகளினுள் அமைந்துள்ளன.

இடர்க் காரணி	இடர்க் குறிகாட்டி	குறிப்புக்கள்


உற்பத்தி ரீதியாக செறிவு - 2017



A – வியாபார நிதியிடல்	6.0%	I – வெளிநாட்டு நாணயக் கடன்கள்	9.1%
B – ரண்சுரக்கும்	4.0%	J – தவணைக் கடன்கள்	21.0%
C – குத்தகை	4.0%	K – BOC தனிப்பட்ட கடன்கள்	16.5%
D – ஊழியர் கடன்	2.3%	L – பிணைக் கடன்	0.9%
E – திட்டக் கடன்கள்	2.8%	M– பணச் சந்தைக் கடன்	2.5%
F – மேலதிகப்பற்று	14.8%	N – ஏனைய கடன்	11.1%
G – கடன் அட்டைகள்	0.3%		
H – வீட்டுக் கடன்கள்	4.7%		

வங்கியின் கடன் முதலீட்டுத் தொகுதி உற்பத்திகளின் மத்தியில் நன்கு பல்வகைமைப்-படுத்தப்பட்டுள்ளது.

பிணையுறுதி ரீதியாக கடல் வழங்கல் - 2017



A – பணம்	4.1%	F – அசைவன	6.4%
B – பிணையங்கள்	1.3%	G – தங்கம் மீதான பிணை	4.0%
C – உத்தரவாதம்	0.2%	H – ஏனையவை	3.5%
D – ஆதனம்	13.3%	I – பிணை பாதுகாப்பற்ற	37.4%
E – அரச பிணையங்கள்/ உத்தரவாதம்	29.8%		

வழங்கப்பட்ட கடன்களில் 62% மானவை பிணையுறுதிகளினால் பாதுகாக்கப்பட்டுள்ளன.

சந்தை இடர்

சந்தை இடர் என்பது எமது விற்பனை நிலைகள் அல்லது கடப்பாடுகளின் சந்தைப் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் என வரையறுக்கப்படுகின்றது. இதற்கான காரணங்களாக வட்டிவீதங்களில் காணப்படுகின்ற ஏற்ற இறக்கங்கள், நாணயப்பரிமாற்று வீதங்களில் ஏற்படுகின்ற ஏற்ற இறக்கங்கள், பண்டங்களின் விலைகளில் அல்லது உரிமைமுதல் விலைகளில் ஏற்படுகின்ற ஏற்ற இறக்கங்கள் என்பன அமைந்துள்ளன. சந்தை இடர் முகாமைத்துவத்தின் பிரதான குறிக்கோள் ஏற்றுக்கொள்ளமுடியாத இழப்புக்களுக்கு வங்கியினை உட்படுத்தாது இடர்வெகுமதி உறவுகளை உச்சப்படுத்துவதாகும்.

சந்தை இடர் ஆளுகை

சந்தை இடர் ஆளுகையின் பிரதான விடயம் இற்றைப்படுத்தப்பட்ட சந்தை இடர் முகாமைத்துவக் கொள்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ளதுடன் இது பாசல் உடன்படிக்கைகள் மற்றும் இலங்கை மத்தியவங்கி ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுக்கு இயைபாகவும் காணப்படுகின்றது. மேலும் இது சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவம், வெளிநாட்டு நாணயமாற்று இடர், திரவத்தன்மை இடர், எல்லை முகாமைத்துவச் சட்டகம் மற்றும் இடைநிலை அலுவலக இயக்கக் கையேடுகள் ஆகியவை உள்ளடங்கலாக கிரமமாக இற்றைப்படுத்தப்படும் ஏனைய கொள்கைகளுடன் சேர்த்து வாசிக்கப்படல் வேண்டும்.

இந்தக் கொள்கைகள் பின்வருவன தொடர்பான வழிகாட்டல்களை வழங்குகின்றன.

- சந்தை இடரை முகாமைத்துவம் செய்வதற்காக ஓர் உறுதியான கட்டமைப்பினை உருவாக்கிப் பேணுதல்
- திறைசேரி இயக்கங்களை வினைத்திறன்மிகு முறையிலும் செயற்றிறன்மிகு முறையிலும் கண்காணித்தல்
- திறைசேரி இயக்கங்களுக்காகப் பொருத்தமான இடர்எல்லைகளை உருவாக்குதல்
- இயங்கு சூழலில் ஏற்படக்கூடிய மாற்றங்களின் தாக்கங்களை எதிர்வுகூறலும் அவற்றினை முகாமைத்துவம் செய்தலும்

விற்பனை சார்ந்த மற்றும் விற்பனை சாராத தன்மையினைக் கொண்ட பல்வேறு சந்தை இடர்கள் எழலாம்.

- வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் பிணையங்கள் போன்ற விடயங்களில் ஏற்படுகின்ற விலைகளின் ஏற்ற இறக்கங்களினால் விற்பனை இடர்கள் உருவாகலாம்.
- எதிர்த்தரப்பினர் தமது கடப்பாடுகளைச் செலுத்தத் தவறுகின்ற காரணத்தினால் விற்பனை முதலினை அல்லது வட்டியினைச் செலுத்தத் தவறும் இடர்கள் உருவாகுகின்றன.
- வங்கிச்சேவைப் புத்தகங்களில் ஏற்படுகின்ற சந்தை நகர்வுகள் போன்ற விடயங்களினாலும் ஐந்தொகை சாராத விடயங்களினாலும் விற்பனை சாராத சந்தை இடர்கள் உருவாகுகின்றன.

சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழு சந்தை இடரினை முகாமைத்துவம் செய்வதில் பிரதான வகிபாகத்தினை வகிக்கின்றது. இந்தக் குழுவிற்கு பொது முகாமையாளர் தலைமை தாங்குவதுடன் இதிலே பிரதான பெருநிறுவன முகாமைத்துவ உறுப்பினர்கள் அங்கத்தவர்களாக இருக்கின்றனர். குழு முற்கொடுப்பனவுகளையும் வைப்புக்களையும் முதலீட்டுத் தொகுதிகளையும் கண்காணிப்பதன் மூலமாகவும் திருத்த நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதன் மூலமாகவும் சந்தை இடர்களை முகாமைத்துவம் செய்கின்றது. குழுவின் முக்கியமான செயற்பாடுகளாக வட்டி வீதங்களை முகாமைத்துவம்

செய்தல், திரவத்தன்மை நிலைப்பாட்டினை முகாமைத்துவம் செய்தல், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கிடையிலான பொருந்தாத தன்மைகளை சமநிலைப்படுத்துதல் ஆகியவை காணப்படுகின்றன.



சந்தை இடரினைக் கண்காணிப்பதில் இடைநிலை அலுவலகத்தின் செயற்பாடு முக்கியமான வகிபாத்திரத்தை வகிக்கின்றது. எல்லை முகாமைத்துவச் சட்டகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள எல்லைகளின் பூரணமான சட்டகத்தினால் இது வழிகாட்டப்படுவதுடன் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இடைநிலை அலுவலக இயக்கக் கையேட்டினாலும் வழிகாட்டப்படுகின்றது.


அடையாளப்படுத்தல், மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு

உள்நிலை மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவாக சந்தை இடரினை அளப்பதற்கு பல அளவீடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இடரின் பெறுமதி (VAR), அடிப்படைப் புள்ளிக்கான விலைப் பெறுமதி, கால அளவு, அழுத்தப் பரிசோதனை, இடைவெளிப் பகுப்பாய்வு மற்றும் நுண்மைத்தன்மைப் பகுப்பாய்வு ஆகியவை ஒட்டுமொத்த முதலீட்டுத் தொகுதியின் மட்டத்திலே சந்தை இடரினை முகாமைத்துவம் செய்வதற்காக அதிகம் பயன்படுத்தப்படுகின்ற சாதனங்களாகும். VAR என்பது சந்தை ஏற்ற இறக்கங்களின் சாத்தியங்களின் எண்ணிக்கை ரீதியான அளவீடாகும். இது 99% வீத நம்பிக்கை மட்டத்தினுள் கணிக்கப்படுகின்றது. தற்போது வங்கியானது VAR கணிப்பீடுகளுக்காக வரலாற்று ரீதியான முறையைப் பயன்படுத்துகின்றது. இதன்போது ஒவ்வொரு முதலீட்டு தொகுதிக்காகவும் வெவ்வேறாகக் கணிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. பிணையம் ஒன்றின் விலையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களை விளைவில் ஏற்படும் ஓர் அடிப்படைப் புள்ளி மாற்றத்திற்காக PVBP அளக்கின்றது. சந்தை இடரிற்கான அழுத்தப் பரிசோதனை நாளாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

சந்தை இடர்ப் பிரிவு சபை அங்கீகரித்த எல்லைகளை நாளாந்த அடிப்படையில் கண்காணித்து, ALCO, IRMC மற்றும் சபை ஆகியவற்றிற்கு எல்லை விதிவிலக்குகள் கிரமமாகத் தெரியப்படுத்தப்படுகின்றன.

சந்தை இடர்க் குறிகாட்டிகள்

காரணி	விபரம்	குறிப்புக்கள்
வெளிநாட்டு நாணயமாற்று இடர்	**Forex வெளிப்படை நிலை** யூஎஸ்டொலர் மில்லியன்  	வங்கியின் Forex வெளிப்படை நிலையானது வருடம் முழுவதும் இடர் எல்லைகளினுள் காணப்பட்டது.
வட்டி விகித இடர்	**கால அளவு** வருடங்கள்  	வட்டி விகித மாற்றங் களுக்கு விலைகளின் நுண்மைத் தன்மைகளை மதிப்பிடுவதற்காக முதலீட்டுத் தொகுதிகளின் கால அளவு கிரமமாகக் கண்காணிக்கப்பட்டது

காரணி	விபரம்	குறிப்புக்கள்
உரிமைமுதல் விலை இடர்	**உரிமைமுதல் VAR** ரூபா மில்லியன்  	வங்கியின் உரிமைமுதல் VAR நிலையானது வருடம் முழுவதும் இடர் எல்லைகளினுள் காணப்பட்டது.

திரவத்தன்மை இடர் முகாமைத்துவம்

கொடுப்பனவுக் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்யவேண்டிய போது அதனைப் பூர்த்தி செய்யமுடியாத காரணத்தினால் அல்லது அவ்வாறு பூர்த்தி செய்வதனை அதீத செலவுகளினால் மாத்திரமே பூர்த்தி செய்யக்கூடியதாக இருப்பதனால் திரவத்தன்மை இடர் ஏற்படுகின்றது. சேரவேண்டியவையும் செலுத்தவேண்டியவையும் வெவ்வேறு காலச் சட்டகங்களைக் கொண்டிருக்கும் போது திரவத்தன்மை இடர் பொதுவாக ஏற்படுகின்றது. வங்கி அதன் கொடுப்பனவுக் கடப்பாடுகளை உரிய காலத்தில் பூர்த்திசெய்கின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்காக ஒரு திரவத்தன்மை இடர் முகாமைத்துவச் சட்டகத்தினைக் கொண்டுள்ளது. மேலும் இதனை வங்கி வரையறுக்கப்பட்ட இடர் எல்லைகளினுள் மேற்கொள்கின்றது. வங்கியின் திரவத்தன்மை நிலையினை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பினை ALCO கொண்டுள்ளது. வங்கியின் IIRMD, ALCO மற்றும் IRMC ஆகியவை வழங்கியுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் சபை வங்கியின் திரவத்தன்மை தந்திரோபாயத்தினை அங்கீகரிக்கின்றது.

வங்கியின் திரவத்தன்மை முகாமைத்துவ தந்திரோபாயங்கள் வங்கியின் திரவத்தன்மை முகாமைத்துவக் கொள்கையிலும் சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் கொள்கையிலும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இந்தக் கொள்கைகள் திரவத்தன்மையினை முகாமைத்துவம் செய்வதற்கான பரந்த அளவிலான சாத்தியமான தந்திரோபாயங்களை விபரிக்கின்றன. இவற்றுள் திரவத்தன்மை வடிவிலே சொத்துக்களின் பெரும்பான்மையான விழுக்காட்டினைப் பேணுவதும் பணச்சந்தை களிலிருந்து பணத்தினைக் கடனாகப் பெறுவதற்கான ஆற்றலும் திரவத்தன்மையினை மேம்படுத்துவதற்கான ஒரு சில தந்திரோபாயங்களும் உள்ளடங்குகின்றன.


அடையாளப்படுத்தல், மதிப்பீடு, கண்காணிப்பு

திரவத்தன்மை இடரினை அடையாளம் காண்பதற்கான அடிப்படைக் கருவியாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் முதிர்ச்சி இடைவெளி காணப்படுகின்றது. இது சாதாரண சூழ்நிலைகளின் கீழும் மோசமான சூழ்நிலைகளின் கீழும் சேரவேண்டியவற்றிற்கும் செலுத்தவேண்டியவற்றிற்கும் இடையிலான கால இடைவெளியினைப் பகுப்பாய்வு செய்கின்றது.

வெவ்வேறு சந்தைப் பிரிவுகளிலும் மேலும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்வகைமைப்படுத்தப்பட்ட நிதியிடலினை உருவாக்குவதன் மூலம் குறைந்த அளவிலான திரவத்தன்மை இடரினைப் பேணுவதற்கு வங்கி முயற்சிக்கின்றது. இதேபோன்று வைப்புத் தளமானது தனிநபர்கள், சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சியாண்மைகள், பெருநிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்களுக்கிடையிலே பல்வகைமைப்படுத்தப்பட்டுள்ளது. அதீத கடன் வளர்ச்சி, எதிர்பார்க்காத முதிர்ச்சிப் பிணையங்களிலிருந்து புதிய பிணையங்களின் விநியோகத்திற்கு பணத்தினை மீள் முதலீடு செய்தல், பாரிய கடன்களினைச் செலுத்தத் தவறுகின்றமை மேலும் எதிர்பார்க்காத வகையில் வைப்புக்கள் மீளப் பெறப்படுகின்றமை போன்ற நெருக்கடி மிகு சூழ்நிலைகளுக்கு வங்கியினால் முகங்கொடுக்கக் கூடியதாக இருக்கவேண்டும். இவ்வாறான சூழ்நிலைகளைக் கையாள்வதற்கு வருநிலை நிகழ்வுத்திட்டங்கள் அமுலிலுள்ளன. இவ்வாறான நிகழ்வுகளின் தாக்கத்தின் தீவிரத்தன்மையினை அளப்பதற்கும் தணித்தல் தந்திரோபாயங்களை உருவாக்குவதற்கும் அழுத்தப் பரிசோதனை பயன்படுத்தப்படுகின்றது.


திரவத்தன்மை இடர்க்குறிகாட்டிகள்

இடர்க்காரணி	இடர்க்குறிகாட்டி	குறிப்புக்கள்
திரவத்தன்மை இடர்	**நிதியிடலுக்காகக் கிடைக்கக்கூடிய கடன்களும் ஏனைய நிதிப்பொறுப்புக்களும் அற்ற பிணையங்கள்**	நிதியிடலுக்காகக் கிடைக்கக் கூடிய கடன்களோ அல்லது நிதிப்பொறுப்புக்களோ அற்ற பிணையங்கள் 2017 இல் முன்னேற்றமடைந்தன. இது சௌகரியமான திரவத்தன்மை நிலையினைச் சுட்டிக்காட்டுகின்றது.




சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சிப் பகுப்பாய்வு


திரட்டிய நேர்க்கணிய இடைவெளியானது வங்கியினால் மூன்று மாதங்கள் வரையில் பேணப்படுகின்றது.



திரவச்சொத்துக்கள் விகிதாசாரம்

வங்கியின் திரவச்சொத்துக்கள் விகிதாசாரமானது வருடம் முழுவதிலும் இடர் எல்லைகளினுள் காணப்பட்டது.



இடர்க்காரணி	இடர்க்குறிகாட்டி	குறிப்புக்கள்
		வங்கியின் திரவத்தன்மை உள்ளடக்க விகிதாசாரமானது வருடம் முழுவதிலும் இடர் எல்லைகளினுள் காணப்பட்டது.

செயற்பாட்டு இடர்

போதியதல்லாத அல்லது செயலிழந்த உள்நிலைச் செயன்முறைகள், மக்கள் மற்றும் முறைமைகளின் காரணமாகவும் அல்லது புறநிலை நிகழ்வுகளின் காரணமாகவும் ஏற்படும் இழப்புக்களின் இடரினால் இயக்க ரீதியான இடர்ஏற்படுகின்றது. இயக்க ரீதியான இடர்சட்ட ரீதியான இடரினை உள்ளடக்குகின்றது. வங்கியின் வியாபார மற்றும் உதவிப் பிரிவுகளிலிருந்து எழுகின்ற இயக்க ரீதியான இடர்களானது நன்கு வரையறுக்கப்பட்ட உள்நிலைக் கட்டுப்பாட்டு முறைமையின் மூலமாக நிர்ணயிக்கப்பட்ட இடர் எல்லைகளினுள் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. வங்கி அதன் இயக்க ரீதியான இடர் முகாமைத்துவத்தினை மூன்று வரிசைப் பாதுகாப்பு மாதிரியுடன் ஒன்று சேர்த்துள்ளது. இரண்டாவது வரிசையில் இயக்க ரீதியான இடர் முகாமைத்துவச் சட்டகத்தினையும் ஒட்டுமொத்த இடர்எல்லையினையும் விதிப்பதற்கான பொறுப்பினை IIRMD கொண்டுள்ளதுடன் பேரண்ட மட்டத்திலான கட்டுப்பாட்டுக் கட்டமைப்பினை உருவாக்குவதற்கான பொறுப்பினையும் கொண்டுள்ளது. முதலாவது வரிசையாளர்-களினாலேயே இடர்கள் எதிர்நோக்கப்பட்டு அடிப்படையில் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற காரணத்தினால் சகல வியாபாரப் பிரிவுகள் மற்றும் உதவிப் பிரிவுகள் இவ்வாறான கட்டுப்பாட்டுக் கட்டமைப்புக்களுக்கு இயைபுறவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன. மூன்றாம் வரிசைப் பாதுகாப்பாகக் காணப்படும் கணக்காய்வு மற்றும் இயைபுறல் ஆகியவை கட்டமைப்புக்கள் மற்றும் அமுலிலுள்ள கட்டுப்பாடுகளின் செயற்திறனினை அங்கீகரிப்பதன் மூலம் அவற்றின் வகிபாத்திரத்தினை வகிக்கின்றன.

செயற்பாட்டு இடர் ஆளுகை

இயக்க ரீதியான இடர் ஆளுகைக்கான ஒட்டுமொத்தப் பொறுப்பும் பணிப்பாளர்கள் சபையினையும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினையும் சார்ந்ததாகும். சபை அங்கீகரித்த இயக்க ரீதியான இடர் முகாமைத்துவக் கொள்கை, மோசடி இடர் முகாமைத்துவக் கொள்கை மற்றும் தகவல் தொழில்நுட்ப இடர் முகாமைத்துவக் கொள்கை ஆகியவை வங்கியின் ஒட்டுமொத்த இயக்க ரீதியான இடர் முகாமைத்துவ ஆளுகையினையும் வரையறை செய்கின்றன. இயக்க ரீதியான இடர் முகாமைத்துவ நிறைவேற்றுக் குழுவுக்கும் மோசடி இடர்முகாமைத்துவக் குழுவுக்கும் IIRMD யினால் உதவி வழங்கப்படுகின்றன. IIRMD வங்கியின் பிரதம இடர்அதிகாரி தலைமை தாங்குவதுடன் இப்பிரிவே இயக்க ரீதியான இடரினை அடையாளம் காண்பதற்கும் இயக்க ரீதியான இடர் முகாமைத்துவக் கொள்கைகளை உருவாக்குவதற்கும் பெறுபேறுகளை மதிப்பீடு செய்வதற்கும் பொருத்தமானபோது மாற்றங்களைப் பரிந்துரைப்பதற்கும் பொறுப்பாக இருக்கின்றது. IIRMD வியாபாரத் தொடர்சித் திட்டத்தின் அமுல்படுத்தலினை மேற்பார்வை செய்கின்றது. இதன்போது பிரதம இடர் அதிகாரி வியாபாரத் தொடர்ச்சி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக இருக்கின்றார். வங்கியின் ஒட்டுமொத்தத் தகவல் பாதுகாப்புப் பொறுப்பு பெருநிறுவனத் தகவல் பாதுகாப்புக் குழுவினைச் சார்ந்ததாகும். இதிலே பிரதம இடர் அதிகாரி ஓர் உறுப்பினர் ஆவார். சகல புதிய உற்பத்தி முன்னெடுப்புக்களும் இடர்க்கண்ணோட்டத்திலே மதிப்பிடப்படுகின்றன. சகல புதிய உற்பத்தி முன்னெடுப்புக் குழுக்களிலும் IIRMD பிரதிநிதித்துவம் செய்யப்படுவதன் மூலமாக இது நிறைவேற்றப்படுகின்றது.


அடையாளப்படுத்தல், மதிப்பீடு, கண்காணித்தல்

இயக்க ரீதியான இடர்களை அடையாளம் கண்டு, மதிப்பிட்டு, கண்காணிப்பதற்கு நன்கு பரிசீலிக்கப்பட்ட உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுள் பிரதான இடர்க் குறிகாட்டிகள் (KRIs), இடர் மற்றும் கட்டுப்பாட்டு சுயமதிப்பீடுகள் (RCSA), உள்நிலை இழப்புப் தரவுச் சேகரிப்புக்கள் மற்றும் பகுப்பாய்வு, மூல காரணப் பகுப்பாய்வு மற்றும் கற்றுக்கொண்ட பாடங்கள் பயிற்சி ஆகியவை உள்ளடங்குகின்றன. என்னென்ன இடர்கள் வங்கிக்கு ஏற்படலாம் மேலும் என்னென்ன தணிப்பு நடவடிக்கைகள் தேவைப்படலாம் என்பதை உறுதிப்படுத்துவதற்காக பிரதான புறநிலை நிகழ்வுகளின் சாத்தியமான தாக்கங்கள் கவனமாகப் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. KRI க்கள் தன்முனைப்பான கருவிகளாகக் காணப்படுவதுடன் இவை பிரதான தீர்மானம் வகுப்போர் திருத்த நடவடிக்கைகளை எடுப்பதற்காக முற்கூட்டியே இடர்களை அடையாளம் காண்கின்றன. சாத்தியமான இடர்களையும் அதனுடன் இணைந்த கட்டுப்பாடுகளையும் அடையாளங்கண்டு, பதிவுசெய்து, மதிப்பிடுவதற்கான செயன்முறையே RCSA ஆகும். IIRMD யினால் இடர்களைமதிப்பீடு செய்வதற்காக மிக முக்கியமான வியாபாரங்களிலும் உதவிப் பிரிவுகளிலும் கிரமமாக RCSA நடத்தப்படுகின்றது.

இழந்த தரவுச்சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு சகல வியாபார மற்றும் உதவிப் பிரிவுகளின் உள்ளீடுகளுடன் தொடரான அடிப்படையில் உண்மையான இழப்புக்கள் பற்றிய தரவுகளைச் சேகரிக்கின்றது. இந்தச் செயன்முறையின் மூலம் உருவாக்கப்பட்ட அறிக்கைகள் பின்பு மீளாய்வு செய்யப்பட்டு மதிப்பிடப்படுகின்றன. அடையாளங்காணப்பட்ட ஏதாவது இடைவெளிகள் IIRMD யினால் ORMEC ற்கு அறிக்கையிடப்படுகின்றன. தேவைப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக IRMC யும் சபையும் பின்னர் தீர்மானங்களை வகுக்கின்றன.

ஏற்பட இருந்த இடர்கள் மற்றும் புறநிலைச் சூழல்களில் இருந்து எழுகின்ற அச்சுறுத்தல்கள் தொடர்பாக உள்நிலைக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதற்காக பொருத்தமான வியாபார அலகுகளையும் உதவிப் பிரிவுகளையும் கிளை வலையமைப்புகளையும் எச்சரிப்பதற்கு IIRMD முனைப்பான கற்றுக்கொண்ட பாடங்கள் செயன்முறை மூலமாக முன்னெடுப்புக்களை எடுத்துள்ளது.

பாசல் இடர் நிகழ்வுகளின் படி நட்டப் பரம்பல்



கட்டுப்பாடும் தணிப்பும்

கடமைகளின் வேறு பிரிப்பு, அறிக்கையிடல் வழிகளின் ஒழுங்குபடுத்தல், தெளிவாக வரையறுக்கப்பட்ட வியாபாரத் தொடர்ச்சி முகாமைத்துவம் ஆகியவற்றினைக் குறித்துரைக்கின்ற உறுதியான உள்நிலைக் கட்டுப்பாட்டுச் சட்டகமானது இயக்க ரீதியான இடர் முகாமைத்துவச் சட்டகத்தின் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. உயர் தீவிரத்தன்மையினைக் கொண்ட, கட்டுப்படுத்தமுடியாத இடர்களைத் தணிப்பதற்கு இடர்களின் மாற்றத்திற்கான தந்திரோபா காப்புறுதிச் சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறான அடையாளங்காணப்பட்ட இடர்களைப் போதியவகையில் உள்ளடக்குவதற்காக வங்கி அதன் காப்புறுதியினை வருடாந்தம் மீளாய்வு செய்து இற்றைப்படுத்துகின்றது.

வங்கியின் சகல இன்றியமையாத வியாபாரப் பிரிவுகளும் உதவிப் பிரிவுகளும் அவற்றின் சொந்த வியாபாரத் தொடர்ச்சித் திட்டங்களை உருவாக்கியிருக்கவேண்டுமென வியாபாரத் தொடர்ச்சி முகாமைத்துவக் கொள்கை குறித்துரைக்கின்றது. வருடத்தின்போது இரண்டு பரிசீலனைச் செயன்முறைகள் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யப்பட்டு பெறுபேறுகள் பொருத்தமான அதிகார அமைப்புகளுக்கு அறிக்கையிடப்பட்டுள்ளன. எவ்விதமான சாத்தியமான அனர்த்தங்களிலுமிருந்தும் வங்கியினை மீண்டெழச்செய்வதற்காகப் பூரணமாகத் தயார்படுத்தப்பட்ட அனர்த்த மீளல் மையம் வங்கியின் இயக்கங்களின் தொடர்ச்சியினை வசதிப்படுத்துவதற்காக கொழும்பு நகர எல்லைக்கு வெளியிலே நிறுவப்பட்டுள்ளது.

அதிகரித்த வாடிக்கையாளர்களின் கோரிக்கை காரணமாகவும் சிக்கலான வியாபார மாதிரிகளின் காரணமாகவும் இன்றைய வங்கிச் சேவைத் தோற்றப்பாடானது கணிசமான சட்டரீதியான இடர்களுக்கு முகங்கொடுக்கின்றது. இந்த இடர் வகையினைக் கையாள்வதற்காக வங்கியின் சட்டப் பிரிவுடன் கலந்தாலோசித்து சட்டரீதியான இடரினை IIRMD மதிப்பிடுகின்றது. இது வங்கியின் வருடாந்த ICAAP யுடன் ஒருங்கிணைக்கப்படுகின்றது.

தந்திரோபாய இடர்

வங்கியின் தந்திரோபாய உருவாக்கம் மற்றும் தீர்மானம் வகுத்தல் செயன்முறை ஆகியவற்றில் ஏற்படுகின்ற தவறுகள் காரணமாக தந்திரோபாய இடர் உருவாகலாம். துரிதமாக மாறிவரும் சூழலிலே உற்பத்திகள் தொடர்பாகவும் சேவைகள் தொடர்பாகவும் வள ஒதுக்கீடு மற்றும் தொடர்பாடல் வழிகள் தொடர்பாகவும் ஏனைய விடயங்களின் மத்தியில் விரைவான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவேண்டிய தேவை காணப்படுகின்றது. இவ்வாறான தேவைகளுக்கு விரைவாக பதிற்செயற்பாடாற்ற முடியாமல் இருக்கும்போது இது இலாபமீட்டும் தன்மை மற்றும் திரவத்தன்மை ஆகியவற்றிலே அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய சாத்தியத்தினைக் கொண்டுள்ளது. வங்கியின் தந்திரோபாயநெறிப்படுத்தல்கள் அதன் பெருநிறுவனத் திட்டத்திலே குறித்துரைக்கப்பட்டுள்ளதுடன் திட்டத்தின் உண்மையான செயலாற்றுகையுடன் ஒத்திசைவதைப் பரிசீலிப்பதற்காகச் செயன்முறை ஒன்றும் அமுலில் உள்ளது. தந்திரோபாய இடரினை மதிப்பிடுவதற்காக வங்கி அதன் ICAAP யில் புள்ளிவழங்கும் அட்டையினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையினைப் பயன்படுத்துகின்றது.

நன்மதிப்பு இடர்

இலங்கை வங்கியின் 78 வருட வரலாற்றில் வங்கியின் நன்மதிப்பு தொடர்ந்தும் சேதமடையாமல் காணப்படுவதுடன் சகல பங்கீடுபாட்டாளர்களின் மத்தியிலும் இது உயர் மரியாதையினையும் நம்பிக்கையினையும் ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைந்துள்ளது. வங்கியின் முன்னோடியான நிலைப்பாட்டின் காரணமாகவும் நிதி நீடுறுதித்தன்மையின் காரணமாகவும் தொடர்ச்சியான இயைபுறல் காரணமாகவும் சகல பங்கீடுபாட்டாளர்களின் மனதிலும் உயர்ந்த ஸ்தானத்தினை வங்கி பெற்றுள்ளது. ஒவ்வொரு வருடமும் வங்கி பெறுகின்ற முன்னெப்பொழுதும் இல்லாத விருதுகள் வங்கி பல வருடங்களாகக் கட்டியெழுப்பி வரும் தொடர்ச்சியான மற்றும் உறுதியான நன்மதிப்பிற்கான உத்தரவாதத்திற்கான சான்றாகத் திகழ்கின்றன. எவ்வாறாயினும் உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் ஏற்பட்டு வரும் சவால்களும் தளம்பல் மிகு சூழ்நிலைகளும் நன்மதிப்பு என்பது எந்தச் சந்தர்ப்பத்திலும் இடருக்குஉட்படலாம் என்பதையே குறித்து நிற்கின்றன.

எனவே, எமது நன்மதிப்பினைச் சேதப்படுத்துகின்ற இடர்க்காரணிகளை அடையாளங்கண்டு இவ்வாறான காரணிகள் தொடர்பாக விழிப்புடன் இருப்பது முக்கியமானது என்பதையும் அங்கீகரிக்கப்பட்ட இடர் மட்டத்தினுள் வங்கியின் நிதி மற்றும் தந்திரோபாய குறிக்கோள்களை அடைந்துகொள்வதை உறுதிப்படுத்துவதற்கு எமது இடர் முகாமைத்துவ ஆற்றல்களினைப் பேணி அதனைத் தொடர்ச்சியாக அதிகரிப்பது இன்றியமையாததென்பதையும் வங்கி அடையாளம் கண்டுள்ளது. நன்மதிப்பு இடரினை முகாமைத்துவம் செய்வதென்பது நிறுவனம் முழுவதிலுமான ஒரு முயற்சியாகக் காணப்படுகின்றது. எனவே இலங்கை வங்கியானது சிறந்த பெருநிறுவன ஆளுகைக் கலாசாரத்தினை மேம்படுத்துவதற்காகக் கடப்பாடு பூண்டிருப்பதுடன் வங்கி முழுவதினூடும் இடர்முகாமைத்துவத்தில் சிறந்த நடைமுறைகளைப் பேணுவதற்கான கடப்பாட்டினையும் கொண்டுள்ளது.

இயைபுறல் இடர்

இயைபுறல் இடர் என்பது சட்டங்கள், ஒழுங்குவிதிகள், வழிகாட்டல்கள் அல்லது ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைகளின் நடத்தை விதிகள் ஆகியவற்றிற்கு இயைபுறாமையின் காரணமாக ஏற்படுகின்ற பின்விளைவுளாகும். இது வங்கிச்சேவைத் தொழிற்துறையின் சுயமாக ஒழுங்கமைக்கப்பட்ட நடைமுறைத் தராதரங்களுக்கும் விரிவடையலாம்.

இயைபுறல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் சந்தை நடத்தை, தனிநலன் சார்ந்த முரண்பாடுகள், வாடிக்கையாளர்களை ஒப்புரவுமிகு முறையில் நடத்துதல் மற்றும் வாடிக்கையாளர் உறவுகள் ஆகிய விடயங்களை உள்ளடக்குகின்றன. இவை பணத்தினைத் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதிகளுக்கு நிதியிடல் போன்ற தவறான நடத்தைகளுக்-கெதிரான பாதுகாப்பினையும் உள்ளடக்குகின்றன.

இயையுறல் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்காக வங்கியானது ஆளுகைக் கட்டமைப்பு, முறைமைகள் மற்றும் செயல்விதிகளை அமுலில் கொண்டுள்ளது. இந்த இயையுறல் சட்டகமானது இடர்களை அடையாளங்கண்டு, மதிப்பிட்டு அவற்றினைத் தணிக்கின்றது. மேலும் கட்டுப்பாடுகளை அடையாளங்கண்டு, அவற்றினை அமுல்படுத்தி, இயையுறல்களில் இருந்து விலகிச் செல்வதற்கான அறிகுறிகள் தென்படின் அவற்றினைத் தடுப்பதற்கு திருத்த நடவடிக்கைகளை உரியகாலத்தில் மேற்கொள்ளுகின்றது. இயையுறலுக்காகவும் பணம் தூய்தாக்கலுக்கு எதிராகவும் பயங்கரவாதிகளுக்கு நிதியிடலுக்கு எதிராகவும் பூரணமான கொள்கைகள் அமுலில் உள்ளன.

தந்திரோபாயதிட்டங்களை உருவாக்குவதில் இயையுறல் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. இயையுறல் தேவைப் பாடுகளைப் பற்றிப்பிடிப்பதில் நாங்கள் குறைபாட்டினைக் கொண்டிருப்பதாக அறியப்படாத காரணத்தினால் அது எமது நன்மதிப்பினை அதிகரித்து பங்கீடுபாட்டாளர்களின் நம்பிக்கையினையும் கட்டியெழுப்புகின்றது.

வங்கியில் உள்ள இயையுறல் செயற்பாடுகள் அவற்றின் செயற்பாடுகளைச் செயற்திறன்மிகு முறையில் பூர்த்தி செய்வதற்காக அவற்றிற்குப் போதிய அதிகாரமும் சுயாதீனமும் வளங்களும் வழங்கப்பட்டுள்ளன. பேசல் III போன்ற உலகளாவிய ஒழுங்குவிதிகளை மாற்றுவது இயையுறல் செயற்பாடுகளின் மீதான கேள்விகளை அதிகரித்துள்ளது. ஆனால் மேலதிக பொறுப்புக்களைக் கையாள்வதற்கான ஆற்றலினை அது காட்டியுள்ளது.

வங்கியுடன் தொடர்புடைய சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் பற்றியும் ஏதாவது மாற்றங்களின் தாக்கம் பற்றியும் அவ்வாறான மாற்றங்கள் எவ்வாறு உள்நிலை முறைமைகள் மற்றும் செயல்விதிகள் மூலம் அமுல்படுத்தப்பட வேண்டுமென்பது பற்றியும் இயையுறலினை உறுதிப்படுத்துவதற்குத் தேவைப்படும் கண்காணிப்புப் பற்றியும் சபைக்கும் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கும் ஆலோசனை வழங்குவது இயையுறல் செயற்பாட்டின் வகிபாத்திரங்களில் ஒன்றாகும். இயையுறல் தேவைப்பாடுகள் பற்றிப் பணியாளர்களுக்கு அறிவூட்டி விடயம் தொடர்பாக எழுகின்ற கேள்விகளை கையாள்வதையும் இயையுறல் பிரிவு மேற்கொள்கின்றது.

முன்மொழியப்பட்டுள்ள எந்தவிதமான புதிய உற்பத்திகளையும் சேவைகளையும் புதிய வியாபார நடைமுறைகளையும் புதிய வியாபாரங்களையும் அல்லது வாடிக்கையாளர் உறவுகளையும் இயையுறல் எனும் பார்வைக்கோணத்தில் இருந்து மதிப்பிடுவதை இயையுறல் செயற்பாட்டின் செயற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

தன்னியக்கமாக்கப்பட்ட நிதிக் குற்றச்செயல்களுக்கெதிரான கண்டுபிடிப்பு முறைமை – AMLOCK உங்களது வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் (KYC) என்பதை வசதிப்படுத்தி சந்தேகத்துக்குரிய கொடுக்கல் வாங்கல்களை அடையாளங்காண்பதற்கு உதவுகின்றது. மேலும் SWIFT னால் வழங்கப்படும் உட்பதிந்த முறைமையானது வெளிச்செல்லும் பணவைப்புக்களை நிகழ்நேரத்தில் பரிசீலிப்பதற்காகப் பொருத்தப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவின் இடர்அடிப்படையிலான RBA அணுகுமுறையுடன் வங்கியின் AML/CTF செயற்பாடுகளை ஒத்திசைவிப்பதற்கான தேவையும் உணரப்பட்டுள்ளது. இதனை நிறைவேற்றுவதற்கு தேவைப்பட்ட புதிய பூரணமான நிகழ்நேர ALF/ CTF முறைமையானது மீளாய்வின் கீழுள்ள வருடத்தின் போது கொள்வனவு செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

உலகளாவிய இடைநிலை அடையாளப்படுத்தல் இலக்கத்தின் (GIIN) கீழ் வெளிநாட்டுக் கணக்கு வரி இயையுறல் சட்டத்தின் (FATCA) கீழ் வங்கியானது பங்குபற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனமாகவும் (PFFI) காணப்படுகின்றது.

இயையுறல்/நிறுவனக்கட்டமைப்பு

இயையுறல் செயற்பாடானது இயையுறல் பிரிவினால் கையாளப்படுகின்றது. இது இரண்டு வெவ்வேறான பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவையாவன ஒழுங்குபடுத்தல் இயையுறல் பிரிவு மற்றும் பணம் தூய்தாக்கலுக்கு எதிரான/ பயங்கரவாதிகளுக்கு நிதியிடலுக்கு எதிரான பிரிவு ஆகும். இந்தப் பிரிவுக்கு சிரேஷ்ட முகாமைத்துவ நிறைவேற்று அதிகாரி ஒருவர் தலைமை தாங்குவதுடன் இவரே இயையுறலின் தலைவராகவும் நியமிக்கப்படுகின்றார். இயையுறலின் தலைவர் நேரடியாக இயையுறல் தேவைப்பாடுகளில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பாகவும் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் தொடர்பாகவும் சாத்தியமான மீறல்கள் தொடர்பாகவும் அல்லது அவற்றினது எச்சரிக்கைச் சமிக்ஞைகள் தொடர்பாகவும் முறைமைகளில் உள்ள குறைபாடுகள் தொடர்பாகவும் செயல்விதிகளில் உள்ள குறைபாடுகள் தொடர்பாகவும் மேலும் தேவையான திருத்தச் செயற்பாடுகள் தொடர்பாகவும் நேரடியாக சபை IRMC க்கு அறிக்கையிடுகின்றார்.


பாசல் III

மூலதனப் போதுநிலைக்கான பாசல் III தேவைப்பாடுகள் 2017 ஜூலை 1ம் திகதி அமுலுக்கு வந்தன. மூலதனத் தேவைப்பாடுகளுக்கான புதிய பணிப்புரைகள் மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்டன. மேலும் 2016ஆம் ஆண்டிலிருந்து புதிய தேவைப்பாடுகளுக்காக வங்கி தன்முனைப்புடன் தயார்படுத்தி வருகின்றது. புதிய தேவைப்பாடுகளுக்கு இயையுறும் வகையில் வங்கி ICAAP யினை மறுசீரமைத்துள்ளது. ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் மூன்று வருட காலகட்டத்தில் பிரிக்கப்பட்டு மூலதனத் தேவைப்பாடுகளுக்கு உதவுவதற்காகவும் அந்த மூலதனத் தேவைப்பாடு பாதுகாப்பு அரண்களை மேம்படுத்துகின்ற அதேவேளை சகல இடர்களையும் போதியளவு உள்ளடக்குகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும் மூலதன அதிகரிப்புத் திட்டமொன்றினை வங்கி உருவாக்கியுள்ளது. மூலதனப் போதுநிலையினைக் கண்காணிக்கும் செயன்முறையினை வலுப்படுத்துவதற்கு IIRMDயினால் தரம்சார்ந்த கற்கை ஆய்வுகளும் அழுத்தப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

பாரிய மாற்றத்திற்குத் அமைவான அசலான உள்நிலை இடர் முகாமைத்துவ முறைமையின் நெகிழ்வுத்தன்மை மற்றும் மீண்டெழும் தன்மையினையும் மாற்றம் எடுத்து விளக்கியுள்ளது.







நாம் எவ்வாறு பெறுமதியினை உருவாக்குகின்றோம்

94 — **தீர்மானகரமான இலக்கங்கள்**
நிதி மூலதனம்

100 — **பௌதீகக் கட்டமைப்பு மற்றும் அதற்கு அப்பால்**
உற்பத்தியாக்கப்பட்ட மூலதனம்

104 — **கட்புலனாகாத மிக முக்கியமான விடயங்கள்**
புலமை மூலதனம்

108 — **பரஸ்பர வெகுமதியளித்தல் தொடர்புமுறைகளை பேணிப் பாதுகாத்தல்**
சமூக மற்றும் உறவு மூலதனம்

126 — **எமது பாரிய சொத்துக்களை வழிநடத்துதல்**
மனித மூலதனம்

134 — **புவியை பாதுகாப்பதற்கு உதவுதல்**
இயற்கை மூலதனம்



தீர்மானகரமான இலக்கங்கள்



வரிக்கு முந்திய இலாபமான
30.3 பில்லியன்
ரூபாவே தொழிற்துறையில் அதிகூடியதாகும்

செலவுக்கும் வருமானத்திற்கும் இடையிலான விகிதாசாரம்
38%

செயற்படாச் சொத்துக்கள்
2.8%

வைப்புக்கள்
1.5 ரில்லியன் ரூபா
23% ↑

கடன்களும் முற்பணங்களும்
1.2 ரில்லியன் ரூபா
16% ↑

சொத்துக்கள்
1.9 ரில்லியன் ரூபா
17% ↑

சராசரி உரிமை மீதான திரும்பல்
20.9%

சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல்
1.7%

மொத்த மூலதனப் போதுமை விகிதம்
14.6%

பிரதான பங்குதாரரான இலங்கை அரசாங்கத்திற்கான பங்குலாபம்
12.3 பில்லியன் ரூபா

பங்குலாப செலுத்துகை வீதம்
58%

அரசாங்கத்திற்கான பங்களிப்புக்கள்
28.6 பில்லியன் ரூபா

நிதி மூலதனம்


பலவருடமாக வெற்றிகரமான சாதனைகளைப் படைத்த இலங்கை வங்கி தற்பொழுது தொழிற்துறையிலே மீண்டும் அதிகூடிய வரிக்கு முந்திய இலாபத்தினை அறிக்கையிட்டு 2017 ஆம் ஆண்டினை உயர் அடைவுடன் பூர்த்தி செய்துள்ளது. வரிக்கு முந்திய இலாபமானது 30.3 பில்லியன் ரூபாவாக இருந்த அதேவேளை வரிக்குப் பிந்திய இலாபமானது 21.3 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இலாபம், சொத்துக்கள், வைப்புக்கள் மற்றும் கடன்களும் முற்பணங்களும் ஆகியவற்றில் தொடர்ந்தும் முதலாம் இடத்தைப் பேணி தொழிற்துறையிலே ஒப்புவமையற்ற நிறுவனமாக வங்கி திகழ்ந்து வருகின்றது.

நிதி மூலதனத்தின் மீதான திரும்பல்

மொத்த வருமானம்

23% இனால் வளர்ச்சியினை அடைந்த மொத்த வருமானம் வருடத்திலிருந்து வருடத்திற்கான தொகையாக 189.2 பில்லியனாகக் காணப்பட்டது. மொத்த வருமானத்தில் 90% வட்டி வருமானமாக-வும் வட்டி வருமானத்திலே 73% ஆனது கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவுகளி-லிருந்து பெறப்பட்டுள்ளது. வர்த்தகம் மற்றும் நிதி முதலீடுகளிலிருந்தான கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம் மற்றும் தேறிய இலாபங்கள் ஆகியவை வங்கியின் ஒட்டுமொத்த வருமானத்திற்கு முறையே 5% மற்றும் 2% பங்களிப்பினை வழங்கியுள்ளன. ஏனைய தொழிற்பாட்டு வருமானங்கள் மொத்த வருமானத்தில் 3% வருமானத்தைப் பிரதிபலிக்கின்றன.


மொத்த வருமானத்தின் ஆக்கக்கூறு



தேறிய வட்டி வருமானம்

வங்கியின் பிரதான வருமான மூலமான வட்டி வருமானம் 27% இனால் அதிகரித்து 2017 ஆம் ஆண்டிலே 171.3 பில்லியனாகக் காணப்பட்டது. கொள்கை வீதங்களின் அதிகரிப்பின் விளைவாகவே இக்காலப்பகுதியில் உயர் வட்டி வீதங்கள் நிலவின. அதாவது நிலையியல் கடன் வழங்கல் வசதி வீதம் (SLFR) மற்றும் நிலையியல் வைப்பு வசதி வீதம் (SDFR) ஆகியவை முறையே 8.75% ஆகவும் 7.25% ஆகவும் அதிகரிக்கப்பட்டன. சந்தை வட்டி வீதங்களில் காணப்பட்ட அதிகரிக்கும் போக்கு வட்டி வருமானங்களிலும் வட்டிச் செலவுகளிலும் அதிகரிப்பினை ஏற்படுத்தியிருந்த போதிலும் வங்கியானது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது அதன் தேறிய வட்டி வருமானத்தில் 8% வளர்ச்சியினை அடைந்தது. கடன்களிலிருந்தும் முற்கொடுப்பனவுகளிலிருந்தும் பெற்றுக்கொண்ட வட்டி வருமானம் வருடத்தின் போது 33%னால் அதிகரித்து கடன் முதலீட்டுத் தொகுதியில் 16% வளர்ச்சி ஏற்பட்டது. மொத்த வட்டி வருமானத்தின் 27% மாகக் காணப்பட்ட முதலீடுகளில் இருந்தான வட்டி வருமானம் 14% வளர்ச்சியினைக் காட்டியது. இதற்கான காரணம் அரசாங்கப் பிணையங்களிலிருந்து கிடைத்த வட்டி வருமானமாகும்.


வட்டி வருமான ஆக்கக்கூறு



கால வைப்புக்கள் மற்றும் சேமிப்பு வைப்புகள் மீதான வட்டி விகிதங்களுக்கு இடையில் நிலவிய உயர் இடைவெளியின் காரணமாக வாடிக்கையாளர்கள் குறைந்த செலவுடைய சேமிப்பு வைப்புக்களை விட கால வைப்புக்களி-னாலேயே கவரப்பட்டனர். எனவே CASA (மொத்த வைப்புக்களில் நடைமுறை மற்றும் சேமிப்பு வைப்புக்கள்) வைப்புக்களிலிருந்து தவணை வைப்புக்களை நோக்கிய ஒரு நகர்வு காணப்பட்டது. இதனால் 2016ம் ஆண்டிலே 43% ஆகவும் 2015ம் ஆண்டிலே 46% ஆகவும் காணப்பட்ட CASA விகிதாசாரம் 37% ஆக வீழ்ச்சியடைந்தது. இது வங்கியின் வட்டிச் செலவினை 113.0 பில்லியனாக அதிகரித்து வருடத்திலிருந்து வருடத்திற்கான 40% வளர்ச்சியினை உருவாக்கியது. வங்கியானது வருடத்தின் போது 500 மில்லியன் டொலர்கள் பெறுமதியுடைய சர்வதேச முறிக்கான மீள்கொடுப்பனவினைச் செலுத்திய காரணத்தினால் வங்கியின் வட்டிச் செலவுகளின் ஆக்கக்கூறு சற்று மாற்றமடைந்தது. பிரதானமாக இதன் விளைவாக வங்கியின் கடன் பெறும் செலவு 9% த்தினால் குறைக்கப்பட்டது.

வைப்புக்களின் மீதான வட்டிச் செலவுகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பினைத் தாண்டியும் வங்கியினால் 2016ம் ஆண்டின் முன்னைய மட்டத்திலிருந்து எல்லை ரீதியான வீழ்ச்சியுடன் அதன் தேறிய வட்டி எல்லையினை முகாமைத்துவம் செய்ய கூடியதாக இருந்த அதேவேளை வங்கியின் தொடர்ச்சியான நிதி முகாமைத்துவச் செயற்பாடுகள் மீதான கண்காணிப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களின் மூலமாக உயர் வட்டி வீத நிகழ்வின் விளைவுகளையும் குறைக்கக் கூடியதாகவிருந்தது.

தேறிய வட்டி வருமானம் (NII) மற்றும் தேறிய வட்டி எல்லை (NIM)



வட்டியல்லா வருமானம்

வங்கியின் வட்டி சாரா வருமானத்தில் கட்டணம் மற்றும் தரகு வருமானங்களும் விற்பனைச் செயற்பாடுகளிலிருந்து கிடைக்கின்ற இலாபங்களும் மொத்த வருமானத்தின் 10% னைக் கொண்டுள்ள ஏனைய தொழிற்பாட்டு வருமானங்களும் அடங்குகின்றன. வருடத்தின் போது தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானமானது 1% வளர்ச்சியினைக் காட்டியதுடன் இது கடன் மற்றும் பற்று அட்டைகளின் வருமானத்திலும் முன்னேற்றத்தினைக் காட்டியது. விற்பனைகளிலிருந்தான தேறிய இலாபமானது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது 36% இனால் அதிகரித்துக் காணப்பட்டது. இதற்கு வெளிநாட்டு நாணய வருமானத்தில் ஏற்பட்ட வளர்ச்சியும் கணிசமான பங்களிப்பை வழங்கியிருந்தது. நிதி முதலீடுகளிலிருந்து கிடைத்த தேறிய இலாபம் 2017 இல் அரசாங்கப் பிணையங்களின் விற்பனையிலிருந்தான வருமானம் மற்றும் வருடத்திற்கான பங்கிலாப வருமானம் ஆகியவற்றிலிருந்து கிடைத்த அதிகளவு இலாபத்தினால் 2017ம் ஆண்டிலே 231% இனால் வளர்ச்சியடைந்திருந்தது.

ஏனைய செயற்பாட்டு வருமானம் 2017ம் ஆண்டிலே 40% வீழ்ச்சியினைப் பதிவு செய்திருந்தது. எவ்வாறாயினும் இந்த வீழ்ச்சியானது கூட்டுக் கம்பனியான மிரேக்கா கெப்பிட்டல் லேண்ட் லிமிடெட் இனை விற்றுத் தீர்த்ததன் காரணத்தினால் முன்னைய வருடத்திலே ஒரே தடவையில் கிடைத்த வருமானமான 3.1 பில்லியன் ரூபாவைக் கழித்துப் பார்க்கும் போது 5% ஆகவே காணப்படுகின்றது.

பெறுமதிக் குறைப்பு அறவீடுகள்

மொத்தச் சேதக் கட்டணங்களில் ஏற்பட்ட 112% அதிகரிப்பிற்கான காரணம் கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவுகளிற்கான தனிப்பட்ட சேதங்களின் அதிகரிப்பாகும். முன்பு கூட்டாக மதிப்பிடப்பட்ட, தனிப்பட்ட ரீதியாக முக்கியமான கடன் வாடிக்கையாளர்களை வங்கி தற்பொழுது தனித்தனியாக மதிப்பிடப்படும் வகையினராக அடையாளம் கண்டுள்ளது. தனிப்பட்ட சேதத்தில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு பெருமளவு இதன் விளைவாக ஏற்பட்டதாகுமென்பதுடன் 2018லிருந்து அமுலுக்கு வரும் நிதிச் சாதனங்களுக்கான புதிய கணக்கீட்டுத் தராதரமான SLFRS 09ன் தயார்ப்படுத்தலுக்காக எடுக்கப்பட்ட சாதுர்யமான நடவடிக்கைகளினாலும் ஏற்பட்டதாகும்.


செயற்படாச் சொத்துக்களின் விகிதாசாரத்தினைத் தொழிற்துறை மட்டத்தில் பேணி, ஒழுங்குபடுத்தல் விதிகளுக்கு அமையக் கணக்கிடப்பட்ட மொத்த செயற்படாச் சொத்துக்களின் விகிதாசாரமானது 2017ம் ஆண்டின் முடிவில் 2.8% ஆகக் காணப்பட்டது.

செயற்பாட்டு செலவுகள்


செயற்பாட்டு செலவுகள் பிரதானமாக ஆளனிச் செலவுகளையும் நிர்வாகச் செலவுகளையும் கொண்டிருந்தன. இவை முன்னைய வருடத்தினை விட 9% னால் குறைவடைந்திருந்தன. வங்கியின் மிகப் பெறுமதியான மூலதனமான ஊழியர்களின் மீதான செலவு வருடத்திற்கு 17.0 பில்லியனாகக் காணப்பட்டது. ஏனைய இயக்கச் செலவுகள் 3.3 பில்லியன் தொகையுடைய கையிலுள்ள தங்கத்தின் மீதான நியாயமான பெறுமதிச் சீராக்கல்களின் மூலம் 21% இனால் குறைக்கப்பட்டது.

வருடத்தின் போது செலவிற்கும் வருமானத்திற்கும் இடையிலான விகிதாசாரமானது 43% லிருந்து 38% ஆகக் குறைவடைந்திருந்தது. இது செயற்பாட்டு செலவுகளை செயற்திறன் மிகு முறையில் முகாமைத்துவம் செய்வதற்கான வங்கியின் ஆற்றலினைப் பிரதிபலித்தது.

செயற்பாட்டு செலவுகள்




செலவிற்கும் வருமானத்திற்குமிடையிலான விகிதாசாரம்




இலாபமீட்டும் தன்மை

வங்கியின் செயற்பாட்டு நடவடிக்கைகளுள் அதி நவீன தொழிநுட்பத்தினைப் புகுத்துகின்ற அதேவேளை உள்நாட்டுச் சந்தையிலும் உலகளாவிய சந்தையிலும் காணப்படும் புதிய போக்குகளுடன் வங்கியினைப் பொருந்தச்செய்து வருடத்தின் போது வங்கியின் உபாயமார்க்க முன்னுரிமைகள் அமுல்படுத்தப்பட்டன. 2017ம் ஆண்டிலே வரிக்கு முந்திய இலாபமாக 30.3 பில்லியன் ரூபாவினைப் பதிவுசெய்து தொழிற்துறையிலே அதிகூடிய மட்டத்திலான இலாப ஊக்குவிப்பினை இலங்கை வங்கி தொடர்ந்தும் பேணியது. இந்தச் சாதனையின் காரணமாக வருட முடிவின் அண்மைக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மூலதன உட்பாய்ச்சலின் விளைவாக சராசரிச் சொத்துக்கள் (RoAA) மற்றும் சராசரி உரிமை முதல்கள் (RoAE) மீதான திரும்பல்களில் அறிக்கையிடப்பட்ட எல்லை ரீதியான குறைப்பினைத் தாண்டி வங்கி அதன் வருடத்திற்கான இலக்கினை அடைந்து கொள்ளக் கூடியதாகவிருந்தது.


வரிக்கு முந்திய இலாபம்




வரிக்குப் பிந்திய இலாபம்



சராசரிச் சொத்துக்களின் மீதான திரும்பல்



சராசரி உரிமை முதல் மீதான திரும்பல்



சொத்துக்கள்

2017ம் ஆண்டிலே 17% என்கின்ற மிகவும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியுடன் வங்கியின் மொத்தச் சொத்துக்கள் 1.7 ரில்லியனிலிருந்து 1.9 ரில்லியனாக அதிகரித்தன. வங்கியானது மிகவும் ஆரோக்கியமான கடன் முதலீட்டுத் தொகுதி மற்றும் மொத்தச் சொத்துக்களின் 90%ற்கும் மேற்பட்டதைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உயர் பாதுகாப்புடைய நிதி முதலீடுகள் ஆகியவற்றுடன் ஓர் உறுதியான சொத்துத் தளத்தினை அடைந்தது.

சொத்துத் தளத்தின் 60%னைப் பிரதிநிதித்துவப்-படுத்துகின்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் இக்காலகட்டத்தின் போது 16%இனால் அதிகரித்து வங்கியின் முதன்மை வியாபாரமான கடன் வழங்கலில் வங்கியின் உறுதியான தன்மையினை எடுத்து விளக்கின.

மூலதன இலாபங்களையும் வட்டி வருமானங்களையும் ஈட்டுவதற்காக வங்கி பல்வகைமைப்படுத்தப்பட்ட முதலீட்டுத் தொகுதியினைப் பேணி வருகின்றது. 308.3 பில்லியன் ரூபா பெறுமதியான முதிர்ச்சி வரை வைத்திருக்கப்பட்ட நிதி முதலீடுகளினாலும் 213.2 பில்லியன் ரூபா பெறுமதியான கடன்கள் மற்றும் பெறக்கூடிய நிதி முதலீடுகளினாலும் 2017ம் ஆண்டின் முடிவின்போது உள்ளவாறாக இது பரவலாகியது. வங்கியின் இடர்எல்லையைக் குறைந்த மட்டத்தில் தக்கவைப்பதற்காக மீள் விற்பனை உடன்படிக்கைகளின் கீழும் அரசாங்கத் திறைசேரி உண்டியல்களின் கீழும் இலங்கை அபிவிருத்தி முறிகளின் கீழும் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களிலான அதிகரித்த முதலீடுகளுடன் வருடத்தின் போது நிதி முதலீடுகள் 20% இனால் வளர்ச்சியடைந்தன.

கடன்களும் முற்பணங்களும்


வருட முடிவின்போது மொத்தக் கடன்களும் முற்பணங்களும் 1.2 டிரில்லியன் ரூபாவினை அடைந்தன. இது வங்கியின் கடன் புத்தகத்தின் வளர்ச்சி உந்தத்தினை உறுதிப்படுத்தியது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது, ஏற்பட்ட 16% வளர்ச்சியானது தனியாள் கடன்கள், தவணைக் கடன்கள் மற்றும் மேலதிகப் பற்றுக்கள் ஆகியவற்றிலே ஏற்பட்ட அதிகரிப்பினால் உருவானதாகும். வெவ்வேறு தளங்களின் மூலம் கடன் வசதிகளை அணுகுவதற்கான அதிகரித்த அணுகல்கள், முறைமைகளின் தன்னியக்கம் மூலமான துரிதமான சேவை மற்றும் வங்கியின் விற்பனைக் கலாசாரத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட புத்தம் புதிய மாற்றங்கள் ஆகியவற்றின் மூலம் இந்த அடைவுக்கு வங்கி கணிசமான பங்களிப்பினை வழங்கியிருக்கின்றது.

சந்தையிலே வெவ்வேறு வாடிக்கையாளர் பிரிவுகளுக்குச் சேவையாற்றுவதற்கு கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான உற்பத்தித் தொகுதிகள் வங்கியினால் கிடைக்கச்செய்யப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டின் போது தனியார் மற்றும் அரசாங்கத் துறைகளுக்கிடையில் முதலீட்டுத் தொகுதியானது ஓர் ஆரோக்கியமான சமநிலையினைக் காட்டியது.

வருடத்தின்போது வங்கியின் வெளிநாட்டு தொழிற்பாடுகளின் வளர்ச்சி வாய்ப்புக்களுக்கு உதவுவதற்காக கடன்களிலும் முற்பணங்களிலும் வங்கியின் வெளிநாட்டுக் கிளைகள் 10% வளர்ச்சியினைப் பதிவு செய்தன.

செயற்படா முற்பணங்களின் விகிதாசாரம் ஓரளவு குறைவடைந்தது. இது அதிகரித்த சொத்துக்களின் தரம், உறுதியான நிர்வாகம் மற்றும் அறவீட்டுச் செயன்முறைகளை எடுத்து விளக்குகின்றது.

மொத்தக் கடன்கள்




வைப்புக்கள்

2017ம் ஆண்டிற்கான 20% சந்தைப் பங்குடன் வாடிக்கையாளர் வைப்பில் அதன் சந்தைத் தலைமைத்துவத்தினை வங்கி தக்கவைத்திருக்-கின்றது. வங்கியின் வைப்புத் தளமானது 1.3 டிரில்லியன் ரூபாவிலிருந்து 1.5 டிரில்லியன் ரூபாவாக விரிவடைந்து வருடத்திலிருந்து வருடத்திற்கான 23%மான கவர்ச்சியான அதிகரிப்பினைப் பதிவு செய்திருக்கிறது. இது எமது விற்பனைப் படையின் முயற்சியின் வெற்றியைப் பிரதிபலிக்கின்றது. வாடிக்கையாளரின் மீது நாட்டம் கொண்ட கலாசாரத்துடன் புத்தாக்கமும் கவர்ச்சியும் மிக்க உற்பத்திகள், செயன்முறைகள் மற்றும் செயல்விதிகள் வருடம் முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டதாலேயே இது ஊக்குவிக்கப்பட்டுள்ளது.


2017ம் ஆண்டிலே 17% என்கின்ற மிகவும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியுடன் வங்கியின் மொத்தச் சொத்துக்கள் 1.7 ரில்லியனிலிருந்து 1.9 ரில்லியனாக அதிகரித்தன. வங்கியானது மிகவும் ஆரோக்கியமான கடன் முதலீட்டுத் தொகுதி மற்றும் மொத்தச் சொத்துக்களின் 90%ற்கும் மேற்பட்டதைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உயர் பாதுகாப்புடைய நிதி முதலீடுகள் ஆகியவற்றுடன் ஓர் உறுதியான சொத்துத் தளத்தினை அடைந்தது.

மொத்த வைப்புக்களில் 78% இனைக் கொண்டுள்ள உள்நாட்டு நாணய வைப்புக்கள் வருடத்தின் போது 28% த்தினால் வளர்ச்சியடைந்தன. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயக் காலவைப்புக்கள் 258 பில்லியன் ரூபாவினால் வளர்ச்சியடைந்து, CASA வைப்புக்களிலிருந்து உயர் விளைவினை வழங்குகின்ற காலவைப்புக்களுக்குச் சந்தைப் போக்குகள் நகர்கின்ற காலகட்டத்திலே 36% வளர்ச்சியினைப் பதிவுசெய்துள்ளன. இதன் விளைவாக தொழிற்துறை விதிகளுக்குச் சமமாக CASA விகிதாசாரத்திலே ஒரு வீழ்ச்சியினை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.


வைப்புக்கள்




வைப்புக்கள் (உள்நாட்டு நாணயம் எதிர் வெளிநாட்டு நாணயம்)



கடன் பெறுகைகள்



பங்குதாரர்களின் நிதிகள்




கடன் பெறுகை

கடன் பெறுகைகளுள் துணைநிலைத் தவணைக் கடன்கள், விநியோகிக்கப்பட்ட கடன் பிணையங்கள், REPO கடன் பெறுகைகள் மற்றும் ஏனைய கடன் பெறுகைகள் ஆகியவை அடங்குகின்றன. இக்கடன் பெறுகைகள் வருடத்தின் போது 31.7 பில்லியன் ரூபாவினால் குறைவடைந்தன. இது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது REPO கடன் பெறுகைகள் மற்றும் தவணைக்கடன் பெறுகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் ஏற்பட்ட 11% குறைவினால் உருவானதாகும்.

வருடத்தின் போது வங்கி பாதுகாப்பற்ற துணை நிலையான மீள்பெறத்தக்க தொகுதிக் கடன்களைத் தனிப்பட்ட வைத்திருப்புக்களின் கீழ் 10 பில்லியன் ரூபாவிற்கு விநியோகித்தது.


நடைமுறைக் கணக்கு சேமிப்புக் கணக்கு விகிதாசாரம்



பங்கிலாபங்கள்

2017 ஆம் ஆண்டின் போது வங்கி அதன் தனித்த பங்குதாரான இலங்கை அரசாங்கத்திற்கு 12.3 பில்லியன் ரூபா பங்கிலாபத்தினைச் செலுத்தியது. இது 2017 ஆம் ஆண்டிற்கான பங்கிலாபச் செலுத்தல் விகிதாரசமான 58% ஆகப் பதிவு செய்யப்பட்டது.

செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள்



பங்குதாரர்களின் நிதிகள்

பங்குதாரர்களின் நிதிகளில் கவர்ச்சிகரமான 20% அதிகரிப்பு அறிக்கையிடப்பட்டது. இது வருட முடிவின்போது 111.2 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது இலங்கை வங்கியினால் வழங்கப்பட்ட 5 பில்லியன் ரூபா பெறுமதியுடைய நிறுத்தி வைக்கப்பட்ட இலாபங்கள் மற்றும் மூலதன உட்பாய்ச்சல் ஆகியவற்றின் அதிகரிப்பினால் ஆதாரப்படுத்தப்பட்டது.

மூலதனம் மற்றும் திரவத்தன்மை


பாசல் III இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளைத் தாண்டி வங்கியினால் மூலதனப் போதுநிலையினையும் திரவத்தன்மை விதிகளினையும் பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது.

வருட முடிவின் போது முறையே 7.75% மற்றும் 11.75% எனக் காணப்பட்ட ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு எதிராக அடுக்கு I இன் மூலதனப் போதுநிலை விகிதாசரமும் மூலதனப் போதுநிலை விகிதாசாரமும் முறையே 10.8% ஆகவும் 14.6% ஆகவும் காணப்பட்டது. மேலும் நியதிச்சட்டத் திரவத்தன்மைச் சொத்துக்களின் விகிதாசாரம் வருட முடிவின்போது தொடர்ந்தும் 27.2% ஆகக் காணப்பட்ட அதேவேளை மிகக் குறைவான ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடு 20% ஆகும்.


மேலும் இதே வருடத்தின் போது பாசல் III ஒழுங்குவிதிகளின் விளைவாக திரவத்தன்மை காப்பு வீதம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டது. சகல நாணயங்களுக்கும் 105% இல் திரவத்தன்மை காப்பு வீதம் இனை அறிக்கையிடுவதன் மூலமாகவும் 141.5% இல் ரூபாவிற்கு திரவத்தன்மை காப்பு வீதத்தினை அறிக்கையிடுவதன் மூலமாகவும் வங்கியினால் இந்தப் புதிய ஒழுங்குவிதியினைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது. இது 80% எனும் தேவைப்படுத்தப்படும் எண்ணிக்கைக்கு மேல் காணப்பட்டது.

மூலதனப் போதுநிலை மற்றும் திரவத்தன்மை ஆகியவற்றில் ஈட்டப்பட்ட இந்த முக்கியமான அடைவுகள் எந்தவிதமான அழுத்தச் சூழ்நிலைக்கும் ஈடுகொடுப்பதற்கான வங்கியின் ஆற்றலினைப் பிரதிபலிப்பதுடன் மூலதனத்தினை முகாமைத்துவம் செய்து வங்கியின் ஐந்தொகையின் மீண்டெழும் தன்மையினைப் பேணுவதற்கான அதன் ஆற்றலினையும் பிரதிபலிக்கின்றது.

மொத்த மூலதனப் போதுநிலை விகிதாசாரம்



ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள்



2017 பெறுமதிகள் பாசல் III இனை அடிப்படையாகக் கொண்டும் 2013 இல் இருந்து 2016 வரையான பெறுமதிகள் பாசல் II இனை அடிப்படையாகக் கொண்டும் கணிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி குழுமக் கட்டமைப்பு

இலங்கை வங்கியின் குழுமத்தினுள் 10 துணைக்கம்பனிகளும் 04 இணைக்கம்பனிகளும் அடங்குகின்றன. இந்தக் கம்பனிகள் குழுமத்தின் மொத்தச் சொத்துக்களில் 2% இனைக் கொண்டுள்ளதுடன் உபாயமார்க்க நோக்கங்களுக்காக இலங்கை வங்கியின் வரலாற்றினூடே நிறுவப்பட்டுள்ளன. இலங்கை வங்கியின் 10 துணைக்கம்பனிகளில் 5 துணைக்கம்பனிகள் இலங்கை வங்கியின் பூரண உரித்துடையவையாகும்.

முதன்மைச் செயற்பாடுகள்

நிதிச்சேவைகள் (MBSL), பிரயாணத்துடன் தொடர்புடைய சேவைகள் (BOC Travels), நீர் மின்வலுப் பிறப்பாக்கம் [கொலதெனிய ஹைட்ரோபவர் (பிறைவேற்) லிமிட்டெட்] மற்றும் இலங்கை வங்கி (யூகே) லிமிடெற் ஈடுபட்டுள்ள ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிதிச்சேவைச் செயற்பாடுகள் போன்ற பல்வகைமைமிகு செயற்பாடுகளில் துணைக்கம்பனிகள் ஈடுபட்டுள்ளன. இணைக்கம்பனிகள் ஈடுபட்டுள்ள சில செயற்பாடுகளுள் நம்பிக்கை அலகுப் பொறுப்பு நிதிகளின் முகாமைத்துவம், பங்குத் தரகர் சேவை மற்றும் சொத்துக்கள் தொடர்புடைய செயற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

இலங்கை வங்கி பின்பற்றுகின்ற நல்லாட்சி நடைமுறைகளுக்கு அமைவாக துணைக்கம்பனிகள் ஒரு துணைநிலை சாசனத்தின் கீழ் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன. இவை ஒரு வருடாந்த பூரணமான துணைநிலைச் செயலாற்றுகை மீளாய்வினை உள்ளடக்குகின்றன. வங்கியின் பிரிதிநிதி ஒருவர் சபையின் உறுப்பினருள் ஒருவராக அமர்ந்து வங்கியின் நலன்கள் கவனிக்கப்படுகின்றன. மேலும் துணைக்கம்பனிகளினதும் இணைக்கம்பனிகளினதும் செயற்பாடுகள் வங்கி பின்பற்றுகின்ற தராதரங்களுக்கு அமைவாக நடத்தப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துகின்றார். ஒவ்வொரு துணைக்கம்பனியினதும் இணைக்கம்பனியினதும் நிதிச்செயலாற்றுகைகள் ஒரு தாய்க்கம்பனி என்கின்ற ரீதியிலே வங்கியினால் கண்காணிக்கப்பட்டு நிதி இடர் தொடர்பான எந்தக் குறிகாட்டிகளும் திருத்தச் செயற்பாடுகளுக்காக வங்கி முகாமைத்துவத்தின் உடனடிக் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன. சமகாலத்திலே இடர்முகாமைத்துவத் தகவல்கள் வங்கியின் பிரதான இடர் அதிகாரிக்கு அறிக்கையிடப்படுகின்றன. இதன் மூலம் குழுமக் கம்பனிகளின் இடர்கள் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய மட்டத்தினுள் முகாமைத்துவம் செய்யப்பட்டு குழுமக்கம்பனிகள் எவ்விதமான தேவையற்ற இடரினையும் வங்கிக்கு ஏற்படுத்தவில்லை என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.

பௌதீகக் கட்டமைப்பு மற்றும் அதற்கு அப்பால்



பௌதீக உட்கட்டமைப்பு

626
கிளைகளும் வரையறுக்கப்பட்ட சேவைக் கிளைகளும்

15
SME மையங்கள்

02
வாகனக் கிளைகள்

14
பிராந்தியக் கடன் நிலையங்கள்

டிஜிற்றல் உட்கட்டமைப்பு

764
ATM கள்

BoC ஒன்லைன் வங்கிச் சேவை

168
CDM கள்

B app
செயலி

பௌதீக உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதற்கான முதலீடு
ரூபா **1.9 பில்லியன்**

டிஜிட்டல் உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதற்கான முதலீடு ரூபா **1.7 பில்லியன்**

2017 முடிவின் போது உள்ளவாறாக
209
கிளைகள் நவீன கிளைகளாக நிலை மாற்றப்பட்டுள்ளன

கிளை வலையமைப்பிற்கு பசுமை வங்கிச்சேவை எண்ணக்கரு அறிமுகம்

2017 ம் ஆண்டின் முடிவின் போது உள்ளவாறாக
20 கிளைகள் சூரிய சக்தி அளிக்கப்பட்டுள்ளன

உற்பத்தியாக்கப்பட்ட மூலதனம்

மீண்டெழும்தன்மை மிகு உட்கட்டமைப்பினைக் கட்டியெழுப்புதல், உள்ளடக்கும்தன்மை மிக்க மற்றும் நீடுறுதியான கைத்தொழில் மயமாக்கத்தினை மேம்படுத்துதல்



எமது வாடிக்கையாளர் இடைமுகம் புதுப்பிக்கப்பட்டு புதிய ATM களினாலும் CDM களினாலும் நடமாடும் எமது கிளைகளினாலும் அதன் அடைவு விஸ்தரிக்கப் பட்டுள்ளது

- **24 x 365 எந்த இடத்திலும் எந்த நேரத்திலுமான வங்கிச்சேவைக்காக B app செயலி ஆரம்பிக்கப்பட்டது.**
- **சேவைகள் கிட்டாத சமுதாயங்களுக்குச் சேவையாற்றுவதற்காக நடமாடும் நிதிச்சேவைகள் சேவையாற்றி வருகின்றன.**

எமது உட்கட்டமைப்பு

எமது பௌதீகக் கிளை வலையமைப்பினையும் எமது உபகரணம், தகவல் தொழில்நுட்ப முறைமைகள் மற்றும் வலையமைப்புக்கள் போன்ற எமது இயக்கங்களுக்கு உதவி வழங்குகின்ற புலப்படாத விடயங்கள் மற்றும் புலப்படுகின்ற விடயங்களையும் உற்பத்தியாக்கப்பட்ட மூலதனம் உள்ளடக்குகின்றது. எமது நீண்ட வரலாற்றுடன் நாம் பாரம்பரியமான பல விடயங்களையும் மேலும் சார்பளவிலே அண்மையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பல விடயங்களையும் உடைமையாகக் கொண்டுள்ளோம். எமது பௌதீகக் கிளைகள் மற்றும் டிஜிட்டல் விநியோக மார்க்கங்களுடன் நாம் நாட்டிலே மிகப் பரந்த நிதி வலையமைப்பினைக் கொண்டுள்ள வங்கி என்கின்ற பெருமையினைப் பெற்றுள்ளோம். 2017 டிசெம்பர் 31இல் உள்ளவாறாக நாம் 578 கிளைகளையும் 48 வரையறுக்கப்பட்ட சேவைக் கிளைகளையும் இரண்டு நடமாடும் கிளைகளையும் 15 சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சியாண்மை மையங்களையும் 14 பிராந்திய கடன் நிலையங்களையும் 764 ATM க்களையும் மற்றும் 168 CDM களையும் கொண்டிருந்தோம். என்னென்ன தொழில்நுட்ப அபிவிருத்திகளும் புத்தாக்கமும் இடம்பெற்றுவருகின்ற போதிலும் அதிகமான "வாடிக்கையாளர்கள் இன்னும் மனிதத் தொடர்பினையே மதிக்கின்ற காரணத்தினால்" பௌதீகக் கிளை வலையமைப்பு வசதிகளும் இயக்கங்களும் தொடர்ந்தும் முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. அடிமட்ட மக்களுக்கும் வாழ்வின் சகல மட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கும் சேவையாற்றுதல் என்கின்ற எமது வரலாற்றுடனும் விழுமியத்துடனும் எமது கிளைகள் நாடு முழுவதும் பரவியுள்ளதுடன் மிகவும் அபிவிருத்தியடைந்த நகரங்களிலும் விளிம்பு நிலையிலுள்ள தொலைதூரக் கிராமங்களிலும் அவை அமைந்துள்ளன. மேலும் இலங்கை வங்கியானது நாட்டிலேயே மிகப் பாரிய ATM மற்றும் CDM வலையமைப்பினைக் கொண்டுள்ளதுடன் வருடத்தின் போது நாம் 86 ATM களையும் 45 CDM களையும் புதிதாகச் சேர்த்துள்ளோம். எமது பரந்து விரிந்த வலையமைப்பானது ஒரு அளப்பரிய சொத்தாக இருந்து வருவதுடன் தொடர்ந்தும் அவ்வாறான ஒன்றாகக் காணப்படுகின்றது. மேலும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற சௌகரியத்தின் மட்டத்திலே இது அளப்பரிய சேவையினை ஆற்றி வருகின்றது.

வங்கிச்சேவை மாதிரியானது பௌதீக உட்கட்டமைப்பு முறையிலிருந்து டிஜிட்டல் யுகத்திற்கு மாறி வருகின்றது. எமது வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு மத்தியில் மிலேனியம் (1980களுக்கு பின்னர் பிறந்த) தலைமுறையினருக்குச் சேவையாற்றுவதற்காக நாம் எம்மைத் தயார்படுத்தி வருகின்றோம். இவர்கள் புதிய யுகத்தின் வங்கிச் சேவையினைக் கோரிவருகின்ற காரணத்தினால் வருடத்தின் போது எமது டிஜிட்டல் உட்கட்டமைப்பினைத் தரமுயர்த்துவதற்காக நாம் பாரிய முதலீட்டினை மேற்கொண்டுள்ளோம்.

நாம் எமது கிளைகளினை தரப்படுத்தித் தரமுயர்த்தியுள்ளோம். இதற்கமைய இரண்டு கிளைகளும் ஒரு வரையறுக்கப்பட்ட சேவைக் கிளையும் மூடப்பட்டு கிளை ஒன்று திறக்கப்பட்டது. மேலும் 19 கிளைகள் இடமாற்றம் செய்யப்பட்டு 41 கிளைகள் வருடத்தின் போது தரமுயர்த்தப்பட்டன.

தொலைதூரக் கிராமங்களில் உள்ள எமது கிளைகள் இதுவரையிலே சேவை கிட்டாத மக்களுக்குச் சேவையாற்றி வருகின்ற காரணத்தினால் நாம் பரந்த நிதி உள்ளடக்கத்தினை மேம்படுத்தி வருகின்றோம். பாரம்பரிய வங்கிச்சேவை முறையினை அடைந்துகொள்ள முடியாத மக்களுக்குச் சேவையாற்றுவதற்காக நாங்கள் இரண்டு நடமாடும் கிளைகளையும் பணியில் அமர்த்தியுள்ளோம். இந்த நடமாடும் கிளைகள் வருடத்தின் போது அனர்த்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்டது. அக்காலப்பகுதியில் பௌதீகக் கிளைகள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் அமைந்திருந்த காரணத்தினால் அவற்றினால் செயற்பட முடியாத நிலைமை காணப்பட்டது.

எமது கிளைகளுக்கு பௌதீக ரீதியான ஓர் அழகிய தோற்றத்தினை வழங்கி வாடிக்கையாளர்களுக்கு அவற்றினைக் கவர்ச்சி மிக்கதாக ஆக்குவதற்காக நாம் பாரிய புதுப்பிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம். வருடத்தின் போது நாம் 97 கிளைகளின் நிலைமாற்றத்தினைப் பூர்த்திசெய்துள்ளோம். 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறாக மொத்தமாக 209 கிளைகள் நிலைமாற்றப்பட்டுள்ளதுடன் 48 கிளைகளின் நிலைமாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. இரண்டு கிளைகளில் வருடத்தின் போது பாரிய புதுப்பிப்பு வேலைகள் இடம்பெற்று வந்தன. எமது பௌதீகக் கிளை வலையமைப்புகளை அபிவிருத்தி செய்வதற்காக வருடத்தின் போது ஏற்பட்ட மொத்தச் செலவு 1.9 பில்லியன் ரூபாவாகும். இந்த மூலதனம் எமது பெறுமதி உருவாக்கச் செயன்முறையின் பிரதான உந்துசக்தியாகக் காணப்படுகின்றது. ஏனெனில் வழங்கப்படுவது



வாகனக் கிளைகள்

பௌதீகக் கட்டமைப்புகளைத் தரமுயர்த்துதல்

எவ்வாறாயினும் நாம் எமது பாரம்பரிய வாடிக்கையாளர்களை மறந்துவிடவில்லை. எப்பொழுதுமே டிஜிட்டல் விநியோக மார்க்கங்களுக்கும் பௌதீகக் கிளை வலையமைப்புக்களின் விஸ்தரிப்புக்களுக்கும் இடையில் நாம் சமநிலையினைப் பேணி வருகின்றோம். வருடத்தின் போது சிறந்த வாடிக்கையாளர் சேவையினை வழங்குவதற்காக

பாரம்பரிய சேவையாக இருப்பினும் அல்லது அதிநவீன தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி வழங்கப்படுகின்ற சேவையாக இருப்பினும் பெறுமதி உருவாக்கம் என்பது எமது வாடிக்கையாளர் சேவைக்கு இன்றியமையாததாகும்.

டிஜிட்டல் நிலைமாற்றம்

பாரம்பரிய வங்கிச் சேவையிலிருந்து டிஜிட்டல் வங்கிச் சேவைக்கு மாறியதுடன் எமது தொழில்நுட்ப உட்கட்டமைப்பினைத் தரமுயர்த்துவதற்கான தொடர்ச்சியான கேள்விகள் வந்தவாறுள்ளன. இதிலே தரமுயர்த்தப்பட்ட வலையமைப்பு உட்கட்டமைப்பு, மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு மற்றும் சேவை அம்சங்களுடன ATM கள், CDM கள் ஆகியவை உள்ளடங்கியிருந்தன. இது எமது வாடிக்கையாளர் சௌகரியத்தினைப் பெருமளவிற்கு அதிகரித்து, அவர்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையினையும் விசுவாசத்தினையும் அதிகரித்து, சந்தைத் தளத்திலே நாம் எமது முதலாம் இடத்தினைத் தொடர்ந்தும் தக்கவைப்பதற்கு உதவியுள்ளது. எவ்வளவு விரைவாக நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் CDM கள் பிரபலமாகியுள்ளன என்பது வாடிக்கையாளர் முன்விருப்புக்களில் ஏற்பட்ட மாற்றத்தினால் சுட்டிக்காட்டப்படுகின்றது. எமது தகவல் தொழில்நுட்ப வன்பொருட்களும் மென்பொருட்களும் என்றென்றும் அதிகரித்து வரும் இணையம் மற்றும் மொபைல் வங்கிச்சேவையின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காகவும் அவற்றுடன் இயைந்து செயற்படுவதற்காகவும் கிரமமாக தரமுயர்த்தப்படல் வேண்டும். டிஜிட்டல் வழிகள் பாதுகாப்பானவையாகவும் அணுகக்கூடியவையாகவும் பயன்படுத்துவதற்கு இலகுவானவையாகவும் நம்பத்தகுந்தவையாகவும் விரைவானவையாகவும் இருக்கவேண்டும். கொடுக்கல் வாங்கல்களின் அளவு அதிகரிக்கும் பொழுது அவை விரிவடையக்கூடியவையாகவும் இருக்கவேண்டும். ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் மாறிவருகின்றன மேலும் தகவல் தொழில்நுட்ப முறைமைகள் மற்றும் செயல்விதிகள் ஆகியவை விளைவான தகவல் தேவைப்பாடுகளுக்குச் சேவையாற்றுவதற்காக மாற்றப்படல் வேண்டும். இடர்முகாமைத்துவம், ஒழுங்குபடுத்தல் அறிக்கையிடல் தேவைப்பாடுகள் மற்றம் பணம் தூய்தாக்கலுக்கு எதிரான ஒழுங்குவிதிகள் ஆகியவற்றின் மாற்றங்களுடனும் இதே நிலைமையே காணப்படுகின்றது. புதிய கணனி உபகரணத்திலும் மென்பொருட்களிலும் வலையமைப்பு உட்கட்டமைப்பிலும் 2017 ஆம் ஆண்டிலே 1.7 பில்லியன் ரூபா முதலீடு மேற்கொள்ளப்பட்டது.

தொழிற்துறையிலே ஏற்பட்டுள்ள தற்போதைய போக்குகளுக்கு இயைபுற்று வருடத்தின் போது எமது டிஜிட்டல் மயமாக்க முன்னெடுப்புக்களில் நாம் கணிசமான முன்னேற்றத்தினை எட்டியுள்ளோம். எமது ஒன்லைன் வங்கிச் சேவைத் தளமானது தரமுயர்த்தல்களுடன் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. Smart வங்கிச் சேமிப்புப் புத்தகம் மொத்தமாக 41,567 பதிவுகளைப் பெற்றுள்ளது. எமது முன்னேற்றங்களில் மிக முக்கியமானதாக 'B செயலி' எனும் மொபைல் செயலியினை ஆரம்பித்து வைத்தமை அமைகின்றது. வாடிக்கையாளர்கள் துரிதமாகவும் பாதுகாப்பாகவும் எந்த இடத்திலும் மேலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தக்கூடிய டிஜிட்டல் வங்கிச்சேவை இயக்கத்தினை மேற்கொள்வதற்கான வழியினை இந்தச் செயலி வழங்குகின்றது. டிஜிட்டல் வழிகளின் பாதுகாப்பு அம்சங்களும் வருடத்தின் போது தரமுயர்த்தப்பட்டன.

எமது ATM கள் மொத்தமாக 62.9 மில்லியன் கொடுக்கல் வாங்கல்களை வருடத்தின் போது பதிவு செய்துள்ளதுடன் CDM கள் 10.9 மில்லியன் தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. EMV சிப் அட்டை விநியோகிக்கும் வசதியானது அறிமுகப்படுத்தப்பட்ட அதேவேளை EMV சிப் அட்டையினை ஏற்றுக்கொள்கின்ற வசதியானது 500க்கும் மேற்பட்ட யுவுஆ களுக்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அட்டை இன்றிய கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக 500 ATM களிலும் 13 CDM களிலும் மொபைல் மீள்நிரப்பு வசதிகளை இயலுமாக்கப்பட்டுள்ளன. மேலும் 13 CDM களில் காசினை மீள்சுழற்சி செய்கின்ற வசதியும் இயலுமாக்கப்பட்டுள்ளது.

உற்பத்தியாக்கப்பட்ட மூலதனத்தினை உருவாக்குகையில் பிரதேசத்தில் உள்ள எந்தவொரு புதிய முதலீடும் கவனமாக மதிப்பிடப்பட்டு அது கொண்டுவரக்கூடிய திரும்பல்கள் மற்றும் அதில் சம்பந்தப்பட்டுள்ள காலச்சட்டகங்கள் மதிப்பிடப்படுவது எப்போதுமே அவசியமானதாகும்.

சமூக ஊடகத்தின் தாக்கம்

சமூக ஊடகம் போன்ற உலகளாவிய போக்குகள் எதிர்காலத்திலே வங்கிச் சேவைத் தொழிற்துறையினை அதிகரித்த அளவிலே கட்டமைக்கும். குறிப்பாக 1980களுக்கு பின்னர் பிறந்த (மிலேனியம்) தலைமுறையுடன் தொடர்பாடுகையில் இது நிகழலாம். சமூக ஊடகமானது வாடிக்கையாளர்களுடன் தொடர்பாடுவதற்கான மிகவும் விரும்பப்படுகின்ற வழியாக அதிகரித்த அளவிற்கு மாறும். வாடிக்கையாளர்களின் பின்னூட்டல்கள் உடனடியாக சகவயதுக் குழுவினரின் பாரிய எண்ணிக்கையினருக்கு எடுத்துக்கூறப்படுகின்ற அதிகரித்த சவால்களையும் இது கொண்டுவரும். இதன் விளைவாக ஏற்படும் பாரிய தகவல்களின் உட்பாய்ச்சல்களைப் பகுப்பாய்வு செய்வதற்கு புலமை வாய்ந்த முறைமைகள் உருவாக்கப்படல் வேண்டும்.

வங்கிச்சேவை மாதிரியானது பௌதீக உட்கட்டமைப்பு முறையிலிருந்து டிஜிட்டல் யுகத்திற்கு மாறி வருகின்றது. எமது வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு மத்தியில் மிலேனியம் (1980களுக்கு பின்னர் பிறந்த) தலைமுறையினருக்குச் சேவையாற்றுவதற்காக நாம் எம்மைத் தயார்படுத்தி வருகின்றோம். இவர்கள் புதிய யுகத்தின் வங்கிச் சேவையினைக் கோரிவருகின்ற காரணத்தினால் வருடத்தின் போது எமது டிஜிட்டல் உட்கட்டமைப்பினைத் தரமுயர்த்துவதற்காக நாம் பாரிய முதலீட்டினை மேற்கொண்டுள்ளோம்.



சமூக ஊடகத்தின் ஊடாக வாடிக்கையாளர் கருத்துப் பரிமாற்றம்

எமது பௌதீகச் சொத்துக்களைப் பாதுகாத்தல்

எமது கிளைகளின் பாதுகாப்பு மற்றும் ஆதரவு அம்சங்களை நாம் புறக்கணிக்கவில்லை. வருடத்தின் போது எமது கிளை வலையமைப்பின் பாதுகாப்பு முன்னேற்றங்களுக்காக 258 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டது. வங்கியானது ஒவ்வொரு கிளையினிலும் தலைமை அலுவலகத்திலும் உள்ள காசுக்காப்புறுதி எல்லைகளினதும் தீக் காப்புறுதிக் கொள்கைகளினதும் உரிய காலத்திலான புதுப்பிப்புக்களை மேற்கொள்வதில் மிகவும் கவனமாகச் செயற்படுகின்றது. எமது வலையமைப்பு எதிர்பார்க்கப்படுகின்ற உயர்மட்டத்திலான பாதுகாப்பினைக் கொண்டுள்ளதென்பதை உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. 2017ம் ஆண்டின் போது நாம் எமது சகல கிளைகளுக்கும் CCTV இனைப் பொருத்தியுள்ளோம்.

எமது கிளை வலையமைப்பினைப் பசுமையாக்கல்

வருடத்தின் போது மொத்தமாக 14 கிளைகள் சூரிய சக்திக்கு மாற்றப்பட்டு 2017ம் ஆண்டிலே மொத்தமாகப் பொருத்தப்பட்ட கொள்ளவானது 515 kw ஆகக் காணப்படுகின்றது.

சக்தியினைச் சேமிக்கின்ற வினைத்திறன் மிக்க ஒளியூட்டல்களினைத் தொடர்கின்ற செயன்முறையினை நாம் பயன்படுத்தி வருவதுடன் ஒளி இழப்பினைத் தவிர்ப்பதற்காக நாம் கிளைகளின் கட்டடத் தோற்றவமைப்பினையும் மாற்றி வருகின்றோம். மேலும் சில கிளைகளிலே மழை நீரினை நாம் தரைத்தோற்ற அழகுபடுத்தலுக்காகப் பயன்படுத்திவருவதுடன் ஒளியூட்டல்களின் கட்டுப்பாட்டிற்காகத் தன்னியக்க முறைமைகளையும் பொருத்திவருகின்றோம். எமது கெக்கிராவ கிளையானது அதன் பசுமைக் கருத்தியலுக்காக பசுமைக் கட்டடக் கவுன்சிலிலிருந்து தங்க விருதினைப் பெற்றுள்ளது. ஏனைய தெரிவு செய்யப்பட்ட கிளைகளிலும் நாம் எமது பசுமை எண்ணக்கருவை பரப்பி வருகின்றோம்.



இலங்கை வங்கியின் முதலாவது "பசுமையாக்கல் கிளை" – "கெகிராவ" கிளை

கட்புலனாகாத மிக முக்கியமான விடயங்கள்



உறுதியான வியாபாரச் சின்னம்

இலங்கையின் **1** ஆம்
தர வியாபாரச் சின்னம்

இங்கிலாந்தின்
The Banker
சஞ்சிகை தெரிவுசெய்த
1,000
உலக வங்கிகளில் ஒன்று

ரூபா **40.6 பில்லியன்**
பெறுமதியுடைய வியாபாரச் சின்னம்
பிரான்ட் பினான்ஸ் லங்கா நிறுவனத்தினால்
மதிப்பிடப்பட்டுள்ளது

வியாபாரச் சின்னத்தின்
மீதான முதலீடு
ரூபா **1.2 பில்லியன்**

உட் பொதிந்துள்ள அறிவு



பணியாளர்களின் திரட்டிய
சேவை அனுபவம்
81,841 வருடங்கள்

20 வருடங்களுக்கு மேல்
அனுபவம் கொண்ட ஊழியர்கள்
1,336

கடன் தரமிடல்

உள்ளூர் தரமிடல்

பிற்ச் ரேட்டிங்ஸ் லங்கா நிறுவனத்-தினால்
வழங்கப்பட்ட **AA+(lka)** உறுதியான
தோற்றப்பாடு

ICRA லங்கா லிமிடெற்றினால்
வழங்கப்பட்ட **AAA** உறுதியானது

உலகத் தரமிடல்

பிற்ச் ரேட்டிங்ஸ் நிறுவனத்தினால்
வழங்கப்பட்ட **B+** உறுதியானது

மூடிஸ் இன்வெஸ்ரர்ஸ் சேர்விஸ்
இனால் வழங்கப்பட்ட **B1** எதிர்க்கணியம்

புலமை மூலதனம்

சமாதானத்தை ஊக்குவித்தல் மற்றும் நிலையானதொரு அபிவிருத்தியில் சமூகங்களை உள்ளடக்குதல் மற்றும் எல்லோருக்கும் நீதியை மேம்படுத்துதல்



வங்கிகளின் சகல மட்டங்களிலும் இயக்கங்களின் சகல பரப்புக்களையும் உள்ளடக்கிய ஓர் உறுதியான ஆளுகைச் சட்டகத்தினை வங்கி கொண்டுள்ளது. எவ்வகையிலுமான ஊழல், இலஞ்சம் அல்லது மோசடி ஆகியவற்றினை இல்லாதொழிப்பதற்கு பல்வேறு கொள்கைகளை வங்கி உருவாக்கி உள்ளதுடன் வாடிக்கையாளர்களின் மனித உரிமைகளை அங்கீகரிப்பதற்கும் கொள்கைகளை உருவாக்கியுள்ளது.

- **தவறிழைப்போரைக் காட்டிக்கொடுக்கின்ற வங்கியின் கொள்கை**
- **உறுதியான ஆளுகைச் சட்டகம்**

புலமை மூலதனமானது வங்கியுடன் இணைந்துள்ள புலப்படாத அம்சங்களினைக் கொண்டுள்ளது - கலாசாரம், நெறிகள், விழுமியங்கள், நிறுவன அறிவு, முறைமைகள், செயல்விதிகள் மற்றும் வியாபாரச்சின்னப் பெறுமதி. இந்தப் புலப்படாத அம்சங்கள் ஐந்தொகையில் பிரதிபலிக்காத அதேவேளை இவை வங்கியின் சொத்துக்களாகும். இவை சகல மட்டங்களிலுமான வங்கியின் இயக்கங்களில் ஊடுருவிச் செல்கின்றது. இந்த இயக்கங்கள் உயர்மட்டத் தீர்மானம் வகுத்தலாகவோ அல்லது நாளாந்தச் செயற்பாடுகளாகவோ இருக்கலாம். வங்கி பற்றிய எமது வாடிக்கையாளர்களின் புலனுணர்வுகளில் இவை செல்வாக்குச் செலுத்துகின்றன.

எமது வியாபாரச் சின்னத்தினை அங்கீகரித்தல்

78 வருட வரலாற்றினைக் கொண்ட இலங்கை வங்கி நாட்டிலே வங்கிச் சேவைத் துறையின் முன்னணி வங்கியாகும். இலங்கை வங்கியே தேசத்தின் வங்கியாகும். எமது தேசம் எம்மீது கொண்டுள்ள நம்பிக்கையானது நீண்டகாலத்திலே கட்டியெழுப்பப்பட்டதாகும். தேசத்தின் பொருளாதார வளர்ச்சியிலே நாம் அரசாங்கத்தின் பங்காளர்களாகவும் வியாபார சமுதாயத்தின் பங்காளர்களாகவும் பொது மக்களின் பங்காளர்களாகவும் இருந்து வருகின்றோம். நாட்டின் மிகப் பெரிய வங்கியாக இருக்கின்ற காரணத்தினால் நாம் எமது மக்களின் வாழ்வினைச் சிறந்ததாக நிலைமாற்றுவதற்காகக் கொண்டுள்ள சக்தியானது மிகப்பெரியதாகும். எண்ணற்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதில் நாம் வகித்த வகிபாத்திரத்தினையிட்டு நாம் நியாயமாகப் பெருமைப்பட முடியும். நாம் பல்வகைமையின் சகல வடிவங்களையும் மதிக்கின்றோம். மேலும் சாதி, சமயம், பால் அல்லது சமூகப் பின்புலம் என்பவற்றின் அடிப்படையில் நாம் பாகுபாடு காட்டுவதில்லை. நகரத்தின் மையத்தில் அமைந்துள்ள கூம்பு வடிவிலான தனித்துவமான கட்டிடத் தோற்றத்தினைக் கொண்டுள்ள எமது வங்கியின் தலைமை அலுவலகமானது மிகவும் சிறப்பான பெறுமதியினைக் கொண்டுள்ளது. வங்கியின் அடையாளச் சின்னத்துடன் சேர்த்து வங்கியின் பாடலும் பல இலட்சக்கணக்கான மக்களின் மனதிலே பதிந்துள்ளதுடன் இது எமது வியாபாரச் சின்னத்தின் பலத்தினை எடுத்துக்காட்டுகின்றது.

மீளாய்வின் கீழுள்ள வருடத்தின் போது வங்கியின் வியாபாரச் சின்னத்தின் பெறுமதி தொடர்பான பல விருதுகளை வங்கி பெற்றுள்ளது. தொடர்ச்சியாக ஒன்பதாவது வருடமாக நாம் Brand Finance Srilanka வினால் இலங்கையின் முதற்தர வியாபாரச் சின்னமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளோம். எம்மைத் தெரிவு செய்த Brand Finance Srilanka இங்கிலாந்தின் Brand Finance இன் இலங்கைப் பங்காளராகும். விருதானது எமது வியாபாரச் சின்னத்தின் பெறுமதியினை 40.6 பில்லியன் என மதிப்பிட்டுள்ளது. மேலும் உலகின் மிகவும் செல்வாக்கு மிக்க வியாபாரச் சின்ன முகவரான இண்டர்பிராண்டினால் நடத்தப்பட்ட 'Interbrand Best Sri Lankan Brands' எனும் சமவாயத்திலே மிகச் சிறந்த இலங்கை வியாபாரச் சின்னமாக நாம் கௌரவிக்கப்பட்டுள்ளோம். இந்த விருதானது பல்வேறு தெரிவு அடிப்படைகளினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதிலே வியாபாரச் சின்னத்தின் நிதிச் செயலாற்றுகை மேலும் வாடிக்கையாளர் தெரிவுகளில் செல்வாக்குச் செலுத்துவதற்கான அதன் வகிபாத்திரம் ஆகியவை உள்ளடங்குகின்றன. 2017 ஆம் ஆண்டிலே நாம் சந்தைப் படுத்தல் செயற்பாடுகளுக்காக 1.2 பில்லியன் ரூபாவினை முதலீடு செய்துள்ளோம். இது உண்மையிலேயே எமது வியாபாரச் சின்னத்தின் மீது நாம் மேற்கொண்ட ஒரு முதலீடாகும். 2012 ஆம் ஆண்டிலிருந்து உலகிலுள்ள மிகச் சிறந்த முன்னணி ஆயிரம் வங்கிகளுள் ஒன்றாக இலங்கை வங்கி தொடர்ச்சியாகத் தரமிடப்பட்டு வருகின்றது.

எமது விழுமியங்களினைப் பரப்புதல்

உயர் நெறிசார் தராதரங்களும் விழுமியங்களும் வங்கியின் கலாசாரத்தினுள் பொதிந்துள்ளன. வங்கியின் மையமான விழுமியங்கள் சகல மட்டங்களிலுமான ஊழியர்களின் மனப்பாங்கினுள் பதிக்கப்பட்டுள்ளன. வாடிக்கையாளர் சேவை என்பது பிரதானமான வியாபாரச் செயன்முறையாக இருக்கின்ற காரணத்தினால் இதுவே பணியாளர் பயிற்சியின் பிரதான கரிசனையாகவும் காணப்படுகின்றது. வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு எமது பணியாளர்கள் பதில் அளிக்கக் கூடியவர்களாகவும் மரியாதைப் பண்புடன் வாடிக்கையாளர்களை நடத்தக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். எமது பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திலே நாம் வாடிக்கையாளர் சேவை பற்றிய பயிற்சிக்கு பெரும் முக்கியத்துவத்தினை அளித்து வந்துள்ளோம். எமது வாடிக்கையாளர் தளமானது அதீத அளவுக்குப் பல்வகைமை வாய்ந்ததாகக் காணப்படுகின்றது இதிலே பாரிய பெருநிறுவனங்கள் முதல் சிறிய அளவிலான கிராமியத் தொழில் முயற்சியாளர்கள் வரையும் மேலும் உயர் தேறிய பெறுமதி கொண்டுள்ள வாடிக்கையாளர்களிலிருந்து விளிம்பு நிலைக்குள்ளாக்கப்பட்டுள்ள கிராமியச் சூழலைச் சார்ந்த சமுதாயங்களும் காணப்படுகின்றன. இந்தச் சூழமைவிலே கட்டற்ற வாடிக்கையாளர் சேவையினை வழங்குவதற்கு எமது பணியாளர்கள் வாடிக்கையாளர்களை மையப்படுத்தியதாகச் செயற்படுவது அவசியமாகும்.

வாடிக்கையாளர்களுடன் எமது பணியாளர்கள் பச்சாதாபத்துடன் நடந்து கொள்வதும் இவ்வாறான பல்வகைமை காணப்படுகின்ற போதிலும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் பொருத்தமான வகையில் பணியாளர்கள் நடந்து கொள்வதும் முக்கியமானதாகும். வினைவாகச் சேவையாற்றுவதிலும் புத்தாக்கத்திலும் வங்கி தொடர்ச்சியான கவனக்குவிப்பினைப் பேணி வருகின்றது. நாம் தன்னியக்கமாக்கம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கத்தின் மூலம் டிஜிட்டல் சேவை விநியோக வழிகளிலும் செயன்முறை மாற்றங்களிலும் வேலைப்பாய்ச்சலின் எளிமைப்படுத்தலிலும் முதலீடு செய்து வருகின்றோம். தொடர்ச்சியான அடிப்படையில் வியாபாரச் செயன்முறைகள் மீளாய்வு செய்யப்பட்டு மீள்கட்டமைக்கப்படுவதுடன் புதிய முன்னேற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. அர்ப்பணிப்பு மிகு பிரிவுகள் விசேடத்துவ அறிவுடன் உருவாக்கப்பட்டதன் மூலமாக நிறுவன ரீதியான நிலைமாற்றத்துடன் தொழில்நுட்ப நிலைமாற்றம் ஆதாரப்படுத்தப்பட்டுள்ளது. எமது உற்பத்திகளுக்கும் சேவைகளுக்கும் பெறுமதி சேர்ப்பதற்காகவும் எமது வேலைப்பாய்ச்சலினை ஒழுங்கமைப்பதற்காகவும் ஆவண முகாமைப்படுத்தல் செயன்முறையானது அமுல்படுத்தப்பட்டுள்ளது. உற்பத்தி மற்றும் வங்கிச் சேவை அபிவிருத்திப் பிரிவுடன் சேர்ந்துகொண்ட ஆய்வுப் பிரிவு புதிய உற்பத்திகள் மற்றும் சேவை உருவாக்கத்திற்கு முனைப்பாகப் பங்களிப்பு வழங்கி வருகின்றது. ஊழியர்கள் அவர்களின் உற்பத்தி, சேவை மற்றும் செயன்முறை முன்னேற்றத்திற்காகப் பங்களிப்புக்களை வழங்குமாறு எப்பொழுதும் ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

எமது பணியாளர்களின் திரட்டிய சேவை அனுபவமானது 81,841 வருடங்களாகும். மேலும் 1,336 ஊழியர்கள் 20 வருடங்களுக்கு மேல் வங்கியிலே சேவையாற்றி வருகின்றனர். இது நாம் கொண்டுள்ள மனித மூலதனத்தின் அனுபவச் செழுமையினை எடுத்துக் காட்டுகின்றது. பணியாளர்கள் கொண்டுள்ள அறிவு மற்றும் அவர்கள் பெற்றுள்ள தகைமைகள் என்பவற்றின் அடிப்படையிலேயே அவர்களுக்கு வெகுமதிகள் வழங்கப்படுகின்றன. எமது பணியாளர்கள் அவர்களது கடமைகளை நிறைவேற்றுகையில் பெற்றுக்கொள்ளும் கற்றல் அனுபவங்களின் மூலம் மிகவும் உள்ளார்ந்த அறிவினையும் கட்டியெழுப்புகின்றனர்.

ஆளுகை

வங்கியின் விழுமியங்களும் நெறிகளும் வங்கியின் ஆளுகைக் கட்டமைப்பிலும் அதன் முறைமைகளிலும் செயல்விதிகளிலும் தீர்மானம் வகுத்தலிலும் பிரதிபலிக்கின்றன. நாம் நெறிகளின் உயர் மட்டத்திற்கும் ஆளுகைக்கும் தொழில் நேர்த்திக்கும் கடப்பாடு கொண்டுள்ளதுடன் எமது சகல செயற்பாடுகளுக்கும் நாமே பொறுப்பானவர்கள் எனவும் கருதுகின்றோம். பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதிகளுக்கு நிதியிடல் போன்ற செயற்பாடுகளிலிருந்து தேசத்தினைப் பாதுகாப்பதற்கான தனது பொறுப்புப் பற்றி வங்கி எப்பொழுதுமே பிரக்ஞையுடன் காணப்படுகின்றது. வெவ்வேறு அம்சங்களைக் கையாள்வதற்கான பொறுப்புக்களைக் கொண்டுள்ள குழுக்களினால் ஆதரப்படுத்தப்பட்டுள்ள நிறுவன ரீதியான செயல்விதிகள் இந்தக் கடப்பாட்டினை வலுப்படுத்துகின்றன. எமது வைப்பாளர்களின் நிதிகளைப் பாதுகாப்பவர் என்கின்ற எமது வகிபாத்திரத்துடன் நாம் எமது சகல செயற்பாடுகளிலும் உரிய கவனத்துடன் திகழ வேண்டும். இடர் என்பது வங்கியின் இயக்கங்களின் உள்ளார்ந்த அம்சமாகும். எவ்வாறாயினும் எமது வைப்பாளர்களுக்கு ஏற்படுகின்ற இடரினைக் குறைப்பதற்காக உயர் தொழில்வாண்மை ரீதியான இடர்முகாமைத்துவச் செயல்விதிகளுடன் நாம் தொடர்ந்தும் முயற்சி மேற்கொண்டு வருகின்றோம். உருவாக்கப்படுகின்ற கொள்கைகளும் செயல்விதிகளும் மிகவும் இறுக்கமாக அமுல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்குப் பொறிமுறைகள் அமுலில் உள்ளன. நாம் கொண்டுள்ள மற்றுமொரு பாதுகாப்பு அம்சம் தவறு செய்கின்றவரைக் காட்டிக்கொடுக்கின்ற கொள்கையாகும். இதிலே ஊழியர்களும் ஊழியர் அல்லாதோரும் ஊழல் பற்றிய, மோசடி பற்றிய, இலஞ்சம் பற்றிய மற்றும் பணம் தூய்தாக்கல் பற்றிய அல்லது வேறு ஏதாவது நெறியற்ற அல்லது சட்ட விரோதக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறைப்பாட்டினைத் தெரிவிப்பதற்கு முன்வரலாம்.

இந்தக் கொள்கையானது இரகசியத்தன்மையினை உறுதிப்படுத்துவதுடன் விடயத்தினை எழுப்புகின்ற சகல தரப்பினரதும் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துகின்றது.

பொறுப்பானது தனிப்பட்ட ரீதியாகக் காணப்பட்ட போதிலும் வங்கியானது எப்பொழுதுமே கூட்டுத் தீர்மானம் வகுத்தலினை மேம்படுத்துகின்றது. மேலும் வங்கியின் ஏறக்குறைய சகல தீர்மானங்களும் கூட்டு அடிப்படையிலேயே எடுக்கப்படுகின்றன. ஒரு தனிப்பட்ட நபருக்குத் தீர்மானம் எடுப்பதற்காக வழங்கப்படுகின்ற அதிகாரம் வரையறுக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. எனவே இது பாரிய வெளிப்படைத்தன்மையினை உறுதிப்படுத்துவதுடன் மோசடி அல்லது ஊழலுக்கான வாய்ப்பினையும் குறைக்கின்றது. (மேலதிக விபரங்களுக்கு பக்கம் 68 ஐப் பார்க்கவும்)

எமது நிறுவன ரீதியான கற்றல்

இன்றைய வியாபாரச் சூழலிலே அறிவின் அடிப்படையானது எந்தவொரு நிறுவனத்தினதும் மிக முக்கியமான புலப்படாச் சொத்தாகக் காணப்படுகின்றது. அறிவு என்பது நிறுவனத்தின் கூட்டு அறிவிலும் தனிப்பட்ட பணியாளர்களின் அறிவிலும் தங்கியுள்ளது. வங்கி என்பது ஒரு கற்கின்ற நிறுவனமாகும். மேலும் இது தொடர்ச்சியாகத் தனது நிறுவன ரீதியான கட்டமைப்புகளையும் முறைமைகளையும் செயல்விதிகளையும் கற்றல் அனுபவங்கள் மூலமாக வரையறை செய்து வருகின்றது.

ஊழியர்களின் மட்டத்தில் எமது பணியாளர்களின் அறிவினையும் திறன்களையும் கட்டியெழுப்புவது எமது பிரதான உபாயமார்க்கங்களில் ஒன்றாகும்.

எமது சகல பணியாளர்களும் அவர்களின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு அவர்களுக்குத் தேவையான பயிற்சியினைப் பெற்றுக்கொள்வதை நாம் உறுதிப்படுத்துகின்றோம். எமது பணியாளர்களின் திரட்டிய சேவை அனுபவமானது 81,841 வருடங்களாகும். மேலும் 1,336 ஊழியர்கள் 20 வருடங்களுக்கு மேல் வங்கியிலே சேவையாற்றி வருகின்றனர். இது நாம் கொண்டுள்ள மனித மூலதனத்தின் அனுபவச் செழுமையினை எடுத்துக் காட்டுகின்றது. பணியாளர்கள் கொண்டுள்ள அறிவு மற்றும் அவர்கள் பெற்றுள்ள தகைமைகள் என்பவற்றின் அடிப்படையிலேயே அவர்களுக்கு வெகுமதிகள் வழங்கப்படுகின்றன. எமது பணியாளர்கள் அவர்களது கடமைகளை நிறைவேற்றுகையில் பெற்றுக்கொள்ளும் கற்றல் அனுபவங்களின் மூலம் மிகவும் உள்ளார்ந்த அறிவினையும் கட்டியெழுப்புகின்றனர். காலப்போக்கிலே நிறுவனத்தின் கொள்கைகள், முறைமைகள் மற்றும் செயல்விதிகளை விருத்தி செய்வதற்காக அவர்கள் வழங்குகின்ற பங்களிப்புக்களின் மூலமாக இந்த உள்ளார்ந்த அறிவு நிறுவன ரீதியான அறிவாக நிலைமாற்றப்படும். எனவே கற்றல் செயன்முறையானது பெறுமதி உருவாக்கத்தின் ஒரு வாகனமாக குறுகிய காலத்திலும் மேலும் நீண்ட காலத்திலும் மாறுகின்றது.

அறிவினைப் பரப்புதல்

எமது பெருநிறுவன முகாமைத்துவ உறுப்பினர்களின் அனுபவமானது வங்கிச் சேவைத் துறையின் பல்வேறு பரப்புக்களில் 20 முதல் 38 வருடங்களாகப் பரந்து காணப்படுகின்றது. எனவே அவர்கள் கூட்டாகக் கொண்டுள்ள அறிவு மற்றும் அனுபவத்தின் கலப்பானது அளப்பரியதாகும். உரிய காலத்திலே நிறைவேற்றப்படுகின்ற, நன்கு திட்டமிடப்பட்டுள்ள திறமை முகாமைத்துவச் செயன்முறைகள் மற்றும் பொறுப்புக்களைப் பிரித்து வழங்கும் செயன்முறைகள் மூலம் இந்தப் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் இரண்டாம் வரிசைத் தலைவர்களை உருவாக்குகின்றனர். இந்தச் செயன்முறைகளின் மூலமாக அவர்கள் தமது அறிவினையும் அனுபவத்தினையும் தமக்குக் கீழே உள்ளவர்களுக்குப் பரப்புகின்றனர்.

சகல பணியாளர்களுக்கும் நடத்தப்படுகின்ற ஸ்தலப் பரிசோதனைகள் மூலமாகவும் இலத்திரனியல் கற்றல் தளத்தின் மூலமாக விநியோகிக்கப்படுகின்ற அறிவைப் பகிரும் விரிவுரைக் குறிப்புக்கள் மற்றும் செய்தி மடல்களின் மூலமாகவும் வங்கி அதன் புதிய ஊழியர்களுக்கு அறிவினைப் பரப்பும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளது.

தனிநபர்களிடம் காணப்படுகின்ற அறிவு மற்றும் அனுபவத்தினை நிறுவனமயமாக்குவதற்காக புதிய பெருநிறுவனத் திட்டத்தில் செயற்திறன்மிகு மற்றும் புதுமையான கற்றல் முறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. எமது விழுமியங்கள், கலாசாரம், நெறிகள் மற்றும் நிறுவன ரீதியான அறிவு ஆகியவை எமது வியாபாரச் சின்ன அங்கீகாரத்துடன் கலக்கும்போது அது நிறுவன ரீதியான ஆற்றல் எனும் அடிப்படையில் எம்மைத் தொழிற்துறையிலே மிகவும் முற்பட்ட ஸ்தானத்திலே நிலைநிறுத்தும்.

இலங்கையின் முதற்தர வியாபார சின்னம்



இலங்கையின முதற்தர வியாபாரசின்னம் - இன்ரர்பிராண்ட்ஸ் 2017



குளோபல் மாஸ்டர் பிரேன்ட்ஸ் - சீஎம்ஓ ஆசியா



இலங்கையின் முதற்தர வியாபார சின்னம் - வருடாந்த வியாபார சின்னம் 2017

அதி நேர்த்தியான செயலாற்றுகை



உலகின் முதற்தர 1000 வங்கிகளில் ஒன்று த பாங்கர் மகசின் (யூகே)



இலங்கையின் முன்னணி பங்காளர் வங்கி (டிஎப்பி விருதுகள்) ஆசிய அபிவிருத்தி வங்கி



வருடத்திற்கான மக்கள் சேவை வியாபாரச் சின்னம் எஸ்எல்ஜஎம் - நெல்சன் பீபில்ஸ் விருதுகள் 2017/2018



அரச துறையில் சிறந்த வங்கி (பீஎப்எஸ்அய் விருதுகள்)

ஆண்டறிக்கை விருதுகள்



அரச வங்கி வகைக்கான ஆண்டறிக்கைக்கான இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவன தங்க விருது



விஷன் விருதுகள் (எல்ஏசீபீ) விருதுகள்) சிறந்த உள்ளக அறிக்கை தங்க விருது



விஷன் விருதுகள் (எல்ஏசீபீ) விருதுகள்) சிறந்த வருடாந்த அறிக்கை (துறை) பிளாட்டினம்



ஏஆர்சீ விருதுகள் நிதித் தரவு: வங்கி: சர்வதேச தங்க விருதுகள்



ஏஆர்சீ விருதுகள் பாரம்பரிய வருடாந்த அறிக்கை: வங்கி: தேசிய வெள்ளி விருதுகள்



சிஎம்ஏ சிறந்த ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் - அரசுக்கு உடைமை தொழில் முயற்சிகள் அதி சிறப்புத்தன்மை



SAFA விருது 2016: பொதுத்துறை வங்கியியல் நிறுவனங்களில் 2ஆம் இடம்

மனிதவள விருதுகள்



ஆசியாவின் சிறந்த தொழில் வழங்குனர் வர்த்தகசின்னம் தொழில் வழங்குனர் வர்த்தகசின்னம் விருது இந்தியா



இலங்கையின் சிறந்த தொழில் வழங்குனர் வர்த்தகதாமம் தொழில் வழங்குனர் வர்த்தகசின்னம் விருது இந்தியா



எஸ்எல்அய்டிஏடீ பீபல் டிவலப்மன்ட் விருதுகள் - வெள்ளி

தொழில்நுட்ப முன்னெடுப்புக்கான விருதுகள்







டெக்னோவேஷன் விருதுகள் - உள்ளக வங்கி கொடுக்கல் வாங்கல்கள். எல்லவற்றையும் உள்ளடக்கிய/வாடிக்கையாளருக்கு சௌகரியமான/நிதியியல் உள்ளடங்கலான வெற்றியாளர்

நீடுறுதித்தன்மை/சீஎஸ்ஆர் விருதுகள்



பசுமை வங்கியலுக்கான தங்க விருது கெக்கிராவ கிளைக்கு இலங்கை கிரின் பில்டிங் நிறுவனத்தால் வழங்கப்பட்டது.



இலங்கை வணிகர் சம்மேளனத்தினால் வழங்கப்படுகின்ற அதிசிறந்த கூட்டாண்மை பிரஜை நீடுறுதித்தன்மை விருதுகளில் மூன்றடுக்குப் பாதுகாப்பு பொருளியல் நீடுறுதித்தன்மை (இலாபம்) வெற்றியாளர்



இலங்கை வணிகர் சம்மேளனத்தினால் வழங்கப்பட்ட அதிசிறந்த கூட்டாண்மை பிரஜை நீடுறுதித்தன்மை விருதுகளில் பொருளியல் பங்களிப்பு பிரிவு வெற்றியாளர்



மின்சக்தி மற்றும் மீள்சக்தி அமைச்சினால் வழங்கப்பட்ட மீள்சக்தி ஊக்குவிப்புக்கான "சூர்ய பல சங்ரமய"

பரஸ்பர வெகுமதியளித்தல் தொடர்புமுறைகளை பேணிப் பாதுகாத்தல்





வாடிக்கையாளர்கள்
13 மில்லியன்

கிளைகள் மற்றும் வரையறுக்கப்பட்ட சேவை வழங்கும் கிளைகள்
626



ATM, CDM வலையமைப்பு
932



சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி நிலையங்கள்
15





பிராந்தியக் கடன் நிலையங்கள்
14



வங்கிகளுக்கிடையேயுள்ள உறவுகளின் எண்ணிக்கை
859



பகிர்ந்தளிக்கப்பட்ட நிறுவன சமூகப் பொறுப்பு நிதி
ரூபா **127.5 மில்லியன்**



ஸ்மார்ட் ஜென் கணக்கு வளர்ச்சி
93%



இணைய வங்கியியல் வளர்ச்சி
38%



ரூபா **1.0 ட்ரில்லியன்**
ஐ விட சில்லறைத் துறை வைப்புக்கள் அதிகரித்துள்ளது

"மித்துரு" நுண்கடன் நிகழ்ச்சித்திட்டம் ஊடான நிதி உள்ளடக்கம்

"மித்துரு" குழுக்களின் எண்ணிக்கை
18,250

"மித்துரு" சமூகங்களின் எண்ணிக்கை
444

சமூக மற்றும் உறவு மூலதனம்

முன் எப்போதும் இல்லாத அளவிற்கு இலங்கையின் வங்கித்துறை தற்போது போட்டித்தன்மை மிக்கதாகக் காணப்படுகின்றது. எதிர் பார்க்கின்ற இச்சூழ்நிலையில் வாடிக்கையாளர் சேவைகள் மற்றும் சௌகரியம் போன்றன வாடிக்கையாளர்களுக்கு முக்கிய அம்சங்களாக காணப்படுகின்றன. நாடு முழுவதிலும் உறுதியான நிலையில் 575 கிளை அமைப்புகள் மற்றும் 48 வரையறுக்கப்பட்ட சேவை வழங்கும் கிளைகள் காணப்படுகின்ற நிலையில் இலங்கை வங்கியானது புவியியல் சார்ந்த நிலையிலும் மிகவும் உறுதியாக காணப்படுகின்றது. இதில் சிலவே இவற்றுடன் பொருந்தக் கூடியதாக உள்ளன.

நிறுவன நலனில் அக்கறையுடையவர்கள்


வங்கியில் நிறுவன நலனில் அக்கறையுடையவர்களாக அரசாங்கம், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், முதலீட்டாளர்கள் ஒழுங்கமைப்பாளர்கள், விநியோகத்தர்கள், வங்கி இயங்குகின்ற சமூகம் ஆகியன உள்ளடங்குகின்றன. வங்கியின் வாடிக்கையாளர்கள் இரண்டு பிரதான வகையினராகக் காணப்படுகின்றனர். அவையாவன வைப்பாளர்கள் மற்றும் கடன் பெறுபவர்கள்.

முன் எப்போதும் இல்லாத அளவிற்கு இலங்கையின் வங்கித்துறை தற்போது போட்டித்தன்மை மிக்கதாகக் காணப்படுகின்றது. எதிர்பார்க்கின்ற இச்சூழ்நிலையில் வாடிக்கையாளர் சேவைகள் மற்றும் சௌகரியம் போன்றன வாடிக்கையாளர்களுக்கு முக்கிய அம்சங்களாக காணப்படுகின்றன. நாடு முழுவதிலும் உறுதியான நிலையில் 575 கிளை அமைப்புகள் மற்றும் 48 வரையறுக்கப்பட்ட சேவை வழங்கும் கிளைகள் காணப்படுகின்ற நிலையில் இலங்கை வங்கியானது புவியியல் சார்ந்த நிலையிலும் மிகவும் உறுதியாக காணப்படுகின்றது. இதில் சிலவே இவற்றுடன் பொருந்தக் கூடியதாக உள்ளன. மேலும் இவ்வருடக்காலப்பகுதியில் இரண்டு நடமாடும் கிளைகள் அறிமுகப்படுத்தப்பட்டன, வாடிக்கையாளர்களுக்கு மிகவும் வினைத்திறன் மிக்க சேவைகளை வழங்கும் நோக்குடன் 41 கிளைகள் தரம் உயர்த்தப்பட்டன, மேலும் 86 ATM (தானியங்கு ரெல்லர் இயந்திரம்) மற்றும் 45 CDM (பணம் வைப்பிடும் இயந்திரங்கள்) ஆகியன பொருத்தப்பட்டன. தேசத்தின் வங்கியாளர் என்ற முறையில் எமது நாட்டு மக்களின் சமூக நிலை எத்தகையதாக இருந்த பொழுதிலும் கூட எமது மக்களுக்கு சிறப்பான விடயங்களை வழங்குவதில் நாம் முன்நிலையில் இருக்கிறோம். நகரம் முதல் புறநகர் பிரதேசம் கிராமங்கள் வரை தொழில்நுட்பத்தை முன்னெடுத்துச் செல்வதில் நாம் முன்னணியில் திகழ்கிறோம். இதற்கான சிறந்த உதாரணங்களாக ATM விசேடமாக CDM இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதை குறிப்பிடலாம். இந்த தொழிநுட்பத்தை ஒரு சில பிரதேசங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்துவது எமது நோக்கமோ முயற்சியோ அல்ல. இவற்றை பல இடங்களுக்கு வெற்றிகரமாக நாம் முன்னெடுத்துள்ளோம். எமது வாடிக்கையாளர்களின் மாறுகின்ற தேவைப்பாடுகளை புலப்படுத்துவதாக இது காணப்படுகின்றது. அடிமட்ட மக்கள் மத்தியில் எடுத்துச் சென்றுள்ளதோடு மேம்பட்ட சேவைகள் தொடர்பான அவர்களது கோரிக்கை அடுத்த மட்ட நிதிசார் சேவைகள் ஆகியவற்றை இது வெளிப்படுத்துகின்றது.

2017 ஆம் ஆண்டின் இறுதியில் வங்கி தனது சகல கிளைகளையும் 5S சுற்றாடல் முறைக்கு மாற்றியுள்ளது. 5S சுற்றாடல் முறையின் முக்கிய தூண்களாக வகைப்படுத்தல் (Sort), தொகுத்தல் (Set), பிரகாசித்தல் (Shine), தரப்படுத்தல் (Standardise), நிலை நிறுத்துதல் (Sustain) ஆகியன காணப்படுகின்றன. சிறப்பான ஒழுங்கமைப்பு, செலவைக் குறைக்கின்ற அதேவேளை வேலைத்திறன்களை சிறப்பாக முகாமைத்துவம் செய்தல் ஆகியவற்றை இவை பிரதிநிதித்துவம் செய்கின்றன. இதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துகின்ற பொழுது குறிப்பிட்ட செயன்முறை மேம்படுத்தல் மூலம் வாடிக்கையாளர்கள் நன்மையடைதல் மற்றும் கணக்குகளை ஆரம்பித்தல் மற்றும் கடன் விண்ணப்பங்களை செயன்முறைப்படுத்தல் ஆகியவற்றிற்கான காலப்பகுதி குறைவடையலாம்.

கருமபீட சேவைகளுக்காக எடுத்த நேரம்


(நிமிடங்கள்)



A சேமிப்பு கணக்குகளை திறத்தல்
B கால வைப்புக்களை திறத்தல்
C பண வைப்புகள்/மீளப்பெறுதல்
D அடகுபிடித்தல்
E பணம் சார் வசதிகள்

ஏனைய வங்கிச் செயற்பாடுகள்

(நாட்கள்)



வாடிக்கையாளர்களுடனான ஈடுபாடு

பல்வேறு விதமான வழிமுறைகள் மூலம் தற்போதைய மற்றும் எதிர்கால வாடிக்கையாளர்களுடன் ஈடுபாடுகளை இலங்கை வங்கி மேற்கொள்கிறது:

கிளை வலையமைப்பு

விரிவான கிளை வலையமைப்பு மூலம் இலங்கை வங்கியானது நேரடியாக வாடிக்கையாளர்களுடன் தொடர்புகளை மேற்கொள்கிறது. சாதாரண சேமிப்பு கணக்குகள் முதல் தொழில்நுட்பத்தாலணைந்த உற்பத்திகள் வரை இலங்கை வங்கியானது இலங்கை வங்கியின் பூரணத்துவமிக்க உற்பத்திகள் மற்றும் தனது பல்வேறு வகையான வாடிக்கையாளர்களின் மாறுபட்ட தேவைகளை நிறைவு செய்கிறது.

இலங்கை வங்கி இணையத்தளம்

வாடிக்கையாளர்களுக்கு மிகவும் பயன்தரக்கூடிய தகவல்களை இலங்கை வங்கி இணையத்தளம் வழங்குகின்றது. தமக்கு மிகவும் சௌகரியமான வங்கிக் கிளை எது என்பதை வாடிக்கையாளர் மிகவும் இலகுவாக கண்டறிய முடியும். .சில்லறை வாடிக்கையாளர்கள் தாம் பெற்றுக்கொள்ளக்கூடிய மாறுபட்ட சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் தொடர்பான தகவல்களை இலகுவாக பெற்றுக்கொள்ளமுடியும் உதாரணமாக:- சேமிப்பு கணக்குகள், சிறு தொழில் முயற்சியாளர்கள் மற்றும், சிறிய மற்றும் நடுத்தர வணிக முயற்சிகள் (SME) ஆகியோர் தொடர்பிலான பல்வேறு விதமான கடன் திட்டங்கள் பல்வேறு துறைகளை மையமாகக் கொண்டு விளக்கமாக விபரிக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு நாணய விகிதம், கடன் அட்டை, வரவு அட்டை மேம்பாடுகள், கடன் கணக்கிடல் போன்ற பயன்மிக்க பல்வேறு விதமான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும். இணைய வசதி (Apply Online) மூலம் தனிப்பட்ட கடன்கள் மற்றும் வீட்டுக்கடன்கள் ஆகியவற்றிற்கு வாடிக்கையாளர்கள் விண்ணப்பிக்க முடியும். வாடிக்கையாளர் ஈடுபாட்டினை மேம்படுத்துவதற்கான சிறந்த வழிமுறையாக இந்த இணையத்தளம் திகழ்கிறது.

சமூக வலைத்தளம்

முகநூல், twitter, linkedln, you tube உள்ளடங்கலாக பல்வேறு விதமான சமூக வலைத்தளங்களில் இலங்கை வங்கி காணப்படுகின்றது. இத்தகைய சமூக வலைத்தளங்கள் மூலமாக வங்கியானது தனது வாடிக்கையாளர்களை இலகுவாக சென்றடைய முடியும் அத்தோடு தற்சமயம் அவர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகள் மேலதிக தகவல்கள் ஆகியவற்றையும் இலகுவாக பெற்றுக்கொள்ளமுடியும். மேலும் இத்தகைய சமூக வலைத்தளங்களை பயன்படுத்தி வங்கி பற்றிய வாடிக்கையாளர்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்க முடியும்.

அழைப்பு நிலையம்

உள்வருகை மற்றும் வெளிச்செல்லுகை தொடர்பாடல் தொடர்பில் செயற்படுத்துகின்ற ஒரு மைய நிலையமாக அழைப்பு நிலையம் செயற்படுகின்றது. சேவைகள் மற்றும் உற்பத்திகள் தொடர்பாக வாடிக்கையாளர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு இது பதிலளிக்கின்றது. இந்த அழைப்பு நிலையமானது 24 மணித்தியாலமும் செயற்படுகின்றது.

குறுஞ்செய்தி வங்கியியல்

குறுஞ்செய்தி வங்கி சந்தைப்படுத்தல் தொடர்பான தகவல்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் முகமாக இது பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக விசேட வாடிக்கையாளர் குழுக்களாக இலக்கிடப்பட்டவர்களுக்காக இது மேற்கொள்ளப்படுகிறது. வாடிக்கையாளர்களது கணக்குகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல் பற்றி உடனடியான இற்றைப்படுத்தல்களை அவர்களுக்கு வழங்குவதுடன் செலுத்தவேண்டிய கடன்தொகை பற்றியும் நினைவூட்டுகின்றது.

விளம்பரங்கள்

வங்கியின் உற்பத்திகள் மற்றும் சேவைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக பல்வேறு விதமான விளம்பர உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு அறிவித்தல், வியாபார குறிக்காணும் நிலை, வியாபார குறி தொடர்பான வழியூட்டல்கள் ஆகியன மேம்படுத்தப்படுகின்றன.

உண்மை, நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் தனது வாடிக்கையாளர்களுடன் பரஸ்பர நன்மையளிக்கக்கூடிய, நீண்ட கால ஸ்த்திரத்தன்மைமிக்க தொடர்பு முறைகளை கட்டியெழுப்பி அவற்றை பேணுவதே வங்கியின் இலக்காகும்.

எமது தடம்

சில்லறை வாடிக்கையாளர் தொடர்புப் புள்ளிகள்



வடமத்திய மாகாணம்
49 02 65 15 01 02

வட மாகாணம்
63 05 51 09 01 01

கிழக்கு மாகாணம்
55 03 42 06 01 01

வடமேல் மாகாணம்
57 02 76 18 02 02 01

மத்திய மாகாணம்
67 04 82 15 02 01

மேல் மாகாணம்
125 12 230 58 01 03 01

ஊவா மாகாணம்
39 02 52 12 02 01

சப்ரகமுவ மாகாணம்
49 02 62 12 02 01

தென் மாகாணம்
64 03 81 20 03 02

பெருநிறுவனம் மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர் தொடர்புப் புள்ளிகள்


தொகுதிக் கிளைகள்	5	13	17	3
முதன்மை வங்கியியல்	1	–	1	–
வெளிநாட்டு கிளைகள்	3	–	4	–
FCBU	1	–	–	–
நடமாடும் பிரிவு	–	–	1	–

மொத்த வாடிக்கையாளர் தொடர்புப் புள்ளிகள்

கிளைகள்	மட்டுப்படுத்தப்பட்ட சேவை கிளைகள்	நடமாடும் கிளைகள்	ATMs	CDMs	SME நிலையங்கள்	பிராந்திய கடன் நிலையங்கள்
578	48	2	764	168	15	14

செயற்பாட்டு பிரதேசங்கள்


வங்கி மூன்று பிரதான விடயங்களை மையமாகக் கொண்டு தொழிற்படுகின்றது. அவையாவன:- சில்லறை, வங்கி முறைமை, கூட்டாண்மை மற்றும் கரைகடந்த வங்கி முறைமை மற்றும் சர்வதேசம், திறைசேரி மற்றும் முதலீடு.




சில்லறை வங்கி முறைமை

மரபுரீதியாக நோக்குகையில் வங்கியானது சில்லறை வங்கித்துறையை சார்ந்ததாகவே நோக்கப்படுகின்றது. மற்றும் இது பரந்த வாடிக்கையாளர் தளத்தை உள்ளடக்கியதாகவும், பாரிய பெருநிறுவனங்கள் முதல் சிறிய தொழிற்துறை வரையிலும் கிராமிய நகரங்களில் வாழ்கின்ற மக்களை வாடிக்கையாளர்களாகவும் கொண்டு திகழ்கின்றது. இத்துறை மூலமாக வழங்கப்படுகின்ற சேவைகள் ஆனது சேமிப்பு, உற்பத்திகள் கால வைப்புகள், நடைமுறைக் கணக்குகள், தனியாள் கடன்கள், வீடமைப்பு கடன்கள், வியாபார ரீதியான கடன்கள், அபிவிருத்திக் கடன்கள், நுண் கடன்கள், அடகுபிடித்தல், குத்தகைக்கு விடல் மற்றும் கடன் அட்டைகள் போன்றவையாகும். சில்லறை துறை ஆனது கிராமிய மக்களின் வாழ்க்கையில் அனைத்து கட்டங்களுக்கும் உகந்ததாக காணப்படுகின்றது. எமது சேமிப்பு முறைகள் ஆனது இளைஞர்கள், பெண்கள், சிறுவர்கள், சிரேஷ்ட பிரஜைகள் ஆகியோரின் நலன் கருதி செயற்படுகின்றது. இத்தகையவர்கள் திருப்திகரமான வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை கருத்திற் கொண்டும் இவர்களது பாதிப்புறும் தன்மையை கருத்திற்கொண்டும் சேமிப்பில் ஈடுபடுகின்ற இத்தகையவர்களுக்கு விசேட வட்டிகளை நாம் வழங்கி வருகின்றோம். 40 வீதமான கடன்கள் சில்லறை வங்கித்துறையை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றது. இலங்கை வங்கிக்கு உபாய ரீதியில் இது ஒரு முக்கியத்துவம் மிக்க விடயமாகும். சில்லறைத் துறையின் பங்களிப்பானது வங்கியின் வரிக்கு முன்னரான இலாபத்தில் 55 வீதமாகும்.

சில்லறைக் கடன் திரட்டு ஆக்கவமைவு




மாகாண ரீதியிலான வைப்புப் பரம்பல்




கடன் அட்டைகள் மற்றும் ATM அட்டைகள்

இலங்கையில் 6,000 இற்கு மேற்பட்ட நிறுவனங்களும் அதேவேளை உலகரீதியாக 20 மில்லியனுக்கு அதிகமான வியாபாரிகளும் இலங்கை வங்கியின் கடன் அட்டைகளை ஏற்றுக்கொள்கின்றனர். அதே போல் ATM அட்டைகளையும் இரட்டைப் பாவனை கொண்ட எமது வரவு அட்டைகளையும் இத்தகைய நிறுவனங்கள் ஏற்றுக்கொள்கின்றன. புத்திசாதூர்யமிக்க முறையில் பணத்தை செலவழிப்பதற்கு இது உதவுகின்றது. 2017 ஆம் ஆண்டில் மொத்தமாக 15,684 கடன் அட்டைகளும், 883,939 வரவு அட்டைகளும் விநியோகிக்கப்பட்டன. இக்காலப்பகுதியில் மொத்தக் கடன் அட்டைகள் மற்றும் வரவு அட்டைகள் ஆகியவற்றின் எண்ணிக்கையிலேற்பட்ட அதிகரிப்பு முறையே 12 வீதம் மற்றும் 18 வீதம் ஆகும்.


வரவு அட்டைக் கொடுக்கல் வாங்கல்களின் அளவு



கடனட்டைக் கொடுக்கல் வாங்கல்களின் அளவு



மாகாண ரீதியான கடன்கள்



வருட காலப்பகுதிற்கான உபாயரீதியான முன்னுரிமைகள்

வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்துவது தொடர்பில் இலங்கை வங்கி மிகுந்த அக்கறை செலுத்தியதோடு வாடிக்கையாளர்களது வங்கி சார்ந்த அனுபவங்களை சௌகரியமாக வழங்குவதற்கு எத்தகைய சிரமங்களுமின்றி மேற்கொள்வதை இலக்காக கொண்டு செயற்பட்டது. இதனை கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்பட்ட எண்கணிம (டிஜிட்டல்) வங்கி முறையானது கவனத்தைப் பெற்றது. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் தமது வைப்புகள் மற்றும் பணம் மீளப்பெறுகை தொடர்பான குறுஞ்செய்தி விழிப்புகளை (Sms alerts) பெற்றுக்கொள்வதற்காக 290,221 வாடிக்கையாளர்கள் தம்மை பதிவு செய்துக் கொண்டனர். ATM இயந்திரம் மூலமான கொடுக்கல் வாங்கல் தொடர்பில் மாத்திரம் ஒரு நாளைக்கு 5,000 குறுஞ்செய்திகளை அனுப்பி வைக்கின்றது. நாடெங்கிலும் நிறுவப்பட்டுள்ள 168 CDM (பண வைப்பு இயந்திரம்) மூலம் ஒரு நாளைக்கு சுமார் 27,047 வைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் குறிப்பிட்ட வருட காலத்தின் பொழுது சுமார் இலங்கை ரூபாய் 265 பில்லியன் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன. E statements (E கூற்று) கொடுக்கல் வாங்கல்களுக்காக தம்மை பதிவு செய்த 135,540 வாடிக்கையாளர்களுள் 2017 ஆம் ஆண்டில் பதிவு செய்தவர்கள் 40 வீதம் ஆகும். மேலும் இவ்வருட காலப்பகுதியினுள் வாடிக்கையாளர் முறைப்பாடுகளை கையாளுகின்ற கொள்கை மேலும் வலுப்படுத்தப்பட்டது. சகல வாடிக்கையாளர்களது முறைபாடுகளையும் மத்திய முறையொன்றின் மூலம் கையாளும் முகமாக வாடிக்கையாளர் அனுபவ முகாமைத்துவ பிரிவு தாபிக்கப்பட்டது. முன்னோக்கிச் செல்கின்ற பயணத்தின் பொழுது வங்கியின் பெருநிறுவன திட்டமானது சேவை பராமரிப்பு, வாடிக்கையாளர் புலப்பாடு, தொழில்நுட்பம், இணைய பாதுகாப்பு ஆகியவற்றை மிலேனிய வாடிக்கையாளர் தேவைகளை நிறைவு செய்யும் முகமாக மிகுந்த அக்கறையுடன் வங்கி செயற்பட்டது.

டிஜிட்டல் இயக்கி

குறிப்பிட்ட வருட காலபகுதியின் பொழுது 1,435 வியாபாரிகள் மேலதிகமாக இணைந்து கொண்டனர். இதன் காரணமாக மொத்த வியாபாரிகளின் எண்ணிக்கை 4,216

ஸ்மார்ட் பாஸ் புக் இற்காக தம்மை பதிவு செய்துக் கொண்ட வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 41,567.

இணைய வங்கிக்காக பதிவு செய்துக் கொண்ட வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 247,635 மற்றும் குறிப்பிட்ட வருட கால பகுதியில் பதிவு செய்து கொண்டவர்கள் 68,887 (38 வீத வளர்ச்சி)

E கூற்றுக்களை பெற்றுக்கொள்வதற்காக தம்மை பதிவு செய்துக் கொண்ட வாடிக்கையாளர்கள்:- மொத்தம் 135,540, வருட கால பகுதியின் பொழுது 54,302 (67 வீத வளர்ச்சி)

ஸ்மார்ட் ஜென் கணக்குகள் வளர்ச்சி:-

2017 ஆம் ஆண்டின் இறுதியில் ஸ்மார்ட் ஜென் கணக்குகளுக்காக தம்மை பதிவு செய்துக் கொண்ட வாடிக்கையாளர்களின் மொத்த எண்ணிக்கை 196,343. இவ்வருட காலப்பகுதியில் மாத்திரம் 94,640 நபர்கள் தம்மை பதிவு செய்துக்கொண்டனர். (93 வீத வளர்ச்சி)

வாடிக்கையாளர்களது சௌகரியத்தை கருத்திற்கொண்டு 2017 ஆம் ஆண்டில் புதிய வாய்ப்புகள்

B app

வாடிக்கையாளர்கள் தமது அன்றாட கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவம் செய்வது தொடர்பில் பல்வேறு விதமான நலன்களை வழங்கக்கூடியதாக B app தொலைபேசி app திகழ்கிறது. இந்த app மூலமாக வாடிக்கையாளர் ஒருவர் 24 மணித்தியாளங்களும் தனது எல்லாக் கணக்குகளையும் செயற்படுத்த முடியும்.

பல் நாணய முற்கொடுப்பனவு பயண அட்டை



பல் நாணய முற்கொடுப்பனவு பயண அட்டையானது வெளிநாட்டுப் பயணத்தின் போது நாணயத் தாள்களை காவிச்செல்லும் அசௌகரியங்களிலிருந்து விடுதலையளிக்கின்றது.

ஸ்மாட் நிலையான வைப்பு

பற்றுச்சீட்டற்ற நிலையான வைப்பு

இலங்கை வங்கி ஸ்மார்ட் வங்கிப் புத்தகம் அறிமுகம்



இது ஒரு தொலைபேசி app ஆகும். இதன் மூலம் சம நேர கணக்கு கொடுக்கல் வாங்கல்கள், கணக்கு மிகுதி, இறுதி 15 கொடுக்கல் வாங்கல்கள், கடந்த மாத கூற்றுகள் போன்றவற்றை பார்வையிடமுடியும்.

நடைமுறைப்படுத்தப்படும் பட்டியல் கட்டண வசதிகள்



இந்த கட்டண செலுத்துதல் வசதிகள் மூலம் வாடிக்கையாளர்கள் தமது கட்டணங்களை 24 மணித்தியாளமும் செலுத்த முடியும். இதன் மூலமாக கரும பீடங்களில் வரிசையில் நின்று கட்டணங்களை செலுத்த வேண்டிய அவசியம் இல்லை.

கீழ்க் காணும் வியாபார நடைமுறைகள் சகல வங்கிக் கிளைகளிலும் தான் இயங்கு முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன:

- தனிப்பட்ட கடன் சார்ந்தவைகள் வீட்டுக்கடன் சார்ந்தவைகள், வியாபார கடன் சார்ந்தவைகள், CASA ஆரம்பம், பணம் அனுப்பல் தொடர்பான செயன்முறைகள், முறைப்பாடுகளை கையாளுதல், வாடிக்கையாளர் தொடர்புகள்.
- Digital வங்கி முறைக்கு கவனம் செலுத்தப்பட்டதன் காரணமாக 2017 ஆம் ஆண்டில் குறிப்பிடக்கூடிய அளவு வாடிக்கையாளர்கள் E வங்கிச் சேவையை பயன்படுத்த ஆரம்பித்தனர். "பசுமை வங்கி" (Green Banking) என்ற விடயத்திற்கு கவனம் செலுத்துவதன் ஓர் அங்கமாக வங்கி மேற்கொண்ட முன்னெடுப்புகளுள் இதுவும் ஒன்றாகும்.

நிதி சார்ந்த உதவிகளை மேம்படுத்தல்

சிறிய மற்றும் நடுத்தர வணிக முயற்சிகள் (SME) பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் முதுகெலும்பாக கருதப்படுகின்றன. குறிப்பிட்ட வருட காலப்பகுதியின் பொழுது இலங்கை வங்கியின் சிறிய மற்றும் நடுத்தர வணிக முயற்சிகள் சார்ந்த விடயங்களுக்கு நாடெங்கிலும் சுமார் 60 பில்லியன் இலங்கை ரூபாய் வழங்கப்பட்டுள்ளன. மாறுப்பட்ட பொருளாதாரத்துறைகள் அதன் தேவைகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு எம்மிடம் மாறுப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர வணிக முயற்சிகள் சார்ந்த உதவிகள் வழங்கப்படுகின்றன. விவசாயம், பாற்பண்ணை, மீன் பிடித்துறை, பெருந்தோட்டப்பயிர்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக எமது கடன் திட்டங்கள் காணப்படுகின்றன. அதேபோல் புதுபிக்கக்கூடிய சக்தி தொடர்பிலும் கடன் உதவிகள் வழங்கப்படுகின்றன. எமது நுண்கடன் திட்டங்கள் ஆனது அடிமட்டத்தில் உள்ள சிறிய அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு உதவிகளை வழங்குகின்றது. மேலும் நுண்கடன் SME துறையை சார்ந்தவர்களுக்கான ஆரம்ப முதலீடு மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல் ஆகியவற்றிற்கு அவசியமான கடன் வசதிகளை நாம் வழங்குகின்றோம். வடகிழக்கில் வாழ்கின்ற மக்கள் இத்துறைகளில் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாக விசேட திட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

இத்தகைய நிதி சார்ந்த உதவிகளை வங்கியானது சேமிப்புக் கணக்கு திட்டங்கள் SME நுண்கடன் சார்ந்த தொழில் முயற்சிகள் ஆகியவற்றின் மூலமாக வழங்குகின்றது. நிதிரீதியான உதவிகள் மற்றும் கல்வித்துறை ஆகியன சார்ந்தவற்றில் மேம்படுத்துவது தொடர்பில் எமக்கான சமூக பொறுப்பின் ஓர் அங்கமாக இவை காணப்படுகின்றன.

வருட காலப்பகுதியினுள் பதிவு செய்யப்பட்ட "மித்துரு சமூகம்" தொடர்பான தொகுப்பு:

மாகாணம்	கிளை	பதிவு செய்யப்பட்ட மித்துரு சமூகங்களை எண்ணிக்கை
கிழக்கு மாகாணம்	முல்லிப்பொத்தான	1
	களவாஞ்சிக்குடி	1
	செங்கலடி	1
உப கூட்டல்		**3**
வடமத்திய மாகாணம்	நொச்சியாகம	1
	பக்கமூனா	1
உப கூட்டல்		**2**
வட மாகாணம்	காங்கேசன்துறை	1
உப கூட்டல்		**1**
ஊவா மாகாணம்	லுணுவத்த	3
	ஊவா பரணகம	1
உப கூட்டல்		**4**
மொத்தக்கூட்டல்		**10**

வங்கி நிதி மூலமாக மித்துரு நுண்கடன் நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நிகழ்சிற்கென வருடத்தின் பொழுது இலங்கை ரூபாய் 237.2 மில்லியனை வங்கி பகிர்ந்தளித்துள்ளது மற்றும் 277 மித்துரு குழுக்கள் மற்றும் 10 மித்துரு சமூகங்கள் ஆகியன உருவாக்கப்பட்டன. வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்ட "மித்துரு" சந்தை மூலம் தமது உற்பத்திப் பொருட்களை தொழில் முயற்சியாளர்கள் விற்பனை செய்வதற்கான உதவிகளை வங்கி வழங்கியது. 2017 டிசம்பர் 31 உடன் முடிவடைந்த ஆண்டில் 18,250 "மித்துரு" குழுக்களும் மற்றும் 444 மித்துரு சமூகங்களும் தம்மை பதிவு செய்துக் கொண்டன. வருட காலப்பகுதியின் பொழுது வங்கியினால் செயற்படுத்தப்பட்ட நுண்கடன் திட்டங்களுள் பின்வருவனவும் உள்ளடங்குகின்றன. இந்த வகையின் கீழ் வருட காலப்பகுதியின் பொழுது மொத்தமாக பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியின் அளவு இலங்கை ரூபாய் 287.3 மில்லியன் ஆகும்.

1. தேசிய விவசாய வியாபாரம் சார்ந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (NADEP) - வருடக்காலப் பகுதியின் பொழுது 151 புதிய வசதிகள்.
2. தருணகிரிய - வருடக்காலப்பகுதியின் பொழுது 390 புதிய வசதிகள்.
3. 4P's Module இன்கீழ் வெளிநிலை விவசாயிகள் திட்டத்தின் கீழ் (Out Grower farmers) - வருடத்தின் பொழுது 2,311 புதிய வசதிகள்.

விசேட பணியாளர் பயிற்சிகள் மத்திய, வடமத்திய, வட மேல், வட மாகாணம், மேல் மாகாணம், மேல்மாகாணத்தின் வட பகுதி ஆகியவற்றில் SME கருத்திட்டம் சார்ந்த கடன் வழங்களை மதிப்பீடு செய்து துரிதப்படுத்தும் முகமாக குறிப்பிட்ட வருடக்காலத்தில் பொழுது மேற்கொள்ளப்பட்டன.

வறுமையை இல்லாதொழித்தல்



சமூக கட்டமைப்பில் அடி மட்டத்தில் வாழ்கின்ற மக்களுக்கு கடன் மற்றும் ஏனைய நிதி சார்ந்த உதவிகளை வழங்குவதன் மூலம் இத்தகைய சமூக நலன் சார்ந்த விடயங்களுக்கு வங்கியும் பங்களிப்புச் செய்ய முடியும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வங்கியின் "மித்துரு" நுண்கடன் நிகழ்ச்சித்திட்டமானது அடி மட்டத்தில் வாழ்கின்ற தொழில் முயற்சியாளர்களுக்கு அவசியமான நிதி சார்ந்த உதவிகளை வழங்கி வருகின்றது. அத்தோடு அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை விற்பனை செய்வதற்கான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுகின்றது.

- **மித்துரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மொத்தமாக விநியோகிக்கப்பட்டத் தொகை - இலங்கை ரூபாய் 237.2 மில்லியன்.**
- **277 புதிய "மித்துரு" குழுக்கள் உருவாக்கப்பட்டன.**

சமூகத்தில் உள்ள சமத்துவமற்ற தன்மையை குறைத்தல்



சமுதாயத்தில் உள்ள பாதிப்புறும் நிலையில் வாழ்கின்ற சமூக குழுக்களை வங்கி இனங்கண்டுள்ளது. சமூகத்தில் வருமான ரீதியாக காணப்படுகின்ற வேற்றுமைகளை அகற்றி அவர்களுக்கு உதவும் முகமாக வங்கியானது அர்பணிப்பு மிக்க நிதிரீதியான உதவிகளை வழங்கி வருகின்றது. இவற்றுள் வயது, பால், பால்நிலை, சமூக அந்தஸ்து சார்ந்த விடயங்களும் உள்ளடங்கும்.

- **"தருணதிரிய" விசேட அபிவிருத்தி கடன் திட்டமானது இளைஞர்களை மையமாக கொண்டுள்ளது. - இதற்கென இலங்கை ரூபாய் 99 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.**
- **"KRG" 18+ கணக்குகளுக்கென விசேட வட்டி வீதம் வழங்கப்படுகின்றது. இதனை பெண்களும், இளைஞர்களும் பெற்றுக் கொள்ளமுடியும்.**

பசியை போக்குதல்



இவ் இலக்கு சார்ந்த எமது பிரதான பங்களிப்பான விவசாய துறைக்கு வழங்கப்படுகின்ற கடன்கள் உள்ளடங்குகின்றன. இதன் மூலம் விவசாயிகளும், சாதாரண மக்களும் பெற்றுக்கொள்ளக்கூடிய விலைக்கு உணவை உற்பத்தி செய்து விநியோகிக்க முடியும். வருட காலத்தின் பொழுது விவசாயம் மற்றும் விலங்கு வேளாண்மை சார்ந்த எமது பண வழங்கல்கள் ஆனது இலங்கை ரூபாய் 2.8 பில்லியன் ஆகும்.

- **விவசாயம் மற்றும் மீன்பிடித்துறை சார்ந்த நிதியிடல்கள் இலங்கை ரூபாய் 91.2 பில்லியன்**
- **"ரண் அஸ்வனு", "கெவி நவோத" அபிவிருத்திக் கடன் சார்ந்த வங்கியின் சந்தைக் பங்குகள் முறையே 40%, 61% ஆகும்.**

சில்லறை சார் வியாபார முன்னேற்றங்கள்

வீட்டுக்கடன்கள்

இன்று பல குடும்பங்கள் எந்த சமூக அந்தஸ்த்தில் வாழ்ந்த பொழுதிலும் கூட எத்தகைய இடங்களில் வசித்து வந்த பொழுதிலும் கூட தமக்கென சொந்தமாக வீடொன்றைக் கொண்டிருப்பதே அவர்களது கனவாக காணப்படுகின்றது. இத்தகைய மக்களது அபிலாஷைகளை நிறைவேற்றும் முகமாக இலங்கை வங்கியானது பல்வேறு விதமான கடன்களை நியாயபூர்வமான வட்டி வீதத்திலும் அவர்களினால் செலுத்தக்கூடிய சாதகமான காலப்பகுதியை கருத்திற் கொண்டும் வழங்குகின்றது. இத்தகைய வீடமைப்பு கடன்கள் ஆனது வியாபார அபிவிருத்தி நிறைவேற்று பணியாளர்கள் மற்றும் வெளிநிலையை மையமாகக் கொண்ட விற்பனை செயற்பணியினர் மற்றும் வங்கிப் பணியாளர்கள் ஆகியோரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய வீட்டுக் கடன்களை தற்சமயம் இணையம் மூலமாகவும் விண்ணப்பிக்க முடியும். வாடிக்கையாளர்கள் தமது விண்ணப்பப்படிவங்களுக்கு 14 வேலை நாட்களில் ஒப்புதலை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் இரண்டு முறை வங்கிக்கு விஜயம் செய்தல் வேண்டும்.

இலங்கை வங்கியின் வீடமைப்பு கடன் திட்டங்கள் ஆனது பல்வேறு வகையான கடன் திட்டங்களை உள்ளடக்கியுள்ளது. அவற்றுள் "ரன் நிவச", "சிறிமெதுர", அரசாங்க வீடமைப்புக் கடன் திட்டங்கள், விசேட வீடமைப்பு பல்கலைகழக பணியாட்கள் மற்றும் அரசாங்க வீடமைப்புக் கடன்கள், பல்கலைகழக பணியாட்கள் மற்றும் புனர்வாழ்வளிக்கப்பட்ட நபர்கள் ஆகியோருக்கான விசேட வீடமைப்பு கடன் திட்டம், சொத்துக்கள் மற்றும் கைத்தொழில் துறை அதிகார அமைப்பு (REPPIA) ஆகியன உள்ளடங்கும். 1,000 சதுர அடியிலும் குறைந்த பகுதியாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை முழுமைப்படுத்தும் முகமாக இலங்கை நிதிஅமைச்சின் வழிகாட்டலின் கீழ் அறிமுகப்படுபத்தப்பட்ட "சுந்துரு பியச" என்ற கடன் திட்டத்திற்கும் இலங்கை வங்கி பாரிய பங்களிப்புக்களை நல்கியுள்ளது. இக்கடன் திட்டத்தில் இலங்கை வங்கியின் சந்தை பங்கு ஆனது சுமார் 80 வீதமாகும்.

வருடத்தின் பொழுது வீட்டுக்கடன் திட்டமானது குறிப்பிடக்கூடிய அளவு 17 வீத வளர்ச்சியை பெற்றுள்ளது.

தனிப்பட்ட கடன்கள்

சில்லறை சார் கடன் வழங்கல் திட்டத்தில் தனிப்பட்ட கடன்கள் ஆனது தற்சமயம் 36 வீதத்தை உள்ளடக்கியுள்ளன. இக்கடனை இணையம் மூலமாகவும் விணணப்பித்து பெற்றுக்கொள்ள முடியும். வங்கியுடன் சேமிப்புக் கணக்குகளை அல்லது நடைமுறைக்கணக்குகளை சிறப்பாக பேணுகின்றவர்கள் இத்தகைய கடனுக்கு விண்ணப்பித்து கடனைப் பெற்றுக்கொள்ள முடியும். தனிப்பட்ட கடன்களை பொருத்தவரையில் தேவையான ஆவணங்கள் எளிமைப்படுத்தப்பட்டதாக காணப்படுகின்றன. இத்தகைய தனிப்பட்டக் கடன்கள் பல்வேறு விதமான தேவைகளுக்காக வழங்கப்படுகின்றன. அவையாவன வீடுகளை புனரமைத்தல், கல்லூரி கட்டணங்கள், திருமணம் சார்ந்த செலவுகள், விடுமுறை சுற்றுப்பயணம், எதிர்பாராத செலவுகள், வாடிக்கையாளர்களுக்கு அவசியமான பொருட்களை கொள்வனவு செய்தல் போன்றனவாகும்.

சொத்துக்களின் தன்மையை பேணுதல்


எமது 52 வீத சில்லறை சொத்துக்கள் ஆனது கடன்கள் மற்றும் பெருகைகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. வங்கியின் இலாபம் மற்றும் பொருளாதார ஸ்த்திரத்தன்மை ஆகியவற்றிற்கு இதன் தன்மை முக்கியமாகும். அறிவார்ந்த கடன் மதிப்பீடுகள் மற்றும் வழங்கியமைக்கு பின்னரான பின்னூட்டல்கள் ஆகியவற்றை சிறப்பாக மேற்கொண்டதன் நிமித்தம் வங்கியானது 2017 டிசம்பர் 31 வரையில் மீளச்செலுத்தப்படாத கடன் விகிதத்தை 3.1 ஆக பேணியது. சில்லறை வியாபாரத் துறையை பொருத்தவரையில் 2016 ஆம் ஆண்டு இறுதியில் இது 3.4 வீதம் ஆகும். வருட காலத்தின் பொழுது எதிர்பார்த்த மட்டத்தை விட குறைவாகவே பொருளாதார ரீதியான செயலாற்றுகைகள் காணப்பட்டன. நாட்டின் வடபுலத்தில் காணப்பட்ட வரட்சியின் காரணமாக விவசாய துறை கடுமையாக பாதிக்கப்பட்டது. இது வங்கியையும் தாக்கக்கூடியதாக இருந்தது. வங்கியினால் உருவாக்கப்பட்ட வெற்றிகரமான கடன் முகாமைத்துவ கொள்கைகளானது சில்லறைத் துறையை பொருத்தவரையில் மீள செலுத்தப்படாத கடன்கள் தொடர்பில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்தியது.

வைப்புகள்

சில்லறை துறைச் சார்ந்த மொத்த வைப்புகள் ஆனது 2017 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கை ரூபாய் 1.0 டிரில்லியனை விட அதிகமாக காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் இது இலங்கை ரூபாய் 878.4 பில்லியன் ஆகும். கிளைகள் தொடர்பான பரந்த வலையமைப்பு மற்றும் சமூக கட்டமைப்பில் அடிமட்டத்தில் வாழ்கின்ற மக்களையும் உள்ளடக்கியமை ஆகியவற்றை கருத்திற்கொண்டு நோக்குகையில் எமது வைப்பு ரீதியான செயற்பாடுகளை விரிவாக்கக்கூடியதாக இருந்தது. வங்கிக்கிளைகளை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட எமது செயற்பாடுகளின் காரணமாக பின்தங்கிய தொலை தூரங்களில் வசிக்கின்ற மக்களும் கூட மரபு ரீதியான செயன்முறைகள் அப்பிரதேசத்தில் காணப்படாத பொழுதிலும் கூட நவீன முறைகளின் அடிப்படையில் வங்கிச்செயற்பாடுகளை இலகுவாக பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

வருட இறுதியின் பொழுது CASA விகிதமானது 37 வீதம் ஆகும். இது உண்மையான தொழிற்துறை அடிப்படையில் கூடியது. தற்சமயம் அதிகமாக காணப்படுகின்ற வட்டி வீதமே இதற்கான காரணமாகும். இதற்கு எதிராக செயற்படும் முகமாக வங்கியானது குறைவான செலவு நிதிகளை கவரும் முகமாக விசேட ஊக்குவிப்பு பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டது.

சில்லறை வைப்புகள்




விசேட கணக்கு அணித்திரட்டல் பிரச்சாரங்கள்

வருட காலத்தின் பொழுது பல்வேறு விதமான பிரச்சாரப் பணிகள் மெற்கொள்ளப்பட்டன. விசேடமாக சிரேஷ்ட பிரஜைகளுக்கான கணக்குகள், சிறுவர்களுக்கான கணக்குகள் ஆகியவற்றை அணித்திரட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் சில கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

- முதலாம் ஆண்டில் சேர்கின்ற மாணவர்களுக்கான ரண் கெக்குலு சிறுவர்களுக்கான கணக்கு தொடர்பான பிரச்சார மேம்பாடுகள். 2017 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலப்பகுதியினுள் இக் கணக்கினுள் 46,939 புதிய கணக்குகள் சேர்ந்தன. இதன் மொத்த வைப்புத் தொகையானது இலங்கை ரூபாய் 243.7 மில்லியன் ஆகும்.
- சிங்கள தமிழ் புத்தாண்டுத் தினத்திற்கு அடுத்த வங்கி நாளில் ரண் கெக்குழு கணக்குகளை கொண்டவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. கணுதெனு என்ற கொடுக்கல் வாங்கல் மரபு முறையை அடிப்படையாகக் கொண்டும் மாணவர்கள் மத்தியில் சேமிப்பை மேம்படுத்துவதற்கும் இது உதவியது. இதன் பொழுது ஆரம்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை 80,946 ஆகும். இதன் மொத்தப் பெறுமதி இலங்கை ரூபாய் 289.5 மில்லியன்.
- வங்கியின் 78 ஆவது வருட நினைவு தினத்தை கொண்டாடும் முகமாக பெற்றோர்கள் மத்தியில் பிள்ளையின் பெயரில் சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பிப்பதை உற்சாகப்படுத்தும் முகமாக 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பிறந்த பிள்ளையை மையமாக கொண்டு ஆகஸ்ட் பேபி என்ற ஊக்குவிப்பு கணக்கு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பொழுது கணக்கில் வைப்பிடப்படுகின்ற தொகையை விட இரட்டை மடங்கு கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது. ஆகக்கூடிய தொகை 1,000 ரூபாய் ஆகும்.
- அதே போல் 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் டிசம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் பிறந்த பிள்ளைகளை கருத்திற் கொண்டு உப்பதின செமட கினுமக் என்ற கணக்கு தொடர்பான பிரச்சார பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த பிரச்சார செயற்பாடுகளின் காரணமாக 263,757 புதிய கணக்குகள் திறக்கப்பட்டன. இதன் மொத்த வைப்புத் தொகை இலங்கை ரூபாய் 458.9 மில்லியன் ஆகும்.

எமது சேவையை விரிவாக்குகின்ற அதேவேளை அடுத்த தலைமுறை சார்ந்த வாடிக்கையாளர்கள் மத்தியில் சேமிப்பு பழக்கவழக்கங்களை மேம்படுத்தும் முகமாக 1,223 பாடசாலை சன்சந்த நிலையங்களும் 152 நடமாடும் பாடசாலை பிரிவுகளையும் வங்கி பேணி வருகின்றது.

மாகாண ரீதியாக பாடசாலை சன்சத வீதம்



உறுதியான உள்ளடக்கிய நிலைபேறான பொருளாதார வளர்ச்சி



தனது SME துறை மற்றும் பாரிய பெருநிறுவனங்கள் ஆகியவற்றிற்கான தமது நிதியிடல் மூலம் மறைமுக தொழில் முயற்சியாளர்கள் மற்றும் வேலைவாயப்புகள் ஆகியவற்றை தொடர்ச்சியாக வங்கி உருவாக்கி வருகின்றது.

- **பெருநிறுவன பணவழங்கல் ஊடாக சுமார் 1,800 தொழில் வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.**
- **தொழில் வாண்மையை விருத்தி செய்யும் முகமாக** CSR **நடவடிக்கைகள் தொடர்பில் மொத்தமாக இலங்கை ரூபாய் 9.6 மில்லியன் செலவழிக்கப்பட்டுள்ளன.**

பாதுகாப்பு, நெகிழ்திறன் மற்றும் நீடுறுதியையுடைய நகரங்களையும் மனிதக் குடியேற்றங்களையும் உருவாக்குதல்



நகர்ப்புற நகரங்களுக்கான உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான வங்கியின் பெறுநிறுவன நிதியிடலானது அந் நகரங்களை பாதுகாப்பு, பேரழிவு நெகிழ்திறன் மற்றும் நீடுறுதித் தன்மை கொண்டவையாக மேன்மேலும் அபிவிருத்தி செய்ய உதவியுள்ளது.

- கூட்டுக்கடன் வசதிகளினூடாக இரு பாரிய அளவிலான "கழிவிலிருந்து சக்திக்கான" செயற்திட்டங்களுக்கு நிதியிடுதல்.

பெருநிறுவன மற்றும் கடல்கடந்த வங்கி முறை

வங்கியின் பெருநிறுவன நிதியிடல் வசதியானது பெருநிறுவனத் துறையினரின் நீண்ட கால நிதி ரீதியான தேவைகள் மற்றும் தொழிற்பாட்டு மூலதன தேவைகள் ஆகியவற்றை நிறைவேற்றியுள்ளது. நீண்ட கால நிதி ரீதியான தேவைகள் ஆனது அவர்களுக்கே உரிய தனித்துவமான தேவைகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இவற்றுள் நிரந்தர முதலீட்டுச் செலவுகள் மற்றும் தொழிற்பாட்டு மூலதன தேவைகள் ஆகியன உள்ளடங்குகின்றன. போட்டித்தன்மைமிக்க வட்டி விகிதங்கள் மற்றும் நெகிழ்ச்சித்தன்மையான கொடுப்பனவு முறைகள் ஆகியன வழங்கப்படுகின்றன.

இவற்றுள் குறைவான மிகுதி மற்றும் வசதியான செலுத்துகை நலன் திட்டங்கள் ஆகியன உள்ளடங்குகின்றன. 2017 ஆம் ஆண்டில் பெருநிறுவன மற்றும் கடல் கடந்த வங்கி கடனில் 47 வீதம் காணப்பட்டது. வரிக்கு முந்திய இலாபமாக 28% காணப்பட்டது. பாரிய பெருநிறுவன துறை அமைப்புகள், கருத்திட்டங்கள், நேரடி அரசாங்க மற்றும் SOE ஆகியவற்றின் மூலமாக நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கு இந்த துறை உதவுகின்றது.



பெருநிறுவன நிதியிடல் ஊடாக கைத்தொழில் துறைக்கு உதவுதல்

இதில் இலங்கை வங்கியின் பங்கு இலங்கை ரூபாய் 7.3 பில்லியன் ஆகும். வருட காலப்பகுதியின் பொழுது இது முன்னெடுக்கப்பட்டது. இவ்வருடத்தின் பொழுது நிதியிடப்பட்ட புதிய கருத்திட்டங்கள் மூலம் சுமார் 1,800 புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டது.

பிரிவுகளின் பங்களிப்பு

2017 ஆம் ஆண்டின் இறுதியில் பெருநிறுவன பிரிவின் மொத்த பங்களிப்பு இலங்கை ரூபாய் 572 பில்லியன் ஆகும். இவற்றுள் 44% தனியார் துறையை சார்ந்ததாகும். அதேவேளை 56% அரசாங்கம் மற்றும் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளை சார்ந்ததாகும். இதனை 2016 ஆம் ஆண்டுடன் ஒப்புநோக்குகையில் பங்களிப்பு முறையே 51% மற்றும் 41% ஆகும். 2016 ஆம் ஆண்டில் இலங்கை ரூபாய் 209.08 பில்லியனாக காணப்பட்ட தனியார் துறை பங்களிப்பு 2017 ஆம் ஆண்டில் 245.8 பில்லியனாக அதிகரித்தது. பெருநிறுவன பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட காத்திரமான பிரசார நடவடிக்கைகளின் மூலமாக இதனை அடையக்கூடியதாக இருந்தது. இதன் மூலம் 92 புதிய வாடிக்கையாளர்கள் கவரப்பட்டனர். தற்போது முழுமையாக பயன்படுத்தாத நிலையில் காணப்படுகின்ற வாடிக்கையாளர்களை அடிப்படையாகக் கொண்டு தனியார் துறையில் மேலும் அதிகரிப்புகளை ஏற்படுத்துவதை மையமாக கொண்டு செயற்படுத்தப்பட்டது.

பிரதான கருத்திட்டங்கள்

நிதியிடப்பட்ட மிகப்பெரிய கருத்திட்டங்களுள் ஒன்றாக "Pearl Grand Tower Hotel" காணப்படுகின்றது. இது ஓர் ஐந்து நட்சத்திர ஒட்டல் ஆகும். 420 அறைகளைக் கொண்டு கொழும்பில் முக்கிய இடம் ஒன்றில் அமைந்துள்ளது. இரண்டு சக்தி சார்ந்த கருத்திட்டங்களுக்கும் வங்கி தனது பங்களிப்பினை அரசக்குழு வசதிகள் மூலம் வழங்கியது. இது அரச மற்றும் தனியார் பங்காண்மை கருத்திட்டமாகும். பசுமை வங்கி முன்னெடுப்புகளுக்கு இது தனது பங்களிப்புகளை நல்கியது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்களில் ஒன்று கரதியானவில் அமைந்துள்ள கழிவு செயலாக்கல் நிலையமாகும்.


பெயாவே கழிவு முகாமைத்துவ லிமிட்ட மற்றும் கழிவு முகாமைத்துவ அதிகார சபை (WMA) இது இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமானது இதனுடன் கூட்டிணைந்து மேற்கொள்ளப்பட்ட திட்டமாகும். இதனை ஒத்த மற்றொரு கருத்திட்டம் முத்துராஜவெலையில் மேற்கொள்ளப்பட்டது. இங்கு (WMA) வுடன் எய்ட்கென் ஸ்பென்ஸ் கூட்டிணைந்து செயற்பட்டது.

பாரிய கருத்திட்டங்கள் தொடர்பில் நீண்டகால நிதியிடல்களையும் மற்றும் குறுகியகால நிதியிடல் தேவைகளை பூரணப்படுத்துவதன் மூலமும் அரசாங்கம் மற்றும் அரசு சார்ந்த தொழில் முயற்சிகளுக்கு தொழில் சார்ந்த வங்கி தனது உதவிகளை வழங்கி வந்தது. வருட காலப்பகுதியின் பொழுது நீர் விநியோகத் திட்டங்களுக்காக வங்கி மொத்தமாக இலங்கை ரூபாய் 17.0 பில்லியன் நிதியீடு செய்தது. அதேவேளை வீதி அபிவிருத்தித் திட்டங்களுக்காக மேலும் இலங்கை ரூபாய் 1.7 பில்லியனை வங்கி வழங்கியது.

மேலும் சுகாதார அமைச்சினால் முன்னெடுக்கப்படவுள்ள உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களுக்கென இலங்கை ரூபாய் 10 பில்லியனை வழங்குவதற்கு இலங்கை வங்கி இணங்கியது.

துறைசார் பகுப்பாய்வுகள்

பெருநிறுவன கடன் வழங்கல் முறை தொடர்பான துறை சார்ந்த பகுப்பாய்வுகள்



புதிய அபிவிருத்திகள் மற்றும் நிகழ்வுகள்

வங்கியின் அறவிடல் செயற்பாடுகளில் வினைத்திறனை மேம்படுத்தும் முகமாக பெருநிறுவன சேவைப் பெறுநர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கடன், கடன் வசதிகள் தொடர்பான ஆவணப்படுத்தல் மற்றும் செயன்முறை கட்டணங்கள் ஆகியவற்றை பெறும் முகமாக வருட காலத்தின் பொழுது தானியங்கு முறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

2017 ஆம் ஆண்டில் பெருநிறுவன பிரிவினால் வாடிக்கையாளர்களை பாராட்டும் 6 நிகழ்வுகள் இடம்பெற்றன. இவற்றுள் பெருநிறுவனக் கிளை, கடல்கடந்த வங்கி பிரிவுகள் மற்றும் பெருநகர கிளை ஆகியவற்றுக்கான உயர் முகாமைத்துவக் குழுவிற்கான பிரிவினரை பாராட்டும் முகமாக இரண்டு நிகழ்வுகள் இடம் பெற்றன. பெருநிறுவனக் கிளை, பெருநகர கிளை, கடல் கடந்த வங்கிப் பிரிவு ஆகியவற்றினால் மூன்று நிகழ்வுகள் முறையே அவற்றின் நேரடி வியாபாரச் செயற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட ஊழியர்களை பாராட்டும் முகமாக இடம்பெற்றன. மற்றும் தமது கிளைகளைச் சேர்ந்த உயர் பெறுமதிச் சார்ந்த வாடிக்கையாளர்களை பாராட்டும் முகமாக பிரிமிய வங்கி நிலையத்தினால் நிகழ்வொன்று நடத்தப்பட்டது.

எதிர்காலத் திட்டங்கள்

கடன், வியாபார நிதி, செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் ஆகியவற்றில் அனுபவம் மிக்க புதிய மற்றும் தற்போதையை பணியாளர்களை வேலைக்கு பயன்படுத்துவதன் மூலம் பெறுமதிமிக்க கம்பனிகள் மற்றும் பெறுமான வலுக் கம்பனிகள் (blue chip companies) ஆகியவற்றில் பிரச்சார பணிகளை மேற்கொண்டு அவற்றை அணித்திரட்டி விசேட வியாபாரப் பிரிவொன்றினை ஆரப்பிப்பதற்கான திட்டங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

பாரிய அபிவிருத்திக் கருத்திட்டங்களை கையாள்வதற்கென புதிய கருத்திட்ட நிதியிடல் பிரிவொன்றும் தாபிக்கப்படும். இவற்றுள் வாய்ப்புள்ள வியாபாரச் செயற்பாடுகளை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ளும் முகமாக அத்தகைய கருத்திட்டங்கள் தொடர்பில் தேர்ச்சி பெற்ற விசேட குழுவொன்று விருத்தி செய்யப்படுவதுடன் ஒருங்குசேர்வமைப்புக்கடன் தொடர்பில் தேர்ச்சிப் பெற்றவர்களும் உள்ளடக்கப்படுவர். அத்தோடு நிதிரீதியான மீள்அமைப்புகள் தொடர்பில் நன்கு தேர்ச்சிப்பெற்ற பணியாளர்களும் இப்பிரிவில் உள்ளடக்கப்படுவர். பெருநிறுவன வாடிக்கையாளர்களுக்கு உடனடி தொழிநுட்பக் களத்தினை வழங்கும் முகமாக மேலதிக முன்னெடுப்புகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் சகல வசதிகளும் கொண்ட இணையம், இணைய மூலமான வங்கிச் சேவைகள் ஆகியன அவர்களது தேவைகளுக்காக வழங்கப்படும்.

மேலும் பெருநிறுவன வாடிக்கையாளர்களுக்கான கிளைகளுக்கிடையிலான ஒப்புதல்களை மேற்கொள்வதற்காக தானியங்கு முறை ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எமது வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்துவதற்கான மற்றுமொரு படிமுறை இதுவாகும்.

வியாபார நிதிப்பிரிவு

இறக்குமதி, ஏற்றுமதி ஆகியவற்றை இலகுப்படுத்தும் முகமாக வியாபார நிதியிடல் சேவைகள் சார்ந்த பரந்த முதலீட்டுப் பட்டியல் காணப்படுகின்றது. பல்வேறுப்பட்ட நிறுவன நலனில் அக்கறையுடையவர்களுக்கு எமது பிரிவானது ஆலோசணைச் சேவைகளை வழங்கி வருகின்றது. இவற்றுள் அரசாங்கம், பெருநிறுவன சேவை பெறுனர்கள், கைத்தொழில் துறையைச் சார்ந்தவர்கள் மற்றும் வியாபார சமூகம் ஆகியன உள்ளடங்கும். புதிய ஏற்றுமதி, ஏற்றுமதியாளர்களை இனங்காணும் முகமாகவும் ஏற்றுமதி சந்தைகள் தொடர்பான ஆலோசணைகளை அவர்களுக்கு வழங்கும் முகமாகவும், வங்கி நடைமுறை, ஆவணப்படுத்தல் போன்ற ஆலோசனைச் வழங்கும் முகமாகவும் வங்கியின் வியாபார நிதிப்பிரிவானது தொடர்ச்சியாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை, இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (SLECIC) வர்த்தக அமைச்சு ஆகியவற்றுடன் ஒருங்கிணைப்புகளை ஏற்படுத்தி வருகின்றது. இவ்வருடக் காலப்பகுதியின் பொழுது இப்பிரிவானது கருவாப்பட்டை மற்றும் மிளகு ஏற்றுமதியாளர்களை அணிதிரட்டி பிரச்சார பணிகளை மேற்கொண்டதுடன் ஏற்றுமதி வாய்ப்புகளை விரிவுப்படுத்தியுள்ளது. வியாபார சேவைப் பிரிவானது விபாயாரத் துறையில் தமது நிபுணத்துவத்தை பன்படுத்தி அரசாங்க நிறுவனங்களுடன் வியாபார கொள்கை உருவாக்கல் மற்றும் திட்டமிடல் தொடர்பாக தமது அறிவை பகிர்ந்துக்கொண்டுள்ளனர்.

வியாபார நிதியிடல் செயற்பாடுகள் தொடர்பில் எமக்கு நீண்ட கால அனுபவம் மிக்க வரலாறு உண்டு. இத்துறையில் தொடர்ச்சியாக தலைமைத்துவத்தை நாம் பேணிவருகிறோம். உயர்வான ஒழுக்கநெறி தராதரங்களை வங்கி பேணுவதுடன் சகல சட்டத்திட்டங்களுக்கும் இணங்கி நடக்கின்றது. இத்துறையை நாம் வளர்த்துக்கொண்டதன் காரணமாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கான உயர்ந்த வல்லமைகளைப் பெற்றுள்ளோம். அத்தோடு எமது வாடிக்கையாளர்களுக்காக சிறப்பான விடயங்களை பெற்றுக்கொள்வதற்கும் இது உதவியுள்ளது. எமது பரந்த தொடர்பால் வங்கிகள் வரையமைப்புடன் காணப்படுகின்ற நீண்ட கால தொடர்பு முறைகளை அளவிடுவதற்கும் இது உதவுகின்றது. கூட்டங்கள் மற்றும் ஆலோசணைச் சேவைகள் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் எமது வங்கியானது சேவை பெறுநர்களுடனான உறவுகளை வலுப்படுத்தியுள்ளது. அதிக தேறிய பெறுமதிகளையுடைய வாடிக்கையாளர்களுக்கு இது வழங்கின்ற நிபந்தனைகள் ஆனது மிகவும் போட்டித்தன்மை மிக்கதாக காணப்படுகின்றன.

ISO 9001:2008 சான்றிதழை பெற்றுக்கொண்ட பெருமை இப்பிரிவுக்கு உண்டு. இச்சான்றிதழ் 2011 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்றது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இந்த பிரிவின் பணியாளர்கள் பூரணத்துவமிக்க பயிற்சிகளை பெற்றுக்கொண்டனர். இலங்கை வங்கியின் வியாபார நிதியிடல் பிரிவானது இலங்கை வியாபார நிதியிடல் சங்கம், இலங்கை ஏற்றுமதியாளர்கள் சங்கம், இலங்கை இறக்குமதியாளர்கள் சங்கம், சர்வதேச வர்த்தக சபை, தேசிய வர்த்தக சபை ஆகியவற்றையும் பிரதிநிதித்துவம் செய்தது. தற்போதைய சர்வதேச நடைமுறைகள் பற்றி எமது பணியாளர்கள் அறிந்துக்கொள்வதற்கும் ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் எதிர்கொள்கின்ற விடயங்கள் பற்றிய பிரச்சனைகள் தொடர்பான புரிதல்களை பெற்றுக்கொள்வதற்கும் இது உதவியது. இவ்வருட காலப்பகுதியின் பொழுது வாடிக்கையாளர்களை பாராட்டும் இரண்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

வியாபார நிதியிடல் செயல் அமர்வுகள் மூலம் கிளை பணியாளர்களது தொழிநுட்பம் சார்ந்த தேர்ச்சிகளை மேம்படுத்தும் முகமாக கிளை வலையமைப்புகளுடன் மிக நெருக்கமாக எமது பிரிவு கடந்த வருடத்தின் பொழுது செயற்பட்டது. கிளை வலையமைப்பு மூலமாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள்

வகையைச் சார்ந்த ஏற்றுமதியாளர்களை அணிதிரட்டுவதே இதன் மைய நோக்கமாகும்.

இறக்குமதி, ஏற்றுமதி ஆகியவற்றை இலகுப்படுத்தும் முகமாக வியாபார நிதியிடல் சேவைகள் சார்ந்த பரந்த முதலீட்டுப் பட்டியல் காணப்படுகின்றது. பல்வேறுபட்ட நிறுவன நலனில் அக்கறையுடையவர்களுக்கு எமது பிரிவானது ஆலோசனைச் சேவைகளை வழங்கி வருகின்றது. இவற்றுள் அரசாங்கம், பெருநிறுவன சேவை பெறுனர்கள், கைத்தொழில் துறையைச் சார்ந்தவர்கள் மற்றும் வியாபார சமூகம் ஆகியன உள்ளடங்கும்.

2017ஆம் ஆண்டின் செயலாற்றுகை

மாகாணம்	2017 இலங்கை ரூபாய் பில்லியன்	2016 இலங்கை ரூபாய் பில்லியன்	வளர்ச்சி வீதம் %
இறக்குமதி அளவு	343.6	271.5	27
ஏற்றுமதி அளவு	37.1	33.0	12
வியாபார நிதி வருமானம்	5.2	4.1	26

2017 ஆம் ஆண்டின் வங்கியின் வியாபாரம், நிதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் "ஆசிய அபிவிருத்தி வங்கிக்கான இலங்கையின் பங்காண்மை முன்னணி வங்கி" என்ற விருது இலங்கை வங்கிக்கு வழங்கப்பட்டது. இலங்கை வரலாற்றில் முதல் முறையாக தேசிய வங்கியொன்று இந்த விருதை வென்றது இதுவே முதல் தடவையாகும். வெளிநாட்டு நாணய வங்கிப்பிரிவும் பெருநிறுவனத் துறையில் முக்கியப் பங்கினை வகிக்கின்றது. வாடிக்கையாளர்களுக்கு மிகவும் வினைத்திறன் மிக்க முறையில் சேவையாற்றும் முகமாக வருடத்தின் பொழுது செயன்முறைகளில் சிறப்பான மேம்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அரசாங்கம் மற்றும் அதனது பிரதான SOEs அமைப்புகள் தமது நிதிரீதியான தேவைப்பாடுகளை சிறப்பாக முகாமைத்துவம் செய்யும் முகமாக பெருநிறுவன மற்றும் வெளிநாட்டு வங்கிக்கிளைகளும் பல உதவிகளை வழங்குகின்றன. இப்பிரிவின் பிரதான வாடிக்கையாளர்களாக அரசாங்க திறைசேரி மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியன காணப்படுகின்றன. முகாமைத்துவத்தை மேற்கொள்வதில் சிறப்பாக பங்களிப்புகளை இவை வழங்குகின்றன.

சர்வதேசம், திறைசேரி, முதலீடுகள்

இந்த பிரிவுகள் ஆனது ரூபாய் மற்றும் வெளிநாட்டு நாணய நிதி தொடர்பான விடயங்களை கையாளுகின்றது. இதன் காரணமாக வங்கித்துறையில் முக்கிய வகிபாகத்தை வகிக்கின்றன. மொத்த வைப்பீட்டுத் தளம் ஆனது இலங்கை ரூபாய் 1.5 ரில்லியனை விட அதிகமாக வங்கியில் காணப்படுவதன் காரணமாக நிதி நிறுவனங்களில் மிகப்பெரியது என்ற முறையில் நாட்டின் ஸ்த்திரத்தன்மைக்கு மாத்திரம் அல்ல, நாட்டின் பொருளாதார பிரிவு சார்ந்த செயற்பாடுகள் ஆகியவற்றிற்கும் இது முக்கியமானதாகும். வங்கிக்கென பல்வேறு விதமான பிரதான செயற்பாடுகளை இப்பிரிவுகள் மேற்கொண்டு வருகின்றன. இவற்றுள் வங்கியின் நிதியை முதலீடு செய்தல், வெளிநாட்டு நாணய முகாமைத்துவம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் முகாமைத்துவம் ஆகியனவும் உள்ளடங்கும். மீளாய்விற்கு உட்பட்ட காலப்பகுதியினுள் வைப்புகள் 23 வீதத்தினால் அதிகரித்தன அதேவேளை 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெறுகைகள் 11 வீதத்தினால் குறைவடைந்தன.

திறைசேரி பிரிவு

இவ்வகையின் மிகப்பெரிய தொழிற்பாடுகளுள் ஒன்றாக இது காணப்படுகின்றது. வரலாறு முழுவதும் இலங்கை வங்கியின் திறைசேரி ஆனது வங்கித்துறையில் முன்னணியில் திகழ்கிறது. வங்கியின் ஒட்டுமொத்த இலாபத்திற்கும் இது குறிப்பிடக்கூடியளவு பங்களிப்பினை வழங்குகிறது.


திறைசேரியானது மூன்று பிரதான திணைக்களங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அவையாவன, தொடர்பாடல் அறை, முதல்நிலை விற்குநர் (PDU) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் முகாமைத்துவ பிரிவு (ALM) ஆகும். திறைசேரி பிரிவின் பொதுவான செயற்பாடுகளாக வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல், பணச்சந்தை தொடர்புகள், நிதி முகாமைத்துவம், அரசாங்க பிணைகளில் முதலீடுகளை மேற்கொள்ளல், பெருநிறுவன விற்பனைகள், வங்கிசார் உற்பத்திகளுக்கு விலையிடல், கட்டாய ஒழுக்கங்களை முகாமைத்துவம் செய்தல், திரவத்தன்மை வீதங்கள் மற்றும் சொத்துகள், பொறுப்புகள் ஆகியவற்றை முகாமைத்துவம் செய்தல் ஆகியனவாகும். இதன் காரணமாக திறைசேரி பிரிவானது வங்கியின் இலாபத்திற்கு குறிப்பிடக்கூடியளவு பங்கினை வழங்குகின்றது.

வங்கியின் வெளிநாட்டு நாணய தொழிற்பாடுகளை இது முகாமைத்துவம் செய்கின்றது. இதன் காரணமாக நிதி உள்வருகை மற்றும் வெளிச்செல்லுகை ஆகியவற்றை முகாமைத்துவம் செய்வதன் மூலமாக தனது கட்டுப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு போதியளவு திரவத்தன்மை காணப்படுகின்றது என்பதை இது உறுதி செய்து கொள்கிறது. சந்தை சார் இடர்களை முகாமைத்துவம் செய்வதில் குறிப்பிடக்கூடியளவு வகிபாகத்தை திறைசேரி பிரிவு மேற்கொள்கின்றது. இதன் காரணமாக உற்பத்தி பொருட்களுக்கு அதிக விலை கிடைத்தல், இணக்கம் சார் தேவைப்பாடுகளின் பிரகாரம் உரிய நேரத்திற்கு மீள் விலையிடல் மற்றும் முதிர்வு சார் பொருந்தாத விடயங்களில் முகாமைத்துவம் ஆகியவற்றை உறுதி செய்து கொள்கிறது.

வருடத்தின் பொழுது வங்கியானது திறைசேரி உண்டியல்கள், இலங்கை அபிவிருத்தி பிணைகள் தொகுதிக்கடன் பத்திரம், உரிமை முதல் ஆகியவற்றில் குறிப்பிடக்கூடியளவு முதலீடுகளை மேற்கொண்டது.


வெளிநாட்டு நாணயமாற்று வருமானம்

ரூபா மில்லியன்




AWRD மற்றும் AWPLR இன் அமைவு

%



வெளிநாட்டு கிளைகளில் வைப்புகள் மற்றும் முற்கொடுப்பனவுகள்

ரூபா மில்லியன்



இலங்கை வங்கியின் திறைசேரியை பொறுத்தவரையில் 2017 ஆம் ஆண்டு மிகவும் வெற்றிகரமான ஆண்டாக காணப்பட்டது. பெரும்பாலும் இதன் எல்லா இலக்குகளும் இக்காலப்பகுதியில் அடையப்பெற்றன. செலாவனி மாற்றங்கள் காரணமாக ஏற்பட்ட வாய்ப்புகளை திறைசேரிப் பிரிவானது அதி உச்சமாக பயன்படுத்திக்கொண்டது. இதன் காரணமாக 2017 ஆம் ஆண்டில் குறிப்பிடக்கூடியளவு வெளிநாட்டு நாணயமாற்று இலாபமாக இலங்கை ரூபாய் 3.4 பில்லியன் கிடைக்கப்பெற்றது. திறைசேரி செயற்பாடுகளை விரிவாக்கும் முகமாக சில முன்னெடுப்புகள் வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. அவையாவன பெருநிறுவன கருமபீடத்தை விரிவாக்குதல், போட்டித்தன்மைமிக்க விலையிடல் பொறிமுறையை அறிமுகம் செய்தல், காத்திரமான வெளிநாட்டு நாணயமாற்று வியாபாரம், நாணயமாற்று இல்லங்கள் மற்றும் முறைகளை மேம்படுத்தல், தொடர்பு முறைகள் விரிவாக்கம் செய்யப்பட்டன இவையாவும் சிறந்த பெறுபேறுகளை அடைவதற்கு காரணிகளாக அமைந்தன.

வருட காலப்பகுதியின் பொழுது திறைசேரிப் பிரிவினால் உள்வாங்கப்பட்ட புதிய தொழிநுட்பங்களும் அதனால் கிடைக்கப்பெற்ற நன்மைகளும்

சொத்துக்கள் தொடர்பான புதிய முறை மற்றும் வங்கியின் பொறுப்புகள் முகாமைத்துவம் ஆகியன தொடர்பில் புதிய முறை ஒன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் திறைசேரி செயற்பட்டு வருகின்றது. இது அவசியமான அறிக்கைகளை உருவாக்குதல் மற்றும் வங்கியின் தீர்மானம் மேற்கொள்ளல் செயற்பாடுகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை இலகுப்படுத்தும். இந்த முறை 2018 ஆம் ஆண்டு நேரடியாக நடைமுறைப்படுத்தப்படும். இதன் காரணமாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான விடயங்களை துள்ளியமாக முகாமைத்துவம் செய்வதற்கு மேலும் உதவும்.

சந்தையில் மாறி வரும் மாற்றங்களுக்கு ஏற்ப திறைசேரி பிரிவானது திறைசேரி கொள்கை மற்றும் ALM கொள்கை கையேடுகள் ஆகியவற்றை மீளாய்வு செய்துள்ளது.

செயல் திட்டம் விகிதங்கள், AWFDR, AWPLR, AWDR தொடர்பான போக்குகள் மற்றும் நாணய மாற்றுவீதம் அதன் தாக்கங்கள்

வர்த்தக வங்கிகள் தொடர்பான சகல ரூபாய் வைப்புகள் பொறுப்புகளுக்கு ஏற்புடைய சட்ட ஒதுக்க வீதமானது 150 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 7.5 வீதமாக அதிகரித்தது. 2016 ஜனவரி 16 இல் ஆரம்பமாகும் ஒதுக்க வாரத்திலிருந்து இது செல்லுபடியாகும். 2017 மார்ச் 24 இல் நிலையியல் வைப்பு விகிதம் (SDFR) மற்றும் நிலையியல் கொடுத்தல் வசதி விகிதம் (SLFR) ஆகியன முறையே 25 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து முறையே 7.25 வீதமாகவும் 8.75 வீதமாகவும் அதிகரித்தன.

அதேவேளை வர்த்தக வங்கிகளது கடன் கொடுத்தல் மற்றும் வைப்புகள் தொடர்பான வீதம் கடந்த வருடம் போலவே பெருமளவு மாற்றங்களின்றி காணப்பட்டன. இவற்றுள் சிறு மாற்றங்களே அவதானிக்கப்பட்டது.

2017 அம் ஆண்டின் இறுதியில் சராசரி மதிப்பிடப்பட்ட நிரந்தர வைப்பு வீதம் (AWFDR) 11.48 வீதம் ஆகும். கடந்த வருடத்தில் இது 10.46 வீதமாக காணப்பட்டது. அதேவேளை சராசரி மதிப்பிடப்பட்ட ஆரம்பக் கடன் கொடுத்தல் வீதம் (AWPLR) கடந்த வருடத்தில் 11.52 வீதமாக காணப்பட்டது. இவ்வருடம் 11.55 வீதமாக அதிகரித்துள்ளது. மாதாந்த சராசரி மதிப்பிடப்பட்ட வைப்பு வீதம் (AWDR) கடந்த வருடத்தில் 8.17 வீதமாக காணப்பட்டது. இது 9.07 வீதமாக அதிகரித்தது.

2017 டிசம்பரில் வருடத்திலிருந்து வருடதிற்கான பரந்த பணத்தின் வளர்ச்சி தொடர்ந்தும் 17.45 வீதமாக விரிவடைந்து காணப்பட்டது. வங்கித்துறையினால் தனியார் மற்றும் அரசாங்க வங்கிகளுக்கு வழங்கப்பட்ட கடன் விரிவாக்கமே இதற்கான காரணியாகும். இவ்வருட காலப்பகுதியின் பொழுது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்ட கடன்கள் அதாவது வர்த்தக வங்கிகளினால் தனியார் துறையினருக்கு வழங்கப்பட்ட கடன்கள் 15.48 வீதத்தினால் அதிகரித்து காணப்பட்டன. 2017 நவம்பரில் பரந்த பணத்தின் வளர்ச்சியானது குறிப்பிடக்கூடிய அளவு மெதுவாகவே இடம்பெற்றது. வர்த்தக வங்கிகளினால் தனியார் துறையினருக்கு வழங்கப்பட்ட கடன் விரிவாக்க வளர்ச்சியில் ஏற்பட்ட ஒடுக்கமே இதற்கான பிரதான காரணமாகும். மற்றும் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் நிதிரீதியான கொள்கை போக்குகளுக்கு பதிலளிக்கவேண்டிய தேவை ஏற்பட்டது. அதேவேளை அரசாங்க பிணையங்களின் பெறுபேறுகள் உச்ச மட்டத்திலிருந்து கீழ்நோக்கியவாறு சீர் செய்யப்பட்டன. செயல்திட்ட விளைவுகள் மற்றும் அரசாங்க பிணையங்களின் விளைவுகள் ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாடுகளை இது சீர் செய்தது. விளைவுகள் விகிதத்திற்கு ஏற்ப ஏனைய சந்தை வட்டி விகிதங்களும் மேலும் கீழ்நோக்கிய வகையில் சீர் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன.

ஜக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் பெறுமதி 2 வீதத்தினால் இவ்வருட காலப்பகுதியினுள் வீழ்ச்சி கண்டது. 2017 ஜனவரியில் ஒரு டொலரின் பெறுமதி இலங்கை ரூபாய் 149.85 ஆக காணப்பட்டது. இதன் பெறுமதி டிசம்பரில் 152.85 ஆக காணப்பட்டது. (இலங்கை மத்திய வங்கி) ஜூலை மாத அளவில் மிக உயர்வாக காணப்பட்டது. இக்காலப்பகுதியில் ஒரு டொலரின் பெறுமதி இலங்கை ரூபாய் 153.70 ஆகும்.
2017 அம் ஆண்டு டிசம்பரில் இலங்கை மத்திய வங்கியானது மூன்று வழிகாட்டிகளை வெளியிட்டது. இது வங்கி மீதும் அதன் திறைசேரி தொழிற்பாடுகள் மீதும் தாக்கத்தினை ஏற்படுத்தின:

1. CIMM அறிக்கையிடல்
2. வெளிநாட்டு நாணய கடன்பெறுகைகள்
3. பெறுமதி சார் வழிகாட்டிகள்

உள்ளூர் பணச்சந்தையில் காணப்படுகின்ற மிகை திரவத்தன்மையானது தொடர்ந்தும் உயர்வாக காணப்படுவதாக இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டது. அதே உயர் திரவத்தன்மைமிக்க இச்சூழலில் தொழிற்படுவதானது போட்டித் தன்மை மிக்கதாக காணப்படுவதுடன் மேல் நோக்கிய பண வீக்கமானது சவாலுக்குரியதாகும். உயர் மிகை திரவத்தன்மை போக்கு தொடருமாயின் பணகூட்டுத்தொகையில் முன்னெப்போதும் இல்லாத விரிவாக்கத்திற்கு இட்டுச்செல்லும் எனவும் பொருளாதாரத்தில் மென்மேலும் பணவீக்கத்தை ஏற்படுத்தும் எனவும் மதிப்பிடப்பட்டது. இது தொடர்பில் எதிர்மறையான தாக்கங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கின்ற அதேவேளை ஆரோக்கியமான திரவத்தன்மை நிலையை பேணும் முகமாக வங்கியானது REPO தளத்தை விரிவுபடுத்துவதற்கு எதிர்பார்க்கின்ற அதேவேளை NOSTRO கணக்குகளின் முகாமைத்துவத்தை அதிகப்படுத்துவதற்கும் வியாபார நிதியிடல் மற்றும் வெளிநாட்டு வியாபார நாணயங்களுடன் தொடர்புபட்ட வாடிக்கையாளர்களுடனான உறவுகளை அதிகரிப்பதற்கும் வெளிநாட்டு நாணய தொடர்பான விடயங்களை ஏற்பாடு செய்வதற்கும் இருதரப்பு கடன்கள் மற்றும் நீண்ட கால தொகுதிக்கடன் பத்திரங்களை வழங்குவதற்கும் எதிர்பார்க்கின்றது.

அரசாங்க பிணையுறுதி விடயங்கள் தொடர்பான இயக்கம் மற்றும்முகாமைத்துவம்

எமது பாரிய முதலீட்டுப் பட்டியல் தொகையான இலங்கை ரூபாய் 500 பில்லியன் தொடர்பில் மிகவும் மதிநுட்பத்துடன் நடந்துக் கொள்கின்ற அதேவேளை வங்கியின் முதலீடுகள் மிகக் கவனமாக மேற்கொள்ளப்படுகின்றன. இவை மிகக் கூர்மையானவை என்பது கருத்திற் கொள்ளத்தக்கது. அடிக்கடி நிலவி வருகின்ற பாரிய மாற்றங்கள் மிகவும் கவனமாக தொடர்ச்சியாக பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்வதற்கு மேலதிகமாக வங்கியானது தனது முதலீடுகளை இலங்கை அபிவிருத்தி பிணைகள், தொகுதிக் கடன் பத்திரம் மற்றும் உரிமை முதல் ஆகியவற்றின் 2017 டிசம்பர் வரையிலான காலப்பகுதியினுள் வங்கியானது ஜக்கிய அமெரிக்க டொலர் 1.1 பில்லியனை இலங்கை அபிவிருத்து பிணையத்தில் முதலீடு செய்துள்ளது. இலங்கை அபிவிருத்தி முறியில் முதலீடு செய்யப்பட்ட பணமானது இலங்கை வங்கியின் சொந்தப் பணமாகும்.இது வெளிநாட்டிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட பணம் மற்றும் ஏற்றுமதி செயன்முறைகள் மூலமாக கிடைக்கப்பெற்ற தொகையாகும்.

திறைசேரி முறை முதலீட்டு பட்டியல் கடந்த வருடம் 28.8 பில்லியனாக காணப்பட்டது. இவ்வருடம் இது 114 பில்லியனாக காணப்படுகின்றது. இது 296 வீத அதிகரிப்பாகும். அதேவேளை திறைசேரி பிணை முறை முதலீட்டுப் பட்டியல் கடந்த வருடம் இலங்கை ரூபாய் 220.1 பில்லியனாக காணப்பட்டது. இவ்வருடம் இலங்கை ரூபாய் 207.93 பில்லியனாக காணப்படுகின்றது. இது வீழ்ச்சிக் கண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

திறைசேரி முறிகள், பிணைகள், உரிமை முதல் ஆகியவற்றில் காத்திரமாக மேற்கொண்ட வியாபாரம் சார்ந்த செயற்பாடுகளின் காரணமாக (சமன்பாட்டில் உயர்ப்பெறுமான பிணையங்கள் சார் வியாபாரம் சேர்க்கப்பட்டது) அரசாங்கம் குறிப்பிடக்கூடிய அளவு மூலதனம் அரசாங்க பிணையங்களிடம் இருந்து கிடைக்கப்பெற்றது. இதன் அளவு இலங்கை ரூபாய் 456.7 மில்லியன் ஆகும்.

வங்கியின் நிதி முகாமைத்துவத்திற்கு திறைசேரி பிரிவின் பங்களிப்பு

கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவேண்டிய மாறுப்பட்ட அழுத்த நிகழ்வுகளுக்கு முகம் கொடுக்கும் முகமாக தேவையானளவு திரவத்தன்மையை இலகுபடுத்துவதன் மூலம் வங்கியின் திரவத்தன்மை சார்ந்த வரைவுச்சட்டகத்தை திறைசேரி பிரிவு உறுதியாக பேணி வருகின்றது. திரவத்தன்மை இடர் முகாமைத்துவ வரைவுச்சட்டகம் மற்றும் திரவத்தன்மை நிலை ஆகியவற்றை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதானது மிகமுக்கியமான மேற்பார்வை செயற்பாடுகளுள் ஒன்றாகும். வங்கியின் சுமூகமான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு இது அவசியமாகும்.

வங்கியின் திறைசேரிப் பிரிவை பொருத்தவரையில் பல முக்கிய சம்பவங்கள் இடம்பெற்ற வருடம் இதுவாகும். குறைவான வட்டி விகிதத்துடன் செயற்பட வேண்டி இருந்தது, அத்தோடு ஐந்தொகை சார் பாதிப்புத் தன்மைகள் மற்றும் ஒழுங்கமைப்பு சார்ந்த விடயங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றமை ஆகியன உள்ளடங்கும். இத்தகைய சகல தடைகளுக்கு மத்தியிலும் திறைசேரிப் பிரிவானது தனது திரவத்தன்மை வலையங்களை வலுப்படுத்தியதுடன் அவசியமான வீதங்களை நடைமுறைப்படுத்திய அதேவேளை திறைசேரி பிரிவானது ஒரு நடுநிலையான செயற்பாட்டு அங்கம் என்பதை தாபித்தது.

தெளிவான ஆணையை வழங்குகின்ற புதிய திறைசேரி தொழிற்பாட்டு முறைகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் மற்றும் மத்தியப்படுத்தப்பட்ட ஆட்சி, மேம்பட்ட முறை, திறைசேரி பிரிவின் தகமைசார் ஆற்றல்கள் என மேம்படுத்தப்பட்டன. இதன் காரணமாக வங்கியின் பிணையுறுதி, திரவத்தன்மை, வட்டி விகித முதிர்ச்சி மாற்றம் ஆகியன சிறப்படைந்தன. இத்தகைய மாற்றங்களின் காரணமாகவும் திரவத்தன்மை இலாபம் ஆகியவற்றிற்கு இடையில் முறையான சமனிலையை பேணியதன் காரணமாகவும் வங்கியின் தேரிய வட்டி வருமானத்தை அதிகரிப்பதற்கு திறைசேரிப் பிரிவு உதவியது.

சர்வதேச பிரிவு

பணம் அனுப்புதல்கள்


உள்நாட்டிற்கு பணம் அனுப்புதல் தொடர்பில் முதன்முறை வெற்றிகரமாக செயற்பட்ட வங்கி இலங்கை வங்கி ஆகும். இன்று எம்மிடம் 46 வீத சந்தைப் பங்குகள் காணப்படுகின்றன. உள்நாட்டிற்கு பணம் அனுப்புதல் திணைக்களமானது எமது சகல வாடிக்கையாளர்களுக்கும் சுமூகமான சேவையை வழங்கும் முகமாக சகல கிளைகளுடன் தொடர்பினை ஏற்படுத்தியுள்ளது. உலகலாவிய ரீதியில் 800 தொடர்பாளர்களை விட அதிகமான எமது வலையமைப்பானது இச்செயன்முறையை இலகுபடுத்துகின்றது. அதேபோல் பணத்தைப் பெற்றுக்கொள்ள 600 இற்கு மேற்பட்ட இடங்கள் காணப்படுகின்றன. பணம் அனுப்புதல் தொடர்பில் பல்வேறு விதமான முறைகள் காணப்படுவதுடன் ஏனைய வசதிகளும் காணப்படுகின்றன. அவையாவன மின்அஞ்சல், குறுஞ்செய்தி (SMS)

அறிவித்தல்கள் மூலம் பணத்தை பெறுபவர், அனுப்புபவர்களுக்கிடையிலான தகவல்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் விசாரணைகளை மேற்கொள்ளக்கூடிய விதத்தில் அதிக பணியாளர்களைக் கொண்டு கருமபீடங்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. சர்வதேச ரீதியான தொழிற்பாடுகள் மூலம் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தொடர்பில் சமூகம் சார்ந்த நன்மையான செயற்பாடுகளை வங்கி மேற்கொண்டு வருகின்றது. அத்தோடு இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கும் பாரிய பங்களிப்புகளை வழங்கி வருகின்றது.

வருட காலத்தின் பொழுது "இலங்கை வங்கியின் பிட பிட ரட தேகி" (இலங்கை வங்கியின் தொடர்ச்சியான வெளிநாட்டு பரிசுகள்) என்ற நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் இலங்கை வங்கி மூலமாக வெளிநாட்டிலிருந்து உள்நாட்டில் பணத்தை பெற்றுக்கொண்ட 300 பேருக்கு மகத்தான பரிசில்கள் வழங்கப்பட்டன. வாடிக்கையாளர்களை பாராட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் தங்கல்லை, பண்டாரகம, அனுராதபுர ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டது. மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களை இலக்காக கொண்டு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் கூட்டிணைந்து 112 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

தென் கொரியா, கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம் ஓமான் ஆகிய நாடுகளில் வசிக்கின்ற எமது வெளிநாட்டு பணம் வழங்கும் முகவர் இல்லம்/வங்கி, பணியாளர்கள் ஆகியோருக்கான ஒன்றுகூடல் மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சி திட்டங்கள் ஆகியன வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்டது. சந்தைப்படுத்தல் தொடர்பில் அதிகமாக செயலாற்றிய நாடுகளாக கட்டார், தென் கொரியா, இத்தாலி ஆகியன காணப்படுகின்றன. அதேபோல் வெளிநாட்டிற்கு பணம் அனுப்பதல் தொடர்பான சேவைகளையும் எமது வங்கி வழங்கியது. இதன் மூலம் மாணவர்கள் மற்றம் பயணிகள் ஆகியோர் அதிக நன்மையை பெற்றுக்கொண்டனர். பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் காணப்படுகின்ற எமது கருமபீடமானது 24 மணித்தியாளங்களும் இயங்கக்கூடியது. இதன் மூலம் இலங்கைக்கு வருகின்ற, இலங்கையிலிருந்து வெளியேறுகின்ற பயணிகளுக்கு நாணயமாற்று சார்ந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஏனைய சேவைகளும் வழங்கப்படுகின்றன.

உள்நாட்டிற்கு பணம் அனுப்புதல் தொடர்பான பெறுமதி



தொடர்பு வங்கி முறை

உலகலாவிய ரீதியில் 864 நிதிசார் நிறுவனங்களுடான தொடர்புகள் இலங்கை வங்கிக்கு காணப்படகின்றது. இவ்வருட காலப்பகுதியின் பொழுது புதிய பரிமாற்ற இல்லம் ஒன்றும் சேர்க்கப்பட்டது. தொடர்பாடல் வங்கிகள் ஆனது வெளிநாடுகளை மையமாக கொண்ட நிதி நிறுவனங்களாகும். இவை மின்னியல் மூலமான கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்துவதுடன் வியாபார கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்றது. அதேவேளை வைப்புகளை ஏற்றுக்கொள்வதுடன் இலங்கை வங்கியின் வாடிக்கையாளர்கள் சார்பாக வியாபார ரீதியான கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்துகின்றது.

வெளிநாட்டு தொழிற்பாடுகள்

இலங்கை வங்கியின் தற்போதயை வெளிநாட்டு தொழிற்பாடுகள் ஆனது மாலைதீவு, சென்னை, சீசெல்ஸ் ஆகியவற்றை மையமாகக் கொண்டு காணப்படுகின்றன. துணை கம்பனியொன்று ஜக்கிய இராச்சியத்தில் உள்ளது. இதனை வெளிநாட்டில் விரிவாக்கம் செய்வதற்கான பல வாய்ப்புகள் வங்கிக்கு உள்ளது. விசேடமாக உலகளாவிய ரீதியில் பல இலங்கையர்கள் புலம் பெயர்ந்து வேலை செய்வதன் காரணமாக இந்த வாய்ப்புகளையும் பயன்படுத்த முடியும். வெளிநாட்டு தொழிற்பாடுகளை விரிவுபடுத்துவதானது ஒரு காத்திரமான இடர் பல்வகைமை முகாமைத்துவம் சார்ந்த உபாயமாகும்.

எதிர்காலத்திற்கு முகம்கொடுத்தல்

இலங்கை வங்கியின் 2018 - 2020 பெருநிறுவன திட்டமானது பிரதானமாக சேவை பராமரிப்பு மற்றும் வாடிக்கையாளர்களை நேரடியாக சென்றடைதல் ஆகியவற்றை மையமாக கொண்டு காணப்படுகின்றது. ஒவ்வொரு வாடிக்கையாளரும் மிகவும் உயர்வான முறையில் திருப்தி அடையக்-கூடிய விதத்தில் சகல வாடிக்கையாளர் சார் செயற்பாட்டு இடங்களிலும் ஒட்டுமொத்த வலையமைப்பினுள் வாடிக்கையாளர் அனு-பவங்களை மேம்படுத்தி தராதரம் மிக்கதாக மாற்றுவது இதன் ஒட்டுமொத்த நோக்கமாகும். வாடிக்கையாளர் பிரிவுகள் சார்ந்த போக்குகளை கருத்திற் கொண்டு நோக்கையில் 2018 ஆம் ஆண்டிற்கான எமது உபாயத்தில் டிஜிட்டல் வங்கி முறையானது தொடர்ந்தும் முன்னணியில் திகழ்கின்றது. உபாயதீரியான திட்டத்தில் "தகவல் தொழிநுட்பம் மற்றும் இணைய பாதுகாப்பு" ஆகியன முக்கியமாக இனங்காணப்பட்டுள்ளன. மிளேனியம் வாடிக்கையாளர்களது தேவைகளை கருத்திற் கொண்டு அதற்கு ஏற்ற விதத்தில் வங்கியின் தொழிநுட்பம் சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை இற்றைப்படுத்துவது அவசியமாகும். தொழிநுட்பமானது வாய்புகளை கொண்டு வருகின்ற அதேவேளை அதன் மூலம் அச்சுறுத்தல்களும் ஏற்படுகின்றன. இயலுமானவரை மிக உயர்வான முறைக்கு எமது தரவுகள் மற்றும் முறைகள், வலையமைப்புகள் ஆகியன பாதுகாக்கப்பட்டுள்ளன என்பதை நாம் உறுதிச்செய்தல் வேண்டும். வாடிக்கையாளர்களுக்கு யதார்த்தப்பூர்வமான சிறப்பான ஒட்டுமொத்த வங்கி சார் அனுபவங்களை வழங்கும் முகமாக நவீன தொழிநுட்ப மேம்பாடுகளை வங்கியினுள் உள்ளீர்ப்பதற்கான உபாய முறைகள் விருத்திசெய்யப்பட்டுள்ளன. முன்னோக்கி செல்கின்ற இந்த பயணத்தில் வங்கியானது தனது வலையமைப்புகளை விரிவுபடுத்தி அதனை காத்திரமிக்கதாக மாற்றி அமைக்கும். இதன் நிமித்தம் சகல மாகாணங்களிலும் நடமாடும்

இலங்கை வங்கியின் 2018 - 2020 பெருநிறுவன திட்டமானது பிரதானமாக சேவை பராமரிப்பு மற்றும் வாடிக்கையாளர்களை நேரடியாக சென்றடைதல் ஆகியவற்றை மையமாக கொண்டு காணப்படுகின்றது. ஒவ்வொரு வாடிக்கையாளரும் மிகவும் உயர்வான முறையில் திருப்தி அடையக்கூடிய விதத்தில் சகல வாடிக்கையாளர் சார் செயற்பாட்டு இடங்களிலும் ஒட்டுமொத்த வலையமைப்பினுள் வாடிக்கையாளர் அனுபவங்களை மேம்படுத்தி தராதரம் மிக்கதாக மாற்றுவது இதன் ஒட்டுமொத்த நோக்கமாகும்.

வங்கிக்கிளை சார்ந்த முன்னெடுப்புகளை மேற்கொள்வதுடன் டிஜிட்டல் கிளைகளையும் திறந்து வைக்கும். அத்தோடு எமது வியாபார ரீதியான செயன்முறைகளை தொடர்ந்தும் தானியங்கி முறைக்கு உட்படுத்துவதோடு அடுத்து வரும் ஆண்டுகளில் புதிய சேவை உற்பத்தி சார்ந்த விடயங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

"செயன்முறைகளை சீர் செய்தல் மற்றும் புத்தாக்கம்" ஆகியவற்றின் கீழ் தற்போது காணப்படுகின்ற சேவைகள் மற்றும் உற்பத்தி சார்ந்த விடயங்களில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதை வங்கி இலக்காக கொண்டுள்ளது. வாடிக்கையானர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோரின் திருப்தியை மேம்படுத்தும் முகமாக அவசியமான இடங்களில் வினைத்திறன் மிக்க முறையில், பயணுருதி மிக்க முறையில் அத்தகைய சேவைகள் மற்றும் உற்பத்திகள், செயன்முறைகள், மீளாய்வுகள் ஆகியன பொருந்தக்கூடிய விதத்தில் மீளாய்வு செய்யப்படும்.

புதிய வியாபார மாதிரிகள் வாய்ப்புகள், புத்தாக்க ரீதியான அணுகுமுறைகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுவதுடன் வங்கியானது தனது செயற்பாட்டு தளத்தை குறிப்பிட்ட எல்லைக்கு அப்பாலும் விரிவாக்குவதற்கு எதிர்ப்பார்க்கின்றது. இதன் காரணமாக தனது வாடிக்கையாளர்கள் உலகின் எப்பாகத்திலும் இருந்த பொழுதிலும் 24 மணித்தியாலத்தினுள் வங்கியின் சேவையை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இவ்விடயங்களுக்கு சமாந்தரமாக வங்கியானது "கடன் தன்மை மற்றும் கலாசாரம் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கும்" இவ்விடயமானது வாடிக்கையாளர் சார் சகல துறைகளுக்கும் விஸ்த்தரிக்கப்படும். அதாவது பெருநிறுவன, சில்லறை,சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர் நுண்நிதியிடல் ஆகியன SLFRS 9 இல் அறிமுகப்படுத்தப்பட்ட கடும் தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு சொத்துக்களின் தன்மையை பேணி மேம்படுத்துகின்ற அதேவேளை வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவையை வழங்குவதை நோக்காக கொண்டு இது செயற்படும்.

வியாபார பங்காளர்கள்

வங்கியானது தனது சேவைகள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றை விநியோகிப்பதற்காக வெளிநிலை சேவை வழங்குநர்கள், தொடர்பாடல் வங்கிகள் போன்ற மூன்றாம் தரப்பினருடன் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றது. இவர்கள் வங்கியின் பங்காளர்கள் என கருதப்படுகின்றனர். அவர்கள் வழங்குகின்ற சேவையானது வங்கியின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அவசியமாகும். குறிப்பிட்ட வருடத்தின் பொழுது வங்கியானது பல்வேறுப்பட்ட உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வியாபாரிகளுடன் 556 கொள்வனவு சார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. எமது வியாபார பங்காளர்களுடன் சிறந்த உறவுகளை பேணுகின்ற அதேவேளை எப்பொழுதும் வெற்றி - வெற்றி நிலைமையை பேணுவதற்கு நாம் முயற்சிக்கின்றோம். இத்தகைய வியாபார பங்காளர்களுடன் நம்பிக்கையின் அடிப்படையில் நீண்டகால உறவுகளை பேணி கட்டியெழுப்புகின்ற அதேவேளை குறிப்பிட்ட தராதரம் மிக்க சேவைகளும் குறிப்பிட்ட தராதரத்திற்கு ஏற்ப சேவைகளும் பொருட்களும் விநியோகிக்கப்படுகின்றன என்பதையும் வங்கி உறுதிசெய்துக் கொள்கின்றது. இதன் மூலம் வங்கியின் வியாபாரத்தை எவ்வித தங்கு தடையின்றி சுமூகமாக மேற்கொள்ள முடிகின்றது. இலங்கை வங்கியானது ஓர் அரச வங்கியென்ற முறையில் வெளிப்படைத் தன்மை மிக்கதாகவும் குறிப்பிடப்பட்ட செயன்முறைகளுக்கு ஏற்பவும் வங்கியின் கொள்வனவு சார் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றை பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக் கோரல்களை கோருவது அவசியமாகும். அரசாங்கத்தின் கொள்வனவு கொள்கைகளுக்கு ஏற்பவே வங்கியின் கொள்வனவு செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. வெளிப்படைத் தன்மையை இது பேணுகின்ற அதேவேளை கொள்கைகள் மூலமாக தீர்மானிக்கப்பட்ட குறைந்த சுற்றாடல் சார் மற்றும் சமூக தராதரங்களையும் பேணி வருகின்றது.

வெளிநாட்டு நாணயங்களில் கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்தும் முகமாக வங்கியானது தொடர்பாடல் வங்கிகளுடன் இணைந்து கருமமாற்றுகின்றது. நாட்டின் மிகப்பெரிய தொடர்பாடல் வங்கி வலையமைப்பு இலங்கை வங்கிக்கு உரியதாகும். எமது இந்த பலத்தைப் பயன்படுத்தி உலகலாவிய ரீதியில் காணப்படுகின்ற எமது வாடிக்கையளார்களுக்கு துரிதமாகவும் நம்பகத்தகுந்த முறையிலும் வியாபார நிதிரீதியான சேவைகள் மற்றும் பணப்பரிமாற்றம் போன்றவற்றை நாம் வழங்கி வருகின்றோம்.

சமூகம் அல்லது பெருநிறுவன சமூக பொறுப்புகள் தொடர்பான பங்களிப்புகள்

வங்கியின் உபாய முறைகளுள் ஸ்த்திரத்தன்மை முக்கியமாகும். பொருளாதார வளர்ச்சி தொடர்பான முக்கிய அம்சங்களை நாம் இனங்கண்டுள்ள அதேவேளை வங்கியின் உபாயமுறை சார்ந்த CSR செயற்பாடுகள் இந்த பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. அவையாவன கல்வி, தொழில் முயற்சி அபிவிருத்தி, தேசிய மரபுரிமைகளை பேணல், ஒழுக்கநெறி, பெறுமானங்கள், வாழ்வாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி, சுற்றாடல் பாதுகாப்பு போன்றனவாகும். மேற்படி உபாய ரீதியான CSR பிரிவுகளின் கீழ் சமூகத்திற்கான ஒரு பங்களிப்பாக CSR வரவு செலவு திட்டத்தின் கீழ் வருட காலத்தின் பொழுது மொத்தமாக இலங்கை ரூபாய் 127.5 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட பிரிவுகள் தொடர்பான சில பிரிவுகள் பின்வருமாறு:

- தேசிய மரபுரிமைகள், ஒழுக்கநெறிகள், பெறுமானங்கள் ஆகியவற்றை பாதுகாத்தல் - இலங்கை ரூபாய் 28.3 மில்லியன்
- தொழில் முயற்சி அபிவிருத்தி - இலங்கை ரூபாய் 9.6 மில்லியன்
- கல்வி - இலங்கை ரூபாய் 22.5 மில்லியன்
- சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு - இலங்கை ரூபாய் 57.8 மில்லியன்
- வாழ்வாதார அபிவிருத்தி - இலங்கை ரூபாய் 9.3 மில்லியன்

வங்கியானது தனது CSR வரவு திட்டத்தின் மூலமாக மாத்திரம் இது தொடர்பில் செயற்படுவதல்ல. தனது முக்கியமான வியாபாரம் சார்ந்த செயன்முறைகள் மூலமும் இதற்கு பங்களிப்பு செய்கின்றது. வங்கியானது தனது நுண்கடன் திட்டம் மற்றும் SME துறை ஆகியவற்றின் மூலமாகவும் பல மக்களுடைய வாழ்க்கையை மேம்படுத்தி வருகின்றது. இதன் மூலம் தொழில் முயற்சியாளர்கள் உருவாக்கப்படுகின்றார்கள்.

அதேபோல் "ரன்கெக்குலு" கணக்குகளை வைத்திருப்பவர்களுக்கு இலங்கை வங்கியானது தரம் 5 மற்றும் கா/பொ/த உயர்தரம் ஆகியவற்றில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களுக்கு வருடாந்தம் புலமைபரிசில்களை வழங்கி வருகின்றது. அதேபோல் 5 ஆம் ஆண்டு மாணவர்களுக்கென "ஹப்பன" என்ற நிகழ்ச்சித்திட்டத்தையும் நடத்தி வருகின்றது. மாணவர்களுடைய கல்வியை விருத்தி செய்வதற்கு இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் உதவுகின்றன.

தேசிய மரபுரிமை, ஒழுக்கநெறிகள், பெறுமானங்கள் ஆகியவற்றை பாதுகாத்தல்

ஸ்ரீ தலதாமாளிகை பெரகர, கதிர்காமமம் எசல பெரகர, கங்காராம ஆலயம், நவம் மாவத்த பெரகர, சென் ஜுட்ஸ் ஆலயத்தின் வருடாந்த திருவிழா, இந்திகொள்ள ஆகியவற்றிற்கு வருடாந்த நன்கொடைகளை வழங்குகின்றது. அத்தோடு வருடாந்த நவராத்திரி விழாவை கொண்டாடுவதற்கான அணுசரனைகளையும் இலங்கை வங்கியின் இந்து அமைப்பு வழங்கி வருகின்றது.

தொழில் முயற்சி அபிவிருத்தி

- மித்துரு நுண்கடன் திட்டம்
- சிறிய தொழில் முயற்சியாளர்களை விருத்தி செய்யும் முகமாக வங்கி மூலம் விசேட நுண்கடன் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அனைவரையும் உள்ளடக்கிய சமத்துவமான தரமான கல்வியை உறுதி செய்தல்



ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசு பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கென 'ஹப்பன' என்ற கருத்தரங்கை வங்கி நடத்தியது இதன் மூலம் 24,024 மாணவர்கள் பயன் பெற்றனர். அதேபோல் 2 ஆம் நிலையில் கல்வி பயிலும் மாணவர்களது நலன் கருதி நிதிசார்பான ஒழுக்கம் மற்றும் சிதிசார்ந்த கல்வி என்ற நிகழ்ச்சித்திட்டமொன்று 'எதிர்காலத்திற்கு வழிகாட்டல்' என்ற தொனிப்பொருளின் கீழ் இடம்பெற்றது.

- **தரம் 5 புலமைப்பரிசில் நன்மை அடைந்தவர்கள் - 2000**
- **கா/பொ/த உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற 18+ புலமைப்பரிசிலில் நன்மை அடைந்தவர்கள் - 198**

கல்வி

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியினுள் பின்வரும் சமூக நல கல்விச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களது நலன் கருதி ஹப்பன என்ற கருத்தரங்குகள் மொத்தமாக 59 நடத்தப்பட்டது. இக்கருத்தரங்குகளில் மாணவர்களும் அவர்களுடைய பெற்றோர்களும் கலந்துக் கொண்டனர். இக்கருத்தரங்கானது தழிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் மேற்கொள்ளப்பட்டன.
- இக்கருத்தரங்கின் மூலம் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 24,024 பெற்றோர்களது எண்ணிக்கை 18,000 ஆகும்.
- ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசிலில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களுக்கென "ரன் கெக்குழு" புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டது. இலங்கை ரூபாய் 15,000 பெறுமதியான 2000 புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன. இதன் மொத்தப் பெறுமதி இலங்கை ரூபாய் 30 பில்லியன்.
- கா/பொ/த உயர்தர பரீட்சையில் ஒவ்வொரு துறையிலும் மாவட்ட மட்டத்தில் அதிகூடிய Z புள்ளிகளைப் பெற்ற 18+ கணக்குகளை உடையவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மொத்த தொகை இலங்கை ரூபாய் 6 மில்லியனை விட அதிகமாகும். இதன் மூலமாக பயன்பெற்ற மொத்த மாணவர்களது எண்ணிக்கை 198.



"ஹப்பன" விருது விழா

- கல்வி அமைச்சுடன் கூட்டிணைந்து நடத்தப்பட்ட "புஞ்சி பிக்காசோ" என்ற ஓவிய போட்டிக்கு இலங்கை வங்கி அணுசரணையாளர்களாக திகழ்ந்தது. வெற்றிப் பெற்றவர்களுக்கு விருதுகளும் பரிசில்களும் வழங்கப்பட்டன. நாடு முழுவதிலும் இருந்து அனைவரதும் அமோக வரவேற்பை இந்த போட்டி பெற்றது. தேசிய, மாகாண, பாடசாலை மட்ட வெற்றியாளர்களுக்கு பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இதன் மூலம் அவர்கள் பயன் பெற்றனர்.

சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு

- சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் போதை பொருள் தடுப்பு தொடர்பான இளைஞர் முகாம் - பொலன்னறுவையில் இடம்பெற்றது.
- நாடுமுழுவதிலும் காணப்படுகின்ற பல்வேறு பாடசாலைகளில் நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டிக்கும் விளையாட்டு போட்டிக்கும் அணுசரணையாளர்களாக திகழ்ந்தமை.
- மேடை நாடகங்கள் இசை நிகழ்ச்சிகள் போன்றவற்றுக்கு அணுசரணையாளர்களாக திகழ்ந்தமை.
- சர்வதேச நீர் தினத்தை கொண்டாடும் முகமாக தேசிய நீர் மற்றும் வடிகால் அமைப்பு சபை நடத்திய நிகழ்ச்சிக்கு அணுசரணையாளர்களாக திகழ்ந்தமை.



"புஞ்சி பிக்காஸோ" வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு

சிறந்த சுகாதாரம் மற்றும் நலனோம்புகை ஆகியவற்றை மேம்படுத்துதல்



நீண்ட கால சிறுநீரக நோய் மற்றும் வைத்திய-சாலைகளில் போதிய உட்கட்டமைப்பு வசதியினை போன்ற சுகாதார ரீதியான பிரச்சனைகளை இல்லாதொழிக்கும் நோக்குடன் வங்கி பங்களிப்புகளை நல்கியது. மற்றும் வங்கி ஊழியர்களின் சுகாதாரம் மற்றும் உடல் நலம் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்குடன் அவர்களுக்கு உடற்பயிற்சிகூடம் மற்றும் ஏனைய விளையாட்டு சார்ந்த உதவிகளை இலங்கை வங்கி வழங்கியது.

- **சமூக சுகாதாரம் மற்றும் சமூக நலம் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்குடன் இலங்கை ரூபாய் 8.9 மில்லியன்,** CSR **நன்கொடைகள் வழங்கப்பட்டன.**
- **உடற்பயிற்சிகூடத்தில் பங்குபற்றுவதற்கென தம்மை பதிவு செய்து கொண்ட மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 1,020.**

அனைவருக்கும் நீர் மற்றும் துப்புரவாக்கும் வசதிகள்



அரச நீர் வழங்கல் கருத்திட்டங்களுக்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு கடன் வழங்கியமை எமது பிரதான பங்களிப்பாகும். கிராமிய மக்களுக்கு நீர் தூய்மையாக்கல் வசதிகளை வழங்கும் முகமாக மகாவலி அதிகாரசபைக்கு உதவிகளை நாம் வழங்கினோம்.

- **பெருநிறுவன பிரிவினால் நீர் விநியோக கருத்திட்டங்களுக்கென இலங்கை ரு. 17 பில்லியன் நிதியிடப்பட்டது.**
- **அவசியமாக சமுதாயங்களுக்கு நீர் தூய்மைப்படுத்தல் இயந்திரங்களை வழங்குவதற்காக மகாவலி அதிகார-சபையுடன் கூட்டிணைந்து சமூக நல நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன**

வாழ்வாதார அபிவிருத்தி

- "அபேக்ஸா" வைத்தியசாலையில் சிறுவர்களுக்கான ஓவியக் கண்காட்சியொன்று இடம்பெற்றது. அத்துடன் சர்வதேச சிறுவர்த்தினத்தை கொண்டாடும் முகமாக மகிழ்வூட்டும் நிகழ்வுகளும் இடம்பெற்றன. சாதாரண சிறுவர் பராயத்தை அனுபவிக்கமுடியாத சிறுவர்களது வாழ்க்கையில் சில மாற்றங்களை, சிறப்பான விடயத்தை ஏற்படுத்துவதாக இந்நிகழ்வு காணப்பட்டது. அவர்களது ஓவியம் சார்ந்த செயற்பாடுகள் வைத்தியசாலையில் தனியான ஓர் இடத்தில் காட்சிப்படுத்தப்பட்டன.



அபக்ஸா வைத்திசாலை ஓவிய கண்காட்சி

- எதிர்காலத்திற்கான வழிகாட்டி என்ற கருத்தரங்கானது பிள்ளைகள் மத்தியில் நிதிரீதியான ஒழுக்கத்தை ஏற்படுத்தியது. அத்தோடு மாணவர்களது மென்திறன்கள் வளர்ச்சிக்கும் அவர்கள் மத்தியில் பொறுப்புணர்வை வளர்ப்பதற்கும் இது உதவியதுடன் எதிர்காலத்தில் சமூகத்தில் சிறந்த பிரஜைகளை உருவாக்கும் நோக்குடன் நிதிரீதியான உதவிகளும் வழங்கப்பட்டன. இந்த கருத்தரங்கில் ATM, CDM இயந்திரங்களை எவ்வாறு பயன்படுத்துவது அத்தோடு இணைய வங்கி வசதிகள், நடமாடும் வங்கி முறை போன்றவற்றையும் எவ்வாறு பயன்படுத்துவது, மக்களுடன் எவ்வாறு வேலை செய்வது, தொழில் முன்னேற்றம் மற்றும் வேலை வாய்ப்பு தொடர்பான தெரிவுகள், இணையத்தை முறையாக பயன்படுத்துவதன் மூலம் சுய விருத்தி போன்ற விடயங்கள் மேற்கொள்ளப்பட்டன. நாடு முழுவதிலும் 171 கருத்தரங்குள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் 40,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்பெற்றனர்.
- Little Heart என்ற நிகழ்ச்சித் திட்டத்திற்கு அனுசரணை வழங்கியமை.

ஈடுபாடுகள்

நிறுவன நலனில் அக்கறையுடையவர்களுடன் பிரதானமாக பின்வரும் ஈடுபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- ஊடக விளம்பரங்கள், அறிவித்தல்கள்
- இணையத்தளம் மூலமான அறிவித்தல்கள்
- வங்கியின் உத்தியோகபூர்வ சமூக வலைத்தள நிகழ்ச்சிகள்
- விநியோகஸ்தர்கள் மற்றும் சேவை வழங்குநர்களுடான கூட்டங்கள்
- வெளியாருக்கு வேலைகளை வழங்குவது தொடர்பான வங்கியின் கொள்கைகள் மற்றும் ஏனைய உள்ளக செயன்முறை ஆவணங்கள்
- தொடர்பாடல் வங்கிகளுடான எழுத்து மூல தொடர்பாடல்கள்

ஒழுங்கமைப்பாளர்கள்

அனுமதிபெற்ற வர்த்தக வங்கி என்ற முறையில் இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்கமைக்கப்படுகின்றது. அதன் பணிப்புரைகள், வழிகாட்டிகள், ஒழுங்கு விதிகள் ஆகியவற்றிற்கு ஏற்ப நடந்துக் கொள்ளல் வேண்டும். இத்தகைய ஒழுங்கு விதிகளை வங்கி மீறும் பட்சத்தில் அதன் மீது தண்டம் (நிதி சார்ந்த அல்லது வேறுவிதமான) விதிக்கப்படலாம். இதன் காரணமாக வங்கியின் நற்பெயர் பாதிப்படையலாம்.

அதேபோல் ஏனைய நிறுவனங்களினால் விநியோகிக்கப்படுகின்ற பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டிகள் ஆகியவற்றிற்கு ஏற்பவும் வங்கி நடந்துக்கொள்ளல் வேண்டும். இவற்றுள் உள்நாட்டு இறைவரி திணைக்களம், கொழும்பு பங்குச்சந்தை, கடன் தகவல் பணியகம் போன்றன உள்ளடங்கும்.

எழுத்துமூல தொடர்பாடல்கள், கூட்டங்கள், கலந்துரையாடல்கள் ஆகியவற்றின் மூலம் அடிப்படையில் வங்கியானது இத்தகைய நிறுவனங்களுடன் ஈடுபாடுகளை மேற்கொள்கின்றது. இத்தகைய நிறுவனங்களுடன் செயற்படுவதன் காரணமாக அன்றாட தொழிற்பாடுகள் சுமூகமாக நடைபெறுவதற்கு வங்கி உதவுகின்றது. இதன் மூலமாக வங்கியின் நற்பெயருக்கு பாதகம் அல்லது இடர் ஏற்படுவதை தவிர்க்க முடியும்.



எதிர்கால கருத்தரங்கு தொடர்களுக்கான வழிகாட்டி

கைத்தொழில் துறை தொடர்பான அமைப்புகளுடன் உறுப்புரிமை

பின்வரும் நிறுவனங்கள், அமைப்புகள் ஆகியவற்றுடன் இலங்கை வங்கிக்கு உறுப்புரிமை உள்ளது.

- ஆசிய பசுபிக் கிராமிய விவசாய கடன் அமைப்பு (APRACA)
- வங்கித்துறை இடர் தொடர்புபட்ட தொழில்வாண்மை அமைப்பு, இலங்கை
- இலங்கை வங்கியாளர்கள் நிருவகம்
- சர்வதேச வணிகச் சபை, இலங்கை
- தேசிய வணிகச் சபை, இலங்கை
- இலங்கை வங்கியாளர்கள் அமைப்பு (உத்திரவாதப்படுத்தப்பட்டது)
- இலங்கை சட்ட நூலகம்
- சிலோன் வர்த்தக சபை
- இலங்கை நிதிரீயான (உத்திரவாதப்படுத்தப்பட்டது)
- வங்கிகள் சார்ந்த இணக்க அதிகாரிகள் அமைப்பு, இலங்கை
- இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

ஸ்த்திரத்தன்மைமிக்க அபிவிருத்திற்கான பங்காளர்த்துவம்

17 இலக்குகளுக்கான பங்காண்மை



வங்கியிடம் பல்வேறு வகையான வலையமைப்புகள் சார்ந்த தொடர்புகள் காணப்படுகின்றன. இவற்றுள் அரச, அரசாங்க அமைப்புகள் மற்றும் சர்வதேச அமைப்புகள் போன்றன உள்ளடங்கும். பல்வேறுவிதமான சர்வதேச அமைப்புகளுடன் பங்காளராக வங்கி காணப்படுகின்றது. இவற்றுள் ஸ்த்திரத்தன்மைமிக்க வங்கி முன்னெடுப்புகளும் உள்ளடங்குகின்றன.

- **அனைத்து இலத்திரணியல் கழிவுகளும் CEA இனால் அங்கீகரிக்கப்பட்ட முகவரிடம் கையளித்ததன் ஊடாக அகற்றப்பட்டது**
- **Digital முறைப்படுத்தலின் ஊடாக 259,892 A4 தாள்கள் மீதப்படுத்தப்பட்டன.**

எமது பாரிய சொத்துக்களை வழிநடத்துதல்



மொத்த ஊழியர்கள்

7,587

பெண்கள்

57%

ஆண்கள்

43%

வருட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மொத்த பயிற்சி மணித்தியாலங்கள்

11,884

வருடகாலப்பகுதியில் பதவி உயர்வுகள்

1,831

வருடகாலப்பகுதியில் ஆட்சேர்ப்புகள்

534

2

ஊர்காவற்துறை, திருகோணமலை ஆகிய இடங்களில் புதிய விடுமுறை இல்லங்கள் நிர்மாணிக்கப்பட்டன.

மொத்த தேய்வு வீதம்

0.3%

மனித மூலதனம்

பால்நிலை சமத்துவம்



வேலைவாய்ப்புகள் உள்ளடங்களாக தமது எவ்வித செயற்பாடுகளிலும் பால்நிலை ரீதியான பாரப்பட்சங்களை வங்கி காட்டுவதில்லை வங்கியின் ஊழியர்களில் 57 வீதமானவர்கள் பெண்களாக இருப்பதும் 57 வீதமான பதவி உயர்வுகள் பெண்களுக்கு வழங்கப்பட்டிருப்பதும் இதனை உணர்த்துகின்றது.

- **மொத்த ஊழியர்கள் ஆண்: பெண் - 1:1.3**
- **சிரேஷ்ட முகாமைத்துவம் (பிரதான முகாமையாளர் மற்றும் அதற்கு மேல்) ஆண், பெண் வீதம் - 2.1:1**

நீடித்த தொடர்ச்சியான மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல்



7,587 எமது ஊழியர்கள் சிறப்பான ஊதியத்தை பெறுகின்றனர். அத்தோடு அவர்களுக்கு தொழில் பாதுகாப்பு காணப்படுவதுடன் சிறப்பான ஓய்வூதிய நன்மைகளையும் பெறுகின்றனர்.

- **ஊழியர்களுக்கான செலவு இலங்கை ரூபாய் 17 பில்லியன்**
- **புதிதாக ஆட் சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 534.**

புலமை மற்றும் உற்பத்திசார் மூலதனம் என்ற வடிவத்தில் எத்தகைய சொத்துக்கள் வங்கியிடம் காணப்பட்ட பொழுதிலும் கூட எமது வளர்ச்சிற்கான பிரதான காரணியாக, பிரதான சொத்தாக எமது மனிதவளங்கள் காணப்படுகின்றன. 2012 முதல் 2017 வரையில் எமது ஊழியர்கள் வழங்கிய பங்களிப்பு தொடர்பான விடயங்கள் காட்டப்பட்டுள்ளன. எமது சொத்துக்களானது ரூபாய் 1 டிரில்லியனிலிருந்து 1.9 டிரில்லியனாக அதிகரித்துள்ளது. எமது பணியாளர்களின் எண்ணிக்கை 7,790 இலிருந்து 7,587 ஆக குறைந்துள்ளது. நவீன தொழிநுட்பத்தை பயன்படுத்துகின்றமை ஒரு பிரதான காரணியாக திகழ்ந்தப் பொழுதிலும் கூட எமது பணியாளர்களது திறமை, திறன்கள், அறிவு, அர்ப்பணிப்பு ஆகியன இன்றிய சூழ்நிலையில் இவற்றை அடைய முடியாது. இவர்களின் துணிவுடனேயே தொழிநுட்பத்தை பயன்படுத்தி உச்ச நன்மையை அடைய முடிந்தது. நாம் கட்டியெழுப்பிய எமது வங்கியின் நற்பெயருக்கு எமது ஊழியர்கள் வழங்கிய பங்களிப்பானது சிறப்பானதாகும். நாம் வென்ற விருதுகளுக்கும் பரிசில்களுக்கும் இவர்களது பங்களிப்பு அதேபோல் முக்கியமானது. எமது நிதிரீதியான மூலதனத்தை கட்டியெழுப்பியமைக்கான சிறப்பும் இவர்களையே சார்ந்ததாகும்.

எமது குழுவானது 43 வீதம் ஆண்களையும் 57 வீதம் பெண்களையும் கொண்டுள்ளது. எனவே பால்நிலை ரீதியான பாரப்பட்சம் காட்டப்படவில்லை என்பதற்கு இது சிறந்த உதாரணமாகும். அதேபோல் அடிப்படை சம்பளம் மொத்த ஊதியம் ஆகியன ஆண், பெண் இருபாலாருக்கும் எவ்வித பேதமும் இன்றி பணியாளர்களுக்கு உரிய வகையில் வழங்கப்படுகின்றன என்ற விடயமானது இதனை மீள் உறுதிப்படுத்துகின்றது. இரண்டு மாகாணங்களைப் பொருத்தவரையில் அதிகமான பெண் ஊழியர்கள் காணப்படுகின்றனர். மிகவும் சிரேஷ்ட வகைகளை கருத்திற்கொண்டு நோக்குகையில் கிளை முகாமையாளர்கள், உதவி முகாமையாளர்கள், சிரேஷ்ட முகாமையாளர்கள் மற்றும் பிரதான முகாமையாளர்கள் ஆகியன தொடர்பான பெண்கள் வீதம் முறையே 57%, 47%, 38% ஆகும்.

ஆட்சேர்ப்பு

தொழில் வகை	ஆண்	பெண்	மொத்தம்
முறை பகுப்பாய்வாளர்/நிகழ்ச்சி திட்டமிடுனர்	15	10	**25**
பயிற்சி உதவியாளர் சட்ட அதிகாரி	2	17	**19**
பாதுகாப்பு தலைவர்	1	0	**1**
சபைக்கான உதவிச் செயளாலர்	0	1	**1**
பயிற்சியாளர் பல்வகை கடமை உதவியாளர்	16	3	**19**
பாதுகாப்பு உதவியாளர்	145	2	**147**
முகாமைத்துவ பயிற்சியாளர்கள்	98	224	**322**
மொத்தம்	277	257	**534**

ஆட்சேர்ப்பு செயன்முறைகள்

மிகவும் திறமையானவர்களே ஆட்சேர்க்கப்படுகின்றார்கள் என்பதை உறுதிச்செய்யும் முகமாக இலங்கை வங்கியிடம் மிகவும் உயர்வான தொழில்வாண்மைமிக்க கட்டமைக்கப்பட்ட ஆட்சேர்ப்பு செயன்முறைகள் காணப்படுகின்றன. எமது ஆட்சேர்ப்பு. செயன்முறையின் பொழுது பாடம் சார்ந்த விடயங்கள மாத்திரம் அல்ல தொழிநுட்பம் சார்ந்த விடயங்களில் காணப்படுகின்ற அறிவு அவர்களிடமுள்ள மென் திறன்கள் ஆகியவற்றிற்கும் நாம் முக்கியத்துவம் அளிக்கின்றோம். எமது பெரும்பாலான ஆட்சேர்க்கப்பட்டவர்கள் முகாமைத்துவ பயிற்சியாளர்களாகவும் தனியார் தொகுதி உதவிப்பணிகளுக்கும் ஆட்சேர்க்கப்படுகின்றனர். எமது ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் ஆனது வெளிப்படைத் தன்மையுடன் இடம்பெறுவதுடன் எவ்வித பக்கசார்பற்ற முறையில் இடம்பெறுகின்றது. எமது வங்கியில் இணைந்து கொள்வதற்கு ஆர்வம் உடையவர்கள் அவர்களது இனம், வயது, பால்நிலை அல்லது சமூக அந்தஸ்து எதுவாக இருந்தபோதிலும் கூட திறமையை அடிப்படையாக கொண்ட பரீட்சையொன்றுக்கு தோற்றுகின்றனர். எமது நிறுவனத்தில் ஆட்சேர்க்கப்படுகின்றவர்களது திறன்களை மதிப்பிடுவதற்காக நாம் மிகவும் கவனமாக செயற்படுகின்றோம். அத்தோடு அவர்கள் எந்ததுறைக்கு மிகப்பொருத்தமானவர்களோ அந்ததுறையில் அவர்களை வேலைக்கு அமர்த்து-கின்றோம். ஆட்சேர்ப்பின் பொழுது புதிதாக ஆட்சேர்க்கப்படுகின்ற சகலரும் ஓர் தொழில் தேர்ச்சியை சார்ந்த பயிற்சியை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இச்சந்தர்ப்பத்தின் பொழுது தொழில் சார்ந்த கலாசாரம், ஒழுக்கநெறிமுறைகள் ஆகியன அவர்களுக்கு கற்றுக்கொடுக்கப்படுகின்றன. நாம் ஆட்சேர்க்கின்ற பொழுது புவியியல் சார்ந்த விடயங்களுக்கும் இயலுமானவரை முக்கியத்துவம் வழங்குகின்றோம். இதன் காரணமாக அவர்களது வீட்டிற்கு அருகில் இருக்கின்ற இடங்களில் வேலைக்கு அமர்த்தப்படலாம்.

பயிற்சி மற்றும் அபிவிருத்தி

எமது பணியாளர்களது திறன்களையும் ஆற்றல்களையும் அதிகூடிய அளவிற்கு விருத்தி செய்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் அவர்கள் தமது தொழில் சார்ந்த அபிலாசைகளை முழுமையாக பூரணப்படுத்த முடியும் என நம்புகின்றோம். சிறப்பான வாடிக்கையாளர் சேவைகளை வழங்கக்கூடிய அறிவு மற்றும் பண்புகள் ஆகியவற்றை அவர்கள் மத்தியில் வளர்க்கக்கூடிய விடயங்களுக்கும் நாம் மிக முக்கியத்துவம் அளிக்கின்றோம். எனவே பயிற்சி சார்ந்த தேவைகள் திட்டமிடல் பயிற்சிகள் ஆகியவற்றை உறுதிப்படுத்திக்கொள்ளும் முகமாக வங்கியிடம் முறையான செயன்முறைகள் காணப்படுகின்றன. பயிற்சி சார்ந்த தேவைகள் ஆனது ஊழியரின் மேற்பார்வையாளர் அல்லது ஊழியரினால் இனங்காணப்படுகின்றது. வங்கியிடம் பயிற்சி தொடர்பான திட்டங்கள் காணப்படுகின்றன. முன்கூட்டியே திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேவேளை அவ்வப்போது அவசியமான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. செயலாற்றுகை மீளாய்வு செயன்முறையின் பொழுது சம்பந்தப்பட்ட ஊழியரின் உடன்பாட்டுடன் மேற்பார்வையாளரினால் பயிற்சி தொடர்பான தேவைகள் இனங்காணப்படுகின்றன. மேலும் வருட காலப்பகுதியின் பொழுது துறைசார்ந்த எதாவது புதிய ஒழுங்கமைப்பு மாற்றங்கள் அல்லது புதிய அபிவிருத்திகள் இடம்பெறுமாயின் அவை தொடர்பில் ஊழியர்கள் தமது அறிவை இற்றைப்படுத்திக்கொள்ளும் முகமாக பொருத்தமான பணியாளர்கள் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள்.

செயலாற்றுகை மீளாய்விற்கு மேலதிகமாக சகல மட்டத்திலான ஊழியர்களுக்கும் ஏற்புடைய சிரேஷ்ட முகாமையாளர் தரங்கள் மற்றும் அதற்கு மேல் உடைய அத்தகைய தரத்தில் இரண்டு வருடங்களை பூர்த்தி செய்தவர்களுக்காக விசேட திறன் முகாமைத்துவ செயன்முறை ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது. அடுத்தமட்ட தலைவர்களை விருத்திசெய்யும் நோக்கை மையமாக கொண்டு இச்செயன்முறை இடம்பெறுவதன் காரணமாக முகாமைத்துவத்தின் கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டே எத்தகைய தரத்திற்கு இவை நடைபெறுகின்றன என்ற விடயம் தீர்மானிக்கப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியின் பொழுது சிரேஷ்ட முகாமையாளர்களுக்கென திறன் முகாமைத்துவ விருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்ட பிரதான துறையாக பின்வருவன காணப்படுகின்றன. அவையாவன, மாற்றம் சார்ந்த திசைமுகப்படுத்தல், விளைவு மைய திசைமுகப்படுத்தல், உபாயரீதியான திட்டமிடல், தீர்மானம் மேற்கொள்ளல், தலைமைத்துவம் மற்றும் தொழில்வாண்மை சார்ந்த நடத்தைகள்.

இது 360 பாகை மைய மதிப்பீடாகும். இச்சந்தர்ப்பத்தின் பொழுது நிறைவேற்று முகாமைத்துவ உறுப்பினர் ஒருவரினால் (இவர் மீளாய்விற்கு நேரடியாக அறிக்கையிடுபவர் அல்ல) மேற்பார்வையாளர்கள் கீழ் பணியாற்று-வார்கள், சகபாடிகள் ஆகியோரது கருத்துக்கள் இத்தருணத்தில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. மீளாய்வு செய்யப்பட்ட தீர்மானமானது மீயாள்வுக் குழுவொன்றினால் மதிப்பீடு செய்யப்படுகின்றது. அதாவது திறமை முகாமைத்துவ மீளாய்வுக் குழுவினாலும் மதிப்பீடு செய்யப்படுகின்றது. இந்த செயன்முறையின் பிரதான நோக்கம் பயிற்சி சார்ந்த தேவைகளை இனங்காண்பதுடன் அடுத்தமட்ட தலைவர்கள் தொடர்பான தொழில்வாண்மை முன்னேற்றம் தொடர்பான வழிமுறைகளை ஆலோசிப்பதாகும்.

தகைமை படைத்த பயிற்சியாளர்களை உள்ளடக்கிய சிறப்பான மத்தியப்படுத்தப்பட்ட பயிற்சி நிருவகம் ஒன்று வங்கியிடம் காணப்படு-கின்றது. இதில் ஐந்து முழுநேர தனியார் தொகுதியுடன் காணப்படுவதுடன் 120 உதவிகளை நல்கும் உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். இப்பயிற்சி நிலையத்தில் கேட்போர் கூடமொன்று காணப்படுகின்றது. இதில் 100 பேர் அமர்வதற்கான வசதிகள் உள்ளன மற்றும் ஐந்து விரிவுரை அறைகள் காணப்படுகின்றன. மொத்தமாக 260 பேர் அமர முடியும். தொலைதூர மாவட்டங்கள் அல்லது மாகாணங்களிலிருந்து பயிற்சியில் பங்குபற்றும் ஊழியர்களுக்கு தங்குமிட வசதிகளும் இங்கு வழங்கப்படுகின்றன. அதேபோல் எமது தலமையகத்திலும் கேட்போர் கூடமொன்று காணப்படுகின்றது. இங்கு 225 பேர் இந்த கேட்போர் கூடத்தில் அமரலாம். அத்தோடு 80 பேர் அமரக்கூடிய வசதிகளுடன் கூடிய இரண்டு பயிற்சி அறைகள் காணப்படுகின்றன.

இவ்வருட காலப்பகுதியின் பொழுது மொத்தமாக 442 உள்ளக பயிற்சி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் கால அளவு 4087 மணித்தியாலங்கள் ஆகும். மேலும் உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த ஏனைய நிறுவனங்கள் மூலம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய பயிற்சிகளுக்கான தேவை அடையாளம் காணப்பட்ட பொழுது இப்பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு ஏனைய நிறுவனங்களினால் மொத்தம் 309 நிகழ்ச்சி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றின் மொத்த கால அளவு 2997 மணித்தியாலங்கள் ஆகும். மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் 120 நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இப்பயிற்சிகளில் பங்குபற்றிய அதிகாரிகள் மொத்தமாக 4,800 மணித்தியாலங்களை பயிற்சிக்காக செலவிட்டனர்.

இந்த மூன்று வகையான பயிற்சிகளுக்குமான மொத்த செலவு இலங்கை ரூபாய் 322 மில்லியன் ஆகும். இத்தகைய பயிற்சி நெறிகளின் பொழுது அதிகமான பயிற்சிகள் பின்வருவன தொடர்பில் மேற்கொள்ளப்பட்டன.

வங்கி தொழிற்பாடுகள், கடன் மற்றும் அறவிடல், இணக்கப்பாடுகள், தகவல் தொழிநுட்பம், உள்ளக கட்டுப்பாடு, கடன் கொடுத்தல் மற்றும் திறன்கள் அபிவிருத்தி, முகாமைத்துவம் போன்றன.

சராசரியாக ஒரு பணியாளர் மூன்று பயிற்சி நெறிகளில் வருடகாலத்தின் பொழுது பங்குபற்றினார் இவ்வருட காலப்பகுதியின் பொழுது ஊழியர் ஒருவர் ஆகக்குறைந்தது இரண்டு பயிற்சிகளிளாவது பங்குபற்றினார். அடுத்து மேற்கொள்ளவிருக்கின்ற திட்டங்கள் எமது ஊழியர்களின் தொழில் சார்ந்த விருத்தியை கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்பட்டன. இதற்கென தெரிவு செய்யப்படுகின்ற தனியார் தொகுதியினர் அடுத்தமட்ட நிலைகளுக்கென தயார்ப்படுத்தப்படுகின்றனர். இத்தகைய செயன்முறைகள் மூலம் தனியார் தொகுதிகளினது தொழில் சார்ந்த திறமைகள் மேம்படுத்தப்படுவது மட்டுமல்லாது வங்கியிலிருந்து ஒருவர் ஓய்வு பெறுகின்ற பொழுது அவரினால் ஏற்படுகின்ற வெற்றிடத்தை வங்கியால் காத்திரமாக நிரப்பவும் முடிகின்றது. ஆரம்ப மட்ட நிலைகளில் நியமனங்கள் வழங்கப்படுவதற்கு மேலதிகமாக பதவி உயர்வுகளும் தற்போது பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்றது. சில விசேட திறன் சார்ந்த விடயங்கள் தொடர்பில் அவசியம் ஏற்படுகின்றவிடத்து விதிவிலக்கு-களும் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தகைய சந்தர்ப்பங்களில் வெளியிலிருந்து நிபுணத்து-வங்களை பெற்றுக்கொண்டு அவர்களது ஆலோசணைகளும் பெறப்படுகின்றன.

ஊழியர்களது அறிவு மற்றும் திறன்கள் ஆகியன மதிப்பீடு செய்யப்பட்டு பரீட்சைகள் மற்றும் அதனை தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்ற நேர்முகத்தேர்வுகள் ஆகியவற்றின் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டில் அத்தகைய ஒன்பது பரீட்சைகள் மேற்கொள்ளப்பட்டன. வருட காலப்பகுதியின் பொழுது.



எமது ஊழியர்களுக்கான வெளிக்களப் பயிற்சி

மொத்தமாக 1,831 பணியாளர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டது.

முறைசார்ந்த பயிற்சி அமர்வுகளுக்கு மேலதிகமாக எமது பணியாளர்கள் தமது திறன்களை விருத்தி செய்வதற்கான ஏனைய வாய்ப்புகளையும் நாம் வழங்குகின்றோம். எமது CTI பயிற்சி நிலையத்தில் சகல வசதிகளுடன் கூடிய நூலகம் ஒன்று காணப்படுகின்றது. இதனை சகல ஊழியர்களும் பயன்படுத்திக் கொள்வதற்கு உற்சாகப்படுத்தப்படுகின்றனர். அத்தோடு மின்னியல் நூலகம் ஒன்றும் காணப்படுகின்றது. இதன் மூலம் பயன்தரக்கூடிய பல்வேறு விதமான விடயங்களை எமது ஊழியர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

வயது, அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் நோக்குகையில் எம்மிடம் பல்வகைமை பொருந்திய பணியாளர்கள் காணப்படுகின்றனர். எமது பணியாளர்களுள் 65 வீதமான பணியாளர்கள் 34 வயதை விட குறைவானவர்கள் என்பது கருத்தித்கொள்ளத்-தக்கது. அதாவது கனிஷ்ட மட்டத்தில் இளம் சமூகத்தினர் தொழிநுட்ப அறிவு படைத்தவர்களாக காணப்படுவதுடன் டிஜிட்டல் மற்றும் தொலைபேசி முறைகளை நன்கு கையாளக்கூடியவர்களாக இருக்கின்றனர். இது எமக்கு ஒரு சாதகத் தன்மையை வழங்கி வருகின்றது. அதேவேளையில் வங்கியில் நிலவுகின்ற சிரேஸ்ட தராதர பதவிகளுக்கென நன்கு முதிர்ச்சிப் பெற்ற ஊழியர்கள் இருக்கின்றனர். இது எமக்கு கிடைக்கக்கூடிய மற்றுமொரு நன்மையாகும். இவ்வாறு முதிர்ச்சியடைந்தவர்களும் இளைஞர்களும் கலந்து காணப்படுவதன் காரணமாக சிறப்பான இயங்காற்றலையும் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையையும் இவை வழங்குகின்றன.

அதேநேரம் எமது இளைஞர்கள் சிரேஷ்ட பதவிகளை ஏற்கக்கூடிய விதத்தில் அவர்களை அதற்கென தயார்படுத்தக்கூடிய விதத்தில் எமது அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் காணப்படுகின்றன. வருடகாலப் பகுதியின் பொழுது 14 வெளிநிலை பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் மொத்தமாக 1,239 பணியாளர்கள் நன்மைப் பெற்றனர்.

மனித உரிமைகள்

இலங்கை வங்கியானது தனது சகல ஊழியர்களதும் மனித உரிமைகளை மதிக்கின்றது. அத்தோடு தனது சகல ஊழியர்களும் எவ்வித பாரபட்சமும் இன்றி உரிய தன்மானத்துடனும், மதிப்புடனும் நடத்தப்படுகின்றார்கள் என்பதை உறுதிசெய்து கொள்வதற்கு ஏற்ற முறைகள் காணப்படுகின்றன. எந்த சந்தர்ப்பத்திலும் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துகின்ற செயலை நாம் மேற்கொள்வதில்லை. உள்நாட்டு மற்றும் சர்வதேச தராதரங்களுக்கு ஏற்பவே எமது சகலவிதமான மனித வளங்கள் செயற்பாடுகளும் காணப்படுகின்றன. கூட்டிணைந்த பேரம்பேசல் அடிப்படையிலான தீர்மானம் மேற்கொள்ளல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. எமது 98 வீதமான ஊழியர்கள் ஏதோ தொழிற்சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். அத்தோடு தொழிற்சங்கங்களுடன் சுமூகமான உறவுகள் பேணப்படுகின்றன.

எமது ஊழியர்கள் மத்தியில் காணப்படுகின்ற துன்பங்களை கலைந்தெரியவும் அவை தொடர்பில் செயற்படும் நோக்குடனும் துன்பங்களை கையாளுதல் தொடர்பான பொறிமுறைகளை நாம் உருவாக்கியுள்ளோம்.

மனக்குறைகள்

	இலக்கம்
2016 இலிருந்து முன் கொண்டு வரப்பட்டவைகள்	04
2017 இல் அறிக்கையிடப்பட்ட மொத்த துன்பச் சம்பவங்களின் எண்ணிக்கை	19
2017 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்ட துன்பச் சம்பவங்களின் எண்ணிக்கை	14
2017 ஆம் ஆண்டின் இறுதியில் நிலுவையில் உள்ள துன்பச் சம்பவங்களின் எண்ணிக்கை	09



புதிதாக உள்வாங்கப்பட்ட முகாமைத்துவ பயிற்சியாளர்களுக்கான அறிமுக நிகழ்வு

எமது பணியாட் தொகுதியினரை உற்சாகப்படுத்தல்

ஊழியர்களுக்கு எது சிறப்பானதோ அதனை வங்கிக்கும் சிறப்பானதாக மாற்றியமைத்துக்-கொள்வது எமது உபாயமாகும். வங்கி தனது இலக்குகளை அடைவதற்கு ஏற்ற விதத்தில் ஊழியர்கள் செயற்படக்கூடிய விதத்தில் அவர்களை உந்தக்கூடிய உற்சாகப்படுத்தக்கூடிய விருதுகள் மற்றும் அங்கீகார செயன்முறைகளை உருவாக்குவதாகும். எமது அபிவிருத்தி மற்றும் பயிற்சி சார்ந்த செயற்பாடுகள் இந்நோக்கத்தை அடையும் முகமாக நீண்ட கால அடிப்படையில் பங்களிப்புகளை நல்குகின்றன. நாம் செயலாற்றுகை மையய கலாசாரமொன்றை உருவாக்கியுள்ளோம். இது குறுகியகால மற்றும் நீண்டகால அடிப்படையில் பெறுமான உருவாக்கத்திற்கு உதவி செய்யும்.

நலனோம்புகை மற்றும் வேலை வாழ்நாள் ஆகியவற்றிக்கிடையிலான சமனிலை


பணியாளர்களுடைய உளத்திறத்தை, ஊழியர்களுடைய ஈடுபாட்டினை மேம்படுத்தக்கூடிய, பணியாளர்கள் ஓய்வுடன் செயற்படக்கூடிய வாயப்புகளை வழங்கக்கூடிய விதத்திலான செயற்பாடுகளுக்கு வங்கி அனுசரணை வழங்குவதுடன் அத்தகைய செயற்பாடுகளை நடத்தியும் வருகின்றது. இவற்றுள் அவர்களுடைய சிறந்த செயற்பாடுகளை அங்கீகரிக்கின்ற விடயங்களை மேற்கொள்வதுடன் சகல சமூகங்கள் மற்றும் கலாசார சமூகங்களுக்கு ஏற்ற விதத்தில் விளையாட்டு நிகழ்வுகள், சமய நிகழ்வுகள், கலாசார நடவடிக்கைகள் ஆகியவற்றை மேற்கொள்வதுடன் சுகாதாரம் சார்ந்த விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன.

வருடத்தின் பொழுது மேற்கொள்ளப்பட்ட அவ்வாறான சில செயற்பாடுகளானது சிறந்த கிளை தொடர்பான போட்டி, நீண்ட சேவை விருது, ஒவ்வொரு மாகாணத்திலும் வருடாந்த விளையாட்டுப் போட்டி, வங்கியின் வருடாந்த விளையாட்டு போட்டி இது இவ்வருடத்தில் அனுராதபுரத்தில் இடம்பெற்றது. சிறந்த இலங்கை வங்கி கிளைக்கானப் போட்டியில் 21 கிளைகளும் 165 பணியாட்களும் பாராட்டப்பட்டனர். அதேபோல் நீண்ட கால சேவை விருதில் மொத்தம் 234 பணியாளர்கள் பாராட்டப்பட்டனர். இலங்கை வங்கியின் பௌத்த சங்கமானது இவ்வருடம் வெசாக் தினத்தை முன்னிட்டு ஒரு நாள் சில் அனுபவிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை மேற்கொண்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பணியாளர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் சமய நடவடிக்கைகளில் பங்குபற்றினர். அத்தோடு எமது தலைமையகத்தில் இந்நிகழ்ச்சி இடம்பெற்றது. அதோபோல் கிறிஸ்மஸ் தினத்தை கொண்டாடும் முகமாக கிறிஸ்த்தவ அமைப்பினால் கிறிஸ்மஸ் கெரோல் நடத்தப்பட்டது. அதேபோல் மகா சிவராத்திரி தினத்தை கொண்டாடும் முகமாக விசேட பூஜை நிகழ்வுகள் இந்து சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

பிரதேச அடிப்படையில் தொழிற்படை

முழுநேர நிரந்தரம்

ஆண்	பெண்
3,236	**4,351**



வட மாகாணம்

	ஆண்	பெண்
2017	**241**	**231**
2016	248	235

கிழக்கு மாகாணம்

	ஆண்	பெண்
2017	**252**	**160**
2016	251	162

மத்திய மாகாணம்

	ஆண்	பெண்
2017	**237**	**346**
2016	254	354

ஊவா மாகாணம்

	ஆண்	பெண்
2017	**158**	**243**
2016	159	245

தென் மாகாணம்

	ஆண்	பெண்
2017	**192**	**439**
2016	206	445

வட மத்திய மாகாணம்

	ஆண்	பெண்
2017	**268**	**274**
2016	254	281

வடமேல் மாகாணம்

	ஆண்	பெண்
2017	**250**	**356**
2016	256	358

சப்ரகமுவ மாகாணம்

	ஆண்	பெண்
2017	**204**	**277**
2016	209	290


மேல் மாகாணம்

	ஆண்	பெண்
2017	**1,434**	**2,025**
2016	1,502	1,860

தொழிலாளர் வர்க்கம்

வகை/வருடங்கள்	18 இலிருந்து 24		25 இலிருந்து 34		35 இலிருந்து 44		45 இலிருந்து 54		55 இலிருந்து 60	
	2017	2016	**2017**	2016	**2017**	2016	**2017**	2016	**2017**	2016
கூட்டாண்மை முகாமைத்துவம்	**–**	–	**–**	–	**–**	–	**4**	4	**12**	13
நிறைவேற்று முகாமைத்துவம்	**–**	–	**–**	–	**1**	1	**15**	12	**32**	37
பிரதான முகாமையாளர்	**–**	–	**–**	–	**25**	8	**34**	27	**45**	55
சிரேஷ்ட முகாமையாளர்	**–**	–	**–**	–	**77**	68	**51**	57	**56**	80
கிளை முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளர்	**–**	–	**290**	160	**424**	321	**154**	127	**227**	304
முகாமைத்துவ பயிற்சியாளர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகள் தரங்கள்	**3**	2	**1,526**	1,438	**319**	353	**186**	204	**218**	253
ஆளணி உதவியாளர்கள் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட தரங்கள்	**76**	280	**2,935**	2,789	**133**	120	**100**	128	**105**	162
அலுவலக உதவியாளர்கள் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட தரங்கள்	**5**	9	**144**	141	**196**	183	**143**	151	**51**	82
மொத்தம்	**84**	291	**4,895**	4,528	**1,175**	1,054	**687**	710	**746**	986


பால் நிலை மற்றும் வகை அடிப்படையில் தொழிற்படை



மொத்த ஊழியர்கள்

	நிரந்தரம்		வெளிநிலை சேவைகள்		ஒப்பந்தம்		மொத்தம்	
2017	**3,236**	**4,351**	**1,363**	**36**	**151**	**7**	**4,750**	**4,394**
2016	3,339	4,230	1,242	28	26	5	4,607	4,263

சேவைகாலத்தின் அடிப்படையில் தொழிற்படை





ஊழியர்களும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களும் 2017 வெசாக் "சில்" வைபவத்தின் போது



சிறந்த கிளைக்கான போட்டி - 2017



வங்கியின் 78வது ஆண்டு நிறைவின் போதான இந்து மத வழிபாடு



நத்தார் கீதம் 2017

தனிப்பட்ட இலக்குகள், தனிப்பட்ட விபத்துகள் போன்றன ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் எமது பணியாளர்களுக்கு உதவிகளை நாம் வழங்கியிருக்கின்றோம்.

வங்கியின் சமூக மைய செயற்பாடுகளில் எமது ஊழியர்கள் காத்திரமாக பங்குபற்றியுள்ளனர். இத்தகைய நிகழ்வுகளை மேம்படுத்துவதன் மூலம் எமது ஊழியர்கள் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் தொழில் வாழ்க்கைக்கும் இடையில் சமனிலையை பேணக்கூடியதாக உள்ளது. நாம் மேற்கொண்ட சமூக மைய நலத்திட்டங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவற்றுள் எமது பணியாளர்கள் பங்குபற்றினர்.

1. 2017 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஏற்பட்ட அனர்த்தத்தின் பொழுது எமது ஊழியர்கள் தமது ஒரு நாள் சம்பளத்தை அன்பளிப்பாக வழங்கினர். அத்தோடு தமது உழைப்பையும் முன்னிருத்தி நாடு முழுவதிலும் இடம்பெயர்ந்து காணப்படுகின்ற மக்களுக்கு அவசியமான உலர் உணவுப் பொருட்களையும் வழங்கினர்.
2. வருட காலப் பகுதியின் பொழுது நாட்டிலுள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் எதிர்காலத்திற்கு வழிகாட்டுதல் என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. இவற்றுள் விசேடமாக பயிற்றப்பட்ட கிளை முகாமையாளர்கள் வளவாளர்களாக தொண்டர் அடிப்படையில் பங்குபற்றினர்.
3. கஹடகஸ்திகிலிய கிளை பணியாட்கள் சமூக நல மைய கருத்திட்டங்களை தியமைலாகசுவெவ வித்தியாலயத்தில் மேற்கொண்டனர். கிளைப் பணியாட்கள் வழங்கிய நன்கொடையை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் மத்தியில் 60 ரண்கெக்குழு கணக்குகள் திறக்கப்பட்டன.

எமது ஆட்சேர்க்கின்ற பணிகளை மாவட்ட அடிப்படையில் நாம் மேற்கொள்வதன் காரணமாக எமது ஊழியர்களுக்கு பெரிதும் உதவக்கூடியதாக இது திகழ்கின்றது. இவர்களது தொழில் வாழ்க்கைக்கும் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் இடையில் சமனிலையை பேண உதவுவதுடன் போக்குவரத்திற்கான நேரத்தையும் குறைக்கின்றது. நாடு முழுவதும் 11 விடுமுறை தங்கு நிலையங்களை வங்கி பேணி வருகின்றது. இதனை எமது பணியாளர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் பயன்படுத்த முடியும். 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொத்தமாக 14,872 பணியாளர்கள் இங்கு தங்குவதற்கான பதிவுகளை மேற்கொண்டிருந்தனர். இவ்வருட காலப்பகுதியின் பொழுது ஊர்காவற்துறை, மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் விடுமுறை விடுதிகள் திறக்கப்பட்டன. தொடர்ச்சியாக 7 நாட்கள் கட்டாய விடுமுறையை நிரந்தர பணியாட்கள் பயன்படுத்த வேண்டும் என்ற ஒழுங்குவிதிகள் தொடர்பான தேவைப்பாடுகளுக்கு ஏற்ப எமது சகல நிரந்தர ஊழியர்களும் இவ்விடுமுறையை பயன்படுத்தி வருகின்றனர். இதனை இலங்கை வங்கி கடுமையாக நடைமுறைப்படுத்துகிறது. இதன் காரணமாக எமது ஊழியர்கள் தொழில் வாழ்க்கைக்கும் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் இடையில் சுமுக நிலையை பேணக்கூடியதாக இருக்கின்றது.

சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

சுகாதாரமான ஆரோக்கியமான தொழிட்படையானது உண்மையில் ஒரு ஆக்கபூர்வமான தொழிற்படையாக திகழும். எனவே எமது சகல பணியாளர்களதும் சுகாதாரம் தொடர்பான விடயங்களுக்கு வங்கி முக்கியத்துவம் அளித்து வருகின்றது. வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுதல் உள்ளடங்களாக சத்திர சிகிச்சை வரையில் முழுமையான மருத்துவ உதவிகள் எமது சகல ஊழியர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் வழங்கப்படுகின்றது. தொழில் நேரத்தில் ஏற்படக்கூடிய மருத்துவ ரீதியான பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் முகமாக நிலையத்தை சேர்ந்த மருத்துவர் ஒருவர் சேவையில் ஈடுபட்டுள்ளார். முழுமையான பாதுகாப்பு நடைமுறைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. எமது பணியாளர்கள் பயன்படுத்தக்கூடிய விதத்தில் எமது தலைமை அலுவலகத்தில் உடற்பயிற்சிக்கூடம், யோகா பயிற்சி நிலையம் மற்றும் "எரோபிக்ஸ்"; உடற்பயிற்சி வசதிகள் போன்றன காணப்படுகின்றன. இவ்வருட காலத்தின் பொழுது சுமார் 1,269 பணியாட்கள் இந்த வசதிகளை பயன்படுத்தினர்.

தலைமை அலுவலகத்திலுள்ள ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு கிளையிலும் தீயணைப்பு படை அதிகாரிகள் காணப்படுகின்றனர். தீ ஏற்படும் பட்சத்தில் எவ்வாறு பாதுகாப்பாக நடந்துக் கொள்வது என்பது தொடர்பில் அறிவுறுத்தும் முகமாக தொடர்ச்சியாக இவை பற்றிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தலைமை அலுவலகத்தில் சகல கிளைகளும் சகல பிரதேசங்களையும் உள்ளடக்கக்கூடிய விதத்தில் CCTV கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. வங்கியின் பாதுகாப்பு சேவை திணைக்களத்தில் அனுபவமிக்க, அறிவு படைத்த பாதுகாப்பு அகிகாரிகள் சேவைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்பு சம்பந்தமான எந்த விடயத்தையும் கையாளுவதற்கான ஆற்றல்கள் இவர்களிடம் உண்டு.

ஓய்வூதிய நன்மைகள்

இலங்கை வங்கியின் ஒவ்வொரு ஊழியரும் இலங்கை சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களாக காணப்படுகின்றனர். இவ் ஊழியர்கள் தனது மொத்த சம்பளத்தில் 8 வீதத்தை செலுத்த வேண்டும் இதற்கு வங்கியின் பங்களிப்பு 12% ஆகும். அதேபோல் சகல ஊழியரகளும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் உறுப்பினர்களாக இருக்கின்றனர். மொத்த சம்பளத்தில் 3 வீதத்தை வங்கி செலுத்துகின்றது. 10 வருட சேவையை தொடர்ச்சியாக பூரணப்படுத்திய ஒவ்வொரு ஊழியரும் பங்களிப்பு செலுத்தாத ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்வதற்கு அறுகதையுடையவர்.

குறிப்பிட்ட வருட காலப்பகுதியின் பொழுது மனித உரிமைகள் செயன்முறைகள் தொடர்பில் நாம் பெற்றுக்கொண்ட வெற்றியானது மற்றும் எமக்கு கிடைத்த பரிசில்கள் ஆகியன எமது மனித உரிமைகள் முகாமைத்துவத்தின் தரத்தினை மீள் உறுதிசெய்கின்றன. எமது தேய்மான வீதம் ஆனது தொழிற்துறை சார்ந்த சராசரியை விட மிகவும் குறைந்ததாகவே காணப்படுகின்றது.

தானியங்கி மனித மூலதன முகாமைத்துவ முறை

எம்மிடம் மனித மூலதன முகாமைத்துவ முறையொன்று காணப்படுகின்றது. எமது பல்வேறுவிதமான மனித உரிமைகள் சார்ந்த விடயங்கள் தானியங்கு முறையில் இடம்பெறுகின்றன. எமது மனித வளங்களை வினைத்திறன்மிக்க முறையிலும் பயனுறுதிமிக்க முறையிலும் விருத்தி செய்வதற்கு ஏற்ற விதத்தில் இந்த முறைகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. வருட இறுதியில் ஊழியர் செயலாற்றுகை முகாமைத்துவம், முகாமைத்துவம் சார் கற்றல்கள், பணியாளர்கள் தேர்ச்சிகள், தொழில் விளக்கம், கொடுப்பனவுகள் தொடர்பான நிர்வாகம், ஊழியர் சுய சேவைகள் மற்றும் HCM தொடர்பான நலன்கள் நிர்வாக மாதிரிகள் ஆகியவை நேரடியாக பார்க்க முடியும். ஊழியர்களது இயங்காற்றல், மனித உரிமைகள் திட்டமிடல் மற்றும் அட்டவணைகள், தொழில் அட்டவணைகள் மற்றும் வியாபார புலமை அறிக்கைகள் ஆகியவற்றை விருத்தி செய்யும் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றை சோதித்து பார்த்ததன் பின்னர் நேரடியாக இவை நடைமுறைப்படுத்தப்படும்.

HCM முறையானது தொழில் சார் வாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் தொழில் வாய்ப்புகளை ஊழியர்களும் முகாமைத்துவமும் இனங்கண்டு அவற்றை பின்பற்றுவதற்கு இது இலகுபடுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மனித வளங்களுடன் தொடர்புடைய விடயங்களான பயிற்சி மற்றும் அபிவிருத்தி போன்றன இச்செயன்முறையை இலகுபடுத்தும் முகமாக முறையினுள் கொண்டுவரப்படும். மனித வளங்கள் தொடர்பான சகல பதிவுகளையும் அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் பெற்றுக்கொள்ள முடியும். இத்தகைய HCM முறை மூலம் பத்திரிகை சார்ந்த ஆவணப்பயன்பாட்டை குறைக்க முடியம்.

இவ்வருடத்தின் பொழுது விடுமுறை விண்ணப்பம் மற்றும் அவற்றை அங்கீகரித்தல் தொடர்பான செயன்முறைகள் முழுமையாக தானியங்கி முறைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

முன்நோக்கிய பயணம்

எமது 2018 - 2020 இற்கான பெருநிறுவன திட்டத்தில் எமது வங்கியை ஸ்த்திரத்தன்மை-மிக்கதாக திகழச் செய்யும் நோக்கிலும் இன்று துரிதமாக மாறிவருகின்ற சூழலுக்கு ஏற்ற நோக்கிலும் எமது தொழிற்படையின் திறன்கள் மனப்பாங்குகள், ஆற்றல்கள் ஆகியவற்றை வலுப்படுத்தும் நோக்கிலும் எமது மனித மூலதனத்தை விருத்தி செய்வதை இலக்காக கொண்டு நாம் செயற்படுகின்றோம். தொழில்வாண்மை, தொழிலுடன் தொடர்புடைய விசேட அறிவு, மென் திறன்கள் ஆகியவற்றை எமது ஊழியர்கள் மத்தியில் மேம்படுத்துவதை நோக்காக கொண்டு செயற்படுகின்றோம். அதேவேளை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதை நோக்காக கொண்டும் செயற்படுகின்றோம். பயிற்சி மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றிக்கு இது முக்கியமானதாகும்.

எதிர்காலத்தில் பின்வரும் விடயங்கள் தொடர்பில் ஒவ்வொரு ஊழியரும் பயிற்சியினைப் பெற்றுக்கொள்வார். தற்போதைய தொழில் வகிபாகம் - 40%, தனிப்பட்ட விருத்தி -30%, சேவை வழங்கல் மற்றும் விநியோகம் -30% விசேட திறன்கள் தொடர்பில் எமது ஊழியர்களின் ஆற்றல்களை பேணுவது தொடர்பில் கவனத்தை செலுத்துகின்ற அதேவேளை எமது ஊழியர்கள் மத்தியில் பல்துறை சார்ந்த விடயங்களை விருத்தி செய்வதன் முக்கியத்துவம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும்.

புரள்வு - வயது குழுக்கள் மற்றும் பால்நிலை

	2017			2016		
	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்
வயதுப்பிரிவு	–	–	–	–	–	–
25-34	14	22	36	6	26	32
35-44	01	02	03	1	–	1
45-54	01	02	03	–	1	1
55-60	205	98	303	273	173	446
மொத்தம்	221	124	345	280	200	480
%	64	36	100	58	42	–

புரள்விற்கான காரணிகள்

காரணிகள்	2017	2016
ஏனைய போட்டி அமைப்புகளுடன் இணைதல்	–	–
ஏனைய அமைப்புகளுடன் இணைதல்	9	5
புலம்பெயர்தல்	8	17
உயர்கல்வி	2	3
தனிப்பட்ட காரணிகள்	3	9
ஓய்வூதியம்	303	446
ஏனையவை	20	–
மொத்தம்	345	480

புவியை பாதுகாப்பதற்கு உதவுதல்



சூரிய சக்தி பொருத்தப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை

20

உருவாக்கப்பட்ட புதுப்பிக்கதக்க சக்தியின் அளவு

515 kws

வேலைத் தொடர் தானியங்கு முறை காரணமாக சேமிக்கப்பட்ட A4 தாள்களின் எண்ணிக்கை

259,892

(Board PAC மற்றும் கோவை முகாமைத்துவ முறைமை)

இலத்திரனியல் கணக்காய்வு அறிமுகப்படுத்தப்பட்டது



எல்லா இலத்திரனியல் கழிவுகளும் மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபையின் அங்கீகாரம் பெற்ற முகவர்களுடாக கழிவகற்றல் செய்யப்பட்டது

சில்லறைத் துறையினர்

362

முன்மொழிவுகளை சுற்றுச் சூழல் மற்றும் சமூக தேவைப்படுத்தல்களுக்கமைய பரிசீலித்துள்ளனர்

இலங்கை பசுமை கட்டிட சபையிடமிருந்து தங்க விருது கெக்கிராவ கிளைக்கு கிடைத்தது.

பசுமை கட்டிட எண்ணக்கரு வங்கிக்கு அறிமுகம்

சுற்றுச்சூழல் மற்றும் சமூக முகாமைத்துவ முறைமை (ESMS) கொள்கை வரையப்பட்டது.

ரூபா **640.6 மில்லியன்**

புதுப்பிக்கதக்க சக்தி,சுற்றாடல் நேய கருத்திட்டம் ஆகியவற்றிற்கான சில்லறை கடன் கொடுத்தல்

ஆண்டுக் காலப்பகுதியிலான இலத்திரனியல் வங்கிக்கூற்றுக்களின் வளர்ச்சி

67%

இயற்கை மூலதனம்

அனைவரும் நம்பகத்தகுந்த நவீன சக்திகளை பெற்றுக்கொள்ளுதல்



புதுப்பிக்கத்தக்க சக்தி கருத்திட்டங்களுக்கு நிதியிடுகின்ற பணியை வங்கி அர்ப்பணிப்புடன் காத்திரமாக மேற்கொண்டு வருகின்றது. இது தொடர்பான எமது முன்னெடுப்புகளில் நீர் வலு, சூரிய சக்தி, காற்று சக்தி கருத்திட்டங்கள் போன்றன உள்ளடங்குகின்றன.

- **சில்லறைசார் துறை மூலம் இலங்கை ரூபா 640.6 மில்லியன் புதுப்பிக்கத்தக்க சக்தி கருத்திட்டங்களுக்கென நிதியிடப்பட்டது.**
- **கழிவிலிருந்து சக்தி தயாரித்தல் இரண்டு பிரதான பாரிய கருத்திட்டங்களுக்கு பெருநிறுவனப்பிரிவு நிதி வழங்கியது.**

ஸ்த்திரத்தன்மைமிக்க நுகர்வு மற்றும் உற்பத்தி மாதிரிகள்



பத்திரிகை, நீர் ஆகியவற்றின் பாவணையை குறைப்பதன் மூலமும் பொறுப்புவாய்ந்த முறையில் கழிவு முகாமைத்துவத்தை மேற்கொள்வதன் மூலமும் இலங்கை வங்கியானது இந்த இலக்கிற்கு தனது பங்களிப்பை நல்கியுள்ளது.

- **தகைமைபெற்ற, அங்கீகரிக்கப்பெற்ற முகவர் ஒருவரினால் சகலவிதமான மின்னியில் சார்ந்த கழிவுப்பொருட்களும் கையாளப்பட்டு அகற்றப்படுகின்றன.**
- **டிஜிட்டல் சார்ந்த முன்னெடுப்புகளை மேற்கொண்டதன் மூலமாக பத்திரிகை பயன்பாடு குறைந்துள்ளது**
  – 259,892 A4 **தாள்கள்**

காலநிலை மாற்றம்



புதுபிக்க முடியாத சக்தி மூலங்களை பயன்படுத்துவதில் தங்கியிருப்பதை குறைக்கும் முகமாக தொடர்ச்சியாக நாம் காத்திரமாக செயற்பட்டுள்ளோம். இது தொடர்பில் நாம் மேற்கொண்ட முன்னெடுப்புகளானது எமது பல கிளைகளுக்கு சூரிய சக்தி வழங்கியமையாகும். குப்பைகளை சுற்றாடலினுள் கொட்டுதல் மற்றும் பத்திரிகை பயன்பாட்டை குறைத்தல் ஆகியவற்றின் மூலம் எமது காபன் பயன்பாட்டினை நாம் குறைத்துள்ளோம்.

- **சூரிய சக்தியை பயன்படுத்துவதன் காரணமாக ஏனைய சக்தி பயன்பாடு 2 வீதத்தினால் குறைந்துள்ளது.**
- **உற்பத்தி செய்யப்பட்ட புதுப்பிக்கத்தக்க சக்தியின் அளவு** 515kws

எமது எதிர்கால சந்ததியினரை கருத்திற்கொண்டு இந்த பூமியை இயற்கை வனப்புமிக்கதாகவும் ஆரோக்கியமிக்கதாகவும் அனைவரும் வாழக்கூடியதாகவும் பாதுகாப்பது எம் அனைவரது பொறுப்பாகும். இன்று ஏனைய பல்வேறுவிதமான பிரச்சனைகளுக்கு மத்தியில் இந்த புவியானது வெப்பமடைதல் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு 17 ஸ்த்திரத்தன்மைமிக்க அபிவிருத்தி இலக்குகளை ஐநா உருவாக்கியது. ஏனைய முக்கியமான சமூக பொருளாதார நோக்கங்கள் உள்ளடங்களாக வறுமை, பசி ஆகியவற்றை இல்லாதொழித்தல், சுற்றாடலை பாதுகாத்து ஸ்த்திரத்தன்மைமிக்க அபிவிருத்தியை ஏற்படுத்துதல் போன்றன இவற்றின் நோக்கங்களாகும்.

பாரிய வங்கி என்ற முறையிலும் இலங்கையில் அதிக இலாபத்தை ஈட்டுகின்ற தனி வங்கி என்ற முறையிலும் இது தொடர்பில் எமது பங்களிப்புகளை வழங்கக்கூடிய கடமையும் அதேவேளையில் அதற்கான ஆற்றல்களும் எம்மிடம் உள்ளன. மேற்படி ஸ்த்திரத்தன்மைமிக்க அபிவிருத்தி இலக்குகளை நாம் பெற்றுக்கொண்டுள்ள அதேவேளை இவற்றை எமது ஸ்த்திரத்தன்மைமிக்க செயற்பாட்டு பிரதேசத்தினுள் உள்ளடக்கியுள்ளோம். ஆகவே அவற்றை எமது வியாபார மாதிரி சார் நடவடிக்கைகளிலும் நாம் உள்வாங்கியுள்ளோம்.

அமைப்பு ரீதியான கட்டமைப்பு

பசுமை வங்கி எண்ணக்கருவானது வங்கியின் ஸ்த்திரத்தன்மைமிக்க குழுவின் தலமைத்துவத்தின் கீழ் அதற்கான உதவிகளை சிரேஷ்ட முகாமைத்துவம் வழங்கி வருகின்றது. பெருநிறுவன முகாமைத்துவதின் வழிகாட்டியின் கீழ் தொழிற்பாட்டு பிரிவுகள் மூலம் நடைமுறைப்-படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஸ்த்திரத்தன்மைமிக்க குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை தொழிற்படுத்தி அவற்றை நடைமுறைபடுத்தும் முகமாக இவற்றை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் வருட காலப்பகுதியின் பொழுது வங்கியானது ஸ்த்திரத்தன்மைமிக்க பிரிவொன்றை உருவாக்கியது. ஸ்த்திரத்தன்மைமிக்க விடயங்கள் தொடர்பில் அறிக்கையிடும் முக்கிய அங்கமாக ஸ்த்திரத்தன்மைமிக்க பிரிவு திகழ்வதுடன் சம்பந்தப்பட்ட சகல பிரிவுகள், மாகாண அலுவலகங்கள், கிளைகள் ஆகியவற்றுடன் இந்நோக்கத்தின் நிமித்தம் ஒருங்கிணைப்புகளை இது மேற்கொண்டு வருகின்றது. ஒவ்வொரு பிரிவின் முன்னேற்றங்கள் தொடர்பிலும் தொடர்ச்சியாக ஸ்த்திரத்தன்மைமிக்க பிரிவு மேற்பார்வைகளை மேற்கொண்டு வருவதுடன் காலாண்டுக்கு ஒருமுறை ஸ்த்திரத்தன்மைமிக்க குழுவிற்கு அறிக்கைகளையும் சமர்ப்பிக்கின்றது.

எமது பசுமை முன்னெடுப்புகள்

வங்கியானது சுற்றாடல் நேயமிக்க நேரடி வள நுகர்வுகளை குறிப்பிடக்கூடியளவு மேற்கொண்டு வருகின்றது. மற்றும் மின்சாரம், காற்று குளிரேற்றி, நீர், பத்திரிகை ஆகியவற்றினால் சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய தாக்கத்தை குறைக்கும் விதமாகவும் செயற்பட்டு வருகின்றது. எமது வாகனங்கள், எரிபொருள் சிக்கனமாகவும் வினைதிறன் மிக்க முறையிலும் இயங்குவதன் காரணமாக மற்றும் இவற்றை சிறப்பான முறையில் முகாமைத்துவம் செய்து வருவதன் காரணமாகவும் சுற்றாடலுக்கு இவற்றினால் வெளியேற்றப்படுகின்ற கழிவுப் பொருட்கள் குறைக்கப்படுகின்றன. மேலும் எமது காற்று குளிரேற்றிகள் போன்றன முறையாக பேணப்படுவதன் காரணமாக மற்றும் புதுபிக்க முடியாத சக்திகள் பயன்பாட்டை குறைவாக பிரயோகிப்பதன் காரணமாகவும் சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய தாக்கங்களை குறைக்கின்றோம். இதனை எமது பசுமை வங்கி மூலம் நடைமுறைப்படுத்துகின்றோம். இது 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும் 2017 ஆம் ஆண்டின் இறுதிவரை மொத்தமாக 20 கிளைகளுக்கு சூரிய மின் சக்தி வழங்கப்பட்டது. இத்தகைய முன்னெடுப்புகள் ஆனது மொத்தமாக 515kws புதுப்பிக்கத்தக்க சக்தியை உருவாக்கியது. எமது மொத்த சக்தி நுகர்வின் 2% இதுவாகும். நாம் மேற்கொண்ட ஏனைய முன்னெடுப்புகளாக

பத்திரிகைகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்துதல், மின்னியல் முகாமைத்துவம், எமது நிர்மாணப்பணி-களின் பொழுது நச்சுத் தன்மை சாராத பொருட்களை பயன்படுத்துதல், சுற்றாடல் நேய பொருட்களை பொருத்துதல், மின்சார சிக்கன மின்குமிழ்களை பயன்படுத்துதல், மழை நீரை பயன்படுத்தி பசுமை பூந்தோட்டங்களை பேணுதல் போன்றன உள்ளடங்கும். இவ்வருடகாலப்பகுதியின் பொழுது மொத்தமாக 16,930kg கழிவு பத்திரிகை மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

புவி சார்ந்த சுற்றுச்சூழல் முறைகள் தொடர்பில் ஸ்த்திரத்தன்மைமிக்க பயன்பாட்டை மேம்படுத்துதல்



சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை இல்லாதொழிக்கும் நோக்குடன் இலங்கை வங்கியானது கடன்களை வழங்குகின்ற பொழுது சுற்றாடல் சார்ந்த ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்ட விதத்தில் அவை இருக்கின்றனவா என்பதை பரிசீலிக்கின்றது.

- **வங்கிக்கான சுற்றுச்சூழல் மற்றும் சமூக முகாமைத்துவ முறைமை கொள்கை வரையப்பட்டது.**
- **சில்லறைத்துறை மைய கடன் பிரேரனைகள் சுற்றாடல் சார் விடயங்களுக்கு ஏற்ப இருக்காததன் காரணமாக நிராகரிக்கப்பட்ட பிரேரனைகளின் எண்ணிக்கை - 25 ஆகும்.**

மின் அஞ்சல் மற்றும் இணையத்தின் மூலமான அறிவித்தல் ஆகிய செயற்பாடுகள் மூலம் எமது வங்கி ஊழியர்கள் மத்தியில் சுற்றாடல் நேயம் மிக்க விடயங்கள் தொடர்பிலான விழிப்புணர்வுகளை நாம் ஏற்படுத்துகின்றோம். பத்திரிகைகளை நாம் பயன்படுத்துதல் பிரதிகள் எடுக்கின்ற பொழுது தாளின் இரு பக்கத்தையும் பயன்படுத்துதல் போன்றன நாம் பின்பற்றிய சில நடைமுறைகள் ஆகும். இவ்வருட காலப்பகுதியின் பொழுது மின்னியல் கற்றல் முறையை மையமாக கொண்டு வங்கியானது சில பயிற்சி நெறிகளை மேற்கொண்டது. அத்தோடு பத்திரிகைகளின் பயன்பாட்டை குறைத்தல், பயிற்சிகளின் பொழுது தங்குமிட வசதிகளை மேற்கொள்கின்ற பொழுது எரிபொருள் சிக்கன முறையை பின்பற்றியமை போன்றன சிலவாகும்.

ஆண்டில் மொத்தமாக 94,395 “SmartGen” கணக்குகள் திறக்கப்பட்டன. இதன் காரணமாக மொத்தமாக திறக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை 196,343 ஆகும். மேலும் “SmartGen” கணக்குகளை ஆரம்பித்தமை, மின்னியல் மூலமாக கூற்றுகளை தொடர்ச்சியாக அனுப்பியமை ஆகிய டிஜிட்டல் சார்ந்த ஏனைய முன்னெடுப்புகளானது பத்திரிகையின் பயன்பாட்டை குறைத்ததுடன் வளங்கள் வினைத்திறன்மிக்க வங்கி கலாசாரத்தையும் எமது வங்கியில் ஏற்படுத்தியது. (பார்க்க: பக்கம் 113 சமூக மற்றும் உறவு சார்ந்த மூலதனம்)

தொழிற்சார்ந்த விடயங்கள் தானியங்கி முறை மூலம் செயற்பட்டதன் காரணமாக பத்திரிகைகளின் பயன்பாடு குறைவடைந்தது. மற்றும் இணைய மூலமான ஆவண முகாமைத்துவ முறை, மின்னியல் மூலமான கற்றல்கள் ஆகியன குறிப்பிடக்கூடியளவு பத்திரிகை பயன்பாட்டை குறைத்தது. 2017 ஆம் ஆண்டில் தனிப்பட்ட கடன்கள் மற்றும் வீட்டுக்கடன் திசைமுகப்படுத்தல் சார்ந்த விடயங்கள் டிஜிட்டல் மைய முறையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக 178297 போட்டோ பிரதி தாள்களை சேமிக்கக்கூடியதாக இருந்தது. மற்றும் Board pack முறையை பயன்படுத்தியதன் காரணமாக இவ்வருட காலத்தின் பொழுது 81595 A4 தாள்களை சேமிக்கக்கூடியதாக இருந்தது.

வருட காலத்தின் பொழுது மின்னியல் மைய கணக்காய்வு முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் காரணமாக கணக்காய்வு செயன்முறைகளின் பொழுது பயன்படுத்தக்கூடிய பத்திரிகை தாள்களை சேமிக்கக்கூடியதாக இருந்தது.

இத்தகைய செயன்முறைகளை நாம் முழுமையாக நடைமுறைபடுத்தி பூரணப்படுத்துகின்ற சந்தர்ப்பங்களில் 348,480 பத்திரிகை தாள்களை சேமிக்க முடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பத்திரிகை விண்ணப்பங்களை பயன்படுத்தி விடுமுறை பெறுகின்ற முறை அதற்கான ஒப்புதல் முறைகள் ஆகியன தற்பொழுது தானியங்கி முறையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இதன் காரணமாக பாரிய அளவு பத்திரிகை தாள்களை சேமிக்கக்கூடியதாக உள்ளது.

	மின்சாரம் (Mwh)		நீர் (m3)		எரிபொருள் (லீற்றர்)	
	2017	2016	**2017**	2016	**2017**	2016
நுகர்வு	**22,325**	21,493	**489,560**	386,779	**440,180**	929,853
ஒருவருக்கான நுகர்வு	**2.94**	2.84	**64.53**	51.10	**58.02**	122.86

எமது சேவைகள் மற்றும் செயன்-முறைகள் ஆகியவற்றில் பசுமை சார்ந்த விடயங்களை பயன்படுத்துதல்

நாம் மேற்கொண்ட டிஜிட்டல் மைய முன்னெடுப்-புகளானது பத்திரிகைகளின் பயன்பாட்டை குறிப்பிடக்-கூடியளவுக்கு குறைத்தது. உதாரணமாக எமது “SmartGen” சார்ந்த விடயங்கள் ஆனது சேமிப்புக் கணக்குகளுக்கான பாஸ் புத்தக தேவையை இல்லாதொழித்தது. 2017 ஆம்


பசுமை மைய கடன் கொடுத்தல்

வங்கியின் சுற்றாடல் சார்ந்த அக்கறைகள் ஆனது அதன் தொழிற்பாட்டுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. எமது சகல செயற்பாடுகளின் பொழுதும் சுற்றாடல் நேய விடயங்களை உள்ளடக்குவதன் மூலம் இது தொடர்பில் எமது அர்ப்பணிப்புகளை நாம் வெளிப்படுத்துகின்றோம். சூரிய சக்தி மின்கலங்களை பொருத்துதல் போன்ற சுற்றாடல் நேய முன்னெடுப்புகளுக்கு கடன்களை வழங்குவதன் மூலம் இத்தகைய விடயங்கள் தொடர்பிலும் அர்ப்பணிப்புடன் நாம் இயங்கி வருகின்றோம். கழிவு மைய சக்தி கருத்திட்டங்கள், காற்று சக்தி கருத்திட்டங்கள், பசுமை சார் கட்டிடங்களை நிர்மாணித்தல் போன்ற சுற்றாடல் நேய விடயங்களுக்கு நிதியிடலை மேற்கொள்வதன் மூலம் இவை தொடர்பான முன்னெடுப்புகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம். சிறிய மத்திய தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள், பெருநிறுவன துறையை சார்ந்தவர்கள் ஆகியோர் புதுபிக்கத்தக்க சக்தியை பயன்படுத்துவதற்கும் கழிவு முகாமைத்துவ முறைகளை பின்பற்றுவதற்கும் மீள்சுழற்சி மற்றும் சக்தி நுகர்வு சிக்கன முறைகளை பின்பற்றுதல் ஆகியன உள்ளடங்களாக எமது வாடிக்கையாளர்களை நாம் உட்சாகப்படுத்தி வருகின்றோம். மேலும் எமது கடன் வழங்கல் முறையின் பொழுது சுற்றாடல் நேய மிக்க விடயங்கள் உள்ளனவா என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கின்றோம். சில்லறைத் துறை கடன் வலங்கள் முறையின் பொழுது 362 கடன் பிரேரணைகள் சுற்றாடல் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப இருந்ததன் காரணமாக கடன் வழங்கப்பட்டன. அதேவேளை 25 கடன் பிரேரணைகள் இதற்கு உட்படாமல் இருந்ததன் காரணமாக நிராகரிக்கப்பட்டன. புதுபிக்கத்தக்க சக்தி மற்றும் சுற்றாடல் நேய கருத்திட்டங்கள் ஆகியன தொடர்பில் வருடகாலத்தின் பொழுது சில்லறை துறைகளில் மாத்திரம் இலங்கை ரூபாய் 640.6 மில்லியன் நிதியிடப்பட்டது.

முன்னோக்கிய பயணம் மற்றும் எதிர்காலம்

தனது சுற்றாடல் மற்றும் சமூக முகாமைத்துவ முறைகள் (ESMS) தொடர்பிலான வரைபை மேற்கொள்வது தொடர்பில் வருட காலத்தின் பொழுது முக்கியமான முன்னெடுப்புகளை இலங்கை வங்கி மேற்கொண்டது. இந்த கொள்கை தற்போது பூரணப்படுத்தப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் இது நடைமுறைப்படுத்தப்படும். சுற்றாடல் மற்றும் சமூக முகாமைத்துவ முறையானது சுற்றாடல் மற்றும் சமூக முகாமைத்துவம் சார்ந்த மேற்பார்வைகளை மேலும் வலுப்படுத்தும். எமது கடன் பிரேரனைகளின் பொழுது இவற்றினை நாம் மதிப்பீடு செய்கின்றோம். வங்கி தனது சமூகம் மற்றும் சுற்றாடல் சார் இடர்கள் ஆகியவற்றை மிகவும் அறிவுபூர்வமான முறையில் முகாமைத்துவம் செய்வதற்கு இவை உதவும்.

புவி வெப்பமடைதல் தொடர்பான பிரச்சினைகள் தற்சமயம் முன்னணியில் திகழ்வதன் காரணமாக எதிர்வரும் வருடங்களில் சுற்றாடலை பாதுகாத்தல் தொடர்பான விடயங்கள் அதிகரித்து வருகின்றன. சுற்றாடல் அக்கறைகள் சார்ந்த விடயங்களில் அதிக சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. எமது சகல செயற்பாடுகளையும் இதனை கருத்திற்கொண்டு மேற்கொள்கின்ற அதேவேளை இலாபம் ஈட்டக்கூடியவர்களாகவும் நாம் திகழ வேண்டும். எமது நீண்ட கால ஸ்த்திரத்தன்மைகளை உறுதிப்படுத்தும் முகமாக இத்தகைய சவால்கள் தொடர்பில் முகங்கொடுத்து காத்திரமாக செயற்படுவது கட்டாயமாகும்.



நிதியியல் அறிக்கைகள்

139 — இலங்கை வங்கியின் நிதியியல் நடவடிக்கைகள் மீதான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

144 — ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் பங்கு

146 — நிதியியல் அறிக்கையிடலின் உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று

148 — சுயாதீன உத்தரவாத அறிக்கை

149 — நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

150 — கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

151 — இலாப நட்டக் கூற்று

152 — முற்றடக்க வருமானக் கூற்று

153 — நிதியியல் நிலைமைக் கூற்று

154 — உரிமையாண்மையில் ஏற்படும் மாற்றங்களைக் காட்டும் கூற்று

158 — காசுப்பாய்ச்சல்கள் கூற்று

160 — நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

இலங்கை வங்கியின் நிதியியல் நடவடிக்கைகள் மீதான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

1. பொதுவான விடயங்கள்

இலங்கை வங்கியின் பணிப்பாளர்கள் சபையானது 2017 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கி மற்றும் குழுமத்தின் நடவடிக்கைகள் குறித்த அறிக்கை, கணக்காய்வு செய்யப்பட்ட ஒன்றிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் அந்நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை என்பவற்றை 1938 ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம்இலக்க வங்கிச்சட்டம் மற்றும் அவற்றின் மீது பின்னர் கொண்டுவரப்பட்ட திருத்தங்களின் தேவைப்பாடுகளுடன் இசைவுறுவதை உறுதிப்படுத்தும் வகையில் அந்நிதிக்கூற்றுகளை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.
அத்துடன் இவ்வறிக்கையானது கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலைய பட்டியலிடல் விதிமுறைகளால் முன்வைக்கப்பட்ட சில வெளிப்படுத்தல்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்காக, கூட்டாண்மைச் செயலாட்சி குறித்து வெளியிடப்பட்ட 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்ட வழிகாட்டல் மற்றும் அதன் திருத்தங்களின் பணிப்புரையின் கீழ் மேற்கொள்வதற்கெனத் தேவைப்படுத்தப்பட்ட சில வெளிப்படுத்தல்கள் என்பவற்றையும் உள்ளடக்குகிறது. 2018 மார்ச் 27 ஆம் திகதி பணிப்பாளர்கள் நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்து அங்கீகாரம் அளித்தனர்.

இலங்கை வங்கியானது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச்சட்டத்தினதும், அதன் திருத்தங்களிற்கு அமைவான உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாக இருப்பதோடு, 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் கீழ் 1939 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி முறைப்படி கூட்டிணைக்கப்பட்டுள்ளது. வங்கியானது முற்று முழுதாக இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமானதாகும். வங்கியால் வெளியிடப்பட்ட காப்பளிக்கப்படாத, இரண்டாந்தர, மீட்கத்தக்க தொகுதிக்கடன்கள் கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன.

2. வங்கி நடவடிக்கைகளின் மீளாய்வு

2.1 வங்கியின் பிரதான நடவடிக்கைகள்

பிரத்தியேக வங்கியியல்,தொகுதி வங்கியியல், அபிவிருத்தி வங்கியியல், கரைகடந்த வங்கியியல், வியாபார நிதியிடல்,குத்தகை நிதியிடல், முதன்நிலை வணிகத் தொடர்பு, முதலீட்டு வங்கியியல் மற்றும் திறைசேரி நடவடிக்கைகள், நிறுவனத் தொடர்புகள் வங்கியியல் மற்றும் பண அனுப்புகைகள், இஸ்லாமிய வங்கியியல், வங்கிக் காப்புறுதி, தங்க நகை அடகுச்சேவை, கடனட்டை வசதிகள், வெளிநாட்டு நாணயச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய நிதிச் சேவைகள் ஆகியன ஆண்டுக் காலப்பகுதிக்கான வங்கியின் பிரதான நடவடிக்கைகள் ஆகும்.

2.2 துணைநிறுவனங்களும் கூட்டு நிறுவனங்களும்

துணைக்கம்பனிகள் மற்றும் கூட்டுக்கம்பனிகள் என்பவற்றின் பிரதான நடவடிக்கைகள் 160 மற்றும் 161ஆம் பக்கங்களில் காணப்படும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களில் தரப்பட்டுள்ளன. கணக்கீட்டுக் கொள்கைகளின் கீழ் குறிப்பிடப்பட்ட மாற்றங்கள் தவிர மீளாய்வின் கீழான ஆண்டின்போது வங்கி மற்றும் குழுமத்தின் பிரதான நடவடிக்கைகளின் தன்மையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களேதுமில்லை.

2.3 குழுமக்கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள்

ஆண்டின்போது குழுமக்கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்கள் 30 மற்றும் 31 இல் இவ்வாண்டறிக்கையின் 215 முதல் 222 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

2.4 தூரநோக்கு, பணிநோக்கு மற்றும் கூட்டாண்மை நடத்தை

வங்கியின் தூரநோக்கு மற்றும் பணிநோக்கு என்பன இவ் ஆண்டறிக்கையின் முன் அட்டையில் உட்பக்கத்தில் தரப்பட்டுள்ளது. வங்கியின் தூரநோக்கு மற்றும் பணிநோக்கு என்பனவற்றின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களைப் பின்தொடர்ந்து செல்லும் அதேவேளை வங்கியானது அதன் செயற்பாடுகளில் உயர்ந்த ஒழுக்க நியமங்களை பேணிவருகின்றது.

2.5 ஆண்டுச்செயல் நிறைவேற்றம் பற்றிய மீளாய்வு

12 முதல் 14 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ள வங்கி தலைவரின் செய்தியானது குறித்த ஆண்டிற்கான வங்கி/குழுமத்தின் செயல் நிறைவேற்றத்தையும் இலங்கையின் பொருளாதாரத்தையும் ஆராய்கிறது. 16 முதல் 22 வரையான பக்கங்களிலுள்ள பொது முகாமையாளரின் மீள்பார்வையானது மீளாய்வுக்குரிய குறித்த ஆண்டில் வங்கியின் வியாபார நடவடிக்கைகள் பற்றிய விரிவான விளக்கத்தைத் தருகிறது. 94 முதல் 100 வரையான பக்கங்களில் காணப்படும் தீர்மானகரமான இலக்கங்கள் வங்கியின் வியாபார நடவடிக்கைகள் குறித்த விரிவான பகுப்பாய்வைத் தருகின்றது. வங்கியின் நடவடிக்கைகள் குறித்த நியாயபூர்வமான மீள் பார்வையைத்தருகின்ற இவ்வறிக்கைகள் ஆண்டறிக்கையின் பிரிக்க முடியாத ஒரு பாகமாய் அமைகின்றன.

2.6 ஆண்டின் கிளை விரிவாக்கம்

வங்கி மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் மேலும் இரண்டு புதிய நடமாடும் கிளைகளை ஆரம்பித்து தனது சேவையை விரிவுபடுத்தியது. வலையமைப்பானது, வாடிக்கையாளர்களின் சௌகரியத்தினை உயர்மட்டத்தில் பேண மேலும் விரிவுபடுத்தப்பட்டது. ஆண்டுக் காலப்பகுதியில், வங்கி நாடளாவிய ரீதியில் புதிதாக 86 தன்னியக்க ரெலர் இயந்திரங்கள், 45 பணவைப்பிலிடும் இயந்திரங்கள், 182 பாடசாலை சங்சத மற்றும் 152 பாடசாலைச் சேவை அலகுகளை நிறுவியதன் மூலம் மொத்தமாக 764 தன்னியக்க ரெலர் இயந்திரங்கள், 168 பணவைப்பிலிடும் இயந்திரங்கள், 1,223 பாடசாலை சங்சதமற்றும் 152 பாடசாலைச் சேவை அலகுகளைக் கொண்டுள்ளது. இந்ததன்னியக்க ரெலர் இயந்திரங்களின் எண்ணிக்கை சக வங்கிகளுடான இலங்கை வங்கி வாடிக்கையாளர்கள் பணப் பரிமாற்றம் செய்யும் இயந்திரங்களின் எண்ணிக்கையினை உள்ளடக்கவில்லை.

2.7 கூட்டாண்மை நன்கொடைகள்

2017 ஆம் ஆண்டின்போது வங்கி நன்கொடை எதையும் வழங்கவில்லை. ஆனால் ரூபா 127.5 மில்லியனை நிறுவன சமூகப் பொறுப்பு நடவடிக்கைகளுக்கு ஆண்டுக் காலப்பகுதியில் வழங்கியது.

2.8 நிதிசார் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள்

வங்கியின் நடவடிக்கைகள் குறித்த உண்மையும் நியாயமுமான ஒரு பார்வையைப் பிரதிபலிக்கும் நிதிக்கூற்றுகளின் தயாரித்தலுக்குப் பணிப்பாளர்களே பொறுப்பாவர். இலங்கை கணக்கீட்டு நியமங்கள், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அதன் மீதான திருத்தங்கள், 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் மீதான திருத்தங்கள் மற்றும் கொழும்பு பங்குப்பரிவர்த்தனை நிலையத்தின் பட்டியலிடல் ஒழுங்கு விதிகள் என்பவற்றின் தேவைப்பாடுகளுக்கமைவாக இந்நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதெனப் பணிப்பாளர்கள் கருதுகின்றனர். துணைக்கம்பனிகளின் நிதிக்கூற்றுகள் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரமே தயாரிக்கப்பட்டுள்ளன. நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு பற்றிய கூற்று இவ்வாண்டறிக்கையில் 149 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது. அது இப்பணிப்பாளர்கள் அறிக்கையில் முக்கியமான ஒரு பாகத்தை ஆக்குகின்றது.

2.9 கணக்காய்வாளரின் அறிக்கை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களே இலங்கை வங்கியினதும் கணக்காய்வாளராவார்.

2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறு, வங்கியின் நிதிக்கூற்றுகள் மற்றும் வங்கியினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் ஒன்று திரட்டிய நிதிக்கூற்றுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை இவ்வாண்டறிக்கையின் 150 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

2.10 கணக்கீட்டுக் கொள்கைகள்

வங்கியும் குழுமமும் இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் (SLFRS) என்பனவற்றிற்கு அமைவாக நிதிக்கூற்றுகளைத் தயாரித்தன.

நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தலில் பின்பற்றப்பட்டுள்ள கணக்கீட்டு நியமங்கள் இவ்வாண்டறிக்கையின் 160 தொடக்கம் 302 வரையுள்ள பக்கங்களில் தரப்பட்டுள்ளன. மீளாய்வின் கீழான ஆண்டில் வங்கியால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கையில் முக்கிய மாற்றங்கள் எதுவும் இல்லை.

3. எதிர்கால அபிவிருத்திகள்

வங்கியின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி குறித்த கண்ணோட்டமானது இவ்வாண்டறிக்கையில் 12 தொடக்கம் 14 வரையான பக்கங்களில் காணப்படும் தலைவரின் செய்தியிலும், 16 தொடக்கம் 22 வரையான பக்கங்களில் காணப்படும் பொதுமுகாமையாளர் மீள்பார்வையிலும் தரப்படுகிறது.

4. மொத்த வருமானம்

2017 ஆம் ஆண்டிற்கான குழுமத்தின் மொத்த வருமானம் முந்திய வருட ரூபா 159,701.2 மில்லியனுடன் ஒப்பிடும்போது,ரூபா 197,013.0 மில்லியன் ஆகும். வங்கியின் மொத்த வருமானமானது குழுமத்தின் மொத்த வருமானத்தின் 96.0% (2016 இல் 96.5%) ஆகும். குழுமத்தின் பிரதான வருமானமான வட்டி வருமானம், மொத்த வருமானத்தின் 90.2% ஆகும்.

5. பங்குலாபங்களும் ஒதுக்கங்களும்

5.1 இலாபம் மற்றும் நிதி ஒதுக்கீடு

2017 இல் வங்கியானது வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 30,343.0 மில்லியனை பதிவுசெய்தது. இது முந்திய வருடத்தில் பதிவு செய்யப்பட்ட ரூபா 31,188.7 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2.7% வீழ்ச்சியைப் பிரதிபலிக்கின்றது. வருமான வரியாக ரூபா 9,030.7 மில்லியனைக் (2016 இல் ரூபா 6,397.7 மில்லியன்) கழித்த பின், 2017 ஆம் ஆண்டிற்கான வரிக்கு பின்னரான இலாபம் ரூபா 21,312.3 மில்லியனாகக் காணப்பட்டது. இது 2016 இல் பதிவு செய்யப்பட்ட வரிக்குப் பின்னரான இலாபம் ரூபா 24,791.0 மில்லியனுடன் ஒப்பிடும் போது 14.0% ஆல் குறைவடைந்துள்ளது.

வங்கி மற்றும் குழுமத்துடன் தொடர்புடைய இலாப விபரங்கள் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன:

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான	வங்கி		குழுமம்	
	2017 ரூபா மில்லியன்	2016 ரூபா மில்லியன்	2017 ரூபா மில்லியன்	2016 ரூபா மில்லியன்
வரிக்கு முந்திய அனைத்துச் செலவுகள், பெறுமானத் தேய்வு, காலத் தேய்மானம், கடன்களும் ஏனைய நட்டங்களும் மீதான பெறுமதிக் குறைப்பு மற்றும் நிகழ்த்தக்கவைகளிற்கான கொடுப்பனவு கழித்த பின்னரான இவ்வாண்டிற்கான இலாபம்	37,592	37,454	38,195	36,431
நிதிச் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி (VAT) மற்றும் நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (NBT)	(7,249)	(6,265)	(7,431)	(6,377)
கூட்டுக் கம்பனிகளின் வரி கழித்த, இலாபம்/(நட்டம்) பங்கு	–	–	52	63
வருமான வரிக்கு முந்திய இலாபம்	30,343	31,189	30,816	30,117
வருமானவரி செலவினங்கள்	(9,031)	(6,398)	(9,329)	(6,731)
ஆண்டிற்கான இலாபம்	21,312	24,791	21,487	23,386
வரி கழித்த, ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்	4,340	(1,080)	4,833	(706)
ஆண்டுக்கான வரி கழித்த மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்	**25,652**	**23,711**	**26,320**	**22,680**
பகிர்வுகள்				
நிலையான ஒதுக்க நிதிக்கான மாற்றல்கள்	(2,431)	(2,786)	(2,431)	(2,786)
நியதிச்சட்ட ஒதுக்கத்திற்கான மாற்றல்கள்	–	–	(22)	(35)
பங்குலாபங்கள்	(12,346)	(17,346)	(12,346)	(17,346)

வரிக்குமுந்திய குழுமத்தின் இலாபம் ரூபா 30,117.0 மில்லியனிலிருந்து ரூபா 30,815.6 மில்லியனாக அதிகரித்துள்ளது. முந்திய ஆண்டோடு ஒப்பிடுகையில் இது 2.3% அதிகரிப்பாகும். வருமான வரிக்காக ரூபா 9,328.9 மில்லியனைக் (2016 இல் ரூபா 6,731.1 மில்லியன்) கழித்தபின் குழுமத்திற்கான வரிக்குப் பிந்திய இலாபமானது 2016 இல் அறிக்கையிடப்பட்ட வரிக்குப் பிந்திய இலாபமான ரூபா 23,385.9 மில்லியனிலிருந்து 2017 ஆம் ஆண்டில் ரூபா 21,486.6 மில்லியனாக குறைவடைந்துள்ளது.

5.2 பங்குலாபங்கள்

வங்கி வரி, கடனிழப்பிற்கான ஏற்பாடு மற்றும் அவ்வாறான ஏதும் ஒதுக்கங்கள் என்பவற்றைக் கழித்ததன் பின்னரான இலாபத்தில் வங்கியின் பங்குதாரரான அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து விவேகமாக பங்குலாபத்தினைத் தீர்மானிக்கின்றது. அதன்பிரகாரம் ரூபா 12,346.4 மில்லியன் தொகையானது, 2017 ஆம் ஆண்டிற்கான பங்குலாபங்களாக வங்கியினால் செலுத்தப்பட்டுள்ளது. (2016 இல் ரூபா 17,346.4 மில்லியன்).

5.3 ஒதுக்கங்கள்

2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறு குழுமத்தின் மொத்த ஒதுக்கங்கள் ரூபா 101,399.1 மில்லியன் ஆகும் (2016 இல் ரூபா 87,475.3 மில்லியன்). குழுமத்தின் ஒதுக்கங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

டிசம்பர் 31 இல் உள்ளவாறான	2017 ரூபா மில்லியன்	2016 ரூபா மில்லியன்
நிலையான ஒதுக்க நிதி	10,427	7,996
மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்	18,681	16,494
சுதந்திர ஒதுக்கம்	367	367
நாணயமாற்றுப் பெயர்ப்பு ஒதுக்கம்	1,703	1,060
விற்பனைக்குக் கிடைக்கத்தக்-கவைக்கான ஒதுக்கம்	4,761	5,562
நியதிச்சட்ட ஒதுக்கங்கள்	359	337
நிறுத்தி வைத்த உழைப்புக்கள்	65,101	55,659
மொத்தம்	**101,399**	**87,475**

6. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

குறித்த ஆண்டின்போது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம், குத்தகை ஆதனம், அருவச் சொத்துக்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு, குழுமத்திற்கு ரூபா 3,963.8 மில்லியன் (2016: ரூபா 2,597.8 மில்லியன்) பெறுமதியான மொத்த மூலதனச்செலவு ஏற்பட்டது. இதன் விபரங்கள் இவ்வாண்டறிக்கையின் 224 முதல் 246 வரையான பக்கங்களில் உள்ள நிதிக் கூற்றுக்களின் 33 தொடக்கம் 35 வரையான குறிப்புக்களில் தரப்பட்டுள்ளன.

7. இறையிலி ஆதனங்களின் பெறுமதி

2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறு குழுமத்திற்குச் சொந்தமான இறையிலி ஆதனங்களின் பெறுமதியானது ரூபா 21,470.2 மில்லியன் (2016: ரூபா 15,519.8 மில்லியன்) ஆக நிதிக் கூற்றுகளுக்கான குறிப்பு 33 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

8. கூறப்பட்ட மூலதனமும் பங்குரிமையும்

8.1 கூறப்பட்ட மூலதனம்

2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியின் மொத்தமாக வழங்கப்பட்ட மற்றும் முற்றாகச் செலுத்தப்பட்ட மூலதனமானது ரூபா 15,000 மில்லியனாகும். (2016: ரூபா 10,000 மில்லியன்).

2018 ஆம் ஆண்டின் தேசிய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையான ரூபா 10,000 மில்லியனின் முதலாவது கட்டமாக 2017 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்திடமிருந்து வங்கி ரூபா 5,000 மில்லியனை பெற்றுக்கொண்டது. 2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறு இவ் ஒதுக்கீடானது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மூலதன ஒதுக்கீட்டின் கீழ் அறிக்கையிடப்படுகின்றது. வங்கியானது ஒவ்வொன்றும் ரூபா 1,000 பெறுமதியுடைய ஐந்து மில்லியன் சாதாரண பங்குகளை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கொள்கின்றது. இதன் மூலம் வங்கி நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மூலதன ஒதுக்கீட்டை பங்கு மூலதனத்திற்கு 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாற்றும்.

8.2 பங்குரிமை

இலங்கை அரசாங்கமே வங்கியின் ஏக பங்குதாரர் ஆகும்.

9. இரண்டாந்தர தொகுதிக் கடன்களின் வழங்கீடு

நம்பமுடியாத எழுத்திலான அம்சங்களுடன் பட்டியற்படுத்தப்படாத. காப்பளிக்கப்படாத, இரண்டாந்தர, மீட்கத்தக்க ரூபா 10,000 மில்லியன் பெறுமதியான தொகுதிக்கடன்களை குழுமம் 2017 டிசம்பர் 31 இல் வழங்கியுள்ளது (2016 இல் ரூபா 8,000 மில்லியன் பெறுமதியான இரண்டாந்தர, பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்கள்). இத் தொகுதிக் கடன்களின் வருமானமானது சாதாரண வியாபார நடவடிக்கைகளுக்கான வங்கியின் கடன் புத்தகத்தை விரிவாக்க பயன்படுத்தப்பட்டது. இது ஒதுக்கீட்டின்போது வங்கியானது பின்வருவனவற்றை அடைவதற்கு உதவும்:

- வங்கியின் அடுக்கு II மூலதனத்தை அதிகரித்து மூலதனப் போதுமை விகிதம் மற்றும் தனிப்பட்ட கடன் வாங்கியவர்க்கான எல்லை ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் கடன் புத்தகத்தை விரிவுபடுத்தலிற்கு வசதியளித்தல்.
- வங்கியின் நிதிச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் பட்டியலின் இடைவெளி வெளிப்பாட்டை குறைத்தல் மற்றும் முகாமை செய்தல்.
- வங்கியின் திரவத்தன்மை நிலையை வலுப்படுத்தல் மற்றும் சொத்து மட்டத்தினை அதிகரித்தல்.

நிதியியல் நிலைமைக்கூற்றுத் தினத்தன்று மீதியாகவுள்ள தொகுதிக் கடன்கள் பற்றிய விபரங்கள் 263 முதல் 264 வரையான பக்கங்களில் நிதிக்கூற்றுக்களுக்கான 47வது குறிப்பில் தரப்பட்டுள்ளன.

10. பங்குத் தகவல்

குழுமத்தின் ஆய்வுக்குட்பட்ட 2017 ஆம் ஆண்டுக் காலத்திற்கான பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பு மற்றும் பங்கொன்றிற்கான தேறிய சொத்துக்கள் என்பன முறையே ரூபா 1,870.3 (2016 - ரூபா 2,349.7) மற்றும் ரூபா 8,093.3 (2016 - ரூபா 10,247.5) ஆகும்.

11. கூட்டாண்மை நீடுறுதித் தன்மை மற்றும் பொறுப்பு

கூட்டாண்மை நீடுறுதித் தன்மை மற்றும் பொறுப்பு (CSR) என்பதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் 122 ஆம் பக்கம் முதல் 124 ஆம் பக்கம் வரை உள்ள "சமூக மற்றும் தொடர்பு மூலதனம்" என்ற தலைப்பின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளன.

12. பணிப்பாளர்கள்

2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபையானது 06 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. வங்கியின் பணிப்பாளர்கள் வங்கியில் எந்தவொரு நிறைவேற்று பதவிகளையும் வகிக்கவில்லை. அவர்கள் சபைக்கு பரந்த அளவிலான திறமையையும் அனுபவத்தினையும் வழங்குகின்றனர். பணிப்பாளர்களின் தகைமைகளும் அனுபவங்களும் இவ் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 35 முதல் 37 வரை தரப்படுகின்றது.

12.1 பணிப்பாளர்கள் பட்டியல்

2017 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை பின்வரும் பணிப்பாளர்களை கொண்டிருந்தது.

திரு. ரொனால்ட் சீ பெரேரா, ஜனாதிபதி சட்ட ஆலோசகர்
சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்/தலைவர்

திரு. சஜித் ஆர். ஆட்டிகல
நிறைவேற்றதிகாரமற்ற பதவிவழி பணிப்பாளர்

திரு. ரணெல் ரீ விஜேசிங்க
சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்

திரு. எச் பி அழித் குணவர்தன
சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்

திரு. சரித்த என் விஜேவர்தன
சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் (2017 ஜூலை 21 இல் பதவி விலகினார்)

திரு. சஞ்ஜய பத்மபெரும
சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் (2017 ஜூன் 30 இல் பதவி விலகினார்)

திரு. மனோ சேகரம்
சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் (2017 ஜூலை 6 இல் நியமிக்கப்பட்டு 2017 செப்டெம்பர் 8 இல் பதவி விலகினார்)

திரு. சமந்த ராஜபக்ஷ
சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் (2017 ஜூலை 25 இல் நியமிக்கப்பட்டார்)

திரு. மொஹான் விஜேசிங்ஹ
சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் (2017 நவம்பர் 24 இல் நியமிக்கப்பட்டார்)

திரு. கனகசபை விமலேந்திரராஜா
(திரு. சஜித் ஆர். ஆட்டிகலவிற்கு மாற்றீட்டுப் பணிப்பாளராக 2017 நவம்பர் 9 இல் நியமிக்கப்பட்டார்)

நிதியியல் கூற்றுத் திகதியில் (2017 டிசம்பர் 31 இல்) உள்ளவாறான வங்கியின் தற்போதைய பணிப்பாளர்களின் விபரம் பின்வருமாறு:

பணிப்பாளர்களின் பெயர்	நிறைவேற்று/நிறைவேற்றுனரல்லாத நிலை	சுயாதீன நிலை
திரு. ரொனால்ட் சீ. பெரேரா ஜனாதிபதி சட்டத்தரணி	நிறைவேற்றதிகாரமற்ற	சுயாதீனமான
திரு. சஜித் ஆர். ஆட்டிகல	நிறைவேற்றதிகாரமற்ற பதவிவழி பணிப்பாளர்	சுயாதீனமற்ற
திரு. ரணெல் ரீ. விஜேசிங்க	நிறைவேற்றதிகாரமற்ற	சுயாதீனமான
திரு. எச். பி. அஜித் குணவர்தன	நிறைவேற்றதிகாரமற்ற	சுயாதீனமான
திரு. சமந்த ராஜபக்ஷ	நிறைவேற்றதிகாரமற்ற	சுயாதீனமான
திரு. மொஹான் விஜேசிங்ஹ	நிறைவேற்றதிகாரமற்ற	சுயாதீனமான

மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட 2007 இன் 11 ஆம் இலக்க வங்கித்தொழிற் சட்டப் பணிப்புரை, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிற்கான கூட்டாண்மை செயலாட்சி மீதான அடிப்படையின் பிரகாரமே பணிப்பாளர்கள் சுயாதீனமான பணிப்பாளர்களென வகைப்படுத்தப்படுகின்றனர்.

12.2 சபையின் உபகுழுக்கள்

வங்கியின் நடவடிக்கைகள் குறித்து எழக்கூடிய மேற்பார்வைப் பிழைகளைக் கட்டுப்படுத்தப்படுவதை உறுதி செய்யும்பொருட்டு, மேற்கூறிய 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித் தொழிற்சட்டத்தின் வழிகாட்டற் குறிப்பிற்கமைவாக சபையானது நான்கு உபகுழுக்களை உருவாக்கியுள்ளது. இவ் உபகுழுக்களின் உள்ளடக்கம் இவ்வாண்டறிக்கையின் 69 தொடக்கம் 77 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

12.3 பணிப்பாளர்களின் கூட்டங்கள்

பணிப்பாளர்களின், சபை மற்றும் உப குழுக்களின் கூட்டங்களிற்கான வருகை பற்றிய விபரங்கள் இவ்வாண்டறிக்கையின் 69 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

12.4 ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் அக்கறைகள்

வங்கியுடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் நேரடியான மற்றும் மறைமுகமான அக்கறைகள் 144 முதல் 145 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன. இந்த அக்கறைகள் குறித்து பணிப்பாளர்கள் சபையின் கூட்டங்களில் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன. அங்கு வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் தவிர வங்கியுடனான வேறு ஒப்பந்தங்களில் அல்லது உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தங்களில் பணிப்பாளர்கள் வேறு எந்த அக்கறையையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ கொண்டிருக்கவில்லை

12.5 வங்கியால்/குழுமத்தால் வழங்கப்பட்ட தொகுதிக் கடன்களில் பணிப்பாளர்களின் அக்கறைகள்

எந்தவொரு பணிப்பாளரது பெயரிலும் எந்தவொரு தொகுதிக்கடனும் பதியப்படவில்லை.

12.6 பணிப்பாளர்களின் உபகாரங்கள்/கட்டணங்கள்

பணிப்பாளர்கள் சபைக்குச் செலுத்த வேண்டிய உபகாரங்கள் மற்றும் கட்டணங்கள் என்பன நிதியமைச்சின் பொது நிறுவனங்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2011 செப்டெம்பர் 15 ஆந் திகதியிடப்பட்ட பொது நிறுவன சுற்றறிக்கை இல. PED 58 (2), நிதியமைச்சின் பொது நிறுவனத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2013 நவம்பர் 12 மற்றும் 2014 ஜூன் 18 திகதியிட்ட கடிதங்கள் மற்றும் 1938 இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் என்பவற்றின் ஏற்பாடுகள்/உள்ளடக்கங்கள் என்பவற்றின் பிரகாரமே வழங்கப்படுகின்றன. 2017 டிசம்பர் 31 இல் முடிவுற்ற நிதியாண்டிற்கான, குழுமம் மற்றும் வங்கி தொடர்பான பணிப்பாளர்களின் ஊதியங்கள் 180 ஆம் பக்கத்தின் குறிப்பு 15 இல் தரப்பட்டுள்ளன.

13. இடர் முகாமைத்துவமும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையும்

13.1 இடர் முகாமைத்துவம்

இடர்களை முகாமை செய்வதற்கான ஒட்டு மொத்தப் பொறுப்பையும் பணிப்பாளர்கள் சபை ஏற்கிறது. இடரைத் தணிக்கும் பொருட்டு வங்கியால் எடுக்கப்பட்ட திட்டவட்டமான நடவடிக்கைகள் இவ்வாண்டறிக்கையின் 80 முதல் 92 வரையான பக்கங்களில் விபரிக்கப்பட்டுள்ன.

13.2 உள்ளகக் கட்டுப்பாடு

கணக்காய்வுக் குழுவின் மூலம் வங்கியில் ஒரு வினைத்தினான மற்றும் முழுமையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் அமுலாக்கத்தைப் பணிப்பாளர்கள் சபை உறுதிப்படுத்தியுள்ளது. பணிப்பாளர் சபையினர் தமது சட்டபூர்வப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குக் கணக்காய்வுக் குழு உதவுகிறது. கணக்காய்வுக் குழுத் தலைவரின் அறிக்கையானது இவ்வாண்டறிக்கையின் 70 தொடக்கம் 73 வரையான பக்கங்களில் காணப்படுகிறது. குறித்த ஆண்டின்போதும் ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுகள் என்பன தயார் செய்யப்படும் வரைக்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறன் குறித்துப் பணிப்பாளர்கள் திருப்தி கொள்கின்றனர். உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கூட்டாண்மைச் செயலாட்சி பற்றிய 2007 இன் 11 ஆம் இலக்க வங்கித் தொழிற்சட்டப் பணிப்புரையின் 3(8)(ii)(b) இலக்கப் பணிப்புரையின் பிரகாரம் வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறை குறித்துப் பணிப்பாளர்கள் சபை கூற்று ஒன்றை விடுத்துள்ளது. மேற்படி அறிக்யானது இவ்வாண்டறிக்கையின் 146 மற்றும் 147 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளது. நிதிசார் அறிக்கையிடல் முறைமையானது நிதிசார் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை குறித்த நியாயபூர்வமான உத்தரவாதத்தை வழங்குவதற்கென வடிவமைக்கப்பட்டுள்ள தென்பதையும் வெளியக நோக்கங்களுக்கான நிதிக்கூற்றுகளின் தயாரிப்பானது உரிய கணக்கீட்டுக்கோட்பாடுகள் மற்றும் சீராக்கற் தேவைப்பாடுகள் என்பவற்றுக்கமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் சபை உறுதி செய்துள்ளது. உள்ளகக் கட்டுப்பாடுகள் குறித்த பணிப்பாளர்களின் கூற்று மீதான ஓர் உத்தரவாத அறிக்கையைச் சபையானது கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து பெற்றுள்ளது. அது இவ்வாண்டறிக்கையின் 148 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது

14. கூட்டாண்மை செயலாட்சி

பயனுறுதியான ஒரு கூட்டாண்மைச் செயலாட்சி கட்டமைப்பையும் செயன் முறையையும் பேணுவது குறித்துப் பணிப்பாளர்கள் சபையானது அர்ப்பணிப்போடுள்ளது. வங்கியின் நிதிசார், தொழிற்பாடுசார் மற்றும் இணக்கப்பாடுசார் செயல்கள் என்பன கூட்டாண்மைச் செயலாட்சி நடைமுறைகளினுள் திறம்பட நெறிப்படுத்தப்பட்டுக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட கூட்டாண்மைச் செயலாட்சிப் பணிப்புரைகள் மற்றும் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவனம் என்பவற்றால் கூட்டாக வெளியிடப்பட்ட கூட்டாண்மைச் செயலாட்சி பற்றிய சிறந்த நடைமுறைகள் என்பவற்றுடன் ஒத்திசைகின்ற இந் நடைமுறைகள் இவ்வாண்டறிக்கையின் 62 முதல் 77 வரையான பக்கங்களில் காணப்படுகின்றன. மேலே கூறப்பட்ட 2007 இன் 11 ஆம் இலக்கப் பணிப்புரையின் ஏற்பாடுகளுடன் கொண்டுள்ள இணக்கப்பாடு குறித்து கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து சபை அறிக்கையொன்றைப் பெற்றுள்ளது.

15. மனித வளங்கள்

வங்கியின் மிகவும் பெறுமதி வாய்ந்த சொத்துகளுள் ஒன்றாக இருப்பது அதன் ஊழியர்கள். அவர்களை அபிவிருத்தி செய்வது வங்கிக்கு மிகவும் முக்கியமானதாகும். கூட்டாண்மையின் நோக்கங்களை அடையப்பெறுவதில் அவர்களின் உயர்ந்தபட்ச பங்களிப்பைப் பெறும் பொருட்டு, மிகவும் பெறுமதி வாய்ந்தது எனக் கருதப்படும் மனித வளத்தைப் பலப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வங்கியின் மனிதவள முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் இவ்வறிக்கையின் 126 முதல் 133 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ள "எமது பாரிய சொத்துக்களின் வல்லமைகள்" என்ற தலைப்பின் கீழ் விளக்கப்பட்டுள்ளன.

16. சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதி என்பவற்றுடன் இணக்கப்பாடு

சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பவற்றை மீறுகின்ற எந்த நடவடிக்கைகளிலும், தமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் குழுமம் ஈடுபட்டிருக்கவில்லை என்பதைப் பணிப்பாளர்கள் உறுதி செய்கின்றனர்.

சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பவற்றுடனான வங்கியின் இணக்கப்பாடு குறித்த விபரங்கள் இவ்வறிக்கையின் பிரிக்க முடியாதவொரு பாகமாக விளங்கும் "இணக்கப்பாட்டு இணைப்புக்கள்" எனத் தலைப்பிடப்பட்ட பிரிவின் கீழ் 304 தொடக்கம் 343 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன. மேலும், வங்கியானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட பரிமாற்ற விலைக்கட்டுப்பாடுகளுடன் உடன்படுகின்றது. அத்துடன் பணிப்பாளர்கள் வங்கியானது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின், பகுதி 104 இன் கீழ் வெளியிடப்பட்ட பரிமாற்ற விலைக் கட்டுப்பாடுகளுடன் உடன்படுவதை உறுதிப்படுத்துகின்றனர். மாற்றல் விலையிடல் தொடர்பான பணிப்பாளர்களின் சான்றிதழ் பக்கம் 344 இல் தரப்பட்டுள்ளது.

17. நிலுவையாக உள்ள சட்ட நடவடிக்கைகள்

வங்கிக்கெதிராகத் தற்போது நடைபெற்று வரும் வழக்கானது அறிக்கையிடப்பட்ட நிதிசார் பெறுபேறுகள் மீதோ அல்லது வங்கியின் எதிர்கால நடவடிக்கைகள் மீதோ பொருண்மைத் தாக்கமொன்றைக் கொண்டிராது என்று வங்கியின் சட்டத்தரணிகளின் உறுதிப்பாட்டிற்கமைய பணிப்பாளர்கள் அபிப்பிராயம் கொள்கின்றனர்.

18. நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்

அரசாங்கத்திற்குரியதும் மற்றும் பணியாட்கள் தொடர்புடையதுமான அனைத்து நியதிச்சட்டக் கொடுப்பனவுகளும் உரிய நேரத்திற் செலுத்தப்பட்டுள்ளதென சபை உறுதி செய்கிறது.

19. சூழல் பாதுகாப்பு

சூழலுக்கு கேடு விளைவிக்கக்கூடிய எதுவித நடவடிக்கையிலும் வங்கி ஈடுபட்டிருக்கவில்லை. மேலும் சூழலைப் பாதுகாக்கவென எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் 134 தொடக்கம் 136 வரையான பக்கங்களில் உள்ள "புவியைப் பாதுகாக்க உதவுதல்" என்று தலைப்பிடப்பட்ட பகுதியில் தரப்பட்டுள்ளன.

20. ஐந்தொகைக்குப் பிந்திய நிகழ்வுகள்


நிதியாண்டின் முடிவிற்கும் இந்த அறிக்கையின் திகதிக்குமிடைப்பட்ட காலப்பகுதியில் சீராக்கல்களை அல்லது வெளிப்படுத்தல்களைத் தேவைப்படுத்தும் எந்தவொரு பொருண்மை நிகழ்வுகளும் எழவில்லையென்ற கருத்தைப் பணிப்பாளர்கள் கொண்டுள்ளனர்.

21. தொடர்ந்து செல்லல் எண்ணக்கரு

வங்கியின் வளங்கள் வங்கிச் செயற்பாடுகளைத் தொடர்வதற்குப் போதுமானவை என்ற நம்பிக்கையைப் பணிப்பாளர்கள் கொண்டுள்ளனர்.

ஆகவே, தனது நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் வங்கியானது தொடர்ந்து செல்லல் எண்ணக்கரு அடிப்படையைப் பிரயோகித்துள்ளது.

சபையின் கட்டளையின் பிரகாரம்



ஜானகி சேனநாயக்க சிறிவர்த்தன
செயலாளர்,
இலங்கை வங்கி/சபையின் செயலாளர்

27 மார்ச் 2018
கொழும்பு

ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் பங்கு

"தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்துகை" மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 24 இன் தேவைப்படுத்துகைக்கு அமைய தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்துகைகள் நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்பு இல. 57 இல் பக்கங்கள் 274 தொடக்கம் 279 வரை விபரமாகத் தரப்பட்டுள்ளது.

மேலும், வங்கியின் தலைவர் அல்லது பணிப்பாளர்கள், தலைவராகவோ அல்லது ஒரு பணிப்பாளராகவோ காணப்படுகின்ற அத்தகைய நிறுவனங்களுடனான வங்கியின் நியாயமான வியாபார நடவடிக்கைகள் கீழே விபரமாகத் தரப்படுகின்றது:

கம்பனியின் பெயர்	உறவு முறை	கொடுக்கல் வாங்கலின் தன்மை	எல்லை '000	31.12.2017 இல் உள்ளவாறு தீர்க்காதிருக்கும் மீதி/தொகை '000	31.12.2016 இல் உள்ளவாறு தீர்க்காதிருக்கும் மீதி/தொகை '000
திரு. ரொனால்ட் சி பெரேரா - ஜனாதிபதி கட்டத்தரணி					
இலங்கை வங்கி (யூகே) லிமிட்டெட்	தலைவர்	நடைமுறைக் கணக்குகள்		USD 4,881	USD 659
		(நொஸ்ரோகணக்குகள்)		*746,084	*98,775
				GBP 232	GBP 531
				*47,684	*97,755
				EURO 1,017	EURO 1,656
				*185,588	*261,444
		வைத்திருப்புக்கள்		USD 8,000	USD 8,000
				*1,222,838	*1,198,400
				GBP 55,300	GBP 73,400
				*11,366,152	*13,508,852
				EURO 1,000	EURO 1,000
				*182,486	*157,874
ஹோட்டல்ஸ் கொழும்பு (1963) லிமிட்டெட் (திரு. ரொனால்ட் சி பெரேரா – ஜனாதிபதி சட்டத்தரணி, ஹொட்டல்ஸ் கொழும்பு (1963) லிமிட்டெட் இன் பதில் தலைவராக 2017 ஒக்டோபர் 19 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டார்)	பதில் தலைவர்	சேமிப்புக் கணக்குகள்		6,046	
		நடைமுறைக் கணக்குகள்		12,563	
		கால வைப்புக்கள்		152,278	
		கடன்கள்		5,243	
		ஏனைய வருமதிகள்		47,050	
திரு. சஜித் ஆர் ஆட்டிகல		சேமிப்புக் கணக்குகள்			484,227
விமான மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிட்டெட் (2017 டிசம்பர் 31 இல் திரு.சஜித் ஆர் ஆட்டிகல விமான மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிட்டெட் இன் பணிப்பாளர் ஒருவராக இருக்கவில்லை)	பணிப்பாளர்	நடைமுறைக் கணக்குகள்			1,399,730
		கால வைப்புக்கள்			2,890,369
		நாணயக் கடிதங்கள்			240,740
		உத்தரவாதக் கடிதங்கள்			18,300
திரு. ரணெல் ரீ விஜேசிங்க					
கொலதெனியா ஹைட்ரோ பவர் (பிறைவேற்) லிமிட்டெட் (திரு. ரணெல் ரீ விஜேசிங்ஹ கொலதெனியா ஹைட்ரோ பவர் (பிறைவேற்) லிமிட்டெட்டின் பணிப்பாளர் ஒருவராக 2017 ஒக்டோபர் 25 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டார்)	பணிப்பாளர்	நடைமுறைக் கணக்குகள்		2,551	
		கால வைப்புக்கள்		237,165	
		மீள் கொள்வனவுகள்		6,103	
திரு. எச் பீ அஜித் குணவர்தன					
லங்கா செக்கியூரிட்டீஸ் (பிரைவேற்) லிமிட்டெட்	பணிப்பாளர்	நடைமுறைக் கணக்குகள்		10,835	10,486
		கால வைப்புக்கள்		231,400	102,879
		மேலதிகப் பற்றுக்கள்	25,000		
		மீள் கொள்வனவுகள்		77,037	22,007

*இலங்கை ரூபாவிற்கு சமமான தொகை
குறிப்பு: நாணயங்கள் விசேடமாக குறித்துரைக்கப்படாதவிடத்து இலங்கை ரூபாவில் உள்ளன.

கம்பனியின் பெயர்	உறவு முறை	கொடுக்கல் வாங்கலின் தன்மை	எல்லை '000	31.12.2017 இல் உள்ளவாறு தீர்க்காதிருக்கும் மீதி/தொகை '000	31.12.2016 இல் உள்ளவாறு தீர்க்காதிருக்கும் மீதி/தொகை '000
திரு. சமந்த ராஜபக்ஷ (திரு. சமந்த ராஜபக்ஷ இலங்கை வங்கியின் பணிப்பாளர் ஒருவராக 2017 ஜூலை 25அம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டார்)					
அசோசியேற்ரெட் மோட்டோவேய்ஸ் (பிரைவேற்) லிமிட்டெட்	பணிப்பாளர்	சேமிப்புக் கணக்குகள் (இலங்கை ரூபா)		71,849	
		சேமிப்புக் கணக்குகள்		USD 3,306	
				*505,274	
		நடைமுறைக் கணக்குகள்		119,592	
		கால வைப்புக்கள்		USD 156	
				*23,904	
		கப்பலேற்றல் உத்தரவாதம்	250,000	20,709	
		நாணயக் கடிதம்	1,000,000	822,239	
		கருதுகோள் கடன்கள்	200,000	–	
		ஏற்றுக்கொள்ளல்		9,660	
		உத்தரவாதக் கடிதம்	100,000	36,267	
		ஏற்றுமதி சேகரிப்புக்கள்		15,124	
		இறக்குமதி உண்டியல்கள்		234	
அசோசியேற்ரெட் ஓட்டோவேய்ஸ் (பிரைவேற்) லிமிட்டெட்	பணிப்பாளர்	நடைமுறைக் கணக்குகள்		1,946	
		உத்தரவாதக் கடிதம்	1,000	–	
		கப்பலேற்றல் உத்தரவாதம்	6,000	–	
		நாணயக் கடிதம்	6,000	–	
		கருதுகோள் கடன்	8,000	–	
அசோசியேற் மோட்டார் (லங்கா) கம்பனி லிமிட்டெட்	பணிப்பாளர்	நடைமுறைக் கணக்குகள்		249	
		நாணயக் கடிதம்	90,000	–	
		கப்பலேற்றல் உத்தரவாதம்	120,000	–	
		கருதுகோள் கடன்	19,975	–	
		உத்தரவாதக் கடிதம்	5,000	–	
ஏஎம்டப்ளியூ கப்பிட்டல் லீசிங் அன்ட் பைனான்ஸ் பிஎல்சி	பணிப்பாளர்	சேமிப்புக் கணக்குகள்		4,700	
		நடைமுறைக் கணக்குகள்		15,523	
திரு. மொஹான் விஜேசிங்ஹ (திரு. மொஹான் விஜேசிங்ஹ இலங்கை வங்கியின் பணிப்பாளர் ஒருவராக 2017 நவம்பர் 24 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டார்)					
லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் பிஎல்சி	பணிப்பாளர்	சேமிப்புக் கணக்குகள்		USD 235	
				*35,944	
		நடைமுறைக் கணக்குகள்		53,555	
		கால வைப்புக்கள்		USD 6,301	
				*963,159	
மக நெகும கொன்சல்ரன்சி அன்ட் புரொஜெக்ற் மனேஜ்மென்ற் சேவிசஸ் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்	பணிப்பாளர்	நடைமுறைக் கணக்குகள்		2,864	

*இலங்கை ரூபாவிற்கு சமமான தொகை
குறிப்பு: நாணயங்கள் விசேடமாக குறித்துரைக்கப்படாதவிடத்து இலங்கை ரூபாவில் உள்ளன.

நிதியியல் அறிக்கையிடலின் உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று

பொறுப்பு

பணிப்பாளர் சபை 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழிற் சட்ட வழிகாட்டலின் பிரிவு 3 (8) (ii) (b) இற்கிணங்க நிதியியல் அறிக்கையிடலுக்கான உள்ளகக் கட்டுப்பாடு மீதான அறிக்கையை வழங்குகின்றது.

பணிப்பாளர் சபையானது (சபை) இலங்கை வங்கியில் (வங்கி) உள்ள உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையின் போதுமான தன்மைக்கும் அதன் வினைத்திறனுக்கும் பொறுப்பாக உள்ளது. இப் போதுமான தன்மையையும் வினைத்திறனையும் கவனத்திலெடுக்கும் போது முகாமை செய்யக்கூடிய அடிப்படையில் இடருடன் ஈடுசெய்யக் கூடியளவுக்கு வெகுமதிகளை வங்கியியல் வியாபாரம் தேவைப்படுத்துகின்றது என்பதை சபை அங்கீகரிக்கின்றது. அத்துடன், இவ் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது முதன்மையாக வங்கியின் இடர்விருப்புக்களை உள்ளடக்கிய குறிகாட்டிகள் எல்லைகளிலிருந்து ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமிடத்து அவற்றை வெளிச்சமிட்டுக் காட்டுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. இவ்வெளிச்சத்தில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது நிதித் தகவல்கள் மற்றும் தரவுகளின் பொருண்மைப் பிறழ் கூற்றுக்கெதிராக அல்லது நிதிநட்டங்களுக்கும் மோசடிகளுக்கும் எதிராக முழுமையான உத்தரவாதத்தையன்றி, நியாயமான அளவு உத்தரவாதத்தை மட்டுமே வழங்க முடியும்.

வங்கியால் முகங்கொடுக்கப்படும் முக்கியமான இடர்களை இனங்காணுதல், மதிப்பீடுசெய்தல், மற்றும் முகாமை செய்வதற்காக சபை ஒரு தொடர்ச்சியான செயன்முறையை ஸ்தாபித்துள்ளது. அத்துடன், வியாபாரச்சூழல் அல்லது ஒழுங்குபடுத்தும் வழிகாட்டிகள் போன்றன மாற்றமடையும் போது இந்தச் செயன்முறையானது நிதியியல் அறிக்கையிடல் மேலான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மேம்படுத்தி வலுப்படுத்துகின்றது. இச்செயற்பாடு சபையால் கிரமமாக மீளாய்வு செய்யப்படுவதுடன் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வழங்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்றுக்கள் மீது வங்கியின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டுதல்களுடன் உடன்படுகின்றது. அந்த வழிகாட்டியில் வழங்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் மதிப்பீட்டுக்கான கணக்கீட்டுக் கொள்கைகளை கவனத்திலெடுத்து நிதியியல் அறிக்கையிடலுக்கான உள்ளகக் கட்டுப்பாட்டை சபை மதிப்பீடு செய்தது.

நிதியியல் அறிக்கையிடலின் நம்பகத் தன்மை தொடர்பாக நியாயமான உத்தரவாதமளிப்பதற்கு நிதியியல் அறிக்கையிடலின் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மிகவும் போதுமானதாக உள்ளதென சபை கருதுகின்றது. அத்துடன் வெளித்தேவைகளுக்கான நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு அதனோடு தொடர்புடைய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஒழுங்கு படுத்தல் தேவைப்படுத்தல்களுடன் இணைந்தவாறு காணப்படுகின்றது முகாமைத்துவமானது, இந்த இடர்களைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது குறைப்பதற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டின் வடிவமைப்பு, செயற்பாடு மற்றும் கண்காணிப்பில், எதிர்நோக்கப்படுகின்ற இடர்களின் மதிப்பீடு மற்றும் இனங்காணலில் சபையின் கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை அமுல்படுத்துவதற்கு சபைக்கு உதவிசெய்கின்றது.

நிதியியல் அறிக்கையிடலின் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறன் மற்றும் வடிவமைப்பு மீளாய்வில் பிரயோகிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட செயன்முறையின் முக்கிய அம்சங்கள்

நிதியியல் அறிக்கையிடலுக்கான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் போதுமானதன்மை, மற்றும் நேர்மைத்தன்மையை மீளாய்வு செய்தலில் நிறுவப்பட்ட முக்கிய செயன்முறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- அங்கீகரிக்கப்பட்ட அதன் கூட்டாண்மைத் திட்டத்திலிருந்து பெறப்பட்ட வருடாந்தப் பாதீட்டுடனும் கூட்டாண்மைக் குறிக்கோள்களுடனும் தந்திரோபாயங்களுடனும் இணைந்தவாறு வங்கியின் செயற்பாடுகள் காணப்படுகின்றன என்பதையும் வங்கியின் நாளாந்த நடவடிக்கைகளின் வினைத்திறனை உறுதிப்படுத்துவதில் சபைக்கு உதவிசெய்வதற்காக சபையால் வேறுபட்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பிரிவானது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறனையும் வங்கியின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுடனான இணக்கப்பாடுகளையும் சுழற்சிச் செயன்முறைகள் மற்றும் மாதிரிகளைப் பயன்படுத்தி தொடர்ச்சியான முறையில் பரிசீலித்து ஏதாவது குறிப்பிடத்தக்க இணக்கப்பாடற்றதன்மை காணப்படுமிடத்து அவற்றைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றன. எல்லா அலகுகள் மற்றும் கிளைகளின்மீது ஒரு சுயாதீனமானதும் குறிக்கோள் நோக்கியதுமான அறிக்கையை வழங்குவதற்கு கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது. இக் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்ற தடவைகள் மதிப்பீடு செய்யப்பட்ட இடர்களின் அளவினால் தீர்மானிக்கப்படுகின்றன. வருடாந்தக் கணக்காய்வுத் திட்டம் சபையின் கணக்காய்வு குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் முடிவுகள் சபையின் கணக்காய்வு குழுவுக்கு அவர்களின் காலத்திற்குக் காலம் நடைபெறும் கூட்டங்களில் மீளாய்வு செய்வதற்காகச் சமர்ப்பிக்கப்படுகின்றன.
- வங்கியின் சபை கணக்காய்வுக் குழுவானது, உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம், வெளியகக் கணக்காய்வாளர்கள், ஒழுங்குபடுத்தல் அதிகாரங்கள் மற்றும் முகாமைத்துவத்தினால் அடையாளம் காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு சிக்கல்களை, கணக்காய்வின் நோக்கம் மற்றும் தரம் என்பவற்றின் மீது குறிப்பிடத்தக்க வலியுறுத்தலுடன் மீளாய்வு செய்கின்றது. மேலும், உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகளை கணக்காய்வின் நோக்கம் மற்றும் தரம் என்பவற்றின் மீதான குறிப்பிடத்தக்க வலியுறுத்தலுடன் மீளாய்வு செய்கின்றது. கணக்காய்வுக் குழுவின் கூட்ட அறிக்கைகள் வங்கியின் சபைக்கு காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படுகின்றன. வங்கியின் கணக்காய்வுக் குழுவால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் மேலதிக விபரங்கள் கணக்காய்வுக் குழுவின் அறிக்கையில் 70 தொடக்கம் 73 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மதிப்பீடு செய்கையில் இனங்காணப்பட்ட அலுவலர்கள் வங்கியின் நிதிக்கூற்றுக்களின் முக்கியமான கணக்குகள் மற்றும் வெளிப்படுத்தல்களுடன் இணைந்த எல்லாச் செய்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளையும் தொகுத்தனர். இந்த முறைமையின் வடிவமைப்பு மற்றும் செயற்திறன் தன்மையின் பொருத்தப்பாடு ஒரு தொடர்ச்சியான முறையில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையால் அவதானிக்கப்பட்டு பரீசீலிக்கப் பட்டுள்ளது.
- இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் (SLFRS) உள்ளடங்கலான புதிய கணக்கீட்டு நியமங்களை 2012 ஆம் ஆண்டில் வங்கி கடைப்பிடித்தது. உள்ளக மற்றும் வெளியக் கணக்காய்வாளர்கள், கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் சபைக் கணக்காய்வுக்குழு போன்றவற்றிடமிருந்து பெறப்பட்ட பின்னூட்டல்களின் அடிப்படையில் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் இப் புதிய கணக்கீட்டு நியமங்களை ஆரம்பத்தில் கடைப்பிடிப்பதற்கு பயன்படுத்திய செயன்முறைகள் மற்றும் நடைமுறைப்படுத்தலை மேலும் வலுப்படுத்தியது. வங்கியானது, வங்கி மற்றும் வெளிநாட்டுக் கிளைகளின் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான பெறுமதிக் குறைப்புடன் தொடர்புடையதும், இடர் முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய தரப்பினருடன் சம்பந்தப்பட்ட நிதியியல் கூற்றுக்களிலான வெளிப்படுத்துகைகளையும் தரமுயர்த்தும் செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. வங்கியானது, நிதிக்கருவிகளின் அங்கீகாரம், அளவீடு, வகைப்பாடு மற்றும் வெளிப்படுத்தல் போன்றவற்றை மேலும் திறம்பட மற்றும் வினைத்திறனுடையதாக மாற்றும் தேவைப்பாட்டுடன் இணங்கக் கூடியதும் "நிதியியல் கூற்று மூடல்" செயல்முறைக்கான வசதியை அளிப்பதற்கு தானியக்க நிதியறிக்கையிடல் செயல்முறையினை அறிமுகப்படுத்தவேண்டிய தேவையையும் வங்கி இனங்கண்டுள்ளது. இந்தக் கணிப்பீடு வங்கியின் துணைக்கம்பனிகளை உள்ளடக்கவில்லை. மேலும், வங்கியானது முன்னெச்சரிக்கையுடன் நிதிக்கருவிகளின் மீதான இலங்கை கணக்கீட்டு

நியமங்கள் - SLFRS 9 இனை 01 ஜனவரி 2018 இலிருந்து பின்பற்றுவதற்கு படிகளை எடுத்துள்ளதுடன் கூறப்பட்ட நியமத்துடன் முழு இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கான பொறிமுறையை உருவாக்கும் செயற்பாட்டிலும் ஈடுபட்டுள்ளது.

- கடந்த வருட நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டுமுறை மீது வெளியகக் கணக்காய்வாளரால் வைக்கப்பட்ட கருத்துக்கள் இந்த வருடத்தின் பொழுது மீள்பார்வையிடப்பட்டு அவற்றை சரிப்படுத்துவதற்காக பொருத்தமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. 2017 ஆம் ஆண்டில் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறை மீது வெளியக் கணக்காய்வாளரால் வைக்கப்பட்ட சிபாரிசுகள் எதிர்காலத்தில் கருத்தில் கொள்ளப்படும்.

சான்றுறுதிப்படுத்தல்

மேற்படி செய்முறைகளின் அடிப்படையில் வங்கியின் நிதி அறிக்கையிடல் முறைமையானது, இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கும் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தும் தேவைகளுக்கும் இணங்க வடிவமைக்கப்பட்டதுடன் வெளியார் தேவைகளுக்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் நிதி அறிக்கையிடல்களின் நம்பகத்தன்மை பற்றிய நியாயமான அளவு உத்தரவாதத்தை வழங்குகின்றதென சபை உறுதிப்படுத்துகின்றது.

சபையின் கட்டளையின் பிரகாரம்,



தலைவர் - கணக்காய்வுக் குழு



தலைவர்



பணிப்பாளர்

27 மார்ச் 2018
கொழும்பு

சுயாதீன உத்தரவாத அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

எனது இல. My No. பீஏஎவ்/பீ/பீஓசீ/ஐசீ/2017

உமது இல. Your No.

திகதி Date 2018 மே 18

தலைவர்
இலங்கை வங்கி

பணிப்பாளர்சபைக்கு இலங்கைவங்கியின் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பில் பணிப்பாளர்களின் கூற்றின் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுயாதீன உத்தரவாத அறிக்கை

அறிமுகம்

இவ்வறிக்கை 2017 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட இலங்கை வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் ("கூற்று") மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பில் பணிப்பாளர்களின் கூற்றுக்கு உத்தரவாதம் வழங்குவதற்கானது. இவ்வுத் தரவாதத்தை வழங்குவதற்கு பொதுத் தொழிற் துறையில் ஈடுபட்டுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்றின் உதவி பெறப்பட்டது.

முகாமையினரின் பொறுப்பு

இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தால் 2007 இன் 11 ஆம் இலக்க வங்கித்தொழிற் சட்ட வழிகாட்டலின் 3 (8) (ii) (b) பிரிவுக்கு இணக்கமாக வழங்கப்பட்ட 'உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்றுத் தொடர்பில் வங்கிகளின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டலுக்கு' இணங்கக் கூற்றைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் முகாமையினர் பொறுப்பாயுள்ளனர்.

SLSAE 3050 உடனான எனது பொறுப்புக்களும் இணக்கமும்

நிறைவேற்றப்பட்ட வேலையை அடிப்படையாகக் கொண்டு கூற்று பற்றிய அறிக்கையொன்றை பணிப்பாளர் சபைக்கு வழங்க வேண்டியது எனது பொறுப்பாகும். நான் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் வழங்கப்பட்ட உத்தரவாத ஈடுபாடுகள் பற்றிய இலங்கை நியமம் SLSAE 3050 - உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்றின்மீது வங்கிகளுக்கான உத்தரவாத அறிக்கைக்கிணங்க எனது பணியில் ஈடுபட்டேன்.

நிறைவேற்றப்பட்ட வேலையின் சுருக்கம்

பணிப்பாளர்களால் அல்லது அவர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் கூற்றுக்கு ஆதாரமாயிருக்கின்றனவாவென்றும் வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மீளாய்வு செய்வதற்குப் பணிப்பாளர்கள் கையாண்ட செயல்முறை பொருத்தமான முறையில் பிரதிபலிக்கப்-படுகின்றதாவென்றும் மதிப்பீடு செய்வதற்காக இவ்வீடுபாட்டுப் பணி நடாத்தப்பட்டுள்ளது.

இந் நோக்கத்தை அடைய கீழ்வரும் நடைமுறைகளைப் பின்பற்றியதன் மூலம் பொருத்தமான சான்று பெறப்பட்டுள்ளது.

அ) உள்ளக கட்டுப்பாட்டின் வடிவமைப்பு மற்றும் வினைத்திறன் என்பவை தொடர்பில் பணிப்பாளர்களின் மீளாய்வுக்கென பணிப்பாளர் சபையால் வரையறுக்கப்பட்டுள்ள செயல்முறை பணிப்பாளர்களால் புரிந்து பெற்றுக்கொள்ளப்-பட்டதா என்பது விசாரிக்கப்பட்டதுடன் ஆண்டறிக்கையில் பணிப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கூற்றுத் தொடர்பில் அவர்களின் புரிந்துணர்வும் ஒப்பிடப்பட்டது.

ஆ) பணிப்பாளர்களின் கூற்றுக்கு ஆதரவாக அவர்களால் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் மீளாய்வு செய்யப்பட்டது.

இ) நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்வின் போது வங்கி விடயங்கள் தொடர்பில் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட அறிவு மற்றும் அனுபவங்களுடன் பணிப்பாளர்கள் மேற்கொண்ட கூற்று தொடர்புபடுத்திப் பரிசீலிக்கப்பட்டுள்ளது.

ஈ) பணிப்பாளர் சபை மற்றும் அதனுடன் தொடர்புடைய சபை குழுக் கூட்டங்களின் கூட்ட அறிக்கை மீளாய்வு செய்யப்பட்டது.

உ) உள்ளகக் கட்டுப்பாட்டுக் கூற்று உள்ளடக்கப்படுகின்ற ஆண்டறிக்கை பரிசீலிக்கப்பட்டு பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கான அனுமதி வழங்கப்படுகின்ற கணக்காய்வுக் குழுவின் கூட்டங்களுக்கு சமுகமளித்தல்.

ஊ) உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பில் பணிப்பாளர்களின் கூற்றானது ஆய்விற்குப்படும் வருடம் முழுவதையும் உள்ளடக்குகின்றதா என்பதும் குறிப்பிடத்தக்க விடயங்கள் ஏதேனும் எழுகின்ற போது அவற்றை இனங்காண்பதற்குப் போதிய செயன்முறைகள் காணப்படுகின்றனவா என்பதும் கருத்தில் கொள்ளப்பட்டது.

எ) பொருத்தமான வேறு கணக்காய்வுச் சான்றுகள் போதுமானளவில் காணப்படுகின்றதென நியாயமான முறையில் எதிர்பார்க்க முடியாதவிடத்து அவை உள்ளகக் கட்டுப்பாடு மீதான கூற்றுக்களுக்கு பொருண்மையான விடயங்களாகக் கருதப்பட்டு பணிப்பாளர்களிடமிருந்து எழுத்திலான பிரதிநிதித்துவம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

கூற்று எல்லா இடர்களையும் கட்டுப்பாடுகளையும் உள்ளடக்குகின்றதாவென்று நான் பரிசீலனை செய்ய வேண்டுமென்றோ அல்லது வங்கியின் இடர் மற்றும் கட்டுப்பாட்டு நடைமுறைகளின் பயனுறுதித்தன்மை பற்றி ஓர் அபிப்பிராயத்தைக் கூறவேண்டுமென்றோ SLSAE 3050 தேவைப்படுத்-தவில்லை. ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் குறிப்பிடத்தக்க பிரச்சினைகளின் முக்கிய உள்ளகக் கட்டுப்பாட்டு அம்சங்களைக் கையாள்வதற்கு விவரிக்கப்பட்ட செயல்முறைகள், உண்மையில் அப்பிரச்சினைகளுக்குப் பரிகாரமாக அமைகின்றனவாவென்று நான் பரிசீலனை செய்யவேண்டுமென்றுகூட SLSAE 3050 தேவைப்படுத்தவில்லை.

முடிவுரை

நிறைவேற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில், வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக்கட்டுப்பாட்டின் வடிவமைப்பையும் பயனுறுதித்தன்மையையும் மீளாய்வதில் பணிப்பாளர் சபை கைக்கொண்டுள்ள செயல்முறைபற்றி நான் விளங்கிக்கொண்டதுடன் முரண்படுகின்ற வகையில் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டகூற்று காணப்படுகின்றதென்று நம்புவதற்கு ஏதுவான எதையும் நான் அவதானிக்கவில்லை.

எச் எம் காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

நிதியறிக்கைகள் தொடர்பில் பணிப்பாளர்களதும் கணக்காய்வாளர்களினதும் பொறுப்புக்களை முறையே வேறுபடுத்துவதற்காக பணிப்பாளர்கள் சபையினால் விசேடமாகத் தயாரிக்கப்படுகின்ற கூற்று இதுவாகும். இலங்கை வங்கியினதும் குழுமத்தினதும் நிதி அறிக்கையிடல் தொடர்பில் பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பின்வரும் கூற்றில் விவரிக்கப்படுகின்றது.

நிதியியல் கூற்றுக்கள்

1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்துடனும் அதற்கான திருத்தங்களுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தினதும் மற்றும் அதற்கான திருத்தங்களின் ஏற்பாடுகளினதும், அதன்கீழ் வழங்கப்பட்ட வழிகாட்டல்களினதும் பிரகாரம் வங்கியின் பணிப்பாளர்கள், வங்கி ஒழுங்கான கணக்குப் புத்தகங்களைப் பராமரிக்கின்றது என்பதற்கும் அக்கணக்குகள் எப்பொழுதும் வங்கியின் நிதி நிலைமைகளை நியாயமான வகையில் சரியாக வெளிப்படுத்துகின்றது என்பதற்கும் பொறுப்புடையவர்களாவதுடன் ஒவ்வொரு நிதியாண்டுக்கும் பொருத்தமான நிதிக்கூற்றுக்களை வங்கியினது அலுவல்களின் நிலை பற்றிய உண்மையானதும் நேர்மையானதுமான ஒரு நோக்கைப் பிரதிபலிக்கின்ற வகையில் தயாரிக்கின்றனரென்று உறுதிப்படுத்துகின்றனர்.

இவ்வாண்டறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளைத் தயாரிப்பதில், மிகப் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப் பட்டுள்ளனவென்றும், நியாயமானதும் விவேகமானதுமான திறனாய்வு முடிவுகளினதும் மதிப்பீடுகளினதும் ஆதரவுடன் அவை நிலைமாறாது பிரயோகிக்கப் பட்டுள்ளன என்றும் பணிப்பாளர்கள் ஒப்புக் கொள்கின்றனர். ஏதாவது முக்கியமான விலகல்கள் இருப்பின் அவை வெளிப்படுத்தப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள 2017 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள், 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்திற்கும் அதன் திருத்தங்களுக்கும், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்திற்கும் அதன் திருத்தங்களுக்கும் வழிகாட்டல்களுக்கும், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய சட்டத்தேவைப்பாடுகளுக்கும் இணங்கவும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நிதிக்கூற்றுக்கள் 2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியினதும் அதன் குழுமத்தினதும் நிலவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன.

தொடர்ந்து இயங்கும் நிறுவனம்

வங்கியும் குழுமமும் முன்னுணரக்கூடிய எதிர்காலத்துக்கு வியாபாரத்தைத் தொடர்வதற்குப் போதிய வளங்களைக் கொண்டுள்ளனவென்று பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

அதற்கிணங்க அவர்கள் நிதிக்கூற்றுகளைத் தயாரிப்பதில் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு அடிப்படையைத் தொடர்ந்தும் கைக்கொண்டுள்ளனர்.

உள்ளகக் கட்டுப்பாடுகள், இடர் முகாமைத்துவம் மற்றும் இணக்கப்பாடு

பணிப்பாளர்கள் உள்ளக நிதியியல் கட்டுப்பாடுகளின் முறைமைக்கும் இடர் முகாமைத்துவத்துக்கும் பொறுப்பானவர்களாதலால், வங்கியின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் இடர் காப்பதற்கும் மோசடி மற்றும் முகாமைச் சீர்கேடுகளைத் தடுப்பதற்கும் ஓர் உறுதியான கட்டுப்பாட்டுச் சூழலைப் பேணுவதற்குக் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் அளிக்கின்றனர். இயல்பான மற்றும் இழிவு இடர்களை முழுமையாக ஒழிக்க முடியாதென்கின்ற போதிலும், பொருத்தமான உட்கட்டமைப்பு, கட்டுப்பாடுகள், முறைமைகள் மற்றும் நெறிமுறையான நடத்தை என்பவற்றை, முன்தீர்மானிக்கப்பட்ட நடைமுறைகள், வரையறைகளினுள் பிரயோகிப்பதன்மூலமும் பின்பற்றுவதன்மூலமும் அவற்றை இழிவளவாகக் குறைப்பதற்கு வங்கி பெருமுயற்சி செய்கின்றது.

நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பில் நியாயமான உத்தரவாதத்தை வழங்கக்கூடியதாக நிதி அறிக்கையிடல் முறைமை திட்டமிடப்பட்டுள்ளதென்று உறுதிப்படுத்துகின்ற வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறை பற்றிய பணிப்பாளர்களின் கூற்று இந்த ஆண்டறிக்கையின் 146 மற்றும் 147 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

பணிப்பாளர்களும் முகாமைத்துவமும் இடர்முகாமைத்துவக் கொள்கைகளையும் வழிகாட்டல்களையும் வகுத்தமைத்துள்ளனர். முக்கிய இடர்களைக் கண்காணிப்பதற்கும் கையாள்வதற்கும் முகாமைத்துவக் குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன. இடர்பற்றிய அறிக்கைகளைக் கலந்தாராய்வதற்கு ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவுக்கு காலாண்டு அடிப்படையில் அவற்றைச் சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஏற்புடைய சட்டங்கள், பிரமாணங்கள், விதிகள், பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றுடனான இணக்கப்பாடு சுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவப் பிரிவால் கண்காணிக்கப்பட்டுச் சபைக்கு அறிக்கையிடப்படுகின்றது.

கணக்காய்வுக் குழுவும் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவும் தொடர்ந்து இடம்பெறும் அடிப்படையில் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகளின் பயனுறுதித்தன்மையை வலுப்படுத்துகின்றன. கணக்காய்வுக் குழுவினதும் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவினதும் அறிக்கைகள் இவ்வாண்டறிக்கையில் 70 முதல் 73 ஆம் பக்கங்களிலும் 74 முதல் 75 ஆம் பக்கங்களிலும் முறையே உள்ளடக்கப்பட்டுள்ளன.

கணக்காய்வு அறிக்கை


இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரைக்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதி தான் வங்கியின் கணக்காய்வாளரென்றவகையில் வங்கியின் நிதிக்கூற்றுகள் மீதான இறுதி அபிப்பிராயத்தை வழங்குகின்றார். நிதிக்கூற்றுகள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் இவ்வாண்டறிக்கையின் 150 ஆம் பக்கத்திலுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளன. வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையின் வினைத்திறன் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உத்தரவாத அறிக்கை இவ் ஆண்டறிக்கையின் 148 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

இணக்கப்பாடு

பணிப்பாளர்களின் நம்பிக்கைக்கும் அறிவுக்கும் எட்டிய வரையில் தொடர்புபட்ட எல்லா ஒழுங்குபடுத்துனர்களுக்கும் மற்றும் சட்ட அதிகாரங்களுக்குமான எல்லா சட்ட ரீதியான கொடுப்பனவுகளும் திருப்திகரமாக உள்ளன. வங்கியாலும் வங்கியின் துணை நிறுவனங்களாலும் செலுத்தப்பட வேண்டிய இக் கொடுப்பனவுகள் நிதியியல் நிலைமைக் கூற்றுத்திகதியில் உள்ளவாறாகச் செலுத்தப்பட்டுள்ளன, அல்லது அங்கே செலுத்தப்பட வேண்டிய நிலுவைகளாகக் காட்டப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள் இக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தமது பொறுப்புக்களை சிறப்பாக நிறைவேற்றியுள்ளனர் என்று கருதுகின்றனர்.

சபையின் கட்டளைப்படி,



ஜானகி சேனாநாயக்க சிறிவர்தன
செயலாளர்,
இலங்கை வங்கி/சபைச் செயலாளர்

27 மார்ச் 2018
கொழும்பு

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

எமது இல. My No. பீஏஎவ்/பீ/பீஓசீ/எவ்ஏ/2017 | உமது இல. Your No. | திகதி Date 2018 மார்ச் 29

தலைவர்
இலங்கை வங்கி

இலங்கை வங்கியினதும் வங்கி மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை வங்கியினதும் ("வங்கி") இலங்கை வங்கி மற்றும் அதனது துணைக் கம்பனிகளதும் ("குழுமம்") 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுச் சேவையிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்றின் உதவிபெறப்பட்டது.

நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாகவுள்ளது.

கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளர்களின் தீர்மானத்தின் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

அபிப்பிராயம்

2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியினதும் குழுமத்தினதும் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வங்கியினது நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

விலக்களிப்பு

வங்கியானது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 5 (1) ஆம் பிரிவில் அவருக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி முன்னைய நிதி அமைச்சரின் கட்டளை மூலம் வெளியிடப்பட்ட 1992 மே 14 ஆம் திகதிய 715 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதன் படி, நிதி அதிகாரச்சட்டத்தின் பகுதி II இன் ஏற்பாடுகளிலிருந்து வங்கி விலக்களிக்கப்பட்டிருந்தது.

பாராளுமன்றத்திற்கான அறிக்கை

அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எச் எம் காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்ல, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

இலாப நட்டக் கூற்று

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	குறிப்பு	வங்கி			குழுமம்		
		2017 ரூபா '000	2016 ரூபா '000	மாற்றம் %	2017 ரூபா '000	2016 ரூபா '000	மாற்றம் %
மொத்த வருமானம்	7	**189,211,395**	**154,121,372**	**22.8**	**197,012,961**	**159,701,225**	**23.4**
வட்டி வருமானம்		171,343,888	134,685,338	27.2	177,746,357	139,701,569	27.2
கழி: வட்டிச் செலவினம்		112,987,696	80,727,850	40.0	116,256,255	83,095,077	39.9
தேறிய வட்டி வருமானம்	8	**58,356,192**	**53,957,488**	**8.2**	**61,490,102**	**56,606,492**	**8.6**
கட்டணம் மற்றும் தரகு வருமானம்		9,178,655	8,739,625	5.0	9,436,780	8,983,083	5.1
கழி: கட்டணம் மற்றும் தரகுச் செலவினம்		1,883,302	1,520,190	23.9	1,972,374	1,607,271	22.7
தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்	9	**7,295,353**	**7,219,435**	**1.1**	**7,464,406**	**7,375,812**	**1.2**
வர்த்தகத்திலிருந்தான தேறிய இலாபம்/(நட்டம்)	10	2,802,048	2,061,616	35.9	2,822,168	2,037,390	38.5
இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் சாதனங்களிலிருந்தான தேறிய இலாபம்/(நட்டம்)		–	–	–	–	–	–
நிதியியல் முதலீடுகளிலிருந்தான தேறிய இலாபம்/(நட்டம்)	11	905,527	273,881	230.6	925,733	312,273	196.4
ஏனைய தொழிற்பாட்டு வருமானம்	12	4,981,277	8,360,912	(40.4)	6,081,923	8,666,910	(29.8)
மொத்த தொழிற்பாட்டு வருமானம்		**74,340,397**	**71,873,332**	**3.4**	**78,784,332**	**74,998,877**	**5.0**
கழி: கடன்கள் மற்றும் ஏனைய இழப்புக்களுக்கான பெறுமதி குறைப்பு அறவீடு/(மாற்றுப் பதிவு)	13	9,340,658	4,396,761	112.4	9,884,889	4,421,000	123.6
தேறிய தொழிற்பாட்டு வருமானம்		**64,999,739**	**67,476,571**	**(3.7)**	**68,899,443**	**70,577,877**	**(2.4)**
கழி: தொழிற்பாட்டு செலவினம்							
ஆளணிச் செலவினம்	14	16,996,176	16,844,431	0.9	18,723,550	18,409,329	1.7
ஏனைய செலவினம்	15	10,411,797	13,178,506	(21.0)	11,980,852	15,737,789	(23.9)
மொத்த தொழிற்பாட்டுச் செலவினம்		**27,407,973**	**30,022,937**	**(8.7)**	**30,704,402**	**34,147,118**	**(10.1)**
நிதிச்சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி (VAT) மற்றும் நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிக்கு (NBT) முன்னரான தொழிற்பாட்டு இலாபம்		**37,591,766**	**37,453,634**	**0.4**	**38,195,041**	**36,430,759**	**4.8**
கழி: நிதிச்சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி (VAT) மற்றும் நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (NBT)		7,248,786	6,264,949	15.7	7,431,502	6,376,679	16.5
நிதிச்சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி (VAT) மற்றும் நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிக்கு (NBT) பின்னரான தொழிற்பாட்டு இலாபம்		**30,342,980**	**31,188,685**	**(2.7)**	**30,763,539**	**30,054,080**	**2.4**
கூட்டுக் கம்பனிகளின் வரி கழித்த இலாபத்தின்/ (நட்டத்தின்) பங்கு	16	–	–	–	52,024	62,952	(17.4)
வருமான வரிக்கு முன்னரான இலாபம்		**30,342,980**	**31,188,685**	**(2.7)**	**30,815,563**	**30,117,032**	**2.3**
கழி: வருமான வரிச் செலவினம்	17	9,030,696	6,397,689	41.2	9,328,918	6,731,105	38.6
ஆண்டுக்கான இலாபம்		**21,312,284**	**24,790,996**	**(14.0)**	**21,486,645**	**23,385,927**	**(8.1)**
பின்வருவோருக்கு உரித்தான இலாபம்							
வங்கியின் உரிமை மூலதனப் பங்குதாரர்		21,312,284	24,790,996	(14.0)	21,470,163	23,496,656	(8.6)
கட்டுப்பாட்டில் இல்லாத பங்கு		–	–	–	16,482	(110,729)	114.9
ஆண்டுக்கான இலாபம்		**21,312,284**	**24,790,996**	**(14.0)**	**21,486,645**	**23,385,927**	**(8.1)**
பங்கொன்றுக்கான வருவாய்:	18						
பங்கொன்றுக்கான அடிப்படை வருவாய் (ரூபா)		1,856.56	2,479.10	(25.1)	1,870.31	2,349.67	(20.4)
பங்கொன்றிற்கான குறைவடைந்த வருவாய்கள் (ரூபா)		1,414.36	2,439.01	(42.0)	1,424.84	2,311.67	(38.4)
பங்கொன்றுக்கான பங்குலாபம் (ரூபா)	18	1,075.52	1,734.64	(38.0)	1,075.52	1,734.64	(38.0)

160 ஆம் பக்கத்திலிருந்து 302 ஆம் பக்கம் வரையுள்ள குறிப்புக்கள் இந்நிதிக் கூற்றுக்களின் முக்கிய பகுதியாகும்.

முற்றடக்க வருமானக் கூற்று

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி			குழுமம்		
	2017 ரூபா '000	2016 ரூபா '000	மாற்றம் %	2017 ரூபா '000	2016 ரூபா '000	மாற்றம் %
ஆண்டுக்கான இலாபம்	**21,312,284**	**24,790,996**	**(14.0)**	**21,486,645**	**23,385,927**	**(8.1)**
வரி கழித்த, ஏனைய முற்றடக்க வருமானம்						
இலாபமோ அல்லது நட்டத்துக்கோ மீள்வகைப்படுத்தப்படாதவை						
மீள்மதிப்பீட்டிலான மாற்றங்கள் மிகை/(பற்றாக்குறை)	6,059,715	1,394,640	334.5	6,406,248	2,307,452	177.6
மீள்மதிப்பீட்டிலான மாற்றங்கள் மிகை/(பற்றாக்குறை) மீதான பிற்போடப்பட்ட வரித் தாக்கம்	(4,094,358)	–	–	(4,191,387)	(255,587)	1,539.9
நிச்சயிக்கப்பட்ட அனுகூலத் திட்டங்கள் மீதான மதிப்பீட்டு இலாபம்/(நட்டம்)	2,789,929	(1,621,904)	272.0	2,766,683	(1,580,561)	275.0
நிச்சயிக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களின் மதிப்பீட்டு இலாபம்/(நட்டம்) மீதான பிற்போடப்பட்ட வரித் தாக்கம்	(8,400)	32,038	(126.2)	8,363	30,061	(72.2)
இலாபமோ அல்லது நட்டத்துக்கோ மீள்வகைப்படுத்தப்படாத தேறிய ஏனைய முற்றடக்க வருமானம்	**4,746,886**	**(195,226)**	**2,531.5**	**4,989,907**	**501,365**	**895.3**
இலாபமோ அல்லது நட்டத்துக்கோ மீள்வகைப்படுத்தப்படுபவை அல்லது மீள்வகைப்படுத்தப்படக்கூடியவை						
வெளிநாட்டுத் தொழிற்பாடுகளின் நிதிக்கூற்றுக்களின் பரிமாற்றத்திலிருந்தான நாணயமாற்று இலாபம்/(நட்டம்)	361,375	165,793	118.0	643,365	(228,067)	382.1
விற்பனைக்குக் கிடைக்கத்தக்க நிதியியல் முதலீடுகளின் மீள்அளவீட்டின் மீதான இலாபம்/(நட்டம்)	(595,034)	(1,025,760)	(42.0)	(619,591)	(957,182)	(35.3)
விற்பனைக்குக் கிடைக்கத்தக்க நிதியியல் முதலீடுகளின் மீள் அளவீட்டு இலாபம்/(நட்டம்) மீதான பிற்போடப்பட்ட வரித்தாக்கம்	(177,006)	(8,893)	1,890.4	(177,006)	(8,893)	1,890.4
விற்பனைக்கான நிதியியல் முதலீடுகளின் மீதான தேறிய இலாபங்கள்/(நட்டங்கள்) இலாப நட்டத்துக்கு மாற்றப்பட்டது	3,385	(15,525)	121.8	3,385	(15,525)	121.8
வரி கழித்த, கூட்டுக்கம்பனிகளின் ஏனைய ஒன்றுதிரட்டிய வருமானப் பங்கு	–	–	–	(6,600)	2,174	(403.6)
இலாபமோ அல்லது நட்டத்துக்கோ மீள்வகைப்படுத்தப்படுபவை அல்லது மீள்வகைப்படுத்தப்படக்கூடிய தேறிய முற்றடக்க வருமானம்	**(407,280)**	**(884,385)**	**(53.9)**	**(156,447)**	**(1,207,493)**	**(87.0)**
வரி கழித்த, ஆண்டுக்கான ஏனைய முற்றடக்க வருமானம்	**4,339,606**	**(1,079,611)**	**502.0**	**4,833,460**	**(706,128)**	**784.5**
ஆண்டுக்கான மொத்த ஒன்று திரட்டிய வருமானம்	**25,651,890**	**23,711,385**	**8.2**	**26,320,105**	**22,679,799**	**16.1**
பின்வருவோருக்கு உரித்தானது:						
வங்கியின் உரிமை மூலதனப் பங்குதாரர்	25,651,890	23,711,385	8.2	26,270,244	22,758,128	15.4
கட்டுப்பாட்டில் இல்லாத பங்கு	–	–	–	49,861	(78,329)	163.7
ஆண்டுக்கான மொத்த ஒன்று திரட்டிய வருமானம்	**25,651,890**	**23,711,385**	**8.2**	**26,320,105**	**22,679,799**	**16.1**

160 ஆம் பக்கத்திலிருந்து 302 ஆம் பக்கம் வரையுள்ள குறிப்புக்கள் இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாகும்.

நிதியியல் நிலைமைக் கூற்று

டிசம்பர் 31 இல் உள்ளவாறான	குறிப்பு	வங்கி			குழுமம்		
		2017 ரூபா '000	2016 ரூபா '000	மாற்றம் %	2017 ரூபா '000	2016 ரூபா '000	மாற்றம் %
சொத்துக்கள்							
காசும் காசுக்குச் சமமானவையும்	20	72,843,108	67,705,791	7.6	78,005,362	73,244,043	6.5
மத்திய வங்கிகளுடனான நிலுவைகள்	21	68,689,012	56,387,741	21.8	68,689,012	56,387,741	21.8
வங்கிகளுடனான வைத்திருப்புக்கள்	22	8,067,490	11,674,664	(30.9)	5,319,602	12,931,605	(58.9)
மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	23	18,455,555	1,901,618	870.5	19,872,247	2,350,704	745.4
பெறுதி நிதியியல் சாதனங்கள்	24	1,618,823	5,300,844	(69.5)	1,618,823	5,300,844	(69.5)
நிதியியல் சாதனங்கள் - வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்டவை	25	8,359,274	8,474,041	(1.4)	8,596,548	8,804,647	(2.4)
நிதியியல் முதலீடுகள் - கடன்களும் பெறவேண்டியவைகளும்	26	213,167,048	191,874,638	11.1	214,349,624	191,984,082	11.6
வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும்	27	1,163,160,914	1,000,082,574	16.3	1,194,294,394	1,027,768,110	16.2
நிதியியல் முதலீடுகள் - விற்பனைக்கு கிடைக்கத்தக்கவை	28	17,921,170	10,463,046	71.3	22,552,292	16,263,641	38.7
நிதியியல் முதலீடுகள் - முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்டவை	29	308,256,082	243,178,400	26.8	308,750,317	243,253,967	26.9
துணைக் கம்பனிகளிலான முதலீடுகள்	30	6,513,048	6,213,048	4.8	–	–	–
கூட்டுக் கம்பனிகளிலான முதலீடுகள்	31	92,988	92,988	–	446,793	420,669	6.2
முதலீட்டு ஆதனங்கள்	32	2,882,928	3,000,000	(3.9)	123,773	127,670	(3.1)
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	33	23,046,114	15,482,163	48.9	36,608,919	29,200,036	25.4
குத்தகை ஆதனங்கள்	34	101,481	101,839	(0.4)	134,441	136,155	(1.3)
கட்புலனாகாச் சொத்துக்கள்	35	810,730	563,490	43.9	1,074,436	655,630	63.9
பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்	36	–	–	–	8,621	5,456	58.0
ஏனைய சொத்துக்கள்	37	37,818,188	46,794,389	(19.2)	38,964,979	47,721,701	(18.3)
மொத்தச் சொத்துக்கள்		**1,951,803,953**	**1,669,291,274**	**16.9**	**1,999,410,183**	**1,716,556,701**	**16.5**
பொறுப்புக்கள்							
வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை	38	2,203,199	2,042,322	7.9	2,194,266	2,053,945	6.8
மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்	39	44,487,462	59,424,629	(25.1)	44,628,686	58,925,801	(24.3)
பெறுதி நிதியியல் சாதனங்கள்	40	70,715	171,663	(58.8)	70,715	171,663	(58.8)
வாடிக்கையாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை	41	1,546,832,036	1,256,589,490	23.1	1,566,376,418	1,273,631,287	23.0
ஏனைய கடன்கள்	42	178,191,089	195,469,853	(8.8)	184,330,181	204,485,301	(9.9)
வழங்கப்பட்ட கடன் பிணையங்கள்	43	–	3,427,058	(100.0)	5,667,514	8,360,333	(32.2)
நடைமுறை வரிப் பொறுப்புக்கள்		1,877,342	–	–	2,051,020	253,020	710.6
பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள்	36	5,820,329	1,439,285	304.4	8,625,219	4,078,734	111.5
காப்புறுதி ஏற்பாடு - ஆயுள்	44	–	–	–	547,026	514,675	6.3
காப்புறுதி ஏற்பாடு - ஆயுள் அல்லாத	44	–	–	–	430,093	775,375	(44.5)
ஏனைய பொறுப்புக்கள்	45	18,596,249	19,231,833	(3.3)	19,936,478	21,656,513	(7.9)
இரண்டாந்தர தவணைக் கடன்கள்	47	42,570,457	38,645,546	10.2	42,226,067	38,295,318	10.3
மொத்தப் பொறுப்புக்கள்		**1,840,648,878**	**1,576,441,679**	**16.8**	**1,877,083,683**	**1,613,201,965**	**16.4**
உரிமை மூலதனம்							
பங்கு மூலதனம்	48	20,000,000	15,000,000	33.3	20,000,000	15,000,000	33.3
நிரந்தர ஒதுக்கு நிதியம்	49	10,427,000	7,996,000	30.4	10,427,000	7,996,000	30.4
நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்கள்		63,472,250	54,154,685	17.2	65,100,871	55,659,003	17.0
ஏனைய ஒதுக்குகள்	50	17,255,825	15,698,910	9.9	25,871,254	23,820,288	8.6
வங்கியின் உரிமைப் பங்குதாரருக்கு உரித்தான மொத்த உரிமை மூலதனம்		**111,155,075**	**92,849,595**	**19.7**	**121,399,125**	**102,475,291**	**18.5**
கட்டுப்பாட்டில் இல்லாத பங்கு	51	–	–	–	927,375	879,445	5.4
மொத்த உரிமை மூலதனம்		**111,155,075**	**92,849,595**	**19.7**	**122,326,500**	**103,354,736**	**18.4**
மொத்த பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம்		**1,951,803,953**	**1,669,291,274**	**16.9**	**1,999,410,183**	**1,716,556,701**	**16.5**
நிகழத்தக்கவைசார் பொறுப்புக்களும் கடப்பாடுகளும்	53	507,258,821	547,398,625	(7.3)	508,399,376	548,333,620	(7.3)
பங்கொன்றுக்கான தேறிய சொத்துக்களின் பெறுமதி (ரூபா)	48	7,410.34	9,284.96	(20.2)	8,093.28	10,247.53	(21.0)

160 ஆம் பக்கத்திலிருந்து 302 ஆம் பக்கம் வரையுள்ள குறிப்புக்கள் இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாகும்.

இலங்கை வங்கியினதும் அதன் குழுமத்தினதும் 31.12.2017 இல் உள்ளவாறான நிதியியல் நிலைமைகளையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபத்தையும் இந்நிதியியல் கூற்றுக்கள் உண்மையாகவும் ஏற்றுகொள்ளத்தக்க வகையிலும் பிரதிபலிக்கின்றது.

டப்ளியு பீ ரசல் பொன்சேகா
பிரதான நிதியியல் உத்தியோகத்தர்

இந்நிதியியல் கூற்றுக்களினைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பித்தலுக்கும் பணிப்பாளர் சபை பொறுப்பாகும். சபைக்காகவும் சபையின் சார்பிலும் ஒப்புதல் அளிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டுள்ளது,

ரொனால்ட் சி பெரேரா
தலைவர்

ரணெல் ரி விஜேசிங்க
பணிப்பாளர்

செனரத் பண்டார
பொது முகாமையாளர்

27 மார்ச் 2018
கொழும்பு

உரிமையாண்மையில் ஏற்படும் மாற்றங்களைக் காட்டும் கூற்று

வங்கி

	குறிப்பு	பங்கு மூலதனம் ரூபா '000	நிறுத்திவைக்கப்பட்ட மூலதன ஒதுக்கீடு ரூபா '000	நிரந்தர ஒதுக்கநிதி ரூபா '000
2016 ஜனவரி 1 இல் உள்ளவாறான மீதி		10,000,000	–	5,209,955
ஆண்டுக்கான மொத்த ஒன்று திரட்டிய வருமானம்				
ஆண்டுக்கான இலாபம்		–	–	–
வரி கழித்த, ஏனைய ஒன்று திரட்டிய வருமானம்		–	–	–
ஆண்டுக்கான மொத்த ஒன்று திரட்டிய வருமானம்		**–**	**–**	**–**
உரிமைப் பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், உரிமை மூலதனத்தின்கீழ் பதியப்பட்டுள்ளன				
2016 இற்கான பங்குலாபங்கள்	18.3	–	–	–
ஆண்டுக் காலப்பகுதியிலான மூலதன உட்பாய்ச்சல்கள்		–	5,000,000	–
நிரந்தர ஒதுக்கு நிதியத்திற்கான மாற்றல்கள்	49	–	–	2,786,045
உரிமைப் பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்களின் மொத்தம்		**–**	**5,000,000**	**2,786,045**
2016 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி		**10,000,000**	**5,000,000**	**7,996,000**
2017 ஜனவரி 1 இல் உள்ளவாறான மீதி		10,000,000	5,000,000	7,996,000
ஆண்டுக்கான மொத்த ஒன்று திரட்டிய வருமானம்				
ஆண்டுக்கான இலாபம்		–	–	–
வரி கழித்த, ஏனைய ஒன்று திரட்டிய வருமானம்		–	–	–
ஆண்டுக்கான மொத்த ஒன்று திரட்டிய வருமானம்		**–**	**–**	**–**
உரிமைப் பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், உரிமை மூலதனத்தின்கீழ் பதியப்பட்டுள்ளன				
2017 இற்கான பங்குலாபங்கள்	18.3	–	–	–
பங்கு மூலதனத்துக்கான மாற்றல்கள்	48.1	5,000,000	(5,000,000)	
ஆண்டுக்காலப் பகுதியிலான மூலதன உட்பாய்ச்சல்		–	5,000,000	–
விற்கப்பட்ட சொத்துக்களின் மீள் மதிப்பீட்டு மிகை		–	–	–
நிரந்தர ஒதுக்கு நிதியத்திற்கான மாற்றல்கள்	49	–	–	2,431,000
உரிமைப் பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்களின் மொத்தம்		**5,000,000**	**–**	**2,431,000**
2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி		**15,000,000**	**5,000,000**	**10,427,000**

160 ஆம் பக்கத்திலிருந்து 302 ஆம் பக்கம் வரையுள்ள குறிப்புக்கள் இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாகும்.

ஏனைய ஒதுக்கங்கள்				
விற்பனைக்கு கிடைக்கத்தக்க ஒதுக்கம் ரூபா '000	ஏனைய ஒதுக்கங்கள் ரூபா '000	மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா '000	நிறுத்தி வைத்த உழைப்புக்கள் ரூபா '000	மொத்த உரிமை மூலதனம் ரூபா '000
5,537,359	1,043,642	8,607,654	51,086,010	81,484,620
–	–	–	24,790,996	24,790,996
(1,050,178)	165,793	1,394,640	(1,589,866)	(1,079,611)
(1,050,178)	**165,793**	**1,394,640**	**23,201,130**	**23,711,385**
–	–	–	(17,346,410)	(17,346,410)
–	–	–	–	5,000,000
–	–	–	(2,786,045)	–
–	**–**	**–**	**(20,132,455)**	**(12,346,410)**
4,487,181	**1,209,435**	**10,002,294**	**54,154,685**	**92,849,595**
4,487,181	1,209,435	10,002,294	54,154,685	92,849,595
–	–	–	21,312,284	21,312,284
(768,655)	361,375	1,965,357	2,781,529	4,339,606
(768,655)	**361,375**	**1,965,357**	**24,093,813**	**25,651,890**
–	–	–	(12,346,410)	(12,346,410)
–	–	–	–	–
–	–	–	–	5,000,000
–	–	(1,162)	1,162	–
–	–	–	(2,431,000)	–
–	**–**	**(1,162)**	**(14,776,248)**	**(7,346,410)**
3,718,526	**1,570,810**	**11,966,489**	**63,472,250**	**111,155,075**

குழுமம்

	குறிப்பு	பங்கு மூலதனம் ரூபா '000	நிறுத்தி வைக்கப்பட்ட மூலதன ஒதுக்கீடு ரூபா '000	நிரந்தர ஒதுக்கநிதி ரூபா '000
2016 ஜனவரி 1 இல் உள்ளவாறான மீதி		10,000,000	–	5,209,955
ஆண்டுக்கான மொத்த ஒன்று திரட்டிய வருமானம்				
ஆண்டுக்கான இலாபம்		–	–	–
வரி கழித்த, ஏனைய ஒன்று திரட்டிய வருமானம்		–	–	–
ஆண்டுக்கான மொத்த ஒன்று திரட்டிய வருமானம்		**–**	**–**	**–**
உரிமைப் பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், உரிமை மூலதனத்தின்கீழ் பதியப்பட்டுள்ளன				
2016 இற்கான பங்குலாபங்கள்	18.3	–	–	–
கட்டுப்பாட்டில் இல்லாத பங்குகளுக்கான துணைக்கம்பனி பங்குலாபங்கள்		–	–	–
ஆண்டுக்காலப் பகுதியிலான மூலதன உட்பாய்ச்சல்	48.1	–	5,000,000	–
நிரந்தர ஒதுக்கு நிதியத்திற்கான மாற்றல்கள்	49	–	–	2,786,045
ஏனைய ஒதுக்குகளுக்கான மாற்றல்கள்	50.5	–	–	–
உரிமைப் பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்களின் மொத்தம்		**–**	**5,000,000**	**2,786,045**
2016 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி		**10,000,000**	**5,000,000**	**7,996,000**
2017 ஜனவரி 1 இல் உள்ளவாறான மீதி		10,000,000	5,000,000	7,996,000
ஆண்டுக்கான மொத்த ஒன்று திரட்டிய வருமானம்				
ஆண்டுக்கான மொத்த இலாபம்		–	–	–
வரி கழித்த, ஏனைய ஒன்று திரட்டிய வருமானம்		–	–	–
ஆண்டுக்கான மொத்த ஒன்று திரட்டிய வருமானம்		**–**	**–**	**–**
உரிமைப் பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், உரிமை மூலதனத்தின்கீழ் பதியப்பட்டுள்ளன				
2017 இற்கான பங்குலாபங்கள்	18.3	–	–	–
கட்டுப்பாட்டில் இல்லாத பங்குகளுக்கான துணைக்கம்பனி பங்குலாபங்கள்		–	–	–
பங்கு மூலதனத்துக்கான மாற்றல்கள்		5,000,000	(5,000,000)	–
ஆண்டுக்காலப் பகுதியிலான மூலதன உட்பாய்ச்சல்	48.1	–	5,000,000	–
விற்கப்பட்ட சொத்துக்களின் மீள் மதிப்பீட்டு மிகை		–	–	–
நிரந்தர ஒதுக்கு நிதியத்திற்கான மாற்றல்கள்	49	–	–	2,431,000
ஏனைய ஒதுக்குகளுக்கான மாற்றல்கள்	50.5	–	–	–
உரிமைப் பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்களின் மொத்தம்		**5,000,000**	**–**	**2,431,000**
2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி		**15,000,000**	**5,000,000**	**10,427,000**

160 ஆம் பக்கத்திலிருந்து 302 ஆம் பக்கம் வரையுள்ள குறிப்புக்கள் இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாகும்.

வங்கியின் உரிமை மூலதனப் பங்குதாரர்களுக்கு சாட்டுதல்					
ஏனைய ஒதுக்கங்கள்					
விற்பனைக்கு கிடைக்கத்தக்க ஒதுக்கம் ரூபா '000	ஏனைய ஒதுக்கங்கள் ரூபா '000	மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா '000	நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் ரூபா '000	கட்டுப்பாட்டில் இல்லாத பங்கு ரூபா '000	மொத்த உரிமை மூலதனம் ரூபா '000
6,539,515	1,956,800	14,469,008	53,888,295	1,010,640	93,074,213
–	–	–	23,496,656	(110,729)	23,385,927
(977,249)	(228,067)	2,025,051	(1,558,263)	32,400	(706,128)
(977,249)	**(228,067)**	**2,025,051**	**21,938,393**	**(78,329)**	**22,679,799**
–	–	–	(17,346,410)	–	(17,346,410)
–	–	–	–	(52,866)	(52,866)
–	–	–	–	–	5,000,000
–	–	–	(2,786,045)	–	–
–	35,230	–	(35,230)	–	–
–	**35,230**	**–**	**(20,167,685)**	**(52,866)**	**(12,399,276)**
5,562,266	**1,763,963**	**16,494,059**	**55,659,003**	**879,445**	**103,354,736**
5,562,266	1,763,963	16,494,059	55,659,003	879,445	103,354,736
–	–	–	21,470,163	16,482	21,486,645
(801,650)	643,365	2,188,368	2,769,998	33,379	4,833,460
(801,650)	**643,365**	**2,188,368**	**24,240,161**	**49,861**	**26,320,105**
–	–	–	(12,346,410)	–	(12,346,410)
–	–	–	–	(1,931)	(1,931)
–	–	–	–	–	–
–	–	–	–	–	5,000,000
–	–	(1,162)	1,162	–	–
–	–	–	(2,431,000)	–	–
–	22,045	–	(22,045)	–	–
–	**22,045**	**(1,162)**	**(14,798,293)**	**(1,931)**	**(7,348,341)**
4,760,616	**2,429,373**	**18,681,265**	**65,100,871**	**927,375**	**122,326,500**

காசுப்பாய்ச்சல்கள் கூற்று

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	குறிப்பு	வங்கி		குழுமம்	
		2017 ரூபா '000	2016 ரூபா '000	2017 ரூபா '000	2016 ரூபா '000
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்					
வருமான வரிக்கு முன்னரான இலாபம்		30,342,980	31,188,685	30,815,563	30,117,032
பின்வருவற்றுக்கான சீராக்கங்கள்:					
தேறிய வட்டி வருமானம்	8	(58,356,192)	(53,957,488)	(61,490,102)	(56,606,492)
வர்த்தகப் பிணையங்கள் மீதான பங்குலாப வருமானம்	10	(111,783)	(113,674)	(120,214)	(126,801)
துணை மற்றும் கூட்டுக் கம்பனிகளிலிருந்தான பங்குலாபங்கள்	12	(76,680)	(1,102,158)	–	–
வரி கழித்த, கூட்டுக் கம்பனிகளின் (இலாபம்/நட்டம்) பங்கு	16	–	–	(52,024)	(62,952)
தொழிற்பாட்டுச் சொத்துக்களிலான மாற்றம்	52.1	(176,623,016)	(160,667,438)	(177,474,266)	(163,958,901)
தொழிற்பாட்டுப் பொறுப்புக்களிலான மாற்றம்	52.2	304,162,970	131,411,796	306,329,345	134,895,340
வரிக்கு முன்னரான இலாபத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ஏனைய காசல்லா விடயங்கள்	52.3	10,872,287	3,832,099	12,102,838	4,890,843
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான ஏனைய தேறிய இலாபம்	11	(905,527)	(273,881)	(925,733)	(312,273)
		109,305,039	**(49,682,059)**	**109,185,407**	**(51,164,204)**
நிச்சயிக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களிலிருந்து செலுத்தப்பட்ட நன்மைகள்		(6,976,625)	(6,427,894)	(6,994,516)	(6,469,307)
பெற்ற வட்டி		120,744,703	95,086,587	126,994,502	99,900,577
செலுத்திய வட்டி		(85,565,050)	(54,415,320)	(88,311,449)	(56,022,201)
பெற்ற பங்குலாபம்		111,783	113,674	120,214	126,801
வருமான வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான/(உபயோகிக்கப்பட்ட) தேறிய காசு		**137,619,850**	**(15,325,012)**	**140,994,158**	**(13,628,334)**
செலுத்தப்பட்ட வருமான வரி		(2,580,454)	(6,020,924)	(2,683,837)	(6,248,626)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான/(உபயோகிக்கப்பட்ட) தேறிய காசு		**135,039,396**	**(21,345,936)**	**138,310,321**	**(19,876,960)**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்					
நிதியியல் முதலீடுகளிலான தேறிய (அதிகரிப்பு)/வீழ்ச்சி - முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்டவை		(65,055,871)	3,105,015	(65,470,538)	3,090,334
நிதியியல் முதலீடுகளிலான தேறிய (அதிகரிப்பு)/வீழ்ச்சி - விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவை		(7,716,838)	624,947	(6,571,920)	(861,988)
நிதியியல் முதலீடுகளிலான தேறிய (அதிகரிப்பு)/வீழ்ச்சி - கடன்களும் பெறத்தக்கவைகளும்		(21,292,409)	40,686,630	(22,365,555)	41,019,663
கூட்டுக் கம்பனி ஒன்றின் விற்பனையிலிருந்தான வருவாய்		–	3,880,000	–	3,880,000
ஆதனம், பொறி, உபகரணம் மற்றும் குத்தகை ஆதனங்களின் கொள்வனவு		(3,080,752)	(2,052,805)	(3,199,778)	(2,207,275)
கட்புலனாகாச் சொத்துக்களின் கொள்வனவு		(528,565)	(376,643)	(764,014)	(390,549)
ஆதனம், பொறி, உபகரணங்களின் விற்பனையிலிருந்தான வருவாய்கள்		62,457	18,961	69,101	63,951
பெற்ற பங்குலாபம்		649,270	1,268,331	592,796	204,565
பெற்ற வட்டி		40,578,598	36,487,727	41,088,070	36,809,586
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான/(உபயோகிக்கப்பட்ட) தேறிய காசு		**(56,384,110)**	**83,642,163**	**(56,621,838)**	**81,608,287**

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	குறிப்பு	வங்கி		குழுமம்	
		2017 ரூபா '000	2016 ரூபா '000	2017 ரூபா '000	2016 ரூபா '000
நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்					
ஏனைய கடன்பாடுகளிலான தேறிய அதிகரிப்பு/(வீழ்ச்சி)		(49,653,199)	(42,090,586)	(52,901,368)	(38,650,060)
பங்கு வழங்கலிலிருந்தான வருவாய்கள்		5,000,000	5,000,000	5,000,000	5,000,000
தொகுதிக் கடன் வழங்கலிலிருந்தான வருவாய்கள்		10,000,000	8,000,000	12,000,000	7,990,000
தொகுதிக் கடன் மீட்பின் மீதான கொடுப்பனவுகள்		(9,501,723)	(5,032,015)	(10,867,381)	(5,368,253)
வங்கியின் உரிமைப் பங்குதாரருக்கு செலுத்தப்பட்ட பங்குலாபம்		(12,346,410)	(18,346,410)	(12,346,410)	(18,346,410)
கட்டுப்படுத்தாத பங்கினருக்கு செலுத்தப்பட்ட பங்குலாபம்		–	–	(1,931)	(52,866)
கடன்கள் மற்றும் கடன் பிணையங்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள்		(17,320,884)	(21,458,109)	(18,093,765)	(22,211,745)
நிதியிடல் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு		**(73,822,216)**	**(73,927,120)**	**(77,210,855)**	**(71,639,334)**
ஆண்டுக் காலத்தில் காசு மற்றும் காசுக்குச் சமனானவற்றிலான தேறிய அதிகரிப்பு/(வீழ்ச்சி)		4,833,070	(11,630,893)	4,477,628	(9,908,007)
ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமனானவை		66,898,438	78,529,331	72,425,067	82,333,074
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமனானவை		**71,731,508**	**66,898,438**	**76,902,695**	**72,425,067**
காசு மற்றும் காசுக்குச் சமனானவற்றின் பகுப்பாய்வு					
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	20	72,843,108	67,705,791	78,005,362	73,244,043
வங்கி மேலதிகப் பற்றுக்கள்	38	(1,111,600)	(807,353)	(1,102,667)	(818,976)
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமனானவை		**71,731,508**	**66,898,438**	**76,902,695**	**72,425,067**

160 ஆம் பக்கத்திலிருந்து 302 ஆம் பக்கம் வரையுள்ள குறிப்புக்கள் இந்நிதிக் கூற்றுக்களின் முக்கிய பகுதியாகும்.

நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1 அறிக்கையிடப்படுகின்ற நிறுவனம்

1.1 நிறுவனத் தகவல்கள்

இலங்கை வங்கி, ("வங்கி") 1938ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 1939 ஆவணி முதலாம் திகதியில் முறையாக கூட்டிணைக்கப்பட்ட இலங்கையிலுள்ள ஒரு அரச உடமை வங்கியாகும். 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் மற்றும் அதற்குச் செய்யப்பட்ட திருத்தங்களின் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. வங்கியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம், "இலங்கை வங்கிச் சதுக்கம்", இல. 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை என்ற இடத்தில் அமைந்துள்ளது. இலங்கை வங்கியினால் வழங்கப்பட்ட தொகுதிக்கடன்கள் இலங்கை பங்குப் பரிவர்த்தனையிலும் ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட சிரேஷ்ட சான்றிதழ்கள் சிங்கப்பூர் பங்குப் பரிவர்த்தனையிலும் பட்டியலிடப்பட்டுள்ளன. 2017 டிசம்பர் 31 இல் வங்கியினது அலுவலர்கள் எண்ணிக்கை 7,587 ஆகக்காணப்பட்டது (2016 இல்: 7,569).

1.2 ஒன்று திரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்கள்

2017 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் ஒன்றுதிரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் வங்கி ("தாய்") அதன் துணைக் கம்பனிகள் மற்றும் அதன் இணைக்கம்பனிகளிலுள்ள குழுமத்தின் நலவுரித்துக்கள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன (ஒன்றிணைந்த வகையில் குழுமம் எனக் குறிப்பிடப்பட்டவையையும் தனித்தனியாக குழும நிறுவனங்களையும் சேர்த்து). டிரான்ஸ்நஷனல் லங்கா ரெகோட்ஸ் சொலூஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டட் நிறுவனம் மற்றும் சீபாங் அசெற்ஸ் மனேஜ்மென்ற் லிமிட்டெட் நிறுவனம் ஆகிய இணைக் கம்பனிகள் தவிர, டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடையும் பொதுவான நிதி ஆண்டினை குழுமத்திலுள்ள கம்பனிகளின் நிதிக் கூற்றுக்கள் கொண்டுள்ளன. இவ் வங்கியானது குழுமத்தின் இறுதி தாய் நிறுவனமாகும்.

1.3 முக்கிய செயற்பாடுகள்

1.3.1 வங்கி

இவ்வாண்டுப் பகுதியில் வங்கியின் முக்கிய செயற்பாடுகளாக வர்த்தக வங்கித்தொழில், தனியாள் வங்கித்தொழில், அபிவிருத்தி நிதியிடல், ஈட்டு நிதியிடல், குத்தகை நிதியிடல், முதலீட்டு வங்கித்தொழில், இஸ்லாமிய வங்கித்தொழில், வங்கி உத்தரவாதம், கம்பனி நிதியிடல், முதன்மை கையாளுகை, அடகு பிடித்தல், கொடுகடன் அட்டைவசதிகள், கரை கடந்த வங்கித்தொழில், வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகள், இணையத்தள வங்கித்தொழில் மற்றும் ஏனைய நிதியியல் வசதிகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

1.3.2 துணை நிறுவனங்கள்

வங்கியின் துணை நிறுவனங்களினது பிரதான செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன:

கம்பனியின் பெயர்	பிரதான வியாபாரச் செயற்பாடுகள்
புரப்பட்டி டிவலப்மன்ட் பிஎல்சி	இலங்கை வங்கியின் தலைமை அலுவலகக்கட்டிடத்தினைப் பராமரித்து முகாமை செய்தல்
மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சி	குத்தகை, வாடகைக் கொள்வனவு, கூட்டு மற்றும் சில்லறைக் கடன்கள், கூட்டாண்மை ஆலோசனைச் சேவைகள், மூலதனச் சந்தைச் செயற்பாடுகள், எல்லை வியாபாரம், நுண்நிதியிடல் மற்றும் விவசாயக் கடன் வசதி, அடகு பிடித்தல், சொத்து வியாபாரம் மற்றும் வைப்புக்களை ஏற்றல்
பீஓசி மனேஜ்மன்ட் அன்ட் சப்போட் சேர்விஸஸ் (பிறைவேற்) லிமிட்டட்	தற்போது செயற்படுவதில்லை. நிறுவனக் கலைப்பு செயன்முறையிலுள்ளது.
பீஓசி புரொப்பட்டி டெவெலப்மென்ட் அன்ட் மனேஜ்மன்ட் (பிறைவேற்) லிமிட்டட்	கொழும்பு 3 இலுள்ள பீஓசி மேர்ச்சன்ட் ரவர் அலுவலக இடவசதியினையும் கண்டியிலுள்ள சீ பாங்க் இல்லத்தையும் வாடகைக்கு வழங்குதல்
பீஓசி டிரவல்ஸ் (பிரைவேற்) லிமிட்டட்	பயணம் தொடர்பான பணிகளில் ஈடுபடுதல்
ஹோட்டெல்ஸ் கொழும்பு (1963) லிமிட்டட்	சுற்றுலா விடுதிச் சேவை வழங்குதல்
சீ பாங்க் கொலிடே கோம்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்	யாத்திரிகர்களுக்கான ஓய்வு விடுதிகள்/விடுமுறை இல்லங்கள் மற்றும் விருந்தினர் இல்லங்களை தொழிற்படுத்துதல்
எம் பி எஸ் எல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டட்	ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதியின் அனைத்து வகுப்புக்களையும் பொறுப்பேற்றல்
கொலடெனிய ஹைட்ரோ பவர் (பிறைவேற்) லிமிட்டட்	நீர்மின் வலு உருவாக்கம்
இலங்கை வங்கி (UK) லிமிட்டட்	ஐக்கிய இராச்சியத்தின் நிதியியல் பணிகள் அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யப்பட்டதுடன் வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல், முதலீடுகளைக் கையாளுதல் ஆகிய பிரதான தொழிற்பாடுகளுடன் கிளை சேவைகள், நிறுவன நிதி வசதிகள் மற்றும் வியாபார நிதிச் சேவைகளுக்கு மேலதிகமாக தொடர்பாடல் வங்கியியல் என்பன உள்ளிட்ட நிதியியல் பணிகளை வழங்குதல்

1.3.3 கூட்டு நிறுவனங்கள்

வங்கியின் இணைக்கம்பனிகளினது முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு:

கம்பனியின் பெயர்	பிரதான வியாபாரச் செயற்பாடுகள்
சீ பாங்க் அசற் மனேஜ்மன்ட் லிமிட்டட்	அலகு நம்பிக்கை நிதிகளையும் ஏனைய தனிப்பட்ட சொத்துப்பட்டியல்களையும் முகாமைப்படுத்தல்
லங்கா செக்குறிட்டீஸ் (பிறைவேற்) லிமிட்டட்	உரிமை மூலதன வர்த்தகப்படுத்தல், கடன் வர்த்தகப்படுத்தல் மற்றும் எல்லை வர்த்தகப்படுத்தல் என்பவற்றில் ஈடுபடுத்தப்படுகின்ற பதிவுசெய்யப்பட்ட பங்குத்தரகர்
ட்ரான்ஸ் நஷனல் லங்கா றெக்கோட்ஸ் சொலூஷன் (பிறைவேற்) லிமிட்டட்	ஆதனங்களையும் மனைநிலைச் சொத்துக்களையும் வாடகைக்கு விடுதல்
சதேண் டெவெலப்மென்ட் பினான்சியல் கம்பனி லிமிட்டட்	தற்போது செயற்படுவதில்லை. நிறுவனக் கலைப்பு செயன்முறையிலுள்ளது

ஆய்விற்குரிய இவ்வாண்டுப் பகுதியில் வங்கி, துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்களின் பிரதான செயற்பாடுகளின் தன்மையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களெதுவும் காணப்படவில்லை. பீஎசி மனேஜ்மென்ற் மற்றும் சப்போர்ட் சேர்விசஸ் (பிரைவேற்) லிமிடெட் ஆனது 2007 ம் ஆண்டிலிருந்து அதன் பிரதான வியாபார செயற்பாடுகளைக் கொண்டு நடாத்தவில்லை. வங்கியின் சபையானது இக் கம்பனியை மூடிவிடுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

சதோன் டிவலப்மென்ட் பினான்சியல் கம்பனி லிமிட்டெட் (SDFCL) நிறுவனமானது செயற்பாட்டில் இல்லை. சதோன் டிவலப்மென்ட் பினான்சியல் கம்பனி லிமிட்டெட் (SDFCL) நிறுவனத்தின் பணிப்பாளர் சபையானது இக் கம்பனியை மூடி விடுவதற்குத் தீர்மானித்துள்ளதுடன் கலைப்புச் செய்முறையிலும் உள்ளது.

2 நிதியியல் கூற்றுக்களுக்கான பணிப்பாளர் பொறுப்புக்கள்

2.1 நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல்

1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் என்பனவற்றின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகும் விதத்தில் வங்கி அதன் துணை மற்றும் கூட்டுநிறுவனங்களின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் பணிப்பாளர் சபை பொறுப்பாக இருக்கின்றது.

இந்நிதியியல் கூற்றுக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது:

- இலாப நட்டக் கூற்று
- முற்றடக்க வருமானக் கூற்று
- நிதியியல் நிலைமைக் கூற்று
- உரிமையாண்மையில் ஏற்படும் மாற்றங்களைக் காட்டும் கூற்று
- காசுப்பாய்ச்சல்கள் கூற்று
- நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2.2 நிதியியல் கூற்றுக்களுக்கான அங்கீகாரம்

2017 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்கள் 2018 மார்ச் 27இல் வழங்குவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகார-மளித்துள்ளது.

3 தயாரிப்பிற்கான அடிப்படை

3.1 இணக்கப்பாட்டு கூற்றுக்கள்

ஒன்றினைக்கப்பட்ட குழுமத்தின் நிதிக்கூற்றுக்களும் வங்கியின் தனிப்பட்ட நிதிக்கூற்றுக்களும் இலங்கை நிதியிடல் அறிக்கையிடல் நியமங்களோடு இணைந்த இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன. (இலங்கை நிதியிடல் அறிக்கையிடல் நியமங்கள் என இந்நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றோடு இணைந்து) 2007ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்திற்கும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தினது தேவைப்பாடுகளுக்கேற்ப இந்த நிதிக்கூற்றுக்களின் தயாரித்தலும், பிரசுரித்தலும் இணங்குகின்றன. நிதிக்கூற்றுக்களின் பிரசுரித்தலானது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்காகவும் மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்கீட்டுக் கொள்கைகளில் விபரிக்கப்பட்டவாறு, குழுமமானது 2016 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிலுள்ளவாறான ஒப்பீட்டு ஆண்டுத் தரவுகளுடன் சேர்த்து 2017 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த ஆண்டிற்கு ஏற்புடையதான இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டுக் கொள்கைகளுக்கிணங்க நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்திருக்கின்றது.

3.2 அளவீட்டு அடிப்படை

ஒன்றுதிரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் பின்வருவன நீங்கலாக வரலாற்றுக்கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன:

- பெறுதி நிதியியல் சாதனங்கள் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டன. (குறிப்பு 24 மற்றும் 40)
- வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் நியாயப் பெறுமதி அடிப்படையில் அளவிடப்பட்டன. (குறிப்பு 25)
- விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் முதலீடுகள் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டன. (குறிப்பு 28)
- உரிமையாளரினால் பயன்படுத்தப்படும் இறையிலி நிலமும் கட்டடங்களும் மற்றும் குத்தகையிலுள்ள காணிகள் ஒன்று சேர்ந்த தேய்மானம் மற்றும் பழுதுறக்கூடிய இழப்புக்கள் ஏதேனும் இருப்பின் அவற்றைக் கழித்த பின்னர் மீள்மதிப்பிடத்தக்க தொகையில் அளவிடப்பட்டன. (குறிப்பு 33)
- நிச்சயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகள் ஒன்று சேர்ந்த அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டதுடன், திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியின் மொத்தத்தினைக் கழித்து நிச்சயிக்கப்பட்ட நன்மைகள் கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதியாக அங்கீகரித்துள்ளது. (குறிப்பு 46)

நிதியியல் கூற்றுக்களைப் பாதிக்கின்ற பணவீக்க அழுத்தங்களுக்காக சீராக்கங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

3.3 ஒன்றுதிரட்டிய நிதியியல் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

வங்கியும் குழுமமும் அவை தொடர்பிலான திரவத்தன்மை மற்றும் முதிர்ச்சி ஒழுங்கில் அவற்றின் நிதியியல் நிலைமையினை பரந்தளவில் சமர்ப்பித்துள்ளன. அறிக்கையிடும் திகதிக்குப் பின்னரான 12 மாதங்களுக்கு உட்பட்ட (நடைமுறை) மற்றும் அறிக்கையிடும் திகதிக்குப் பின்னரான 12 மாதங்களுக்கு மேற்பட்ட (நடைமுறை அல்லாத) அறவீடு அல்லது தீர்ப்பனவு தொடர்பிலான பகுப்பாய்வொன்று 56 ஆம் குறிப்பில் தரப்பட்டுள்ளது.

3.3.1 தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பிப்பு நாணயம்

நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள், வங்கி தொழிற்படுகின்ற பிரதான பொருளாதார சூழலின் தொழிற்படும் நாணயமான இலங்கை ரூபாவில் அளவிடப்படுகிறது. ஒன்று திரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்கள், குழுமம் தொழிற்படுகின்றதும் சமர்ப்பிக்கப்படுகின்றதுமான நாணயமான இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

3.3.2 அட்டுறு அடிப்படையிலான கணக்குவைத்தல்

காசுப்பாய்ச்சல்கள் கூற்றில் காணப்படுகின்ற தகவல்கள் தவிர நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையிலான கணக்குவைத்தல் முறையைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்றன.

3.3.3 எதிரீடு செய்தல்

நிதியியல் சொத்துக்களும் நிதியியல் பொறுப்புக்களும் மொத்தமாக கூட்டிணைக்கப்பட்ட நிதியியல் நிலைமையின் கூற்றில் பொதுவாக அறிக்கையிடப்படுகின்றன. எதிர்கால நிகழ்வொன்றின் மீது நிகழத்தக்கதாக இருக்காமல் இனங்காணப்பட்ட தொகைகளை எதிரீடு செய்வதற்கான நிபந்தனையற்ற சட்ட ரீதியாக அமுலிலிருக்கத்தக்க உரிமையொன்றைக் கொண்டிருப்பதற்கு மேலதிகமாக, பின்வரும் சகல சூழ்நிலைகளிலும் ஒரு தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கும்கூட தரப்பினர்கள் உத்தேசிக்கும் போது அவை மாத்திரமே எதிரீடு செய்யப்பட்டு தேறியது அறிக்கையிடப்படுகின்றது:

- சாதாரண வியாபார நடவடிக்கை
- பணம் செலுத்தத் தவறும் சந்தர்ப்பம்
- வங்கியின் அத்துடன்/அல்லது அதன் எதிரிணைத் தரப்பினர்களின் வங்குரோத்து அல்லது வகையற்றுப் போகும் சந்தர்ப்பம்

ஏதேனும் கணக்கீட்டு நியமம் அல்லது வியாக்கியானங்களின் மூலமும் தேறல் படுத்தப்பட்டு அல்லது அனுமதிக்கப்பட்டு அத்துடன் குழுமத்தின் கணக்கீட்டுக் கொள்கையில் குறிப்பாக வெளிப்படுத்தப் பட்டிருந்தாலொழிய வருமானம் மற்றும் செலவினங்கள் திரட்டப்பட்ட வருமானக்கூற்றில் எதிரீடு செய்யப்படமாட்டாது.

செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு இலாபம் சீராக்கம் செய்யப்படும், இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) 07 - "காசுப் பாய்ச்சல் கூற்று" என்பதற்கு அமைவாக, "மறைமுக முறையினை" பயன்படுத்தி திரண்ட காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் என்பன கையிலுள்ள காசு, கொள்ளல் செய்த திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குக் குறைந்த முதிர்வினைக் கொண்ட ஏனைய குறுங்கால அதிகூடிய திரவத்தன்மை கொண்ட முதலீடுகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

3.3.4 ஒப்பீட்டுத் தகவல்கள்

தற்காலப் பகுதிக்கான நிதியியல் கூற்றுக்களை விளங்கிக் கொள்வதற்கு ஒப்பீட்டுத் தகவல்கள் தேவைப்படுமிடத்து அவை சுருக்கமாகவும் விவரணமாகவும் தரப்பட்டுள்ளன. அத்துடன் பிரசுரித்தலில் உறுதிப்படுத்தல் தேவைப்படும் இடத்து ஒப்பீட்டுத் தகவல்கள் மீள வகைப்படுத்தப்பட்டுள்ளன.

3.3.5 பொருண்மையும் திரட்டலும்

இலங்கை கணக்கீட்டு நியமம் - 01 "நிதியியல் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்" உடன் இணைந்தவாறு ஒரே மாதிரியான விடயங்களின் ஒவ்வொரு பொருண்மை வகுதிகளும் இந் நிதிக்கூற்றுக்களில் தனியாகத் தரப்படுகின்றன. ஒரே மாதிரியான தன்மையற்ற விடயங்கள் அல்லது தொழிற்பாடுகள் பொருண்மையற்றனவாகக் காணப்படாதவிடத்து, தனியாகத் தரப்பட்டுள்ளன.

3.3.6 முழுமையாக்கல்

இலங்கை கணக்கீட்டு நியமம் - 01 "நிதியியல் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்" ஆல் அனுமதியளிக்கப்பட்டவாறு இந் நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகள் கிட்டிய ஆயிரங்களுக்கு மட்டந் தட்டப்பட்டு ரூபாவில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

3.3.7 கணக்கீட்டுத் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை குறிப்பிடத்தக்களவிற்குப் பயன்படுத்துதல்

திரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு, கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகம் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவு என்பனவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகை என்பன மீது தாக்கத்தினை ஏற்படுத்தும் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்வதற்கு முகாமைத்துவத்தினை தேவைப்படுத்துகின்றன. உண்மையான பெறுபேறுகள் இம்மதிப்பீடுகளிலிருந்தும் வேறுபடலாம்.

தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன வரலாற்றுரீதியான அனுபவங்களையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் நியாயமானது என நம்பப்படுகின்ற ஏனைய பல்வேறு காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் தற்போதைய நடத்தையின் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள், மதிப்பீடுகள் திருத்தப்படுகின்றதொரு காலப்பகுதியில் அத்துடன் அல்லது எதிர்காலப்பகுதியில் திருத்தங்கள் மேற்கொள்ளப் படுமிடத்து திருத்தங்கள் எதிர்காலத்தையும் பாதிக்குமானால், எதிர்காலத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

குழுமத்தின் கணக்கீட்டுக் கொள்கையினை பிரயோகிக்கும் செயன்முறையின் போது, முகாமைத்துவம், திரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளின் மீது மிகக் குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருக்கும் பின்வரும் மதிப்பீடுகள், அனுமானங்கள் மற்றும் தீர்ப்புக்களைச் செய்திருக்கிறது.

3.3.7.1 தொடர்ந்து இயங்கும் நிறுவனம்

தொடர்ந்து இயங்கும் நிறுவனத்தினை அவ்வாறே தொடர்வதற்கான வங்கியின் இயலாற்றலின் மீது முகாமைத்துவம் மதிப்பீடுகளை மேற்கொண்டிருப்பதுடன் அண்மிய எதிர் காலத்திலும் தொழில்களை தொடங்குவதற்கான மூலவளத்தினை அது கொண்டிருப்பது பற்றி திருப்திப்பட்டிருக்கிறது. மேலும் முகாமைத்துவம் இடம்பெற்று வருவது போன்று வர்த்தகத்தினை தொடங்குவதற்கான வங்கியின் இயலாற்றல் தொடர்பாக குறிப்பிடத்தக்க தாக்கமெதனையும் விளைவிக்கும் ஏதேனும் பொருண்மைமிக்க நிச்சயமற்ற தன்மையினையும் முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. ஆகவே, நிதியியல் கூற்றுக்கள் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு அடிப்படையிலேயே தொடர்ந்தும் தயாரிக்கப்படும்.

3.3.7.2 கடமைப்பாடுகள் மற்றும் நிகழத்தக்க பொறுப்புக்கள்

எல்லா அறியப்பட்டதும் கணிப்பிடக் கூடியதுமான பொறுப்புக்களின் தொகை அல்லது பெறுமதி தீர்மானிக்கப்பட்டு எல்லா அறியப்பட்ட இடர்களும் கணக்கு வைக்கப்பட்டுள்ளன. நிகழத்தக்க பொறுப்புக்கள் சாத்தியமான கடப்பாடுகளாகும். பொருளாதார நன்மையின் பரிமாற்றமானது சாத்தியமற்றபோது அல்லது நம்பத்தகுந்தவகையில் கணிப்பிடப்பட்டிருக்காதபோது நிகழத்தக்க பொறுப்புக்களின் இருப்புக்களானது நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது தற்போதய கடப்பாடுகளால் மட்டுமே உறுதிப்படுத்தப்படும். நிகழத்தக்க பொறுப்புக்கள் நிதி நிலைமை அறிக்கையில் கணக்குப் பதியப்படுவதில்லை. ஆனால் இவ் நிகழ்ச்சி தொலைவில் இல்லையெனில் வெளிப்படுத்தப்படுகின்றன.

3.3.7.3 நிதியியல் சாதனங்களின் நியாயப்பெறுமதி

நிதியியல் நிலைமைக் கூற்றில் நிதியியல் சொத்துக்களினதும் நிதியியல் பொறுப்புக்களினதும் நியாயப் பெறுமதி தீவிரமான சந்தைகளிலிருந்து பெறப்படமுடியாமல் இருக்கும்பொழுது அவை, கணித மாதிரிகளைப் பயன்படுத்துவது உட்பட பல்வேறுபட்ட மதிப்பீட்டு நுணுக்கங்களைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றன. இம்மாதிரி-களுக்கான உள்ளீடுகள், சாத்தியமானவிடத்து அவதானிக்கப் படக்கூடிய சந்தைகளிலிருந்து எடுக்கப்படுகின்றனவெனினும் அத்தகைய தரவுகள் கிடைக்காதவிடத்து, தீர்ப்பின் அளவு நியாயப் பெறுமதியினை நிறுவுவதன் மூலம் பெறப்படுகின்றது. இது அவதானிக்கப்படாத உள்ளீட்டுப் பாவனையால் ஏற்படுகின்ற தாக்கங்களைக் குறைக்கின்றது. நிதியியல் சாதனங்களின் விலை மதிப்பீடுகள் குறிப்பு 59 இல் விபரமாக விபரிக்கப்பட்டுள்ளன.

3.3.7.4 கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான பெறுமதிக் குறைப்பின் இழப்புக்கள்

அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறான நிதிப்பட்டியலுக்கு ஏற்படுகின்ற இழப்புக்கள் தொடர்பான சிறந்த முகாமைத்துவக் கணிப்பீட்டை கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான பெறுமதிக் குறைப்புக் கணிப்பீடு தேவைப்படுத்துகின்றது.

குழுமமானது, வருமானக் கூற்றுக்களில் பெறுமதி குறைந்த இழப்புக்கள் பதிவு செய்யப்படவேண்டும் என்பதனை மதிப்பிடுவதற்காக குழுமமானது ஒவ்வொரு அறிக்கையிட்ட திகதியிலும் குறிப்பிடத்தக்க கடன்களையும் முற்பணங்களையும் அதன் தனிப்பட்ட முறையில் மீளாய்வு செய்கிறது. குறிப்பாக பெறுமதிக்குறைவு இழப்பினைத் தீர்மானிக்கும் பொழுது, எதிர்காலக் காசுப்பாய்ச்சலின் தொகை மற்றும் நேரமிடல் என்பனவற்றின் மதிப்பிடலால் முகாமைத்துவத்தின் தீர்ப்பு தேவையாகவுள்ளது. இம்மதிப்பீடுகள் பல்வேறு காரணிகள் பற்றிய அனுமானங்களை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன், உண்மையான பெறுபேறுகள் வேறுபடலாம் என்பதுடன் சம்பளப்படிகளிலும் எதிர்கால மாற்றல்களைத் தோற்றுவிக்கின்றது.

தனிப்பட்ட முறையில் மதிப்பீடு செய்யப்பட்டு பெறுமதி குறையக்கூடிய தன்மையற்றவை என கண்டறியப்பட்ட கடன்களும் முற்பணங்களும் ஏனைய தனிப்பட்ட சிறியளவு கடன்களும் முற்பணங்களும் ஒன்றுசேர மதிப்பிடப்பட்டதுடன், இழப்புக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களின் அடிப்படையில் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமா என்பதனை தீர்மானிப்பதற்காக ஒரேமாதிரியான இடர் பண்புகளைக் கொண்ட சொத்துக்களின் தொகுதியில் சான்றுகள் காணப்பட்டதெனினும் தாக்கத்தினை தெளிவாகக் காணமுடியவில்லை. ஒன்றுசேர்ந்த மதிப்பீடுகள் கடன்களின் சொத்துப்பட்டியல் தரவுகளையும் (கடன்களின்வகை, நிலுவையிலுள்ள மட்டங்கள் போன்றவை) இடர் நேர்வுகளினது திரட்சியின் தாக்கம் மற்றும் பொருளாதார தரவுகள் (தொழிலின்மை மட்டங்கள், சொத்து வியாபார விலைகளின் சுட்டெண்கள், நாட்டின் இடர்நேர்வு மற்றும் வேறுபட்ட தனிப்பட்ட குழுமங்களின் செயலாற்றம் என்பனவற்றை உள்ளடக்குகிறது) என்பனவற்றைக் கவனத்தில் கொள்கிறது. கடன்கள் மற்றும் முற்பணங்களின் பெறுமதி குறைப்பு நட்டங்களின் விபரம் குறிப்பு 27 இல் தரப்பட்டுள்ளது.

3.3.7.5 விற்பனைக்கு கிடைக்கத்தக்க முதலீடுகளுக்கான பெறுமதிக்குறைப்பு

குழுமமானது, விற்பனை முதலீடுகளுக்காக கிடைக்கத்தக்கவை என வகைப்படுத்தப்பட்ட அதன் படுகடன் பிணையங்களை அவை பழுதுற்றிருக்கின்றனவா என்பதனை மதிப்பிடுவதற்காக ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீளாய்வு செய்கிறது.

குழுமமானது விற்பனைக்கு கிடைக்கத் தக்கதாக-விருந்த வகைப்படுத்தலின் கீழ் காணப்படுகின்ற உரிமை முதலீடுகளின் மீதான பெறுமதி குறைப்பு அறவீடுகளையும் பதிவு செய்கின்றது. நியாயப் பெறுமதி அவற்றின் கிரயத்திலும் பார்க்க கீழாக குறிப்பிடத்தக்களவிற்கு அல்லது நீண்டகாலத்திற்கு வீழ்ச்சியடைந்திருக்கின்ற வேளையில், குழுமமானது விற்பனைக்குரிய முதலீட்டிற்கான கிடைப்பனவின் மீது பழுதுறக்கூடிய விதிப்புக்களைப் பதிவுசெய்கிறது. "குறிப்பிடத்தக்க அல்லது நீண்டகாலம்" என்றால் என்ன என்ற தீர்மானம், தீர்ப்பினைத் தேவைப்படுகின்றது. இத்தீர்ப்பினை மேற்கொள்வதற்கு, குழுமமானது, மற்றைய காரணிகளுடன், வரலாற்று ரீதியான பங்குவிலை அசைவுகள் மற்றும் காலம் என்பனவற்றை மதிப்பீடு செய்வதுடன் முதலீட்டின் நியாயப் பெறுமதி அது கொண்டிருக்கும் பெறுமதியிலும் பார்க்க எவ்வளவு குறைவாக இருக்கின்றதோ அந்தளவிற்கு நீடிக்கின்றது. விற்பனைக்கு கிடைக்கத்தக்க முதலீடுகளுக்கான பெறுமதி குறைப்பின் விபரம் குறிப்பு 28 இல் தரப்பட்டுள்ளது.

3.3.7.6 துணை நிறுவனங்கள், ஏனைய நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிசாராச் சொத்துக்களிலான முதலீட்டின் பெறுமதிக் குறைவு

இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இன் வழிகாட்டல் - "சொத்துப் பெறுமதிக் குறைவு" மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் 39 - "நிதிக் கருவிகள்: அங்கீகரித்தலும் அளவிடுதலும்" முதலீடு ஒன்று அல்லது நிதிச் சொத்து ஒன்று பெறுமதி குறைவடைகின்றதா என்பதை வரையறுப்பதில் கண்டறிதல் மற்றும் அளவிடுதல், என்பவற்றை குழுமம் மற்றும் வங்கி ஆகியன பின்பற்றுகின்றன. துறை மற்றும் தொழில்துறை செயற்றிறன், தொழில்நுட்பம் மற்றும் எதிர்கால காசுப் பாய்ச்சல்களுடன் சேர்ந்த செயற்பாட்டு சூழ்நிலை மாற்றங்கள் போன்ற காரணிகளைக் கவனத்திற்கொண்டு, நிதிச் சொத்து ஒன்றுக்கான முதலீட்டின் நியாயப் பெறுமதியானது அதன் கிரயத்தை விடக் குறைவாகவுள்ள காலப்பகுதி மற்றும் அளவு, அத்துடன் அம் முதலீட்டின் அல்லது நிதிச் சொத்தின் குறுங்கால வியாபார கண்ணோட்டத்தின் நிதி உறுதிப்பாடு ஆகியவற்றை மதிப்பிடும் பொருட்டு குழுமத்தையும் வங்கியையும் பெறுமதிக் குறைவுக் குறிகாட்டிகளை வரையறை செய்தலும் இனங்காணலும் தேவைப்படுத்துகின்றன. மேற்கூறப்பட்ட துறைகளிலான முக்கியமான மதிப்பீட்டினை இச் செய்முறை உள்ளடக்குவதுடன் உரிய குறிப்புக்களில் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

3.3.7.7 நிச்சயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகள்

கணிப்பு மதிப்பீடுகளைப் பயன்படுத்தி நிச்சயிக்கப்பட்ட நன்மை ஓய்வூதியத்திட்டங்கள் மற்றும் தொழிலுக்குப் பின்னரான மற்றைய நன்மைகள் திட்டங்கள் என்பன நிர்ணயிக்கப்படுகின்றன. கணிப்பு மதிப்பீடொன்று கழிவிடல் வீதங்கள், சொத்துக்களின் மீதான வருவாயின் எதிர்பார்க்கப்பட்ட வீதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்புக்கள் என்பனவற்றை நிர்ணயிக்கின்ற பல்வேறு அனுமானங்களை மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் தொடர்புபட்டிருக்கிறது. இத்திட்டங்களின் நீண்ட காலத்தன்மையின் காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்-தக்களவிற்கு நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டுள்ளன. அனைத்து அனுமானங்களும் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் இவ்வாண்டுக் காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்ட எடுகோள்கள் குறிப்பு 46 இல் தரப்பட்டுள்ளன.

3.3.7.8 காணி கட்டிடங்களின் நியாயப்பெறுமதி

குழுமத்தின் இறையில் காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் குத்தகைக் காணியிலுள்ள கட்டிடங்கள் என்பன நியாயப் பெறுமதியில் பிரதிபலிக்கப்படு-கின்றன. அத்தகைய சொத்துக்களின் நியாயப் பெறுமதியினை நிர்ணயிப்பதற்காக குழுமம் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்களின் சுதந்திரமான தீர்மானங்களில் ஈடுபட்டிருந்தது. இதையொத்த சொத்துக்களின் நடைமுறை நியாய விலைகள் கிடைக்கும் பொழுது அத்தகைய சான்றுகள் இச்சொத்துக்களின் நியாயப் பெறுமதியினை மதிப்பிடுவதற்கான இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 13 - நியாயப் பெறுமதி மதிப்பீடு என்பதற்கிணங்க பரிசீலனையில் கொள்ளப்-படுகின்றன. இறையில் காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் குத்தகைக் காணியிலுள்ள கட்டிடங்களின் விபரமும் குறிப்பு 33 இல் தரப்பட்டுள்ளன.

3.3.7.9 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயன்மிக்க ஆயுள்காலம்

குழுமமானது, ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் எஞ்சிய பெறுமதிகள், பயன்மிக்க ஆயுள்காலம் மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் தேய்மான முறை என்பனவற்றை மீளாய்வு செய்கிறது. முகாமைத்-துவத்தின் தீர்ப்பு இப்பெறுமானங்கள், வீதங்களின் முறைகள் என்பனவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதனால் அவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டனவாகவுள்ளன. பெறுமானத் தேய்விடல் முறைகள் மற்றும் ஒவ்வொரு சொத்துக்-களுக்குமான பெறுமானத் தேய்வு வீதங்களின் விபரமும் குறிப்பு 33 இல் தரப்பட்டுள்ளன.

3.3.7.10 முதலீட்டு ஆதனங்களின் வகைப்படுத்தல்

முதலீட்டு ஆதனமாக இருப்பதற்கான தகுதியைக் கொண்டுள்ளனவா என தீர்மானிப்பதற்கு முகாமை தேவைப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு ஆதனமானது, வாடகை வருமானங்களை உழைப்பதற்காக அல்லது மூலதன இலாபத்திற்காக அல்லது இரண்டுக்குமாக வைத்திருக்கப்படுவதோடு சுதந்திர-மாகவும் பாரிய அளவிலும் காசுப்பாய்ச்-சல்களை உருவாக்குகின்ற தொகுதியால் வைத்திருக்கப்படும் ஏனைய சொத்துக்கள் முதலீட்டு ஆதனங்கள் ஆகக் கருதப்படுகின்றன. வேறுவகையில் கூறின், செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும் ஆதனங்கள் அல்லது சேவை வழங்குதல் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படும் சொத்துக்கள், நிர்வாகத் தேவைகளுக்காக வைத்திருக்கப்படுவதுடன் நேரடியாக காசுப்பாய்ச்சல்களை தனியே உருவாக்காத சொத்துக்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

3.3.7.11 வரி விதிப்பு

குழுமமானது, வருமானவரி, நிதிச் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி, நிதிச் சேவைகள் மீதான தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி மற்றும் ஏற்புடைய ஏனைய வரிகளுக்கு உட்பட்டதாகும்.

இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் வேளையில் ஏற்புடையதான வரிச் சட்டங்களின் பொருள்கோடல் தொடர்பில் காணப்படும் நிச்சயமற்றதன்மை காரணமாக தற்போதைய, பிற்போடப்பட்ட மற்றும் ஏனைய வரிகளுக்கான மொத்த ஏற்பாட்டினை வரையறுக்கும் பொருட்டு மதிப்பீடொன்று தேவைப்படுத்தப்படுகின்றது. ஏற்புடையதான வரி வீதங்கள் பற்றிய விபரங்கள் மற்றும் ஏனைய தகவல்கள் 17 ஆம் மற்றும் 36 ஆம் குறிப்புக்களின் கீழ் தரப்பட்டுள்ளன.

குழுமமானது மாற்றல் விலையிடல் பிரமாணங்களுக்கு உட்பட்டுள்ளதுடன் மாற்றல் விலையிடல் பிரமாணங்களின் தாக்கத்தினை வரையறுக்கும் பொருட்டு முகாமைத்துவ மதிப்பீட்டினைப் பயன்படுத்துதல் அவசியப்படுத்தப்படுகின்றது. மாற்றல் விலையிடல் நெறிமுறைகள் உட்பட ஏனைய வரிகள் மற்றும் வருமான வரிக்கு குழுமம் கட்டுப்படுகின்றது. தொடர்புடைய மாற்றல் விலையிடல் நெறிமுறைகள் நிச்சயமற்ற தன்மைகளைக் கொண்டுள்ளது. எனவே, இந்நிச்சயமற்ற தன்மைகளின் தாக்கம் தொடர்பில் முகாமைத்துவத்தின் தீர்மானம் அவசியமாகின்றது. இதன் பிரகாரம் கடும் தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகள் மாற்றல் விலையிடல் நெறிமுறைகளைப் பிரயோகிப்பதில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது, கூட்டு நிறுவனங்-களைக் கண்டறிதல், பொருத்தமான விலையிடல் பொறிமுறைகளைத் தெரிவு செய்தல் மட்டுமன்றி, வேறு பல அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது. தற்போதைய வரி அறவீடு அத்தகைய தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டது. முகாமைத்துவ வியாக்கியானம் மற்றும் மாற்றல் விலையிடல் நெறிமுறைகளைப் பிரயோகிப்பதன் விளைவாக மதிப்பிடப்பட்ட வருமான வரிக்கும் உண்மையில் செலுத்தப்பட்ட வருமான வரிக்கும் இடையில் வேறுபாடுகள் எழக்கூடும்.

4 குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள்

வங்கியும் குழுமமும் அவற்றின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கையில் பிரயோகித்த குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் கீழே காட்டப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் வங்கியினதும் குழுமத்தினதும் இந்நிதியியல் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள அனைத்துகாலப்பகுதியிலும் நிலையாகப் பிரயோகிக்கப் பட்டுள்ளதுடன் அவ்வாறில்லாதவிடத்து சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

4.1 கூட்டிணைப்பின் அடிப்படை

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் - 10 "ஒன்றிணைக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள்" மற்றும் இலங்கை கணக்கீட்டு

நியமங்கள் - 27 "ஒன்றிணைக்கப்பட்ட மற்றும் தனித்தனியான நிதியியல் கூற்றுக்கள்" இன் அடிப்படையில் குழுமத்தின் நிதியியல் கூற்றுக்கள் வங்கியினதும் அதன் கூட்டு நிறுவனங்களினதும் நிதியியல் கூற்றுக்களை ஒன்றிணைத்ததாக உள்ளடக்கியுள்ளது. அத்துடன் வங்கியின் துணை நிறுவனங்களின் இலாப நட்டம் மற்றும் தேறிய சொத்துக்களின் விகிதாசாரப் பங்கு இலங்கை கணக்கீட்டு நியமம் - 28 "கூட்டு நிறுவனம் மற்றும் கூட்டு முயற்சிகளிலான முதலீடு" இன் அடிப்படையிலும் கணிப்பிடப்படுகின்றது.

வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவு, கடல்கடந்த வங்கித்தொழில் பிரிவு மற்றும் வங்கியின் சர்வதேச தொழிற்பாடுகள் போன்றவற்றின் நிதிக்கூற்றுக்களை ஒன்றுசேர்த்து உள்ளடக்கியுள்ளது.

துணைநிறுவனங்கள் மற்றும் கூட்டுநிறுவனங்களின் ஒன்றிணைப்பு தொடர்பான கணக்கீட்டுக் கொள்கைகள் நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்பு 30 மற்றும் 31 இல் தரப்பட்டுள்ளன.

4.1.1 வியாபார இணைப்புக்கள்

குழுமமானது இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் - 3 "வியாபார இணைப்பு" இன் வரைவிலக்கணங்களைப் பயன்படுத்தி ஒரு கொடுக்கல் வாங்கல் அல்லது ஏனைய நிகழ்வு வியாபார இணைவாக காணப்படுகின்றதா எனத் தீர்மானிக்கின்றது. இந் நியமமானது கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொறுப்புக்கள் ஒரு வியாபாரத்தை உருவாக்குகின்றதை தேவைப்படுத்துகின்றது. கொள்வனவு முறையைப் பயன்படுத்தி வியாபார இணைவுகள் கணக்குப் பதியப்பட்டுள்ளன. கொள்வனவுத் திகதியில் கட்டுப்படுத்தப்படாத பங்குகளின் பெறுமதி நியாயப் பெறுமதியிலோ அல்லது கட்டுப்படுத்தப்படாத பங்குகளின் விகிதாசாரமாக கொள்வனவாளர்களின் இனங்காணப்பட்ட தேறிய சொத்தின் பங்காகவோ மதிப்பிடப்படுகின்றது.

கொள்வனவு தொடர்பான செலவுகள் என்பது கொள்வனவாளர் ஒரு வியாபார இணைப்பை மேற்கொள்ளும் போது ஏற்படும் செலவுகள் ஆகும். இவை தேடுநர் கட்டணம், ஆலோசனைச் செலவு சட்டச்செலவு, கணக்கு வைத்தல் செலவு, மதிப்பீட்டுச் செலவு மற்றும் ஏனைய தொழில்வாண்மைச் சட்ட ஆலோசனைக் கட்டணம், உள்ளக கொள்வனவுத் திணைக்களத்தை பேணுவதற்கான செலவுகளை உள்ளடக்கிய பொது நிர்வாகச் செலவுகள், பதிவுச்செலவு மற்றும் கடன் உரிமைப் பிணையங்களை வழங்குவதற்கான செலவு போன்ற செலவுகளை உள்ளடக்குகின்றது.

கொள்வனவு தொடர்பான செலவுகள், கடன் உரிமைப் பிணையங்களை வழங்குவது தொடர்புடைய செலவுகள் தவிர ஏனையவை, சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் போது ஏற்பட்ட செலவுகள் அந்தக் காலப்பகுதியிலேயே செலவு செய்யப்பட்டவையாகும்.

கட்டுப்படுத்தப்படாத நலவுரித்துக்களை ஒன்றில் நியாயப்பெறுமதியில் அளவிடுவதா அல்லது கொள்வனவுத் திகதியில் இனங்காணப்பட்ட தேறிய சொத்துக்களின் கண்டறியப்பட்ட தொகையின் விகிதாசாரமாக பங்குகளின் அடிப்படையில் அளவிடுவதா என்பது பற்றி ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலாக குழுமம் தெரிவுசெய்கிறது. கடன் அல்லது உரிமை மூலதனப் பிணையங்களின் வழங்கலுடன் இணைந்த கிரயங்கள் தவிர்ந்த வியாபார இணைப்புக்கள் தொடர்பில் குழுமத்தினால் ஏற்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல் கிரயங்கள் ஏற்படுத்தப்பட்ட செலவுகளாகக் கருதப்பட்டன.

4.1.2 கட்டுப்பாடுகளை இழத்தல்

கட்டுப்பாடுகளை இழந்ததும் குழுமமானது, துணை நிறுவனங்களின் சொத்துக்களும் பொறுப்புக்களும், கட்டுப்படுத்தப்படாத பங்குகளின் கொண்டிருக்கும் பெறுமதி மற்றும் துணை நிறுவனத்துடன் தொடர்பான உரிமை மூலதனத்தின் திரள் மாற்றுப் பெறுமதி வித்தியாசம் போன்றவற்றை அங்கீகரிக்காமல் விடுகின்றது. மேலும், தாய் ஸ்தாபன பங்குரிமை உள்ளடக்கங்கள் முன்பு ஏனைய ஒன்றுதிரட்டிய வருமானக் கூற்றில் கணக்குப் பதியப்பட்டிருந்த போதிலும், இது, வருமானக் கூற்றுக்கோ அல்லது பிடித்து வைத்த இலாபத்திற்கோ பொருத்தமானவற்றுக்கு மீள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. கட்டுப்பாடுகளை இழப்பதன் காரணமாக தோன்றுகின்ற ஏதேனும் மிகைகள் அல்லது பற்றாக்குறைகள் வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. குழுமமானது, முன்னைய துணை நிறுவனத்தில் ஏதேனும் நலவுரித்துக்களை பிடித்து வைத்திருக்குமாயின் அது கட்டுப்பாடு இழக்கப்பட்ட திகதியிலுள்ளவாறான சந்தைப் பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றன. அதனைத் தொடர்ந்து இது, உரிமை மூலதனங்களைக் கொண்ட முதலீட்டாளர்களுக்கானவையாக அல்லது நிதியியல் சாதனங்கள் கொண்டுள்ள செல்வாக்கை பொறுத்து குழுமத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க கணக்கிடப்படுகின்றன.

4.2 வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்

4.2.1 வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிலுவைகள்

ஆரம்ப அங்கீகாரமளித்தலில் வெளிநாட்டு நாணயங்களில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள், செயற்பாடுகளின் தொழிற்படு நாணயமான இலங்கை ரூபாவிற்கு (ரூபா), கொடுக்கல் வாங்கல் இடம்பெறும் திகதியிலுள்ள உடன்செலாவணி வீதத்தில் மாற்றல் செய்யப்படுகின்றன. அறிக்கையிடப்படுகின்ற திகதியில் வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட நாணயச் சொத்துக்களும் பொறுப்புக்களும் குறிப்பிட்ட திகதியிலுள்ள உடன்செலாவணி வீதத்தில் தொழிற்பாட்டு நாணயத்திற்கு மீளமாற்றப்படுகின்றதுடன், வர்த்தகமல்லா நடவடிக்கைகளின் மீது தோற்றுகின்ற அனைத்துவேறுபாடுகளும் இலாப நட்டக் கூற்றிலுள்ள ஏனைய தொழிற்பாட்டு வருமானத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றன.

வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்று ரீதியான கிரயத்தின் நியதிகளில் அளவிடப்படுகின்ற நாணயமல்லா சொத்துக்களும் பொறுப்புக்களும் கொடுக்கல்வாங்கல் மேற்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து செலாவணி வீதத்தினைப் பயன்படுத்தி மாற்றப்படுகின்றன.

நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்ற வெளிநாட்டுநாணயத்தில் குறித்துரைக்கப்படுகின்ற நாணயமல்லா சொத்துக்களும் பொறுப்புக்களும் ஆரம்பக் கொடுக்கல்வாங்கல் திகதியிலுள்ளவாறான நியாயப் பெறுமதி தீர்மானிக்கப்பட்ட திகதியில் உள்ளவாறான உடனடி (SPOT) மாற்று வீதத்தில் தொழிற்பாட்டு நாணயத்திற்கு மீளமாற்றப்படுகின்றன. மீளமாற்றப்படுவதன் காரணமாகத் தோன்றுகின்ற வெளிநாட்டுநாணய வேறுபாடுகள் இலாப நட்டக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. முன்னோக்கிய செலாவணி ஒப்பந்தங்கள் அறிக்கையிடப்படுகின்ற திகதியிலுள்ளவாறான முன்னோக்கிய சந்தைவீதங்களில் மதிப்பிடப்படுவதுடன் தோன்றுகின்ற தேறிய தேறல் செய்யப்படாத இலாபம் அல்லது நட்டம் இலாப நட்டக்கூற்றில் காட்டப்படுகின்றன.

4.2.2 வெளிநாட்டுத் தொழிற்பாடுகள்

இலங்கை ரூபாவிலல்லாத தொழிற்பாட்டு நாணயங்களிலான வெளிநாட்டுத் தொழிற்பாடுகளின் பெறுபேறுகளும் நிதியியல் நிலைமையும் இலங்கை ரூபாவிற்கு பின்வருமாறு மாற்றப்படுகின்றன.

வெளிநாட்டுத் தொழிற்பாடுகளின் சொத்துக்களும் பொறுப்புக்களும் அறிக்கையிடப்படும் திகதியிலுள்ள உடன்செலாவணி வீதத்தில் இலங்கை ரூபாவிற்கு மாற்றல் செய்யப்படுகின்றன. ஆண்டிற்கான வெளிநாட்டுத் தொழிற்பாடுகளின் வருமானம் மற்றும் செலவுகள் மாதாந்த சராசரி வீதத்தில் மாற்றல் செய்யப்படுகின்றன. வெளிநாட்டுத் தொழிற்பாடுகள் மாற்றல் செய்யப்படுவதன் காரணமாக ஏற்படுகின்ற வெளிநாட்டு நாணய வேறுபாடுகள் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

வெளிநாட்டுத் தொழிற்பாடுகள் விற்பனை செய்யப்படும் பொழுது நாணயப் பரிமாற்றல் ஒதுக்கத்தில் காணப்படும் தொடர்பான தொகை, விற்பனை மீதான இலாபம் அல்லது நட்டத்தின் ஒரு பகுதியாக ஏனைய தொழிற்பாட்டுச் செலவினங்கள் அல்லது ஏனைய தொழிற்பாட்டு வருமானங்களின்கீழ் இலாப நட்டக்கணக்கிற்கு மாற்றப்படுகின்றன.

4.3 கடனுக்கும் உரிமைமுதலுக்கும் இடையில் நிதிக் கருவிகளை வகைப்படுத்தல்

கடனுக்கும் உரிமைமுதலுக்கும் இடையில் நிதிக் கருவிகளை வகைப்படுத்தலானது அத்தகைய கருவிகளின் பின்வரும் பண்புகளில் தங்கியுள்ளது:

- இக் கருவிகளுக்குக் கொடுக்கப்பட்ட பெயர் அல்லது அடையாளப் பெயர்கள்
- நிலையான முதிர்வுத் திகதி உள்ளமை அல்லது இல்லாமை
- இக் கருவியின் ஆயுட்காலம்
- கொடுப்பனவு மூலங்கள்
- கொடுப்பனவுகளை செயல் வலுப்படுத்துவதற்கான உரிமை
- முகாமையில் பங்குபற்றுவதற்கான உரிமைகள்
- இக் கருவிகளில் உள்ளடங்கும் இடர்
- காசுப் பாய்ச்சல் மாறுதிறன்
- பிணைகளாக கொடுக்கப்பட்ட பிணையங்கள்

4.4 நிதியியல் சொத்துக்களும் நிதியியல் பொறுப்புக்களும்

4.4.1 நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்களின் வகைப்படுத்தல்

ஆரம்ப அங்கீகரித்தலின் போது நிதியியல் சொத்துக்கள் மற்றம் பொறுப்புக்களின் வகைப்படுத்தல் அவற்றின் நோக்கம், இயல்புகள் மற்றும் அவற்றைக் கொள்வனவு செய்வதற்கான முகாமைத்துவத்தின் ஈடுபாடு என்பனவற்றில் தங்கியிருக்கிறது.

4.4.1.1 தொடக்கத்தில், நிதிச் சொத்துக்களானவை பின்வரும் வகுதிகளில் ஒன்றில் வகைப்படுத்தப்படுகின்றன:

- இலாபம் அல்லது நட்டத்திற்கூடான நியாயப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள்
  - நிதிக் கருவிகள் - வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்படுபவை (குறிப்பு 25)
  - இலாபம் அல்லது நட்டத்திற்கூடாக குறித்தொதுக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள்
- நிதியியல் முதலீடுகள் - கடன்களும் பெறத்தக்கவைகளும் (குறிப்பு 26)
- நிதியியல் முதலீடுகள் - விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ளவை (குறிப்பு 28)
- நிதியியல் முதலீடுகள் - முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படுபவை (குறிப்பு 29)

4.4.1.2 தொடக்கத்தில், நிதிப் பொறுப்புக்களானவை பின்வரும் வகுதிகளில் ஒன்றில் வகைப்படுத்தப்படுகின்றன:

- இலாபம் அல்லது நட்டத்திற்கூடான நியாயப் பெறுமதியிலான நிதிப் பொறுப்புக்கள்
  - நிதிப் பொறுப்புக்கள் - வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்படுபவை
  - இலாபம் அல்லது நட்டத்திற்கூடாக குறித்தொதுக்கப்பட்ட நிதிப் பொறுப்புக்கள்
- நிதிப் பொறுப்புக்கள் – காலத் தேய்மானக் கிரயம்

4.4.2 அங்கீகரிக்கும் திகதி

அனைத்து நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் தீர்ப்பனவுத் திகதியன்று, அதாவது, சாதனத்தின் ஒப்பந்தரீதியான ஏற்பாடுகளின்படி குழுமமானது ஒரு தரப்பினராக மாறுகின்ற நாளன்று அங்கீகரிக்கப்படுகின்றது. இது "கிரமமான வழிவர்த்தகத்தினை" உள்ளடக்குகிறது. கிரமமான வழிவர்த்தகம் என்பது நிதியியல் சொத்துக்களின் கொள்வனவு அல்லது விற்பனையானது சந்தையில் ஒழுங்கு விதிகளின் மூலம் அல்லது மரபுகளின் மூலம் பொதுவாக உருவாக்கப்பட்ட காலவரையறையொன்றிற்குள் அச் சொத்துக்கள் விநியோகிக்கப்படுவதனைக் குறிக்கும்.

4.4.3 நிதியியல் சாதனங்களின் ஆரம்ப அளவீடு

நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப்பெறுமதியில் பதிவுசெய்யப்படுவது தவிர நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் அவற்றின் சந்தைப் பெறுமதியுடன் கொடுக்கல் வாங்கல் கிரயத்தினைக் கூட்டியதொகையில் அளவிடப்பட்டன. இலாபமோ அல்லது நட்டத்தினூடாகவோ நியாயப் பெறுமதியில் காணப்படுகின்ற நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல் செலவு இலாப நட்டக்கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

4.4.4 'நாள் 1' இலாபம் அல்லது நட்டம்

கொடுக்கல் வாங்கல் விலையானது, அதே சாதனத்தில் அல்லது மதிப்பீட்டு தொழில்நுட்ப அடிப்படையில் மற்றைய அவதானிக்கத்தக்க நடைமுறைச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்களின் நியாயப்பெறுமதியிலிருந்து வேறுபடும் பொழுது அவற்றின் மாறிகள் அவதானிக்கத்தக்க சந்தையிலிருந்தான தரவுகளை மட்டுமே உள்ளடக்குகின்றவேளையில் குழுமமானது "தேறிய வர்த்தகப்படுத்தல் வருமானத்தில்" கொடுக்கல் வாங்கல் விலைகளுக்கும் நியாயப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாட்டினை (நாள் 1 இலாபம் அல்லது நட்டம்) அங்கீகரிக்கின்றது. அவதானிக்க முடியாததரவுகளைப்பயன்படுத்தி நியாயப் பெறுமதி தீர்மானிக்கின்ற விடயங்களைப் பொறுத்தவரையில், கொடுக்கல் வாங்கல் விலைக்கும் மாதிரி பெறுமதி விலைக்குமிடையிலான வேறுபாடு சாதனத்தின் ஆயுள் காலப்பகுதியில் இலாப நட்டக்கூற்றில் மாத்திரம் அங்கீகரிக்கப்படுகின்றது.

4.4.5 நிதிச் சொத்துக்களை மீள்வகைப்படுத்தல்

ஆரம்பக் கண்டறிதலின் பின்னர் "இலாபம் அல்லது நட்டத்திற்கூடான நியாயப் பெறுமதி" வகுதிக்குள் நிதிக் கருவி எதனையும் குழுமம் மீள்வகைப்படுத்துவதில்லை. மேலும் ஆரம்ப கண்டறிதலின் பேரில் இலாபம் அல்லது நட்டத்திற்கூடான நியாயப் பெறுமதியிலுள்ளவாறு அது குறித்தொதுக்கப்பட்டிருப்பின் "இலாபம் அல்லது நட்டத்திற்கூடான நியாயப் பெறுமதி" வகுதியிலிருந்து நிதிக் கருவி எதனையும் குழுமம் மீளவகைப்படுத்துவதில்லை. "நிதிக் கருவிகள்: கண்டறிதல் மற்றும் அளவிடுதல்" பற்றிய இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 39 இனால் அனுமதிக்கப்பட்டவாறு "வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்படும்" வகுதியிலிருந்தும் "விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ளவை", "கடன்களும் பெறத்தக்கவைகளும்", அல்லது "முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படுபவை" வகுதிகளுக்குள்ளும் பெறுதி அல்லாத நிதியியல் சொத்துக்களை குழுமமானது மீள்வகைப்படுத்துகின்றது. மேலும், சில சந்தர்ப்பங்களில், "விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ளவை" வகுதியிலிருந்தும் "கடன்களும் பெறத்தக்கவைகளும்", அல்லது "முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படுபவை" வகுதிக்குள்ளும் நிதியியல் சாதனங்களை மீளவகைப்படுத்துவதற்கு குழுமம் அனுமதிக்கப்படுகின்றது. புதிய காலத் தேய்மானக் கிரயமாக மாறும், மீள்வகைப்படுத்தல் திகதியிலான நியாயப் பெறுமதியில் மீள்வகைப்படுத்தல்கள் பதிவிடப்படுகின்றன.

"விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ளவை" வகுதியிலிருந்து மீள்வகைப்படுத்தப்படும் நிதிச் சொத்து ஒன்றுக்காக, உரிமைமுதலில் கண்டறியப்பட்டுள்ள அந்தச் சொத்து மீதான ஏதேனும் முன்னைய இலாபம் அல்லது நட்டமானது பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி முதலீட்டின் எஞ்சிய ஆயுட்காலத்திற்கான இலாபம் அல்லது நட்டத்திற்கு காலத் தேய்மானமிடப்படும். புதிய காலத் தேய்மானமிடப்பட்ட கிரயத்துக்கும் எதிர்பார்க்கப்பட்ட காசுப் பாய்ச்சல்களுக்கும் இடையிலான ஏதேனும் வித்தியாசமும் பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி சொத்தின் எஞ்சிய ஆயுட்காலத்திற்கு காலத் தேய்மானமிடப்படும். சொத்தானது தொடர்ந்து பெறுமதி குறைப்பிற்கென வரையறுக்கப்படுமாயின், அதன் பின்னர் உரிமைமுதலில் பதிவுசெய்யப்பட்ட தொகையானது இலாப நட்டக் கூற்றுக்கு மீள்சுழற்சிக்குட்படும்.

பெறுதி அல்லாத வர்த்தகப்படுத்தலுக்கான சொத்தொன்று கடன்களும் பெறத்தக்கவைகளும் என்னும் வரைவிலக்கணத்தை திருப்திப்படுத்தி அத்துடன் எதிர்வுகூறத்தக்க எதிர்காலத்திற்கு அல்லது முதிர்வு வரை நிதிச் சொத்தினை வைத்திருப்பதற்கான உத்தேசத்தையும் ஆற்றலினையும் வங்கியானது கொண்டிருந்தால் அதனை "வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்படும" வகுதியிலிருந்தும் "கடன்களும் பெறத்தக்கவைகளும்", வகுதிக்குள்ளும் குழுமமானது மீளவகைப்படுத்தலாம். நிதிச் சொத்தொன்று மீள்வகைப்படுத்-தப்பட்டால் அத்துடன் வங்கியானது எதிர்காலக் காசுப் பெறுவனவுகளின் அதிகரித்த மீள்பெறலின் விளைவாக அக் காசுப் பெறுவனவுகள் பற்றிய அதன் மதிப்பீடுகளை தொடர்ந்து அதிகரிப்பின், மதிப்பீட்டிலான மாற்றத் திகதியிலிருந்து பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்திற்கான சீராக்கம் ஒன்றாக அவ் அதிகரிப்பின் விளைவு கண்டறியப்படுகின்றது.

எவ்வாறாயினும் முக்கியத்துவமற்ற தொகையினை விடக் கூடுதலான முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகளின் விற்பனை அல்லது மீள்வகைப்படுத்தலானது "விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ளவையாக" சகல முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகளினதும் மீள்வகைப்படுத்தலை விளைவிக்கும் என்பதுடன் நடைமுறை மற்றும் தொடர்ந்துவரும் இரு நிதி வருடங்களுக்காக "முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படுபவையாக" ஏதேனும் நிதிச் சொத்தினை வகைப்படுத்துவதிலிருந்து குழுமத்தைத் தடுக்கும். எனினும், பின்வரும் சூழ்நிலைகளில் ஏதேனும் ஒன்றிலான விற்பனைகள் மற்றும் மீள்வகைப் படுத்தல்களானவை மீள்வகைப்படுத்தல் ஒன்றை தூண்டுவதாக அமையாது:

- சந்தை வட்டி வீதத்தில் மாற்றத்தை உண்டுபண்ணும் முதிர்வுடன் மிக அண்மித்துள்ள விற்பனைகள் அல்லது மீள்வகைப்படுத்தல்களானவை நிதியியல் சொத்தின் நியாயப் பெறுமதியின் மீது குறிப்பிடத்தக்க விளைவொன்றினைக் கொண்டிருக்காது இருத்தல்.
- சொத்தின் ஆரம்பத் தொகை முழுவதையும் கணிசமானளவிற்கு குழுமம் சேகரித்துள்ள பின்னரான விற்பனைகள் அல்லது மீள்வகைப்படுத்தல்கள்
- நியாயமாக எதிர்பார்த்திருந்திருக்க முடியாத குழுவின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட மீண்டெழாத வழமைக்கு மாறான நிகழ்வுகள் காரணமான விற்பனைகள் அல்லது மீள்வகைப்படுத்தல்கள்

மீள்வகைப்படுத்தலானது முகாமைத் தேர்வில் காணப்படுவதுடன் சாதன அடிப்படையின் மூலம் சாதனம் ஒன்றின் மீது வரையறுக்கப்படுகின்றது.

4.4.6 அங்கீகாரமளிக்காமை

4.4.6.1 நிதியியல் சொத்துக்களை அங்கீகாரமளிக்காமை

நிதியியல் சொத்துக்களிலிருந்தான காசுப்பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த ரீதியான உரிமைகள் காலாவதியாகும் போது அல்லது இம்மாற்றங்களின் போது கொடுக்கல் வாங்கல்களிலுள்ள நிதியியல் சொத்தில் அனைத்து இடர்தரும் கணிசமானவையாகவும் நிதியியல் சொத்துக்களின் சொத்துடமையின் வெகுமதிகளும் மாற்றல் செய்யப்பட்டுள்ளன அல்லது இதில் குழுமம் ஒன்றில் அனைத்து இடர்களினதும் கணிசமான தொகையினையோ அல்லது சொத்துடமையின் பெறுமதியினையோ பிடித்து வைத்திருக்கவில்லை என்பதுடன் இது நிதியியல் சொத்துக்களின கட்டுப்பாட்டினையும் வைத்திருக்காதபோது குழுமம் நிதியியல் சொத்துக்களை அங்கீகரிக்காமல் விடுகின்றது.

மாற்றல் செய்யப்பட்ட நிதியியல் சொத்துக்களிலுள்ள குழுமத்தினால் உருவாக்கப்பட்ட அல்லது வைத்திருக்கப்படுவதும் நீக்கிவிடுவதற்கு தகுதிபெற்றதுமான ஏதேனும் நலவுரித்துக்கள் நிதியியல் நிலைமைக்கூற்றில் தனியான சொத்துக்களாக அல்லது பொறுப்புக்களாக அங்கீகரிக்கப்படுகின்றன. நிதியியல் சொத்தினை நீக்கிவிடுவதன் மீது,

(i) சொத்துக்களின் ஏட்டுப்பெறு-மதிக்கும் (அல்லது மாற்றல் செய்யப்பட்ட சொத்துக்களின் விகிதத்திற்கு ஒதுக்கப்பட்ட ஏட்டுப் பெறுமதித்தொகை) பெறப்பட்ட பரிசீலிப்பு தொகைக்கும் (அனுமானிக்கப்பட்ட ஏதேனும் புதியபொறுப்-புக்களைக் கழித்து புதிதாகப் பெறப்பட்ட ஏதேனும் சொத்துக்கள் உட்பட)

(ii) ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்ட கூட்டிணைந்த இலாபம் அல்லது நட்டம் என்பனவற்றிற்கிடையிலான வேறுபாடு இலாப நட்டக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

குழுமமானது கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுமிடத்து அது நிதியியல் நிலைமையின் கூற்றில் சொத்து மாற்றல்கள் அங்கீகரிக்கப்பட்டதெனினும் மாற்றல் செய்யப்பட்ட சொத்துக்களின் ஒன்றில் இடர்நேர்வுகளில் அனைத்தும் அல்லது அனைத்து இடர்களிலும் கணிசமான தொகை மற்றும் வெகுமதிகளும் வைத்திருக்கப்படுகின்றதுடன் அதன் பின்னர் மாற்றல் செய்யப்பட்ட சொத்துக்கள் நீக்கிவிடப்படவில்லை. அனைத்து இடர் மற்றும் வெகுமதிகளினதும் அனைத்தையும் அல்லது கணிசமான பகுதிகளைக்கொண்ட சொத்துக்களின் மாற்றல் உதாரணமாக பிணையங்களின் கடன்வழங்கல் மற்றும் மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

மாற்றல் செய்யப்பட்ட சொத்துக்களின் மீதான திரும்பல் பரஸ்பர பரிமாற்றலின் ஒட்டுமொத்த வீதத்துடன் கூடிய மூன்றாந்தரப்பினருக்கு சொத்துக்கள் விற்கப்படும் போது குழுமம் அனைத்து இடர்களையும் அல்லது அதன் கணிசமான பகுதியையும் அத்தகைய சொத்துக்களின் உடமையின் வெகுமதியினையும் குழுமம் பிடித்து வைத்திருப்பதனால் கொடுக்கல் வாங்கல்கள் மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களை ஒத்தவிதத்தில் பிணையிடப்பட்ட கொடுக்கல் வாங்கல்களாக கணக்கிடப்பட்டன.

ஒரு நிதியியல் சொத்தின் உடமையிலிருந்தான அனைத்து குறிப்பிடத்தக்க இடர்களையும் வெகுமதிகளையும் வைத்திருக்கவோ அல்லது மாற்றல் செய்யவோ முடியாதிருந்து சொத்தின் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும். கொடுக்கல் வாங்கல்களில், மாற்றல் செய்யப்பட்ட சொத்தின் பெறுமதியிலான மாற்றங்களுக்கு அதுவெளிப்படுத்தும் அளவினால் தீர்மானிக்கப்பட்டவாறு குழுமத்தின் தொடர்ச்சியான ஈடுபாட்டின் அளவிற்கு குழுமம் சொத்தைத்தொடர்ந்து அங்கீகரிக்கும்.

சில கொடுக்கல் வாங்கல்களில் குழுமமானது மாற்றல் செய்யப்பட்ட நிதியியல் சொத்திற்கான கடப்பாட்டை கட்டணம் செலுத்தி தன்னிடம் வைத்திருக்கும். மாற்றல் செய்யப்பட்ட சொத்தானது நீக்கப்படுவதற்கான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் சந்தர்ப்பத்தில் நீக்கப்படும். பணிசெய்யும் ஒப்பந்தத்திற்கான சொத்து அல்லது பொறுப்பானது பணியை மேற்கொள்வதற்கான பணிக்கட்டணமானது தேவைக்கு அதிகம் (சொத்து) அல்லது தேவைக்குக்குறைவு (பொறுப்பு) என்பதைப் பொறுத்து அங்கீகரிக்கப்படுகிறது.

உண்மையில் கொண்டிருக்கும் பெறுமதியின் ஆகக் குறைந்தளவில் மதிப்பிடப்படுவதுடன், இலாபத்தின் ஆகக் கூடுதலான தொகை குழுமத்தால் மீளச் செலுத்தத் தேவைப்படுத்தப் படுகின்ற மாற்றப்பட்ட சொத்தின் மீதான உத்தரவாத வடிவிலான தொடர்ச்சியான ஈடுபாடு காட்டப்படுகின்றது.

4.4.6.2 நிதியியல் பொறுப்புக்களை அங்கீகாரமளிக்காமை

ஒரு நிதியியல் பொறுப்பானது, பொறுப்பின் கீழான கடப்பாடு நிறைவேற்றப்படும் போதோ அல்லது இரத்துச் செய்யப்படும் போதோ அல்லது காலாவதியாகும் போதோ நீக்கப்படுகின்றது. ஏற்கனவே இருக்கும் ஒரு நிதியியல் பொறுப்பானது, அதே கடன் வழங்குநரிடம் இருந்தான குறிப்பிடத்தக்க வேறுபட்ட நியதிகளின் அடிப்படையில் பெறப்படும் இன்னொரு பொறுப்பின் மூலம் பதிலீடு செய்யப்படும் போதோ அல்லது ஏற்கனவே இருக்கும் பொறுப்பின் நியதிகள் பெருமளவிற்கு திருத்தப்படும் போதோ அத்தகைய மாற்றம் அல்லது திருத்தமானது, முன்னர் இருந்த பொறுப்பை நீக்கி, புதிய பொறுப்பொன்றை அங்கீகரிப்பதாகக் கருதப்படும்.

முன்னர் இருந்த நிதியியல் பொறுப்பின் புத்தகப்பெறுமதிக்கும், செலுத்தப்பட்ட தொகைக்கும் இடையிலான வேறுபாடு இலாப நட்டக் கூற்றில் பதிவு செய்யப்படும்.

4.4.7 சொத்துக்களின் பெறுமதிகுறையும் தன்மை

4.4.7.1 நிதியியல் சொத்துக்களின் பெறுமதிகுறையும் தன்மை

அறிக்கையிடும் ஒவ்வொருதிகதியிலும் குழுமமானது நிதியியல் சொத்துக்கள் அல்லது குழுமத்தின் நிதியியல் சொத்துக்கள் பெறுமதிகுறையக்கூடிய சாத்தியங்கள் உள்ளதா என்பதுபற்றி மதிப்பிடுகிறது. நிதியியல் சொத்தொன்று அல்லது நிதியியல் சொத்துக்களின் தொகுதியானது, சாத்தியமான காணக்கூடிய சான்று, சொத்துக்களின் ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் இழப்பு நிகழ்ந்தமையினை எடுத்துக்காட்டும் பொழுது பெறுமதியில் குறைவடைவதுடன் இழப்புக்கள் ஏற்படுகையில் அது நம்பகமாக மதிப்பிடப்படக்கூடிய எதிர்கால காசுப்பாய்ச்சலின் மீது தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. கடன்களும் பெறத்தக்கவைகளும், வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் என்னும் நிதியியல் சாதனங்களினதும் விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ளவை மற்றும் முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படுபவை என்னும் நிதியியல் சாதனங்களினதும் பெறுமதிக் குறைப்பு விபரங்கள் முறையே 26 ஆம், 27 ஆம், 28 ஆம் மற்றும் 29 ஆம் குறிப்புக்களில் தரப்பட்டுள்ளன.

4.4.7.2 நிதி சாரா சொத்துக்களின் பெறுமதிக் குறைப்பு

சொத்து ஒன்று பெறுமதிக் குறைப்புச் செய்யப்படலாம் என்னும் அறிகுறி உள்ளதா என்பது பற்றி ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் குழுமமானது மதிப்பீடு செய்கின்றது. ஏதேனும் அறிகுறி காணப்படுமாயின், அல்லது சொத்து ஒன்றுக்கான வருடாந்த பெறுமதிக் குறைப்புச் சோதனையானது தேவைப்படுத்தப்படும் போது, வங்கியானது சொத்தின் மீளப்பெறக்கூடிய தொகையினை மதிப்பீடு செய்கின்றது. விற்பதற்கான செலவுகள் கழித்த சொத்து ஒன்றின் நியாயப் பெறுமதி அல்லது அதன் பாவனைப் பெறுமதியினை விட சொத்தொன்றின் மீளப்பெறக் கூடிய தொகை உயர்வாக உள்ளது. சொத்து ஒன்றின் கொண்டு செல்லல் தொகையானது அதன் மீளப்பெறக்கூடிய தொகையினை விட உயர்வாக இருக்குமிடத்து, அச் சொத்தானது பெறுமதி குறைப்புச் செய்யப்பட்டதாக கருத்தப்படுவதுடன் அதன் மீளப்பெறக்கூடிய தொகைக்கு குறைத்துப் பதியப்படும்.

பாவனைப் பெறுமதியினை மதிப்பிடுகையில், மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச் சல்களானவை பணத்தின் காலப் பெறுமதியின் நிகழ்கால சந்தை மதிப்பீடுகளையும் சொத்துக்குரித்தான இடர்களையும் பிரதிபலிக்கும் முன் வரி கழிவு வீதம் ஒன்றைப் பயன்படுத்தி அவற்றின் நிகழ்காலப் பெறுமதிக்கு கழிவிடப் படுகின்றன. விற்பதற்கான செலவுகள் கழித்த நியாயப் பெறுமதியினை வரையறுக்கையில், பொருத்தமான விலைமதிப்பு மாதிரி ஒன்று பயன்படுத்தப்பட்டுள்ளது. இக் கணிப்பீடுகளானவை விலைமதிப்பு பெருக்கிகள், பகிரங்கமாக வர்த்தகப்படுத்தப்பட்ட துணை நிறுவனங்களுக்கான விலைகூறப்பட்ட பங்கு விலைகள் அல்லது ஏனைய பெறுமதிவாய்ந்த நியாயப் பெறுமதிக் குறிகாட்டிகள் ஆகியவற்றின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றன.

4.4.8 நம்பிக்கைப் பொறுப்புச் சேவைகள்

வாடிக்கையாளருக்குப் பதிலாக அவர்களின் சொத்துக்களை வைத்திருக்கும் நம்பிக்கைப் பொறுப்புச்சேவைகளை குழுமம் வழங்குகின்றது. இந்நம்பிக்கைப்பொறுப்பின் கீழ் வைத்திருக்கப் படுகின்ற சொத்துக்கள் குழுமத்தின் சொத்துக்களாக காணப்படாமையினாலும் குழுமத்தால் அவை கட்டுப்படுத்தப்படாமையினாலும் நிதியியல் கூற்றுக்களில் அறிக்கையிடப்படவில்லை.

4.5 ஏற்பாடுகள்

கடந்தகால நிகழ்வின் பெறுபேறாக, குழுமமானது கொண்டிருக்கும் நம்பகமானமுறையில் மதிப்பிடக்கூடிய தற்போதைய (சட்டரீதியான அல்லது உறுதியான) கடப்பாடுகளும் பொருளாதார நன்மைகளின் வெளிப்பாய்ச்சலுக்கான சாத்தியங்களும் கடப்பாட்டினைத் தீர்ப்பதற்குத் தேவையாக இருக்கும்போது ஒரு ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றது. அறிக்கையிடும் திகதியிலான கடப்பாடு ஒன்றினை தீர்ப்பதற்கு தேவைப்படும் பெறுமதியின் சிறப்பான மதிப்பீடானது அத் திகதியில் அக் கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய ஆபத்துக்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகளை கருத்தில் கொண்டு அங்கீகரிக்கப்-பட்டுள்ளது. காசுப்பாய்ச்சல்கள் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு ஏற்பாடுகள் அளவிடப்பட்டு தற்போதைய கடப்பாடானது தீர்க்கப்படும்போது அக்கடப்பாட்டின் கொண்டு செல்லும் பெறுமதியானது காசுப்பாய்ச்சல்களின் இற்றைப் பெறுமதியின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. ஒரு ஒப்பந்தத்தின் மூலம் குழுமத்தினால் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளைவிட அவ் ஒப்பந்தத்தின் கீழான கடப்பாடுகளை நிறை வேற்றுவதற்கு ஏற்படக்கூடிய தவிர்க்கப்பட முடியாத கிரயங்கள் குறைவாகக் காணப்படுமிடத்து பொறுப்பு நிறைந்த ஒப்பந்தங்களுக்கான ஏற்பாடானது அங்கீகரிக்கப்படுகின்றது. ஒப்பந்தத்தை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கிரயம் மற்றும் அவ் ஒப்பந்தத்தினை தொடர்ந்து செல்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட தேறிய கிரயம் இவையிரண்டில் எது குறைவோ அதனுடைய இற்றைப் பெறுமதியில் ஏற்பாடு கணிப்பிடப்படுகின்றது.

4.6 வருமான வரிச் செலவு மற்றும் ஏனைய வரிகள்

4.6.1 வருமான வரிச் செலவு

வருமான வரிச்செலவு, நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரி என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. இது தொடர்பான மேலதிக விபரங்கள் குறிப்பு 17 இல் தரப்பட்டுள்ளன.

4.6.2 நிதியியல் சேவைகள் மீதான பெறுமதி சேர்வரி (VAT)

வருமான வரிக்கு முன்னரான கணக்கீட்டு இலாபம் மற்றும் விபரிக்கப்பட்டவாறான வீதங்களில் கணிக்கப்பட்ட தேய்மானத்திற்காக சீராக்கம் செய்யப்பட்ட ஊழியர்களின் ஊதியம் என்பனவற்றை கணக்கிடுவதன் மூலம் பெறுமதிசேர் வரியைக் கணிப்பதற்கான அடிப்படை பெறப்படுகின்றது. திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச்சட்டத்தின் பிரிவு 25 (அ) இற்கிணங்க இவ்வாண்டுப்பகுதிக்கான குழுமத்தின் மொத்த பெறுமதிசேர்வரி 15% (2016: 15%) பெறுமதிசேர் வரிக்கு உட்பட்டதாக இருக்கும். குழுமம் பெறுமதிசேர் வரியைக் கணிப்பதற்கு சட்டத்தில் விரித்துரைக்கப்பட்ட இரண்டு முறைகளில் ஒன்றான பெறுமதியினை சேர்ப்பதனை அடிப்படையாகக் கொண்ட முறையினைப் பின்பற்றுகின்றது.

4.6.3 பங்குலாபங்கள் மீதான பிடித்துவைத்தல் வரி (WHT)

- வங்கியினால் வழங்கப்படும் பங்குலாபம் மீதான பிடித்து வைத்தல் வரி

  வங்கியானது அதன் ஒரே பங்குடமையாளரான அரசாங்கத்திற்கு பங்கிலாபங்களைச் செலுத்துவதனால் பிடித்து வைத்தல் வரியினை வங்கி செலுத்துவதில்லை.
- துணை நிறுவனங்களினாலும் கூட்டு நிறுவனங்களினாலும் வழங்கப்படும் பங்குலாபங்கள் மீதான பிடித்து வைத்தல் வரி

துணை நிறுவனங்களினதும் கூட்டு நிறுவனங்களினதும் வரி விதிக்கத்தக்க இலாபத்திலிருந்து வழங்கப்படுகின்ற பங்கு இலாபங்கள் மூலத்தில் 10% கழிவினைக் கொண்டிருப்பதுடன் இது இறுதி வரிவிதிப்பாகக் கருதப்படுவதனால் இவை வங்கியின் வரிப் பொறுப்பிற்கு எதிராக செய்யப்பட முடியாததாகும்.

4.6.4 பொருளாதார சேவைகள் கட்டணம்

2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைகள் கட்டணம் மற்றும் அதற்கு மேற்கொள்ளப் பட்ட திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கமைவாக வங்கியின் வரியிடத்தக்க விற்பனைப் புரள்வின் 0.5% பொருளாதார சேவைகள் கட்டணமாக செலுத்த வேண்டியதாகும். அத்துடன் இவை வருமான வரிக் கொடுப்பனவிலிருந்து கழிக்கத் தக்கவையாகும். 2012 ஏப்ரல் 1ஆம் திகதியிலிருந்து வலுப்பெறும் 2012 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க பொருளாதார சேவைகள் கட்டண திருத்த சட்டத்தின்படி பொருளாதார சேவைகள் கட்டணம் வங்கியின் விலக்கழிக்கப்பட்ட விற்பனைப் புரள்வுக்கு செலுத்தப்பட வேண்டியிருப்பதுடன் இதுவருமான வரிக் கொடுப்பனவிலிருந்து கழிக்கத்தக்கவையாகும். பொருளாதார சேவைகள் கட்டணம் வருமான வரி செலுத்தப்படும் விற்பனைப் புரள்வுக்கு செலுத்த வேண்டியதில்லை.

4.6.5 பயிர் காப்பு வரி (CIL)

2013 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 15 இன் ஏற்பாடுகளின்படி 2013 ஏப்ரல் 1 ஆம் திகதியிலிருந்து வலுப்பெறும் வகையில் பயிர்காப்பு வரி அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. அத்துடன் வரிக்குப்பின் இலாபத்தின் 1% ஆக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சபைக்கு இவ்வரி செலுத்தப்படுகின்றது.

4.6.6 நிதியியல் சேவைகள் மீதான நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (NBT)

நிதிச் சேவைகள் மீதான நாட்டைக்கட்டியெழுப்புதல் வரி. 1 ஜனவரி 2014 இலிருந்து செயற்படும்படியாக 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி சட்டத்தினதும் அதன் திருத்தங்களுக்கும் ஏற்ப கணிப்பிடப்படுகின்றது. நிதிச் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரிக் கணிப்பீட்டிற்குப் பயன்படுத்தப்படும் சேர்க்கப்பட்ட பெறுமதியின் 2% இல் நிதிச் சேவைகள் மீதான நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி கணிப்பிடப்படுகின்றது.

5 காப்புறுதித் தொழில்

5.1 மீள் காப்புறுதி

குழுமமானது அதன் அனைத்து தொழில் களுக்குமாக தொழிலின் வழமையான காலப் பகுதியில் ஏற்படும் காப்புறுதி இடர்களுக்கு இணங்கியிருக்கிறது. மீள் காப்புறுதிச்சொத்துக்கள் மீள்காப்புறுதியாளர்களிடமிருந்து மீட்கத்தக்க தொகைகள் வெளிநின்ற கோரல் ஒதுக்குகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் மீள்காப்புறு தியாளரின் கொள்கைகளுடன் இணைந்து தீர்ப்பனவு செய்யப்பட்ட கோரலுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் மதிப்பிடப்பட்டதுடன் தொடர்பான மீள்காப்புறுதி ஒப்பந்தத்துடன் இணங்கிச் செல்வதாகவும் இருக்கிறது.

பெறுமதிக் குறைப்பிற்காக மீள்காப்புறுதிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் அல்லது அறிக்கையிடுகின்ற ஆண்டில் பெறுமதி குறைவடைவதற்கான அறிகுறிகள் தோன்றுகின்ற போதும் அடிக்கடியும் மீளாய்வு செய்யப்படுகின்றன. பெறுமதிக்குறைப்பானது, ஒப்பந்தத்தின்

நியதிகளின் கீழ்வர வேண்டிய வெளிநின்ற அனைத்துத் தொகைகளையும் குழுமமானது பெறாத மீள் காப்புறுதிச் சொத்துக்களின் ஆரம்ப அங்கீகரிப்பின் பின் நிகழ்கின்ற சம்பவங்களின் பெறுபேறாக வெளிப்படையான சான்றுகள் காணப்படும் பொழுது ஏற்படுவதுடன் நிகழ்வானது மீள் காப்புறுதியாளரிடமிருந்து குழுமம் பெற விருக்கும் தொகையின் மீதும் நம்பத்தகுந்த குழப்பம் நிறைந்த தாக்கமொன்றினை ஏற்படுத்துகிறது. பெறுமதிக் குறைப்பினால் ஏற்படும் இழப்புக்கள் இலாப நட்டக்கூற்றில் பதிவு செய்யப்படுகின்றன.

இணங்கப்பட்ட மற்றும் அனுமானிக்கப்பட்ட காப்புறுதிகள் இரண்டிற்குமான காப்புறுதிக் கட்டணங்களும் கோரல்களும் மொத்த அடிப்படையில் காட்டப்படுகின்றன. ஒப்பந்த ரீதியான உரிமைகள் இல்லாதிருக்குமிடத்து அல்லது காலாவதியாகியிருக்குமிடத்து அல்லது ஒப்பந்தம் இன்னொரு தரப்பினருக்கு மாற்றல் செய்யப்படும் பொழுது மீள் காப்புறுதிச் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் அங்கீகரிக்காமல் விடப்படுகின்றன.

5.2 பெறத்தக்க காப்புறுதி

பெறத்தக்க காப்புறுதி அவை கிடைக்கும் வேளையில் அங்கீகரிக்கப்படுவதுடன் பெறப்பட்ட அல்லது பெறப்படுகின்ற தொகையின் சந்தைப் பெறுமதியின் ஆரம்பத் தொகையின் மீது அளவிடப்படுகின்றன. கொண்டிருக்கும் பெறுமதி அளவிட முடியாதது என்ற அறிகுறியினை சம்பவங்கள் அல்லது சூழ்நிலைகள் காட்டுகின்ற வேளையில் பெறத்தக்க காப்புறுதியில் கொண்டிருக்கும் பெறுமதியானது, பெறுமதிக் குறைப்பிற்காக மீளாய்வு செய்யப்பட்டு பெறுமதிக் குறைப்பு இழப்பு இலாப நட்டக்கூற்றில் பதிவு செய்யப்படுகிறது.

5.3 பிற்போடப்பட்ட செலவினங்கள்

5.3.1 பிற்போடப்பட்ட கொள்வனவுச் செலவு

புதிய வியாபாரங்களின் கொள்வனவுக்கிரயமானது தரகு, குறைத்தெழுதுதல், சந்தைப்படுத்தல் மற்றும் கொள்கைவிடயச் செலவினங்களை உள்ளடக்கிய புதிய தொழில்களின் கொள்வனவின் பேரில் ஏற்பட்ட கிரயமானது புதிய தொழில்களின் உற்பத்தி அத்துடன், அல்லது தற்றுணிவு பங்கேற்புப் பண்புகளுடனான முதலீட்டு ஒப்பந்தங்களுடன் வேறுபட்டும் நேரடியாக தொடர்புபட்டும் இருப்பதுடன் இவை இக்கிரயங்கள் எதிர்காலக் கட்டுப்பணத்திலிருந்து அறவிடப்படுகின்ற காலம்வரை பிற்போடப்படுகின்றன. ஏனைய அனைத்துக் கொள்வனவுக் கிரயங்களும் அவை ஏற்படும் வேளைகளில் செலவினங்களாக அங்கீகரிக்கப்படுகின்றன. ஆரம்ப அங்கீகரிப்பிற்குப் பின்னர் பொதுக் காப்புறுதிக்கான பிற்போடப்பட்ட கொள்வனவுக் கிரயம் ஈட்டப்படாத காப்புறுதிக் கட்டணம் தீர்க்கப்பட்டதன் அடிப்படையில் உரிய காலப்பகுதிக்காக தேய்விடப்பட்டது. குறிக்கப்பட்ட சொத்துக்களின் தேய்விடல் இலாப நட்டக்கூற்றில் பதிவு செய்யப்படுவதனால் பிற்போடப்பட்ட கொள்வனவுக் கிரயத்தின் மீள்காப்புறுதிப்பங்கு இதே விதத்தில் தேய்விடப்படுகிறது.

சொத்துக்களில் உள்ளடக்கியுள்ள எதிர்பார்க்கப் படும் பயன்மிக்க ஆயுள்காலம் அல்லது எதிர்காலப் பொருளாதார நன்மைகளின் நுகர்வினது எதிர் பார்க்கப்பட்ட மாதிரி என்பனவற்றில் ஏற்படுகின்ற மாற்றங்கள் பெறுமானத் தேய்வு காலப்பகுதியின் மாற்றங்களுக் கேற்ப கணக்கிடப் படுவதுடன் கணக்கீட்டு மதிப்பீடுகளில் ஏற்படும் மாற்ற மொன்றாகவும் கருதப்படுகின்றது. சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்கள் ஒன்றில் காலாவதியாகும் போது அல்லது இரத்துச் செய்யப்படும் போது பிற்போடப் பட்ட கொள்வனவுக் கிரயம் அங்கீகரிக்கப்படாமல் விடப்படுகிறது.

5.4 மீள் காப்புறுதித் தரகுகள்

வெளிச் செல்லும் மீள்காப்புறுதி ஒப்பந்தங்கள் மீது பெறத்தக்க தரகுகள் மறுகாப்பீட்டுக் காலத்தில் பிற்போடப்பட்டு தீர்ப்பனவு செய்யப்படுகின்றன.

5.5 முதலீட்டு ஒப்பந்தப் பொறுப்புக்கள்

முதலீட்டு ஒப்பந்தங்கள் தற்றுணிவு பங்கேற்புப் பண்புகளைக கொண்ட ஒப்பந்தங்கள், அப்பண்புகள் இல்லாத ஒப்பந்தங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ள. தற்றுணிவு பங்கேற்புப் பண்புகளைக் கொண்ட முதலீட்டு ஒப்பந்த பொறுப்புக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் ஆயுள் காப்புறுதி ஒப்பந்த கொள்கைகளுக்கான அதே கொள்கைகளேயாகும்.

தற்றுணிவு பங்கேற்புப் பண்புகளைக்கொண்டிராத முதலீட்டு ஒப்பந்தப் பொறுப்புக்கள், ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு காப்புறுதிக் கட்டணங்கள் விதிக்கப்படுகின்றபோது அங்கீகரிக்கப்படுகின்றது. இப்பொறுப்புக்கள் ஆரம்பத்தில் நியாயப்பெறுமதியில் அங்கீகரிக்கப்படுவதுடன் இது ஒப்பந்தங்களின் வழங்கலுடன் நேரடியாக சேரவேண்டிய ஏதேனும் கொடுக்கல் வாங்கல் கிரயத்தினை நீக்குகிறது. ஆரம்ப அங்கீகரிப்பு முதலீடுகளின் பின்னர், ஒப்பந்தப் பொறுப்புக்கள் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

நிதியியல் நிலைமைக் கூற்றிலுள்ள பொறுப்பிற்கான சீராக்கமாக வைப்புக்களும் மீளப்பெறுகைகளும் நேரடியாகப் பதிவு செய்யப்படுகின்றன. நியாயப் பெறுமதிச் சீராக்கங்கள் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மேற்கொள்ளப்படுவதுடன், இலாப நட்டக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. கழிவிடப் பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல் தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்துவதன் மூலமாக நியாயப் பெறுமதி நிர்ணயிக்கப்படுகிறது. அலகு மயப்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களுக்காக, நியாயப் பெறுமதியானது, அறிக்கையிடும் திகதியில் கூறு இணைக்கப்பட்ட நிதியங்கள் கூறு விலைகளினால் பெருக்கப்பட்ட அந்நிதியம் ஒவ்வொன்றும் காப்புறுதி உடமையாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட கூறுகளின் எண்ணிக்கையாக கணிக்கப்பட்டது. அறிக்கையிடும் திகதியன்று கூறின் விலைகளைத் தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட நிதியத்தின் சொத்துக்களும் நிதியத்தின் பொறுப்புக்களும் நிதியத்திலுள்ள சொத்துக்கள் மீதான தேறல் செய்யப்படாத இலாபத்தின் மீதான பிற்போடப்பட்ட வரியின் பொறுப்புக்கள் மீதான தாக்கத்தினைக் கவனத்தில்கொள்ளும் விதத்தில் சீராக்கப்பட்ட நிதியியல் நிலைமையின் கூற்றிலுள்ள அவற்றின் அளவு முறைகளின் அடிப்படையுடன் ஒத்துச் செல்லும் விதத்தில் மதிப்பிடப்பட்டன.

அலகு மயப்படுத்தப்படாத ஒப்பந்தங்கள் அதன் பின்னரும் நியாயப் பெறுமதியில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டதுடன், இது கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்சல் மற்றும் சம வாய்ப்பு கணக்கிடல் மாதிரிப்படுத்தல் போன்ற பெறுமதி தொழில் நுட்பங்களைப் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டது. மாதிரிகள் அனைத்தும் உறுதி செய்யப்பட்டு ஒழுங்கு படுத்தல் மற்றும் குறிப்பிட்ட நேரத்தில் தகுதிவாய்ந்த நபரால் சுதந்திரமாக மீள்பார்வையிடப்படும்.

ஒப்பந்தங்கள் காலாவதியாகும் பொழுது, விடுவிக்கப்படும் பொழுது அல்லது இரத்துச் செய்யப்படும் பொழுது பொறுப்புக்கள் அங்கீகரிக்கப்படுவதில்லை. ஈட்டுறுதியாளர்களினால் இரத்துச் செய்யப்படக்கூடிய ஒப்பந்தங்களுக்காக, நியாயப் பெறுமதி, ஒப்படைப்புப் பெறுமதியிலும் பார்க்கக் குறைவாக இருக்க முடியாது. ஒப்பந்தங்கள் நிதியியல் இடர்நேர்வுக்கூறு மற்றும் குறிப்பிடத்தக்க காப்புறுதி இடர்நேர்வுக் கூறு ஆகிய இரண்டினையும் உள்ளடக்கியிருக்கும் பொழுதும் இரண்டு கூறுகளிலுமிருந்தான காசுப்பாய்ச்சல் தனித்துவமானதாகவும் நம்பகமாக அளவிடப்பட முடியுமென்பதனாலும் முக்கியமாக தொகைகள் பிரிக்கப்படவில்லை. காப்புறுதி இடர்நேர்வுக்கூறுகளுடன் தொடர்பான ஏதேனும் காப்புறுதிக் கட்டணங்கள் காப்புறுதி அடிப்படையிலேயே கணக்கிடப்படுகின்றன.

5.6 தற்றுணிவு பங்கேற்புப் பணிகள் (DPF)

தற்றுணிவு பங்கேற்புப் பணிகள் என்பது தற்றுணிவு பங்கேற்பு பண்பு சொத்துப் பட்டியலிற்குள் வைத்திருக்கப்பட்ட சொத்துக்களின் செயலாற்றத்தினை அடிப்படையாகக் கொண்ட உத்தரவாத நன்மைகள் மற்றும் குறிப்பிடத்தக்க மேலதிக நன்மைகள் என்பனவற்றிற்கான துணை நிரப்பியாக பெறுவதற்கான ஒப்பந்தங்களை வைத்திருக்கின்ற உடமையாளர்களின் ஒப்பந்த ரீதியான உரிமைகளை வழங்குமொன்றாகும். ஒப்பந்தங்களின் நியதிகளின் கீழ் தற்றுணிவு பங்கேற்பு பண்புகளின் நிதிகளிலுள்ள மிகைகளை 90/10 என்ற அடிப்படையில் ஈட்டுறுதியாளர்களுக்கும் பங்குடமையாளர்களுக்கும் விநியோகிக்க முடியும். இம்மிகைகளை ஈட்டுறுதியாளர்களுக்கு விநியோகிக்கும் தொகையினையும் நோக்கத்தினையும் தற்றுணிவினை குழுமம் கொண்டிருக்கிறது உத்தரவாதப் படுத்தப்பட்ட மற்றும் தற்றுணிவு ரீதியான இரண்டையும் உள்ளடக்கிய ஒதுக்கீடு செய்யப்படாத மிகைகளான அனைத்து தற்றுணிப்பங்கேற்பு பண்புப்பொறுப்புக்கள் பொருத்தமான் விதத்தில் காப்புறுதிகளில் அல்லது முதலீட்டு ஒப்பந்தப் பொறுப்புக்களில் ஆண்டு தோறும் வைத்திருக்கப்படுகின்றன.

5.7 ஈட்டப்படாத காப்புறுதித் தவணைப்பண ஒதுக்கு

ஈட்டப்படாத காப்புறுதி ஒதுக்கு இவ்வாண்டில் எழுதப்பட்ட காப்புறுதியின் விகிதத்தினைப் பிரதி பலித்ததெனினும் உள்ளடக்கப்பட்ட காலாவதியாகாத காலத்துடன் தொடர்புபட்டதாக இருக்கவில்லை. ஈட்டப்படாத கட்டுப்பணம், 1/24 அடிப்படையில் கணிக்கப்பட்டது.

6 வெளியிடப்பட்ட ஆனால் அறிக்கையிடல் திகதியிலுள்ள வாறு அமுலுக்கு வராத புதிய கணக்கீட்டு நியமங்கள்

2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியிலுள்ளவாறு இதுவரை அமுலுக்கு வராத பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் மூலம் வெளியிடப்பட்டன. அதற்கிணங்க, 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது இக் கணக்கீட்டு நியமங்கள் பிரயோகிக்கப்படவில்லை.

இக் குழுமத்திற்கு அவற்றைப்பிரயோகிக்கும் பின்வரும் நியமங்களை நாம் இனங்கண்டுள்ளதுடன் மேலதிக விபரங்கள் கீழே விதித்துரைக்கப்பட்டுள்ளன:

(i) இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் SLFRS 9 - 'நிதியியல் சாதனங்கள்':

அனுமதிக்கப்பட்ட முன்கூட்டிய ஏற்றுக் கொள்ளலுடன் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ வருடாந்த காலப்பகுதிகள் சார்பில் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 - "நிதியியல் சாதனங்கள்" என்பது இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 39 இனை பதிலீடு செய்யும். 2016 ஆம் ஆண்டில், இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 அமுலாக்கத்திற்கான ("இக் கருத்திட்டம்") தயார்படுத்தலின் பொருட்டு இவ் வங்கியானது அதன் இடர், நிதி மற்றும் தொழிற்பாட்டுக் குழுக்களிலிருந்தான உறுப்பினர்களுடன்கூடிய பல்துறை அமுலாக்க குழுவொன்றை ("இக் குழு") அமைத்தது. பிரதம நிதி அலுவலர் தலைமை வகிக்கும் கருத்திட்ட வழிப்படுத்தல் குழுவினால் இக் கருத்திட்ட அமுலாக்கம் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுகின்றது.

வகைப்படுத்தலும் அளவீடும் மற்றும் பெறுமதிக் குறைப்பு ஆகியவற்றுக்கான இரு உப குழுக்களுக்குள் தெளிவான தனித்தனிப் பணிப் பிரிவுகளை இக் கருத்திட்டம் கொண்டுள்ளது. ஆரம்ப மதிப்பீடு மற்றும் பகுப்பாய்வுக் கட்டமானது 2016 ஆம் ஆண்டில் பெறுமதிக் குறைப்பிற்காக பூர்த்தியாக்கப்பட்டதுடன், வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டுக் கட்டத்தை உப குழுவானது முற்றாக்கி வருகின்றது.

இவ் வங்கியானது இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 - "நிதியியல் சாதனங்கள்" தொடர்பில் ஆய்ந்தறிதல் கட்டம் (ஆரம்பத் தாக்க மதிப்பீட்டுச் செய்முறை) மற்றும் அமுலாக்க கட்டம் (தீர்வு விருத்தி) என்பவற்றை செயலாற்றியது.

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 எவ்வாறு அமுலாக்கப்பட வேண்டும் என்பது பற்றிய குறிப்பிடத்தக்க பகுப்பாய்வொன்றை இவ் வங்கி மேற்கொண்டுள்ளதுடன் தற்காலிகமான கணக்கீட்டுக் கொள்கைத் தீர்மானங்களை எடுத்துள்ளது.

வகைப்படுத்தலும் அளவீடும்

வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டுக் கண்ணோட்டம் ஒன்றிலிருந்து, சொத்துக்களை முகாமை செய்வதற்கான நிறுவனத்தின் வியாபார மாதிரி மற்றும் சாதனங்களின் ஒப்பந்த காசுப் பாய்ச்சல் பண்புகள் ஆகியவற்றின் சேர்க்கையொன்றினை அடிப்படையாகக் கொண்டு, உரிமைமுதல் சாதனங்கள் மற்றும் பெறுதிகள் நீங்கலாக, சகல நிதிச் சொத்துக்களையும் மதிப்பிடப்படுவதை புதிய நியமமானது தேவைப்படுத்தும்.

வியாபார மாதிரி மதிப்பீடு

வங்கியானது அதன் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நிதிச் சொத்துக்களை எவ்வாறு முகாமை செய்கின்றதென்பதை சிறப்பாக பிரதிபலிக்கும் மட்டத்தில் அதன் வியாபார மாதிரியினை அது வரையறை செய்கின்றது. வங்கியின் வியாபார மாதிரியானது சாதனத்திற்கு சாதனம் என்னும் அடிப்படையில் மதிப்பிடப்படுவதில்லை, ஆனால் மொத்த சாதனப் பட்டியலின் உயர் மட்டமொன்றில் மதிப்பிடப்படுவதுடன் அவதானிக்கக்கூடிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டது. அப்படிப்பட்டதாக:

- வியாபார மாதிரியின் செயற்றிறனும் அவ் வியாபார மாதிரிக்குள் வைக்கப்பட்டுள்ள நிதிச் சொத்தும் மதிப்பிடப்பட்டு நிறுவனத்தின் பிரதான முகாமைத்துவ ஆளணிக்கு அறிக்கையிடப்படுவது எவ்வாறு என்பது.
- வியாபார மாதிரியின் செயற்றிறனை (மற்றும் அவ் வியாபார மாதிரிக்குள் வைக்கப்பட்டுள்ள நிதிச் சொத்தை) பாதிக்கும் இடர்கள் அத்துடன், குறிப்பாக, அவ் இடர்கள் முகாமை செய்யப்படும் விதம்
- வியாபாரத்தின் முகாமையாளர்களுக்கு நட்டஈடு செலுத்தப்படுவது எவ்வாறு என்பது (உதாரணமாக, அந் நட்டஈடானது முகாமை செய்யப்பட்ட சொத்துக்களின் நியாயப் பெறுமதியில் அல்லது சேகரிக்கப்பட்ட ஒப்பந்த காசுப் பாய்ச்சலின் அடிப்படையிலா என்பது)
- விற்பனைகளின் எதிர்பார்க்கப்பட்ட நிகழ்வு வீதம், பெறுமதி மற்றும் காலப்பகுதி என்பனவும் இவ் வங்கியினுடைய மதிப்பீட்டின் முக்கியமான அம்சமாகும்.

"பாரதூரமான சூழ்நிலை" அல்லது "அழுத்தமான சூழ்நிலை" நிலவரங்களை கவனத்திற் கொள்ளாமல் நியாயமாக எதிர்பார்க்கப்படும் நிலவரங்களை வியாபார மாதிரி மதிப்பீடானது அடிப்படையாகக் கொண்டது. ஆரம்ப கண்டறிதலின் பின்னரான காசுப் பாய்ச்சல்களானவை வங்கியின் ஆரம்ப எதிர்பார்க்கையிலிருந்து வேறுபடும் ஒரு விதத்தில் பணமாக்கப்படுமாயின், அவ் வியாபார மாதிரியில் வைக்கப்பட்டுள்ள எஞ்சிய நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தலை வங்கி மாற்றுவதில்லை, ஆனால் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட அல்லது புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களை மதிப்பிடும் போது அத்தகைய தகவல்களை உள்ளடக்கும்.

ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல் பண்புச் சோதனை

வகைப்படுத்தல் செய்முறையின் இரண்டாவது சோதனையாக இவ் வங்கியானது, நிதிச் சொத்தின் ஒப்பந்த நியதிகளானவை, ஆரம்ப கண்டறிதலில் நிதிச் சொத்தின் நியாயப் பெறுமதியாக வரைவிலக்கணப்படுத்தப்படுகின்ற இச் சோதனையின் நோக்கம் கருதி தனித்த முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவு (SPPI) தத்துவத்தைப் பூர்த்தி செய்கின்றனவா என்பதை இனங்காணும் பொருட்டு அவற்றை மதிப்பிடுவதுடன், நிதிச் சொத்தின் ஆயுட்காலத்தின் போது மாற்றலாம் (உதாரணமாக, முதலின் அல்லது வட்டம்/கழிவின் காலத்தேய்மானத்தின் மீள்கொடுப்பனவுகள் இருப்பின்).

கடன் வழங்கும் ஏற்பாடு ஒன்றுக்குள் வட்டியின் கூடுதல் முக்கியத்துவமான கூறுகளானவை வழமையில் பணத்தின் காலப் பெறுமதியையும் கடன் இடரையும் கரிசனையிற் கொள்வதாக உள்ளன. தனித்த முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவு (SPPI) மதிப்பீட்டைச் செய்யும் பொருட்டு, வங்கியானது திறனாய்வு முடிவைப் பிரயோகிப்பதுடன், நிதிச் சொத்தானது வெளிப்படுத்தப்படும் நாணயம் மற்றும் வட்டி வீதம் ஏற்படுத்தப்படும் காலப்பகுதி போன்ற உரிய காரணிகளைக் கருத்திற் கொள்கின்றது.

இடருக்கு அல்லது உறுதியற்ற தன்மைக்கான சொற்ப அளவான வெளிக்காட்டலுக்கும் கூடுதலானவொன்றை அறிமுகப்படுத்தும் ஒப்பந்த வெளிக்காட்டல்களுக்கு வேறுபாடாக, அடிப்படை கடன் வழங்கும் ஏற்பாடொன்றுடன் தொடர்புபடாத ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களானவை நிலுவையாகவுள்ள தொகை தொடர்பான தனித்த முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவாக உள்ள ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களுக்கான அதிகரிப்பை ஏற்படுத்துவதில்லை. அத்தகைய சூழ்நிலைகளில், "இலாபம் அல்லது நட்டத்திற்கூடான நியாயப் பெறுமதியில்" நிதிச் சொத்து அளவிடப்பட வேண்டியுள்ளது.

நிதிச் சொத்துக்களின் பெறுமதிக்குறைப்பு

எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்ட தத்துவம் (ECL) இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 பற்றிய கண்ணோட்டமானது முன்நோக்கிய ECL அணுகுமுறை ஒன்றினைக் கொண்டு இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) 39 - "நிதியியல் சாதனத்தை கண்டறிதல் மற்றும் அளவிடுதல்" என்பதனுடைய ஏற்பட்ட நட்ட அணுகுமுறையினை பதிலீடு செய்வதன் மூலம் வங்கியின் கடன் நட்ட ஏற்பாட்டு முறையினை பிரதானமாக மாற்றும்.

நட்டப் படித்தொகையானது 12 மாதம் எதிர்பார்க்கப்படும் கடன் நட்டமாக (12mECL) அமையும் சந்தர்ப்பத்தில் தோற்றநிலையிலிருந்தே கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எதுவும் காணப்படாதிருந்தாலொழிய, சொத்தின் ஆயுட்காலத்தில் எழுமென எதிர்பார்க்கப்படும் கடன் நட்டங்களை (ஆயுட்காலத்தில் எதிர்பார்க்கப்படும் கடன் நட்டம் அல்லது LTECL) ECL படித்தொகை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

அறிக்கையிடல் திகதியின் பின்னரான 12 மாதங்களுக்குள் சாத்தியப்படக்கூடிய ஒரு நிதியியல் சாதனம் மீதான தவணை தவறும் நிகழ்வுகளிலிருந்து விளையப்பெறும் ECL இனை பிரதிநிதித்துவம் செய்யும் LTECL இன் பகுதியே 12mECL ஆகும்.

ஆரம்ப கண்டறிதலிலிருந்து நிதியியல் சாதனம் ஒன்றின் கடன் இடரானது குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளதா என்பது பற்றி ஒவ்வோர் அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவிலும் மதிப்பீடொன்றை மேற்கொள்வதற்கான கொள்கையொன்றை இவ் வங்கி உருவாக்கியுள்ளது. அச் செய்முறையின் அடிப்படையில் இவ் வங்கியானது கீழே விபரிக்கப்பட்டவாறு கட்டம் 1, கட்டம் 2 மற்றும் கட்டம் 3 ஆக கடன்களை வகைப்படுத்துகின்றது:

- **கட்டம் 1:** கடன்கள் முதலில் கண்டறியப் பட்டதும், வங்கியானது 12mECL இன் அடிப்படையில் படித்தொகையொன்றைக் கண்டறியும். கடன் இடரானது முன்னேற்றம் கண்டுள்ள வசதிகளையும் கட்டம் 1 கடன்கள உள்ளடக்குவதுடன் இக்கடன்களானவை கட்டம் 2 இலிருந்து மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன. கட்டம் 1 இன் மதிப்பீடானது கூட்டாக மேற்கொள்ளப்படும்.
- **கட்டம் 2:** கடனொன்று தோற்றநிலையிலிருந்து கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றைக் காட்டியுள்ள போது, வங்கியானது LTECL இற்கென படித்தொகையொன்றைப் பதிவு செய்கின்றது. கடன் இடரானது முன்னேற்றம் கண்டுள்ள வசதிகளையும் கட்டம் 2 கடன்கள் உள்ளடக்குவதுடன் இக் கடனானது கட்டம் 3 இலிருந்து மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளது. கட்டம் 2 இன் மதிப்பீடானது கூட்டாக மேற்கொள்ளப்படும்.
- **கட்டம் 3:** கடன் பெறுமதிக் குறைவுடன் இருப்பதாக கருதப்படும்/ஏற்பட்ட நட்டங்களின் தற்சார்பற்ற சான்றினை உள்ளடக்கும் கடனானது LTECL இற்கென படித்தொகையொன்றைப் பதிவு செய்கின்றது. கட்டம் 3 இன் மதிப்பீடானது தனித்தனியாக/கூட்டாக மேற்கொள்ளப்படும். கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு.

சாதனமொன்று அல்லது சாதனங்களின் பட்டியலொன்று 12mECL இற்கு அல்லது LTECL இற்கு உட்பட்டுள்ளதா என்பதை வரையறுக்கும் பொருட்டு ECL இற்கு உட்பட்டு சகல சொத்துக்களையும் வங்கி தொடர்ச்சியாக கண்காணிக்கின்றது. ஆரம்ப கண்டறிதலிலிருந்து கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இருந்துள்ளதா என்பது பற்றி வங்கி மதிப்பிடுகின்றது. பின்வரும் தகுதிவிதிகளில் ஏதேனுமொன்று பூர்த்தி செய்யப்படும் போது வெளிக்காட்டலொன்று கடன் இடரில் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துக் கொள்வதை வங்கி கரிசனையிற் கொள்கின்றது:

- 30 நாட்கள் கடந்த நிலுவையினை விஞ்சும் வசதிகள்
- கடன் இடர் முகாமைத்துவக் குழுவினால் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டிற்கமைவாக குறியிடப்பட்ட ஏதேனும் அதிகரித்த இடர் கைத்தொழில்களை பிரதிபலித்த எதிரிணைத் தரப்பினர்கள்/வசதிகள்
- சொத்தொன்றின் சார்பில் கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றை தூண்டுகின்ற மீள்கட்டமைக்கப்பட்ட வசதிகள், இரண்டாந்தர பண்புசார் குறிகாட்டிகள், அப்படிப்பட்டதாக ஒரு வாடிக்கையாளரை/வசதியை கண்காணிப்பு பட்டியலை நோக்கி நகர்த்துதல்

தனித்தனியாக முக்கியத்துவம் கொண்ட மதிப்பீடு மற்றும் தனித்தனியாக பெறுமதி குறைவடையாதவை

முன் நிர்ணயிக்கப்பட்ட ஆரம்ப எல்லைக்கு மேற்பட்ட சகல வாடிக்கையாளர் வெளிக்காட்டல்களையும் வங்கியானது தனித்தனியாக மதிப்பிடும். ஏற்பட்ட நட்டங்களின் தற்சார்பற்ற சான்றுடன் சகல வாடிக்கையாளர்களுக்கும் தனித்தனியான மதிப்பீடு மேற்கொள்ளப்படும் (கட்டம் 3 இன் கீழ்). தனித்தனியாக முக்கியத்துவம் கொண்ட ஆனால் பெறுமதி குறைவடையாத கடன்களானவை, தோற்றநிலையிலிருந்து குறிப்பிடத்தக்க கடன் சீர்கேடு காணப்பட்டுள்ளதா என்பது பற்றிய தகுதிவிதிகளின் அடிப்படையில் ஒன்றில் கட்டம் 1 இன் அல்லது கட்டம் 2 இன் கீழ் பெறுமதி குடைவடைதல் கருதி கூட்டாக மதிப்பிடப்படும்.

குறிப்பிடத்தக்க கடன் சீர்கேட்டை உருவாக்கும் போது வங்கியானது பின்வரும் தகுதிவிதிகளை:

- கவனத்திற் கொள்ளும் சாதனமானது புதிதாக தோற்றுவிக்கப் பட்டிருப்பின் குறிப்பிடத்தக்கதாக வேறுபட்டுக் காணப்படும் நடைமுறையிலுள்ள நிதியியல் சாதனம் ஒன்றின் வீதங்களில் அல்லது நியதிகளில் உள்ள ஏனைய மாற்றங்கள்
- ஒரு குறித்த நிதியியல் சாதனத்துக்கான அல்லது இதையொத்த நிதியியல் சாதனத்துக்கான கடன் இடரின் வெளியக சந்தைக் குறிகாட்டிகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள்.
- கடன் பெற்றவருடன் தொடர்புபட்ட ஏனைய தகவல்கள், அப்படிப்பட்டதாக கடன் பெற்றவரின் கடன்/உரிமைமுதல் சாதனமொன்றின் விலையிலான மாற்றங்கள்.
- கடன் பெற்றவர் சார்பில் உண்மையான/ எதிர்பார்க்கப்பட்ட உள்ளக கடன் தரப்படுத்தலின் தரக்குறைவு அல்லது கடன் இடரை உள்ளக ரீதியில் மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் நடத்தைசார் தரப்படுத்தலில் வீழ்ச்சி.
- அதன் கடப்பாட்டினை பூர்த்தி செய்யும் பொருட்டு கடன் பெற்றவரின் ஆற்றலில் குறிப்பிடத்தக்க மாற்றத்தினை விளைவிக்குமென எதிர்பார்க்கப்படும் வியாபார, நிதி அல்லது பொருளாதார நிலமையில் நடைமுறையிலுள்ள அல்லது எதிர்வுகூறப்படும் பாதகமான மாற்றங்கள்.
- வருமானத்தில் உண்மையான/எதிர்பார்க்கப்படும் குறைவு, தொழிற்பாட்டு இடரில் அதிகரிப்பு, தொழிற்படு மூலதனப் பற்றாக்குறை, சொத்தின் தரத்தில் குறைவு, இணைப்பு மூலதனத்தில் அதிகரிப்பு, திரவத்தன்மை முகாமைத்துவப் பிரச்சினைகள் தொடர்பில் கடன் பெற்றவரின் தொழிற்பாட்டு விளைவுகளில் உண்மையான/ எதிர்பார்க்கப்படும் முக்கியமானதொரு மாற்றம்
- அதே கடன் பெற்றவரின் ஏனைய நிதியியல் சாதனங்கள் தொடர்பான கடன் இடரில் முக்கியமான அதிகரிப்பு.
- கடன் கடப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கான கடன் பெற்றவரின் ஆற்றலில் முக்கியமான மாற்றமொன்றை விளைவிக்கும் கடன் பெற்றவரின் ஒழுங்குறுத்துகை, பொருளாதார அல்லது தொழில்நுட்பவியல் சுற்றாடலில் உண்மையான/எதிர்பார்க்கப்படும் முக்கியமானதொரு பாதகமான மாற்றம்.

கூட்டு அடிப்படையொன்றில் அளவிடப்பட்டு நிதிச் சொத்துக்களை வகைப்படுத்துதல்

மேலே விளக்கியவாறு, வங்கியானது ECL இனை ஒன்றில் கூட்டு அல்லது தனித்தனியான அடிப்படையொன்றில் கணிப்பிடுகின்றது. தனித்தனியான அடிப்படையொன்றில் வங்கியானது ECL இனை கணிப்பிடுகின்ற சொத்து வகுப்புக்களானவை கட்டம் 3 இற்குச் சொந்தமான சகல தனித்தனியான முக்கியத்துவமான சொத்துக்களையும் உள்ளடக்குகின்றன. கட்டம் 1 இற்கும் கட்டம் 2 இற்கும் சொந்தமான சகல சொத்துக்களும் அத்துடன் தனித்தனியாக பெறுமதி குறையாத சொத்துக்களும் பெறுமதி குறைவு கருதி கூட்டாக மதிப்பிடப்படும்.

கீழே விபரிக்கப்பட்டவாறு கடனின் உள்ளக மற்றும் வெளியகப் பண்புகளின் சேர்க்கையொன்றின் அடிப்படையில், சிறிய ஓரின இயல்புடைய வெளிக்காட்டல்கள் கருதி இவ் வெளிக்காட்டல்களை வங்கி வகைப்படுத்துகின்றது:

- உற்பத்தி வகை
- பிணை வகை
- நாட்கள் கடந்த நிலுவை
- கைத்தொழில

ECL இனைக் கணிப்பீடு செய்தல்

EIR இற்கு அண்ணளவாக கழிவிடப்படும், எதிர்பார்க்கப்பட்ட காசுப் பற்றாக்குறையினை அளவிடும் பொருட்டு மூன்று நிகழ்தகவுசார் நிறையளிப்பு நிலவரங்களின் அடிப்படையில் ECL இனை வங்கி கணிப்பீடு செய்கின்றது. ஒப்பந்தத்திற்கு இணங்க நிறுவனமொன்றுக்கு நிலுவையாகவுள்ள காசுப் பாய்ச்சல்களுக்கும் நிறுவனம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் காசுப் பாய்ச்சல்களுக்கும் இடையிலான வேறுபாடே காசுப் பற்றாக்குறை ஆகும்.

ECL கணிப்பீட்டின் பொறிமுறைகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளதுடன் முக்கியமான கூறுகள் பின்வருமாறு:

- **PD:** கொடுக்கப்பட்ட கால எல்லையில் பணம் செலுத்தும் தவணை தவறும் சாத்தியத்தின் மதிப்பீடொன்றே தவணை தவறும் நிகழ்தகவு ஆகும். வசதியானது முன்னர் கண்டறிதலிலிருந்து நீக்கப்படாதிருந்து அத்துடன் பட்டியலில் இன்னமும் உள்ளதாயின் மதிப்பிடப்படும் காலப்பகுதியில் ஒரு நிச்சயமான காலத்தில் மாத்திரமே தவணை தவறுதல்.
- **EAD:** ஒப்பந்தம் மூலமோ அல்லது வேறு வகையிலோ அட்டவணைப்படுத்தப்பட்ட, முதல் மற்றும் வட்டி மீள்கொடுப்பனவுகள் மற்றும் கடப்பாடுடைய வசதிகள் மீது எதிர்பார்க்கப்பட்ட குறைவுகள் உள்ளடங்கலாக, அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் வெளிக்காட்டலில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களை கவனத்திற் கொண்டு, எதிர்கால தவணை தவறும் திகதியொன்றில் வெளிக்காட்டலின் மதிப்பீடே தவணை தவறுதலிலான வெளிக்காட்டலாகும்.
- **LGD:** கொடுக்கப்பட்ட காலத்தில் தவணை தவறுதல் நிகழ்கின்ற சந்தர்ப்பத்தில் எழுகின்ற நட்டத்தின் மதிப்பீடொன்றே நட்டத்தைக் கொடுக்கும் தவணை தவறுதல் ஆகும். ஒப்பந்த காசுப் பாய்ச்சல் நிலுவைக்கும் ஏதேனும் பிணையினைப் பணமாக்குதல் உள்ளடங்கலாக, கடன் வழங்கியோர் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் நிலுவைக்கும் இடையிலான வேறுபாட்டினை இது அடிப்படையாகக் கொண்டது. இது வழமையில் EAD இன் சதவீதமொன்றாக வெளிப்படுத்தப்படும்.

ECL இனை மதிப்பிடும் போது, வங்கியானது மூன்று நிலவரங்களைக் கவனத்திற் கொள்கின்றது (அடிப்படை சூழ்நிலை, சிறந்த சூழ்நிலை மற்றும் பாரதூரமான சூழ்நிலை). இந் நிலவரங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறுபட்ட நட்ட வீதங்களுடன் தொடர்புபட்டவை. சகல உற்பத்திகள் சார்பிலும், கடன் நட்டங்கள் நிர்ணயிக்கப்படுகின்ற ஆகக்கூடிய காலப்பகுதியானது நிதியியல் சாதனமொன்றின் ஒப்பந்த ஆயுட்காலம் ஆகும்.

முன்நோக்கிய தகவல்கள்

ECL மாதிரியில் வங்கியானது பொருளாதார உள்ளீடான பரந்துபட்ட வீச்சைக் கொண்ட பண்புசார்/கணியம்சார் முன்நோக்கிய தகவல்களில் தங்கியுள்ளது. அப்படிப்பட்டதாக:

கணியம் சார்ந்தவை	பண்பு சார்ந்தவை
GDP வளர்ச்சி	அரசாங்க கொள்கைகள்
பணவீக்கம்	கைத்தொழில் வியாபார அந்தஸ்து
தொழிலின்மை	ஒழுங்குறுத்துகைத்தாக்கம்
வட்டி வீதங்கள்	
செலாவணி வீதங்கள்	

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 தொடர்பில் வங்கிக்கான தாக்கமானது பொழிப்பாக்கப்பட்ட வடிவமொன்றில் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது:

தாக்கமுறும் துறை	இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் கீழான தேவைப்பாடு	இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இன் கீழான தேவைப்பாடு	சாத்தியமான தாக்கம்
நிதிச் சொத்தின் வகைப்படுத்தலும் அளவீடும்	சாதனத்தினை வைத்திருப்பதற்கும் சந்தைப்படுத்துவதற்குமான ஆற்றல் மற்றும் உத்தேசம் என்பவற்றை வகைப்படுத்தல் அடிப்படையாகக் கொண்டது. பின்வருமாறு நான்கு வகுதிகள் உள்ளன: • முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படுபவை • கடன்களும் பெறத்தக்கவைகளும் • இலாபம் அல்லது நட்டத்திற்கூடான நியாயப் பெறுமதி • விற்பனைக்குக் கிடைக்கத்தக்க தாகவுள்ளவை	நிதியியல் சாதனங்களின் பண்புகள் மற்றும் அச் சாதனங்களின் பட்டியலின் வியாபார மாதிரி என்பவற்றை வகைப்படுத்தல் அடிப்படையாகக் கொண்டது. பின்வருமாறு மூன்று வகுதிகள் உள்ளன: • காலத் தேய்மானக் கிரயம் • இலாபம் அல்லது நட்டத்திற்கூடான நியாயப் பெறுமதி • ஏனை அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்திற்கூடான நியாயப் பெறுமதி	ஏனை அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்திற் கூடான நியாயப் பெறுமதியாக உரிமைமுதல் சாதனம் வகைப்படுத்தப்படின் நியாயப் பெறுமதி மீதான ஏதேனும இலாபம்/நட்டமானது இலாபத்தில் அல்லது நட்டத்தில் கண்டறியப்படலாகாது. குறிப்பிடத்தக்க தாக்கம் எதுவுமில்லை.
நிதிப் பொறுப்புக்கள்	இரு வகுதிகள் பின்வருமாறு வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளன: • இலாபம் அல்லது நட்டத்திற்கூடான நியாயப் பெறுமதி • காலத் தேய்மானக் கிரயம்	இரு வகுதிகள் பின்வருமாறு வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளன: • இலாபம் அல்லது நட்டத்திற்கூடான நியாயப் பெறுமதி • காலத் தேய்மானக் கிரயம்	மாற்றம் எதுவுமில்லை
பெறுமதிக் குறைப்பு	ஏற்பட்ட நட்ட மாதிரி	எதிர்பார்க்கப்பட்ட நட்ட மாதிரி	• இலங்கை அபிவிருத்தி முறி (SLDB) மற்றும் கூட்டுரிமை தொகுதிக்கடன்கள் என்பன பெறுமதிக் குறைப்புக்கு உட்பட்டவை. • கடன் இடரில் குறிப்பிடத்தக்க சீர்கேட்டை கொண்டுள்ள மந்தமான செயலாற்றலை உடைய கடன்களானவை ஆயுட்காலத்தில் எதிர்பார்க்கப்படும் நட்டத்திற்காக கருத்திற் கொள்ளப்படும். • மீளப்பெற்றுக்கொள்ளப்படாத மற்றும் பயன்படுத்தப்படாத வெளிக்காட்டல்கள் பெறுமதிக் குறைப்புக்கு உட்பட்டவை. • பொருளாதாரக் காரணி சீராக்கத்திற்கூடாக முன்நோக்கிய தகவல்கள் உள்ளடக்கப்படுகின்றன.
பாதுகாப்பு கணக்கீடு	பாதுகாப்புச் சாதனத்தின் முன்னுறு விளைதிறனானது கருத்திற் கொள்ளப்படுவதுடன் பெறுபேறுகளானவை 80% - 125% வரையான வீச்சிற்குள் இருக்க வேண்டும்.	80% - 125% வரையான கணிய ரீதியான ஆரம்ப எல்லை நீக்கப்படுவதுடன் பாதுகாப்பின் விளைதிறனை கண்டறிவதற்காக பண்பு ரீதியான ஆரம்ப எல்லை பயன்படுத்தப்படுகின்றது.	தாக்கம் எதுவுமில்லை.

வங்கியானது அதன் எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டக் கணிப்பீடுகளுக்கான மாதிரிகளை மேம்படுத்தி முற்றாக்கி வருவதனாலும் வங்கியானது ஆரம்ப பிரயோகத் திகதியை உள்ளடக்கும் அதன் முதலாவது நிதிக் கூற்றுக்களை முற்றாக்கும் வரை, ஈடுபடுத்தப்படும் புதிய கணக்கீட்டுக் கொள்கைகள், எடுகோள்கள், தீர்வுகள் மற்றும் மதிப்பீட்டு நுட்பங்கள் என்பன மாற்றத்துக்கு உட்பட்டவை என்பதனாலும் நிலைமாற்றப் பணியானது இதுவரை முற்றாக்கப்பட்டிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதிகளுக்கான தாக்கத்தை மதிப்பிடுவதற்கான செய்முறையில் வங்கி உள்ளது. ஆதலால், மேற்போந்தவற்றின் கணிய ரீதியான தாக்கம் வெளிப்படுத்தப்படவில்லை. குழுமமும் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியிலுள்ளவாறு மேற்போந்தவற்றின் தாக்கத்தை கணிய ரீதியில் அளவிட்டிருக்கவில்லை.

(ii) இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் SLFRS - 15 'வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்'

வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானக் கண்டறிதலிற்கான ஐந்து படிமுறை அணுகுமுறை ஒன்றை இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 15 ஆனது அறிமுகப்படுத்துவதுடன் தற்போது ஏற்புடைய ஏனைய சகல வருமான நியமங்களையும் தொடர்புபட்ட பொருள்கோடல்களையும் (இலங்கை கணக்கீட்டு நியமம் 18 - "வருமானம்", இலங்கை கணக்கீட்டு நியமம் 11 - "நிர்மாண ஒப்பந்தங்கள்", IFRIC 13 - "வாடிக்கையாளர் விசுவாச நிகழ்ச்சித்திட்டங்கள்") பதிலீடு செய்கின்றது.

அனுமதிக்கப்பட்ட முன்கூட்டிய ஏற்றுக்கொள்ளலுடன், 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியன்று இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 15 ஆனது செயல்வலுவுக்கு வரும். எவ்வாறாயினும், குழுமமானது இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 15 இலிருந்து விளைவிக்கப்பெறும் அதன் நிதிக் கூற்றுக்கள் மீதான கணிசமான தாக்கத்தினை எதிர்பார்ப்பதில்லை.

(iii) இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் SLFRS 16 - 'குத்தகைகள்'

ஐந்தொகை மீதான நிதிக் குத்தகைகள் மற்றும் ஐந்தொகைக்குப் பின்னரான தொழிற்பாட்டுக் குத்தகைகள் ஆகியவற்றுக்கிடையில் வேறுபாட்டைக் காட்டுகின்ற குத்தகை பெற்றுக்கொள்பவர்களுக்கான தற்போதய இரட்டை கணக்கீட்டு மாதிரியினை இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 16 ஆனது நீக்குகின்றது. பதிலாக, தற்போதய நிதிக் குத்தகை கணக்கீட்டுக்கு ஒத்ததான ஐந்தொகை மீதான தனித்த கணக்கீட்டு மாதிரியொன்று காணப்படும். இந் நியமமானது இலங்கை கணக்கீட்டு நியமம் 17 - "குத்தகைகள்", IFRIC 4 - "ஏற்பாடொன்று குத்தகையொன்றை உள்ளடக்குகின்றதா என்பது பற்றி நிர்ணயித்தல்", SIC 15 - "தொழிற்பாட்டுக் குத்தகைகள்-ஊக்குவிப்புகள்" மற்றும் SIC 27 - "குத்தகையொன்றின் சட்ட வடிவத்தை உள்ளடக்கும் கொடுக்கல் வாங்கல்களின் முதன்மையான விடயத்தை மதிப்பிடுதல்" என்பவற்றுக்கு பதிலீடு செய்யப்படும்.

2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பிக்கும் வருடாந்த காலப்பகுதிகளுக்காக இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 16 ஆனது செயல்வலுப்பெறும். குழுமமானது இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 16 இன் பிரயோகத்திலிருந்து விளைவிக்கப்பெறும் அதன் நிதிக் கூற்றுக்கள் மீதான சாத்தியமான தாக்கத்தினை மதிப்பிட்டு வருகின்றது.

7 மொத்த வருமானம்

கணக்கீட்டுக் கொள்கை

பொருளாதார நலன்கள் வங்கிக்கு/குழுமத்துக்கு வருகின்ற விதத்திலும் அவற்றின் சாத்தியக் கூறுகளின் அடிப்படையிலும் இனங்காணப்பட்டு வருவாயானது நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாகவுள்ளது.

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2017 ரூபா '000	2016 ரூபா '000	2017 ரூபா '000	2016 ரூபா '000
வட்டி வருமானம் (குறிப்பு 8.1)	171,343,888	134,685,338	177,746,357	139,701,569
கட்டணம் மற்றும் தரகு வருமானம் (குறிப்பு 9.1)	9,178,655	8,739,625	9,436,780	8,983,083
வியாபாரத்திலிருந்தான தேறிய இலாபம்/(நட்டம்) (குறிப்பு 10)	2,802,048	2,061,616	2,822,168	2,037,390
நிதியியல் முதலீடுகளிலிருந்தான தேறிய இலாபம்/(நட்டம்) (குறிப்பு 11)	905,527	273,881	925,733	312,273
ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (குறிப்பு 12)	4,981,277	8,360,912	6,081,923	8,666,910
மொத்த வருமானம்	**189,211,395**	**154,121,372**	**197,012,961**	**159,701,225**

8 தேறிய வட்டி வருமானம்

கணக்கீட்டுக் கொள்கை

வட்டி வருமானம் மற்றும் வட்டிச் செலவினங்கள் பயனுறு வட்டி வீதத்தைப் பாவித்து இலாப நட்டக் கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

இலாப நட்டக் கூற்றில் காட்டப்பட்டுள்ள வட்டி வருமானம் மற்றும் செலவுகள் பின்வருவனவற்றிலிருந்தான வட்டியை உள்ளடக்குகின்றன:

- காலத்தேய்மானச் செலவில் கணிக்கப்பட்ட நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்
- வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்படுள்ள நிதியியல் சாதனங்கள்
- விற்பனைக்கு கிடைக்கத்தக்கவையாக வகைப்படத்தப்பட்ட நிதியியல் முதலீடுகள்

பயனுறுவட்டி வீதம் (EIR)
பயனுறு வட்டிவீதமென்பது, நிதியியல் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் (அல்லது பொருத்தமானவிடத்து, குறுங்காலமொன்று) எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலத்தினூடாக நிதியியல் சொத்து மற்றும் பொறுப்பில் கொண்டிருக்கும் தொகைக்கு மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுக் கொடுப்பனவுகள் மற்றும் பெறுகைகளை மீளச்சரியாக கழிவிடுகின்ற ஒரு வீதமாகும். பயனுறு வட்டிவீதத்தினைக் கணிக்கும் பொழுது குழுமமானது நிதியியல் சாதனங்களின் அனைத்து ஒப்பந்த ரீதியான நியமங்களையும் பரிசீலனையில் கொண்டு எதிர்கால காசுப்பாய்ச்சலை மதிப்பிடுகின்றது.

பயனுறுவட்டி வீதக்கணிப்புக்கள், நிதியியல் சொத்துக்களின் கொள்வனவின் மீதான ஏதாவது கழிவு அல்லது தவணைக் கட்டணத்தினையும் பயனுறுவட்டி வீதத்தின் முக்கியமானதொரு பகுதியாக விளங்கும் செலுத்தப்பட்ட அல்லது பெறப்பட்ட அனைத்துக் கட்டணங்களையும் கொடுக்கல் வாங்கல் செலவுகளையும் உள்ளடக்குகிறது. அதிகரிப்புச் செலவுகளை உள்ளடக்கிய கொடுக்கல் வாங்கல் செலவுகள் நேரடியாகக் கொள்வனவு அல்லது நிதியியல் சொத்துக்களின் அல்லது பொறுப்புக்களின் வழங்கலில் சேர்க்கப்படுகின்றன.

கடன் பெறுமதி குறைக்கப்பட்ட நிதியியல் சொத்துக்களுக்கான கடன் சீராக்கம் செய்யப்பட்ட பயனுறு வட்டி வீதமானது மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சல்களைப் பயன்படுத்தி கணிப்பிடப்படுகின்றது.

8.1 வட்டி வருமானம்

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2017 ரூபா '000	2016 ரூபா '000	2017 ரூபா '000	2016 ரூபா '000
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	716,983	464,027	794,400	560,812
வங்கிகளில் வைத்திருக்கப்படுபவை	623,881	580,833	688,805	646,813
மீள் விற்பனை உடன்படிக்கையின்கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	1,082,293	561,823	1,059,185	615,444
நிதியியல் சாதனங்கள் - வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்டவை	585,342	428,314	586,073	428,314
நிதியியல் முதலீடுகள் - கடன்களும் பெறத்தக்கவைகளும்	11,540,713	11,807,028	11,661,827	11,847,619
வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள்	124,890,681	93,898,806	130,663,714	98,376,809
நிதியியல் முதலீடுகள் - விற்பனைக்கு கிடைக்கத்தக்கவை	754,802	151,785	996,946	342,840
நிதியியல் முதலீடுகள் - முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படுபவை	31,149,193	26,792,722	31,295,407	26,882,918
மொத்த வட்டி வருமானம்	**171,343,888**	**134,685,338**	**177,746,357**	**139,701,569**

2017 ஆம் ஆண்டுக்கான வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான வட்டிவருமானம் பெறுமதி குறைக்கப்பட்ட கடன்களுக்கான வட்டி ரூபா 1,258.7 மில்லியனையும் உள்ளடக்கியுள்ளது (2016 இல் ரூபா 441.5 மில்லியன்).

8.2 வட்டிச்செலவுகள்

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2017 ரூபா '000	2016 ரூபா '000	2017 ரூபா '000	2016 ரூபா '000
வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை	30,262	11,607	33,853	262,192
மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்	5,464,801	6,521,994	5,495,603	6,559,119
வாடிக்கையாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை	92,229,110	57,907,175	94,518,371	59,437,884
ஏனைய கடன்பாடுகள்	10,249,478	11,716,862	10,510,630	11,663,625
வழங்கப்பட்ட கடன் பிணையங்கள்	399,087	1,365,604	1,147,939	2,026,725
இரண்டாந்தர தவணைக் கடன்கள்	4,614,958	3,204,608	4,549,859	3,145,532
மொத்த வட்டிச் செலவு	**112,987,696**	**80,727,850**	**116,256,255**	**83,095,077**
தேறிய வட்டி வருமானம்	**58,356,192**	**53,957,488**	**61,490,102**	**56,606,492**

8.3 இலங்கை அரச பிணையங்களிலிருந்தான தேறிய வட்டி வருமானம்

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2017 ரூபா '000	2016 ரூபா '000	2017 ரூபா '000	2016 ரூபா '000
வட்டி வருமானம்	32,623,129	27,710,618	32,823,130	27,905,965
கழி: வட்டிச் செலவு	5,464,801	6,521,994	5,495,603	6,559,119
இலங்கை அரச பிணையங்களிலிருந்தான தேறிய வட்டி வருமானம்	27,158,328	21,188,624	27,327,527	21,346,846

8.4 இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான கற்பித வரிச்சலுகை

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 137 ஆம் பிரிவின் நியதிகளுக்கும் அவற்றுக்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்குமிணங்க, அரச பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து வட்டி வருமானப் பெறுமதிகளைப் பெற்ற கம்பனியொன்று அத்தகைய வட்டி வருமான மதிப்பீட்டிற்காக கம்பனியின் நியதிச் சட்ட வருமானத்தின் பாகமொன்றினை உருவாக்கக்கூடியதாக இருக்குமிடத்து கற்பித வரி வரவுகளைப் பெறுவதற்கு (தேறிய வட்டி வருமானத்தில் ஒன்பதிலொரு (1/9) பங்கினைப் பெறுவதற்கு) உரித்துடையதாகும். இதன்படி, ஆண்டிற்கான அரச பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் மீது வங்கிகளினாலும் மற்றும் குழுமங்களினாலும் ஈட்டப்பட்ட தேறிய வட்டி வருமானம் நிதியியல் கூற்றுக்களில் மொத்தமாக சேர்க்கப்பட்டதுடன் இது வங்கிக்கு ரூபா 2,165.0 மில்லியன் வரிச் சலுகையினையும் (2016 இல் ரூபா 1,844.3 மில்லியன்) குழுமத்திற்கு ரூபா 2,206.4 மில்லியனையும் (2016 இல் ரூபா 1,893.6 மில்லியன்) கொண்ட கற்பிதவரிச் சலுகைகளைத் தோற்றுவித்தன.

9 தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்

கணக்கீட்டுக் கொள்கை

கட்டணம் மற்றும் தரகு வருமானம் குழுவால் வழங்கப்படும் பல்வேறு வகைப்பட்ட பணிகளிலிருந்து பெறப்பட்ட கட்டணம் மற்றும் தரகு வருமானத்தைக் கொண்டிருக்கின்றது. இவற்றை பின்வரும் இரண்டு முக்கிய பிரிவுகளாக பிரிக்கலாம்.

(i) **குறிப்பிட்ட காலப்பகுதிக்கு வழங்கப்படுகின்ற பணிகளிலிருந்து ஈட்டப்படும் கட்டணம் மற்றும் தரகு வருமானம்**
குறிப்பிட்ட நேரகாலப்பகுதியில் பணிகளின் வழங்கலுக்காக ஈட்டப்படும் கட்டணம் அக்காலப்பகுதியில் ஒன்று சேர்ந்ததாக இருக்கிறது. இக்கட்டணமானது தரகு வருமானம் மற்றும் தனியார் நலம் மற்றும் சொத்து முகாமைத்துவ கட்டணம், கட்டுக்காப்பு மற்றும் ஏனைய முகாமைத்துவ மற்றும் மதியுரைக் கட்டணம் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

(ii) **பரிமாற்றுச் சேவைகளுக்கும் குறிப்பிட்ட சட்டத்தை அமுல்படுத்துவதிலிருந்து ஈட்டப்படும் கட்டணம் மற்றும் தரகு வருமானம்**
கொடுக்கல் வாங்கல் பணிகளின் வழங்கலிலிருந்தான தரகு மற்றும் கட்டண வருமானம் ஒரு பேரம்பேசலிலிலிருந்து அல்லது பேரம்பேசலில் பங்குபற்றுவதால் ஈட்டப்படுகின்றது. பங்குகளின் அல்லது ஏனைய பிணையங்களின் கொள்வனவு ஒழுங்குகள் அல்லது வியாபாரங்களின் விற்பனை போன்ற மூன்றாந் தரப்பினருக்கான கொடுக்கல் வாங்கல்களின் பேரம் பேச்சுக்கள் அல்லது பேரம் பேச்சுக்களில் பங்கேற்றல் என்பனவற்றிலிருந்து கிடைக்கின்ற கட்டணம் குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் நிறைவடைந்ததும் அங்கீகரிக்கப்படுகின்றன. கட்டணம் அல்லது குறிப்பிட்ட செயலாற்றத்துடன் தொடர்புபட்ட கட்டணத்தின் கூறுகள், தொடர்புடைய பிரமாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அங்கீகரிக்கப்படுகின்றன.

கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான கட்டணம் மற்றும் தரகு செலவீனங்கள் சேவைகள் பெறப்படும் போதே செலவு செய்யப்படுகின்றது. இவை அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

9.1 கட்டணம் மற்றும் தரகு வருமானம்

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2017 ரூபா '000	2016 ரூபா '000	2017 ரூபா '000	2016 ரூபா '000
வியாபாரச் சேவைகள்	2,017,427	1,925,657	2,157,147	1,966,365
வரவு மற்றும் கடன் அட்டைகள்	2,646,648	2,061,285	2,646,648	2,061,285
பயணம் மற்றும் பண அனுப்புதல்கள் சேவைகள்	916,007	833,768	916,007	833,768
கட்டுக்காப்புப் பணிகள்	65,514	57,183	65,514	57,183
சில்லறை வங்கியியல் சேவைகள்	2,107,808	2,212,222	2,117,176	2,212,222
உத்தரவாதங்களும் அவை தொடர்பான சேவைகளும்	1,220,235	1,313,247	1,221,301	1,314,382
ஏனைய நிதிச் சேவைகள்	205,016	336,263	312,987	537,878
மொத்த கட்டணம் மற்றும் தரகு வருமானம்	**9,178,655**	**8,739,625**	**9,436,780**	**8,983,083**

9.2 கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள்

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2017 ரூபா '000	2016 ரூபா '000	2017 ரூபா '000	2016 ரூபா '000
வியாபாரச் சேவைகள்	95,306	79,710	95,306	79,710
வரவு மற்றும் கடன் அட்டைகள்	1,448,287	1,100,633	1,448,287	1,100,633
பயணம் மற்றும் பண அனுப்புதல்கள் சேவைகள்	105,762	93,857	105,762	93,857
சில்லறை வங்கியியல் சேவைகள்	216,860	221,193	227,999	221,193
உத்தரவாதங்களும் அவை தொடர்பான சேவைகளும்	8,562	9,241	8,562	9,241
ஏனைய நிதிச் சேவைகள்	8,525	15,556	86,458	102,637
மொத்த கட்டணம் மற்றும் தரகுச் செலவினம்	**1,883,302**	**1,520,190**	**1,972,374**	**1,607,271**
தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்	**7,295,353**	**7,219,435**	**7,464,406**	**7,375,812**

10 வியாபாரத்திலிருந்தான தேறிய இலாபம்/(நட்டங்கள்)

கணக்கீட்டுக் கொள்கை

வியாபாரத்தில் இருந்தான தேறிய இலாபம்/(நட்டம்) ஆனது உரிமை மூலதனம் மற்றும் வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருப்பவை என வகைப்படுத்தப்பட்ட நிலையான வருமான பிணையங்களில் முதலீடு செய்தவற்றில் இருந்தான தீர்க்கப்பட்ட இலாபம் அல்லது நட்டங்கள் மற்றும் அத்தகைய உபகரணங்களின் நியாயப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக ஏற்படும் தீர்க்கப்படாத இலாபங்கள் அல்லது நட்டங்கள், வியாபார நடவடிக்கைகளிலிருந்து உருவாகின்ற வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் அல்லது நட்டங்கள், வர்த்தகப்படுத்தலுக்கான உரிமை மூலதனம் மீதான பங்குலாப வருமானம் மற்றும் பெறுதி நிதியியல் சாதனங்களின் நியாயப்பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக உருவாகும் இலாபம் அல்லது நட்டங்களை உள்ளடக்கியுள்ளது.

குழுவின் பங்குலாபத்தைப் பெறுவதற்கான உரிமை நிறுவப்படுகின்ற வேளையில் பங்குலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2017 ரூபா '000	2016 ரூபா '000	2017 ரூபா '000	2016 ரூபா '000
அந்நியச் செலாவணி பரிமாற்றம்				
வங்கிகளிலிருந்து	1,479	6,959	20,403	24,561
ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து	2,709,355	2,075,002	2,721,536	2,086,767
அரச பிணையங்கள்				
பிணையங்களின் சந்தைப்படியான குறிக்கப்பட்ட பெறுமதியின் மீதான இலாபம்/(நட்டம்)	75,448	1,865	75,448	1,865
பிணையங்களின் விற்பனையிலிருந்தான இலாபம்/(நட்டம்)	48,276	405,122	48,276	405,122
உரிமையாண்மை				
சந்தைப்படியான குறிக்கப்பட்ட பெறுமதியின் மீதான இலாபம்/(நட்டம்)	(174,510)	(560,428)	(170,717)	(587,115)
உரிமை மூலதனத்தின் விற்பனையிலிருந்தான இலாபம்/(நட்டம்)	30,217	19,422	7,008	(20,611)
பங்கிலாப வருமானம்	111,783	113,674	120,214	126,801
வியாபாரத்திலிருந்தான தேறிய இலாபம்/(நட்டங்கள்)	**2,802,048**	**2,061,616**	**2,822,168**	**2,037,390**

11 நிதியியல் முதலீடுகளிலிருந்தான தேறிய இலாபம்/(நட்டங்கள்)

கணக்கீட்டுக் கொள்கை

நிதியியல் முதலீடுகளில் இருந்தான இலாபம்/நட்டம் ஆனது விற்பனை மூலம் கிடைத்த இலாபம் அல்லது நட்டம் மற்றும் விற்பனைக்கு கிடைக்கத்தக்கவை என வகைப்படுத்தப்பட்ட நிதியியல் முதலீடுகளில் இருந்தான பங்குலாப வருமானம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. குழுவுக்கு பங்குலாபத்தை பெறுவதற்கான உரிமை நிறுவப்படுகின்ற வேளையில் பங்குலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2017 ரூபா '000	2016 ரூபா '000	2017 ரூபா '000	2016 ரூபா '000
நிதியியல் முதலீடுகள் - விற்பனைக்கு கிடைக்கத்தக்கவை				
அரச பிணையங்களின் விற்பனையிலிருந்தான இலாபம்/(நட்டங்கள்)	332,937	107,708	332,937	107,708
பங்கிலாப வருமானம்	572,590	166,173	592,796	204,565
நிதியியல் முதலீடுகளிலிருந்தான தேறிய இலாபம்/(நட்டங்கள்)	**905,527**	**273,881**	**925,733**	**312,273**

12 ஏனைய தொழிற்பாட்டு வருமானம்

கணக்கீட்டுக் கொள்கை

துணை மற்றும் கூட்டு நிறுவனங்களிலிருந்தான பங்குலாப வருமானம்
வங்கிக்கு பங்குலாபத்தை பெறுவதற்கான உரிமை நிறுவப்படுகின்ற வேளையில் துணை மற்றும் கூட்டு நிறுவனங்களிலிருந்தான பங்குலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

நிதியல்லா சொத்துக்களின் விற்பனையிலிருந்தான இலாபம்/(நட்டங்கள்)
ஆதனம், பொறி உபகரணங்கள் மற்றும் துணை மற்றும் கூட்டுக் கம்பனிகளில் முதலீடு செய்தவை அடங்கலாக ஏனைய நடைமுறையல்லா சொத்துக்களின் விற்பனை மீதான தேறிய இலாபம் அல்லது நட்டமானது அத்தகைய சொத்துக்களின் கொண்டிருக்கும் பெறுமதி மற்றும் விற்பனை தொடர்பான செலவுகளை விற்பனை தொகையிலிருந்து கழித்தபின் இலாப நட்டக்கூற்றில் பதியப்படுகின்றது.

வெளிநாட்டு நாணய மீள்மதிப்பீட்டு இலாபம்/(நட்டங்கள்)
வெளிநாட்டு நாணய நிலைகள் ஒவ்வொரு அறிகையிடல் திகதியிலும் மீள்மதிப்பீடு செய்யப்படுகின்றது. உண்மைப்பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக உருவாகும் இலாபங்கள்/(நட்டங்கள்) அக்காலத்துக்குரிய இலாப நட்டக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

வாடகை வருமானம்
வாடகை வருமானம் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது. இது வங்கி வளாகங்கள், விடுதிகள், பாதுகாப்பு வைப்புப்பெட்டிகள் போன்றவற்றிலிருந்து அறவிடப்பட்ட வாடகையையும் வங்கி வளாகங்களில் இருந்தான குத்தகை வாடகை போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது.

சேவை வருமானம்
சேவை வருமானம் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது. இது குத்தகை மற்றும் கடன்களிலிருந்து அறவிடப்பட்ட ஆவணப்படுத்தல் கட்டணம், இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் (CRIB) கட்டணம், சட்ட அறவீடுகள், தொடர்பாளர் வங்கிச்சேவை கட்டணங்கள் மற்றும் தானியங்கி காசோலை தீர்வைகள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது.

மொத்தக் காப்புறுதிக் கட்டணம்
தற்றுணிபு பங்கேற்புப் பண்புகளுடனான ஆயுள் மற்றும் முதலீட்டு ஒப்பந்தங்கள் மீதான மொத்த மீண்டெழும் கட்டுப்பணங்கள் பூட்கையாளர்களிடமிருந்து பெறத்தக்கவையாக இருக்கும் பொழுது வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றன. தனியொரு கட்டுப்பண தொழிலினைப் பொறுத்தவரை வருமானமானது பூட்கை நடைமுறைக்கு வருகின்ற திகதியன்று அங்கீகரிக்கப்படுகிறது.

மொத்த பொதுக்காப்புறுதி பதிவுக்கட்டுப் பணமானது கணக்கீட்டுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களினால் வழங்கப்பட்ட காலப்பகுதி முழுவதற்குமாகப் பெறப்பட்ட மொத்தக்கட்டுப் பணத்தினையும் உள்ளடக்கியிருந்ததுடன் பூட்கை ஆரம்பமான திகதியிலிருந்து அங்கீகரிக்கப்பட்டது.

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2017 ரூபா '000	2016 ரூபா '000	2017 ரூபா '000	2016 ரூபா '000
துணை மற்றும் கூட்டுக் கம்பனிகளிலிருந்தான பங்கிலாப வருமானம்	76,680	1,102,158	–	–
நிதியல்லா சொத்துக்களின் விற்பனையிலிருந்தான இலாபம்*	–	3,130,000	–	2,378,666
அந்நியச் செலாவணி மீள்மதிப்பீட்டு இலாபம்/(நட்டம்)	701,621	1,069,579	701,621	1,069,579
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை மீதான இலாபம்/(நட்டம்)	55,105	51,643	59,399	87,249
பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களின் விற்பனை மூலம் பெற்ற இலாபம்/(நட்டம்)	70,866	19,052	70,866	19,052
வாடகை வருமானம்	250,454	231,326	329,905	298,791
சேவை வருமானம்	2,043,604	2,143,545	2,403,599	2,611,013
தங்கப்பாளம் விற்பனையிலிருந்தான இலாபம்	15,342	13,025	15,342	13,025
சில்லறை வருமானம்	1,554,635	448,187	1,656,118	797,373
மொத்தக் காப்புறுதிக் கட்டணம்	–	–	632,103	1,239,765
இஸ்லாமிய வங்கித்தொழிலிலிருந்தான தேறிய வருமானம் (குறிப்பு 12.1)	212,970	152,397	212,970	152,397
மொத்த ஏனைய தொழிற்பாட்டு வருமானம்	**4,981,277**	**8,360,912**	**6,081,923**	**8,666,910**

*நிதியல்லா சொத்துக்களின் விற்பனையிலிருந்தான இலாபமானது வங்கியின் கூட்டுக் கம்பனிகளில் ஒன்றான மிரேக்கா கப்பிற்றல் லான்ட் (பிரைவேட்) லிமிடெட் இன் விற்பனையில் இருந்தான இலாபத்தை உள்ளடக்கியுள்ளது.

12.1 இஸ்லாமிய வங்கித் தொழிலிலிருந்தான தேறிய வருமானம்

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி/குழுமம்	
	2017 ரூபா '000	2016 ரூபா '000
இஸ்லாமிய வங்கியியல் தொழிற்பாடுகளிலிலிருந்தான வருமானம்	364,126	252,846
கழி: முதலீட்டாளர்களுக்குச் செலுத்தப்பட்ட இலாபம்	151,156	100,449
இஸ்லாமிய வங்கித்தொழிலிலிருந்தான தேறிய வருமானம்	**212,970**	**152,397**

13 கடன்கள் மற்றும் ஏனைய இழப்புக்களுக்கான பெறுமதி குறைப்பு விதிப்பனவு/(மாற்றுப்பதிவு)

கணக்கீட்டுக் கொள்கை

வங்கி மற்றும் குழுமமானது "நிதியியல் சாதனங்கள் அங்கீகரித்தலும் அளவிடுதலும்" மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 39 இன் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான பெறுமதி குறைப்பு மதிப்பீட்டில் ஏற்படும் மாற்றங்களை அங்கீகரிக்கின்றது. விபரங்கள் வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் (குறிப்பு 27) கீழ் காட்டப்பட்டுள்ளது. மேலும் வங்கி/குழுமம் ஆனது ஒரு நிதியல்லா சொத்தின் மதிப்பிடப்பட்ட அறவீட்டு தொகையை விட கொண்டிருக்கும் பெறுமதி அதிகரிக்கும்போது ஏற்படும் பெறுமதி குறைப்பு நட்டத்தை "சொத்துக்களின் பெறுமதி குறைப்பு" மீதான இலங்கை கணக்கீட்டு நியமனம் LKAS 36 இன் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2017 ரூபா '000	2016 ரூபா '000	2017 ரூபா '000	2016 ரூபா '000
கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான தேறிய பெறுமதி குறைப்பு விதிப்பனவு/ (மாற்றுப்பதிவு) (குறிப்பு 13.1)	9,640,658	4,396,761	9,884,889	4,421,000
ஏனைய முதலீடுகளுக்கான தேறிய பெறுமதி குறைப்பு விதிப்பனவு/ (மாற்றுப்பதிவு) (குறிப்பு 30.2)	(300,000)	–	–	–
கடன்கள் மற்றும் ஏனைய இழப்புக்களுக்கான பெறுமதி குறைப்பு விதிப்பனவு/ (மாற்றுப்பதிவு)	**9,340,658**	**4,396,761**	**9,884,889**	**4,421,000**

13.1 கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான தேறிய பெறுமதி குறைப்பு விதிப்பனவு/(மாற்றுப்பதிவு)

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2017 ரூபா '000	2016 ரூபா '000	2017 ரூபா '000	2016 ரூபா '000
கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான தனித்த கடன் இழப்பு (குறிப்பு 13.1.1)	9,631,746	6,685,680	9,676,575	6,765,378
கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான கூட்டுக் கடன் இழப்பு விதிப்பனவு/(மாற்றுப்பதிவு)	8,912	(2,288,919)	208,314	(2,344,378)
கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான தேறிய பெறுமதி குறைப்பு விதிப்பனவு/(மாற்றுப்பதிவு)	**9,640,658**	**4,396,761**	**9,884,889**	**4,421,000**

13.1.1 கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான தனிப்பட்ட விதிப்பனவு

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2017 ரூபா '000	2016 ரூபா '000	2017 ரூபா '000	2016 ரூபா '000
ஆண்டுக் காலப்பகுதிக்கான பெறுமதி குறைப்பு விதிப்பனவு	11,713,536	9,209,538	11,758,365	9,289,236
கழி: ஆண்டுக் காலப்பகுதியில் மீளப்பதிவு செய்யப்பட்ட/மீள் அறவீடு செய்யப்பட்ட தொகை	2,081,790	2,523,858	2,081,790	2,523,858
ஆண்டுக் காலப்பகுதிக்கான தனியாள் கடன் இழப்புக்களுக்கான தேறிய விதிப்பனவு/(மாற்றுப்பதிவு)	**9,631,746**	**6,685,680**	**9,676,575**	**6,765,378**

14 ஆளணிச் செலவுகள்

கணக்கீட்டுக் கொள்கை

ஆளணிச் செலவுகள், ஊழியர் சம்பளம், நிச்சயிக்கப்பட்ட பங்களிப்பு/அனுகூலத்திட்டங்களுக்கான பங்களிப்புகள் மற்றும் ஏனைய ஊழியர் தொடர்புடைய செலவுகளை உள்ளடக்கியுள்ளது. குறுங்கால ஊழியர் அனுகூல கடப்பாடுகள் கழிவிடல் இல்லா அடிப்படையில் கணிக்கப்பட்டு தொடர்பான சேவைகளை வழங்கும் போது செலவு செய்யப்படுகின்றது. ஊழியரினால் முன்னைய சேவைகள் வழங்கியது மற்றும் கடப்பாடுகள் நம்பிக்கையான முறையில் மதிப்பிடக்கூடியதுமான தொகையினை குழுவானது தற்போதைய சட்டரீதியாக அல்லது வேறேதும் வலுவான கடப்பாடுகளினால் செலுத்தவேண்டி இருப்பின் எதிர்பார்க்கப்படுகின்ற கொடுப்பனவு தொகைக்கு குறுங்காலக் காசு மிகைஊதியத்தின் கீழ் ஒரு பொறுப்பு அங்கீகரிக்கப்படுகின்றது.

உள்ளக மற்றும் வெளியக நியதிச்சட்டங்கள் மற்றும் ஏனைய ஒழுங்குபடுத்தல்களுக்கு அமைவாக ஊழியர்கள் நிச்சயிக்கப்பட்ட பங்களிப்பு/அனுகூலத் திட்டங்களுக்கு பங்களிப்பு செய்ய தகுதியுடையவர்களாகிறார்கள்.

"ஊழியர் நன்மைகள்" மீதான இலங்கை கணக்கீட்டு நியமங்கள் LKAS 19 இன் நியதிகளின்படி விதந்துரைக்கப்பட்ட ஆயுள் மதிப்பீட்டு முறையின் அடிப்படையில் நிச்சயிக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களுக்கான பங்களிப்புகள் மற்றும் ஒன்றுசேரும் விடுமுறைகளுக்கான ஏற்பாடுகள் என்பன இலாப நட்டக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2017 ரூபா '000	2016 ரூபா '000	2017 ரூபா '000	2016 ரூபா '000
ஊழியர் சம்பளம்	13,142,117	12,679,264	14,335,669	13,888,137
நிச்சயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்கான பங்களிப்புக்கள் (குறிப்பு 14.1)	1,032,383	1,043,376	1,167,164	1,170,963
நிச்சயிக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களுக்கான பங்களிப்புக்கள் (குறிப்பு 14.2)	495,125	1,188,793	562,159	1,250,027
ஏனைய ஆளணிச் செலவினங்கள்	2,326,551	1,932,998	2,658,558	2,100,202
மொத்த ஆளணிச் செலவுகள்	**16,996,176**	**16,844,431**	**18,723,550**	**18,409,329**

14.1 நிச்சயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்கான பங்களிப்புக்கள்

நிச்சயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமானது தொழில் நிலைக்குப் பின்னைய நன்மைகள் திட்டமாகும். இதன் கீழ், நிறுவனமொன்று வேறொரு நிறுவனத்திற்கு நிலையான பங்களிப்புக்களைச் செலுத்துவதுடன், மேலும் தொகைகளை செலுத்துவதற்கு சட்டரீதியான அல்லது வேறேதும் வலுவான கடப்பாடுகளையும் கொண்டிருக்காது. வழங்கப்பட்ட பணிகள் தொடர்பில் அறிக்கையிடும் காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னதாக செலுத்தப்பட வேண்டியனவாகவுள்ளபொழுது, நிர்ணயம் செய்யப்பட்ட பங்களிப்புத்திட்டங்களுக்கான பங்களிப்புக் கடப்பாடுகள் இலாப நட்டக்கூற்றில் செலவொன்றாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. முற்கொடுப்பனவுப் பங்களிப்புக்கள், காசு மீளளிப்பு அல்லது எதிர்காலக் கொடுப்பனவுகளில் ஒரு கழிப்பனவாகக் கிடைக்கத்தக்கதாகவுள்ள அளவிற்கேற்ப சொத்தொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றது. அறிக்கையிடும் காலம் முடிவடைந்த பின்னர் ஊழியர்கள் பணியாற்றிய 12 மாதங்களுக்கும் கூடுதலான மாதங்களுக்கு வரவேண்டிய நிர்ணயம் செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டத்திற்கான பங்களிப்புக்கள் அறிக்கையிடும் திகதியன்றுள்ள அவற்றின் தற்போதைய பெறுமதிக்கு கழிவிடப்பட்டன.

இலங்கை வங்கி சேமலாப நிதியம்

வங்கியின் அனைத்து ஊழியர்களும் இலங்கை வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களாவர். இந்நிதியத்திற்கு ஊழியர்களின் மாதாந்த மொத்தச் சம்பளத்தில் 12 சதவீதத்தினை வங்கி பங்களிப்புச் செய்யும் அதேவேளையில் ஊழியர்கள் 8 சதவீதத்தினை பங்களிப்புச் செய்கின்றனர். வங்கியின் சேமலாப நிதியம் ஒப்புதலளிக்கப்பட்ட நிதியமாக விளங்குவதுடன் இது சுயாதீனமாக நிருவகிக்கப்படுகின்றது.

ஊழியர் சேமலாப நிதியம்

1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தினதும் அதன் திருத்தங்களினதும் நியதிகளின்படி துணைக்கம்பனிகளும் அவற்றின் ஒவ்வொரு ஊழியர்களும் (இலங்கை வங்கியும் அதன் ஊழியர்களும் நீங்கலாக) மாதாந்த மொத்தச் சம்பளத்தில் முறையே 12 சதவீதப் பங்களிப்பினையும் (புறொப்பட்டி டிவலப்மென்ட் பிஎல்சி 15 சதவீதத்தினைச் செலுத்துகிறது) 8 சதவீதத்தினையும் (புறப்பட்டி டிவெலப்மென்ட் பிஎல்சி இன் ஊழியர்களால் 10 சதவீத பங்களிப்பு) செலுத்துகின்றனர். இது தொடர்பான நிதியம் இலங்கை மத்திய வங்கியால் முகாமை செய்யப்படுகின்றது.

ஊழியர் நம்பிக்கை நிதியம்

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைச் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க வங்கியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் அனைத்து ஊழியர்களும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் உறுப்பினர்களாவர். இதற்கு வங்கி மற்றும் குழுமம் ஊழியர்களின் மாதாந்த மொத்தச் சம்பளத்தில் 3 சதவீதத்தினைப் பங்களிக்கின்றது.

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2017 ரூபா '000	2016 ரூபா '000	2017 ரூபா '000	2016 ரூபா '000
பின்வருவனவற்றிற்கான தொழில்தருநர்களின் பங்களிப்புக்கள்:				
இலங்கை வங்கி ஊழியர் சேமலாப நிதியம்	827,212	836,910	938,876	939,617
ஊழியர் நம்பிக்கை நிதியம்	205,171	206,466	228,288	231,346
நிச்சயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்கான மொத்தப் பங்களிப்புக்கள்	**1,032,383**	**1,043,376**	**1,167,164**	**1,170,963**

14.2 நிச்சயிக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களுக்கான பங்களிப்புக்கள்

நிச்சயிக்கப்பட்ட அனுகூலத் திட்டமானது, நிச்சயிக்கப்பட்ட பங்களிப்புத்திட்டம் தவிர்ந்த ஒரு தொழில் நிலைக்குப் பின்னரான நன்மைகள் திட்டமாக விளங்குகின்றது. நிச்சயிக்கப்பட்ட அனுகூலத் திட்டங்கள் தொடர்பாக குழுமத்தின் தேறிய கடப்பாட்டுத் தொகை ஒவ்வொரு திட்டத்திற்கும் வெவ்வேறாக எதிர்கால நன்மைகளின் தொகையினை, அதாவது ஊழியர்கள் அவர்களது நடப்பு மற்றும் கடந்த காலங்களில் அவர்களின் பணிக்குப் பதிலாக ஈட்டிய தொகை மற்றும் அதன் தற்போதைய பெறுமதியினை நிர்ணயிப்பதற்காக அந்நன்மைகளைக் கழித்து அதன் பின்னர் ஏதேனும் திட்டத்தினது சொத்துக்களின் நியாயப் பெறுமதியினைக் கழிப்பதன் மூலம் மதிப்பிடப்படுகின்றது. கழிவிடல் வீதம் என்பது குழுமத்தின் கடப்பாடுகள் ஏறத்தாழ முதிர்ச்சியடைகின்ற திகதியில் உண்மையாகப் பயன்படுத்தப்படுகின்ற கழிவிடல் வீதத்திற்கான நீண்டகால திறைசேரிமுறி வீதத்திற்கான அறிக்கையிடல் திகதியிலுள்ள வீதம் எனப்படுகிறது. இக்கணிப்பீடானது தகைமை பெற்ற ஆயுள் கணிப்பீட்டாளரினால் உத்தேசிக்கப்பட்ட அலகுகடன் முறையினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகிறது.

குழுமமானது நிச்சயிக்கப்பட்ட அனுகூலத்திட்டத்திலிருந்து தோன்றுகின்ற அனைத்து ஆயுள் கணிப்பு ரீதியான இலாபம் மற்றும் நட்டத்தினை ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்திலும், நிச்சயிக்கப்பட்ட அனுகூலத்திட்டங்களுடன் தொடர்பான செலவுகளை தனியாள் செலவுகளின் கீழான வருமானக் கூற்றிலும் அங்கீகரிக்கின்றது. நிச்சயிக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களின் விபரங்கள் "ஊழியர் ஓய்வூதிய அனுகூலத் திட்டத்தில்" காட்டப்படுள்ளது (குறிப்பு 46).

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2017 ரூபா '000	2016 ரூபா '000	2017 ரூபா '000	2016 ரூபா '000
பின்வருவனவற்றிற்கான தொழில்தருநர்களின் பங்களிப்புக்கள்:				
இலங்கை வங்கி ஓய்வூதிய நம்பிக்கை நிதியம் (குறிப்பு 46.1.1)	936,596	619,988	936,596	619,988
திறைசேறிப் பிரிவு முதிர்ச்சி இடைவெளிப் பகுப்பாய்வை மாதாந்த அடிப்படையில் தயாரித்து தீர்மானம் எடுக்கும் நோக்கத்துக்காக ALCO க்கு சமர்ப்பிக்கின்றது. வங்கியின் சொத்துக்களும் பொறுப்புக்களும் அவற்றின் முதிர்ச்சிக்கான எஞ்சிய காலத்தினடிப்படையில் முன் தீர்மானிக்கப்பட்ட கால அளவினுள் நிலை நிறுத்தப்படுகின்றன. சொத்துக்களதும் பொறுப்புக்களதும் ஒத்திருக்காமையானது வங்கியின் திரவத்தன்மை இடர் தணிப்புக்கான வரையறைகளுக்கெதிராக கண்காணிக்கப்படுகின்றன.

கீழ்வரும் அட்டவணையானது 31 டிசம்பர் 2017 இல் உள்ளவாறான வங்கியின் நிதிப்பொறுப்புக்களுடைய ஒப்பந்த ரீதியான கழிவீடு செய்யப்படாத முதிர்ச்சியினை காட்டுகின்றது.

2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறு	கோரும் போது ரூபா '000	3 மாதங்களுக்கு உட்பட்டது ரூபா '000	3-12 மாதங்கள் வரை ரூபா '000	1-5 வருடங்கள் வரை ரூபா '000	5 வருடங்களுக்கு மேற்பட்டவை ரூபா '000	மொத்தம் ரூபா '000
வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை	–	2,203,199	–	–	–	2,203,199
மீள்விற்பனை உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணைகள்	–	33,391,992	11,095,470	–	–	44,487,462
பெறுதி நிதியியல் சாதனங்கள்	–	70,715	–	–	–	70,715
வாடிக்கையாளர்களுக்குச் செலுத்தவேண்டியவை	576,214,705	392,398,282	528,814,674	48,652,021	752,354	1,546,832,036
ஏனைய கடன்கள்	–	91,247,400	77,835,383	8,262,972	845,334	178,191,089
வழங்கப்பட்ட கடன் பிணைகள்	–	–	–	–	–	–
இரண்டாந்தர தவணைக் கடன்கள்	–	–	4,090,196	9,941,700	28,538,561	42,570,457
மொத்த நிதியியல் பொறுப்புக்கள்	**576,214,705**	**519,311,588**	**621,835,723**	**66,856,693**	**30,136,249**	**1,814,354,958**

2016 டிசம்பர் 31 இல் உள்ளவாறு	கோரும் போது ரூபா '000	3 மாதங்களுக்கு உட்பட்டது ரூபா '000	3-12 மாதங்கள் வரை ரூபா '000	1-5 வருடங்கள் வரை ரூபா '000	5 வருடங்களுக்கு மேற்பட்டவை ரூபா '000	மொத்தம் ரூபா '000
வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை	–	2,042,322	–	–	–	2,042,322
மீள்விற்பனை உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணைகள்	–	43,420,086	61,985,387	17,307	–	105,422,780
பெறுதி நிதியியல் சாதனங்கள	–	171,663	–	–	–	171,663
வாடிக்கையாளர்களுக்குச் செலுத்தவேண்டியவை	544,978,039	286,365,143	390,777,612	61,946,504	3,178	1,284,070,476
ஏனைய கடன்கள்	–	34,719,659	81,273,566	79,892,126	824,918	196,710,269
வழங்கப்பட்ட கடன் பிணைகள்	–	–	3,823,000	–	–	3,823,000
இரண்டாந்தர தவணைக் கடன்கள்	–	–	9,584,647	8,595,013	9,455,669	27,635,329
மொத்த நிதியியல் பொறுப்புக்கள்	**544,978,039**	**366,718,873**	**547,444,212**	**150,450,950**	**10,283,765**	**1,619,875,839**

60.4 சந்தை இடர்

சந்தை இடர் என்பது வட்டி வீதங்கள், வெளிநாட்டுச் செலாவணி வீதங்கள், உரிமை மூலதன விலைகள் மற்றும் பொருட்களின் விலைகள் போன்ற சந்தை மாறிகளில் ஏற்படும் மாற்றங்களின் காரணமாக நிதியியல் சாதனங்களின் சந்தைப்பெறுமதி அல்லது எதிர்கால காசுப்பாய்ச்சலில் ஏற்படும் இடர் நேர்வாகும். வங்கியானது சந்தை இடர் நேர்வுகளுக்குள்ளாகும் வெளிப்படுத்துகைகளை வர்த்தகப்படுத்தல் அல்லது வர்த்தப்படுத்தாத சொத்துப்பட்டியல் என வகைப்படுத்தியுள்ளதுடன் இச்சொத்துப்பட்டியல் ஒவ்வொன்றையும் தனித்தனியாக முகாமைப்படுத்துகின்றது. வெளிநாட்டுச் செலாவணி மற்றும் உரிமை மூலதன வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியல் என்பனவற்றிற்கான சந்தை இடர்நேர்வானது, இடர் நேர்வு மாறிகளுக்கிடையிலான பரஸ்பரம் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் தன்மையினைப் பிரதிபலிக்கின்ற இடர்நேர்வுப் பெறுமதி (VaR) என்ற முறையின் அடிப்படையில் முகாமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. வர்த்தகச் சொத்துப்பட்டியலுடன் தொடர்புபட்ட வட்டி வீத இடர்நேர்வுகளுக்கான சந்தை இடர்நேர்வானது அடிப்படைப் புள்ளிகளின் விலைப் பெறுமதி மற்றும் காலப் பகுப்பாய்வு என்பனவற்றின் அடிப்படையில் முகாமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகின்றது. வர்த்தகப்படுத்தப்படாத நிலைமையானது உணர்திறன் பகுப்பாய்வு மற்றும் அழுத்தப் பரிசோதனை அடிப்படையில் முகாமை செய்யப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.

60.4.1 நாணய இடர்

அந்நியச் செலாவனி மாற்று வீதங்களின் காரணமாக நிதியியல் சாதனங்களின் பெறுமதி தளம்பலடைதல் நாணய இடராகக் காணப்படுகின்றது வங்கி கணிசமான அளவுக்கு திறந்த மீதிகள் நிலையைக் கொண்டிருப்பதால் அந்நிய நாணய வர்த்தக நடவடிக்கைகள் மீதான இலாப நட்டத்திற்கு குறிப்பிடத்தக்களவு தளம்பலைக் கொண்டிருக்கவில்லை. அந்நிய நாணய இடரை நெறிப்படுத்துவதற்கான IIR MD அமைப்பினால் இடர் பெறுமதி (VaR) உடனிணைந்த ஒரு விபரமான வரையறைக் கட்டமைப்பு குறித்துரைக்கப்பட்டுள்ளது. நாணய இடர் பெறுமதி 2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 21,066,977/- ஆகவும் எமது இடரேற்பு எல்லை ரூபா 160,000,000/- (2016 - ரூபா 8,000,000/-) ஆகவும் காணப்படுகின்றது.

டிசம்பர் 31 இல் உள்ளவாறு வெளிநாட்டு நாணயமாற்று நிலை	2017		2016	
	தேறிய நேர்க்கணிய நிலை ரூபா '000	தேறிய எதிர்க்கணிய நிலை ரூபா '000	தேறிய நேர்க்கணிய நிலை ரூபா '000	தேறிய எதிர்க்கணிய நிலை ரூபா '000
நாணயங்கள்				
ஐக்கிய அமெரிக்க டொலர்	877,195	–	82,924	–
பெரிய பிரித்தானிய பவுண்		(3,974)	14	–
யூரோ	1,331	–	112	–
ஜப்பானிய யென்	–	(5,263)	2	–
அவுஸ்திரேலிய டொலர்	–	(582)	–	(1,123)
கனடா டொலர்	–	(410)	–	(326)
சுவிஸ் பிராங்		(386)	489	–
சிங்கப்பூர் டொலர்	–	(930)	–	(1,052)
ஹொங் கொங் டொலர்	–	(1,562)	(1,838)	–
உப மொத்தம்	**878,526**	**(13,107)**	**11,745**	**(2,501)**
ஏனைய நாணயங்கள்	12,090	(3,489)	4,783	(647)
மொத்தம்	**890,616**	**(16,596)**	**2,376**	**(3,148)**
நேர்க்கணிய நிலை அல்லது எதிர்க்கணிய நிலையில் கூடியது		(16,596)		(3,148)

நாணயமாற்று வீத அதிர்வுகளால் வருமானகூற்றில் ஏற்படும் தாக்கம்

நாணய மாற்றுவீத அதிர்வு (%)	2017		2016	
	தேறிய திறந்த நிலை (வீத அதிர்வுகளின் பின்னர்) ரூபா '000	2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வருமானக் கூற்றில் ஏற்படும் தாக்கம் ரூபா '000	தேறிய திறந்த நிலை (வீத அதிர்வுகளின் பின்னர்) ரூபா '000	2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வருமானக் கூற்றில் ஏற்படும் தாக்கம் ரூபா '000
5	(15,766)	830	(2,991)	157
10	(14,936)	1,660	(2,833)	315
-5	(17,426)	(830)	(3,305)	(157)
-10	(18,256)	(1,660)	(3,463)	(315)

60.4.2 வட்டி வீத இடர்

வட்டி வீத இடரானது வட்டி வீதத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகளில் இருந்து உருவாகின்றது. இவ் வட்டி வீத மாற்றமானது எதிர்கால காசுப்பாய்ச்சல்களை அல்லது நிதியியல் சாதனங்களின் நியாயப் பெறுமதியைப் பாதிக்கும்.

திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களுக்கான வங்கியின் வர்த்தகப்பட்டியல் மீதான வட்டி வீத மாற்றத்தின் தாக்கத்தை அளவிடுவதற்காக அடிப்படைப் புள்ளிகளின் விலைப் பெறுமதி (PVB) மற்றும் காலப்பகுதிப் பகுப்பாய்வுகளானது வாராந்தம் கண்காணிக்கப்படுகின்றது.

வட்டிவீத அதிர்வு	2017 ரூபா '000	2016 ரூபா '000
அடிப்படை புள்ளிகளின் நிகழ் பெறுமதி		
திறைசேரி உண்டியல்களில் முதலீடு	32,201	8,864
திறைசேரி முறிகளில் முதலீடு	58,835	25,308
கால அளவு		
திறைசேரி உண்டியல்களில் முதலீடு	0.5 வருடங்கள்	0.5 வருடங்கள்
திறைசேரி முறிகளில் முதலீடு	1.0 வருடங்கள்	2.5 வருடங்கள்

வங்கிப் புத்தகத்திலுள்ள வட்டி வீத இடரானது, வட்டித் தளம்பல் நிறைந்த சொத்துக்கள், பொறுப்புக்களை ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட முதிர்ச்சிப் பட்டியலில் அவை முதிர்ச்சியடைவதற்குத் தேவையான எஞ்சியுள்ள காலத்தைக் கருத்திற் கொண்டு போடுதல், இடைவெளி எல்லைகளைத் தீர்மானித்துக் கண்காணித்தல் மற்றும் சொத்துப் பட்டியலை மீள் விலையிடல் போன்றவற்றின் ஊடாக கண்காணிக்கப்படுகின்றது.

2017	1 மாதம் வரை %	1-3 மாதங்கள் %	3-6 மாதங்கள் %	6-12 மாதங்கள் %	1-2 வருடங்கள் வரை %	2-3 வருடங்கள் வரை %	3-4 வருடங்கள் வரை %	4-5 வருடங்கள் வரை %	5 வருடங்களுக்கு மேல் %
வீதத் தளம்பலடையும் சொத்துக்கள்	9.1	17.1	6.3	22.2	9.3	9.3	5.0	5.0	16.7
வீதத் தளம்பலடையும் பொறுப்புக்கள்	8.8	15.1	16.8	18.2	4.5	4.5	4.0	4.0	24.2
இடைவெளி	0.3	2.0	-10.5	4.0	4.8	4.8	1.0	1.0	-7.5

2016	1 மாதம் வரை %	1-3 மாதங்கள் %	3-6 மாதங்கள் %	6-12 மாதங்கள் %	1-2 வருடங்கள் வரை %	2-3 வருடங்கள் வரை %	3-4 வருடங்கள் வரை %	4-5 வருடங்கள் வரை %	5 வருடங்களுக்கு மேல் %
வீதத் தளம்பலடையும் சொத்துக்கள்	8.6	13.8	9.5	13.8	15.1	15.1	3.6	3.6	16.9
வீதத் தளம்பலடையும் பொறுப்புக்கள்	8.1	11.7	8.4	25.1	7.4	7.4	4.5	4.5	23.0
இடைவெளி	0.5	2.1	1.0	-11.3	7.7	7.7	-0.8	-0.8	-6.1

60.4.3 உரிமை மூலதன இடர்

உரிமை மூலதன இடர் என்பது, உரிமை மூலதனச் சுட்டெண்கள் மற்றும் தனிப்பட்ட பங்குகளின் மட்டங்களில் ஏற்படும் மாற்றத்தின் காரணமாக, உரிமை மூலதனப்பட்டியலின் உண்மைப் பெறுமதி வீழ்ச்சியடைவதாகும். ஒட்டுமொத்த சொத்துப்பட்டியலை வரையறுப்பதனாலும், இடர்ப் பெறுமதி முறையைப் பயன்படுத்துவதனாலும் உரிமை மூலதன இடர் கண்காணிக்கப்படுகின்றது. 2017ம் ஆண்டிற்கான உரிமை முலதனத்திற்கான இடபெறுமதி (VaR) ரூபா 315,000,000 ஆக காணப்படுகின்றது.

உரிமை மூலதன இடர்ப் பெறுமதி	2017 ரூபா '000	2016 ரூபா '000
அதிகூடிய	263,051	151,146
ஆகக்குறைந்த	87,841	117,168
சராசரி	144,906	134,170
டிசம்பர் 31 இல் உள்ளவாறு	89,852	131,409

60.5 தொழிற்பாட்டு இடர்

தொழிற்பாட்டு இடர் என்பது மக்கள் மற்றும் முறைமைகள் அல்லது வெளிநாட்டு நிகழ்வுகள் என்பனவற்றின் போதுமானதற்ற அல்லது தவறான உள்ளக செயன்முறைகளினால் ஏற்படுவதாகும். இது சட்ட இடரினை உள்ளடக்குகின்றதெனினும் தந்திரோபாய இடர் மற்றும் வங்கியின் நற்பெயருக்கு ஏற்படும் இடர்களை விளக்குகிறது.

வங்கியானது, வங்கி நடவடிக்கைகளின் அனைத்து நடவடிக்கைகளிலும் இயல்பாகவே பிணைந்துள்ள தொழிற்பாட்டு இடரின் முக்கியத்துவத்தினை வங்கி அங்கீகரித்திருக்கின்றது. மேம்பட்ட முகாமைத்துவம் மற்றும் அளவீட்டு அணுகுமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமாக தொழிற்பாட்டு இடர்களைக் குறைப்பதற்கு வங்கி எதிர்பார்க்கிறது.

தொழிற்பாட்டு இடர்களுக்கான மூலதனங்களை ஒதுக்குவதற்கு வங்கி அடிப்படைக் குறிகாட்டி அணுகுமுறையினைப் பயன்படுத்தியது. தொழிற்பாட்டு இடர்களுக்கு ஒதுக்கப்பட்ட மூலதனம் குறிப்பிடத்தக்களவில் இருந்த போதும் கூட, உண்மையான தொழிற்பாட்டு இழப்பு ஒதுக்கப்பட்ட மூலதனத்திலும் பார்க்க மிகக் குறைவாகவே காணப்பட்டது.

60.6 மூலதன முகாமைத்துவம்

மூலதன முகாமைத்துவத்தின் முக்கிய குறிக்கோள் யாதெனில் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன தேவைப்பாடுகள் பேணப்படுவதனை உறுதிப்படுத்துவதேயாகும். தந்திரோபாய குறிக்கோளினை எய்தும் விதத்தில் வங்கியின் இடர் அளவுகளுக்குட்பட்டு போதுமான மூலதனம் ஒதுக்கப்பட்டுள்ளமையினை வங்கி உறுதிப்படுத்துகிறது.

60.6.1 மூலதனப் போதுமை

மூலதனப் போதுமை விகிதமானது கடனின் இடர் நிறையளிக்கப்பட்ட சொத்துக்களின் சதவீதமாகவும் சந்தை மற்றும் வங்கித்தொழில் நடவடிக்கைகளின் தொழிற்பாட்டு அம்சமாகவும் வெளிப்படுத்தப்படுகின்ற வங்கி மூலதனத்தின் ஒரு அளவுமுறையாகும். இது வங்கியின் நிதியியல் பலத்தின் அளவுமுறையாகும். இது எதிர்பாராத சூழ்நிலைகளில் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்நோக்கும் விதத்தில் போதுமான மூலதனத்தினைப் பேணும் அதன் இயலாற்றலை எடுத்துக்காட்டுகின்றது.

வங்கிகள் செலுத்தத் தவறுவதன் மூலமும் இடர்களை அதிகரிக்கின்ற முதலீடுகளில் பங்கேற்கவோ அல்லது அதனை வைத்திருக்கவோ இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும் அவை தொழிற்பாட்டு இழப்புகளுக்கு தாக்குபிடிக்குமளவிற்குப் போதுமான மூலதனத்தினை கொண்டிருப்பதனையும், அதன் மூலம் வங்கியியல் முறையில் நம்பிக்கையினைப் பேணுவதனை உறுதிப்படுத்துவதற்காகவும் இலங்கை மத்தியவங்கி மூலதனப் போதுமை விகிதத்தினை வரைவிலக்கணம் செய்து கண்காணித்து வருகிறது.

வங்கியானது மூலதன அளவீட்டுக்கும் மூலதன நியமங்களுக்குமான பாசல் II கட்டமைப்பு என பொதுவாக அறியப்பட்ட மீள் கட்டமைக்கப்பட்ட சர்வதேச ஒருங்கிணைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு மூலதனப் போதுமை விகிதத்தைக் கணிப்பிடுகின்றது. மிகமோசமான சூழ்நிலைகளை கடுமையாக வலியுறுத்தி ஒருங்கிணைக்கப்பட்ட சுயாதீன இடர் முகாமைத்துவ பிரிவு (ICAA) செயற்திறனாகவும் தொடர்ச்சியாகவும் மூலதனப் போதுமை வீதத்தைக் கண்காணிக்கின்றது. நற்பெயருக்கான இடர், தந்திரோபாய இடர், இணக்கப்பாட்டு இடர், செறிவாக்கல் இடர், மற்றும் வட்டிவீத இடர் போன்ற சாத்தியமான எல்லா இடர்களுக்குமான உள்ளக மூலதனப் போதுமை அளவீட்டுச் செயன்முறை காரணிகள் வங்கிப் புத்தகத்தில் வெளியிடப்படுகின்றன.



இணைக்கப்பாட்டு இணைப்புக்கள்

304 — 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

324 — கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தினால் அமுல்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

326 — இலங்கை மத்திய வங்கியினால் அமுல்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

329 — மூலதனப் போதுமை

344 — மாற்றல் விலையிடல் தொடர்பான பணிப்பாளர் சான்றிதழ்

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (1)	**சபைக்குரிய பொறுப்புக்கள்**	
3 (1) (i)	பின்வருவனவற்றின் அமுலாக்கத்தினை உறுதிப்படுத்துவதன் மூலம் இவ் வங்கியின் பாதுகாப்பையும் உறுதித்தன்மையையும் இச் சபையானது வலுப்படுத்த வேண்டும்:	இணங்கப்பட்டது.
	அ. இவ் வங்கியின் தந்திரோபாய நோக்கங்களையும் கூட்டாண்மை விழுமியங்களையும் அங்கீகரித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் மற்றும் இவ் வங்கி பூராகவும் இவை தொடர்புபடுத்தப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தல்;	தந்திரோபாய நோக்கங்கள் மற்றும் விழுமியங்கள் ஆனவை சபை மற்றும் உயர் முகாமைத்துவம் அமர்வுகளில் சமூகமளிப்புடன் வெளியிடத்தில் நடைபெறும் அமர்வுகளில் நிறுவப்படுகின்றன. 2017 - 2019 ஆம் ஆண்டு காலப்பகுதிக்காக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டாண்மை திட்டத்தில் அவை உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை கிரமமான சுருக்கிக் கூறும் அமர்வுகள் ஊடாக கிளை முகாமையாளர் தர ஊழியர்கள் வரைக்கும் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவினால் கூட்டாண்மை திட்டமானது ஆரம்பிக்கப்பட்டு வலுப்படுத்தப்படும் வெளியிடக் கலந்துரையாடல் கூட்டங்களில் தெரிவிக்கப்படுகின்றன. கிரமமான சுருக்கி கூறும் வழமையான அமர்வுகள் மற்றும் கூட்டங்கள் ஊடாக ஏனைய தர ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டது. மேற்கூறியவாறு நிறுவி சபையில் அங்கீகரிக்கப்பட்ட கூட்டாண்மைத்திட்டம் 2018-2020 அமுலில் உள்ளது. 2018 இலிருந்து முன்னோக்கிச் செல்வதற்காக கூட்டாண்மை விழுமியங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. உள்ளக வலைப்பின்னலிலும் கிடைக்கக்கூடியதாகவுள்ளதுடன், சகல ஊழியருக்கும் வழங்கப்பட்ட ஊழியர் கையேட்டில் கூட்டாண்மை விழுமியங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
	ஆ. ஒட்டுமொத்த இடர்கொள்கை மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் அளவிடக்கூடிய இலக்குகளுடனான பொறிமுறைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய இவ் வங்கியின் ஒட்டுமொத்த வியாபார தந்திரோபாயத்தினை குறைந்தது அடுத்த மூன்று வருடங்களுக்கு அங்கீகரித்தல்;	இணங்கப்பட்டது. இவ் வங்கியின் ஒட்டுமொத்த வியாபாரத் தந்திரோபாயமானது 2017 - 2019 ஆண்டு காலப்பகுதிக்கான கூட்டாண்மைத் திட்டத்திலும் இச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட, அதே காலப்பகுதிக்கான செயல் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. தந்திரோபாய திட்டத்திற்கு அமைவாக இடர் நாட்டம், இடர் முகாமைத்துவ கட்டமைப்பு மற்றும் பொறிமுறைகள் என்பனவும் இச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. வங்கியின் அளவிடக்கூடிய இலக்குகள் ஒட்டுமொத்தமாக வடிவமைக்கப்பட்டதுடன் வெளியிட கலந்துரையாடல் கூட்டங்களிலும் இவ் இலக்குகளிற்கு அமைவாக செயற்றிறன் அளவிடப்படுகின்றது.
	இ. பிரதான இடர்களை அடையாளங்காணுதல் மற்றும் இவ் இடர்களை மதிநுட்பமாக முகாமிப்பதற்குப் பொருத்தமான முறைமைகளின் அமுலாக்கத்தினை உறுதிப்படுத்தல்;	இணங்கப்பட்டது. இவ் வங்கியின் இடர் கொள்கையினை அங்கீகரித்தல், இடர் நாட்டத்தினை வரையறுத்தல், பிரதான இடர்களை அடையாளங்காணுதல், ஆளுகை கட்டமைப்பை வடிவமைத்தல் மற்றும் பிரதான இடர்களை அளவிடுதல், கண்காணித்தல் மற்றும் முகாமைசெய்தல் ஆகியவற்றுக்கான முறைமைகளை அமுல்படுத்தல் போன்ற பணி ஒப்படைப்புகள் செய்யப்பட்ட சபை ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவை இச் சபை நியமித்துள்ளது. புதிய தந்திரோபாயங்களிலிருந்து எழுகின்ற இடர்களைப் பற்றியும் அத்தகைய இடர்களைக் குறைப்பதற்கான மேலதிக வழிமுறைகள் பற்றியும் விரிவாக சபை உறுப்பினர்கள் கலந்துரையாடும் செய்முறையொன்றை இவ் வங்கி அமுல்படுத்தியுள்ளது. சகல இடர் பிரிவுகளையும் உள்ளடக்கும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கொள்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இது குறித்தான மேலதிக விபரங்களை பின்வரும் அறிக்கைகளும் வழங்குகின்றன: • 80 தொடக்கம் 92 வரையான பக்கங்களிலுள்ள இடர் முகாமைத்துவ அறிக்கை. • 74 ஆம் 75 ஆம் பக்கங்களிலுள்ள ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு அறிக்கை.
	ஈ. வைப்பாளர்கள், கடன் வழங்குனர்கள், பங்குதாரர்கள் மற்றும் கடன் பெறுனர்கள் உள்ளடங்கலாக சகல நிறுவன நலனில் அக்கறையுடையோர்குமான தொடர்பாடல் கொள்கையொன்றின் அமுலாக்கத்தை அங்கீகரித்தல்;	இணங்கப்பட்டது. காலக்கிரமத்தில் மீளாய்வுசெய்யப்படும், சகல நிறுவன நலனில் அக்கறையுடையோர் உள்ளடக்கிய ஒரு தொடர்பாடல் கொள்கையினை சபையானது அங்கீகரித்து அமுல்படுத்தியுள்ளது.
	உ. உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமைகளின் போதுமான தன்மை மற்றும் நாணயத்தன்மையினை மீளாய்வு செய்தல்;	இணங்கப்பட்டது. சபைக்கு அறிக்கையிடும் சபைக் கணக்காய்வுக் குழுவுக்கு இவ் வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் போதுமான தன்மை மற்றும் நாணயத்தன்மையினை மீளாய்வு செய்தல் பற்றிய பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு குழுவானது அதற்கு நேரடியாக அறிக்கையிடுகின்ற உள்ளக கணக்காய்வு திணைக்களத்தினுடைய அறிக்கைகள் மற்றும் இச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்துகின்ற வெளியக கணக்காய்வாளர்கள் அறிக்கைகளை மீளாய்வு செய்தது. முகாமைத்துவ தகவல் முறைமையின் (MIS) பயனுறுதித் தன்மையினை மதிப்பிடும் பொருட்டு தகவல் முறைமைக் கணக்காய்வுகள் பணி உள்ளக கணக்காய்வு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவத் தகவல் முறைமை மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஆகியவற்றின் போதுமான தன்மை பற்றி சபையானது மீளாய்வு செய்துள்ளது.

பிரிவு	கொள்கை	2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	ஊ. பிரதான முகாமைத்துவ ஆளணியை அடையாளங்காணுதல் மற்றும் பதவியிலமர்த்தல்;	இணங்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதியிடப்பட்ட இலங்கை மத்திய வங்கி கைந்நூல் மற்றும் 2010 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க வங்கிச் சட்ட வரையறுப்பு ஆகியவற்றுக்கேற்ப, கூட்டாண்மை செயலாட்சி நோக்கங்களுக்காக இவ் வங்கியின் பொதுமுகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர்கள், உதவிப் பொது முகாமையாளர்கள் மற்றும் தொடர்புடைய தரங்களிலுள்ள அதிகாரிகள் ஆகியோரை பிரதான முகாமைத்துவ ஆளணியினராக (KMP) இவ் வங்கி அடையாளங் கண்டுள்ளது.
	எ. சபை பணிப்பாளர்கள் தமக்காகவும் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணிக்குமாக அதிகார பரப்பினையும் முக்கிய பொறுப்புகளையும் வரையறை செய்தல்.	இணங்கப்பட்டது. பணிப்பாளர்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணிக்கான அதிகாரப் பரப்பு மற்றும் பிரதான பொறுப்புக்கள் முறையே சபை சாசனம் மற்றும் பதவி விபரம் என்பவற்றினூடாக வரையறுக்கப்பட்டுள்ளன. சபையின் சாசனமானது இறுதியாக 2017ம் ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்டது.
	ஏ. சபை கொள்கையுடன் ஒத்திசைவாக இருக்கின்ற, பிரதான முகாமைத்துவ ஆளணியினால் வங்கி அலுவல்கள் மீது பொருத்தமான மேற்பார்வை இருப்பதை உறுதிப்படுத்தல்.	இணங்கப்பட்டது. வங்கியின் கூட்டாண்மைத் திட்டத்திற்கமைவான செயற்றிறனானது செயல் திட்டத்தின் அடிப்படையில் சபையினால் மீளாய்வு செய்யப்பட்டது. பிரதான முகாமைத்துவ ஆளணியானது தத்தமது நோக்கெல்லைக்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பில் சபைக்கும் உபகுழுக்களுக்கும் கிரமமாக அறிமுகப்படுத்தல்களை மேற்கொள்வதுடன், தமது விடயப் பரப்புடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து விளக்கமளிக்கும் பொருட்டும் தேவைப்படும் போதும் சபையினால் அழைக்கப்படுகின்றனர்.
	ஐ. பின்வருவன உள்ளடங்கலாக, சபைப் பணிப்பாளர்களின் சொந்த செயலாட்சி நடைமுறைகளின் பயனுறுதி வாய்ந்த தன்மையினை காலக் கிரமமாக மதிப்பிடுதல்: (i) பணிப்பாளர்களினதும் பிரதான முகாமைத்துவ ஆளணியினதும் தெரிவு, பெயர்குறித்த நியமனம் மற்றும் தேர்வு (ii) ஆர்வ முரண்பாட்டு முகாமைத்துவம் மற்றும் (iii) பலவீனங்களை வரையறுத்தல் மற்றும் அவசியப்படுமிடத்து மாற்றங்களை நடைமுறைப்படுத்தல்	இணங்கப்பட்டது. தத்தமது நிபுணத்துவத் துறையின் அடிப்படையில் வியாபாரத் தந்திரோபாயம் மற்றும் பங்களிப்பு ஆகியன தொடர்பில் சபையின் சுய செயற்றிறன் மதிப்பீடொன்று வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது. தத்தமது கூட்டாட்சி செயற்பாடுகளினை மதிப்பீடு செய்யும் வகையில் சபையின் செயற்திறனிற்கான ஒரு சுய மதிப்பீடு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
	ஒ. பிரதான முகாமைத்துவ ஆளணிக்கான பொருத்தமான தொடர்ச்சி திட்டமொன்றை இவ் வங்கி கொண்டுள்ளதென்பதை உறுதிப்படுத்தல்.	இணங்கப்பட்டது. பிரதான முகாமைத்துவ ஆளணிக்கான சபையால் அங்கீகரிக்கப்பட்ட (அப்படிப்பட்டதாக, கூட்டாண்மை மற்றும் நிறைவேற்று முகாமைக்கான) தொடர்ச்சி திட்டம் ஒன்று நடைமுறையில் உள்ளது. இது பெயர்குறித்த நியமன மற்றும் கூட்டாண்மை செயலாட்சிக் குழுவினால் 2017ம் ஆண்டில் மீளாய்வு மற்றும் மீளாக்கம் செய்யப்பட்டு சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.
	ஓ. கொள்கைகளை மீளாய்வு செய்யும் பொருட்டும், தொடர்பாடல் இணைப்புகளைத் தாபிக்கும் பொருட்டும் மற்றும் கூட்டாண்மை நோக்கங்களை நோக்கிய முன்னேற்றத்தைக் கண்காணிக்கும் பொருட்டும் பிரதான முகாமைத்துவ ஆளணியுடன் தேவை அடிப்படையில் கிரமமான சந்திப்புக்களைச் செய்தல்.	இணங்கப்பட்டது. தத்தமது பரப்புக்களுடன் தொடர்புபட்ட கொள்கை மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் சபை மற்றும் சபை உப குழுக்களின் கூட்டங்களிற்கு பிரதான முகாமைத்துவ ஆளணியினர் கிரமமாக வருகை தருகின்றனர் அல்லது அழைக்கப்படுகின்றனர். கூட்டுரிமைத் திட்டத்தின் செயற்றிறன் மீளாய்வானது முகாமைத்துவத்தின் பங்குபற்றலுடன் வெளியிட அமைவிடங்களில் மேற்கொள்ளப்படுகின்றது.
	ஔ.ஒழுங்கு முறைப்படுத்தல் சூழ்நிலையை விளங்கிக் கொள்ளுதல் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்துபவர்களுடன் பயனுறுதியுள்ள உறவை இவ் வங்கி பேணுகின்றதென்பதை உறுதிப்படுத்தல்.	இணங்கப்பட்டது. பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டதும், சபைக்கு அனைத்து பொருத்தமான ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளும் அமைத்துக் கொடுக்கப்படுகின்றது. அவர்களுடைய பொறுப்புக்களை பயனுறுதி வாய்ந்த முறையில் நிறைவேற்றுவதற்காக அவர்களுடைய அறிவு காலத்துக்கு ஏற்ற நிலையில் உள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்காக சபை கூட்டங்களில் அவர்களிற்கு ஒழுங்குபடுத்தல் சூழலின் அபிவிருத்தி குறித்தும் சுருக்கமான முறையில் கூறப்படுகின்றது. ஒழுங்குமுறைப்படுத்துபவர்களுக்கான அனைத்து திரும்பல்களையும் உள்ளடக்கி இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கப்பாட்டு அறிக்கையானது மாதாந்தம் சபைக்கு முன்னிலைப்படுத்தப்படுவதுடன் சபையினால் உன்னிப்பாக கண்காணிக்கப்படுகின்றது.
	∴. சிறந்த சிரத்தையுடன் வெளியக கணக்காய்வாளர்களை வாடகைக்கு அமர்த்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.	இணங்கப்பட்டது. இந் நாட்டின் அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு, இது அரசுக்குடமையான தொழில்முயற்சியொன்றாக உள்ளதனால், கணக்காய்வாளர் நாயகம் அவர்களே இவ் வங்கியின் வெளியக கணக்காய்வாளர் ஆவார். எவ்வாறாயினும் கணக்காய்வுக்கு குழுவானது கணக்காளர் நாயகத்திற்கு வங்கியின் கணக்காய்வில் உதவும் வெளியகக் கணக்காய்வாளர்களை மேற்பார்வை செய்யும் வேலை அளிக்கப்பட்டுள்ளது.

பிரிவு	கொள்கை	2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (1) (ii)	சபையானது தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரை நியமிக்க வேண்டும் என்பதுடன் இவ் வழிகாட்டல்களின் 3 (5) இன் வழிகாட்டலுக்கு ஒத்திசைவாக தலைவரினதும் பிரதம நிறைவேற்று அதிகாரியினதும் தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை வரையறுத்தலும் அங்கீகரித்தலும் வேண்டும்.	3 (9) (ii) இன் வழிகாட்டலுடன் சேர்த்து வாசிக்கப்படும் போது இணங்கப்பட்டது. இலங்கை வங்கியானது எந்த அமைச்சரின் விடய நோக்கெல்லையின் கீழ் வருகின்றதோ அந்த அமைச்சரின் அனுமதியுடன் இவ் வங்கியில் பொது முகாமையாளர் எனக் குறிப்பிடப்படும் பிரதம நிறைவேற்று அலுவலரினை இச் சபை நியமிக்கின்றது அத்துடன் 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு ஏற்ப கூறப்பட்ட அமைச்சரினால் தலைவர் நியமிக்கப்படுகின்றார். சபையானது சபை சாசனத்தினுடாக இவ்விரு வகிபாகங்களுக்கும் இடையிலான அதிகார சமநிலையை பேணி அவர்களுடைய தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களையும் அங்கீகரித்துள்ளது.
3 (1) (iii)	சபையானது ஒழுங்காக கூட வேண்டும் என்பதுடன் சபைக் கூட்டங்களானவை அண்ணளவாக மாதாந்த இடைவெளிகளில் வருடம் ஒன்றுக்கு குறைந்தது பன்னிரண்டு முறைகள் நடாத்தப்பட வேண்டும். சமுகமளிப்பதற்கு உரித்துடைய பெரும்பான்மையான பணிப்பாளர்களின் நேரடியான முனைப்பான பங்குபற்றலினை அத்தகைய ஒழுங்கான சபைக் கூட்டங்கள் சாதாரணமாக உள்ளடக்க வேண்டும். எழுத்து மூலமான தீர்மானங்களை/பத்திரங்களைச் சுற்றிப் பரப்புதல் ஊடாக சபையின் சம்மதத்தினைப் பெற்றுக்கொள்தலானது சாத்தியப்படக்கூடிய அளவிற்கு தவிர்க்கப்பட வேண்டும்.	இணங்கப்பட்டது. சபைக் கூட்டங்கள் இரு வாரங்களுக்கொரு முறை கிரமமாக நடாத்தப்-படுவதுடன் தேவை ஏற்படும் போது விசேட கூட்டங்களும் ஒழுங்கு செய்யப்-படுகின்றன. மீளாய்வின் கீழ் இவ் ஆண்டின் போது சபை 28 தடவை கூடியது. சுற்றறிக்கை தீர்மானங்கள் ஊடாக அனுமதி பெறலை வங்கியானது குறைத்துக் கொண்டுள்ளது அத்துடன் இது விலக்களிக்கப்பட்ட அடிப்படையில் மட்டுமே மேற்கொள்ளப்படுவதுடன் அத்தகைய தீர்மானங்கள் அடுத்த கூட்டத்தில் சபையினால் செயல்வலுவாக்கம் செய்யப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டின் போது ஐந்து தீர்மானங்கள் சுற்றறிக்கை மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
3 (1) (iv)	இவ் வங்கியின் வியாபார மேம்பாடு மற்றும் இடர் முகாமைத்துவத்துடன் கூடிய விடயங்கள் மற்றும் முன்மொழிவுகள் தொடர்புறுமிடத்து ஒழுங்கான சபைக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சிநிரலில் அத்தகைய விடயங்கள் மற்றும் முன்மொழிவுகளை சகல பணிப்பாளர்களும் உள்ளடக்குவதற்கு ஏதுவாக ஏற்பாடுகள் தயாராக உள்ளன என்பதை இச் சபை உறுதிப்படுத்த வேண்டும்.	இணங்கப்பட்டது. கிரமமான கூட்ட நிகழ்ச்சி நிரலிற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் கூட்டங்கள் அட்டவணைப்படுத்தப்பட்டு சபைக்கு அறிவிக்கப்படுகின்றது.
3 (1) (v)	சகல பணிப்பாளர்களுக்கும் பங்குபற்றுவதற்குச் சந்தர்ப்பமொன்று வழங்கப்படும் பொருட்டு ஒழுங்கான சபைக் கூட்டம் பற்றி குறைந்தது ஏழு நாட்களிற்கு முன்னர் அறிவித்தல் வழங்கப்படுவதை சபை நடைமுறைகள் உறுதிப்படுத்த வேண்டும். ஏனைய சகல சபைக் கூட்டங்களுக்காகவும் பொருத்தமான அறிவித்தல் வழங்கப்படலாம்.	இணங்கப்பட்டது. வருட ஆரம்பத்தில் ஒரு வருடாந்த நாட்காட்டி ஊடாக கூட்ட அறிவித்தல்கள் வழங்கப்படுகின்றன. சபைக் கூட்டங்களிற்கான நிகழ்ச்சி நிரல் மற்றும் சபை பத்திரங்கள் என்பன கூட்டத் திகதிக்கு ஏழு நாட்களிற்கு முன்னர் ஒரு பாதுகாப்பான இலத்திரனியல் தொடர்பினூடாக (eSolution) பணிப்பாளர்களிற்கு அனுப்பப்படுகின்றன. ஏதேனும் விசேட கூட்டமொன்றிற்கு முன்னர் நியாயமான வகையில் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.
3 (1) (vi)	உடன் முன்வரும் 12 மாத காலப்பகுதியில் குறைந்தது மூன்றிலிரண்டு பங்கு கூட்டங்களிற்குச் சமுகமளித்திராத அல்லது நடாத்தப்பட்ட உடன் முன்வரும் மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்கு சமுகமளித்திராத பணிப்பாளர் ஒருவர் பணிப்பாளர் ஒருவராக இருப்பதை முடிவுறுத்த வேண்டுமென்பதை சபை நடைமுறைகள் உறுதிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும் மாற்றீடான பணிப்பாளர் ஒருவருக்கூடாக பணிப்பாளர் கூட்டங்களில் பங்குபற்றுதலானது வருகையாக ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும்.	இணங்கப்பட்டது. கூட்டாண்மை ஆளுகை நெறிமுறைக்கு அமைவாக பணிப்பாளர்களின் வருகை மதிப்பிடப்படுகின்றது. பணிப்பாளர்களின் வருகை குறித்த விபரங்கள் பக்கம் 69 இல் தரப்பட்டுள்ளது. பணிப்பாளர்களின் வருகை இந் நெறிமுறைக்கு அமைவாக இருந்தது.
3 (1) (vii)	சபைக்கான செயலக சேவைகளையும் பங்குதாரர் கூட்டங்களையும் கையாளுதல் மற்றும் நியதிச்சட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளில் கூறப்பட்டுள்ள ஏனைய தொழிற்பாடுகளை செயற்படுத்தல் என்பன தனது பிரதான பொறுப்புகளாக இருக்க வேண்டிய, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைப் பூர்த்தி செய்யும் கம்பனி செயலாளர் ஒருவரை சபையானது நியமித்தல் வேண்டும்.	இணங்கப்பட்டது. 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் மற்றும் அதன் திருத்தங்களுடன் தனது ஆற்றல்கள்/ தகைமைகள் ஒத்திசைவாக இருக்கும் சட்டத்தரணி ஒருவராக இலங்கை வங்கியின் செயலாளர்/சபையின் செயலாளர் உள்ளார். சபைக்கான செயலக சேவைகளை கையாளுதல் மற்றும் நியதிச்சட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளில் கூறப்பட்டுள்ள ஏனைய தொழிற்பாடுகளை செயற்படுத்தல் என்பன இவரது பிரதான பொறுப்புக்கள் ஆகும்.
3 (1) (viii)	சபை நடைமுறைகள் மற்றும் சகல ஏற்புடைய விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பன பின்பற்றப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் நோக்குடன் கம்பனி செயலாளரின் ஆலோசனை மற்றும் சேவைகளுக்கான அடைவினை சகல பணிப்பாளர்களும் கொண்டிருக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. ஒரு சட்டத்தரணியாகவும் அத்துடன் சபை நடைமுறைகளின் தொடர் நடவடிக்கைகளுக்கும், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள், வழிகாட்டல்கள் மற்றும் நியதிச்சட்டங்கள் ஆகியவற்றுடனான ஒத்திசைவுக்கும் மற்றும் இவ் வங்கியின் கூட்ட அறிக்கைகள் மற்றும் தொடர்புடைய பதிவுகளை வைத்திருந்து பேணுவதற்கும் பொறுப்பாகவுமிருக்கின்ற சபை செயலாளரின் ஆலோசனை மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு சபையின் சகல உறுப்பினர்களும் சந்தர்ப்பத்தினைக் கொண்டுள்ளனர்.

பிரிவு	கொள்கை	2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (1) (ix)	கம்பனிச் செயலாளரானவர் சபைக் கூட்ட அறிக்கைகளைப் பேண வேண்டும் என்பதுடன் அத்தகைய கூட்ட அறிக்கைகளானவை எந்தவொரு பணிப்பாளரினதும் பொருத்தமான அறிவித்தலின் பேரில் எந்தவொரு பொருத்தமான நேரத்திலும் பரிசோதனைக்காக காட்டப்பட வேண்டும்.	இணங்கப்பட்டது. இலங்கை வங்கியின் செயலாளர்/சபையின் செயலாளர் சபை கூட்ட அறிக்கைகளை பேணுவதுடன் அவற்றை அனைத்து சபை உறுப்பினர்களுக்கும் ஒரு பாதுகாப்பான இலத்திரனியல் தொடர்பினூடாக (eSolution) சுற்றனுப்புகின்றனர். கூட்ட அறிக்கைகள் தொடர்ந்துவரும் சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. மேலும், கடந்தகால சபை ஆவணங்கள் மற்றும் கூட்ட அறிக்கைகளை ஒரு பாதுகாப்பான இலத்திரனியல் தொடர்பினூடாக பணிப்பாளர்கள் அணுகுகின்றனர்.
3 (1) (x)	சபையானது அதன் கடமைகளை ஆற்றுகையில் உரிய கவனத்துடனும் மதிநுட்பத்துடனும் செயற்பட்டதா என்பது குறித்து, கூட்ட அறிக்கைகளிலிருந்து பெற்றுக்கொள்வது சாத்தியப்படக்கூடியதாக போதுமான விபரங்கள் சபையின் கூட்ட அறிக்கைகளில் பதிவுசெய்யப்பட வேண்டும். சபைக் கூட்டங்களிலான கலந்தாய்வுகளின் ஆழமான தன்மையை மதிப்பிடுவதற்கென ஒழுங்குறுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரிகளுக்கான ஆதாரமொன்றாகவும் இவ் அறிக்கைகள் செயற்பட வேண்டும். ஆதலினால், சபைக் கூட்ட அறிக்கைகள் பின்வருவனவற்றை தெளிவாக உள்ளடக்க அல்லது குறிப்பிட வேண்டும்: அ) சபையினால் அதன் கலந்தாய்வுகளில் பிரயோகிக்கப்பட்ட தரவு மற்றும் தகவல்களின் ஒரு சுருக்கம் ஆ) சபையினால் கருத்தில் கொள்ளப்பட்ட விடயங்கள் இ) சபையானது அதன் கடமைகளை உரிய கவனத்துடனும் மதிநுட்பத்துடனும் ஆற்றியிருந்ததா என்பதை விபரிக்கக்கூடிய விடயக் கண்டறிவுக் கலந்துரையாடல்கள் மற்றும் வாத அல்லது கருத்து மறுப்புரைப் பிணக்குகள் ஈ) சபையின் தந்திரோபாயங்கள், கொள்கைகளுடனான ஒத்திசைவினையும் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இயைந்தொழுகலையும் சுட்டிக்காட்டுகின்ற, உரிய நிறைவேற்றுனர்களினுடைய நற்சான்றிதழ் மற்றும் உறுதிப்படுத்தல்கள் உ) வங்கி முகங்கொடுக்கின்ற இடர் பற்றிய சபையின் அறிவு மற்றும் புரிந்துணர்வு அத்துடன் பின்பற்றப்பட்ட இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் பற்றியதோர் கண்ணோட்டம் அத்துடன் ஊ) தீர்மானங்கள் மற்றும் சபைத் தீர்மானங்கள்.	இணங்கப்பட்டது. தரப்பட்ட தகுதிவிதிகளை உள்ளடக்கி கூட்ட அறிக்கைகள் பேணப்படுகின்றன.
3 (1) (xi)	நியாயமான கோரிக்கையின் பேரில், பொருத்தமான சூழ்நிலைகளில் சுயாதீன தொழில்துறை ஆலோசனையை, வங்கியின் செலவில் பணிப்பாளர்கள் கோரிப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக சபையினால் உடன்பாடு காணப்பட்ட நடைமுறையொன்று இருத்தல் வேண்டும். உரிய பணிப்பாளர் அல்லது பணிப்பாளர்களுக்கு அவரின்/அவர்களின் கடமைகளை வங்கிக்கு ஆற்றுவதற்கு உதவும் பொருட்டு பணிப்பாளர்களுக்கு வெவ்வேறான சுயாதீன தொழில்துறை ஆலோசனையை வழங்குவதற்கு சபை தீர்மானிக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. சுயாதீன தொழில்துறை ஆலோசனையை பெறுவதற்கான பணிப்பாளர்களின் அணுகுமுறை கொள்கையொன்று தயாராக உள்ளதுடன் அவசியமெனக் கருதப்படும் போது சுயாதீன தொழில்துறை ஆலோசனையைப் பணிப்பாளர்களால் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.
3 (1) (xii)	பணிப்பாளர்களானவர்கள் ஏனைய நிறுவனங்களுடன் அல்லது தொடர்புபட்ட தரப்பினர்களுடனான தமது செயற்பாடுகளில், மற்றும் ஈடுபாடுகளில் ஆதாய முரண்பாடுகளை அல்லது ஆதாய முரண்பாடு தோற்றமுறுவதை தவிர்க்க வேண்டும். சபையானது பொருண்மையுடையதாக வரையறுத்துள்ள, சபையினால் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயம் ஒன்றில் பணிப்பாளர் ஒருவர் ஆதாய முரண்பாடொன்றைக் கொண்டிருப்பாராயின், கொடுக்கல் வாங்கலில் பொருண்மையுடைய ஆதாயத்தைக் கொண்டிராத சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்கள் (3 (2) (iv) இன் வழிகாட்டலைப் பார்க்கவும்) சமுகமளிக்கும் சபைக் கூட்டமொன்றில் இவ் விடயம் கையாளப்பட வேண்டும். மேலும், ஒரு பணிப்பாளரானவர், தான் அல்லது எவரேனும் தனது நெருங்கிய உறவினர் அல்லது, ஒரு பணிப்பாளர் கணிசமானளவு ஆதாயத்தை எக் கரிசனையாளர் மீது கொண்டிருக்கின்றாரோ அக் கரிசனையாளர் ஒருவர் ஆதாயத்தைக் கொண்டிருப்பது தொடர்பான ஏதேனும் சபைத் தீர்மானம் குறித்து வாக்களிப்பதிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டும் அத்துடன் அச் சபைக் கூட்டத்திற்குரிய உரிய நிகழ்ச்சிநிரல் விடயத்திற்கான கூட்ட நடப்பெண்ணில் அவர் கணக்கில் எடுக்கப்படலாகாது.	இணங்கப்பட்டது. எச் சூழ்நிலையில் ஆதாய முரண்பாடு ஒன்று காணப்படுகின்றதோ அச் சூழ்நிலையினை ஏற்புடைய ஒழுங்குவிதிகளுக்கு இணங்க கையாளுவதற்கான தமது கடப்பாடு பற்றி பணிப்பாளர்கள் அறிந்து கொண்டுள்ளனர். சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆதாய முரண்பாடுகள் மீதான கொள்கை அமுலில் உள்ளது. ஒவ்வொரு சபைக் கூட்டத்திலும் ஒரு நடைமுறையாக (இரு வாரங்களுக்கொருமுறை இடம்பெறும்) வேறு ஏதேனும் சபை அல்லது நிறுவனத்துக்கான ஒப்பந்தங்கள்/புதிய நியமனங்களிலுள்ள ஏதேனும் ஆதாயத்தை வெளிப்படுத்தும்படி பணிப்பாளர்கள் வேண்டப்படுகின்றனர். ஆதாய முரண்பாடொன்று உள்ள சந்தர்ப்பங்களில் கலந்துரையாடல்களில் பங்குபற்றுவதிலிருந்தும், தமது அபிப்பிராயங்களைத் தெரியப்படுத்துவதிலிருந்தும் அல்லது அங்கீகரிப்பதிலிருந்தும் பணிப்பாளர்கள் விலகியிருப்பார்கள் அத்துடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் கூட்ட நடப்பெண்ணில் அப்பணிப்பாளர்கள் கணக்கெடுக்கப்படுவதில்லை.
3 (1) (xiii)	வங்கி நெறிப்படுத்தல் மற்றும் கட்டுப்பாடு சபையின் அதிகாரத்தின் கீழ் உறுதியாக உள்ளது என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு தீர்மானம் கருதி விசேடமாக சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள முறைசார்ந்த விடய அட்டவணை ஒன்றை இச் சபை கொண்டிருக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. ஆண்டின்போது மீளாய்வு செய்யப்பட்ட சபை சாசனத்தில் சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பிரிவு	கொள்கை	2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (1) (xiv)	வங்கியினால் அதன் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு இயலாம-லுள்ளது அல்லது இயலாமற் போகும் சாத்தியக்கூறு உள்ளது என்றோ அல்லது வங்குரோத்து நிலையை அண்மித்துள்ளது என்றோ அல்லது வைப்பாளர்கள் அல்லது ஏனைய கடன்கொடுனர்களிற்கான நிலுவைக் கொடுப்பனவை இடைநிறுத்தப் போகின்றது என்றோ சபையானது கருதினால், எந்தவொரு தீர்மானம் அல்லது நடவடிக்கை மேற்கொள்ள முன் வங்கியின் இந் நிலமை பற்றி வங்கி மேற்பார்வை திணைக்களத்தின் பணிப்பாளருக்கு சபை உடனடியாக அறிவிக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் போது அத்தகையதோர் சூழ்நிலை எழுந்திருக்கவில்லை. சபைக்குச் சமர்ப்பிக்கப்படும் மாதாந்த நிதி கூற்றுக்களானவை வங்கியின் கடன் தீர்க்கும் ஆற்றல் பற்றி சபைக்கு உறுதிப்பாட்டை வழங்குகின்றது.
3 (1) (xv)	முலதனத்திற் போதுமானதன்மை விகிதம் மற்றும் ஏனைய மதிநுட்பம் வாய்ந்த அடிப்படைகளிற்கு ஏற்ப நாணய சபையினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வங்கிக்கு பல மட்டங்களில் நிதியீட்டம் செயற்பட்டுள்ள தென்பதை சபை உறுதிப்படுத்த வேண்டும்.	இணங்கப்பட்டது. மூலதனத்தின் போதுமானதன்மை விகிதம் மற்றும் ஏனைய மதிநுட்பம் வாய்ந்த அடிப்படைகளிற்கு ஏற்ப நாணய சபையினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வங்கிக்கு பல மட்டங்களில் நிதியீட்டம் செய்யப்பட்டுள்ளதென்பதை சபை உறுதிப்படுத்துகின்றது. மூலதன விரிவாக்கத் திட்டமானது காலாண்டு அடிப்படையில் சபைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது. வங்கியின் மாதாந்த நிதிக் கூற்றுக்களுடன் சேர்த்து மூலதனத்தின் போதுமானதன்மை விகிதத்தின் (CAR) கணிப்பீடானது சபைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.
3 (1) (xvi)	இவ் வழிகாட்டல்களின் 3 ஆம் வழிகாட்டலுடனான இணக்கப்பாட்டினை விதித்துரைக்கும் வருடாந்த கூட்டாண்மை செயலாட்சி அறிக்கையொன்றை வங்கியின் வருடாந்த அறிக்கையில் சபை பிரசுரிக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. இவ் வெளிப்படுத்தல்களானவை வங்கியின் வருடாந்த அறிக்கையில் உள்ள கூட்டாண்மை செயலாட்சி அறிக்கையின் பகுதியாக இருக்கின்றன.
3 (1) (xvii)	வருடாந்தம் ஒவ்வொரு பணிப்பாளரினாலும் மேற்கொள்ளப்பட வேண்டிய சுய மதிப்பீட்டு திட்டமொன்றை சபை பின்பற்ற வேண்டும் என்பதுடன் அத்தகைய மதிப்பீடுகள் பற்றிய பதிவுகளைப் பேணவும் வேண்டும்.	இணங்கப்பட்டது. சுய மதிப்பீட்டு திட்டமொன்று பின்பற்றப்பட்டுள்ளது. இலங்கை வங்கி செயலாளரினால்/சபை செயலாளரினால் சபையின் சுய மதிப்பீட்டு அறிக்கைகள் பேணப்படுகின்றன.
3 (2)	**சபையின் அமைப்பு**	
3 (2) (i)	சபை மீதான பணிப்பாளர்களின் எண்ணிக்கையானது 7 இற்கு குறைவாகவோ 13 இற்கு கூடுதலாகவோ இருத்தலாகாது.	1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களிற்கு அமைவாக சபை தொடர்பில் அனுமதிக்கப்பட்ட பணிப்பாளர்களின் எண்ணிக்கை ஆறு ஆவதுடன் தற்போதுள்ள சபையானது ஆறு பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. இவ் வழிகாட்டலின் கூறப்பட்ட தேவைப்பாட்டுடன் ஒத்திசைவுறும் பொருட்டு கூறப்பட்ட இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தினை மாற்றியமைக்கும் செயல்முறையில் வங்கி உள்ளது.
3 (2) (ii)	அ. பிரதம நிறைவேற்று அலுவலர் பதவியினை வகிக்கும் பணிப்பாளர் ஒருவரைத் தவிர பணிப்பாளர் ஒருவரின் மொத்த சேவைக் காலப்பகுதியானது ஒன்பது வருடங்களை விஞ்சலாகாது என்பதுடன் பதவியிலுள்ள அத்தகைய காலப்பகுதியானது 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை அத்தகைய பணிப்பாளரினால் புரியப்பட்ட மொத்த சேவைக் காலப்பகுதியினை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.	இணங்கப்பட்டது. இலங்கை வங்கியின் தற்போதய பணிப்பாளர்கள் ஒன்பது வருடங்களுக்கு குறைவான சேவைக் காலப்பகுதியில் பதவியில் உள்ளனர். அவர்களின் நியமனம் சம்பந்தமான விபரங்கள் இவ் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 35 இலிருந்து 37 வரையில் தரப்பட்டுள்ளன.
3 (2) (iii)	சபைப் பணிப்பாளர்களின் எண்ணிக்கையின் மூன்றிலொரு பங்கினை நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் எண்ணிக்கையானது விஞ்சாதுவிடின் வங்கியின் பணிப்பாளர் ஒருவராக (இத்தினத்திற்குப் பின்னர் "நிறைவேற்றுப் பணிப்பாளர்" ஒருவராக குறிப்பிடப்படும்) வங்கி ஒன்றின் ஓர் ஊழியர் நியமிக்கப்படலாம். அத்தகையதோர் சந்தர்ப்பத்தில், நிறைவேற்றுப் பணிப்பாளர்களில் ஒருவர் வங்கியின் பிரதம நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும்.	இணங்கப்பட்டது. இலங்கை வங்கியில் நிறைவேற்றுப் பணிப்பாளர் எவரும் இல்லை.
3 (2) (iv)	சபையானது குறைந்தது மூன்று சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்கள் அல்லது மொத்தப் பணிப்பாளர் எண்ணிக்கையின் மூன்றிலொரு பங்கு இவற்றில் எது உயர்வானதோ அதனைக் கொண்டிருக்க வேண்டும். இவ் உப வழிகாட்டலானது 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து முன்நோக்கியதாக ஏற்புடையதாதல் வேண்டும்.	இணங்கப்பட்டது. இலங்கை வங்கியின் முழுச் சபையும் ஆறு நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. அவற்றில் ஐந்து பேர் இவ் வழிகாட்டலில் குறித்துரைக்கப்பட்ட தகுதிவிதிகளை அடிப்படையாகக் கொண்டு சுயாதீனப் பணிப்பாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். நிதியமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளரானவர் பங்குதாரரான அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதனால், சுயாதீனமற்ற பணிப்பாளராகக் கருதப்படுகின்றார்.

பிரிவு	கொள்கை	2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் ஒருவர்: அ. வங்கியின் 1% இற்குக் கூடுதலாக நேரடி மற்றும் மறைமுக பங்கு மூலதனத்தைக் கொண்டிருந்தால் ஆ. இதன்கண்ணுள்ள 3 (7) ஆம் இலக்க வழிகாட்டலில் விபரிக்கப்பட்டவாறு, வங்கியின் ஒழுங்குறுத்தல் மூலதனத்தின் 10% இற்கு மேற்பட்டு, வங்கியுடன் ஏதேனும் வியாபாரக் கொடுக்கல் வாங்கலை தற்போது கொண்டிருப்பின் அல்லது பணிப்பாளராக அவரின் நியமனத்திற்கு உடன் முன்வரும் இரு வருட காலப்பகுதியின் போது கொண்டிருந்தால் இ. பணிப்பாளரான நியமனத்திற்கு உடன் முன்வரும் இரு வருட காலப்பகுதியின் போது வங்கியினால் பணிக்கமர்த்தப்பட்டிருந்தால் ஈ. இவ் வங்கியின் அல்லது வேறொரு வங்கியின் ஒரு பணிப்பாளர் அல்லது பிரதம நிறைவேற்று அலுவலர் அல்லது பிரதான முகாமைத்துவ ஆளணியின் ஓர் உறுப்பினர் அல்லது ஒரு குறிப்பிடத்தக்க பங்குதாரராகவுள்ள நெருங்கிய உறவினர் ஒருவரைக் கொண்டிருந்தால். இந் நோக்கத்திற்காக, ஒரு "நெருங்கிய உறவினர்" என்பது வாழ்க்கைத் துணையாக அல்லது நிதி ரீதியில் தங்கியிருக்கும் பிள்ளையொன்றாகப் பொருள்பட வேண்டும் உ. வங்கியின் குறித்த நிறுவனநலனில் அக்கறை உடையோர் ஒருவரைப் பிரதிநிதித்துவம் செய்தால் ஊ. பின்வருமாறு உள்ள கம்பனி அல்லது வியாபார நிறுவனம் ஒன்றில் ஓர் ஊழியராக அல்லது ஒரு பணிப்பாளராக அல்லது குறிப்பிடத்தக்க பங்குதாரர் ஒருவராக இருந்தால்: i. இவ் வழிகாட்டல்களின் 3 (7) ஆம் இலக்க வழிகாட்டலில் வரையறுக்கப்பட்டவாறு, வங்கியின் ஒழுங்குறுத்தல் மூலதனத்தின் 10% இற்கு மேற்பட்டு, வங்கியுடன் ஏதேனும் வியாபாரக் கொடுக்கல் வாங்கலொன்றை தற்போது கொண்டிருக்கும் கம்பனி அல்லது வியாபார நிறுவனம், அல்லது. ii. வங்கியின் ஏனைய பணிப்பாளர்கள் எவரேனும் பணிக்கமர்த்தப்பட்டிருக்கும் அல்லது பணிப்பாளர்களாகவிருக்கும் அல்லது குறிப்பிடத்தக்க பங்குதாரர்களாகவிருக்கும் கம்பனி அல்லது வியாபார நிறுவனம் அல்லது. iii. வங்கியின் ஏனைய பணிப்பாளர்கள் எவரேனும் இவ் வழிகாட்டல்களின் 3 (7) ஆம் இலக்க வழிகாட்டலில் வரையறுக்கப்பட்டவாறு, வங்கியின் ஒழுங்குறுத்தல் மூலதனத்தின் 10% இற்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்கலொன்றை கொண்டிருக்கும் கம்பனி அல்லது வியாபார நிறுவனம் சுயாதீனமுடையவராகக் கருதப்படலாகாது.	அவை 35 இலிருந்து 37 வரையான பக்கங்களில் காணப்படும் பணிப்பாளர்களின் சிறப்பு விபரக் குறிப்புக்களிலும் கீழ்க் காணப்படும் பணிப்புரை இல. 3 (2) (viii) இலும் இனங்காணப்படுகின்றன.
3 (2) (v)	சுயாதீனப் பணிப்பாளர் ஒருவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொருட்டு மாற்றீடான பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படும்.பட்சத்தில் அவ்வாறு நியமிக்கப்படும் ஆள் சுயாதீனப் பணிப்பாளர் ஒருவருக்கு ஏற்புடைய தகுதிவிதிகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.	எந்தவொரு பணிப்பாளரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பொருட்டு மாற்றீடான பணிப்பாளர் எவரும் நியமிக்கப்படவில்லை. (நிதி அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளரிற்கு மாத்திரம் ஒரு மாற்றீட்டுப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார்)
3 (2) (vi)	நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்கள் நம்பகத்தன்மையான முன்னைய பதிவுகளினை கொண்ட ஆட்களாக இருக்க வேண்டும் அத்துடன்/அல்லது தந்திரோபாயம், செயற்றிறன் மற்றும் வளங்கள் குறித்த விடயங்களைத் தொடர்புபடுத்துவதற்கான சுயாதீன தீர்வொன்றைக் கொண்டுவருவதற்கு அவசியமான திறன்களையும் அனுபவத்தையும் கொண்டிருக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. நடைமுறையிலுள்ள பணிப்பாளர்களது சுயவிபரக் குறிப்புகள் மற்றும் தேவையான தகவல்கள் பக்கம் 35-37 ல் கூறப்பட்டுள்ளது.
3 (2) (vii)	சபையின் கூட்டமொன்றில் சமுகமளிக்கும் பணிப்பாளர்களின் எண்ணிக்கையின் அரைவாசிக்கும் கூடுதலானவர்கள் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்களாக இருந்தாலொழிய, அத்தகைய கூட்டத்தில் கூட்ட நடப்பெண்ணை உருவாக்குவதற்குத் தேவைப்படுத்தப்படும் பணிப்பாளர்களின் எண்ணிக்கையினர் சமுகமளிக்கும் போதிலும், அத்தகைய கூட்டமானது உரியவாறு கூட்டப்படலாகாது. இவ் உப வழிகாட்டலானது 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து முன்நோக்கியதாக ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.	இணங்கப்பட்டது. இலங்கை வங்கியின் சகல சபை உறுப்பினர்களும் நிறைவேற்றுத்தரம் சாராதவர்கள்.

பிரிவு	கொள்கை	2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (2) (viii)	வங்கியின் பணிப்பாளர்களின் பெயர்களை வெளிப்படுத்தும் சகல கூட்டாண்மை தொடர்பாடல்களிலும் நிறைவேற்றுத்தரம் சாராத சுயாதீன பணிப்பாளர்கள் உள்ளார்ந்தமாக தெளிவாக இனங்காணப்பட வேண்டும். தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர்கள், நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்கள் மற்றும் நிறைவேற்றுத்தரம் சாராத சுயாதீன பணிப்பாளர்கள் ஆகியோரின் பெயர்கள் உள்ளடங்கலாக சபையின் உள்ளடக்கத்தினை பணிப்பாளர்களின் வகுதிக்கு அமைவாக வருடாந்த கூட்டாண்மை செயலாட்சி அறிக்கையில் வங்கி வெளிப்படுத்த வேண்டும்.	இணங்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சபையானது பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கியது: • **திரு. ரொனால்ட் சி. பெரேரா, ஜனாதிபதி சட்டத்தரணி** சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்/தலைவர் • **திரு சஜித் ஆர். ஆட்டிகல** நிறைவேற்றுத் தரம் சாராத பதவி வழிவந்த பணிப்பாளர் • **திரு. ரணெல் ரீ. விஜேசிங்ஹ** சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் • **திரு. எச். பி. அஜித் குணவர்ந்தன** சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாரா பணிப்பாளர் • **திரு. சரித்த என். விஜேவர்தன** சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் (21.07.2017இல் இருந்து பதவி விலகினார்) • **திரு. சன்ஜய பத்மபெரும** சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் (30.06.2017 இலிருந்து பதவி விலகினார்) • **திரு. மனோ சேகரம்** சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் (06.07.2017இல் அமுலாகும் வகையில் நியமிக்கப்பட்டு 08.09.2017 இலிருந்து பதவி விலகினார்) • **திரு. சமந்த ராஜபக்ஷ** சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் (25.07.2017 இலிருந்து அமுலாகும் வகையில் நியமிக்கப்பட்டார்) • **திரு. மொகான் விஜேசிங்க** சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் (24.11.2017 இலிருந்து அமுலாகும் வகையில் நியமிக்கப்பட்டார்) • **திரு. கனகசபை விமலேந்திரராஜா** (திரு. எஸ். ஆர். ஆட்டிகலவிற்கான மாற்றீட்டுப் பணிப்பாளராக 09.11.2017 இலிருந்து அமுலாகும் வகையில் நியமிக்கப்பட்டார்)
3 (2) (ix)	சபையின் புதிய பணிப்பாளர்களின் நியமனத்திற்காக முறைசார்ந்த, கருத்திற்கொள்ளப்பட்ட மற்றும் வெளிப்படையான நடைமுறையொன்று இருத்தல் வேண்டும். சபைக்கான ஒழுங்கான அடுத்துவரும் நியமனங்களுக்கான நடைமுறைகளும் செயல்வலுவில் இருத்தல் வேண்டும்.	1938 ஆம் ஆண்டு 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் ஏற்பாடுகளின் கீழ் எந்த அமைச்சரின் விடய நோக்கெல்லையின் கீழ் இவ் வங்கி வருகின்றதோ அவ் அமைச்சரின் ஊடாக இலங்கை அரசாங்க பங்குதாரரினால் சபைக்கான நியமனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.
3 (2) (x)	அமைய வெற்றிடம் ஒன்றை நிரப்பும் பொருட்டு நியமிக்கப்படும் சகல பணிப்பாளர்களும் அவர்களின் நியமனத்திற்குப் பின்னரான முதலாவது பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களினால் நடாத்தப்படும் தேர்தல் ஒன்றுக்கு உட்பட வேண்டும்.	உரிய அமைச்சர் அவர்களை நியமிப்பதனால் இச்சந்தர்ப்பம் எழவில்லை.
3 (2) (xi)	பணிப்பாளர் ஒருவர் பதவிவிலகினால் அல்லது பதவியிலிருந்து நீக்கப்படின், சபையானது பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்: அ. வங்கியுடன் உரிய பணிப்பாளரின் உடன்பாடின்மை தொடர்பிலான தகவல்கள் ஏதுமிருப்பின் அவற்றை உள்ளடக்கி ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாமல் பணிப்பாளரின் பதவிவிலகல் அல்லது பதவிநீக்கம் பற்றியும் மற்றும் அத்தகைய பதவிவிலகல் அல்லது பதவிநீக்கத்திற்கான காரணங்கள் பற்றியும் அறிவித்தல் அத்துடன்.	இணங்கப்பட்டது. தனித்த பங்குதாரரான இலங்கை அரசாங்கமானது நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஊடாக நியமனங்களையும் அதேபோன்று பதவி நீக்கங்களையும் மேற்கொள்கின்றது. ஏதேனும் பதவி விலகலும் அதே அமைச்சரிடம் தொடர்புபடுத்தப்படுகின்றது. இப் பதவிவிலகல்கள் பற்றி இலங்கை மத்திய வங்கி மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனை ஆகியவற்றுக்கு அறிவிக்கப்படுகின்றது.
	ஆ. பங்குதாரர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட வேண்டிய ஏதேனும் விடயங்கள் உள்ளனவா அல்லது இல்லையா என்பது பற்றி உறுதிப்படுத்தும் கூற்று ஒன்றை வெளியிடுதல்.	குறிப்பிடத்தக்க தேவையான எந்தவொரு விடயமும் இல்லை. வங்கியின் பங்குதாரர் அரசாங்கம் மற்றும் பணிப்பாளர்களின் மாற்றங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சினூடாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.
3 (2) (xii)	வங்கி ஒன்றின் துணைக் கம்பனியாக அல்லது இணைக் கம்பனி ஒன்றாக இன்னொரு வங்கியானது உள்ள சந்தர்ப்பம் தவிர அத்தகைய வங்கியின் பணிப்பாளர் ஒருவராக முதலில் குறிப்பிடப்பட்ட வங்கியின் ஒரு பணிப்பாளர் அல்லது ஓர் ஊழியர் நியமிக்கப்படவோ, தேர்வு செய்யப்படவோ அல்லது பெயர் குறித்துநியமிக்கப்படவோ கூடாது.	இவ் வங்கியின் அமுலாக்கச் சட்டவாக்கத்தின் (2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டம்) தேவைப்பாடுகளுக்கு அமைவாக பிரதேச அபிவிருத்தி வங்கிக்கான ஒரு பிரதிப் பொது முகாமையாளர் நியமனத்திற்கான சந்தர்ப்பம் நீங்கலாக இலங்கை வங்கியின் பணிப்பாளர்களோ அல்லது ஊழியர்களோ இன்னொரு வங்கியின் பணிப்பாளர்களாக இருக்கவில்லை.

பிரிவு	கொள்கை	2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (3)	**பணிப்பாளர்களின் உடலுறுதி மற்றும் பொருத்தப்பாட்டினை அளவிடுவதற்கான தகுதிவிதிகள்**	
3 (3) (i)	பணிப்பாளராகச் சேவையாற்றும் ஆளொருவரின் வயது 70. இற்கு மேற்படலாகாது. இச் சூழமைவில், பின்வரும் பொதுவான விதிவிலக்கு ஏற்புடையதாதல் வேண்டும்: 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலுள்ளவாறு 70 வயதை எட்டியுள்ள அல்லது 2008 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னராக 70 வயதை எட்டும் பணிப்பாளர் ஒருவர் 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கும் ஆகக்கூடிய மூன்று வருட மேலதிக காலப்பகுதிக்கு பதவியில் தொடரலாம்.	இணங்கப்பட்டது. இவ் வங்கியின் எந்தவொரு பணிப்பாளரும் 70 வயதிற்கு மேற்படவில்லை.
3 (3) (ii)	வங்கியின் துணைக் கம்பனிகள் அல்லது இணைக் கம்பனிகள் உள்ளடங்கலாக 20 இற்கு மேற்பட்ட கம்பனிகளின்/தானங்களின்/ நிறுவனங்களின் பணிப்பாளர் ஒருவராக ஓர் ஆள் பதவி வகித்தலாகாது.	இணங்கப்பட்டது. 20 இற்கு மேற்பட்ட கம்பனிகளின்/தானங்களின் பணிப்பாளர் பதவிநிலையை எந்தவொரு பணிப்பாளரும் வகிக்கவில்லை.
3 (4)	**சபையினால் கையளிக்கப்படும் முகாமைத்துவ தொழிற்பாடுகள்**	
3 (4) (i)	பணிப்பாளர்கள் அமுலிலுள்ள கையளித்தல் ஏற்பாடுகள் பற்றி கவனமாக ஆராய்ந்து தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.	இணங்கப்பட்டது.
3 (4) (ii)	சபையின் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான சபையின் ஆற்றலினை முழுமையாக அத்தகைய கையளிப்பானது குறிப்பிடத்தக்களவிற்கு தடைப்படுத்தும் அல்லது குறைக்கும் அளவிற்கு ஏதேனும் விடயங்களை சபைக் குழுவொன்றுக்கு, பிரதம நிறைவேற்று அலுவலருக்கு, நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு அல்லது பிரதான முகாமைத்துவ ஆளணிக்கு சபை கையளித்தலாகாது.	சபையானது அமுலிலுள்ள கையளித்தல் ஏற்பாடுகளை காலக்கிரமமாக மீளாய்வு செய்து அங்கீகரிக்கின்றது அத்துடன் கையளித்தல் பரப்புக்கள் வங்கியின் தேவைகளைக் கவனத்தில் கொண்டுள்ளமையை உறுதிப்படுத்தும் அதேவேளை சபை அதன் தொழிற்பாடுகளை பயனுறுதிவாய்ந்த வகையில் நிறைவேற்றுவதற்கும் ஏதுவாகின்றது.
3 (4) (iii)	சபையானது காலக்கிரம அடிப்படையில் அமுலிலுள்ள கையளித்தல் செய்முறைகளை, அவை வங்கியின் தேவைகளுக்குரியதாக காணப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு மீளாய்வு செய்தல் வேண்டும்.	இச் செயன்முறையின் போது ஆளுகைக் கட்டளைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் கருத்திற் கொள்ளப்படுகின்றன.
3 (5)	**தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர்**	
3 (5) (i)	தலைவரினதும் பிரதம நிறைவேற்று அலுவலரினதும் வகிபாகங்கள் வெவ்வேறாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒரே தனியாளினால் ஆற்றப்படலாகாது.	இணங்கப்பட்டது. தலைவரினதும் இலங்கை வங்கியில் பொது முகாமையாளராகக் குறிப்பிடப்படும் பிரதம நிறைவேற்று அலுவலரினதும் வகிபாகங்கள் இரு வேறு தனியாட்களினால் வகிக்கப்படுகின்றன. தலைவரினதும் பொது முகாமையாளரினதும் பொறுப்புக்களை வரைவிலக்கணப்படுத்தும் சபை சாசனமொன்று அமுலிலுள்ளது.
3 (5) (ii)	தலைவர் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் ஒருவராகவும் அதே போன்று பொருத்தமுடையதாக சுயாதீனப் பணிப்பாளர் ஒருவராகவும் இருத்தல் வேண்டும். தலைவர் சுயாதீனப் பணிப்பாளர் ஒருவராக இல்லாத பட்சத்தில், சபையானது சிறந்த சுயாதீன ஆக்கக்கூறு ஒன்றை உறுதிப்படுத்தும் பொருட்டு பொருத்தமுடையதாக ஆவணப்படுத்தப்பட்ட விடய ஆய்வெல்லையுடன் சேர்த்து சிரேஷ்ட பணிப்பாளராக சுயாதீனப் பணிப்பாளர் ஒருவரை பதவியிலமர்த்த வேண்டும். சிரேஷ்ட பணிப்பாளரின் பதவிப்பெயரானது வங்கியின் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.	இணங்கப்பட்டது. இலங்கை வங்கியின் தலைவர் ஒரு சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் ஆவார். ஆகையால் ஒரு சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளரினை நியமிப்பதற்கான தேவை எழவில்லை.
3 (5) (iii)	தலைவரினதும் பிரதம நிறைவேற்று அலுவலரினதும் அடையாளம் மற்றும் தலைவரிற்கும் பிரதம நிறைவேற்று அலுவலருக்கும் இடையிலான ஏதேனும் உறவுமுறை நிதி, வியாபார, குடும்ப அல்லது ஏனைய பொருண்மையான/உரிய உறவு (உறவுகள்) உள்ளடங்கலாக வகை ஏதுமிருப்பின் அவ் வகை மற்றும் சபை உறுப்பினர்களுக்கிடையிலான உறவுகள் ஆகியவற்றை சபையானது அதன் ஆண்டறிக்கையின் முக்கியமான பகுதியொன்றாக இருக்க வேண்டிய அதன் கூட்டாண்மை செயலாட்சி அறிக்கையில் வெளிப்படுத்த வேண்டும்.	இணங்கப்பட்டது. தலைவர் மற்றும் பொது முகாமையாளரின் அடையாளம் இவ் ஆண்டறிக்கையின் 12 தொடக்கம் 22 வரையான பக்கங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், இவ் வகிபாகங்களுக்கான பல குறிப்பீடுகள் அதில் தொடர்ந்தும் காணப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டு இறுதியிலுள்ளதாகப் பெறப்பட்ட வருடாந்த வெளிப்படுத்தல்களுக்கு அமைவாக சபையின் தலைவர், பொது முகாமையாளர் மற்றும் ஏனைய சபை உறுப்பினர்களுக்கிடையில் குறிப்பிடத்தக்களவிலான, நிதி, வியாபார அல்லது குடும்ப உறவு முறைகள் எதுவும் இல்லை.

பிரிவு	கொள்கை	2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (5) (iv)	தலைவரானவர்: (அ)சபைக்கு தலைமைத்துவத்தினை வழங்க வேண்டும் (ஆ)சபை பயனுறுதிவாய்ந்த வகையில் தொழிற்படுகிறது என்பதையும் அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றது என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும் அத்துடன் (இ) சகல பிரதான மற்றும் பொருத்தமான விடயங்கள் யாவும் சபையினால் உரியநேரத்தில் கலந்துரையாடப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.	இணங்கப்பட்டது.
3 (5) (v)	ஒவ்வொரு சபைக் கூட்டத்திற்குமான நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்குவதற்காக ஏனைய பணிப்பாளர்களினால் பிரேரிக்கப்படும் ஏதேனும் விடயங்களைப் பொருத்தமுடையதாக கவனத்திற்கு எடுத்து, அந் நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து அங்கீகரிக்கும் பிரதான பொறுப்பினை தலைவர் கொண்டிருக்க வேண்டும். கம்பனிச் செயலாளருக்கு நிகழ்ச்சிநிரல் தயாரிப்புக் கடமையினைத் தலைவர் கையளிக்கலாம்.	இணங்கப்பட்டது. சபைத் தலைவரின் கையளிக்கப்பட்ட அதிகாரத்திற்கமைய பொதுமுகாமையாளரூடாக சமர்ப்பிக்கப்படும் பத்திரங்கள் மற்றும் சபை உறுப்பினரால் கூறப்பட்ட ஏதாவது ஏனைய சம்பந்தப்பட்ட விடயத்தினை அடிப்படையாகக் கொண்டு வங்கியின்/சபையின் செயலாளரால் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படுகின்றது.
3 (5) (vi)	சபைக் கூட்டங்களில் எழுகின்ற விடயங்கள் குறித்து சகல பணிப்பாளர்களிற்கும் உரியவாறு விளக்கம் அளிக்கப்படுகின்றது என்பதை தலைவர் உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன் உரிய நேரத்தில் பணிப்பாளர்கள் போதுமான தகவல்களைப் பெற்றுக்கொள்கின்றனர் என்பதையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.	இணங்கப்பட்டது. சபைத் கூட்டங்களில் எழுகின்ற விடயங்கள் குறித்து சபைக்கு போதுமான விளக்கம் மற்றும் தகவல் வழங்கப்பட்டுள்ளது என்பதை தலைவர் உறுதிப்படுத்துகின்றார். இதனை உறுதிசெய்வதற்கு பின்வரும் நடைமுறைகள் அமுலில் உள்ளன: • சபை பத்திரங்கள் சபை கூட்டத்திற்கு ஏழு நாட்களிற்கு முன்னர் பாதுகாப்பான இலத்திரன்சார் இணைப்பினூடாக அனுப்பப்படுகின்றன. • விளக்கமளிப்பதற்கும் தெளிவூட்டுவதற்கும் முகாமைக் குழுவின் தொடர்புடைய உறுப்பினர்கள் தயாராகவுள்ளனர். • பணிப்பாளர்கள் வங்கியின் செயலுறுதித் தன்மை மற்றும் உறுதிப்பாட்டினை அளவிடுவதற்கு ஏதுவாக ஒழுங்கான அடிப்படையில் ஏற்கப்பட்ட வடிவத்தில் முகாமைத்துவத் தகவல்கள் கிரமமான முறையில் வழங்கப்படுகின்றன. • வங்கியின் செலவில் தேவையடிப்படையில் சுயாதீன தொழிற்துறை ஆலோசனை பெறுவதற்கு பணிப்பாளர்களிற்கு இயலும்.
3 (5) (vii)	சபையின் அலுவல்களுக்கான முழுமையானதும் முனைப்பானதுமான பங்குபற்றலினை செய்யும் பொருட்டு சகல பணிப்பாளர்களையும் தலைவர் ஊக்கப்படுத்த வேண்டும் என்பதுடன் வங்கியின் அதிசிறந்த நலனிற்காக சபை செயற்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கான தலைமைத்துவத்தையும் வகிக்க வேண்டும்.	இணங்கப்பட்டது.
3 (5) (viii)	தலைவர் குறிப்பாக நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்களின் பயனுறுதி வாய்ந்த பங்குபற்றலுக்கு உதவ வேண்டும் என்பதுடன் நிறைவேற்றுத்தரம் சார்ந்த மற்றும் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்களுக்கிடையில் ஆக்கபூர்வமான உறவுகளை உறுதிப்படுத்தவும் வேண்டும்.	இணங்கப்பட்டது. முழுச் சபையும் நிறைவேற்றுத்தரம் சாராத சகல பணிப்பாளர்களையும் உள்ளடக்கியுள்ளது.
3 (5) (ix)	பிரதான முகாமைத்துவ ஆளணியின் நேரடி மேற்பார்வை உள்ளடங்கும் செயற்பாடுகளிலும் வேறு ஏதேனும் நிறைவேற்றுக் கடமைகள் யாவற்றிலும் தலைவர் ஈடுபடலாகாது.	இணங்கப்பட்டது. தலைவர் ஒரு சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் ஆவதுடன் பிரதான முகாமைத்துவ ஆளணியின் நேரடி மேற்பார்வையில் அல்லது வேறு ஏதேனும் நிறைவேற்றுக் கடமைகளில் சம்பந்தப்படுவதில்லை.
3 (5) (x)	பங்குதாரர்களுடன் பயனுறுதி வாய்ந்த தொடர்பாடல் பேணப்படுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதையும் பங்குதாரர்களின் கருத்துக்கள் சபைக்கு தொடர்புபடுத்தப்படுவதையும் தலைவர் உறுதிப்படுத்த வேண்டும்.	இணங்கப்பட்டது. தனித்த பங்குதாரரான இலங்கை அரசாங்கத்துடன் பயனுறுதி வாய்ந்த தொடர்பாடல் பேணப்படுகின்றது. சபைக்கும் பங்குதாரருக்கும் இடையிலான ஊடாகமாக பதவி வழிவந்த பணிப்பாளர் செயற்படுகின்றார்.
3 (5) (xi)	வங்கி நடவடிக்கைகள் மற்றும் வியாபாரத்தின் நாளாந்த முகாமைத்துவத்துக்குப் பொறுப்பான அதியுயர் நிறைவேற்று அதிகாரியாக பிரதம நிறைவேற்று அலுவலர் தொழிற்பட வேண்டும்.	இணங்கப்பட்டது. வங்கியின் நாளாந்த நடவடிக்கைகளுக்கு பொது முகாமையாளரே பொறுப்பாவார். பொது முகாமையாளரின் அத்தகைய அதிகாரம் பற்றி சபைச் சாசனம் தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

பிரிவு	கொள்கை	2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (6)	**சபை நியமித்த குழுக்கள்**	
3 (6) (i)	இவ் வழிகாட்டல்களின் 3 (6) (ii), 3 (6) (iii), 3 (6) (iv) மற்றும் 3 (6) (v) ஆம் வழிகாட்டல்களில் விதித்துரைக்கப்பட்டவாறு குறைந்தது நான்கு சபைக் குழுக்களை ஒவ்வொரு வங்கியும் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் சபைக்கு நேரடியாக அறிக்கையிட வேண்டும். சகல குழுக்களும் குழுத் தலைவரின் மேற்பார்வையின் கீழ் கூட்டங்களை ஒழுங்குபடுத்தி கூட்ட அறிக்கைகள், பதிவுகள் போன்றவற்றைப் பேணும் பொருட்டு செயலாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும். சபையானது ஒவ்வொரு குழுக்களினதும் செயற்றிறன் பற்றிய அறிக்கையொன்றை, வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் அவற்றின் கடமைகள் மற்றும் வகிபாகங்கள் தொடர்பில் சமர்ப்பிக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. சபைக்கு நேரடியாக அறிக்கையிடுகின்ற, இவ் வழிகாட்டலின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு நான்கு சபை உப குழுக்கள் (அப்படிப்பட்டதாக, கணக்காய்வு, மனித வளங்களும் ஊதியமும், பெயர்குறித்த நியமனமும் கூட்டாண்மை ஆட்சியும் குழு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழு) தாபிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு உபகுழுவிற்குமான விடய ஆய்வெல்லையானது அமுலில் உள்ளதுடன் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுகின்றன. இலங்கை வங்கியின் செயலாளர்/சபை செயலாளர் அனைத்து உப குழுக்களினதும் செயலாளராக சேவையாற்றுவதுடன் உரிய தலைவர்களின் மேற்பார்வையுடன் கூட்ட அறிக்கைகள் போன்றவற்றைப் பேணுகின்றார். உபகுழுக்களின் அறிக்கைகள் இவ் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கணக்காய்வு குழு பக்கங்கள் 70 இலிருந்து 73 வரை. ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழு பக்கங்கள் 74 மற்றும் 75 வரை. மனித வளங்களும் ஊதியமும் குழு பக்கம் 76. பெயர்குறித்த நியமனமும் கூட்டாண்மை ஆட்சியும் குழு பக்கம் 77 அரசாங்கம் இவ் வங்கியின் தனித்த பங்குதாரராக இருந்து, இவ் வங்கியின் ஆண்டறிக்கையானது இலங்கை பாராளுமன்றத்திற்கும் உரிய அமைச்சுக்களுக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
3 (6) (ii)	கணக்காய்வு குழு தொடர்பில் பின்வரும் விதிகள் ஏற்புடையதாதல் வேண்டும். அ. கணக்கீடு அத்துடன்/அல்லது கணக்காய்வில் தகைமையும் அனுபவத்தையும் கொண்ட சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளராக குழுத் தலைவர் இருத்தல் வேண்டும்.	இணங்கப்பட்டது. 36 ஆம் பக்கத்திலுள்ள சுயவிபரக் குறிப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவையான தகைமைகளை கொண்ட ஒரு சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளரே கணக்காய்வு குழுவின் தலைவர் ஆவார்.
	ஆ. குழுவின் சகல உறுப்பினர்களும் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்களாக இருக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. குழுவின் சகல உறுப்பினர்களும் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்களாவர்.
	இ. குழுவானது பின்வருவனவற்றுடன் தொடர்புபட்ட விடயங்கள் பற்றிய பரிந்துரைகளைச் செய்ய வேண்டும்: (i) உரிய நியதிச்சட்டங்களிற்கு ஒத்திசைவாக வழங்கப்படவுள்ள கணக்காய்வுச் சேவைகளுக்கான வெளியகக் கணக்காய்வாளரின் நியமனம் (ii) காலத்திற்குக் காலம் கணக்காய்வாளர்களுக்கு வழங்கப்படும் மத்திய வங்கி வழிகாட்டல்களின் அமுலாக்கம் (iii) உரிய கணக்காய்வு நியமங்களின் பிரயோகம் அத்துடன் (iv) கணக்காய்வுப் பங்காளரினைப் பணிக்கமர்த்தலானது ஐந்து வருடங்களை விஞ்சாதிருப்பின், அத்துடன் குறித்த கணக்காய்வுப் பங்காளரானவர் முன்னைய பதவிக்கால முடிவுத் திகதியிலிருந்து மூன்று வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் கணக்காய்வுக்காக மீளப் பணிக்கமர்த்தப்படவில்லையாயின் கணக்காய்வாளரின் சேவைக்காலம், கணக்காய்வுக் கட்டணம் மற்றும் ஏதேனும் பதவிவிலகல் அல்லது பதவிநீக்கம்.	இணங்கப்பட்டது. விடய ஆய்வெல்லைக்கு இணங்க, கணக்காய்வுக் குழுவானது மற்றைய பலவற்றுக்கிடையில் பின்வரும் பரிந்துரைகளைச் செய்கின்றது: • காலத்திற்குக் காலம் கணக்காய்வாளர்களுக்கு வழங்கப்படும் மத்திய வங்கி வழிகாட்டல்களின் அமுலாக்கம். • உரிய கணக்காய்வு நியமங்களின் பிரயோகம். கணக்காய்வாளர் நாயகமானவர் இவ் வங்கியின் வெளியகக் கணக்காய்வாளராக இருப்பதனால், வெளியகக் கணக்காய்வாளரின் பணிக்கமர்த்தலில் செயற்படுவதற்கான எந்தவொரு வகிபாகத்தையும் இக் குழு கொண்டிருக்கவில்லை.
	ஈ. ஏற்புடைய நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கிணங்க வெளியக கணக்காய்வாளரின் சுதந்திரம் மற்றும் குறிக்கோள் அத்துடன் கணக்காய்வு செயல்முறையின் பயனுறுதித் தன்மை ஆகியவற்றை குழுவானது மீளாய்வு செய்து கண்காணிக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. கணக்காய்வாளர் நாயகமே வங்கியின் கணக்காய்வாளர் ஆகையால் இலங்கை அரசியலமைப்பிற்கு அமைவாக அவருடைய சுதந்திரம் மற்றும் பயனுறுதித்தன்மைக்கு உத்தரவாதம் உள்ளது. அவ்வாறே கணக்காளர் நாயகமும் அவரிற்கு வங்கியின் கணக்காய்வு நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு உதவுவதன் நியமிக்கப்படும் எந்தவொரு கணக்காய்வாளரின் சுதந்திரத்தினை உறுதி செய்ய வேண்டும்.

பிரிவு	கொள்கை	2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	உ. உரிய நியதிச்சட்டங்கள், ஒழுங்குவிதிகள், தேவைப்பாடுகள் மற்றும் வழிகாட்டல்கள் ஆகியவற்றின் கீழ் அனுமதிக்கப்பட்ட கணக்காய்வு சாராத சேவைகளை வழங்கும் பொருட்டு வெளியகக் கணக்காய்வாளர் ஒருவரைப் பணிக்கமர்த்தல் தொடர்பான கொள்கை ஒன்றை குழுவானது விருத்தி செய்து நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யும் போது, கணக்காய்வு சாராத சேவைகளின் வெளியகக் கணக்காய்வாளர் ஒருவரின் மூலமான ஏற்பாடானது வெளியகக் கணக்காய்வாளரின் சுதந்திரம் மற்றும் குறிக்கோளை பாதிப்பதில்லை என்பதை குழு உறுதிப்படுத்த வேண்டும். கணக்காய்வு சாராத சேவைகளின் ஏற்பாடு தொடர்பில் வெளியகக் கணக்காய்வாளரின் சுதந்திரம் மற்றும் குறிக்கோளை மதிப்பிடும் போது குழுவானது பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ள வேண்டும்: (i) கணக்காய்வு நிறுவனமொன்றின் திறன்களும் அனுபவமும் கணக்காய்வு சாராத சேவைகளின் பொருத்தமான வழங்குனராக அதனை உருவாக்குகின்றதா (ii) வெளியகக் கணக்காய்வாளரின் மூலமான அத்தகைய சேவைகளின் ஏற்பாட்டிலிருந்து விளையப்பெறும் கணக்காய்வினை நடாத்தும் போது குறிக்கோள் அத்துடன்/அல்லது சுதந்திரம் மீது அச்சுறுத்தல் எதுவுமில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கான பாதுகாப்புமுறைகள் அமுலில் உள்ளனவா அத்துடன் (iii) கணக்காய்வு சாராத சேவைகளின் தன்மை, தொடர்புபட்ட கட்டண மட்டங்கள் மற்றும் கணக்காய்வு நிறுவனத்துக்குரியதாக தனித்தனியாகவும் மொத்தமாகவும் உள்ள கட்டண மட்டங்கள் என்பன வெளியகக் கணக்காய்வாளரின் குறிக்கோள் அத்துடன்/அல்லது சுதந்திரம் மீது ஏதேனும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றதா.	இணங்கப்பட்டது. கணக்காய்வாளர் நாயகமே வங்கியின் கணக்காய்வாளர் ஆகையால் இவ்வகையான சந்தர்ப்பம் ஏற்படவில்லை. எவ்வாறாயினும், குழுவானது கணக்காளர் நாயகத்தினால் கணக்காய்வ சாராத வங்கியின் சேவைகளைக் கணக்காய்வு செய்வதற்காக அவரிற்கு உதவி புரிவதற்கு கணக்காய்வு நிறுவனத்தினை நியமனம் செய்யும் ஏற்பாடானது அந்நிறுவனத்தின் சுதந்திரத்தனையும் குறிக்கோளையும் பாதிக்காமையை உறுதி செய்கின்றது.
	ஊ. குழுவானது கணக்காய்வு ஆரம்பிக்கும் முன்னர் பின்வருவன உள்ளடங்கலாக கணக்காய்வின் தன்மை மற்றும் நோக்கெல்லை பற்றி வெளியகக் கணக்காய்வாளர்களுடன் கலந்துரையாடி முடிவுக்கு வர வேண்டும்: (i) கூட்டாண்மை ஆளுகை தொடர்பில் உரிய வழிகாட்டல்களுடன் வங்கியின் இணக்கப்பாட்டு மதிப்பீடு மற்றும் நிதி அறிக்கையிடல் மீது முகாமையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் (ii) உரிய கணக்கீட்டுக் கொள்கைகளுக்கிணங்க வெளியக நோக்கங்களுக்காக நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் அறிக்கையிடல் கடப்பாடுகள் அத்துடன் (iii) ஒன்றுக்கு மேற்பட்ட கணக்காய்வு நிறுவனங்கள் உள்ளடங்கும் நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு	இணங்கப்பட்டது. கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் பரப்பு என்பன கணக்காய்வாளர் நாயகத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன அத்துடன் கணக்காய்வாளர் நாயகத்திற்கு உதவுகின்ற பட்டயக் கணக்காளரான கே.பி.எம்.ஜி (KPMG) நிறுவனத்தினால் அளவு மற்றும் தொடர்புடைய இடரினை கருத்திற்கொண்டு நோக்கெல்லைக்கான மேலதிக மாற்றங்கள்/திருத்தங்களை மேற்கொள்ள முடியும் எனக் கூறப்பட்டுள்ளது. கே.பி.எம்.ஜி (KPMG) நிறுவனமானது 2017 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வுத் திட்டத்தினை சமர்ப்பித்துள்ளதுடன் குழுவானது இதற்கு உடன்பட்டுள்ளது.
	எ. வெளிப்படுத்தல்களிற்காக தயாரிக்கப்படும் வங்கியின் நிதிக் கூற்றுக்கள், அதன் ஆண்டறிக்கை, கணக்குகள் மற்றும் காலாண்டு அறிக்கைகள் மற்றும் அவை கொண்டுள்ள குறிப்பிடத்தக்க நிதியியல் அறிக்கையிடல் தீர்மானங்கள் ஆகியவற்றின் ஒழுங்கமைப்பினை மேற்பார்வை செய்வதற்காக வங்கியின் நிதியியல் தகவல்களை கணக்காய்வு குழு மீளாய்வு செய்ய வேண்டும். சபைக்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் வங்கியின் ஆண்டறிக்கை, கணக்குகள் மற்றும் காலாண்டு அறிக்கைகள் ஆகியவற்றை மீளாய்வு செய்யும் போது, சபையானது குறிப்பாக பின்வருவனவற்றில் கவனம் செலுத்த வேண்டும்: (i) முக்கிய தீர்மான பிரிவுகள் (ii) கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் ஏதாவது மாற்றங்கள் (iii) கணக்காய்விலிருந்து எழுகின்ற முக்கியமான சீராக்கங்கள் (iv) தொடர்ந்து செல்லல் எடுகோள் அத்துடன் (v) தொடர்புடைய கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய சட்டத் தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாடு.	இணங்கப்பட்டது. வங்கியின் மாதாந்த, காலாண்டு ரீதியான மற்றும் வருடாந்த நிதி விடயங்களை மீளாய்வு செய்யும் போது குழுவினால் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான செய்முறையொன்று உள்ளதுடன் சபைக்கு பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
	ஏ. குழுவானது இடைக்கால மற்றும் இறுதிக் கணக்காய்வில் எழுகின்ற விடயங்கள், பிரச்சினைகள் மற்றும் ஒதுக்கீடுகள் பற்றியும், அத்துடன் அவசியப்படின், பிரதான முகாமைத்துவ ஆளணியினர் வருகைதராத போது கலந்துரையாடப்படக்கூடிய அவ் விடயங்கள் உள்ளடங்கலாக கணக்காய்வாளர் கலந்துரையாட விரும்பக்கூடிய ஏதேனும் விடயங்கள் பற்றியும் கலந்துரையாட வேண்டும்.	இணங்கப்பட்டது. இடைக்கால மற்றும் இறுதிக் கணக்காய்வில் எழுகின்ற விடயங்கள், பிரச்சினைகள் மற்றும் ஒதுக்கீடுகள் பற்றி குழு கலந்துரையாடுகின்றது. தேவையாயின் கணக்காய்வாளர் நாயகத்திற்கு உதவிபுரிந்த கே.பி.எம்.ஜி (KPMG) நிறுவன பிரதிநிதிகளுடன் கணக்காய்வாளர் கூட்டங்கள் நடைபெறும்போது உடனிருந்தனர்.

பிரிவு	கொள்கை	2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	ஐ. வெளியகக் கணக்காய்வாளர்களின் முகாமைத்துவ கடிதம் மற்றும் அதற்கான முகாமையின் பதில் ஆகியன குழுவினால் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.	இணங்கப்பட்டது.
	ஒ. வங்கியின் உள்ளக கணக்காய்வு தொழிற்பாடு குறித்து பின்வரும் நடவடிக்கைகளைக் குழு எடுக்க வேண்டும்: (i) உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் நோக்கெல்லை, தொழிற்பாடுகள் மற்றும் வளங்களின் போதுமானதன்மையினை மீளாய்வு செய்தல், மற்றும் திணைக்களமானது அதன் பணியை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான அதிகாரத்தினைக் கொண்டுள்ளது என்பதில் சுய திருப்தி கொள்தல்;	இணங்கப்பட்டது. குழு உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் நோக்கெல்லை, தொழிற்பாடுகள் மற்றும் வளங்களின் போதுமை தன்மையை மீளாய்வதுடன் அவை சம்பந்தமான தேவையான பரிந்துரைகளை மேற்கொள்கின்றது.
	(ii) உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் உள்ளக கணக்காய்வு செய்முறைப் பெறுபேறுகளை மீளாய்வு செய்தல், மற்றும் அவசியமானவிடத்து, உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் பரிந்துரைகளின் பேரில் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதிப்படுத்தல்;	இணங்கப்பட்டது. குழுவானது உள்ளக் கணக்காய்வு நிகழ்ச்சி திட்டங்களையும் அதன் முடிவுகளையும் மீளாள்வு செய்வதுடன் அவற்றின் மேம்படுத்தலிற்கான தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையை உறுதி செய்கின்றது.
	(iii) உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் தலைவர் மற்றும் சிரேஷ்ட அலுவலர்களின் ஏதேனும் செயல்நிறைவேற்ற மதிப்பீட்டினை அல்லது கணிப்பீட்டினை மீளாய்வு செய்தல்;	இணங்கப்பட்டது. பிரதம உள்ளக கணக்காய்வாளரின் செயற்றிறன் மதிப்பீடு, பணிச் செய்முறை மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டின் பெறுபேறுகள் ஆகியன கணக்காய்வுக் குழுவினால் மதிப்பிடப்பட்டுள்ளன. சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுச் செய்முறைக்கு இணங்க பிரதம உள்ளக கணக்காய்வாளரினால் சிரேஷ்ட அலுவலர்களின் செயற்றிறன் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதுடன் கணக்காய்வுக் குழுவுக்கு முன் சமர்ப்பிக்கப்பட்டது.
	(iv) தலைவர், சிரேஷ்ட அலுவலர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டிற்கான வெளித்தரப்பு சேவை வழங்குனர்கள் ஆகியோரின் ஏதேனும் நியமனம் அல்லது பதவி முடிவுறுத்தல் குறித்துப் பரிந்துரை செய்தல்;	இணங்கப்பட்டது.
	(v) பிரதம உள்ளக கணக்காய்வாளர் உள்ளடங்கலாக உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் சிரேஷ்ட அலுவலர்களினதும் யாரேனும் வெளித்தரப்பு சேவை வழங்குனர்களினதும் பதவி விலகலினை குழு மதிப்பீடு செய்வதையும் அத்துடன் பதவி விலகும் சிரேஸ்ட ஊழியர்கள் மற்றும் வெளித்தரப்பு சேவை வழங்குனர்கள் அதற்கான காரணத்தினை சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பத்தினை வழங்குவதையும் உறுதிசெய்தல்.	இணங்கப்பட்டது. இந்த ஆண்டின் போது அத்தகைய சூழ்நிலை எழுந்திருக்கவில்லை.
	(vi) உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடானது அவை கணக்காய்வு செய்யும் செயற்பாடுகளில் இருந்து சுயாதீனமானது என்பதையும் இத் தொழிற்பாடானது பாரபட்சமற்றதாகவும் திறமையாகவும் மற்றும் உரிய தொழில்சார்ந்த கவனத்துடனும் ஆற்றப்படுவதையும் உறுதி செய்தல்.	இணங்கப்பட்டது. இவ் வங்கியின் நிறுவனக் கட்டமைப்புக்கு இணங்க, கணக்காய்வுக் குழுவுக்கு ஊடாக பிரதம உள்ளக கணக்காய்வாளரானவர் சபைக்கு நேரடியாக அறிக்கையிடுவதுடன் இவ் வங்கியின் ஏதேனும் நடவடிக்கைகள் தொடர்பில் அவர் சுயாதீனமுடையவராவார்.
	ஓ. உள்ளக விசாரணைகளின் பிரதான முடிவுகளினையும் அவற்றிற்கான முகாமைத்துவத்தின் பதில்களையும் குழு கருத்திற்கொள்ள வேண்டும்	இணங்கப்பட்டது. உள்ளக விசாரணைகளின் பிரதான முடிவுகளினையும் அவற்றிற்கான முகாமைத்துவத்தின் பதில்களையும் கணக்காய்வு குழு மீளாய்வு செய்துள்ளது.
	ஔ. பிரதம நிதி அலுவலர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் வெளியக கணக்காய்வாளர்களின் ஒரு பிரதிநிதி ஆகியோர் சாதாரணமாக கூட்டங்களுக்கு சமுகமளிக்கலாம். ஏனைய சபை உறுப்பினர்களும் பிரதம நிறைவேற்று அலுவலருங்கூட குழுவின் அழைப்பின் பேரில் கூட்டங்களுக்கு சமுகமளிக்கலாம். எவ்வாறாயினும், ஆண்டுக்கு குறைந்தது இரு தடவையாவது, குழுவானது நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் பிரசன்னமின்றி வெளியகக் கணக்காய்வாளர்களுடன் சந்திப்பினை மேற்கொள்ள வேண்டும்.	இணங்கப்பட்டது. பொது முகாமையாளர், பிரதம நிதி அலுவலர், பிரதம இடர் அலுவலர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், இணக்கப்பாட்டு அதிகாரி, கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதி மற்றும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்ட கே.பி.எம்.ஜி (KPMG) நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் குழுவின் கூட்டங்களில் பங்குபற்றினர். பொது முகாமையாளர் குழுவின் அழைப்பின் பேரில் கூட்டங்களுக்கு சமுகமளித்துள்ளார். முகாமைத்துவ உறுப்பினர்கள், ஏதாவது விளக்கங்கள் தேவைப்படின், அழைக்கப்படுவர். தேவை ஏற்பட்டபோது வெளியக கணக்காளர்களுடன் “மூடிய கதவு” கூட்டம் முகாமைத்துவ சமுகமளிப்பின்றி இடம்பெற்றது.

பிரிவு	கொள்கை	2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	க. குழுவானது பின்வருவனவற்றைக் கொண்டிருக்க வேண்டும்: (i) எந்தவொரு விடயத்தையும் அதன் ஆய்வெல்லைக்குள் விசாரணை செய்வதற்கான வெளிப்படையான அதிகாரம்; (ii) அக் குழு அவ்வாறு செய்வதற்குத் தேவையான வளங்கள் (iii) முழுமையான தகவல் கிடைப்பனவு அத்துடன் (iv) வெளியக தொழிற்துறை ஆலோசனையை பெறுவதற்கு மற்றும் தேவை ஏற்படின் அதனுடன் தொடர்புடைய அனுபவத்துடன் கூடிய வெளியாட்களினை வரவழைப்பதற்குமான அதிகாரம்.	இணங்கப்பட்டது.
	ங. குழுவானது கலந்துரையாடப்படவுள்ள விடயங்கள் குறித்து உரிய கவனத்துடன் கிரமமாக கூட வேண்டும் என்பதுடன் அதன் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் போது அதன் முடிவுகளைப் பதிவு செய்ய வேண்டும்.	இணங்கப்பட்டது. கணக்காய்வு குழு கிரமமான கூட்டங்களினை அட்டவணைப்படுத்தியது. தேவைப்படின் மேலதிக கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. குழுவானது ஆண்டுக் காலப் பகுதியில் 11 தடைவைகள் கூடியது. கலந்துரையாடப்படவுள்ள விடயங்கள் சம்பந்தமாக உரிய கவனத்துடன் குழுவின் உறுப்பினர்கள் சேவையாற்றினர் அத்துடன் அதன் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் போதான முடிவுகளானவை சபையின் செயலாளர்/இலங்கை வங்கியின் செயலாளரால் பேணப்படும் கூட்டக் குறிப்புக்களில் பதியப்படுகின்றன.
	ச. சபையானது பயனுறுதி வாய்ந்த தகவலளிப்பு முறையொன்றில் பின்வருவனவற்றை வெளிப்படுத்த வேண்டும்: (i) கணக்காய்வுக் குழுச் செயற்பாடுகளின் விபரங்கள் (ii) இவ் ஆண்டில் நடாத்தப்பட்ட கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை அத்துடன் (iii) அத்தகைய கூட்டங்களுக்கு ஒவ்வொரு தனிப்பட்ட பணிப்பாளரும் வருகைதந்த விபரங்கள்	இணங்கப்பட்டது. கணக்காய்வுக் குழு அறிக்கையில் 70 தொடக்கம் 73வரையான பக்கங்களில் குழுச் செயற்பாடுகள் அறிக்கையிடப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டின் போது குழுவானது 11தடவைகள் கூடியுள்ளதுடன் வருகை தொடர்பான விபரங்கள் 69 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன.
	ஞ. குழுவின் செயலாளரானவர் (கம்பனிச் செயலாளராகவோ உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டின் தலைவராகவோ இருக்கக்கூடியவர்) குழுக் கூட்டங்களின் விபரமான அறிக்கைகளைப் பதிவு செய்து பேண வேண்டும்.	இணங்கப்பட்டது. சபை செயலாளர் அல்லது இலங்கை வங்கியின் செயலாளர் குழுவின் செயலாளராகவும் இருப்பதுடன் அறிக்கைகளினை பேணுகின்றார்.
	ட. சாத்தியமான முறையற்ற நிதி அறிக்கையிடல், உள்ளக கட்டுப்பாடு, அல்லது ஏனைய விடயங்கள் சம்பந்தமாக வங்கியின் ஊழியர்கள் நம்பிக்கையுடன் கரிசனைகளை ஏற்படுத்தக்கூடிய ஒழுங்குகளை குழு மீளாய்வு செய்ய வேண்டும். அதற்கிணங்க, அத்தகைய விடயங்கள் குறித்து நீதியானதும் சுதந்திரமானதுமான விசாரணைக்கும் பொருத்தமான தொடர் நடவடிக்கைக்கும் உரியவாறான ஒழுங்குகள் அமுலில் உள்ளன என்பதையும் வெளியகக் கணக்காய்வாளருடன் வங்கியின் உறவினை மேற்பார்வை செய்வதற்கான பிரதான பிரதிநிதித்துவ அமைப்பாகச் செயற்படுவதையும் குழு உறுதிப்படுத்த வேண்டும்.	இணங்கப்பட்டது. இவ் அம்சங்களை உள்ளடக்கும் விசில் பிளோவர் கொள்கையொன்று அமுலில் உள்ளதுடன் பொருத்தமான தொடர் நடவடிக்கை கருதி முக்கியமான முடிவுகள் கணக்காய்வுச் சபைக்கு அறிக்கையிடப்பட்டன. வெளியகக் கணக்காய்வாளருடன் வங்கியின் உறவினை மேற்பார்வை செய்வதற்கான பிரதான பிரதிநிதித்துவ அமைப்பாக கணக்காய்வுக் குழு உள்ளது.
3 (6) (iii)	மனித வளங்கள் மற்றும் ஊதிய குழு தொடர்பில் பின்வரும் விதிகள் ஏற்புடையதாதல் வேண்டும்: அ. வங்கியின் பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் தொடர்பிலான ஊதிய கொள்கையை (சம்பளங்கள், படிகள் மற்றும் ஏனைய நிதிசார் கொடுப்பனவுகள்) குழு வரையறுக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. பணிப்பாளர்களின் ஊதியமானது, இலங்கை அரசாங்கத்தினால் உரிய அமைச்சினூடாக வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்கள்/கடிதங்கள் மற்றும் 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களிற்கு அமைய உள்ளது. வங்கியானது மேலே கூறிய சுற்று நிருபங்களின் அடிப்படையில் ஓர் ஊதியக் கொள்கையையும் ஏற்படுத்தியுள்ளது. பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்காக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஊதியக் கொள்கையானது அமுலில் உள்ளதுடன் இக்கொள்கை 2017ம் ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்டது.

பிரிவு	கொள்கை	2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	ஆ. பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் வங்கியின் பிரதான முகாமைத்துவ ஆளணியின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை குழுவானது வகுக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. சகல பணிப்பாளர்கள் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்களாகையால் அவர்களுக்கான இலக்குகள் எவையும் வகுக்கப்படவில்லை. பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் வங்கியின் கூட்டாண்மைத் திட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட செயற்திட்டத்தில் ஆவணப்படுத்தப்பட்டு விபரிக்கப்பட்டுள்ளது. கூட்டாண்மைத் திட்டத்தை பிரதான முகாமைத்துவ ஆளணியினர் மூலம் நிறைவேற்றும் பொறுப்பு பொது முகாமையாளருடையதாகும். இதன் செயல் நிறைவேற்றமானது, கிரமமான முறையினால் பூரண சபையினால் மீளாய்வு செய்யப்படுகின்றது. பொது முகாமையாளரின் செயல் நிறைவேற்றம் குறித்த புறம்பான மதிப்பீடும் வருடாந்த அடிப்படையில் செய்யப்படுகின்றது.
	இ. வகுக்கப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்குரியதாக பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியின் செயல்நிறைவேற்றத்தினை காலக்கிரமமாக குழு மதிப்பிட வேண்டும் என்பதுடன் ஊதியம், நலன்கள் மற்றும் செயற்றிறன் அடிப்படையிலான ஏனைய ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளைத் திருத்துவதற்கான அடிப்படையினையும் வரையறுக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. பொது முகாமையாளர் உள்ளடங்கலாக பிரதிப் பொது முகாமையாளர்களின் செயற்றிறனை அவர்களுக்கு வழங்கப்பட்ட குறிக்கோள்களுக்குரியதாக வருடத் தொடக்கத்தில் குழு மதிப்பிட்டது. உதவிப் பொது முகாமையாளர்களின் செயற்றிறனானது அவர்கள் தொடர்பில் நடைமுறைப்படுத்தப்படும் மதிப்பீட்டிற்கூடாக உரிய பிரதிப் பொது முகாமையாளர்களினால் மதிப்பிடப்பட்டது
	ஈ. பிரதம நிறைவேற்று அலுவலர் குறித்த விடயங்கள் கலந்துரையாடப்படும் சந்தர்ப்பத்தை தவிர குழுவின் அனைத்துக் கூட்டங்களிற்கும் பிரதம நிறைவேற்று அலுவலர் வருகை தரவேண்டும்.	இணங்கப்பட்டது.
3 (6) (iv)	நியமனக் குழு தொடர்பில் பின்வரும் விதிகள் ஏற்புடையதாதல் வேண்டும்:	பெயர்குறித்த நியமன மற்றும் கூட்டாண்மை ஆட்சிக் குழுவொன்றை வங்கி உருவாக்கியுள்ளது. இவ் வழிகாட்டலின் கீழ் தரப்பட்ட பெயர் குறித்தான நியமனக் குழுவின் கடமைகளுக்கு மேலதிகமாக, ஏற்புடைய கூட்டாண்மை ஆட்சித் தத்துவங்களை உறுதிப்படுத்தலுடன் தொடர்பான ஏனைய சில கடமைகள் இக் குழுவின் விடய ஆய்வெல்லையின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.
	அ. புதிய பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரை தெரிவு செய்வதற்கான/நியமிப்பதற்கான நடைமுறையொன்றைக் குழு அமுலாக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. வங்கியானது எந்த அமைச்சரின் விடய நோக்கெல்லையின் கீழ் வருகின்றதோ அந்த அமைச்சரினாலேயே பணிப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். கூறப்பட்ட அமைச்சரின் அனுமதியுடன் சபையினால் பொது முகாமையாளர் நியமிக்கப்படுகின்றார். பிரதான முகாமைத்துவ ஆளணியினை நியமிப்பதற்கு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பொதுவான நடைமுறை/திட்டம் உள்ளது.
	ஆ. சபையின் ஒட்டுமொத்த பொறுப்பு நிறைவேற்றம் நோக்கியதாக சம்பந்தமுறும் பணிப்பாளரினால் செய்யப்படும் செயற்றிறன் மற்றும் பங்களிப்பினைக் கவனத்தில் எடுத்து, தற்காலப் பணிப்பாளர்களின் மீள் தேர்வினை குழுவானது கருத்திற்கொண்டு பரிந்துரை செய்ய (அல்லது பரிந்துரை செய்யாமலிருக்க) வேண்டும்.	பணிப்பாளர்கள் உரிய அமைச்சரினால் நியமிக்கப்படுவதனால் அவ்வாறான சந்தர்ப்பம் எழவில்லை.
	இ. பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ பதவிகளிற்கு நியமிப்பதற்காக அல்லது பதவியுயர்த்துவதற்காக கருத்திற்கொள்ளப்படவுள்ள தகுதிக்குத் தேவையான தகைமைகள், அனுபவம் மற்றும் அடிப்படைப் பண்புகள் போன்ற தகுதிவிதிகளை குழு வகுத்தமைக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. 1938 ஆம் ஆண்டின் 53ம் இலக்க இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, வங்கியின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைக்கமைய, பணிப்பாளர் சபை மற்றும் உரிய அமைச்சரின் அங்கீகாரத்துடன் பொது முகாமையாளர் நியமிக்கப்படுகின்றார். ஏனைய பிரதான முகாமைத்துவப் பதவிகளுக்கு தெரிவு செய்யப்படுவதற்கு அல்லது பதவியுயர்த்தப்படுவதற்கு தகுதியுடையதாக இருப்பதற்குத் தேவையான பண்புகளை சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வுத் திட்டங்கள் விதித்துரைக்கின்றன.
	ஈ. வழிகாட்டல் 3(3) இல் தரப்பட்ட தகுதிவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறும் நியதிச்சட்டங்களில் விதித்துரைக்கப்பட்டவாறும் பதவியினை வகிப்பதற்கு பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் தேகாரோக்கியம் பொருந்திய பொருத்தமான ஆட்களாக உள்ளனர் என்பதை குழு உறுதிப்படுத்த வேண்டும்.	இணங்கப்பட்டது. வழிகாட்டல் 3(3) இல் தரப்பட்டுள்ள தகுதிவிதிகளில் குறித்துரைக்கப்-பட்டவாறும் நியதிச்சட்டங்களில் விதித்துரைக்கப்பட்டவாறும் பதவியினை வகிப்பதற்கு பணிப்பாளர்கள் தேகாரோக்கியம் பொருந்திய பொருத்தமான ஆட்களாகவுள்ளனர் என்பதை உறுதிப்படுத்தி அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் வருடாந்த பிரகடனம் இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. பிரதான முகாமைத்துவ ஆளணியினரானோர், அவர்கள் பிரதான முகாமைத்துவ ஆளணியினராக பதவியுயர்த்தப்படும் அல்லது நியமிக்கப்படும் போது, அவர்களின் பதவிகளை வகிப்பதற்கு தேகாரோக்கியம் பொருந்திய பொருத்தமான ஆட்களாகவுள்ளனர் என்பதையும் குழு உறுதிப்படுத்துகின்றது.

பிரிவு	கொள்கை	2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	உ. மேலதிக/புதிய நிபுணத்துவத் தேவைப்பாடுகள் பற்றியும் ஓய்வுபெறும் பணிப்பாளர்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் சார்பில் அடுத்துவரும் பதவிக்கான ஒழுங்குகள் பற்றியும் குழுவானது காலத்திற்குக் காலம் பரிசீலனை செய்து பரிந்துரை செய்ய வேண்டும்.	பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கான அடுத்துவரும் பதவிக்கான திட்டம் ஒன்று அமுலில் உள்ளது. தேவைப்படும் மேலதிக/புதிய நிபுணத்துவமானது ஒன்றில் சபை உப குழுக்களால் பரிந்துரை செய்யப்படும் அல்லது சபையால் தீர்மானிக்கப்படும்.
	ஊ. குழுவுக்கு சுயாதீனமான பணிப்பாளர் ஒருவர் தலைமை வகிக்க வேண்டும் என்பதுடன் சுயாதீனமான பணிப்பாளர்களின் பெரும்பான்மையுடன் அது பொருத்தமுடையதாக உருவாக்கப்பட வேண்டும். பிரதான நிறைவேற்று அலுவலரானவர் அழைப்பின் மூலம் கூட்டங்களில் சமுகமளிக்கலாம்.	இணங்கப்பட்டது. குழுவுக்கு சுயாதீனமான நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் தலைமை வகிக்கின்றார். இது குறித்தான விபரங்களை இவ் ஆண்டறிக்கையின் 79 ஆம் பக்கம் தருகின்றது.
3 (6) (v)	ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழு தொடர்பில் பின்வரும் விதிகள் ஏற்புடையதாதல் வேண்டும்: அ. குழுவானது குறைந்தது மூன்று நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாட்டு மற்றும் தந்திரோபாய இடர்கள் போன்ற பரந்துபட்ட இடர் வகுதிகளை மேற்பார்வை செய்கின்ற பிரதான முகாமைத்துவ ஆளணியினர் ஆகியோரை கொண்டிருக்க வேண்டும். குழுவானது பிரதான முகாமைத்துவ ஆளணியினருடன் மிக நெருக்கமாக பணியாற்ற வேண்டும் என்பதுடன் குழுவுக்கு குறித்தொதுக்கப்பட்ட அதிகாரம் மற்றும் பொறுப்புக் கட்டமைப்புக்குள் சபையின் சார்பில் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்.	இணங்கப்பட்டது. குழுவானது மூன்று நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்கள், பொது முகாமையாளர் மற்றும் கடன், சந்தை, செயற்பாட்டு, மதிப்புசார் மற்றும் தந்திரோபாய இடர்களை மேற்பார்வை செய்கின்ற பிரதம இடர் அலுவலர் ஆகியோரை கொண்டுள்ளது. குழுவின் வேண்டுதலின் பேரில் பிரதம உள்ளக கணக்காய்வாளர், பிரதம நிதி அலுவலர், மற்றும் இணக்கப்பாட்டு அலுவலர் ஆகியோர் அனைத்துக் குழுக் கூட்டங்களிற்கும் வருகை தருகின்றனர். வேறு எவரேனும் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் ஏனைய அலுவலர்களின் பங்குபற்றல் குழுவுக்குத் தேவைப்படும் போது அவர்கள் அழைக்கப்படுவர். குழுவானது அதற்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் பொறுப்புக் கட்டமைப்புக்குள் பிரதான முகாமைத்துவ ஆளணியுடன் நெருக்கமாக பணியாற்றுகின்றது.
	ஆ. பொருத்தமான இடர் குறிகாட்டிகள் மற்றும் தகவல்களுக்கூடாக மாதாந்த அடிப்படையில் வங்கியின் கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாட்டு மற்றும் தந்திரோபாய இடர்கள் போன்ற சகல இடர்களையும் குழுவானது மதிப்பிட வேண்டும். துணைக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள் குறித்து, வங்கி அடிப்படையிலும் குழு அடிப்படையிலும் இடர் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்.	இணங்கப்பட்டது. வங்கியின் சுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ பிரிவு வங்கியின் கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாட்டு, தந்திரோபாய, மற்றும் மதிப்புசார் இடர்களை இக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டு சபையால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கை ஆவணங்களின் அடிப்படையில் மாதாந்தம் மதிப்பிடுகின்றது என்பதுடன் சுருக்கமான அறிக்கைகள் குழுவின் ஒழுங்குமுறையான கூட்டங்களில் குழுவுக்கும் அதன் பின்னர் அடுத்த உடனடியான சபை கூட்டத்திலும் சமர்ப்பிக்கப்படுகின்றன. துணைக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள் குறித்து, இடர்களைக் கவனிப்பதற்காக ஒரு இடர் முகாமைத்துவ கட்டுப்பாட்டகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.
	இ. குறித்த இடர்களைக் கவனத்திற் கொள்வதற்கும் குழுவினால் குறித்துரைக்கப்பட்டவாறு கணிய மற்றும் பண்புசார் இடர் எல்லைகளுக்குள் அவ் இடர்களை முகாமை செய்வதற்கும் கடன் குழு மற்றும் சொத்து - பொறுப்புக் குழு போன்ற சகல முகாமைத்துவ மட்டக் குழுக்களினதும் போதுமான தன்மை மற்றும் பயனுறுதித் தன்மை ஆகியவற்றை குழு மீளாய்வு செய்ய வேண்டும்.	இணங்கப்பட்டது.
	ஈ. வங்கியின் கொள்கைகள் மற்றும் ஒழுங்குறுத்தல் மற்றும் மேற்பார்வை தேவைப்பாடுகளின் அடிப்படையில் குழுவினால் தீர்மானிக்கப்படும் விவேக மட்டத்திற்கு அப்பால் உள்ள மட்டங்களில் குறித்த இடர்கள் காணப்படும் பட்சத்தில் குறிப்பிட்ட இடர்களின் தாக்கத்தினை குறைப்பதற்காக குழுவானது உடனடியான சீராக்க நடவடிக்கையை எடுக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. எல்லைகளுக்கு அப்பாற் சென்ற குறித்த கணிய மற்றும் பண்புசார் இடர்கள் பிரதம இடர் அலுவலரினால் கண்காணிக்கப்படுவதுடன் சம்பந்தப்பட்ட இப் பிரச்சினைகளின் தீவிரத்தன்மையின் அடிப்படையில் குழுவுக்கு நேரடியாக அறிக்கையிடப்படுகின்றது.
	உ. இற்றைப்படுத்தப்பட்ட வியாபாரத் தொடர்ச்சித் திட்டங்கள் உள்ளடங்கலாக சகல இடர் முகாமைத்துவ அம்சங்களையும் மதிப்பிடும் பொருட்டு குறைந்தது காலாண்டு ரீதியில் குழு கூட வேண்டும்.	இணங்கப்பட்டது. இவ் ஆண்டின் போது குழுவானது ஐந்து கூட்டங்களை நடாத்தியுள்ளது. கூட்டங்கள் மற்றும் வருகை குறித்த விபரங்கள் 69 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன.
	ஊ. குறிப்பிட்ட இடர்களினை அடையாளம் காண்பதற்கு அல்லது குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டவாறு அத்துடன்/அல்லது வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் நெறிப்படுத்தப்பட்டவாறு உடனடித் திருத்த நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தவறிய பொறுப்பான உத்தியோகத்தர்களிற்கு எதிராக பொருத்தமான நடவடிக்கைகளை குழு எடுக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. வங்கியில் முறைசார்ந்த ஆவணப்படுத்தப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை செயல்முறை அமுலில் உள்ளது.

பிரிவு	கொள்கை	2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	எ. சபையின் கருத்துக்கள், இணக்கம் அத்துடன்/அல்லது குறித்த வழிகாட்டல்களைக் கோரி சபையின் ஒவ்வொரு கூட்டத்தினதும் ஒரு வாரத்திற்குள் இடர் மதிப்பீட்டு அறிக்கையொன்றை குழு சமர்ப்பிக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. பரிந்துரைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அறிக்கைகளுடன் சேர்த்து அடுத்த உடனடியான சபைக் கூட்டத்தில் கூட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.
	ஏ. வியாபார செயற்பாடுகளின் சகல துறைகள் தொடர்பிலும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள், ஒழுங்குறுத்தல் வழிகாட்டல்கள், உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் என்பவற்றுடனான வங்கியின் இணக்கப்பாட்டினை மதிப்பிடும் பொருட்டு ஒரு இணக்கப்பாட்டு தொழிற்பாட்டை குழு உருவாக்க வேண்டும். பிரதான முகாமைத்துவ ஆளணியிலிருந்து தெரிவு செய்யப்படும் அர்ப்பணிப்பான இணக்கப்பாட்டு அலுவலர் ஒருவர் இணக்கப்பாட்டு தொழிற்பாட்டினை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன் காலக்கிரமமாக குழுவுக்கு அறிக்கையிட வேண்டும்.	இணங்கப்பட்டது. வியாபார செயற்பாடுகளின் சகல துறைகள் தொடர்பிலும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள், ஒழுங்குறுத்தல் வழிகாட்டல்கள், உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் என்பவற்றுடனான வங்கியின் இணக்கப்பாட்டினை மதிப்பிடும் பொருட்டு தனியானவொரு இணக்கப்பாட்டு தொழிற்பாட்டை வங்கி உருவாக்கியுள்ளது. இத் தொழிற்பாட்டிற்கு அர்ப்பணிப்பான இணக்கப்பாட்டு அலுவலர் ஒருவர் தலைமை வகிப்பதுடன் அவர் காலாண்டு ரீதியான இணக்கப்பாட்டு அறிக்கைகளைக் குழுவுக்கும் மாதாந்த இணக்கப்பாட்டு அறிக்கைகளைச் சபைக்கும் சமர்ப்பிக்கின்றார். வியாபார செயற்பாடுகளின் சகல துறைகள் தொடர்பிலும் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுடனான வங்கியின் இணக்கப்பாட்டினையும் இணக்கப்பாட்டு தொழிற்பாடு மதிப்பிடுகின்றது.
3 (7)	**தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்**	
3 (7) (i)	யாரேனும் ஆளுடன், அத்துடன் குறிப்பாக இவ் வழிகாட்டலின் நோக்கங்களுக்காக 'தொடர்புடைய தரப்பினர்' ஆக கருதப்பட வேண்டிய ஆட்களின் பின்வரும் வகுதிகளுடன் வங்கியின் ஏதேனும் கொடுக்கல் வாங்கலிலிருந்து எழக்கூடிய ஏதேனும் ஆதாய முரண்பாட்டினைத் தவிர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை சபை எடுக்க வேண்டும்: அ. வங்கியின் துணைக் கம்பனிகளில் ஏதாவதொன்று; ஆ. வங்கியின் இணைக் கம்பனிகளில் ஏதாவதொன்று; இ. வங்கியின் பணிப்பாளர்களில் யாரேனுமொருவர்; ஈ. வங்கியின் பிரதான முகாமைத்துவ ஆளணியினரில் யாரேனுமொருவர் உ. வங்கியின் பணிப்பாளர்களில் யாரேனுமொருவரின் அல்லது பிரதான முகாமைத்துவ ஆளணியினரில் யாரேனுமொருவரின் நெருங்கிய உறவினர் ஒருவர்; ஊ. வங்கியில் பொருண்மையான ஆதாயத்தைக் கொண்டுள்ள பங்குதாரர் ஒருவர்; எ. ஒரு கவனத்தின் மீது கணிசமான ஈடுபாடு உடைய வங்கியின் பணிப்பாளர்களில் யாரேனுமொருவர் அல்லது வங்கியின் பணிப்பாளர்களில் யாரேனுமொருவரின் நெருங்கிய உறவினர் ஒருவர் அல்லது அதன் முக்கியமான பங்குதாரர்களின் யாரேனுமொருவர்.	இணங்கப்பட்டது. சபை உறுப்பினர்கள் இது குறித்தான ஏதேனும் ஆதாய முரண்பாட்டினைத் தவிர்க்கும் பொருட்டு தொடர்புடைய தரப்பினர், அவர்களின் கொடுக்கல்வாங்கல்கள், மற்றும் தொடர்புடைய தரப்பினருக்கு கூடுதல் சாதகமான கவனிப்பை வழங்குதல் மீதான மட்டுப்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கும் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கை ஒன்று உள்ளது. தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களைக் கொண்டுள்ள பணிப்பாளர்கள் அக் கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்துமாறு தனிப்பட்ட முறையில் வேண்டப்படுகின்றனர். இக் கொடுக்கல் வாங்கல்கள் தன்னியக்க முறைமையொன்றின் ஊடாகக் கண்காணிக்கப்படுகின்றன.
3 (7) (ii)	இவ் வழிகாட்டலினால் தழுவப்பட வேண்டிய தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் வகை பின்வருவனவற்றை உள்ளடக்க வேண்டும்: அ. ஆகக்கூடிய கடன்வசதி பற்றி நாணயச் சபையின் வழிகாட்டல்களில் வரையறுக்கப்பட்டவாறான கடன்வசதி வகை எதனையும் வழங்குதல், ஆ. வைப்புக்கள், கடன் பெறல்கள் மற்றும் முதலீடுகளின் வடிவில் வங்கியில் எந்தவொரு பொறுப்புக்களையும் உருவாக்குதல், இ. வங்கிக்கு வழங்கப்பட்ட அல்லது வங்கியிலிருந்து பெறப்பட்ட நிதிசார் அல்லது நிதிசாரா தன்மைகளைக்கொண்ட ஏதேனும் சேவைகளின் ஏற்பாடு, ஈ. எவரேனும் தொடர்புடைய தரப்பினர்களுக்கு நன்மைகளை வழங்கக்கூடிய சாத்தியப்படும் இரகசியமான, அந்தரங்கமான அல்லது வேறு வகையான பரகசியப்படுத்தப்படாத காப்புத் தகவல்களை பகிரக்கூடிய, வங்கிக்கும் அத்தகைய தொடர்புடைய தரப்பினர்களுக்கும் இடையிலான அறிக்கையிடும் ஒழுங்குமுறையினை மற்றும் தகவல் பாய்ச்சல்களை உருவாக்குதல் மற்றும் பேணுதல்.	இணங்கப்பட்டது. இது குறித்தான தகவல்களானவை 'தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்' கூற்று தொடர்பான 57 ஆம் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பிரிவு	கொள்கை	2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (7) (iii)	ஒரே வியாபாரத்தினை நடாத்திச் செல்கின்ற வங்கியின் ஏனைய கூறுகளுக்கு வழங்கப்பட்டவற்றை விட 'கூடுதல் சாதகமான கவனிப்பை' தொடர்புடைய தரப்பினருக்கு வழங்கும் ஒரு விதத்தில், மேல் 3 (7) (i) ஆம் இலக்க வழிகாட்டலில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு அத்தகைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களில் வங்கி ஈடுபடவில்லை என்பதை சபை உறுதிப்படுத்த வேண்டும். இச் சூழமைவில், கூடுதல் சாதகமான கவனிப்பு என்பது பின்வருவனவன உள்ளடங்கலான கவனிப்பு எனப் பொருள் கொள்ளப்பட்டு அதனையும் உள்ளடக்க வேண்டும்: அ. சபையினால் வரையறுக்கப்பட்டவாறு, வங்கியின் ஒழுங்குறுத்தல் மூலதனத்தின் மதிநுட்மான சதவீதமொன்றை விஞ்சி, தொடர்புடைய தரப்பினருக்கு 'மொத்த தேறிய கடன்வசதி' வழங்கல். இவ் உப வழிகாட்டலின் நோக்கங்களுக்காக: (i) 'கடன்வசதி' என்பது ஆகக்கூடிய கடன்வசதி தொகை தொடர்பில் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வங்கியியல் சட்ட வழிகாட்டலில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறான கடன்வசதி எனப் பொருள்பட வேண்டும். (ii) ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் கொண்ட முதிர்ச்சியுடன் வங்கியின் பங்கு மூலதனம் மற்றும் கடன் ஆவணங்களில் அத்தகைய தொடர்புடைய தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட காசு பிணையம் மற்றும் முதலீடுகள் ஆகியவற்றை மொத்தக் கடன்வசதியிலிருந்து கழிப்பதன் மூலம் 'மொத்த தேறிய கடன்வசதி' கணிப்பீடு செய்யப்பட வேண்டும். ஆ. தொடர்புபடாத ஒப்பிடக்கூடிய இணைத் தரப்புடனான ஒப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல் ஒன்றுக்காக, வங்கியின் சிறந்த கடன் வழங்கல் வீதத்தினைக் காட்டிலும் குறைவான வட்டி வீதமொன்றை அறவிடுதல் அல்லது வங்கியின் வைப்பு வீதத்தினைக் காட்டிலும் கூடுதலாகச் செலுத்துதல் இ. தொடர்புபடாத தரப்பினர்களுடன் மேற்கொள்ளப்படும் சாதாரண வியாபார நடவடிக்கையில் கொடுக்கப்பட்ட நியதிகளுக்கு அப்பாற்பட்டு விரிவடைந்து செல்லும், சாதகமான நியதிகள், வர்த்தக நட்டங்களை நிவர்த்தி செய்தல் அத்துடன்/அல்லது கட்டணங்கள்/தரகுகளை கைவிடல் போன்ற முன்னுரிமை வாய்ந்த கவனிப்பை வழங்குதல். ஈ. ஒரு மதிப்பீட்டு நடைமுறையில்லாமல் தொடர்புடைய தரப்பினர் ஒருவருக்கு சேவைகளை வழங்குதல் அல்லது அவரிடமிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்தல். உ. சட்ட ரீதியான கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளின் செயற்றிறனுக்கு தேவைப்படுத்தப்படுவதான தகவல்கள் நீங்கலாக, சாத்தியப்படும் இரகசியமான, அந்தரங்கமான அல்லது வேறு வகையான பரகசியப்படுத்தப்படாத காப்புத் தகவல்களை பகிரக்கூடிய, அறிக்கையிடும் ஒழுங்குமுறையினையும் தகவல் பாய்ச்சல்களையும் தொடர்புடைய தரப்பினர்களுடன் பேணுதல்.	இணங்கப்பட்டது. இணக்கப்பாட்டுப் பிரிவினால் மேற்பார்வை செய்யப்படும், தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களை மேற்பார்வை செய்வதற்கு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு செயல்முறையினை வங்கியானது அமுல்படுத்தியுள்ளதுடன் இணக்கப்பாட்டு தகைமையானது சபைக்கு மாதாந்தம் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.
3 (7) (iv)	யாதாயினுமொரு கடன்வசதியானது சம்பந்தப்பட்ட பணிப்பாளரை விட ஏனைய பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாமல், அத்தகைய கடன் வசதிக்கு சாதகமாக வாக்களித்து வங்கியின் பணிப்பாளர் சபைக் கூட்டமொன்றில் அங்கீகரிக்கப்படாலொழிய, வங்கியானது அதன் பணிப்பாளர்களில் எவருக்கேனும் அல்லது அத்தகைய பணிப்பாளரின் நெருங்கிய உறவினர் ஒருவருக்கு அத்தகைய கடன்வசதியினை வழங்கலாகாது. அத்துடன் இக் கடன்வசதியானது நாணயச் சபையினால் காலத்திற்குக் காலம் வரையறுக்கப்படக்கூடிய அத்தகைய பிணையின் மூலம் பாதுகாக்கப்பட வேண்டும்.	இணங்கப்பட்டது.
3 (7) (v)	அ. ஒருவருக்கு அல்லது ஆளொருவரின் நெருங்கிய உறவினர் ஒருவருக்கு அல்லது அவ் ஆள் கணிசமானளவு ஆதாயத்தைக் கொண்டுள்ள யாரேனும் சம்பந்தப்பட்டவருக்கு வங்கியொன்றினால் யாதாயினுமொரு கடன்வசதி வழங்கப்பட்டுள்ளவிடத்தும் அத்தகைய ஆள் வங்கியின் பணிப்பாளர் ஒருவராக அதற்குப் பின்னர் நியமிக்கப்படுமிடத்தும் இந் நோக்கங்கருதி நாணயச் சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அவசியமான பிணையினை, பணிப்பாளர் ஒருவராக அவ் ஆளின் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள், பெற்றுக்கொள்வதற்கு வங்கியினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	இணங்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் போது அத்தகையதோர் சந்தர்ப்பம் எழுந்திருக்கவில்லை.

பிரிவு	கொள்கை	2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	ஆ. மேலுள்ள வழிகாட்டல் 3 (7) (v) (அ) இல் தரப்பட்டவாறான காலப்பகுதியில் அத்தகைய பிணை வழங்கப்படாதவிடத்து, கடன்வசதி வழங்கல் காலத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதி அல்லது அத்தகைய பணிப்பாளரை நியமிக்கும் திகதியிலிருந்து பதினெட்டு மாத காலப்பகுதி ஒன்றின் நிறைவுக்காலம் இவையிரண்டில் எது முதலில் வருகின்றதோ அக் காலப்பகுதிக்குள், கடன்வசதி குறித்தான ஏதேனுமொரு நிலுவைத் தொகையினை வட்டி ஏதேனுமிருப்பின் அதனுடன் சேர்த்து அறவிடுவதற்கான நடவடிக்கைகளை வங்கி எடுக்க வேண்டும். இ. மேற்போந்த உப வழிகாட்டல்களுடன் ஒத்திசையத் தவறுகின்ற யாரேனுமொரு பணிப்பாளரானவர் பணிப்பாளர் பதவியிலிருந்து நீங்கியுள்ளதாக கருத்தப்பட வேண்டும் என்பதுடன் அவ் விடயத்தை வங்கி பொதுமக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். ஈ. எவ்வாறாயினும் இவ் உப வழிகாட்டலானது, வங்கியின் சகல ஊழியர்களுக்கும் ஏற்புடையதான திட்டமொன்றின் கீழ் அக் கடன்வசதி வழங்கப்பட்டும் அத்துடன் அக் கடன்வசதி வழங்கல் காலப்பகுதியில் அத்தகைய வங்கியின் ஊழியரொருவராக இருந்த பணிப்பாளரொருவருக்கு ஏற்புடையதாகாது.	
3 (7) (vi)	வங்கியொன்றின் ஊழியர்களுக்கு ஏற்புடையதான திட்டமொன்றின் அடிப்படையிலான சந்தர்ப்பத்தை விட அல்லது மேலுள்ள வழிகாட்டல் 3 (7) (v) இற்கமைவாக வழங்கப்படும் கடன்வசதி தொடர்பில் நாணயச் சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான பிணையின் மூலம் பாதுகாக்கப்படும் சந்தர்ப்பத்தை விட எவரேனும் ஊழியருக்கு அல்லது அத்தகைய ஊழியரின் நெருங்கிய உறவினர் ஒருவருக்கு அல்லது அவ் ஊழியர் அல்லது நெருங்கிய உறவினர் கணிசமானளவு ஆதாயத்தைக் கொண்டுள்ள யாரேனும் சம்பந்தப்பட்டவருக்கு யாதாயினுமொரு கடன்வசதியை அல்லது கட்டணங்கள் அத்துடன்/அல்லது தரகுகளின் கைவிடலுடன் தொடர்பான 'கூடுதல் சாதகமான கவனிப்பை' அத்தகைய வங்கி வழங்கலாகாது.	இணங்கப்பட்டது. வங்கியின் சகல ஊழியர்களுக்கும் ஏற்புடையதான பொதுவான அலுவலர் குழாமின் கடன் திட்டங்களின் கீழான சந்தர்ப்பத்தினை விட கூடுதல் சாதகமான நியதிகள் தொடர்பில் எதுவித சாதகமான கவனிப்பு/கடன்வசதி வங்கியின் எந்தவொரு ஊழியருக்கும் வழங்கப்படுவதில்லை. இது குறித்து சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன. வங்கி ஊழியர்களின் நெருங்கிய உறவினர்களுக்கும் சாதகமான கவனிப்பு/கடன்வசதி எதுவும் வழங்கப்படுவதில்லை.
3 (7) (vii)	மேலுள்ள வழிகாட்டல் 3 (7) (v) மற்றும் 3 (7) (vi) ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்ட கடன்வசதியோ, அக் கடன்வசதியின் ஏதேனும் பகுதியோ, அதன் மீதான ஏதேனும் நிலுவை வட்டியோ நாணயச் சபையின் முன் அனுமதியின்றி இரத்துச் செய்யப்படலாகாது என்பதுடன் அத்தகைய அங்கீகாரமின்றிய ஏதேனும் இரத்துச் செய்தலானது வெறிதாகவும் செயல்வலுவின்றியும் இருத்தல் வேண்டும்.	இணங்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் போது அத்தகையதோர் சந்தர்ப்பம் எழுந்திருக்கவில்லை.
3 (8)	**வெளிப்படுத்துதல்கள்**	
3 (8) (i)	சபையானது பின்வருவனவற்றை உறுதிப்படுத்த வேண்டும்: அ. மேற்பார்வை மற்றும் ஒழுங்குறுத்தல் அதிகாரங்கள் மற்றும் ஏற்புடைய கணக்கீட்டு நியமங்களில் குறித்துரைக்கப்பட்ட மாதிரிகளுக்கு இணங்க வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் காலாண்டு நிதிக் கூற்றுக்கள் என்பன தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்படல், அத்துடன். ஆ. அத்தகைய நிதிக்கூற்றுக்களானவை சுருக்கமான வடிவத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதென்பதும்.	இணங்கப்பட்டது.
3 (8) (ii)	பின்வரும் ஆகக்குறைந்த வெளிப்படுத்தல்கள் ஆண்டறிக்கையில் செய்யப்படுவதை சபையானது உறுதிப்படுத்த வேண்டும்: அ. ஏற்புடைய கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகளுக்கு ஒத்திசைவாக, வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களானவை குறித்துரைக்கப்பட்ட வெளிப்படுத்தல்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதற்கான கூற்றொன்று.	இணங்கப்பட்டது. 139 தொடக்கம் 143 வரையான பக்கங்களில் 'வங்கியின் அலுவல்கள் நிலைமை தொடர்பிலான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கையிலும்' மற்றும் 149 ஆம் பக்கத்தில் நிதியியல் அறிக்கையிடலிற்கான பணிப்பாளர்களின் பொறுப்பு என்பதிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
	ஆ. நிதிசார் அறிக்கையிடல் முறைமையானது நிதிசார் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை பற்றிய நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள-தென்றும், வெளிநோக்கங்களுக்கான நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு பொருத்தமான கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகளுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளதென்றும் உறுதிப்படுத்துகின்ற வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறை தொடர்பில் சபையின் ஓர் அறிக்கை.	இணங்கப்பட்டது. இவ் ஆண்டறிக்கையின் 146 ஆம் 147 ஆம் பக்கங்களில் 'உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று' என்பதிலும் 149 ஆம் பக்கத்தில் நிதியியல் அறிக்கையிடலிற்கான பணிப்பாளர்களின் பொறுப்பு என்பதிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பிரிவு	கொள்கை	2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	இ. உத்தரவாத ஒப்பந்தங்கள் தொடர்பான இலங்கை தரக் கட்டளை SLSAE 3050 – 'உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர்களின் கூற்றுக்கள் பற்றிய வங்கிகளின் உத்தரவாத அறிக்கைகள்' என்பதன் கீழ் கணக்காய்வாளர்களால் வழங்கப்படும் உத்தரவாத அறிக்கை.	இணங்கப்பட்டது. இவ் ஆண்டறிக்கையின் 148 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள, கணக்காய்வாளர் நாயகத்திலிருந்தான நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளின் பயனுறுதிவாய்ந்த தன்மை தொடர்பிலான சான்றிதழ் ஒன்றினை இவ் வங்கி பெற்றுக்கொண்டுள்ளது.
	ஈ. பெயர்கள், தேகாரோக்கியம் மற்றும் பொருத்தப்பாடு, வங்கியுடனான கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடங்கலாக பணிப்பாளர்களின் விபரங்கள் மற்றும் இவ் வங்கியினால் செலுத்தப்பட்ட மொத்த கட்டணங்கள்/ஊதியங்கள்.	இணங்கப்பட்டது. 35 தொடக்கம் 37 வரையான பக்கங்களில் பணிப்பாளர்களின் விபரங்கள் தரப்பட்டுள்ளன. 144 ஆம் 145 ஆம் பக்கங்களில் வங்கியுடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் ஈடுபாடு தரப்பட்டுள்ளது. 180 ஆம் பக்கத்தில் நிதிக்கூற்றுக்களிற்கான 15 ஆம் குறிப்பில் வங்கியால் செலுத்தப்பட்ட ஊதியங்கள் தரப்பட்டுள்ளன.
	உ. தொடர்புடைய தரப்பினரின் ஒவ்வொரு வகுதிக்கும் வழங்கப்பட்ட 3 (7) (iii) இல் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு மொத்தத் தேறிய கடன்வசதி. தொடர்புடைய தரப்பினரின் ஒவ்வொரு வகுதிக்கும் வழங்கப்பட்ட தேறிய கடன்வசதியும் வங்கியின் ஒழுங்குறுத்தல் மூலத்தின் ஒரு சதவீதமாக வெளிப்படுத்தப்பட வேண்டும்.	இணங்கப்பட்டது. வங்கியின் ஒழுங்குறுத்தல் மூலத்தின் ஒரு சதவீதமாக 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொடர்புடைய தரப்பினரின் ஒவ்வொரு வகுதிக்கும் வழங்கப்பட்ட 'மொத்த தேறிய கடன்வசதி' கீழே தரப்பட்டுள்ளது:

	ரூபா '000	%
பிரதான முகாமைத்துவ ஆளணி (KMPS)	140,125	0.11
துணைக் கம்பனிகள்	1,751,755	1.40
இணைக் கம்பனிகள்	254,365	0.20
அரசு மற்றும் அரச தொடர்புடைய நிறுவனங்கள் (நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 57.4 இலுள்ள வரைவிலக்கணத்தைப் பார்க்கவும்)	1,065,487,630	849.26

	ஊ. செலுத்தப்பட்ட ஊதியம், வழங்கப்பட்ட கடன்வசதி மற்றும் வங்கியில் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள் அல்லது முதலீடுகள் போன்ற பரந்துபட்ட வகுதிகளின் மூலம் விதித்துரைக்கப்பட்ட, வங்கியினால் அதன் பிரதான முகாமைத்துவ ஆளணிக்குச் செலுத்தப்பட்ட ஊதியங்களின் மொத்தப் பெறுமதிகள் அத்துடன் அதன் பிரதான முகாமைத்துவ ஆளணியுடனான வங்கியின் கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதிகள்.	இணங்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டிற்காக பிரதான முகாமைத்துவ ஆளணிக்கு வங்கியினால் செலுத்தப்பட்ட ஊதியங்களினதும் அத்துடன் அவர்களுடனான கொடுக்கல் வாங்கல்களினதும் மொத்த தொகை கீழே எடுத்துரைக்கப்பட்டுள்ளன:

	ரூபா '000
குறுங்கால ஊழிய நன்மைகள்	392,458
தொழிலுக்குப் பின்னரான நன்மைகள்	171,459

மேலே கூறப்பட்டவற்றிற்கு மேலதிகமாக, வங்கியானது அதன் அங்கீகரிக்கப்பட்ட நலத்திட்டங்களின் பிரகாரம் வாகனங்களின் பாவனை போன்ற பணம் நிதி நன்மைகளையும் பிரதான முகாமைத்துவ ஆளணிக்கு வழங்கியுள்ளது.

	ரூபா '000
கடன்கள்	410,435
மேலதிகப் பற்றுகள்	11,666
கடன் அட்டைகள்	9,215
வைப்பீடுகள்	368,897
தொகுதிக்கடன்கள்	7,626
பயன்படுத்தாத வசதிகள்	51,410

	எ. 'இலங்கை தொடர்புபட்ட சேவைகள் பிரயோகக் கூற்று 4750' இன் கீழ் வழங்கப்பட்ட கணக்காய்வாளர்களின் 'விடய முடிவுபெறல் அறிக்கைகளின்' சகல முடிவுகளும் வருடாந்தக் கூட்டாண்மை செயலாட்சி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதை, இந் நோக்கத்திற்காக வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளருக்கு கணக்காய்வாளர்கள் உறுதிப்படுத்தியிருப்பின், பணிப்பாளர் சபையினால் அதன் வருடாந்தக் கூட்டாண்மை செயலாட்சி அறிக்கையில் உறுதிப்படுத்தல்.	இணங்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டாண்மை செயலாட்சி வழிகாட்டலுக்கு ஒத்திசைவாக வங்கியானது கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து ஒரு சான்றிதழைப் பெற்றுள்ளது. கணக்காய்வாளர்களின் அனைத்து முடிவுகளும் இக் கூட்டாண்மை செயலாட்சி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதை சபை உறுதிப்படுத்தியுள்ளதுடன் ஏதேனும் பரிந்துரைகள் 2018 ஆம் ஆண்டினுள் தீர்க்கப்படும்.

பிரிவு	கொள்கை	2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	ஏ. மதிநுட்பமான தேவைப்பாடுகள், ஒழுங்குவிதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளுடனான இணக்கம் பற்றிய விபரங்களை எடுத்துரைக்கும் அறிக்கை மற்றும் ஏதேனும் பொருண்மை வாய்ந்த இணக்கமுறா விடயங்களைத் திருத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.	இணங்கப்பட்டது. 149 ஆம் பக்கத்திலுள்ள நிதி அறிக்கையிடலிற்கான பணிப்பாளர்களின் பொறுப்புக் கூற்றானது மதிநுட்பமான தேவைப்பாடுகள், ஒழுங்குவிதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளுடனான இணக்கம் தொடர்பிலான விபரங்களைத் தெளிவாக எடுத்துரைக்கின்றது.
	ஐ. வங்கியின் இடர் முகாமைத்துவ முறைமையிலான தவறுகள் மீதான ஒழுங்குறுத்தல் மற்றும் மேற்பார்வை சார்ந்த கரிசனைகள் பற்றிய அல்லது பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டுமென நாணய சபையினால் வழிகாட்டப்பட்டிருப்பின், வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இவ் வழிகாட்டல்களுடன் இணக்கமுறாமை பற்றிய, அத்தகைய கரிசனைகளைக் கவனத்திற் கொள்வதற்கு வங்கியினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுடனும் சேர்ந்த கூற்று.	இணங்கப்பட்டது. வங்கியின் இடர் முகாமைத்துவ முறைமை மீது மேற்பார்வைக் கரிசனையை விளைவித்த தவறுகள் அல்லது இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வை திணைக்கள பணிப்பாளரினால் சுட்டிக் காட்டப்படுவதற்கு அவற்றை இட்டுச்சென்ற இவ் வழிகாட்டல்களுடன் இணக்கமுறாமையை விளைவித்த மற்றும் அவை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்பட வழிகாட்டல்களை வழங்குவதற்கு நாணய சபையினை இட்டுச்சென்ற தவறுகள் எவையும் இருக்கவில்லை. இணக்கமுறாமை பற்றிய அத்தகைய தவறுகள் அல்லது சந்தர்ப்பங்கள் காணப்பட்டிருக்காமையினாலும் மற்றும் நாணய சபையினால் அத்தகைய வழிகாட்டல்கள் வழங்கப்பட்டிருக்காமையினாலும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய விடயங்கள் எழவில்லை என்பதுடன் இது குறித்து வெளிப்படுத்துவதற்கு எதுவுமில்லை.
3 (9) (i)	**இடைக்கால மற்றும் ஏனைய பொது ஏற்பாடுகள்** இவ் வழிகாட்டலுடனான இணக்கமானது 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து முன்நோக்கியதாக ஆரம்பிக்க வேண்டும் என்பதுடன் நீட்டிக்கப்பட்ட இணக்கப்பாட்டு திகதிகளானவை இவ் வழிகாட்டலில் விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்களைத் தவிர, 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியளவில் அல்லது அதற்கு முன்னர் இவ் வழிகாட்டலிலுள்ள ஏற்பாடுகளுடன் சகல உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் முழுமையாக இணங்க வேண்டும்.	இணங்கப்பட்டது.
3 (9) (ii)	இலங்கையில் குறித்த நியதிச்சட்டங்களின் மூலம் கூட்டிணைக்கப்-பட்டுள்ள வங்கிகள் குறித்து, உரிய நியதிச்சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு இணக்கமுறாத இவ் வழிகாட்டலின் சகல ஏற்பாடுகளுடனும் இணங்கிச் செல்வதற்கான நடவடிக்கைகளை அவை எடுப்பின், அத்தகைய நியதிச் சட்டங்களில் குறித்துரைக்கப்-பட்டவாறு சபைகள் உரிய நியதிச்சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்க தொடர்ந்து செயலாற்ற வேண்டும்.	இணங்கப்பட்டது. 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அதன் திருத்தங்கள், அமுலிலுள்ள சட்டம் ஆகியவற்றுடன் இணக்கமுறாத, இவ் வழிகாட்டலின் சகல ஏற்புடைய ஏற்பாடுகளுடனும் இணக்கமுறுவதற்கான சாத்தியமான சகல நடவடிக்கைகளையும் இலங்கை வங்கி எடுத்துள்ளது. இணக்கமுறாத மற்றும் இலங்கை வங்கியானது அதற்கு ஏற்புடைய நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கு ஏற்ப தொடர்ந்து செயலாற்றியுள்ள ஏதேனும் சந்தர்ப்பங்களானவை உரிய பிரிவுகளுக்கு எதிராக மேலே விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.
3 (9) (iii)	இவ் வழிகாட்டலானது, இலங்கையில் செயற்படும் வெளிநாட்டு வங்கிகளின் கிளைகளுக்கு, அத்தகைய வங்கிகளின் கூட்டிணைப்பு நாட்டிலுள்ள ஏற்புடைய ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டங்களுடன் இணக்கமுறும் அளவிற்கு, ஏற்புடையதாதல் வேண்டும். வெளிநாட்டு வங்கியொன்றின் கிளையானது, அதன் ஆண்டறிக்கை மற்றும் இலங்கையில் கிளை நடவடிக்கைகளின் கணக்குகள் ஆகியவற்றுடன் சேர்த்து அதன் தாய் வங்கியின் வருடாந்த கூட்டாண்மைச் செயலாட்சி அறிக்கையினையும் பிரசுரிக்க வேண்டும்.	ஏற்புடையதன்று.
3 (9) (iv)	ஏதேனும் வங்கி சம்பந்தமாக இவ் வழிகாட்டலின் ஏதேனும் ஏற்பாடுகளுக்கும் அமைப்பு அகவிதிக்கும் (அல்லது உள்ளக விதிகள்) இடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படும் பட்சத்தில், இவ் வழிகாட்டலின் ஏற்பாடுகளே மேலோங்க வேண்டும். எவ்வாறாயினும், இவ் வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டதை விட மிகக் கடுமையான நியமமொன்றை ஒரு தனி வங்கியொன்றின் அமைப்பு அகவிதிகள் வகுத்தமைப்பின் அவ் அமைப்பு அகவிதிகளிலுள்ள அத்தகைய ஏற்பாடுகள் பின்பற்றப்படலாம்.	ஏற்புடையதன்று.
3 (9) (v)	வங்கியியல் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு சுகவீனம் அல்லது ஏதேனும் இயலாமை போன்ற ஏதேனும் காரணம் கருதி, 3 (2) (ii) ஆ, 3 (3) (i) அ மற்றும் 3 (3) (ii) அ ஆகிய வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்ட விலக்களிப்புக்கள் பயன்படுத்தப்படலாகாது என நாணய சபை கருதினால், அவ் விடயமானது நாணய சபையினால் அந்த ஆளுக்கு அறியத்தரப்படலாம் என்பதுடன் விசாரணையொன்றுக்குப் பின்னர், நாணய சபையானது விலக்களிப்புக் காலப்பகுதியினை மட்டுப்படுத்தலாம்.	ஏற்புடையதன்று.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தினால் அமுல்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தினால் அமுல்படுத்தப்பட்ட 2017 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்காக இவ் வங்கிக்கு ஏற்புடையதாகவிருந்த, ஆண்டறிக்கையின் உள்ளடக்கம் தொடர்பில் நிரற்படுத்தல் விதிகளுக்கான இணக்கப்பாடானது கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது:

விதி இல.	தேவைப்பாடு	காலப்பகுதி	சமர்ப்பிக்கப்பட்ட திகதி
7.4 a (i)	பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட, காலாண்டு அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இடைக்கால நிதிக் கூற்றுக்கள் முதல் மூன்று காலாண்டுகளிற்காகவும் உரிய காலாண்டு முடிவடைவதிலிருந்து 45 நாட்களுக்குள்ளும் 4 ஆவது காலாண்டிற்கு காலாண்டு முடிவில் இருந்து இரண்டு மாதங்களுக்குள்ளும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.	2017 மார்ச் 31 இல் முடிவடைந்த 1 ஆம் காலாண்டு	2017 மே 12
		2017 யூன் 30 இல் முடிவடைந்த 2 ஆம் காலாண்டு	2017 ஓகஸ்ட் 14
		2017 செப்டெம்பர் 30 இல் முடிவடைந்த 3 ஆம் காலாண்டு	2017 நவம்பர் 15
		2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த 4 ஆம் காலாண்டு	2018 பெப்ரவரி 28

விதி இல.	தேவைப்பாடு	இணக்கப்பாடு
7.4 b (i)	இலங்கை கணக்கீட்டு நியமம் 34 உடன் இணக்கமுறல் அத்துடன் குழு மற்றும் வங்கி ஆகியவற்றினை வெவ்வேறாக வெளிப்படுத்துதல்	இணங்கப்பட்டது
